வெளியீடு 29-11-2004

Issued 29-11-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜூலை 27, 2004 தொகுதி 60 எண் 1

Tuesday the 27th July, 2004 - Volume 60 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

'ative Assembly Secretariat, Chennai - 600 009

D
V24,31 P04
P04-60
226194

[Price Rs. 3.00

27-07-2004

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-41 |
| **2. தகவல் கோரல்—** | |
| நிதியமைச்சர் பதிலுரை குறித்து திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து | 41-43 |
| **3. அறிவிப்பு—** | |
| தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 43 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 44 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 45 |

பக்கங்கள்

5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, அளித்தல்— 45-52

6. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 11 — வணிக வரித் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

(ஆ) கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை

(இ) கோரிக்கை எண் 23—உள் துறை—சிறைச்சாலைகள்

(ஈ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு

(உ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ஊ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(எ) கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை

(ஏ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை

(ஐ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஒ) கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை

(அ)–(ஒ): 52-76, 78-164





பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 53, 55, 56, 57, 58, 60, 62, 63, 66-67, 70-71, 97, 113-154

* மாண்புமிகு திரு. பி.சி.ராமசாமி 64, 67, 91, 92, 93, 94, 100-112

திரு. லா. சந்தானம் 53, 54, 55-56, 57, 58, 59, 60, 63, 64, 66, 67-76, 155, 156, 157, 158, 159, 160, 162, 164

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி 78-82

திருமதி செ. சுந்தராம்பாள் 83-87

திரு. எச். ராஜா 87-99

7. மேட்டூர் அணையிலிருந்து ஆடிப் பெருக்கை முன்னிட்டு தண்ணீர் திறந்து விடுவது பற்றிய முதலமைச்சரின் அறிவிப்பு 77-78

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 164-167

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3 நிதி மற்றும் உணவு அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உண்வு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226194

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம்.

8. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

10. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.



11. வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

12. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

13. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

14. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

17. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

19. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

20. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

21. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு



22. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

23. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

-------

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance and Food** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** – **The Hon. Thiru N. Thalavai Sundaram:**
Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Social Welfare** – **The Hon. Tmt. B. Valarmathi:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Adi-Dravidar Welfare** – **The Hon. Thiru C. Karuppasamy:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

9. **Minister for Transport** – **The Hon. Thiru R. Viswanathan:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. **Minister for Industries** – **The Hon. Thiru Nainar Nagenthran:**
Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

11. **Minister for Agriculture and Rural Industries** – **The Hon. Thiru K. Pandurangan:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development, Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

12. **Minister for Commercial Taxes and Co-operation** – **The Hon. Thiru Se.Ma. Velusamy:**
Commercial Taxes and Co-operation.



13. **Minister for Animal Husbandry** – **The Hon. Thiru P.V. Damodhiran:**
Animal Husbandry.

14. **Minister for Forests and Environment** – **The Hon. Thiru R. Vaithilingam:**
Forests & Environment and Pollution Control.

15. **Minister for Housing and Urban Development** – **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

16. **Minister for Education and Backward Classes** – **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees, Backward Classes, Most Backward Classes and Denotified Communities

17. **Minister for Dairy Development** – **The Hon. Thiru S. Ramachandran:**
Milk and Dairy Development.

18. **Minister for Handlooms and Textiles** – **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** – **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

20. **Minister for Tourism** – **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.

| | | |
|---|---|---|
| 21. **Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 22. **Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:** Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply. |
| 23. **Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |

-----



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி. எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ. கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 23-7-2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடானை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பொம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்



136. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



182. மில்லர், திரு. அ. - கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி



228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 12, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 ஜூலை 27, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 21, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

21—

### பக்கிள் ஓடை சீரமைப்பு

***8638–திருமதி எஸ். ராஜம்மாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகர மக்களுக்கு மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கும் கழிவுநீரைக் கடலுக்குக் கொண்டு செல்ல பக்கிள் ஓடை சீரமைப்புத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் நகராட்சியின் பொறுப்பில் உள்ள பக்கிள் ஓடையின் நீளம் 9100 மீட்டர் ஆகும். இதில் 5200 மீட்டர் முதல் 9100 மீட்டர் வரை ரூ.30 இலட்சம் செலவில் தூர் வாரி மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி. எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது வினாவைத் தொடர்கிறேன். தூத்துக்குடி நகரில் 9100 மீட்டர் நீளமுள்ள பக்கிள் ஓடையின் ஒரு பகுதி தூர் வாரினாலும், மலேரியா போன்ற சுகாதாரக் கேடுகளைப் பரப்பும் நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் பக்கிள் ஓடையின் இரு கரைகளையும் பலப்படுத்திச் சாலைகளை அமைப்பதற்கு ரூ.10 கோடி உலக வங்கி அனுமதி பெற்றது. ஆனால், பின்னர் வந்த தி.மு.க. அரசு இந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து பக்கிள் ஓடையின் இரு கரைகளையும் பலப்படுத்த வேண்டுமென்றும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக பக்கிள் ஓடையின் கரைகளில் பாலங்கள் கட்டப்பட்டு சாலைகள் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து அம்மா அவர்களின் அனுமதியோடு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் நகராட்சியின் பொறுப்பில் பக்கிள் ஓடை உள்ளது. இது பாசனக் கால்வாய் அல்ல. கழிவு நீரைக் கடலுக்குள் கொண்டு செல்லும் ஓடை ஆகும். இதன் மொத்த நீளம் 9100 மீட்டர்





ஆகும். 13-11-2000 நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை எண் 130-ல் மொத்தம், ரூ.30 இலட்சங்களுக்கு 5200 மீட்டர் முதல் 9100 மீட்டர் வரை தூர் வாரி மேம்படுத்தும் பணிக்கு பொதுப் பணித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதால் பொதுப் பணித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. இந்த ஓடையை முழு நீள அளவுக்குத் தூர்வாரி சீரமைக்க தோராயமாக ரூ.10 கோடிக்கு மேல் ஆகுமென்றும் இந்த ஓடை தூத்துக்குடி நகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதால் தூர் வாரி மேம்படுத்த நகராட்சி மூலம் ரூ.10 கோடி நிதி பெற்றுப் பொதுப் பணித் துறைக்கு வழங்கினால் பொதுப் பணித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரைச் சுற்றிலும் அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன. தற்போது கழிவு நீரை தருவைக் குளத்தின் அருகில் உள்ள இடத்தில் சேமித்து வைத்தாலும் அந்த நடவடிக்கைகளினால் நிரந்தரத் தீர்வுகள் காணவே இல்லை. எனவே, பக்கிள் ஓடைக் கழிவு நீரைக் குழாய்கள் மூலம் கடலுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றும் இதனால் கடல் வாழ் உயிரினங்கள் இறக்க நேரிடாது என்றும் மீன் வளத் துறை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்தை அங்குள்ள தொழிற்சாலைகளை அணுகி அவர்கள் வாயிலாக செய்ய அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். அது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய கட்டுப்பாட்டில் வருவதால் அவர்கள் அந்த வேலையைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள். நீங்கள் விடமாட்டீர்கள்போல் இருக்கிறது.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக சுற்றுப்புறச்சூழல் மாசுபட்டு

பொதுமக்களுக்கு அதிக சுகாதாரக் கேட்டை விளைவித்து வருகிறது. இலாபகரமாக இயங்கும் தொழிற்சாலைகள் மூலமாக இதைச் செய்ய வேண்டுமென்று அரசு அனுமதித்தால் நன்றாக இருக்கும். இதைச் செய்து முடிக்க வாய்ப்புள்ள தொழிற்சாலைகள்தான் அவை. அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 22, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**22—**

## திறந்தவெளி சிறைச்சாலை

***23953–திரு. வீ. சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை வட்டம், அரசனி–முத்துப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே அரசு கையகப்படுத்தியுள்ள இடத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைத்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கை வட்டம், அரசனி–முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது தொடர்பாகக் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

**திரு. வீ. சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிவகங்கை தொகுதியில் சிவகங்கையில் நீண்ட நாட்களாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் இரண்டு சிறைச்சாலைகள்தான்



உள்ளன. அவற்றில் 20 கைதிகள்தான் தங்க வசதி உள்ளது. சிவகங்கை மாவட்டம் தலைநகராக இருப்பதாலும், மாவட்ட நீதிமன்றங்கள் இருப்பதாலும் இளையான்குடி மற்றும் மானாமதுரை ஆகிய ஊர்களில் உள்ள நீதிமன்றங்களின் விசாரணைக் கைதிகள் தங்கிட போதிய கட்டட வசதி இல்லை. எனவே, அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது சிவகங்கை தொகுதியில் போதிய இடவசதி உள்ள அரசனி–முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் நோக்கத்திற்காக நில நிர்வாக ஆணையரால் சிவகங்கை மாவட்டத்தில் அரசனி மற்றும் கொட்டக்குடி ஆகிய கிராமங்களில் மொத்தம் உள்ள 8879 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் சிறைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, இந்த நிலம் 14–5–1984 முதல் சிறைத் துறையின்வசம் இருந்து வருகிறது. 27–6–1997 ஆம் நாளிட்ட அரசு கடிதத்தில் இந்த நிலத்தில் தனி கிளைச் சிறைச்சாலை அமைக்க ஏற்படும் தொடர் மற்றும் தொடராச் செலவினம் கொண்ட கருத்துருவினை அனுப்புமாறு சிறைத் துறைத் தலைவரிடம் கோரப்பட்டது. மேற்படி நிலத்தில் திறந்தவெளி சிறையினை அமைக்கலாம் எனச் சிறைத் துறைத் தலைவர் கருத்துத் தெரிவித்தார். அதன்படி திறந்தவெளி சிறை அமைக்க ஆகும் செலவின் திட்ட மதிப்பீடுகளைப் பொதுப் பணித் துறையிடம் சிறைத் துறைத் தலைவர் கோரியுள்ளார். திட்ட மதிப்பீடு பெறப்பட்டதும் அரசுக்கு இதற்கான செயற்குறிப்பு அனுப்பப்படும் எனச் சிறைத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் சிவகங்கை வட்டம் முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது பற்றி கொள்கை அளவில் ஏற்கப்பட்ட ஆணை எதுவும் அரசால் இதுவரை பிறப்பிக்கப்படவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

23—

## சிறுசேமிப்புத் திட்டம்

***42029—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை எவ்வளவு?

(ஆ) இதன் மூலம் கிடைத்த ஊக்கத் தொகை எவ்வளவு?

(இ) அவை எவ்வகையில் செலவிட அனுமதிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு:

1999–2000 ஆம் ஆண்டு 98.99 கோடி ரூபாய்.

2000–2001 ஆம் ஆண்டு 100.09 கோடி ரூபாய்.

2001–2002 ஆம் ஆண்டு 91.39 கோடி ரூபாய்.

2002–2003 ஆம் ஆண்டு 150.42 கோடி ரூபாய்.

2003–2004 ஆம் ஆண்டு 226.69 கோடி ரூபாய்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு சிறுசேமிப்புத் தொகை அதிகம் திரட்டப்பட்டதன் அடிப்படையில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட ஊக்கத் தொகை ரூபாய் 7.08 கோடியாகும்.

(இ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள இந்த ஊக்கத் தொகை அம்மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றியங்களில் சாலைகள் அமைத்தல், பழுதுபார்த்து மேம்படுத்துதல், ஏரி, மதகு பழுதுபார்த்தல், சிறு பாலம் கட்டுதல், நியாய விலைக் கடை, ஆரம்பப் பள்ளி, அங்கன்வாடி, சத்துணவுக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், தாய்–சேய் நல விடுதி, செவிலியர் குடியிருப்பு ஆகியவற்றின் கட்டடங்களைக் கட்டுதல், கழிவறை அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல், ஊராட்சிகளின் குடிநீர்க் குழாய்கள் பழுதுபார்த்தல், ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்தல், ஊராட்சிகளுக்குத் தெருவிளக்கு மற்றும் மயான சாலை அமைத்துக் கொடுத்தல் போன்ற பணிகளுக்குச் செலவிட அனுமதிக்கப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏராளமான Pharmacy, Physiotherapy, Nursing, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்படித் தொடங்கப்பட்டுள்ள கல்லூரிகளில் ரூபாய் 20 இலட்சம் அளவிலே மாநில அரசுக்கு deposit செய்ய வேண்டும். இப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சிறுசேமிப்புத் திட்டம் பற்றிய வினா. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பின் மூலமாக மைய அரசிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மாநில அரசுக்கு வரப்பெற்ற வருமானம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த வசூல் எவ்வளவு இருக்கிறதோ அந்த வசூலை முழுவதும் மாநில அரசுக்குத் தருகின்ற அணுகுமுறையைத் தற்போது மைய அரசு கடைப்பிடித்து வருகிறது. 1999–2000 ஆம் ஆண்டு 1604.74 கோடியாக இருந்த இந்த வருவாய் 2000–2001–ல் 1818.04 கோடியாக உயர்ந்தது. 2001–2002–ல் ரூ.1854.40 கோடியாக உயர்ந்தது; 2002–2003–ல் ரூ.2902.99 கோடியாக உயர்ந்தது; தற்போதைய 2003–2004 ஆம் ஆண்டில் அதிகப்படியான வசூலாக, மாநில அரசுக்கு இது கடன் உதவியாக மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய அளவிற்கு ரூ.3968.63 கோடி என்ற அளவை எட்டியிருக்கிறது.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. ச. ராமராஜ், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 27

24—

## காற்றாலைகள் மூலம் மின்சார உற்பத்தி

***37530—திரு. ச. ராமராஜ்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, ராசிங்கபுரம், சிலமலை கிராமப் பகுதிகளில் காற்றாலைகள் மூலம் மின்சார உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், ராசிங்கபுரம், சிலமலை கிராமப் பகுதிகளில் தனியார் நிறுவனங்கள் காற்றாலைகள் அமைக்க ஏற்பாடுகள் தொடங்கியுள்ளனர்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது போடிநாயக்கனூர் தொகுதியின் நீண்டகால கோரிக்கையை ஏற்று ஒப்புதல் அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த அரசுக்கும் எனது தொகுதியின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையே இல்லாத காலத்திலும்கூட தடையில்லா மின்சாரம் வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு, குறைந்த காற்றழுத்தம் உள்ள பகுதிகளிலும் காற்றாலைகள் அமைக்கின்றவிதமாக, நவீன காற்றாலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படிப் புதிய காற்றாலைகள் அமைக்கின்ற கம்பெனிகள், அதில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தைத் தன்னுடைய நிறுவனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதுபோக, மீதமுள்ள மின்சாரத்தைத் தனது சார்புடைய வேறு



2004 ஜூலை 27]

ஏதேனும் நிறுவனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பிருக்கிறதா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய சுய தேவைக்குப் போக, மீதமிருக்கின்ற மின்சாரத்தை third party sales, அதாவது, மற்றவர்களுக்கு விலைக்கு விற்க முடியுமா என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். புதியதாக வந்த Central Electricity Act-ன்படி அந்தக் கருத்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

25—

## மாற்றுப்பாதை அமைத்தல்

***19854—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, அண்ணாமலையார் மலையைச் சுற்றிப் போக்குவரத்திற்கென மாற்றுப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

26—

## சமுதாயக்கூடம்

***41406—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கல்லாவியிலுள்ள வேடியப்பன் கோயிலுக்கு அறநிலையத் துறை மூலம் சமுதாயக்கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, கல்லாவியிலுள்ள அருள்மிகு வேடியப்பன் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் அத்திருக்கோயிலுக்கு அறநிலையத் துறையால் சமுதாயக்கூடம் கட்டும் முன்மொழிவுகள் ஏதுமில்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினா எண் 27, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

27—

## ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

*** 36452—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் கூகலூர் பேரூராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் கூகலூர் பேரூராட்சியில், கூகலூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

28—

## பெண்கள் முன்னேற்றத் திட்டம்

***7376—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் புதியதாகத் திட்டம் ஏதும் தொடங்கப்படுமா ?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாயுள்ளமும், கருணையுள்ளமும் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களின் முன்னேற்றத்திற்காக சுய உதவிக் குழுக்களின் வாயிலாக பல செயல் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, இராஜபாளையம் பெண்கள் முன்னேற்றத்திற்காக என்று மட்டும் புதியதாகத் திட்டம் எதுவும் தொடங்கவேண்டியதில்லை. மாநிலம் முழுமைக்கும் புதிய திட்டங்கள் தொடங்கப்படும்போது, அத்திட்டங்களின் பயன்கள் இராஜபாளையம் பெண்களுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்குகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 27

முற்பகல் 10—15

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் நகராட்சியில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 666. மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 12207. குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.187.76 இலட்சம். கடன் வசதி பெறத் தயார் நிலையில் உள்ள மகளிர் குழுக்களின் எண்ணிக்கை 508. வங்கிக் கடன் பெற்ற குழுக்களின் எண்ணிக்கை 171. வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.201.58 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் எத்தனை மகளிர் சுய உதவி குழுக்கள் இயங்குகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நமது அமைச்சருக்கு பரீட்சை வைக்கின்ற மாதிரி தெரிகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் மொத்த சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 1,927; மொத்த மகளிர் எண்ணிக்கை 87,845; குழுக்கள் சேமித்துள்ள தொகை ரூபாய் 13,95,71,000; கடன் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 19,59,37,000 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரீட்சையில் பாசாகிவிட்டீர்கள். வினா எண் 29, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**29—**

## கொத்தடிமைத் தொழிலாளர்

***7931—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2004 ஜூலை 27]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை முற்றிலுமாக ஒழிக்கப்படத் தேவையான நடவடிக்கைகள் முனைப்புடன் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வந்தாலும்கூடப் பல இடங்களில் கொத்தடிமைகளை மீட்கப்படுவதாகச் செய்தித்தாள்களின் மூலம் அறியப்படுகிறது. எந்தப் பகுதியில் அந்தக் கொத்தடிமைகள் மீட்கப்படுகின்றார்களோ அந்தப் பகுதியில் இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு அரசு பொறுப்பை வழங்கி இதுபோன்ற கொத்தடிமைத் தொழிலாளர் முறை இல்லாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்காகக் கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் 1976-ல் இயற்றப்பட்டு அவ்வாண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்ற ஆணையின்படி 1996—97-ல் கொத்தடிமைத் தொழிலாளர் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி அவ்வாண்டுகளில் கொத்தடிமைத் தொழிலாளர்களாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் கண்டறியப்பட்டவர்கள் 25,005 பேர். துறை வழியான ஆய்வு மூலம் கண்டறியப்பட்டவர்கள் 12,857 பேர். ஆகமொத்தம் 37,862 பேர் கொத்தடிமைகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களில் வருவாய் கோட்டாட்சியர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி 21,356 பேர் கொத்தடிமைகள் அல்ல என முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. 12,931 நபர்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 3,575 பேர் பற்றிய விசாரணை நடைபெற்று வருகிறது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு உடனடி நிவாரணமாக ரூபாய் 1000 வழங்கப்படுகிறது. அதன்பின் அவர்களின் மறுவாழ்வுக்காக ரூபாய் 19,000 அளவிற்கு முழு நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு இதுவரை மொத்தம் ரூபாய் 1301.41 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கவும் கொத்தடிமைத்தனத்திலேயே சிக்காமல் இருப்பதற்கும்

தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொத்தடிமைத் தொழிலாளர்கள் பெரும்பாலும் கல் குவாரிகளில் அதிகமாகக் காணப்படுவதாக அறிகிறோம். அவ்வாறு கல் குவாரிகளை ஆய்வு செய்கின்ற அதிகாரிகள் இரகசிய முறையில் ஆய்வு செய்து அந்தக் கல் குவாரிகளிலே கொத்தடிமைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்களா என்பதை அறிய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல கல் உடைக்கும் தொழிலாளர்களோ அல்லது செங்கல் சூளையில் வேலை பார்ப்பவர்களோ அல்லது அரிசி ஆலையில் பணி செய்பவர்களோ ஏதாவது நிறுவனங்களிலோ அல்லது தொழில் செய்கின்ற அந்தத் தொழில் செய்வோர்கள் மத்தியிலோ கொத்தடிமைகள் என்று தெரியவருமானால் R.D.O. தலைமையில் வட்டாட்சியர், தொழிலாளர் நல ஆய்வாளர், வட்டத் தொழிலாளர் நல ஆய்வாளர் ஆகியோர் மூலமாகக் கண்டறியப்பட்டு அவர்கள் மூலமாக நேரடி விசாரணை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. ஜெக. வீரபாண்டியன் மற்றும் திரு. ராதாரவி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**30—**

## நரிக்குறவர்கள் நலன்

***24439—திரு. ஜெக. வீரபாண்டியன்:**
**திரு ராதாரவி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாடோடிகளாக வாழும் நரிக்குறவர்களைத் தாழ்த்தப்பட்ட மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாடோடிகளாக வாழும் நரிக்குறவர்களைத் தாழ்த்தப்பட்ட மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10–20

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழகத்திலே பழங்குடியினர் சான்றிதழ் பெறுவதற்குப் பலர் தவறான வழிமுறைகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், நரிக்குறவர் சமுதாயம் இதுநாள் வரை நாடோடிகளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களின் நடை, உடை, பாவனை, பேச்சு வழக்கிலே உள்ள மொழி, அதேபோல எழுத்து வடிவம் இல்லாத மொழி இவற்றைப் பார்க்கின்றபோது, வெளிப்படையாகவே பழங்குடியினருக்கு எடுத்துக்காட்டாக நம் தமிழ்ச் சமுதாயத்திலே நரிக்குறவர்கள் மட்டும்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இல்லாமல், பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை, அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கிடைப்பது கிடையாது. ஆகையினால், நம் அரசாவது இந்தக் காலத்திலேயே நரிக்குறவர் சமுதாயத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செயற்குறிப்பு இருக்கிறது என்று அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு இனத்தவரையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது அல்லது தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது என்பது மைய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. இது தொடர்பாக மாநில அரசு தனது பரிந்துரையை மைய அரசுக்கு அனுப்ப மட்டுமே இயலும். நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க ஏற்கெனவே மாநில அரசால் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இது தொடர்பாக நரிக்குறவர் இன மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், சமூகப் பொருளாதார நிலை மற்றும் அவர்தம் தனித்தன்மையான குண நலன்கள் குறித்த விவரங்கள் பரிந்துரையில் தரப்படவில்லை எனக் குறிப்பிட்டு, இவை தொடர்பாக

விரிவான ஆய்வு நடத்தி மேற்படி விவரங்களுடன் மாநில அரசின் பரிந்துரையை அனுப்பிவைக்கும்படி மைய அரசு கேட்டுக்கொண்டது. அதன்பேரில், நரிக்குறவ மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் மற்றும் சமூகப் பொருளாதார நிலைமை மற்றும் தனித்தன்மையான குண நலன்கள் பற்றி உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநர் மூலம் உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவரது ஆய்வறிக்கை தற்போது அரசுக்கு வரப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டு ஆய்வு மையத்தினர் மயிலாடுதுறை தொகுதிக்கு வந்திருந்தனர். அவர்களோடு நானும் கூடச் சென்றிருந்தேன். அவர்களும் நரிக்குறவர் சமுதாயத்தைப் பற்றி ஆய்வு செய்தார்கள். என்னிடம் பேசுகிறபோது, இவர்கள் முழுமையான பழங்குடியினர்தான் என்பதற்கு நாங்கள் பரிந்துரை செய்கிறோம் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், இன்றுவரை அவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், மயிலாடுதுறை நகரத்திலே காட்டுநாயக்கர் சமுதாயம் என்ற ஒரு சமுதாயம் இருக்கிறது. அவர்கள் பாரம்பரியமாகவே கடந்த ஐந்து தலைமுறைகளாகப் பழங்குடியினர் பட்டியலிலேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் அரசு ஊழியர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டு காலமாக அவர்களுக்கு இனச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. அதனால், அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரே குடும்பத்திலே தாய் தந்தை இருவரும் காட்டுநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். தம்பிக்குத் தந்திருக்கிறார்கள். அண்ணனுக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால் கடைசியில், தங்கைக்கு இந்தச் சான்று இல்லையென்று சொல்லி மறுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள், மனக்கொந்தளிப்போடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அதோடு உதகமண்டலத்திலே அந்தக் குழு எல்லா ஆவணங்ளையும் எடுத்துச் சென்று பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றுவரை காட்டுநாயக்கர் சமுதாயத்திற்கு மயிலாடுதுறை நகராட்சியிலே இனச் சான்று வழங்கப்படுவதில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நமது அரசு தாயுள்ளத்தோடு மீண்டும் ஆய்வு செய்து சிக்கல் இல்லாமல் இனச் சான்று வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் பட்டியலில் 36 உட்பிரிவுகள் இருந்து வருகின்றன. காட்டுநாயக்கர் இனமும் அதிலே அடங்கியுள்ளது. ஆனால், இந்த வினா நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது பற்றியது. இந்த ஆய்வு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்பேரில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியில் காட்டுநாயக்கர் என்ற ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 5,000 பேர் வாழ்கிறார்கள். அவர்களுடைய தந்தையாருக்குக் காட்டுநாயக்கர் என்று சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அதுவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நானும், மாண்புமிகு அண்ணன் சபாநாயகர் அவர்களும் எழுதிக் கொடுத்திருக்கிறோம். இதுவரைக்கும் அதுசம்பந்தமாக எந்தவிதமான முகாந்திரமும் கிடைக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, அமைச்சர் அவர்கள் எங்களுடைய தொகுதியைச் சார்ந்த, அந்த காட்டுநாயக்கர் சமுதாயத்தவருக்குச் சான்றிதழ் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, காட்டுநாயக்கர் பட்டியலில் உள்ளவர்களுக்கு இனச் சான்று வழங்குவதைப் பொறுத்தவரை, மக்களுடைய வாழ்க்கை முறை, பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம், பொருளாதார நிலைமை, அவர்களின் தனித் தன்மையான குண நலன்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அவர்களுக்குத் தக்க சான்றிதழ் வழங்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் காட்டுநாயக்கர்

சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கு S.T. பட்டியலில் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையானவர்களுக்கு கடந்த 7, 8 ஆண்டு காலமாக வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வு செய்து காட்டுநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்த அனைவருக்கும் ஆதிவாசிகளுக்குரிய சான்றிதழ் பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்பு இது போன்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பயன்பாட்டிற்குச் செல்ல வேண்டிய, அவர்களுக்குரிய சலுகைகள் எல்லாம் நேரடியாகச் செல்லவேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனமாக அதை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில்தான் எங்கெங்கு ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி, அல்லது பழங்குடியினர் பட்டியல் இன மக்களாக இருந்தாலும் அவர்கள் பயன்பெறவேண்டுமென்றுதான், அவர்களுக்குரிய சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்றுதான் மிகவும் கவனத்தோடு அவர்களுக்குரிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

31—

## பேருந்து இயக்குதல்

***19550—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து ஈசல்பட்டி வரை 30 கி.மீ. செல்லும் நகரப் பேருந்து எண் 29—ஐ பரிகம் கிராமம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரியிலிருந்து பரிகம் கிராமம் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், தருமபுரியிலிருந்து ஈசல்பட்டி வரை 30 கி.மீ. செல்லும் நகரப் பேருந்து தடம் எண் 29—ஐ நீட்டித்து இயக்கினால் நீளம் 31 கி.மீ. வருவதாலும், கோரிக்கைப்படி அப்பேருந்தினை ஈசல்பட்டியிலிருந்து பரிகம் வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலையுள்ளதால், இத்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

32—

## கரும்புக் கழிவு

***30068—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இரண்டரை கோடி டன் அளவிற்கு கரும்புக் கழிவு (மொலாசஸ்) தேங்கிக் கிடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

33—

## சிமெண்ட் தொழிற்சாலை

***42404—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி அருகில் உள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்தும் திட்டம் ஏதுமில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி அருகிலுள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் மிகவும் பழுதடைந்த machine-களைக் கொண்டு தயார் செய்யப்படுவதன் மூலம் cost of production அதிகமாக ஆகின்றது. ஒரு மூட்டைக்கு 10 ரூபாய் கூடுதலாகச் செலவாகிறது. இதற்கு புதிய machine-களைப் பொருத்தினால் 201 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் புதிய machine-கள் பொருத்துகின்ற போது ஓர் ஆண்டுக்கு 30 கோடி முதல் 40 கோடி ரூபாய் வரை இலாபம் ஈட்ட முடியும் என்று அங்கிருக்கின்ற நிபுணர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் அமைச்சரவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்கு மொத்தம் 210 கோடி ரூபாய் செலவு ஆகுமெனத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கான மூலதனத்தை, 50 கோடி ரூபாய் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்தும், 110 கோடி ரூபாய் இதர நிறுவனத்திடமிருந்தும் திரட்ட முடிவு செய்திருந்த சூழ்நிலையில், இப்போது 50 கோடி ரூபாய் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்து பெற முடியாத



சூழ்நிலையாலும், 110 கோடி ரூபாய் நிதியைத் திரட்ட முடியாதிருக்கின்ற சூழ்நிலையின் காரணமாகவும் அதனை நவீனப்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிய சிமெண்ட் தொழிற்சாலைகளைத் தொடங்குகிற திட்டம் ஏதேனும் உள்ளதா? தனியார் புதிய சிமெண்ட் தொழிற்சாலைகளைத் தொடங்க..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்கு சம்பந்தமற்றது.

வினா எண் 34, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

34—

## நிலவள வங்கி

***23163—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலை ஒன்றியத்தில் வெள்ளி மலையில் நிலவள வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**35—**

**கால்நடை மருத்துவமனை**

***20699—திரு. சி. சிவசாமி:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் தொகுதி, முத்தணம்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படுமா ?*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தங்கள் அனுமதியுடன் அவைமுன் வைக்கிறேன்.*

*இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டும் கேட்டிருந்தார்கள். முத்தணம்பாளையத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும், திருப்பூர் நகரில் இருந்தும் கால்நடைகளைச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்வதில் மக்களுக்குச் சிரமம் இருப்பதாக எங்களுக்கும் அடிக்கடி புகார்கள் வருகின்றன. முத்தணம்பாளையத்தில் இப்போதே 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாக நேற்று இரவு கோவை மண்டல இணை இயக்குநர் அவர்களிடம் தொலைபேசியில் பேசியபோது எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவருடன் நடத்திய ஆலோசனையின் முத்தணம்பாளையத்தில் இருக்கும் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தலாம் என்று இயக்குநர் பரிந்துரைத்தார். விரைவில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று முத்தணம்பாளையம் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*முற்பகல் 10–30*

**திரு. சி. சிவசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சிகரமான ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்து இருக்கின்றார். அவர் தொகுதிக்கு அருகிலே இந்த முத்தணம்பாளையம் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அந்த மருத்துவமனையை upgrade செய்வது விரைவாக





நடைபெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல்வேறு பகுதிகளில் மருத்துவமனை இல்லாத பகுதிகளில் mobile மருத்துவமனைகளை அதாவது நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களை உருவாக்கவேண்டும். அதாவது, கால்நடையாகக் கால்நடைகள் காததூரம் நடந்து சென்று மருத்துவ வசதி தேடுவதற்குப் பதிலாக அந்தக் கால்நடைகள் இருக்கின்ற பகுதிக்கே சென்று மருத்துவ வசதி செய்கின்றவிதமாக நடமாடும் கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி *2002* ஆம் ஆண்டு கேட்கப்பட்டதாகும். இதுசம்பந்தமாக நேற்று முழுவதும் அதிகாரிகளைக் கலந்து பேசி, இன்று திருத்திய பதிலைத் தெரிவித்தேன். நடமாடும் கால்நடை மருந்தகம் என்பது, மாவட்டம் முழுமைக்கும் பொதுவானதாகும். திருப்பூர் பகுதிக்கு நடமாடும் கால்நடை மருந்தகம் தேவையா என்பது குறித்துத் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசவேண்டும். அவசியம் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டால், அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து, நிச்சயமாக மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்றுச் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை மருந்தகங்கள் கால்நடை மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்ற மிக அருமையான திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான விஷயம். அதே நேரத்திலே கடந்த கால ஆட்சியிலே ஏற்படுத்தப்பட்ட கிளை மருந்தகங்கள் பல இடங்களில் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன; பொதுவாகவே அந்த இடங்களிலே அவை நடைமுறைப்படுத்தப் படாமலும் இருக்கின்றன. அதுபோன்று செயல்படாத கிளை மருந்தகங்களைத் தேவைப்படுகின்ற இடங்களுக்கு, மக்கள் கோருகின்ற இடங்களுக்கு, பொதுமக்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலே shift செய்வதற்கு, மாற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா? அப்படி மாற்றித் தருகின்றபொழுது அதே கிளை மருந்தகத்தை, ஒரு தரம்

உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கிளை நிலையங்களைப் பற்றிய விவரங்களை நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ஆண்டிவேல்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியத்தில் புதுரோடு என்கிற கிராமத்தில் கால்நடை மருத்துவமனை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மருத்துவர்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சென்ற ஆண்டே நேரடியாக மனு கொடுத்துள்ளேன். இதுவரை மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆண்டிவேல், தனிக் கேள்வி போடுங்கள். அமைச்சர் அவர்கள் முத்தணம்பாளையத்தில் இருக்கிறார். நீங்கள் உங்கள் ஊருக்குக் கூப்பிடாதீர்கள்.

வினா எண் 36, திரு. கா.தி. இளையகண்ணு. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**36—**

**சாலை வளைவுகளை அகலப்படுத்துதல்**

***48535–திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஆற்றுப்பாலத்திலிருந்து மாரமங்கலம் வரையுள்ள hair-pin வளைவுகளை (1, 3, 5, 19 மற்றும் 21) அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் ஆற்றுப் பாலத்திலிருந்து மாரமங்கலம் வரை 12 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைக்கப்பட்டுள்ளது. பேருந்து வசதியும் அம்மா அவர்களுடைய ஆசியோடுதான் கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சாலைகள் வழியாக பள்ளி மாணவர்கள், கூலித் தொழிலாளர்கள் செல்கின்றனர். இந்தச் சாலையில் 1, 3, 5, 19 மற்றும் 21 எண்கள் உள்ளிட்ட hair-pin வளைவுகள் உள்ளன. இதில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சமீபகாலத்தில் லாரி மற்றும் பஸ் போகின்ற வழியை, முன்னும் பின்னுமாக எடுத்து, சமீபத்தில் லாரி விபத்துக்குள்ளானது. இதில் அருணாசலம் என்பவர் – Arunachalam, Son of Vellaiyan என்பவர் —இறந்துவிட்டார். எனவே, பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி இந்த hair-pin வளைவுகளை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–இன்படி, மத்திய அரசுக்குப் பிரேரணை சமர்ப்பித்து, முன்னனுமதி பெற்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே உள்ள மாரமங்கலம் என்பது ஓர் ஊராட்சி. இந்தப் பகுதியிலே, மாரமங்கலம், கோயிலூர், கேலையூர், பெலாக்காடு, செந்திட்டு, அரங்கம் என்று அங்கே பல பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பகுதியிலுள்ள பள்ளி மாணவர்களும், இந்தப் பகுதியிலுள்ள கூலித் தொழிலாளர்களும், 12 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த வளைவுகளை அகலப்படுத்திக் கொடுத்தால், அவர்கள் பஸ்ஸிலேயே செல்வதற்கு வழிவகை ஏற்படும். எனவே, இந்த வளைவுகளை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மத்திய சர்க்காருக்குப் பரிசீலனை அனுப்பியிருக்கிறார்கள்; பார்க்கலாம்.*

*வினா எண் 37, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

**37—**

## பால் குளிரூட்டும் கிளை நிலையம்

***37590—திரு. ஜி. கோதண்டராமன்:**

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முகையூர் தொகுதி, குலதீபமங்களம், மதுராகுச்சிப்பாளையம் கிராமத்தில் பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*முகையூர் தொகுதி, குலதீபமங்களம், மதுராகுச்சிப்பாளையம் கிராமத்தில் பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**திரு. ஜி. கோதண்டராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த மூன்றாண்டு கால ஆட்சியில், தமிழகத்தில் அதிக அளவில் பால் உற்பத்தியாகி, வெண்மைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. முகையூர் தொகுதியிலும், அதிக அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதிக அளவில் பால் உற்பத்தி செய்திருக்கிறார்கள். விழுப்புரம் பால் மையத்திற்கு, சுமார் 70 கிலோ மீட்டர் தூரம் பால் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, பால், தயிர்ப் பால் ஆகிவிடும் நிலைமை அடிக்கடி ஏற்பட்டு, பால் உற்பத்தியாளர்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. குச்சிப்பாளையம் கிராமம், தென்பெண்ணை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. தண்ணீர் நன்றாகக் கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனவே, குச்சிப்பாளையம் கிராமத்தில், பால் குளிரூட்டும் கிளை நிலையம் ஒன்று அமைத்துத் தந்தால், அந்தப்*



*பகுதி மக்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள், மறுபரிசீலனை செய்து குச்சிப்பாளையம் கிராமத்தில், பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலதீபமங்களம், மதுராகுச்சிப்பாளையம் கிராமத்தில், தற்போது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இல்லை. இக்கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 7,300 லிட்டர் பால், விழுப்புரம் பால் பண்ணை மூலம் சேகரிக்கப்படுகிறது. இக்கிராமத்தில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பெற்றாலும், இக்கிராமத்திற்கு மிக அருகிலுள்ள விழுப்புரம் பால் பண்ணை மூலம் பால் சேகரம் செய்ய நல்ல வாய்ப்பு உள்ளது. மேற்படி கிராமத்திற்குத் தனியாகப் பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. இந்தப் பகுதிக்குத் தேவையான வசதியை, விழுப்புரம் பால் பண்ணை செய்து கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், தேவையில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில், பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வந்தது. கடந்த இரண்டாண்டுகளாக, அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் மூடப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களின் நலன் கருதி, மீண்டும் அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்மீது ஆய்வு மேற்கொண்டு, தேவையிருப்பின், மீண்டும் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உப்புத் தொழில் நசிந்து கொண்டிருக்கும்*

இந்த நேரத்தில், வங்கிகளில் கடன் பெற்று, மாடுகளை வளர்த்து, ஜீவனம் நடத்திக் கொண்டிருக்கும் குடும்பங்கள் ஏராளமாக உள்ளன. திருநெல்வேலியிலே, பால் குளிரூட்டும் தொழிற்சாலை உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்திலே, என்னுடைய தலைநகரமாகிய தூத்துக்குடி தொகுதியிலே, பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைத்தால், இந்த மக்களுக்கு நலமாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—10)

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகிற பால் அவ்வளவையும் பதப்படுத்துவதற்கும் குளிரூட்டுவதற்கும் தேவையான வசதி தற்போது இருக்கிறது. தேவையான பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட சங்கம் அமைத்து இருக்கிற பகுதிகளில் 4 ஆயிரம், 5 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுமேயானால் அங்கே பால் குளிரூட்டும் இயந்திரம் அமைப்பதற்கு நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் தேவை இருப்பின் பால் குளிரூட்டும் மொத்த இயந்திரம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் கிளை நிலையங்கள் அமைப்பதன் மூலமாக, தமிழகத்தில் இருக்கிற அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதன் மூலமாக, பல்வேறு தனியார் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு இணையாக அரசு அமைப்பதன் மூலமாக, பல வேலை வாய்ப்புகளும் பல நல்ல திட்டங்களும் மக்களுக்குச் சேர ஏதுவாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உற்பத்தி செய்யப்படுகிற பாலை கொள்முதல் செய்வதற்கும், குளிரூட்டுவதற்கும், பதப்படுத்துவதற்கும் தேவையான வசதிகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் கூடுதலான பால் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அதற்கு முன்னேற்பாடாக இப்பொழுது பால் குளிரூட்டும் நிலையங்களை நவீனப்படுத்துவதற்கும், பால் பண்ணைகளினுடைய செயல் திறனை



அதிகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவையான அளவுக்கு அதற்கு முன்னேற்பாடான நடவடிக்கைகள் அத்தனையும் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சியில் பால் குளிரூட்டும் கிளை நிலையம் ஏற்படுத்த செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது. அங்கு இந்த ஆண்டு பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே செஞ்சி மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளிலும் உற்பத்தி செய்யப்படுகிற பாலைக் கொள்முதல் செய்வதற்கும், குளிரூட்டுவதற்கும், பதப்படுத்துவதற்கும் போதுமான வசதி நம்மிடம் இருக்கிறது. எதிர்காலத்தில் இன்னும் அதிகப்படியான பால் உற்பத்தி வரக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அதையும் எதிர்நோக்கி தேவையான—நவீனப்படுத்துகிற, செயல் திறனை அதிகப்படுத்துகிற— பணியை மேற்கொண்டு செயல்படுத்துவதற்கு உரிய திட்டங்களை இப்போதே ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த அம்மா அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதனால் தேவை எந்தெந்தப் பகுதியில் இருக்கிறதோ அது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையங்களை, எனது கடையநல்லூர் பகுதியிலே, தனியார் நிறுவனங்கள், கிட்டத்தட்ட 5, 6 நிறுவனங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அரசு மூலமாக ஒரு துணை பால் குளிரூட்டும் நிலையம் கடையநல்லூரில் அமைத்தால் நம் அரசுக்கும் அது வருவாயை ஈட்டித் தரும் என்பதால் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே 30 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட வேண்டும். குறைந்தபட்சம் 30 கிலோ மீட்டர்

சுற்றளவுக்குள் அந்த 30 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி இருக்க வேண்டும். 1 ஏக்கருக்குக் குறைவு இல்லாத சமதள நிலம் வேண்டும். நல்ல நிலத்தடி நீர் கிடைக்க வேண்டும். மின் வாரியத்தின் மூலம் மும்முனை இணைப்பு பெறக்கூடிய வசதி இருக்க வேண்டும். சாலை வசதி இருக்க வேண்டும். அதற்கு நிதி 4 கோடி ரூபாய் அளவுக்குத் தேவைப்படும். இப்படி இந்த அடிப்படை நடைமுறைகளை வைத்துக்கொண்டு தேவையான இடங்களில் அமைக்கப்படுகிறது. இப்போது உற்பத்தி செய்யப்படுகிற பாலைப் பொறுத்தவரையில் கொள்முதல் செய்வதிலோ, குளிர்விப்பதிலோ இருக்கிற வசதி போதுமானதாக இருக்கின்ற காரணத்தால் மேற்கொண்டு பல பகுதிகளில் இதுபோன்ற தேவை இருப்பின் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அந்தப் பால் குளிரூட்டும் மொத்த இயந்திரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எந்தெந்தப் பகுதியில் அதுபோன்ற தேவை இருக்கிறதோ, அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தருமபுரி மாவட்டத்தில் இருந்து கிருஷ்ணகிரியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியாகப் பிரித்து கிருஷ்ணகிரி மாவட்டமாகச் செயல்பட வைத்தார்கள். எங்களுடைய மாவட்டத்தில் உற்பத்தியாகிற பால், பால் குளிரூட்டும் நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், கிருஷ்ணகிரியில் இருக்கக்கூடிய குளிரூட்டும் நிலையத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம். தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பால் உற்பத்தியாளர்கள் குளிரூட்டும் நிலையம் தொடங்க வேண்டும் என்று சொன்னால், 30 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நல்ல தரமான பால் அங்கே கிடைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சாலை வசதி வேண்டும் என்று சொல்கிறார்கள். என்னுடைய தருமபுரி மாவட்டத்தில் மொரப்பூரில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நிறைய வாய்ப்பு இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் எடுத்து வைக்கிற அத்தனை காரணங்களும் அதற்கு இயற்கையாகவே அமைந்துள்ளன. அங்கே மொரப்பூரிலே இரயில்வே நிலையம் இருக்கிறது. ஆகவே அங்கு



பதப்படுத்துகிற பால் சர்வ சாதாரணமாக சென்னை போன்ற பெருநகரங்களுக்கு வருவதற்கு வாய்ப்பும் இருக்கிறது. மேலும், தருமபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம். சமீப காலங்களில்கூட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் அதிகரித்துக் கொடுத்ததால் இன்றைக்கு அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் அதிகமாக பால் உற்பத்தி செய்து அந்த வறட்சியைப் போக்குவதற்கு முயன்றுகொண்டு வருகிறார்கள். ஆகவே, தருமபுரி மாவட்டத்திற்கெனத் தனியாக மொரப்பூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுக்க நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 10-45)*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல இப்போது இருக்கிற, உற்பத்தி செய்யப்படுகிற அந்தப் பாலைக் கொள்முதல் செய்வதற்கோ, குளிர்விப்பதற்கோ தேவையான வசதிகள் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆயிரம் கறவை மாடுகள் கொடுத்து, ஏற்கெனவே இருக்கிற பால் உற்பத்தியாளர்களுடைய எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்த வேண்டும், அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எதிர்காலத்தில் எந்தெந்தப் பகுதியிலே தேவை இருக்கிறதோ, எந்தெந்தப் பகுதியிலே பால் உற்பத்தித் தொழிலில் ஈடுபாடு உள்ளவர்கள் வருகிறார்களோ, அவர்களைப் பயன்படுத்தி அந்தக் கடனைக் கொடுப்பதோடு அவர்கள் உற்பத்தி செய்கிற பாலைக் கொள்முதல் செய்வதற்கு நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தப் பகுதியிலே மிக அதிக அளவிலே பால் உற்பத்தி இருந்து, தேவை இருப்பின், பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்குத் தேவையான வசதிகள் இருக்கும்பட்சத்தில், அதற்குரிய நடவடிக்கை, அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 27

**38—**

## சுற்றுலா மையம்

***9716—திருமதி கு. கலாவதி:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை, சுற்றுலா மையமாக அறிவிக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையைச் சுற்றுலா மையமாக அறிவிப்பது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி மலைவாழ் மக்களை என்றும் மறக்காத அரசு நமது அம்மா அரசு. தமிழக வரலாற்றிலேயே முதன்முதலில் மலைவாழ் மக்களின் குறைகளைக் களையவே அமைச்சர் பதவியும் வழங்கி, இந்த அவைக்குப் பெருமை சேர்த்த ஒரே முதலமைச்சர் நமது இதய தெய்வம் அம்மா அவர்கள்தான்.

ஒவ்வொரு வருடமும் ஆடி பதினெட்டு அன்று வல்வில் ஓரி விழா கொல்லிமலையில் மிகவும் சிறப்பாக நடக்கும். அப்போது மிகவும் சக்தி வாய்ந்த அரப்பளீஸ்வரர் சுவாமியைத் தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அதன் அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்வீழ்ச்சியில் 300 அடி உயரத்தில் இருந்து நீர் கொட்டுகிறது. இந்த எழில்மிக்க நீர்வீழ்ச்சியில் குளித்துவர 600 படிக்கட்டுகள் இறங்கி ஏறி வரவேண்டிய நிலை உள்ளது. இந்த நீர்வீழ்ச்சியில் இயற்கை மூலிகை கலந்து வருவதால் உடலில் உள்ள நோய்கள் நீங்கும் என்பது சிறப்பு அம்சமாகும். எனவே, சுற்றுலாப் பயணிகளின் சிரமத்தைப் போக்க இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு, நீர்வீழ்ச்சிக்குச் செல்ல இழுவை



2004 ஜூலை 27]

இரயிலையும், கோயில் அருகில் குழந்தைகள் பூங்கா ஒன்றையும் மற்றும் அப்பகுதிக்கு அடிப்படை வசதிகளையும் உருவாக்கித்தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. ஆனால் சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில்கொண்டு குறிப்பிட்ட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாக்கும் வசதி, சிறுவர் அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. நாமக்கல் மாவட்டம் குறித்த சுற்றுலா சிறப்பியல்புகளைச் சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துரைக்கவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் சுற்றுலா அலுவலகம் சேலத்தில் இயங்கி வருகிறது. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை தமிழக அரசால் மாவட்ட உலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி இளைஞர் விடுதி ஒன்று கட்டப்பட்டு அதனை உள்ளூர் பஞ்சாயத்து பராமரித்து வருகிறது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தமிழக அரசால் கலை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் சுற்றுலாத் துறையின் மூலமாக ஆண்டுதோறும் கோடை விழா நடத்தப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றவுடன் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல கொல்லிமலையில் உள்ள அரப்பளீஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் நீர்வீழ்ச்சி உள்ளது. இதில் வரும் நீர் மூலிகை மருத்துவ குணம் நிறைந்துள்ளதாக எண்ணப்படுகிறது. இந்நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் படிகளுக்கு இருபுறமும் கைப்பிடி அமைப்பது அரசின் ஆய்வில் உள்ளது. நீர்வீழ்ச்சிக்குச் செல்வதற்கு இழுவை இரயில் அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனையைப் பெற்றும், அரசு நிதிநிலைமைக்கேற்பவும் அங்கே வரும் சுற்றுலாப் பயணிகள் வருகையைக் கணக்கில் கொண்டும் சிந்தித்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க முடியாது என்று கூறி இருக்கின்றார்கள். பலமுறை இந்த மன்றத்திலே பேசப்பட்டு, அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும் என்று பலவிதமான கோரிக்கைகள் வைத்து இருக்கின்றோம். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் முன் மொழிந்ததை அந்த மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் வழி மொழிந்து இருக்கின்றேன். அங்கே பல வசதிகள் இருக்கின்றன. வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் குறைந்த செலவிலே நீண்ட காலமாக அங்கே தங்கிச் செல்கிறார்கள். தற்போது கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற மலைகளுக்கு இணையாக அந்த கொல்லிமலை பிரசித்துவம் பெற்று விளங்குகிறது. அங்கே அந்த நீர்வீழ்ச்சியிலே குளித்தால், பல நோய்கள் எல்லாம் நீங்கும் என்ற ஐதீகம் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை நேரிலே அங்கே வந்து அதைப் பார்த்துவிட்டாவது, அதைச் சுற்றுலா மையமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து, அதிகப்படியான வசதிகள் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அங்கே அரப்பளீஸ்வரர் மலை நீண்ட நாட்களாகப் பயன்பெறாமல் இருக்கிறது. அதற்கும் சுற்றுலாத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு அந்தக் கொல்லிமலைக்குக் கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மலைப் பாதை அமைப்பதற்கு சிறப்பு நிதித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தவிதத்திலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிப்பதில்லை. இருப்பினும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி சுற்றுலாப் பயணிகள் வருகையையொட்டி எந்த இடத்திலும், அதற்குத் தேவையான



அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் செஞ்சிக்கோட்டை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கொல்லிமலை, வினா எண் 39, திரு. துரை. கி. சரவணன் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

39—

## ஊராட்சியைப் பிரித்தல்

***22878–திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், நங்குடி ஊராட்சியை நங்குடி, விழுப்பெருந்துறை என்று இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், நங்குடி ஊராட்சியை, நங்குடி, விழுப்பெருந்துறை என்று இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெரும்பாலான சிற்றூராட்சிகள், 1000 வாக்காளர்களுக்குக் குறைவாகவும், பெரும்பாலான சிற்றூராட்சிகள் 7500 வாக்காளர்களுக்கு அதிகமாகவும் உள்ளன. என்னுடைய தொகுதியில் உள்ள குற்றாலம் ஒன்றியத்தில் உள்ள கோமளம் ஊராட்சி எட்டாயிரத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாக இருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய ஊராட்சிகளை

[2004 ஜூலை 27

இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? மேலும் ஊராட்சிகளுக்குக் குறைந்தபட்சம் எவ்வளவு வாக்காளர்கள் இருக்க வேண்டும்; அதிகபட்சம் எவ்வளவு வாக்காளர்கள் இருக்கவேண்டும் என்று வரைமுறை செய்யவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற ஊராட்சிகளைப் பிரித்தால் ஊராட்சிகள், வார்டுகள், எல்லைகள், உறுப்பினர்களின் எண்ணிக்கை, மற்றும் ஊராட்சிமன்றத் தலைவர், இடஒதுக்கீடுகள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படும். ஊராட்சிகளுக்கான தேர்தல் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நடந்து முடிந்தன. தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ள நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டால், அவ்வாறு பிரிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்படவோ அல்லது புதிதாகத் தேர்தல் நடத்தவோ, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வழிவகைகள் இல்லை. மேலும் அரசாணை எண் 1055, பொதுத் துறை, நாள் 28–11–2002 சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதி சீரமைப்பு ஆணையத்தின் அறிவிப்பின்படி 1–8–2002 முதல் சீரமைப்புப் பணி முடியும் வரையிலே ஊராட்சி அமைப்புகள், எல்லைகள் ஆகியவற்றைச் சீரமைக்கவோ, பிரிக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ கூடாது என்று ஆணையிட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. ஆறுமுகம்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் உள்ள மணலி பேரூராட்சியில் 2001 மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் சுமார் 28,700–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். வருமானமும் சுமார் 4 கோடி ரூபாய்க்கு மேலே வந்து அந்தப் பேரூராட்சி இயங்கி வருகிறது. ஆனால் தற்போது மணலி பேரூராட்சி, ஊராட்சியாகத் தரம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது மணலி ஊராட்சியின் சர்வேயின்படி சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் நகராட்சியாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் உருவாக்கப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 ஜூலை 27]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை ஊராட்சிகளாகவும், பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும் வகைப்படுத்துகின்றபோது 2001 Census பிரகாரம் 30 ஆயிரம் மக்கள் தொகை என்ற கணக்கின் அடிப்படையிலே மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மணலி பேரூராட்சியானது 30 ஆயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட காரணத்தால், அது ஊராட்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ளதன் அடிப்படையில் அதைப்பற்றி புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோடு என்கின்ற பகுதியை இப்போது நகராட்சியாக மாற்றியிருக்கிறார்கள். அது இதற்கு முன்பு பேரூராட்சியாக இருந்தது. பேரூராட்சியாக மாற்றவேண்டும் என்பதற்காக 5 கிராமப் பஞ்சாயத்துக்களை ஒருங்கிணைத்து பேரூராட்சியாக மாற்றினார்கள். இப்போது அதை நகராட்சியாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கு வரவேண்டிய அடிப்படை வருமானம்கூட அந்த நகராட்சிக்குக் கிடையாது. எனவே அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் இணைந்து மீண்டும் அதை கிராமப் பஞ்சாயத்தாக மாற்றவேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்களை நேற்று சந்தித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, மக்கள் தொகை அதிகம் இருக்கிறது; ஆனால் வருமானம் என்பது ஒன்றும் கிடையாது. ஒரு தொழிற்சாலையும் கிடையாது. எந்தவிதமான வருமானமும் கிடையாது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க அந்த கொல்லங்கோடு நகராட்சி என்று அமைக்கப்பட்டிருப்பதை, மீண்டும் அவர்களுக்கு கிராமப் பஞ்சாயத்தாக மாற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

[2004 ஜூலை 27

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் சோளிங்கர் தொகுதியைத் பொறுத்தவரையிலே 86 ஊராட்சி மன்றங்களும், 2 பேரூராட்சிகளும்தான் இருந்தன. ஆனால் அம்மா அவர்களுடைய, பேரூராட்சிகளை சிற்றூராட்சிகளாகவும், நகராட்சிகளாகவும் மாற்றுகின்ற, திட்டத்தின்மூலம் காவேரிப்பாக்கம் பேரூராட்சி, ஊராட்சியாகவும் சோளிங்கர் பேரூராட்சி, ஊராட்சியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. சோளிங்கர் பேரூராட்சியைப் பொறுத்த அளவிலே 2001 மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையிலே 28,500 என்று இருந்தது. ஆனால் தற்போது 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ளது. வருடத்திற்கு ஒன்றரைக் கோடியிலிருந்து இரண்டு கோடி வரை வருமானம் உள்ளது. உலகிலேயே பிரசித்திபெற்ற 108 வைணவத் திருத்தலங்களிலே ஒரு தலமான லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் இருக்கிறது. T.V.S. கம்பெனி இருக்கிறது. இன்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது. இப்படிப்பட்ட சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே நகராட்சியே கிடையாது. இரண்டு பேரூராட்சிகள், 86 ஊராட்சிகள் மட்டுமே உள்ளன என்பதைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் அதை நகராட்சியாக மாற்றிக் கொடுக்கும்படி பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 2001 மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையிலேதான் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டிருக்கின்ற மக்கள் தொகை கொண்ட பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்பட்டன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறும்போது 30 ஆயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகைதான் எங்களுடைய பேரூராட்சியில் இருந்தது என்று கூறினார்கள். இருப்பினும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது இதைப்பற்றிச் சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. என். நன்மாறன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2004 ஜூலை 27]

40—

## தமிழ் குறும்படங்கள் தயாரிப்பு

***42118—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் குறும்படங்கள் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழில் குறும்படங்கள் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் திரைப்படங்களுக்கு மானியமும், சிறந்த படங்களுக்கு விருதுகளும் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறும்படங்கள் கட்டாயமாக, அவசியமாக இப்பொழுது தமிழகத்திற்குத் தேவைப்படுகின்றன. ஏனென்று சொன்னால், பெரும்படங்கள் என்று சொல்லி வரக்கூடியவை பெரும்பாலும் கலாச்சாரச் சீரழிவை, சமுதாயச் சீரழிவை இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், (குறுக்கீடு) அது ஹிந்தி படம். நான் தமிழ்ப் படத்தைப் பற்றிச் சொல்கிறேன். தமிழ்ப் படங்களிலேகூட இப்பொழுது—மூலக் கேள்வியோடவே வருகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே, மணி அடித்துவிடாதீர்கள். (சிரிப்பு)—கலெக்டரை விரட்டிக்கொண்டு கொலை பண்ண வருகிற மாதிரி காட்டுகிறார்கள். ஒரு படத்தில் எஸ்.பி.-யினுடைய கையை வெட்டி, துண்டாகவே விழுகிறது. அந்தப் படத்தில் அந்தக் கலெக்டரை யார் காப்பாற்றுகிறான் என்றால், இன்னொரு ரவுடி

வந்து காப்பாற்றுகிறான். இப்போதெல்லாம் சினிமா எப்படி வர ஆரம்பித்திருக்கிறதென்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு என்ன செய்ய வேண்டும்?

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இப்போது பெரும்படங்கள் என்ற பெயரில்கூட, சமீபத்திலேகூட ஒரு 8 வயது சின்னப் பயலை science என்ற பெயரில் 25 வயதாக மாற்றுகிற மாதிரி காட்டி, தமிழ் சினிமாவிலேயே ராத்திரியானால் 25 வயதாக ஆகிவிடுகிறான். பகல் ஆனால் 8 வயதாக ஆகிவிடுகிறான். அந்த ராத்திரி 25 வயது கோளாறால் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து அந்தக் கல்யாணம் ஆன பெண்ணை கர்ப்பமாக்கிவிடுகிறான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹக்கீம், அது ஒரு ஆங்கிலப் படத்தினுடைய தழுவல். விட்டுவிடுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அது தமிழ்ப் படமாக வந்தாயிற்று. அது ஒரு பெரிய சமுதாயச் சீரழிவு. சின்னப் பயல் என்கிற மாதிரி. இதைப் போய்ப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லி சின்னப் பிள்ளைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள். நிறைய வேலை இருக்கிறது.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** முக்கியமானது. சமுதாயச் சீரழிவு. ஒரு சமுதாயத்திற்கு ஆபத்து இருக்கிறது என்பதால் சொல்கிறேன். ஆகையினால் இப்போது அந்த மாதிரியாகக் காட்டும்போதெல்லாம் பெண்களுக்கும், சின்னக் குழந்தைகளுக்கும் தவறான எண்ணங்கள், சிந்தனைகள் ஏற்பட்டு நாடு கெட்டுப் போவதற்கு, சமுதாயச் சீரழிவுகள், கலாச்சாரச் சீரழிவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவற்றுக்குத் தரக்கூடிய உதவிகளையெல்லாம் கட்டுப்படுத்தி வைத்துவிட்டு, moral lessons உள்ள குறும்படங்களை சிறு குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் விரும்பிப் பார்க்கிற மாதிரி அவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் நிறையப் படங்கள் எடுத்தால் அவை நிச்சயமாக ஒரு மாற்றத்தை உருவாக்கும். அதன் வாயிலாக சமுதாயத்திற்குச் செய்யக்கூடிய ஒரு தொண்டாகக் கூட அது இருக்கலாம் என்ற காரணத்தால் அதற்கு அதிகப்படியான உதவிகளைத் தமிழக அரசு, அம்மாவினுடைய அரசு செய்ய முன்வருமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்' என்ற பெயரில் மாணவர்கள் தயாரிக்கும் படப்பிடிப்புக்காகவும், குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் படம் எடுப்போர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுக் கேடயத்தையும் தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும், 2001–02 ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டு இயக்குதல் பிரிவு மாணவர் திரு. பிரபு ராதாகிருஷ்ணன் எடுத்த பட்டயக் குறும்படம் 'பரமபதம்' என்ற படத்திற்கு தேசிய திரைப்பட விருதுவான வெள்ளித் தாமரை பதக்கம் மற்றும் ரூபாய் 5 ஆயிரத்திற்கான காசோலை பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளும் பயன்படக்கூடிய வகையிலே பல்வேறு பணிகளை மேற்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களுடைய கோரிக்கையும் சிந்திக்கப்படும் என்பதைக் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### நிதியமைச்சர் பதிலுரை குறித்து திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இதே அவையில் சில பத்திரிகைச் செய்திகளை வைத்து அந்தச் செய்திகளுடைய நிலையை அறிவதற்கு இந்த அவையில் எழுப்பப்பட்ட நேரங்களில், பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளையெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு அவையிலே பேச முடியாது என்று அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும்கூடத் தெரிவித்திருக்கின்ற செய்திகள் இந்த அவையினுடைய குறிப்பிலே

இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்னளி மானியக் கோரிக்கைகள் முந்தைய நேர்வுகளிலே விவாதமின்றி நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்கின்ற செய்தியை இந்த அவையிலே ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். அப்படி இந்த அவையிலே கூறப்பட்ட செய்தியை – ஒரு பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு பொது மேடைகளிலே அந்தச் செய்தியின் மூலமாக மக்களிடத்திலே விபரீத எண்ணங்களை ஏற்படுத்துகின்ற அளவுக்கு ஒரு தரம் மிகுந்த, மூத்த முதலமைச்சராக இருந்தவர் குறிப்பிடுகிறார் என்று சொன்னால், அதைப்பற்றிய விளக்கம் இந்த அவைக்கு அவசியம் தேவைப்படுகிறது என்கின்ற நிலையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–0.5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவையில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் குறித்து அவைக்கு வெளியிலே பேசுவது அவை உரிமை மீறிய செயல் என்பதை, மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள், அந்தப் பொருள்படும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். திரு. கருணாநிதி அவர்கள் அவைக்கு வருவதும் இல்லை, அவை விவாதங்களில் கலந்துகொள்வதும் இல்லை, அவை விவாதங்கள் எப்படி நடைபெறுகின்றன, என்னென்ன பேசப்படுகின்றன என்று குறிப்புகளைப் பார்ப்பதும் இல்லை. அவற்றை விடுத்து, அவையை மிகவும் அவமதிக்கின்ற முறையில் அவைபற்றிய நிகழ்வுகளை வெளியில் விமர்சிப்பது, உண்மை அறியாமல் விமர்சிப்பது கண்டிக்கத்தக்க ஒன்று என்பது உண்மை நிலை. நான் அவையிலே பேசுகிறபோது Vote on Account on Demands for Grants, அதாவது முன்னளி மானியக் கோரிக்கைகள்மீது பேரவையில் விவாதம் நடைபெற்று, பின்னர் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதுபற்றிப் பேசினேன். Vote on Account on Demands for Grants, அதாவது முன்னளி மானியக் கோரிக்கைகள்மீது பேரவையில் விவாதம் நடைபெற்று, பின்னர் பலமுறை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; விவாதம் இன்றியும் முன்னளி மானியக் கோரிக்கைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அன்றையதினம் விவாதமின்றி இத்தகைய மானியக் கோரிக்கைகள் அவையில் ஈடேற்றப்பட்டது குறித்து மூன்றுகாரணங்களைக் குறிப்பிட்டேன். அவையில் நான் பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து முழுமையாகப் படித்துப் பார்த்தால் நான் அவையில் குறிப்பிட்டது



சரியானது என்பது தெளிவுபடும். திரு. கருணாநிதி அவர்கள் அவைக்கு வருவதன் மூலமாகவோ அல்லது அவையில் நடக்கும் விவாதங்களை முழுமையாகப் படிப்பதன் மூலமாகவோதான் அவையில் நடக்கும் உண்மை நிலைகளை அவர் தெரிந்துகொள்ள இயலும். அவையில் பேசப்படும் முழுச் செய்திகளும் பத்திரிகைகளில் சில நேரம் முழுமையாக வருவதில்லை. பத்திரிகைகளில் வரும் செய்திகளை மட்டும் நம்பி, அவைக்கு வராத ஒரு சட்டமன்ற உறுப்பினர், அவைக்கு வெளியே பேரவை உரிமை மீறும்வகையில் தவறாகப் பேசுவதோ, தவறாக எழுதுவதோ, அவை உரிமை மீறும் முறையற்ற செயலாகும். இதைத்தான் மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். முன்னாள் முதலமைச்சராக அவர் இருந்தபோது, பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை அப்படியே நம்பிக்கொண்டு பேசக்கூடாது என்று அவர் கூறியிருக்கிறார் என்பதைத்தான் மாண்புமிகு அண்ணன் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இந்தப் பிரச்சினை, அவை உரிமை மீறல் குழுவிற்குப் பேரவையால் அனுப்பப்பட்டுவிட்டது. பேரவைக்கு வெளியே பேசுவதற்கும் எழுதுவதற்கும் பதிலாக அவை உரிமை மீறல் குழுவிற்கு நேரில் வந்து, திரு. கருணாநிதி தனது கருத்துகளை விளக்கலாம்; விளக்கிக்கூற வேண்டும். அவை உரிமை மீறல் குழுவிற்கு நேரில் வந்து, அவைக் குறிப்புகளை அவை உரிமைக் குழு மூலமாக நேரில் படித்துப் பார்த்து உண்மை நிலைகளைப் புரிந்துகொள்ளலாம், புரிந்துகொள்ள வேண்டும். அவை உரிமை மீறல் குழுவிற்கு ஏற்கெனவே இந்தப் பிரச்சினை பேரவையால் அனுப்பப்பட்டுள்ளது. அவை உரிமை மீறல் குழு உண்மை நிலை என்ன, அவர் பேசுவதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதனைச் சட்டப் பேரவை விதிகளுக்குட்பட்டு வெளிப்படுத்துகின்ற உண்மை நிலையை உணர்ந்து அவர் செயல்பட வேண்டும். இதை மட்டுமே நான் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

## 3. அறிவிப்பு

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[2004 ஜூலை 27

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2004 ஜூலை 27]

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

[2004 ஜூலை 27

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2004—2005 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.1604.10 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.1008.21 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ.595.89 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாளன்று கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்றுப் "புதுப்பணிகள்" குறித்துச் செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. ஏழை எளியவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டதால், ஏற்பட்டுள்ள சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மத்திய வரிகளின் வரவுகள் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டதன் விளைவாக மாநிலத்திற்குக் கிடைக்கவிருக்கும் உயர்ந்த அளவு பங்கு, மாநில வரி வருவாய் வசூலில் உயர்வு, நிலுவைகளைச் சிறப்பான முறையில் வசூலித்தல் மற்றும் ஒட்டுமொத்தச் செலவில் சிக்கனம் ஆகியவற்றின்மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு பெருமளவு ஈடு செய்யப்படும்.

3. விவசாய பம்புசெட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் இலவச மின்சாரத்திற்காக நேரடியாகத் தொகை செலுத்துவதென்று இந்த அரசு தீர்மானித்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளவாறு, முன்னர் இலவச மின்சாரம் பெற்றுவந்த விவசாயிகளின் விவசாய பம்புசெட்டுகளுக்கான மின் கட்டணம் முழுவதும் தற்போது அரசால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நேரடியாகச் செலுத்தப்படும். விவசாய பம்புசெட்டுகளைப் பயன்படுத்தும்

@ 50 முதல் 52 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.



2004 ஜூலை 27] [திரு. சி. பொன்னையன்]

விவசாயிகளின் சார்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தொகை வழங்குவதற்காக அரசு ரூ.196.00 கோடி அனுமதித்துள்ளது. முந்தைய திட்டத்திலிருந்து மறு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூ.173.88 கோடி செலவு மேற்கொள்ளப்படும். எஞ்சியுள்ள தொகையான ரூ.22.12 கோடி "மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், குடிசையில் வாழ்பவர்களின் சார்பாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்குவதற்காக அரசு ரூ.16.00 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை முழுவதும் முந்தைய திட்டத்திலிருந்து மறுநிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்படும். "மானியக் கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–15

4. வீட்டு பயன்பாட்டு வகையின் கீழ்வரும் மின்நுகர்வோரைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு உதவவும் அரசு புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. ரூ.116.57 இலட்சம் நுகர்வோர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிக்கும் மின்கட்டணத்திற்கும் அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள குறைக்கப்பட்ட மின்கட்டண வீதத்திற்குமிடையேயான தொகையை ஏற்று அரசு உதவித் தொகை வழங்கும். மின்கட்டணம் குறைக்கப்பட்டதன் காரணமாக, வீட்டுப் பயன்பாட்டு மின் நுகர்வோர் சார்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தொகை வழங்குவதற்காக அரசு ரூ.712.50 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.37.50 கோடி முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 13 — எரிசக்தித் துறை" என்பதன்கீழ் ரூ.712.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

5. அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் XI மற்றும் XII ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த அனைத்து மாணவிகளுக்கும் ரூ.47.36 கோடி செலவில் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இச்செலவுத் தொகையானது மானியக் கோரிக்கை எண் 9 — பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேரக்கப்பட்டுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 27

6. வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, சிறு மற்றும் குறு விவசாயிகளின் பயிர்க் கடன் மீதான வட்டித் தொகையினைத் தள்ளுபடி செய்ய ரூ.62.00 கோடியும், தேயிலைச் சாகுபடியாளர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற குறுகிய மற்றும் நீண்ட காலக் கடன்களின்மீது செலுத்த வேண்டிய தவணை தவறிய வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்வதற்காக ரூ.1.80 கோடியும் அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.10.80 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. "மானியக் கோரிக்கை எண் 12 — கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில், ரூ.41.80 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

7. நடப்புப் பருவத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை நன்கு செயல்படச் செய்யும் பொருட்டு விவசாயிகளின் நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்க்கும் வகையில், அவ்வங்கிகளுக்கு ரூ.68.95 கோடி கடனாக வழங்குவதென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது. "மானியக் கோரிக்கை எண் 12— கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.68.95 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

8. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு இலவச சேலை—வேட்டி வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 2004—2005 ஆம் ஆண்டிற்காக வரவு—செலவுத் திட்டத்தில் ரூ.173.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளதற்கும் கூடுதலாக, "மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.14.48 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

9. கூட்டுறவு வங்கிகளில் பெற்று நிலுவையில் உள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக, கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் கடனாக ரூ.76.57 கோடி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. "மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.76.57 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. மத்திய கைலாஷிற்கும் மாமல்லபுரத்திற்கும் இடையே ஆறுவழி தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை அமைப்பதற்காக நிலத்தைக் கையகப்படுத்த, அரசு ரூ.43.00 கோடி அனுமதித்துள்ளது. துணை



2004 ஜூலை 27] [திரு. சி. பொன்னையன்]

மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 20 – நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் ரூ.43.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

11. விவசாயிகளுக்குக் கரும்புக்கான நிலுவைத் தொகையைக் கொடுப்பதற்காக, கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்குக் கடனாக ரூ.229.97 கோடி வழங்குவதென்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக அரசு ரூ.1.80 கோடி அனுமதித்துள்ளது. "மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.231.77 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

12. பருவமழை பொய்த்ததன் காரணமாக, சென்னை மாநகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான இடைக்காலத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு மொத்தம் ரூ.177.00 கோடி அனுமதித்துள்ளது.

இதில் ரூ.14.00 கோடி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்குக் கூடுதல் சரிவிகிதப் பங்குத் தொகையாகவும், ரூ.07.50 கோடி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு மூலதன மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. "மானியக் கோரிக்கை எண் 33 — நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.81.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–20

13. கடலூர், நாகப்பட்டினம், சிவகங்கை மாவட்டங்களில் தேசிய ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டத்தைச் (Rashtriya Sam Vikas Yojna) செயல்படுத்துவதற்கு அரசு ரூ.45.00 கோடி அனுமதித்துள்ளது. "மானியக் கோரிக்கை எண் 35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.18.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

14. புதிய அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் ஏரிகள், மதகுகள், நீர்வழங்கு கால்வாய்களை நவீனப்படுத்துதல் போன்ற பணிகளுக்காக "நபார்டு" நிதியுதவி பெறும் திட்டத்தின்கீழ் அரசு ரூ.74.79 கோடி அனுமதித்துள்ளது. "மானியக் கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.29.07 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 27

15. ஊட்டச் செறிவுமிக்க உணவினை வழங்கும் பொருட்டு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம் மற்றும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒரு முட்டை வழங்குவதற்கு "மானியக் கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூ.39.59 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

16. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

(46 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## முன்மொழியப்பெற்ற கூடுதல் செலவிற்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள், 2004–2005

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 3 நீதி நிர்வாகம் | .. | .. | .. |
| 5 வேளாண்மைத் துறை | 31,62,00 | .. | .. |
| 6 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு | 52,07 | .. | .. |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 47,78,00 | 15,00 | .. |
| 12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 61,13,54 | .. | 68,95,00 |
| 13 எரிசக்தித் துறை | 7,12,50,00 | .. | .. |



2004 ஜூலை 27] [திரு. சி. பொன்னையன்]

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 15 நிதித் துறை | 2 | .. | .. |
| 16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் | 16,31,03 | .. | 83,56,96 |
| 17 கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | .. | .. | 75,00 |
| 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 14,86,03 | 20,00 | .. |
| 19 உயர் கல்வித் துறை | 5,50,10 | 1 | .. |
| 20 நெடுஞ்சாலைகள் துறை | 36,76 | 43,00,00 | .. |
| 21 உள் துறை—காவல் | 3,32,97 | .. | .. |
| 23 உள் துறை—சிறைச்சாலைகள் | .. | 1,25,00 | .. |
| 26 தொழில் துறை | .. | .. | 2,36,45,99 |
| 27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | .. | .. | 3,91,00 |
| 33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 15,64,00 | 81,50,00 | .. |
| 35 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 18,00,00 | .. | .. |
| 38 பொதுப் பணித் துறை | .. | 76,15,40 | .. |
| 39 வருவாய்த் துறை | 4,06,60 | .. | .. |
| 40 ஊரக வளர்ச்சித் துறை | 1 | .. | .. |

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 27

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 41 பள்ளிக் கல்வித் துறை | 10,45,52 | .. | .. |
| 43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 56,18,50 | .. | .. |
| 44 தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை— தமிழ் வளர்ச்சி—பண்பாடு | 10,00 | .. | .. |
| 47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 25,65 | .. | .. |
| பெரு மொத்தம் | 998,62,80 | 202,25,41 | 393,63,95 |

## 6. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 11 – வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004–2005 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 11 – வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.110,26,12,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2004 ஜூலை 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 72, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,26,12,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 128, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3, திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 29, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவதின் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,26,12,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 20 – நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20 – நெடுஞ்சாலைகள் துறை. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.804,23,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,089,68,20,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 42, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறையில் பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு முக்கிய வீதியான காந்திஜி சாலையில் பணிகள் தொடர்ந்தால் 'பை பாஸ் சாலையாக' திருவிழந்தூர் மாப்படுகை வழியாக குடந்தை மெயின் ரோடை இணைக்க சாலையை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.804,23,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,68,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 27, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைத் துறையிலுள்ள சாலைகளில் ஏற்படும் சிறு பழுதுகளை உடனடியாக நீக்க தனி நிதி ஒதுக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.804,23,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,68,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 53, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதிக்குட்பட்ட ஓசூர் முதல் கெலமங்கலம் வரை உள்ள ஒருவழி தார் நெடுஞ்சாலையும், கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரை உள்ள ஒருவழி தார் நெடுஞ்சாலையும் இருவழி நெடுஞ்சாலைகளாக மாற்றிடவும் இதற்கு மத்திய சாலை நிதி (Central Road Funds) பெற மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.804,23,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,68,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 74, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி முதல் கூடங்குளம் வரை உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் மோசமாக உள்ளது. உடனடியாக நல்ல சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.804,23,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,68,20,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 23 – உள் துறை–சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23– உள் துறை–சிறைச்சாலைகள். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள்துறை – சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.69,95,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.47,09,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 26, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் அவ்வப்போது வன்முறைகள் நடப்பதைத் தடுக்க

[திரு. லா. சந்தானம்] [2004 ஜூலை 27

நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,95,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,09,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 77, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மேலும் சிறைத் துறைக்கு மூன்று D.I.G. அந்தஸ்து அதிகாரிகள் பணி இடங்களைப் புதிதாக உருவாக்க வேண்டுதல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை – சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,95,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,09,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (ஈ) கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

முற்பகல் 11—25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,81,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.30,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2004 ஜூலை 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 25, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையிலுள்ள அச்சு இயந்திரங்களை நவீனமயமாக்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,81,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.30,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 82, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பாடநூல்கள் அரசு அச்சகம் மூலம் அச்சிடப்பட்டு முறையாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,81,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.30,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (உ) கோரிக்கை எண் 34 – பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34– பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,14,01,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 84, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,14,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 24, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தின்போது நியமிக்கப்பட்ட பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,14,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஊ) கோரிக்கை எண் 36 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,72,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 23, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் உள்ள அரசு மதுக்கடைகளை பள்ளிகள், கோவில்கள் மற்றும் குடிநீர்க் குழாய்களின் அருகில் அமைத்திடாவண்ணம் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,72,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 85, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் பணியாற்றிய காவல் துறை கண்காணிப்பாளர் சிறப்பாகப் பணியாற்றி கள்ளச்சாராயம், கள், மதுக் கசாயம், கஞ்சா போன்றவற்றை விற்பதனைத் தடுத்து நிறுத்தியதால் இன்று வரை அங்கு கள்ளச்சாராயம் விற்கப்படாமல் உள்ளதுபோல் மற்ற மாவட்டங்களிலும் நடவடிக்கை எடுத்துத் தடுத்து நிறுத்தி அரசுக்கு வருமானம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,72,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 49, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நட்சத்திர ஓட்டல்களில் உள்ள வசதியைப் போல வேறு சில ஓட்டல்களிலும் சமமாக வசதி உள்ளதால், அந்த ஓட்டல்களுக்கும் Attached Bar வைத்துக்கொள்ள அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,72,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஏ) கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 750,10,74,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.507,49,38,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 22, திரு. லா. சந்தானம்.

**திரு. லா சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியில் செயல்பட்டுவரும் 58 கிராமக் கால்வாய்த் திட்டத்திற்கான மறு மதிப்பீட்டை (Revised Estimate) அங்கீகரிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.750,10,74,000/–மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.507,49,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 41, திரு. ஜெக. வீரபாண்டியன்.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதியில் நகர்ப் பகுதிகளிலும் ஒன்றிய கிராமப்புறப் பகுதிகளிலும் குளங்களை ஆழப்படுத்தி மழை நீர் சேகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.750,10,74,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.507,49,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 55, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் அஞ்செட்டி அருகே தொட்டள்ளா அணை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.750,10,74,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.507,49,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 89, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "100 ஆண்டுகளாக மராமத்து செய்யாமலுள்ள திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் கால்வாயிலுள்ள 52 குளங்கள், ஆலந்துறை ஆற்றுப் பாசனக் குளங்கள் 54, கொடுமுடியாறு அணைத் திட்டத்திலுள்ள 44 குளங்கள், நம்பியாற்று பாசனக் குளங்கள் சுமார் 50 ஆகியவற்றை மராமத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.750,10,74,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.507,49,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[2004 ஜூலை 27

## (ஏ) கோரிக்கை எண் 39 – வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.917,04,27,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.23,48,84,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 91, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.917,04,27,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,48,84,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 56, திரு. கே. வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேன்கனிக்கோட்டை வட்டத்திலும் ஓசூர் வட்டத்திலும் உள்ள புறம்போக்கு நிலங்களில் பயிரிடும் விவசாயிகளுக்கு ஆழ்துளைக் கிணறு அமைக்கவும் வங்கியில் கடன் பெறவும் விதிகளைத் தளர்த்தி இரண்டு வட்டங்களிலும் உள்ள புறம்போக்கு விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2004 ஜூலை 27] [திரு. கே.வி. முரளிதரன்]

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.917,04,27,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,48,84,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 18, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சி அறிவிக்கப்பட்ட மாவட்டத்தில் சில இடங்களில் நிலவரி வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.917,04,27,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,48,84,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஐ) கோரிக்கை எண் 49 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.325,74,01,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 94, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.325,74,01,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 20, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சியினால் பெருந்துயரத்தில் உள்ள விவசாயிகளுக்கு சென்ற ஆண்டுபோல இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.325,74,01,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

## (ஒ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.27,68,51,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,40,93,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 38, திரு. ஜெக. வீரபாண்டியன்.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை ஒன்றிய கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் உள்ள அரிஜனக் குடியிருப்புகளில் புதிய கோயில்கள் கட்டும் பணிக்குக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,68,51,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,40,93,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 96, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராதாபுரத்தில் பேருந்து நிலையம் அமைக்க அருள்மிகு நித்திய கல்யாண அம்மன் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை இதுவரை உள்ளாட்சி நிர்வாகத்திற்கு ஒதுக்கித் தராதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,68,51,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,40,93,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 51, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் அஞ்செட்டி தேன்கனிக்கோட்டை நெடுஞ்சாலையில் உள்ள மல்லிகார்ஜுன் துர்கம் மலை மீதுள்ள அருள்மிகு மல்லிகார்ஜுன் ஸ்ரீ பிரம்மா ராம்பா தேவி ஆகிய இரண்டு திருக்கோயில்களைச் செப்பனிடவும், மலைமீது சுற்றுச்சுவர் கட்டவும் (150 மீட்டர்) கோபுரம் கட்டவும், புதிதாகப் படிக்கட்டுகள் (மலைக்கு) அமைக்கவும் மற்றும் குளம் அமைக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே.வி. முரளிதரன்] [2004 ஜூலை 27

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை– இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,68,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,40,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 19, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறக் கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்வதற்கு அரசு வழங்குகின்ற மானியத் தொகையின் அளவை அதிகரித்து வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,68,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,40,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 11, வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு, மானியக் கோரிக்கை எண் 20, நெடுஞ்சாலைகள் துறை, மானியக் கோரிக்கை எண் 23, உள் துறை—சிறைச்சாலைகள், மானியக் கோரிக்கை எண் 29, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு, மானியக் கோரிக்கை எண் 34, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மானியக் கோரிக்கை எண் 36, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, மானியக் கோரிக்கை எண் 38, பொதுப் பணித் துறை, மானியக் கோரிக்கை எண் 39, வருவாய்த் துறை, மானியக் கோரிக்கை எண் 49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற துறைகள் பல்வேறாக இருந்தாலும் எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரத்திற்குள்ளாக அவற்றைப் பேசியாகவேண்டும் என்கின்ற நிலையில் இந்த வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 169 முதல் 567 வரையிலான பக்கங்களில் இணைப்பு I முதல் VIII ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@ 569 முதல் 609 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IX ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டைப் பொறுத்தளவிலே கடந்த 3 ஆண்டு காலமாகப் பருவமழை பொய்த்து விட்டதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சி—அதுதான் இப்போது—நம் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற ஒரு நிலையாக இருக்கின்ற காரணத்தினால் அந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாத்திடல் வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக எடுத்துக்கொண்ட நிவாரண நடவடிக்கைகள், மிகப் பெரிய அளவிலே தமிழக மக்கள் அனைவரும் பாராட்டுகின்ற நிலையிலே அமைந்து இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படி இருந்தும்கூட இன்றைக்கும் அந்த வறட்சியினுடைய கொடுமை தமிழக மக்களிடத்திலிருந்து அகலவில்லை என்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டுகளிலே வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு–நான் ஒரு விவசாயி— என்னுடைய வாழ்நாளில் இதுவரை எந்த அரசும், விவசாயம் செய்யப்படாமல் தரிசாகக் கிடந்த நிலத்திற்குக்கூட ஒரு இழப்பீட்டுத் தொகை வழங்கியது இல்லை என்கின்ற நிலையில், இந்த அரசாங்கம் சென்ற ஆண்டு விவசாயம் செய்து பாதிக்கப்பட்ட நிலங்களுக்கும், விவசாயம் செய்யாமல் தரிசாக விடப்பட்டிருந்த நிலங்களுக்கும், தென்னை மரங்கள் எல்லாம் காய்ந்து போனதற்கும்கூட உரிய நிவாரணங்களை அனைத்து விவசாயிகளுக்கும் கொடுத்திருக்கின்ற நிலையை உண்மையிலேயே நான் பாராட்டாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலையில் நான்கூட இந்த அரசு வழங்கிய நிவாரணத் தொகையைப் பெற்றிருக்கிறேன். என்னுடைய நிலங்கள் எல்லாம் விவசாயம் செய்யப்படாமல் இருந்தது குறித்து அரசு எனக்குக்கூட ஒரு சிறிய தொகையை வழங்கியது. அந்த அளவுக்கு இந்த மக்களிடத்திலே அன்பு கொண்டு அரசு பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. தஞ்சை தரணியைப் பொறுத்தளவிலே அந்த மக்களுக்குப் பல்வேறு நல உதவித் திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்களுக்கு நாங்கள் எல்லாம்கூட அரிசி வழங்க வேண்டு மென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த அவையிலே கேட்டபோது, பொது விநியோகத்திலே ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசிதான் தற்சமயம் வழங்கப்படுகிறது, அப்படித்தான் 20 கிலோவுக்குப் பதிலாக





ஒரு 15 கிலோ அரிசி வழங்குவார்கள் என்று நாங்களெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் திடீரென 30 கிலோ அரிசியை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டு, அதையும் செய்துகாட்டினார்கள்.

முற்பகல் 11—35

இப்படியெல்லாம் இருக்கின்ற நிலையில், ஓர் அரசு என்று வருகின்றபோது அதிலே காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் சில விமரிசனங்களைச் செய்வது வாடிக்கைதான், இயற்கைதான் என்பதை மக்களும் அறிவார்கள்.

இன்றைக்குள்ள சூழ்நிலையிலே இன்னும் கிராமப்புறங்களிலே குடிநீர்ப் பிரச்சினை என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் எல்லாம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒரு நாளைக்குச் சென்று வருவதே மிக சிக்கலான சூழ்நிலையாக இருக்கிறது. காரணம், அங்கிருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையை ஒவ்வொரு கிராம மக்களும் வந்து சொல்கின்ற நேரத்தில் அதை அவசியம் போக்கியாக வேண்டுமென்கின்ற சூழல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நல்ல வேளையாக இன்றைக்கு அவையிலே இருக்கிறார்கள். எனவே, இந்தக் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு ஒரு சிறப்பு நிதி எப்படியாவது ஒதுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் வறட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்காக ஏற்கெனவே மத்திய அரசிலிருந்து கடந்த 2–வது மாதம், பிப்ரவரி மாதம், குழுக்கள் வந்ததாகவும், பல மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்ததாகவும், அதன் மூலமாக நமது அரசு அதிகாரிகளெல்லாம் இந்த மாநிலத்தினுடைய வறட்சியைப் போக்குவதற்காக ஏறத்தாழ 1500 கோடி ரூபாய் வரை தேவைப்படும் என்கின்ற நிலையை அந்தக் குழுவிடத்திலே எடுத்துச் சொல்லியதாகவும் இங்கு நான் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கிறேன். ஆனால், அதற்குப் பின்னால் ஒரு தேர்தல் நடந்து மத்தியிலே ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழலில் இங்கு வந்து பார்த்த அந்தக் குழுவினுடைய அதிகாரிகள் நிலையாகத்தான் இருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இன்றைக்கிருக்கின்ற மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டினுடைய

வறட்சியைப் போக்குவதற்காக ஏதாவது நிதியுதவி பெறப்பட்டிருக்கிறதா? இல்லை, கொடுப்பதாக ஏதாவது வாக்குறுதிகள் தந்திருக்கிறார்களா என்பது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை என்கின்ற காரணத்தினால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, எந்த நிலையிலே இருக்கிறது என்பதற்கு இந்த அவைக்கு விளக்கமளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுப் பணித் துறை. இந்தப் பொதுப் பணித் துறையைப் பொறுத்த அளவிலே பல ஆண்டுகளாகத் தூர்ந்துபோய்க் கிடக்கின்ற ஏரி, குளங்களை எல்லாம் புனரமைப்பதற்கு ஏற்கெனவே 100 கோடி ரூபாய்க்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அது உண்மையிலேயே, விவசாயிகளின்பால் அக்கறை கொண்ட ஒரு நடவடிக்கை. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய நிதியும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, என்னுடைய தொகுதியிலே 58 கிராமக் கால்வாய்த் திட்டம் என்பது கடந்த அரசால் வழங்கப்பட்டு அதற்குரிய நிதி சரியான முறையிலே ஒதுக்கப்படவில்லை. அவர்கள் ஒதுக்கிய அந்த மதிப்பீடு போதவில்லை என்கின்ற காரணத்தினால் திருத்திய மதிப்பீடு தேவை என்கின்ற நிலையில் அது ஏறக்குறைய 3 ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கிறது. இதை நான் 2001 ஆம் ஆண்டிலேகூட முதன் முதலாக இந்தச் சட்டமன்றத்திலே எடுத்து வைக்கின்ற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிச்சயமாக நான் நிறைவேற்றித் தருவேன் என்கின்ற உறுதிமொழியை இந்த அவையிலே தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உறுதிமொழியை வருகின்ற 2 ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து, இந்தத் திருத்திய மதிப்பீடு. . .

முற்பகல் 11—40

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 58 கிராமங்களும் தண்ணீர் வசதி பெறுவதற்காக விவசாயப் பெருமக்களுக்காக 58 ஆம் கால்வாய்த் திட்டம் கடந்த ஆட்சியில் வெறும் அறிவிப்போடு இருக்கிறது. 40—க்கு மேற்பட்ட திட்டங்கள் அறிவிப்பு செய்யப்பட்டன. அதில் இந்த 58 ஆம் கால்வாயும்



ஒன்றாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்த மாதிரியாக அறிவிக்கப்பட்டுச் செயல்படாத அத்தனை நீர்த் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அத்தனை திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியினை வருடந்தோறும் ஒதுக்கித் தந்துள்ளார்கள். அந்த வகையில் 58 ஆம் கால்வாய்த் திட்டத்திற்கு 3 வருடங்கள் தொடர்ந்து 5 கோடி ரூபாய் என்ற அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அதனுடைய திட்ட மதிப்பீடு இன்றைக்கு உயர்ந்துள்ள நிலையில் திட்ட மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் விரைவில் அந்த மறு மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் தேவையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. அவர்கள் கூறியதுபோல, சென்ற ஆண்டுகூட 5 கோடிகளுக்கு மேலாக நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் இந்தத் திருத்திய மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்கின்ற காரணத்தினால் அந்த நிதியைச் செலவு செய்ய முடியவில்லை என்கின்ற தகவலை அந்தத் துறையினுடைய அதிகாரிகள் என்னிடத்திலே கூறினார்கள். எனவே, வருகின்ற காலத்தில் அதை...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய மதிப்பீடு வருவதை எதிர்நோக்கி—அவர்கள் செய்திருக்கின்ற அந்தப் பணிக்கு திருத்திய மதிப்பீட்டில் எதிர்நோக்கி—50 சதவிகிதம் அவர்கள் செய்த பணிக்காக அங்கே அவர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** நன்றி. எனவே, இந்தத் திருத்திய மதிப்பீட்டை விரைவாக முடித்து அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பின்தங்கிய பகுதி மக்களாகிய எங்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, நெடுஞ்சாலைத் துறையில்–கடந்த காலங்களில் எல்லாம் மொத்த நீளத்தில் 50 சதவிகிதம் சாலைகள்கூடச் செப்பனிடப்படாமல் இருந்த வேளையில்—தற்போது 3 ஆண்டுகளுக்குள்ளாகவே ஏறத்தாழ 75

சதவிகிதம் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகச் செப்பனிடப்பட்டிருக்கிறன என்பதையும் தமிழக மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள்.

அதோடுகூட, நீண்ட நெடுங்காலமாக ஊராட்சி ஒன்றியங்களுடைய பராமரிப்பிலே இருந்த சாலைகள் எல்லாம் பழுதுபட்டிருந்த நிலையில் அவற்றைக்கூட சரி செய்ய வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏறக்குறைய 300 கோடி ரூபாய் அந்தச் சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகளைச் சிரமைக்கின்ற வேலைக்காகத் தேர்தலுக்கு முன்புகூட 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறப்பாக வேலை நடந்து முடிந்திருக்கிறது. எனவே, மீதமிருக்கின்ற அந்த 150 கோடி ரூபாயையும் இந்த அரசு ஒதுக்கித் தருமேயானால், ஏற்கெனவே பழுதுபட்டுக் கிடந்த அத்தனை ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் நிச்சயமாக நல்ல முறையிலே செப்பனிடப்படும் என்கின்ற நிலையையும் எடுத்துச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அதையும் இந்த அரசு செய்ய வேண்டும்.

இன்னும் ஒன்றே ஒன்று. அந்த நெடுஞ்சாலைத் துறையிலே கடந்த காலத்தில் சாலைப் பணியாளர்களாகப் பணி பொறுப்பேற்றவர்களுடைய பணியை நம்பி பல்வேறு குடும்பங்கள் தமிழகத்திலே இருந்தன. அந்தப் பணியை மேற்கொண்டவர்களைச் சார்ந்திருக்கின்ற குடும்பங்கள் எல்லாம் உண்மையிலேயே வறுமையிலும் சிரமத்திலும் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை அடிப்படையில் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறார்கள். நீதிபதிகளே தீர்ப்புச் சொல்லி, நீதிமன்றத்தின் மூலமாகப் பணி இழந்தவர்களுக்குக்கூடப் பணியை வழங்கி இருக்கிறார்கள். அதுபோல, போக்குவரத்துத் துறையிலே இருந்த எத்தனையோ தொழிலாளர்களுக்கு பணி வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் மட்டும் மீண்டும், மீண்டும் முதலமைச்சரிடத்திலே தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிலே, நான் அறிந்த அளவிலே நிச்சயமாக அவர்கள் முழுமையாக ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்கின்ற நிலையிலே இல்லை. பல்வேறு ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்கூட அந்தப் பணிப் பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்கள் எல்லாம் மிகுந்த சிரமத்திலே இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களுடைய கருணையான கவனத்திற்கு எடுத்து வைப்பதற்கு கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நீங்கள் அதைச் செய்து கொடுத்தால் 10,000 பேரின் குடும்பங்கள்—ஏறக்குறைய ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் பேர்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன். அதுபோல இன்னும் பல துறைகளில்....

*முற்பகல் 11—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** பேச வேண்டியது எல்லாம் நிறைய இருக்கிறது. நிறைய ஆதாரங்களோடு வந்திருக்கிறேன். முத்திரைத் தாள்களைப் பற்றி எல்லாம் வெளியிலே இருந்து அறிக்கை கொடுக்கிறார்கள். இங்கே இருக்கிற ஏதோ ஒரு அதிகாரி தவறு செய்துவிட்டார், அதையெல்லாம் நாங்கள் சட்டமன்றத்திலே கிளப்பினால் அவர்களால் பதில் சொல்ல முடியாது என்கின்ற காரணத்திற்காகத்தான், 'எங்களை எல்லாம் இந்தச் சட்டமன்றத்தில் நுழைவதற்கு, பேசுவதற்குக்கூட வாய்ப்பு இல்லாமல் செய்திருக்கிறார்கள்' என்ற செய்தியெல்லாம் கொடுக்கிறார்கள். ஆனால் முத்திரைத்தாள் மோசடியைப் பொறுத்த அளவிலே எத்தனை பேருக்குப் பங்கு இருக்கிறது என்பதற்கு எல்லாம் – 'இங்கே ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சருடைய தூண்டுதலினாலேயே நான் 20 கோடி ரூபாயைப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன், ராஜ்குமாரை மீட்கின்ற விவகாரத்திலே' என்கின்ற செய்திகள் எல்லாம் இருக்கின்றன. இதையெல்லாம் நாம் கேட்டுவிடுவோம் என்பதால் அதாவது இன்றைக்குக் கூட்டணிக் கட்சியிலே இருக்கின்ற முன்னாள் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) – மத்தியிலே அமைச்சரவையிலே இருக்கின்ற குலாம் நபி ஆசாத் போன்ற அமைச்சர்களுக்குக்கூட இதிலே பங்கு இருக்கிறது என்று கைது செய்யப்பட்ட அதிகாரி நீதிமன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறார். இதையெல்லாம் நாம் கேட்டுவிடுவோம் என்பதால்—பதில் சொல்ல இயலாதவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிலே இருந்துகொண்டு, நாம் பதில் சொல்ல முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி, அவர்களைக் கைது செய்வதிலோ, விசாரணை நடத்துவதிலோ இந்த

அரசாங்கத்திற்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லை; நாங்கள் சுத்தமாக இருக்கிறோம்; தெளிவாக இருக்கிறோம்; நாணயமாக இருக்கிறோம்; (மேசையைத் தட்டும் ஒலி) ஒழுக்கமாக இருக்கிறோம் என்பதை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. என்றாலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்குப் பேசுவதற்குரிய நேரம் 'உங்களுக்கு 10 நிமிடங்கள்தான் ஒதுக்கித் தர முடியும்' என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதைக் கொஞ்சம் தாண்டிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று. அறநிலையத் துறையிலே இன்றைக்கு ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் பல்வேறு இடங்களிலே இருக்கின்ற அவர்களுடைய கோயில்களைச் சீரமைத்துக் கொள்வதற்கு 25,000 ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. ஆனால் அவர்கள் மிக விழிப்பாக இருக்கிறார்கள். ஒரு தொகுதியிலே பத்து இடங்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால், மற்ற ஊராட்சிகளிலே இருக்கின்றவர்கள் எல்லாம் ஒரு ஊராட்சிக்கு ஒன்றாவது ஒதுக்கித் தரும்படியாக முதலமைச்சரிடத்திலே நீங்கள் கோரிக்கை வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள அத்தனை கிராமங்களிலுமுள்ள அந்த இனத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, முதலமைச்சர் அவர்களும், நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் முடிந்தால் இந்த எண்ணிக்கையைச் சற்று அதிகரித்துத் தர வேண்டும். இன்னும்கூட, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு அவர்கள் பராமரிக்க முடியாத அந்த ஆலயங்களுக்குக் கொஞ்சம் அதிகப்படியான எண்ணிக்கையில் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம், இன்னும் ஒரு பத்து மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள். ஆளுங்கட்சித் தரப்பில் கொஞ்சம் குறைத்துக் கொள்கிறார்கள். இவ்வளவு பெருந்தன்மை எதிர்க் கட்சிகளுக்குக் காட்டியும்கூட எதிர்க்கட்சிகள் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** உங்களுடைய பெருந்தன்மையைப் புரிந்து கொள்கின்ற எதிர்க்கட்சிகளும் இந்த அவையிலே இருந்துகொண்டுதான்



இருக்கிறார்கள். எனவே, எல்லா எதிர்க்கட்சிகளும் இல்லை. நம் பக்கத்திலே, நம் நண்பர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவிலே எதிர்க்கட்சிகள் என்பது நான் கூறியதுபோல் இன்றைக்கு இந்த அவைக்கு உள்ளே வந்து—இந்த பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தேன், அதைப் பார்த்தேன், இதைப் பார்த்தேன் என்று பத்திரிகைகளுக்கு பதில் சொல்லிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் அவையிலே நேரில் வந்து—இந்த மக்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற நிலைகளையெல்லாம் அவர்கள் கூற வேண்டுமென்பதுதான் நமது ஆசை.

இன்றைக்குக்கூட இந்த காவிரியைப் பொறுத்த அளவிலே நமக்கு ஒரு நல்ல செய்தியை பத்திரிகையிலே பார்க்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு ஏதோ மழை பெய்து இருப்பதாகவும்; அந்த கபினி அணை மீண்டும் திறக்கப்பட்டு இருப்பதாகவும், அதிலே நமது காவிரியிலே தண்ணீர் நிரம்ப வந்து கொண்டிருப்பதாகவும் ஒரு செய்தியைப் பார்த்தேன். நமது முதலமைச்சருடைய நல்ல எண்ணத்திற்கு அது ஒரு நல்ல செய்தியாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே அந்த காவிரிப் பிரச்சினையிலே நமது பிரதமரைச் சந்தித்து காவிரி ஆணையத்தைக் கூட்டுவதற்கு இங்கு இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் வகை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள், அங்கு இருக்கின்ற தண்ணீரினுடைய நிலை அந்த விவசாயிகளுடைய முழுமையான விவசாயத்திற்குப் போதுமானதாக இல்லை, எனவே, மீண்டும் தண்ணீர் வருகின்ற ஒரு சூழல் , ஏற்படுகின்றபோது நிச்சயமாக அந்த விவசாயிகளை நான் பாதுகாப்பேன் என்கின்ற நிலையைச் சொல்லி இருந்தார்கள். இன்றைக்கு அப்படி வருகின்ற இந்தத் தண்ணீர் 2, 3 நாட்களுக்குத் தொடர்ச்சியாக வருகின்ற ஒரு சூழல் ஏற்படுமேயானால் அதன்மூலமாக ஒரு போகம் குறுவைச் சாகுபடி செய்வதற்குறிய வாய்ப்பு அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஆடிப் பெருக்கை முன்னிட்டுக்கூட 4 நாட்களுக்கு அந்த அணையில் தண்ணீரைத் திறந்துவிட்டிருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு கபினி அணையிலிருந்து வந்துகொண்டிருக்கின்ற தண்ணீரினுடைய அளவு மிக அதிகமான அளவிலே வந்து கொண்டிருக்கிறது என்பதை பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படி ஒரு நிலை ஏற்படுமேயானால் அவர்களுக்கு அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்த அளவில் காவிரிப் பாசனத்திற்கு அடுத்தபடியாக அதிக நிலங்களுக்கு பாசன வசதியைத் தருவது எங்களுடைய பெரியார் கால்வாய். அந்த பெரியார் கால்வாயின் மூலம் ஏறக்குறைய 40 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுகின்ற ஒரு சூழல் இருக்கிறது. அங்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு இருக்கிறது. அங்கு தண்ணீர் திறந்து விடப்பட்டும் போதிய மழை அந்தப் பகுதியிலே இல்லை என்கின்ற காரணத்தினால் அந்தத் தண்ணீரை வைத்து விவசாயம் மேற்கொள்வதற்கு மிகக் கடினமான ஒரு சூழ்நிலையில் விவசாயிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் கடந்த முறை கூட இங்கு சொன்னேன். காவிரி டெல்டா பகுதியிலே இந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்காக 7 ஆயிரம் மின் இணைப்புகள் பிரத்தியேகமாக, ஒரு தனித் திட்டத்தின் மூலமாக, காவிரி பகுதிக்கு, சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அதுபோல் எங்களுடைய பெரியார் பாசனப் பகுதியிலும் பலபேர் கிணறுகள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கிணறுகளுக்கு, எப்போதும் ஓரளவுக்குப் பஞ்சம் இல்லாமல் மழை பெய்து 2 போகமும் நிறைவாகப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினால், அவர்கள் மின் இணைப்புப் பெறுவதற்குத் தவறிவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய பெரியார் பாசன விவசாயப் பகுதி மக்களுக்கு, தஞ்சை பகுதியிலே வாழ்கின்ற விவசாய மக்களுக்கு வாழ்வு அளித்ததுபோல், ஒரு பிரத்தியேகமான மின் இணைப்பு வசதியைச் செய்து கொடுப்பார்கள் என்றால் அங்கு இருக்கின்ற அந்தக் கிணற்றுப் பாசனத்தின் மூலமாக அந்த விவசாயிகள் பயன் பெறுகின்ற ஒரு நிலை இருக்கும்; இப்படிப்பட்ட தண்ணீர்த் தட்டுப்பாட்டில், கடைசி நேரங்களிலே தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக நிறைவு பெறாமல் இருக்கின்ற அந்த விவசாயத்தினுடைய பணி முழுமையடைகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை பெறுகின்ற சூழல் இருக்கும்; முழுமையான விளைச்சல் கிடைப்பதற்கு சந்தர்ப்பமாக அமையுமென்கின்ற நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையும் செய்து தர வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்த இந்த அதிகமான நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவருக்குக்கூட இது சாதகமான சூழ்நிலை; அதாவது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மதுரை மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து விவசாயிகளும் பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதைத் தங்களுடைய கவனத்திலே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



## 7. மேட்டூர் அணையிலிருந்து ஆடிப்பெருக்கை முன்னிட்டு தண்ணீர் திறந்து விடுவது பற்றிய முதலமைச்சரின் அறிவிப்பு

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிப் பெருக்கு விழாவை முன்னிட்டு மேட்டூரிலிருந்து 7 நாட்களுக்கு, ஒரு நாளுக்கு 1 டி.எம்.சி. அடி வீதம் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக, 7 நாட்களுக்கு மொத்தம் 7 டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிடப்படும். மேலும், மேட்டூருக்கு நீர்வரத்தைப் பொறுத்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவதைப் பற்றிப் பின்னர் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கிடையில் விவசாயிகள் எந்தச் சாகுபடியும் இல்லாமல், எந்த இலாபமும் அடையாமல் இருந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு விசேஷ திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. காட்டாமணக்கு–Jatropha, சர்க்கரைக் கிழங்கு–sugar beet, sweet sorghum – சர்க்கரைச் சோளம் ஆகிய பயிர்களைப் பயிரிட்டால் குறைந்த அளவு தண்ணீர் இருந்தாலே போதும். நெல் சாகுபடியைவிடப் பன்மடங்கு அதிக இலாபம் பெறலாம் என்பதை விவசாயிகளுக்கு ஏற்கெனவே விளக்கிக் கூறியிருக்கிறோம். இதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறோம். அதுதான் Contract Farming என்பதாகும். பெரிய தொழிலதிபர்களை நாங்கள் Expression of Interest கொடுக்கும்படி அழைத்திருக்கிறோம். பலர் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான காலக்கெடு கடந்த 23 ஆம் தேதியன்று முடிவடைந்தது. இப்போது வந்திருக்கின்ற அந்த விண்ணப்பங்களை ஆராய்ந்து இன்னும் சில நாட்களில் முடிவு எடுக்கப்படும். இதன்படி பெரிய தொழிலதிபர்கள் தங்கள் பொறுப்பில் 25,000 ஏக்கர், 30,000 ஏக்கர் என்று பெரிய நிலப்பரப்புகளை எடுத்துக்கொண்டு, அந்த நிலப்பரப்பில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று சிறிய அளவில் நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்கள் தேவையான உதவிகளைச் செய்து, அந்த விவசாயிகளோடு இந்தத் தொழிலதிபர்கள் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, அவர்களுடைய நிலங்களில் அவர்களைக் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடச் செய்து அதற்குத் தேவையான விதைகள், உரங்கள் மற்றும்

தேவையான உதவிகள் அனைத்தையும் இந்தத் தொழிலதிபர்களே சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து, அவர்கள் அந்தப் பயிர்களைச் சாகுபடி செய்த பின், இந்தப் பெரிய தொழிலதிபர்களே விலை கொடுத்து, நல்ல விலைக்கு, அந்தச் சிறு விவசாயிகளிடமிருந்து அவற்றை வாங்கிக் கொள்வார்கள். இந்தப் பயிர்களின் மூலம் இந்த விவசாயிகளும் இலாபம் அடைவார்கள். அவர்களுக்கு ஓர் உத்தரவாதம் இருக்கின்றது. இத்தனை நாளும் காட்டாமணக்குப் பயிரிடுங்கள், sweet sorghum பயிரிடுங்கள், சர்க்கரைச் சோளம் பயிரிடுங்கள் என்று அரசு அறிவுரை வழங்கினாலும், விவசாயிகள் கேட்ட கேள்வி; இந்தப் பயிர்களை எல்லாம் சாகுபடி செய்தால் எப்படி விற்பனையாகும், யார் வாங்குவார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். இப்போது அதற்கும் ஒரு வழி செய்தாகிவிட்டது. பெரிய தொழிலதிபர்களே விவசாயிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்கள் சாகுபடி செய்கின்ற பயிர்களை அவர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். இந்தத் தொழிலதிபர்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கி, இருக்கின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி, Ethanol, Bio-diesel, Bio-fuel தயாரிப்பார்கள். இது வெற்றிகரமாகச் செயல்படமுடியும்; செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, விரைவிலேயே தமிழகத்தின் rural economy — கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடையும்; ஒரு பெரிய உன்னத நிலையை அடையும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

## 6. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2004–2005 ஆம் ஆண்டிற்கான இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறை மற்றும் உள்ள துறைகளுக்கான மானியக்





கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது, தமிழக அரசின் நிதி நிலை மிக மோசமானதாக இருந்தது. அம்மா அவர்களின் திறமையால் நிதிநிலைமை சீராக்கப்பட்டு, அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்கவேண்டுமென்று உறுதிபூண்டு சிறப்பான முறையில் திட்டங்கள் தீட்டிச் செயலாக்கி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில், தமிழகத்தின் சாலைகள் மிக மோசமாகவும் போக்குவரத்திற்குத் தகுதியற்றவையாகவும் இருந்தன. இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசால் அனைத்துச் சாலைகளும் சீர் செய்யப்பட்டு, தேவையான இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டு மக்களின் ஏகோபித்த அரசாகச் செயல்பட்டு வருகிறது.

தனியார் நடத்திவந்த மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்துவதன்மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் மட்டுமல்லாமல் குறுகிய காலத்தில் கூடுதலாக 212 கோடி ரூபாய் வருவாயினை ஈட்டியுள்ளது. இப்படி ஒவ்வொரு துறைகளிலும் மக்கள் நலனை முன்வைத்துத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருவது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாகும்.

அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல் தலைவர்கள் போல் இல்லாமல், அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கும் சமுதாயக் காவலராக சிறப்புற்று விளங்குகிறார் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலேயே முதல்முறையாக கோவில்களில் அன்னதானத் திட்டம் கொண்டுவரப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கையினை ஏற்று, அவர்கள் வாழும் பகுதிகளில் 25 ஆயிரம் ரூபாய் வீதம் 6000 திருக்கோயில்கள் புனரமைக்கப்பட, 15 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது வரவேற்கத்தக்கதாகும். இதேபோல கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதற்காகவும்

நம்முடைய புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசை இன்றைக்கு தமிழகத்திலுள்ள மக்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் 705 திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. 757 திருக்குளங்கள் பழுதுபார்க்கப்பட்டதும் பாராட்டுக்குரிய நடவடிக்கைகளாகும்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு முத்திரைத் தீர்வையில் 8 சதவிகிதத்தை 6 சதவிகிதமாகவும், இன்றைக்கு surcharge 5 சதவிகிதத்தை 2 சதவிகிதமாகவும் குறைத்ததன் மூலம் ஏராளமான பொதுமக்கள் பலன் அடைந்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், வழிகாட்டி மதிப்பு மிக அதிகமாக இருப்பதாகப் பொதுமக்கள் கருதுகிறார்கள். வழிகாட்டி மதிப்பைக் கணிசமாகக் குறைப்பதற்கு அரசு ஆவன செய்யும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட அரசாணை எண் 150—ன்மூலம் வீட்டுமனைகள் கிரயம் செய்வதில் பிரச்சினை ஏற்பட்ட காரணத்தினால், கடந்த 5 ஆண்டுகளாக வீட்டுமனைகள் கிரயம் செய்யப் படாமல் அரசுக்கு வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் பொதுமக்கள் எண்ணுகின்ற எண்ணத்திற்கேற்ப, பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்காக, ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட அரசாணை எண் 150—ஐ நீக்கிட பரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மாநகரில் அரசு அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்காக அரசு பெருந்தொகையினை வாடகையாகச் செலுத்திக் கொண்டிருக்கின்றது. அதனால் பொதுமக்களும் அவதிப்படுகிறார்கள். தற்போது இயங்கிவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒரு பலமாடி அடுக்குக் கட்டடத்தைக் கொண்ட அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.





*பிற்பகல் 12–05*

என்னுடைய தொகுதிக்குட்பட்ட வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேற்படி அலுவலகத்திற்கு நடப்பு நிதி ஆண்டிலேயே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் கெஜல்நாய்க்கன்பட்டி, பனமரத்துப்பட்டி, சேசன்சாவடி சாலை மிக முக்கியமான சாலையாகும். இந்தச் சாலையை அகலப் படுத்தி, வண்டி வாகனங்கள் சிரமமின்றிச் செல்வதற்கு உதவும்படி கேட்டுக் கொள்கிறேன். இதேபோல் சேலம்– வீராணம் வழியாக வலசையூர் செல்லும் சாலையையும், மல்லூரிலிருந்து பாலம்பட்டி வழியாக வீரபாண்டி செல்லும் 8 கிலோ மீட்டர் தார்ச் சாலையையும், பூலாவரி—நாழிக்கல்பட்டி வழியாக சேலம்—திருச்சி நெடுஞ்சாலை சென்றடையும் சாலையையும் அலகப்படுத்திக் கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட உடையாப்பட்டி, கந்தாஸ்ரமம் பகுதியில் உள்ள கன்னிமார் ஓடையின் குறுக்கே அணை கட்ட வேண்டும் என்று நீண்ட நாட்களாக அப்பகுதி மக்கள் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையினை ஏற்று அணை கட்டுவதற்கு அமைச்சர் அவர்களும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் ஆணை பிறப்பிக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள அயோத்தியா பட்டணத்தில் இராமர் கோவில் இருக்கிறது. இந்த இராமர் கோவில் பழமை வாய்ந்ததாகும். இக்கோயிலில் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த திருத்தேர் அச்சு முறிந்த நிலையில் இருக்கிறது. பாழடைந்து இருக்கிற, அச்சு முறிந்து இருக்கின்ற அந்தத் தேரைப் புதுப்பித்துத் தரும்படி நான் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி இராமர் கோவில் மற்றும் உத்தமசோழபுரம் கரபுறநாதர் சுவாமி திருக்கோயில், பனமரத்துப்பட்டி, பரமனூர் நத்தமேடு ஈஸ்வரன் கோவில், வாழப்பாடி காசி விஸ்வநாதர் கோவில் ஆகியவை அறநிலையத் துறையில் இயங்கும் 100 ஆண்டு பழமை வாய்ந்தவையாகும். இக்கோவில்கள் சரியாகப் பராமரிக்கப்படாமல் உள்ளன. இக்கோவில்களுக்கு அறநிலையத் துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு

செய்து கும்பாபிஷேகம் நடத்திட ஆவன செய்யும்படி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட மல்லூர், சேலம்–திருச்சி சாலையில் உள்ளது. பொது மக்கள் வசதிக்காக மல்லூரில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பயணியர் விடுதி ஒன்று கட்டித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன். பயணியர் விடுதி கட்டுவதற்கு தகுதியான அரசு நிலமும் உள்ளது என்பதனையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு வாழப்பாடி வட்டம், சேசன் சாவடி ஊராட்சி, வெள்ளை ஆற்றில் மழைக் காலங்களில் நீர் வரத்து அதிகமாகி ஆற்றில் தண்ணீர் நிற்காமல் வெளியேறி விடுகிறது. இந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்து வெள்ளை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் இப்பகுதி மக்களுக்குப் பாசன வசதி பெருகுவதுடன் நிலத்தடி நீர் உயர்ந்து இப்பகுதி மக்கள் பயனடைவார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழப்பாடி வட்டம், திருமனூர் ஊராட்சி, சிட்டாம்பட்டி மேற்கு கிராமம், கிடமலை அடிவாரத்தில் புதியதாக ஏரி அமைத்துக் கொடுக்குமாறு அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கையினை ஏற்று விரைவில் கிடமலை அடிவாரத்தில் புதியதாக ஏரி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் பாசன வசதி அதிகரிப்பதுடன், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, அப்பகுதி மக்களின் நீர்ப்பிரச்சினை போக்கப்பட்டு, அவர்களும் இதனால் பயன்பெறுவார்கள் என்பதனை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு சேலத்திலிருந்து வாழப்பாடி வழியாக ஆத்தூருக்குச் செல்கின்ற சாலை என்.எச்.68 சாலை மிக மோசமாக இருக்கின்றது. அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி செ. சுந்தராம்பாள்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக 6 கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், காவல் தெய்வமாகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் குல தெய்வமாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் தமிழக நிரந்தர முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நெடுஞ்சாலைத் துறை, உள்துறை–சிறைச்சாலைகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, பொதுப் பணித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச விழைகின்றேன்.

ஒரு மாநிலத்தின் வேகமான வளர்ச்சிக்கு, போதுமான மற்றும் தரமுள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருப்பது அவசியமாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் விரிவான சாலைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளன. தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட நெடுஞ்சாலைகள், மாவட்ட இதர சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகள் என்று பல்வேறு வகைகளின்கீழ் மொத்தம் 61,208 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன. 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனைத்துச் சாலைகளும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வந்தமையால், பேருந்துகளும், இரு சக்கர வாகனங்களும், நான்கு சக்கர வாகனங்களும் நல்லமுறையில் இயங்கி வந்தன. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எந்தவொரு சாலையும் முறையாகப் பராமரிக்கப்படாமல் இருந்தமையால் பேருந்துகளும், மற்ற வாகனங்களும், பழுது ஏற்பட்டு, ஆங்காங்கே நின்றிருந்ததை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கண்கூடாகக் கண்டிருப்பீர்கள். மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக மக்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் தமிழக முதல்வராகப் பதவியேற்றவுடன் தமிழகத்திலுள்ள அனைத்துச் சாலைகளையும் நல்லமுறையில் பராமரிக்க நிதியொதுக்கீடு கொடுத்து, இன்றைக்கு சிறுசிறு கிராமங்களில்கூட நல்லமுறையில் தங்குதடையின்றி பேருந்துகள் சென்றுவர வழிவகை செய்துள்ளார்கள்.

2003—2004 ஆம் ஆண்டில் ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதி 8—ன்கீழ் 126.96 கிலோமீட்டர் நீளமுள்ள 31 சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.9.47 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 60 கிலோமீட்டர் நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த முன்னேற்றத்தை மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். 2004—2005 ஆம் ஆண்டு பகுதி—2 திட்டத்தின்கீழ் 77.30 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்த இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.9.94 கோடி நிதியொதுக்கீடு செய்துள்ளதை மனதார வரவேற்கின்றேன்.

கிராமப்புறத்திலுள்ள விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை நகரங்களுக்கும், விற்பனைக் கூடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கு வசதியாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கிராமச் சாலைகள் திட்டம், சிறப்பு உறுப்புத் திட்டம், பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் அனைத்துச் சாலைகளும் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுவதைத் தமிழக மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். பகுதி—2 திட்டத்தின்கீழ் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 45 பாலங்களைத் திரும்பக் கட்ட இந்த நிதியாண்டில் ரூ.6.92 கோடி நிதியொதுக்கியிருப்பதை அனைவரும் வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எந்தவகையிலும் சாராத கிராமப்புறச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.50 இலட்சம் முதல் ரூ.80 இலட்சம் வரை 385 ஊராட்சிகளுக்கும் நிதியொதுக்கப்பட்டு வேலைகள் முடியும் நிலையில் உள்ளன. இரண்டாவது கட்டமாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.50 இலட்சம் முதல் ரூ.70 இலட்சம் வரை நிதியொதுக்கி சாலைகளை மேம்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் உள்ளது.

பொது நிதியை முறையாக நிர்வகிப்பதில் அரசு உறுதியாக இல்லையெனில் மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளை எட்ட முடியாமல் மக்கள் நலன் பெருமளவு பாதிக்கப்படும் என்பதற்கு 1996 முதல் 2001 வரை தமிழகத்தை ஆண்ட ஆட்சியாளர்களே முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள். இவர்களின் தவறான ஆட்சியில், கஜானாவைக் காலிசெய்துவிட்டுச் சென்று விட்டார்கள். சீரிய சிந்தனையும், மன



உறுதியும், தெளிந்த தொலைநோக்குப் பார்வையும், பேராற்றலும் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய நிர்வாகத் திறமையினால் நிதிநிலையைச் சரி செய்து இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மையான மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சூளுரைத்துத் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக அரிய பெரிய திட்டங்களை அமல்படுத்தி இருக்கின்றார்கள்.

பிற்பகல் 12–15

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரமான நீராதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15 இலட்சம் ஹெக்டேர் என வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டு மதிப்பிட்டுள்ளது. 2001—2002 ஆம் ஆண்டில் பாசனப் பகுதி 29.72 இலட்சம் ஹெக்டேராக உயர்த்தப்பட்டது. 2004—2005 ஆம் ஆண்டில் 3629 ஹெக்டேர் கூடுதல் பாசன வசதி பெறுவதற்கு அம்மாவின் ஆட்சியில் நீர்வளம் மேம்படுத்தப்பட்டதை மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழக ஒட்டுமொத்த விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையின் அளவு குறைவாக இருந்தாலும் ஏரி, குளங்கள், கால்வாய்கள் ஆகியவை தூர்வாரப்பட்டு நீர் ஆதாரங்களைப் பெருக்கியது. 2004—2005 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் 100 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளைக் கொண்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்த திட்டம் ஒன்றை மேற்கொள்வதை மக்கள் வரவேற்கிறார்கள். அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கியும், அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி மற்றும் உபரி வட்டியான ரூ.310.5 கோடியைத் தள்ளுபடி செய்தும் தமிழக விவசாயிகளை வாழ வைத்துள்ளமைக்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களின் உடல் நலத்தினைக் கருத்தில் கொண்டு கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மது அருந்துதல் என்பது சமுதாயத்தில் உள்ள நடப்பாகும். எனவே, நடைமுறையிலுள்ள உண்மையைக் கருத்தில்கொண்டு மது அருந்தும் பழக்கம் உள்ளவர்களுக்குத் தரமான, கலப்படமற்ற, விலை குறைந்த, உடல்நலனுக்கு ஊறுவிளைவிக்காத பாதுகாப்பான மதுபான வகைகளை வழங்குவதற்காக அரசே அனைத்து மதுபானக் கடைகளையும் ஏற்று நடத்துகிறது. இதனால் படித்த

[திருமதி செ. சுந்தராம்பாள்] [2004 ஜூலை 27

ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது. அரசு ஏற்று நடத்துவதால் மாதத்திற்கு சராசரியாக 12.44 இலட்சம் பெட்டிகள் விற்பனை என்ற நிலை மாறி 14.29 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. இது 14.82 விழுக்காடுகள் வளர்ச்சியாகும். அரசின் வருமானமும் வெகுவாக அதிகரித்துள்ளது. மாதத்திற்கு ரூ.326 கோடியாக இருந்த வருமானம் தற்போது 421 கோடியாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு அம்மா, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் நன்கு கவனித்து வருகிறார்கள். 2004—2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சிறைச்சாலைகளின் முன்னேற்றத்திற்காக 117.5 கோடி வழங்கியுள்ளார்கள். ரூ.77.9 கோடி செலவில் புழல் என்ற இடத்தில் புதிய சிறை வளாகம் கட்டப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள சில பிரச்சினைகளை இங்கே எடுத்து வைக்க விழைகின்றேன். மேட்டூர் நகரத்தில் 100—க்கு 80 சதவிகிதம் வீடுகள் பட்டா இல்லாமல் உள்ளன. ஆனால் பொது மக்கள் பக்காவாக வீடுகளைக் கட்டி, நில வரி, கூரை வரி, மின் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள பட்டா இல்லாத வீடுகளுக்கு அந்தந்த ஏரியாக்களுக்குத் தகுந்த மாதிரி அரசு விலை நிர்ணயம் செய்தால் அவர்கள் பணம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேட்டூர் நகர மக்களுக்குப் பட்டா வழங்கிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் நகரத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டும் மற்றும் மேட்டூர் அணை கட்டியபோது அப்போதிருந்த மக்கள் தொகைக் கணக்கிற்கு ஏற்ப குடிநீருக்காக ஒரேயொரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிதான் அமைக்கப்பட்டு இருக்கிறது. தற்போது மக்கள் தொகை அதிகரித்துவிட்ட காரணத்தினால் மேட்டூர் நகரத்தில் குள்ளவீரம்பட்டி, காவேரிநகர், சேலம் கேம்ப், காந்திநகர், தங்கமாபுரிபட்டினம் ஆகிய இடங்களில் குடிநீருக்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் கடந்த ஆண்டு விவசாயிகளின் நலன் கருதி



2004 ஜூலை 27] [திருமதி செ. சுந்தராம்பாள்]

ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் சாம்பார்பள்ளம் என்ற இடத்தில் ஒன்றேகால் கோடி ரூபாய்க்கு ஒரு தடுப்பணை கட்டுவதற்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொளத்தூர் ஒன்றியத்தில் பாலாறு என்ற இடத்தில் நல்ல தரமான மணல் இருக்கிறது. இதைத் தனி நபர்கள் எடுத்து அதிக விலைக்கு விற்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த மணலை அரசே ஏலம் விடுவதற்கு ஏற்பாடு செய்தால் அரசுக்குப் பல இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

அதேபோன்று மேட்டூர் அனல்மின் நிலையத்திலிருந்து, நிலக்கரியிலிருந்து வெளியாகும் சாம்பலைத் தண்ணீருடன் கலந்து ஏரியை நிரப்புகின்றார்கள். அப்பொழுது அந்த ஏரியில் சாம்பல் படிந்து அந்த நீர் மீண்டும் காவிரிக்குச் செல்கின்றது. அந்த நீரை அனல்மின் நிலையத்திலிருந்து அருகிலுள்ள ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி, சங்ககிரி, எடப்பாடி பகுதிகளிலுள்ள ஏரிகளில் நிரப்பினால் நிலத்தடி நீர் பெருகி விவசாயத்திற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நங்கவள்ளி ஒன்றியத்தில் நங்கவள்ளி துணை சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மேட்டூர் தொகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குறவர் இன மக்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களுக்கு SC ஜாதிச் சான்றிதழ் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, இந்துசமய அறநிலையத் துறை உள்ளிட்ட மானியக் கோரிக்கைகள் மீது பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எச். ராஜா] [2004 ஜூலை 27

ஆலயங்களின் பராமரிப்பு அவற்றின் நிர்வாகம் மற்றும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளைகளின் நிர்வாக நெறிமுறை ஆகியவற்றைக் கண்காணிப்பது அரசின் தலையாய கடமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. இந்துக் கோயில்களைக் காத்து அவற்றைச் சரிவர பராமரிப்பதற்காக இந்து சமய அறநிலையத் துறையானது ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை இந்துக்களுடைய கோயில்கள் ஆன்றோர்கள், சான்றோர்கள் அடங்கிய தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது கட்சியினுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். அதிலே பாரதிய ஜனதா கட்சிக்கு முழுமையான நம்பிக்கையும் இருக்கிறது. ஏனென்றால், it is not the duty of a secular State to run temples. அதிலேயும் ஒருசில ஆபத்துகள் இருக்கின்றன. அரசியல்வாதிகள் personal prejudice-னாலே இந்துக் கோயில்களுக்கு ஏதாவது எதிர்ப்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களோ என்பதற்குக்கூட சமீபத்திலே சில அரசியல்வாதிகளுடைய பேச்சுகளும் நடவடிக்கைகளும் இருக்கின்றன. ஏனென்றால் ஒரு மத்திய அமைச்சர் ஒரு கிருஸ்தவ போதகருடைய பிறந்த நாள் விழாவிலே போய் நான் கிருஸ்தவ மதத்தை மதிக்கிறேன் என்று சொன்னால் தவறு கிடையாது. ஆனால் அங்கு போய் இந்து என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறேன் என்று திரு. T.R. பாலு பேசினார். அதேமாதிரியாக ஒரு தொலைக்காட்சியிலே விவாதத்திலே பேசும்பொழுது முன்னாள் அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், 'நீ ராமனுக்குப் பூமாலை போட்டால் நான் செருப்பு மாலை போடுவேன்' என்று பேசுகிறார். ஆகவே பாரதிய ஜனதா கட்சியினுடைய இந்துக்களுடைய ஆலயங்கள் தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்கின்ற வாதம் இம்மாதிரியான செயல்களால் வலிமை பெறுகிறது. இங்கே பரம்பரை முறைசாரா அறங்காவலர்களின் பதவிக் காலம் முடிந்து நியமனம் செய்யப்படவேண்டிய திருக்கோயில்களின் எண்ணிக்கை 29,697 என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கான அறங்காவலர்களை நியமிக்கும்பொழுது ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ள பெரியவர்களையும், மகளிரையும் நியமிக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கோயில்களுடைய நிலங்கள், சொத்துகளைப் பொறுத்தவரை 4,78,953 ஏக்கர் நிலம்; அதிலே 1,83,855 ஏக்கர் நஞ்சை நிலமும், அதற்கான



2004 ஜூலை 27] [திரு. எச். ராஜா]

குத்தகைதாரர்கள் 1,03,205 நபர்களும் இருக்கிறார்கள். அதேபோல 22,599 கட்டடங்கள், 33,627 மனையிடங்கள் ஆகியவை இருக்கின்றன. ஆனால் இதிலே 33,584 வழக்குகள் இதுவரை பதிவு செய்யப்பட்டு, அதிலே 10,537 வழக்குகளில் தீர்ப்புகள் வந்து 98.96 கோடி ரூபாய்க்கு வசூல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அதிலே எவ்வளவு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப் படவில்லை. மேலும் இதிலே 21,900 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே இந்த வழக்குகளைத் துரிதப்படுத்தி கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகை பாக்கியினை வசூலிப்பதற்கு அரசு வேகமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதைப்போல, கோயில் சொத்துகள் ஆக்கிரமிப்பைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு, 22—4—2003 அன்றைய விவாதத்திலே, அமைச்சர் அவர்கள், சில சட்டமன்ற உறுப்பினர்களே ஆக்கிரமித்துள்ளதாகத் தன்னுடைய உரையிலே தெரிவித்தார். அதற்கு எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அந்தச் சமயத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தாங்கள்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதாரங்களை ஏற்கெனவே தங்களிடத்திலே காட்டியதாகவும், அவை அத்தனையும் உண்மை; பலிசீலனை செய்து பார்த்ததில் அத்தனையும் உண்மை என்றும் கூறினீர்கள். அதனைத் தொடர்ந்து, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள், பல முறை இம்மாதிரியாக கோயில் நிலங்களை ஆக்கிரமித்திருக்கின்ற உறுப்பினர்களின் பட்டியலைத் தரத் தயாரா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டார்கள். அதனைத் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், குறிப்பிட்ட ஓர் ஆக்கிரமிப்பை எடுத்துச் சொல்லி, அதை அமைச்சர் நீக்கத் தயாரா என்று கேள்வி கேட்டார்கள். அமைச்சர் அவர்களும் பட்டியல் வெளியிடப்படும் என இரண்டு முறை அதிலே வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், 15 மாதங்கள் ஆன பின்னரும், இன்னமும்கூட, கோயில் சொத்துகளை ஆக்கிரமித்தவர்களின் பட்டியலைத் தரவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள், 36,363 கோயில்கள் உள்ளிட்ட 38,403 நிறுவனங்களின் சொத்துகளை ஆக்கிரமித்தவர்களின் பட்டியலை வெளியிட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எச். ராஜா] [2004 ஜூலை 27

அதைப்போல, கோயில் திருக்குளப் பணிகளைப் பொறுத்தவரை, எம்.எல்.ஏ.வியினுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோயில் திருக்குளப் பணிகளுக்கு நிதி ஒதுக்க முடியாது என்றிருக்கிறது. ஆகவே, வழிகாட்டுக் குறிப்பிலே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் தேவை ஏற்பட்டால், கோயில் நலத்திற்கு நாம் நிதி ஒதுக்கலாம் என்று வழிவகை செய்து தரவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். 75 சதவிகிதம், பொது மக்களுடைய நிதியையும் பெற்று, கோயில்களினுடைய நிதியையும் வைத்து - வசதி வாய்ந்த கோயில்களின் உபரி நிதியை வைத்து — குடமுழுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குடமுழுக்கைப் பொறுத்தவரை, நம்முடைய அரசியல் சட்டத்திலே, religion அதாவது மதம் என்பது என்ன என்பதும், மத அமைப்புகள் என்பது என்ன என்பதும் கோயில்களை எவ்வாறு நிர்வகிப்பது என்பது பற்றியெல்லாம் மிகத் தெளிவாக, அரசியல் சட்டப் பிரிவுகள் 25 மற்றும் 26—லே சொல்லப்பட்டிருக்கின்றன.

உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பிலே, Commissioner, Hindu Religious and Charitable Endowments Board Vs Lakshmindra Thirtha Swamiar of Sirur Mutt வழக்கிலே, Religion is a matter of faith with individuals or communities. Religion may prescribe rituals, ceremonies and mode of worship which is regarded as integral part of religion என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போல, அரசியல் சட்டப் பிரிவு 25—லே, பொது அமைதி மற்றும் ஒழுக்கம், சுகாதாரம் ஆகியவை தவிர, வேறு எந்தவொரு விதத்திலும், அரசாங்கமானது, மத, கோயில்களினுடைய நிர்வாகத்திலே தலையிட முடியாது என்றும், the regulatory power has, however, been given to the State in respect of secular activities connected with religious practice என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், Narayanan Nambudiri Vs State of Madras என்கின்ற வழக்கிலே, 1953—லே, the Madras High Court has clearly stated: "Restrictions by the State on the free exercise of religion can only be on limited grounds of public order, morality and health and on NONE else என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, சமீபத்திலே, கிட்டத்தட்ட 84 கோயில்களினுடைய குடமுழுக்குகள் ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்ட பிறகும், வாய்மொழியாக அரசாங்கமானது, அதை ஒத்திவைக்கச் சொல்லியிருப்பது என்பது ஆன்மீக நம்பிக்கை கொண்டவர்களுடைய எண்ணங்களை, கருத்துகளை, அது-(குறுக்கீடு)



2004 ஜூலை 27]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள திருக்கோயில்களுக்கு, ஆகம விதிகளின்படி, திருப்பணிகள் எல்லாவற்றையும் முழுமையாக நிறைவேற்றி முடித்த பின்னர், கும்பாபிஷேகம் நடத்துவது உசிதமானது என்று ஆன்மீகப் பெருமக்களும், அறநெறி ஆழ்வார்களும் கூறியதை அடுத்து, சில திருக்கோயில்களில் அதாவது 16 திருக்கோயில்களில், ஆகம விதிகளின்படி, திருப்பணிகள் முழுமையாக முடிவடையாமலேயே, கும்பாபிஷேகத்திற்கான நாள் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டு, அத்தகைய திருக்கோயில்களுக்கு ஆகம விதிகளின்படி, திருப்பணிகளைச் சிறப்பான முறையிலே நடத்தி முடிப்பதற்கும் மற்றும் அந்தத் திருக்கோயில்களிலுள்ள திருக்குளங்களைத் தூர்வாரிப் புதுப்பிக்கவும், போதிய கால அவகாசம் தேவை எனக் கருதியதால், சில திருக்கோயில்களுக்கு, 22-08-2004 அன்றும், மேலும் சில திருக்கோயில்களுக்கு 17-03-2005 அன்றும் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 17-03-2005 அன்றைய நாள் என்பது, மிக அதிகமான கால அவகாசம் என்று தெரிவித்து, அந்தத் திருக்கோயில்களின் திருப்பணிகளை விரைவில் முடித்து, கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டுமென்று பொது மக்களிடமிருந்தும், பக்தர்களிடமிருந்தும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வேண்டுகோள்கள் வரப்பெற்றன. இவ்வேண்டுகோளினைப் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இத்திருக்கோயில் திருப்பணிகளை விரைவில் முடித்து கும்பாபிஷேகத்தை விரைவில் நடத்த வேண்டும் என்று ஆணையிட்டு உள்ளார்கள். அதன்படி 17-3-2005 என்று நிர்ணயிக்கப்பட்ட கும்பாபிஷேக தேதி, மாறுதல் செய்யப்பட்டு, 22-8-2004, 27-8-2004 மற்றும் 30-8-2004 ஆகிய தேதிகளில் கும்பாபிஷேகம் செய்திட துறையினரால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எனக்கு நேரடியாகத் தெரிந்த ஒரு விஷயத்தைச் சொல்வதற்கு அமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டும்; ஏனென்றால், பிள்ளையார்பட்டி கோவிலிலே முழுமையான பணிகள் நடந்துமுடிந்த பிறகும்கூட அது ஒத்திவைக்கப்பட்ட பட்டியலிலே இருந்தது. அதற்குப் பிறகு ஒரு நாள் முழுவதும் பேச்சுவார்த்தை நடந்த பிறகுதான் அது

மீண்டும் நடந்தது என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5—7—2004 அன்று பிள்ளையார்பட்டி விநாயகர் ஆலயத் திருப்பணி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு நடைபெறுகின்ற சில பணிகள்– நானும் கூட அங்கே சிவகங்கை மாவட்டத்திற்கு கண்ட தேவி தேரோட்டத்திற்காக, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே கூட்டம் நடத்துவதற்குச் சென்ற நேரத்தில் – மேலே இருக்கின்ற பணிகள், இன்னும் செய்யப்படாமல் இருக்கிற அந்தப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு, அங்கே திருப்பணிகள் செய்யலாம் என்று துறை முடிவு எடுத்தது. ஆனால் அங்கு இருக்கின்ற ஆன்மீகப் பெரியவர்கள் எல்லாம் பிள்ளையார்பட்டி கோவில் கும்பாபிஷேகம் செய்வதற்கு முடிவு செய்து இருக்கிறோம் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே தகவல் தந்ததற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்ற திருப்பணியை உடனடியாகச் செய்வதற்கு ஆணையிட்டு உள்ளார்கள் என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, பாரதிய ஜனதா கட்சியை பொறுத்தவரை, ஆகம விதிகளின் படியோ அல்லது மதக் கோட்பாடுகளின்படியோ நடத்த வேண்டிய விஷயங்களை நாம் அந்தந்த நிர்வாகத்திடமே விட்டுவிட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அதேபோல் திருத் தேர்களைப் பொறுத்தவரை 823 மரத் தேர்களில் 147 திருத்தேர்கள் பழுதடைந்துள்ளன. கடந்த ஆண்டு 10 தேர்கள் பழுது பார்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மீதம் 137 தேர்கள் இருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் அந்தத் தேர்களையும் பழுது பார்ப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுத்துத் தேர் ஓட்டுவதற்கு வழி வகுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட சப்தவிடத் தலங்களாக இருக்கின்ற திருவாரூர், திருமறைக்காடு, நாகப்பட்டினம், திருநள்ளார், திருக்காறியல், திருவாய்மூர், திருக்குவளை ஆகிய 7 தலங்களிலே திருவாரூர் தேர் மட்டுமே இப்போது ஓடுகிறது. மீதி உள்ள 6 தலங்களினுடைய



தேரோட்டதையும் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, திருவாரூரில்கூட பங்குனி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில்தான் தேரோட்டம் நடத்த வேண்டும் என விதி இருக்கிறது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாகவே அம்மாதிரி நடைபெறுவதில்லை. எனவே அரசாங்கம் குறிப்பிட்ட காலத்தில் அந்தக் கோவிலினுடைய மரபுப்படி, நடத்த வேண்டிய காலகட்டத்திலேயே தேரோட்டத்தை நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கோவில் பூசாரிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கான ஓய்வூதியம் ஏற்கெனவே சென்ற ஆண்டு 3000 பேருக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், 2485 பேருக்குத்தான் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை 4000 ஆக உயர்த்தி, கிராமக் கோவில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போது திருவண்ணாமலையில் இடும்பனார் மற்றும் இளையனார் கோவிலிலே, கோவில்களே காணாமல் போய்விட்டன; அங்கு கோவில் இல்லை என்பதை நான் இங்கே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அமைச்சர் அவர்களும் அதை ஒப்புக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அந்த ஆக்கிரமிப்பை நீக்குவதாக, நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்களும் இங்கு உத்தரவாதம் கூறி இருந்தார்கள். ஆனால் இன்று வரை கர்ப்பக்கிரகம் இருந்த இடத்திலேயே கடை இருக்கிறது. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலையில் எந்த இடத்தில், எந்த ஆலயத்தில், எங்கு இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எச். ராஜா:** சென்ற ஆண்டே அனைத்து விவரங்களையும் கொடுத்திருக்கிறேன். நான் இப்போதும் விவரங்களைக் கொடுத்து விடுகிறேன். சென்ற ஆண்டே கொடுக்கப்பட்டு நீங்களே அந்த இடத்திலே மறுநாள் விசாரித்து கோவில் இருந்த இடத்திலே கடைகள் இருப்பதை அவையிலேயே ஒப்புக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் அதற்குப் பிறகும் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

[திரு. எச். ராஜா] [2004 ஜூலை 27

மேலும் இப்போது ஏகாம்பரேஸ்வரர் கோவிலிலே அம்மன் சிலை இருந்த இடத்திலேயே வீடுகட்டி, படுக்கை வைத்து இருக்கிறார்கள்.

அதேபோல திருவண்ணாமலையில் 1919–ன் நிலைப்படி 170 குளங்கள் இருந்தன. இப்போது 138 குளங்கள் இருப்பதற்குத்தான் trace இருக்கிறது. நாளைக்கு அதுவும் இருக்குமா என்று தெரியவில்லை. We are talking about restoring water bodies. ஆகவே, இந்தக் குளங்களை மீண்டும் நாம் புனரமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

அதேபோல மயிலையிலே பேயாழ்வார் அவதரித்த ஸ்தலம் பூக்கடையினுடைய சாரங்கள் போடப்பட்டு ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றையும் உடனடியாக நீக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் சிலைகள் உடைப்பு மிக அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. நேற்றையதினம்கூட 1300 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான பல்லவர் காலத்துக் கோயில், செஞ்சியை அடுத்து இருக்கிற பனமலை கிராமத்திலே, மலையிலே இருக்கிற கோயிலான தாளுதீஸ்வரர் கோயிலிலே கொள்ளையர்கள் புகுந்து சிலைகளை உடைத்திருக்கிறார்கள்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்திலே தடிக்காரன்கோணம், ஈத்தாமொழி, இரணியல்கோணம், மேல்பாலை போன்ற இடங்களிலே சுவாமி சிலைகளை அடித்து நொறுக்கி ஆற்றிலே போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சிலைகள் உடைக்கப்பட்டது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செஞ்சியை அடுத்த பனமலை கிராமத்தில் மலைமீது உள்ள பழமையான தாளுதீஸ்வரர் கோயில் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தக் கோயில் தற்சமயம் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கே கொள்ளையடித்ததுபற்றி செஞ்சி கோட்டையில் உள்ள தொல்பொருள் அதிகாரிகளுக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கப்பட்டு அங்கு இருக்கிற பொது மக்கள் எல்லாம் சென்று, செஞ்சியிலே இருக்கிற காவல் துறை துணைக் கண்காணிப்பாளரிடத்திலே தகவல் கொடுத்து, உரிய நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 ஜூலை 27]

**திரு. எச். ராஜா:** அறநிலையத் துறை நிர்வாகத்திலே தலைமையிடப் பணியாளர்கள், தணிக்கைப் பணியாளர்கள், பணியாளர்கள், மாவட்டப் பணியாளர்கள், தணிக்கைப் பணியாளர்கள், பொறியியல் பணியாளர்கள் எனப் பல்வேறு பணிகளிலே இருக்கிற மொத்தப் பணியாளர்களுடைய, முழு நேரப் பணியாளர்களுடைய, எண்ணிக்கை 37,817. அதில் 4,751 பணியாளர்கள், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் ஆகிய நிலைகளிலே பணியாற்றி வருகின்றனர். இதிலே ஆன்மீகத் தொடர்புள்ள வேத பாராயணம் செய்பவர்களுக்கான உதவித் தொகை, அர்ச்சகர்களுக்கான உதவித் தொகை, இசைக் கலைஞர்களுக்கான உதவித் தொகை, கோயில் பூசாரிகளுக்கான ஓய்வூதியம் இவை அனைத்தும் சேர்த்து 2 கோடியே 41 இலட்சம் ரூபாய். ஆனால் வெறும் அரசின் நிர்வாகிகளுக்காகக் கொடுக்கப்படுகிற. salary, wages, conveyance, petrol diesel expenses இதையெல்லாம் சேர்த்தால் 22 கோடியே 68 இலட்சம் வருகிறது. ஆகவே, நிர்வாகிகளுக்காகக் கோயிலா? கோயில்களுக்காக நிர்வாகிகளா என்ற கேள்வி எழுந்து கொண்டிருக்கிற சமயத்திலும்கூட கோயில்களுடைய நிர்வாகம் சிறப்பாக நடத்தப்பட்டு, கோயில்களுடைய சொத்துகள் முழுமையாகப் பராமரிக்கப்பட வேண்டும், ஆக்கிரமிப்புகள் அனைத்தும் நீக்கப்பட்டு, அவற்றைக் கோயில்களிடம் மீண்டும் ஒப்படைப்பதற்காக உடனடியாகத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் அண்டை மாநில நதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு நீரினைத் திருப்பி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கேட்ட 15 மணித்துளிகள் முடிந்துவிட்டது. இன்னும் 5 மணித்துளிகள் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்.

**திரு. எச். ராஜா:** நீரினைத் திருப்பி விடுவதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கோயம்புத்தூரிலே ஆலந்துறையிலே பாலக்காட்டுக்கு அருகில் இருக்கிற அந்தப் பகுதியில் check dam–ஐ பாலக்காட்டினுடைய கலெக்டரே வந்து நேரடியாக இங்கே தகர்த்தார் என்ற செய்தியானது பத்திரிகையிலே படிக்க நேர்ந்தது. இம்மாதிரியாக, பக்கத்து மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் இங்கு வந்து check dam–ஐ உடைப்பது, ஒரு சட்டமன்றத்திலே பக்கத்து மாநிலங்களோடு இருக்கிற நீர் ஒப்பந்தத்தை இரத்து செய்வது போன்ற செயல்பாட்டிலே இறங்கி

காங்கிரஸ் அரசாங்கங்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கே ஊறு விளைவிக்கிற செயல்களிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, பாலக்காட்டிலிருந்து இங்கே வந்து நம்முடைய check dam-ஐத் தகர்த்த அந்த கலெக்டர்மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை இணைப்புகளில் மிகுதியான நீரைத் திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக்கூறுகள் பற்றி முன்னோடி அறிக்கையும் தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்போது புதிதாக வந்திருக்கிற அரசு தங்களுடைய பட்ஜெட்டிலோ அல்லது அவர்களுடைய பொதுச் செயல் திட்டத்திலோ இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக முன்னாள் பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் நேற்றையமுன்தினம் பிகார் மாநிலத்திற்குச் சென்றபோதுகூடத் தெளிவாக ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள்; பிகார் போன்ற மாநிலங்களிலே அடிக்கடி வெள்ளத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், ஆனால் தென் பகுதியிலே இருக்கிற மாநிலங்களிலே விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இதற்கு ஒரே தீர்வு, தேசிய நதி நீர் இணைப்புத் திட்டம்தான் என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். எனவே நம்முடைய மாநிலத்தின் சார்பில் தமிழக முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும், தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்திற்காக எந்த ஒரு முயற்சியை மேற்கொண்டாலும், பாரதிய ஜனதா கட்சியும், அதனுடைய அகில இந்திய தலைமையும் உறுதுணையாக இருக்கும் என்பதை நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

வேலைக்கு உணவுத் திட்டம் சென்ற ஆண்டு 100 ஏக்கர் பாசனப் பரப்புடைய பொதுப் பணித் துறை ஏரிகளை மேம்படுத்துதல், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சம்பூர்ண கிராம ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயல்படுத்தப்பட்டது. 10.5 கோடி ரூபாயில் 2.5 கோடி ரூபாய் சம்பளம் பணமாகவும், 7.5 கோடி ரூபாய் மதிப்பிற்கான கூலி, அரிசியாகவும் கொடுக்கப்பட்டது என்று இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பல மாவட்டங்களிலே பரவலாகத் தகவல் வந்து இருக்கிறது. சிவகங்கை மாவட்டத்திலே நேரடியாக நமக்குத் தெரியும். அங்கு ஏரிகளைத் தூர் வாருவதற்கு இயந்திரங்கள்



பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தினுடைய குறிக்கோளே கிராமப் பகுதிகளிலே வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதுதான். அதிலே இயந்திரத்தைப் பயன்படுத்தினால் இயந்திரம் அரிசியைச் சாப்பிடுமா என்று தெரியவில்லை. இதனுடைய விளைவு contractor—களுக்கு அரிசி கொடுக்கப்பட்டு அதை அவர்கள் கல்லோடும், மணலோடும் விற்று இருக்கிறார்கள், திருவாடானையிலே லாரியிலே பிடிபட்டு இருக்கிறது. எனவே தமிழக அரசு இதுமாதிரி contractors குறித்து விசாரிக்க வேண்டும். அதிலும் நமக்கு வந்திருக்கிற தகவலின்படி பல contractors 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை செலவு செய்துவிட்டு 100 சதவீதத்திற்கான பில்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் அதுபற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்களுக்கும் கூறி இருக்கிறேன். எனவே, இதிலே மாநில அரசாங்கம் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அதற்குப் பிறகே இதற்கான payment-க்கு அனுமதி அளிக்க வேண்டும் என்ற நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் வறட்சியின் காரணமாக வேலைக்கு உணவு என்கின்ற திட்டத்தினை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அதன்படி பொதுப் பணித் துறையில் 10.5 கோடி ரூபாய்க்கு வேலைக்கு உணவு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் விரைவாகவும், திருப்திகரமாகவும் நடைபெற்று இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் சில குறைகள் இருப்பதாக என்னிடம் தொலைபேசியில் சொன்னார்கள். நானும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி முழு விசாரணை செய்த பிறகுதான் அதற்குத் தேவையான உணவும் பணமும் பட்டுவாடா செய்யப்படவேண்டுமென்று தொடர்புகொண்டு சொல்லி இருக்கிறேன். அந்த வகையில் வேலைக்கு உணவு என்கிற திட்டத்தில் எந்தப் பகுதியில் தவறு நடந்தாலும், அதைத் தடுத்து நிறுத்துகின்ற அரசாகத்தான் மாண்புமிகு அம்மாவின் அரசு நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மற்றபடி அந்தத் திட்டம் நிறைவாக நிறைவேற்றப்பட்டு கிராமப்புறங்களில் இருக்கிற சிறு பாசனக் குளங்கள் தூர்வாரப்பட்டு தமிழக மக்களிடையே நல்ல வரவேற்பினையும், மழையினால் கிடைக்கப்பெறுகின்ற நீரினைத் தாங்குகின்ற, கொள்ளளவைக் கொண்டிருக்கின்ற குளங்களாக அவை உருவாகி இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி பிரச்சினையைப் பொறுத்தவரை காவிரி ஆணையத்தினைக் கூட்டுவதற்கு, மத்திய அரசை நிர்பந்திப்பதற்கான முயற்சிகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். மேட்டூரில் ஆகஸ்ட் 1–ல் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் புதிதாகச் சம்பா போடுபவர்களுக்கு ஒருபோகமாவது எடுக்க முடியும். அதோடுகூட, ஏற்கெனவே filter point வைத்து தஞ்சையில் காவிரி டெல்டா பகுதியிலே குறுவைக்காக நடவு நட்டுவிட்டவர்களுக்கு இப்போது தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே இப்போது தண்ணீர் திறந்துவிடப்படுமானால், filter point மூலமாகச் சாகுபடிக்கு, நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பவர்களுக்கு நிச்சயமாக இது உதவியாக இருக்கும். ஆகவே உடனடியாக மேட்டூரிலே தண்ணீர் திறந்துவிடுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறையிலே பேருந்து வழித் தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திலே காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கள்ளல் யூனியனில் உள்ள குறுந்தம்பட்டு, கீழப்பூங்குடி, மாலைக்கண்ணன் ஆகிய கிராமங்களுக்குச் செல்கின்ற ஒன்றியச் சாலைகள் பழுதடைந்து உள்ளன. அவற்றை மேம்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

தளி தொகுதியிலே மழையின் காரணமாக நெடுஞ்சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கின்ற காரணத்தால் தளி தொகுதிக்கு 10 கோடி ரூபாய் விசேஷமாக நிதி ஒதுக்கி சாலைகளைச் செப்பனிட்டுத் தரவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான முழு விவரங்களும் அமைச்சரவர்களுக்குக் கொடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர்கள் 949 பேர் ஏற்கெனவே பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த இரண்டு மாதங்களிலே ஆயிரத்து இருநூற்றுச் சொச்சம் கோடி ரூபாய்க்கு பல்வேறு சலுகைகளை மக்களுக்காக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு வரவேற்பு மக்களிடையே இருக்கிறது. சாலைப் பணியாளர்களாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் இருக்கின்ற



காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கையைக் கருத்திலே கொண்டு உடனடியாக இவர்களையும் வேலையிலே அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமச் சாலைகளைப் பொறுத்தவரை பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனா திட்டத்தின் மூலம், அதாவது பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் மூலமாக 2004 வரை 1000 ஜனத்தொகை இருக்கின்ற கிராமங்களுக்கும், 2004—2005 லிருந்து 500 ஜனத்தொகை இருக்கின்ற கிராமங்களுக்கும் All Weather Roads—க்கான திட்டமானது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசினால் கொடுக்கப்பட்டது. ஆனால் புதிய அரசாங்கம் இந்தத் திட்டத்தைப்பற்றி எந்தவிதமான அறிவிப்பையும் இதுவரை சொல்லவில்லை. இது மாதிரி பல்வேறு திட்டங்கள்; கிராம அபிவிருத்தித் திட்டங்கள்; அது சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனாவாக இருந்தாலும் சரி, பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனாவாக் இருந்தாலும் சரி, எதைக் கேட்டாலும் நிதி அமைச்சர் 10 ஆயிரம் கோடி ரூபாய் இருக்கிறது, அதிலிருந்து கொடுப்போம் என்கிறார். அது ஏதோ அந்த வாழைப்பழம்தான் இந்த வாழைப்பழம் என்ற கதையாகவே நிதியமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற தொகையினை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு ensure செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்தான். ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே கோயில்கள் கட்டுவதற்காக, அவர்களுடைய இஷ்ட தெய்வங்களுக்காக ஆலயங்கள் அமைப்பதற்கு ஏற்கெனவே 25 ஆயிரம் ரூபாயிலே கோயில்கள் கட்டுவதற்கு நிதி கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதவில்லை. எனவே ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே கட்டுகின்ற கோயில்களுக்குக் கொடுக்கின்ற நிதி உதவியை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு (குறுக்கீடு) அதாவது ஏற்கெனவே 6 ஆயிரம் கோயில்களுக்கு அனுமதியாகி இருக்கிறது. அது 12,506—க்கும் வந்தால், ஒரு ஊராட்சிக்கு ஒரு கோயிலாக இருக்கும் என்கின்ற கோரிக்கையையும் வைத்து, இன்றைய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லோர்கள் வாழ்வைக் காக்க, நமக்காக நம்மைக்காக்க தெய்வம் நேரில் வருவதில்லை. மனித உருவில் தெய்வமாய் இருக்கும் தெய்வத் திருவுருவாய், வீர வரலாற்றின் வெற்றித் திலகமாய், தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் சிங்கத்தின் கர்ஜனையாய், அசைக்க முடியாத நம்பிக்கையாய், உருகாத உள்ளமும் உருக வைக்கும் திருவாசகமாய், பக்தர்களின் பசியைப் போக்கும் அன்னதானத் தாயாய் விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையை சமர்ப்பிக்கிறேன்.

அன்னதானத் திட்டம்; ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று பக்தர்களின் மனதறிந்து சிந்தித்த மகத்தான திட்டம்தான் 'அன்னதானத் திட்டம்.'

ஏழைகளுக்கு அனைத்துத் துறைகளிலும் என்னென்ன நலத் திட்டங்களை உருவாக்க முடியும் என்று சிந்தித்து, மேடு பள்ளம் இல்லாத சமத்துவ சமதர்மத்தை நிலைநாட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

திருக்கோயில்களுக்கு வருகை தரும் சேவார்த்திகளுக்கு மதிய உணவு அளிக்கும் வகையில் அன்னதானத் திட்டம் 23—3—2002 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் தொடங்கி வைக்கப்பட்டது. அத்திட்டம் தற்போது 171 திருக்கோயில்களில் பெருவாரியான சேவார்த்திகள் மற்றும் பொதுமக்கள் பாராட்டுதல்களுடன் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 23—3—2002 முதல் 18—7—2004 வரை 1 கோடியே 40 இலட்சத்து 34 ஆயிரத்து 229 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்திற்கெனத் தனியாக வைக்கப்பட்டுள்ள அன்னதான உண்டியல் மூலமும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலமாகவும், திருக்கோயில்களுக்கு நேரடியாக நன்கொடையாளர்கள் மூலமாகவும் இதுவரை வழங்கப்பட்டுள்ள நன்கொடை சுமார் 14 கோடியே 25 இலட்சம் ரூபாய்கும்.



பிற்பகல் 12–50

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் தங்கள் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தக் கோரி வருகின்றனர். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். தங்கள் பகுதியில் இருக்கும் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மேலும் சிறப்புடன் நடைபெறவும், அன்னதானத் திட்டம் செயல்படாத திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடங்குவதற்கும் நன்கொடையாளர்கள் மூலம் நிதியுதவி ஏற்படுத்தித் தந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தப் புனிதத் திட்டம் மென்மேலும் சிறந்து விளங்குவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கோருகிறேன்.

அன்னதானத் திட்டம் செயற்படுத்தப்படும் அனைத்துத் திருக்கோயில்களிலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறிகளைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் மாலை ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சமயப் புலமை வாய்ந்த தமிழ்ப் புலவர்களையும், திருக்கோயில் ஓதுவார் பெருமக்களையும், தேவாரப் பாடசாலை ஆசிரியர்களையும், புலமை வாய்ந்த தமிழ்ச் சான்றோர்களையும் கொண்டு இவ்வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நதியைப் போல நாமும் நடந்து பயன்தர வேண்டும்
கடலைப் போல விரிந்த இதயம் இருந்திட வேண்டும்
வானம்போல பிறருக்காக அழுதிட வேண்டும்
வாழும் வாழ்க்கையில் உலகில் என்றும் விளங்கிட வேண்டும்

என்கிற உயரிய தத்துவத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட திட்டம்தான் — மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலவச திருமணத் திட்டம்.

எண்ணத்தில் நலமிருந்தால் உள்ளத்தில் தெளிவு உண்டாகும். இதனால் அனைவருக்கும் இன்பமே ஏற்படும். அத்தகைய நல்ல இதயம் படைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருமணச் செலவுகளைக்கூடச் செய்ய முடியாமல் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் நலிவடைந்த ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலமாக இலவச திருமணத் திட்டம் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

அதன்படி 18-6-2003 அன்று 1053 இணைகட்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைப்படி ஒவ்வொரு இணைக்கும் திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் தங்கம் உட்பட குடும்பத்திற்கு சீர்வரிசைப் பொருட்களும் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இந்த ஆண்டும் இலவச திருமணம் நடத்தப்பட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க இலவச திருமணங்களை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருத்தேர்கள் பராமரிப்பு**

440 திருக்கோயில்களில் 515 தேர்கள் உள்ளன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி இந்த ஆண்டில் 45 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட்டு அவற்றில் 41 திருத்தேர்களின் தேரோட்டம் நடத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள திருத்தேர்களின் தேரோட்டம் விரைவில் நடைபெறவுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கண்டதேவி திருத்தேர்**

சிவகங்கை மாவட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமுக்தீஸ்வரர் என்கிற சிறகிலிநாதசுவாமி திருக்கோயில் தேரோட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் 24—6—2002 அன்று தேரோட்டம் நடைபெற்றது. ஒருசில தவிர்க்க முடியாத காரணங்களால் கடந்த 2003 ஆம் ஆண்டு தேரோட்டம் நடத்த இயலவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுரையின்படி இந்த ஆண்டு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களுடனும் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தி 1—7—2004 அன்று தேரோட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு [illegible] என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



**தாரமங்கலம் திருத்தேர்**

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் திருத்தேர் திருப்பணிக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள். அதன்படி திருத்தேர் திருப்பணி வேலைகள் விரைவாகச் செய்து முடிக்கப்பட்டு தேரோட்டம் விரைவில் நடைபெறவுள்ளது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பழனியாண்டவர் திருமலையில் ரோப் கார்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7-3-2003 அன்று திண்டுக்கல் மாவட்ட நலத் திட்ட தொடக்க விழாவில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பக்தர்களின் வசதிக்காக ரோப் கார் வசதி செய்து அளிக்கப்படும் என அறிவித்தார்கள். அவ்வறிப்பினைத் தொடர்ந்து ரூ.4 கோடி மதிப்பீட்டில் ரோப் கார் திட்டம் வகுக்கப்பட்டு அதற்கான பணிகளும் முடிந்துள்ளன. 20 பெட்டிகள் அடங்கிய இந்த ரோப் கார் வினாடிக்கு 1.8 மீட்டர் வேகத்தில் செல்லும் திறனுடையதாக உள்ளது. ஒரு மணி நேரத்திற்கு 600 நபர்களை மலையடிவாரத்திலிருந்து மேல் பகுதிக்குக் கொண்டு செல்ல இயலும். அதேபோல் மேலிருந்து கீழ் வர இயலும். இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்கென ரோப் கார் வசதி விரைவில் தொடங்கப்படவுள்ளது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருக்கோயில்களில் குடமுழுக்கு மற்றும் திருப்பணிகள்**

மனிதன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதைவிட அவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம். அப்படிப்பட்ட மனிதனை நல்வழிப்படுத்த உரிய பாதையில் அழைத்துச் செல்ல இறைவழிபாடே சாலச் சிறந்ததாகும்.

இறைவனின் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டும் என்ற இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இந்த நிதியாண்டில் 137 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டது.

பிற்பகல் 12-55

தியாகத்தின் தலை நிமிர்ந்தால் இந்தத் தரணிக்கு இலாபமுண்டு; தருமங்கள் வாழ்வதுண்டு. அந்தத் தருமங்களே குடமுழுக்குத்

திருவிழாக்கள் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் – 14–5–2001 முதல் கடந்த நிதியாண்டு வரை அதாவது 31–3–2004 வரை – 3269 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது என்பதை ராஜா அவர்களுக்கு அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக சென்ற நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி 30 ஆண்டுகளுக்குப் பிறகு திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்–காந்திமதியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு 5–4–2004 அன்றும், கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 7–4–2004 அன்றும், திருச்சி மாவட்டம் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு 11–2–2004 அன்றும், அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலின் குடமுழுக்கு 21–5–2004 அன்றும் நடத்தப்பட்டன. மற்ற திருக்கோயில்களின் குடமுழுக்குகள் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டன. 30 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த ஆலயங்களில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு திருப்பணி செய்தது என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சமென்று வந்தவரைத் தாய்போல் ஆதரித்து அன்பாலே மதிப்பளித்து, அஞ்சாத நெஞ்சில் அன்புக்கு இடம் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 46 திருக்கோயில்களின் குடமுழுக்கு 6–7–2003 அன்று ஒரே நாளில் நடந்தேறியது. இதுவரையிலும், வரலாற்றில் இல்லாத அளவிற்கு ஒரே நாளில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

நிதி வசதியற்ற, பாடல் பெற்றதும் மற்றும் மங்களா சாசனம் பெற்றதுமான திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி இவ்வாண்டு நிதி வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் 35 திருக்கோயில்களுக்கு 1 கோடியே 7 இலட்சத்து 40 ஆயிரத்து 243 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*6000 திருக்கோயில்கள் திருப்பணி:* ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழை எளிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருடைய ஆலயங்களில் இருக்கின்ற — ஆண்டவன் அங்கே வெயிலில் காய்ந்துகொண்டிருக்கிறார், மழையிலே நனைந்துகொண்டிருக்கிறார். மண் தரையிலே இருக்கின்ற ஆலயங்களிலே இருக்கின்ற — ஆண்டவனுக்கு அங்கே கான்கிரீட் கூரை அமைத்து திருப்பணி செய்யவேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 6000 சிறிய திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திடும் வகையில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூபாய் 25 ஆயிரம் வீதம், 15 கோடி ரூபாயை, நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜா அவர்கள் கேட்கின்ற நேரத்தில் இன்னும் ஆறாயிரம் கோயில்கள் வேண்டும் என்று கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்கக்கூடியதைக் கொடுக்கக்கூடிய தன்மை படைத்தவர்கள். நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று நீங்கள் கேட்கின்ற இன்னும் இருக்கின்ற ஆறாயிரம் கோவில்களில் திருப்பணி செய்வதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



*யானைகள் பராமரிப்பு:* உயிர்களிடத்தில் அன்பு செய்ய வேண்டும் என்றான் மகாகவி பாரதி. விலங்கினங்களிடத்திலும் மாறா அன்பு செலுத்துகின்ற மாண்புமிக்கவர் நமது இதய தெய்வம் அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி யானைகள் புத்துணர்ச்சி முகாம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி தொடங்கப்பட்டது. அடைபட்டிருந்த யானைகளுக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் புத்துணர்ச்சி அளிப்பதே இந்தச் சிறப்பு முகாமின் நோக்கம் ஆகும். யானைகள் ஒன்றுக்கொன்று இணக்கமாக இருக்கச் செய்தல், நல்ல இயற்கை சூழ்நிலையை ஏற்படுத்துதல் போன்ற வகையில் யானைகள் இம்முகாமின் மூலம் பயன் அடைந்தன.

திருக்கோயிலுக்குச் சொந்தமான 37 யானைகள், தனியாருக்குச் சொந்தமான 18 யானைகள், வனத் துறைக்குச் சொந்தமான 45 யானைகள், மொத்தம் 100 யானைகள் இம்முகாமில் கலந்துகொண்டன. இம்முகாம் 30 நாட்கள் நடத்தப்பட்டன. இம்முகாமில் நல்ல மருத்துவ சிகிச்சையும், இயற்கையான சூழ்நிலையில் நல்ல சத்துணவும், சிறப்பான பயிற்சியும்,

ஆற்றுக் குளியல் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த யானைகள் புத்துணர்ச்சி முகாமை ஆண்டுதோறும் 45 நாட்கள் நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புராதன ஓவியங்கள்: மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பொற்றாமரைக் குளத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பக்கச் சுவர்களில் அழிந்துள்ள புராதன ஓவியங்களை 26 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகத் தீட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் வகையில் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது 4—வது ஓவியம் தீட்டும் பணி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகாமகப் பெருவிழா:

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் மகாமகப் பெருவிழா இவ்வாண்டு 26—2—2004 முதல் 6—3—2004 வரை சிறப்புடன் கொண்டாடப்பட்டது. எப்போதும் இல்லாத அளவில் ஒரே நாளில் பக்தர்கள் புனித நீராடும் நிகழ்ச்சியை, ஆன்மீகப் பெருமக்கள் 10 நாட்கள் புனித நீராடி பலன் பெறலாம் என்ற கருத்தின் அடிப்படையில் 10 நாட்கள் சுமார் 25 இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராட சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைவரும் எவ்வித சிரமமுமின்றிப் பயனடைந்து பாராட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–00

அப்பெருவிழாவை முன்னிட்டு 5 வைணவத் திருக்கோயில்கள் மற்றும் 12 சைவத் திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யப்பட்டது. மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கும்பகோணம் நகர் மற்றும் சுற்றியுள்ள திருக்கோயில்களுக்குத் தேவையான திருப்பணி வேலைகள் செய்தல் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக சாலை வசதி, பக்தர்களின் வசதிக்கெனக் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், பெரும் கூட்டத்தைச்



சமாளிக்கத் தேவையான போக்குவரத்து வசதி ஆகிய அனைத்தையும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைத்து மிகவும் சிறந்த முறையில் செய்து கொடுத்து அனைவரின் பாராட்டுதலோடு மகாமகப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருண ஜபம்

தமிழகத்தில் வான் பொய்த்து மழை இல்லாது வறட்சியுற்ற நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி துறையின் ஆளுகைக்குட்பட்ட 1104 திருக்கோயில்களில் 30—6—2004 அன்று மழை வேண்டி 'வருண ஜபம்' நடத்தப்பட்டது.

திருக்குளங்கள் பராமரிப்பு

அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1552 திருக்கோயில்களுக்குக் குளங்கள் உள்ளன. அத்திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2235 திருக்குளங்கள் உள்ளன. அவற்றில் 976 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1145 திருக்குளங்கள் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. 576 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1090 திருக்குளங்கள் செப்பனிடப்பட வேண்டியுள்ளன. இத்திருக்குளங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி கிராமப்புற வளர்ச்சித் திட்ட உதவியின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பணிகளைச் செய்திடவும், நிதி வசதிமிக்க திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களை அந்தந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து செலவிட்டுச் செப்பனிடவும், தொண்டு நிறுவனங்கள் மூலம் செப்பனிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் பணியாளர்கள் நலம்

ஓய்வூதியம்

இத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து 60 வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக் கலைஞர்கள், வேத பாராயணர்கள் ஆகியோருக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த நிதியாண்டு வரை 6 ஓதுவார்கள், 110 அர்ச்சகர்கள், 11 இசைக் கலைஞர்கள் மற்றும் 2 வேத பாராயணர்கள் ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

[திரு. பி.சி. ராமசாமி] [2004 ஜூலை 27

இந்நிதியாண்டில் 31 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அவர்களின் விண்ணப்பங்கள் ஓய்வூதியத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களில் பணி செய்து 60 வயது நிறைந்த பூசாரிகளுக்கு ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இந்த நிதியாண்டு வரை 1214 நபர்களுக்கு நபர் ஒருவருக்கு 500 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் மேலும் 500 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதியும், நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தேர்வுக் குழு பரிசீலனைக்கு வைத்து ஓய்வூதியம் அனுமதிக்கப்படவுள்ளது.

**நிதிவசதியில்லாத திருக்கோயில் பணியாளர்கள் சம்பளம்**

ரூபாய் 40 ஆயிரத்திற்குக்கீழ் வருமானம் பெறும் திருக்கோயில்களில் மாத வருமானம் ரூ.400/-க்கும் குறைவாக சம்பளம் பெறும் பணியாளர்களின் சம்பள பாக்கிகள் ஆண்டுதோறும் இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல் 1815 திருக்கோயில்களில் பணியாற்றும் 2761 பணியாளர்களுக்கு1கோடியே 83 ஆயிரம் ரூபாய் கடந்த நிதியாண்டு வரை வழங்கப்பட்டுள்ளது.

**ஆலய ஊழியர் குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவிடும் பொருட்டு "ஆலய ஊழியர் குடும்ப நல நிதித் திட்டம்" ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் குடும்ப நல நிதி வழங்கப்படுகிறது. 01–08–2001 முதல் வாரிசுதாரர் குடும்பத்திற்கு ரூ75,000/– வழங்கப்படுகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு 402 வாரிசுதாரர்களுக்கு 2 கோடியே 27 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டது.

**இலவச காலணி பாதுகாப்பு**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் காலணிகளை இலவசமாகத் திருக்கோயில் நிர்வாகமே பாதுகாக்க



2004 ஜூலை 27] [திரு. பி.சி. ராமசாமி]

வேண்டுமென ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து ஆலயங்கள், திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் காலணிகளைத் திருக்கோயில் நிர்வாகமே சம்பளம் கொடுத்து இல்வசமாகப் பாதுகாத்து வருகின்றது. 1–7–2004 முதல் இலவசமாகப் பாதுகாத்து வருகின்றது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருக்கோயில் நிலங்கள் மற்றும் கட்டடங்கள்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக சுமார் 4.79 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்தபோதும் அவற்றிலிருந்து போதுமான வருவாய் பெறப்படுவதில்லை. எனவே வருவாயை அதிகரிக்கும்பொருட்டு அனைத்து நிலங்கள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வதன்மூலம் திருக்கோயில் வருவாயை அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த அவைக்கு, குறிப்பாக திரு. ராஜா அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

**நியாய வாடகை நிர்ணயம்**

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டிய கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கு 30–6–2004 முடிய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வணிகக் கட்டடங்கள் | 10,198 |
| வணிக மனைகள் | 6,106 |
| குடியிருப்புக் கட்டடங்கள் | 5,430 |
| குடியிருப்பு மனைகள் | 21,997 |

இவ்வாறு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு கட்டடங்கள் மூலம் 1 கோடியே 1 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாயும், மனைகள் மூலம் 4 கோடியே 29 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாயுமாகத் திருக்கோயில்களின் வருமானம் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் வருவாய் நீதிமன்றம் மூலம் 12.5 ஏக்கர் மற்றும் 3.5 சென்ட் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கோயம்புத்தூர் வடவள்ளி என்ற இடத்தில் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள 11 ஏக்கர் 27 சென்ட் நிலம் இந்த ஆண்டு கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் தமிழகத்தில்தான் 38403 திருக்கோயில்கள் உள்ளன. இதுபோன்று கொள்கை விளக்கக் குறிப்பு — பக்கம் 17—ல் கண்டவாறு சற்றேறக்குறைய 4.78 இலட்சம் ஏக்கர் நிலங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதேபோன்று திருக்கோயில் பழக்க வழக்கங்கள் கோயிலுக்குக் கோயில் மாறுபடுகின்ற நிலை தமிழகத்தில் உள்ளது. இதை மனதில் வைத்துத்தான் முதன் முதலில் திருக்கோயில் நிர்வாகம் செய்வதற்கு சட்டம் கொண்டுவரப்பட்டது தமிழகத்தில்தான். எனவே, இவ்வளவு பெரிய துறையை நிர்வகிக்க அலுவலர்கள் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொள்கை விளக்கக் குறிப்பு — பக்கம் 13—ல் அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் எண்ணிக்கையைக் கொண்டுவர விழைகிறேன். இவ்வெண்ணிக்கையைப் பார்வையிட்டால், குறைந்தபட்ச அலுவலர்களைக்கொண்டு பெருவாரியான திருக்கோயில்களை இத்துறை நிர்வகித்து வருகிறது என்பது புரியுமென மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யும்போது ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களையும், திருக்கோயில்களுக்குப் பல்வேறு சலுகைகள், தொண்டு புரிபவர்களையும், திருக்கோயில் சொத்துகளை நல்லமுறையில் பராமரிக்கக்கூடிய எண்ணம் கொண்டவரையும் தேர்வு செய்து, அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினரையும் உள்ளடக்கி அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள் என்பதையும் அதோடு ஆதிதிராவிடர் மக்களைச் சேர்ந்தவர்களில் ஒருவரும் நியமிக்கப்பட்டு வருகிறாாகள் என்பதையும் மாண்புமிகு



உறுப்பினர் ராஜா அவர்களுக்கு அன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே ராஜாவுக்குத்தான் மந்திரி சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** அவர்தான் கேட்டார்; அவர்தான் கேட்டார். நிலங்கள் குத்தகை வசூல் தொடர்பாக 22,411 குத்தகைதாரர்கள் மீது ரூ12,699 இலட்சத்திற்கு வருவாய் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 11,559 குத்தகைதாரர்கள் மீது ரூ.9,882 இலட்சம் வசூலிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது. இதில் ரூ.243 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. வெளியேற்றும் உத்தரவு 1,130 நபர்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கைப்பற்று செய்யப்பட்டுள்ள நிலத்தின் பரப்பு 425.36 ஏக்கர் நிலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இதோ இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

## அறிவிப்புகள்

1. நாகர்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு ஆகியவை 6 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்படும்.

2. கும்பகோணம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு 46 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டப்படும்.

3. சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலக உபயோகத்திற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 5 கணிப்பொறிகள் கொள்முதல் செய்யப்படும்.

4. சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலக உபயோகத்திற்கான தளவாடங்கள் 2 இலட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்படும்.

[திரு. பி.சி. ராமசாமி] [2004 ஜூலை 27

5. கோவை, புதுக்கோட்டை, மதுரை மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் சிலைகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்படும்.

6. ஆதிதிராவிடர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கவும், திருக்கோயில் நிலங்கள் சம்பந்தமான குத்தகை உயர்வு, அன்னதானத் திட்டத்தினை விரிவாக்கம் செய்தல், பொது உபயோகத்திற்காக திருக்கோயில்கள் நிலங்களை ஒதுக்குதல், சொத்து பராமரித்தல், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல், திருமண மண்டபங்கள் கட்டுதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை பேசியும் வெட்டுத் தீர்மானங்கள் மூலமும் வலியுறுத்தியுள்ளனர். அவர்களுடைய கோரிக்கைகள் நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொண்டே மனிதன் செய்யும் மாபெரும் தொண்டு என்பார்கள். அப்படி மக்கள் தொண்டை தன் உயிர்மூச்சாய்க் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், எல்லோரும் வணங்கும் இறைவனுக்கும் தொண்டு செய்கிறார்கள். இறை பக்தியும், மக்கள் சக்தியும் கொண்டு விளங்கும் அம்மா அவர்களை வணங்கி, நான் இதுவரையில் பதிலுரையில் கூறியுள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி நான் கோரிய தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.



2004 ஜூலை 27]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை, நெடுஞ்சாலைகள் துறை, உள் துறை – சிறைச்சாலைகள், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் இந்த அவையிலே மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்ய எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். இந்த நாடு நலம் பெறவும், நாட்டு மக்கள் வளம் பெறவும், சிந்தித்துச் செயல்படுகின்ற தலைவராக மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என்று தெரியாமல், அரசை எப்படி நடத்துவது, நிர்வாகத்தை எப்படிச் சீர்திருத்துவது என்று தெரியாமல், தமிழகத்தை அலங்கோலப்படுத்திவிட்டுச் சென்ற முந்தைய தி.மு.க. ஆட்சியின் கைவரிசையால் காலியாகப் போன கஜானாவைச் சீர்திருத்தி, தனது ஊழியர்களுக்குக்கூடச் சம்பளம் கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட இருந்த அரசின் நிதிநிலையை நேர்படுத்தி, தமிழக அரசு திவாலாகி, உலக வரலாற்றில் தமிழர்களுக்கெல்லாம் ஒரு தலைக்குனிவு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தி, சீரிய திட்டங்களால் தமிழகத்தை மீட்டவர்கள் நிர்வாகச் செம்மல் எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள். மக்களின் தேவை என்ன, மக்கள் விரும்புவது என்ன, மக்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்று அவர்களின் முகம் பார்த்துக் கண்டறிந்து அள்ளி அள்ளி வழங்குகின்ற வள்ளலாக மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழன்னை தவமிருந்து பெற்றெடுத்த தலைமகளாம் மாண்புமிகு அம்மா அவர்களை அழித்துவிடலாம், ஒழித்துவிடலாம் என மனப்பால் குடிக்கின்ற எதிரிகளையும், அவர்களுக்குத் துணை போகின்ற எதிரிகளையும் தகர்த்து எறிகின்ற வல்லமை படைத்தவர் எங்கள் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

அம்மா அவர்கள் துணிச்சலின் திருவுருவம். வீரத்தின் விளை நிலம். அன்பின் பிறப்பிடம். ஆற்றலின் இருப்பிடம். அவர்களுடைய தலைமையில் தமிழகம் ஒவ்வொரு துறையிலும் முதலிடம் பெற்று வருகின்றது. மக்களின் தேவையை அறிதல், அவற்றை நிறைவேற்ற தீர்க்கமாகத் திட்டமிடுதல், அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்துதல் இவையே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்திருக்கின்ற தாரக மந்திரம். அதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என் பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான்." என்கின்ற அவ்வை மூதாட்டியின் வாக்கிற்கிணங்க மக்களின் வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் தண்ணீரைக்கொண்டு குடிநீர் மற்றும் பாசன வசதிகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பல்வேறு சீரிய திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயலாற்றி வருகின்றார்கள். அத்தகைய பணிகளை நிறைவேற்றி வரும் பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான மானியக் கோரிக்கையை இம்மாமன்றத்தில் முன்வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நீர்த்தேவையைக் கோரும் எல்லா பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவியல் ரீதியில் அதனைப் பங்கீடு செய்து வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதே பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களைச் சிறந்த தொழில்நுட்ப உதவியோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நன்கு பராமரிப்பதும் பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

2003–2004 ஆம் நிதியாண்டில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் 364 கோடி ரூபாய் பெறுமான நீர்வளப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் மாநில நிதியின்கீழ் அறிவிக்கப்பட்டும், போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாததன் காரணமாக, நிறைவேற்றப்படாமல் இருந்த பல்வேறு பாசனப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் சீரிய முயற்சி எடுத்து மாநில அரசு நிதி மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ததன் காரணமாக வேகமான முன்னேற்றத்தில் உள்ளன.



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2004–2005 ஆம் ஆண்டில் தொடர்ந்து இதே வேகத்தில் பணிகளைச் செயலாற்றி முடிப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பாசனப் பணிகள் செய்வதற்கு 454 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சிகளின் காரணமாக, 2003–2004 ஆம் ஆண்டில் செண்பகத் தோப்பு நீர்த்தேக்கத் திட்டம், இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டம், நிலையூர் கால்வாய்த் திட்டம், இலட்சுமிபுரம் அணைக்கட்டுத் திட்டம், நங்கஞ்சியார் நீர்த்தேக்கத் திட்டம், சாஸ்தா கோவில் திட்டம், கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம், அடவிநயினாறு நீர்த்தேக்கத் திட்டம், கடனா விரிவாக்கத் திட்டம், கால்வாய் சடையனேரி திட்டம் ஆகிய திட்டங்கள் செவ்வனே முடிக்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளன.

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கடலரிப்பினைத் தடுப்பதற்காக ரூபாய் 57 கோடி ஹட்கோ (HUDCO) நிதியுதவியுடன் 28 கருங்கல் தடுப்புச் சுவர்களும், 7 தூண்டில் வளைவுகளும் அமைத்து முடிக்கப்படும் தருவாயில் உள்ளன. சென்னை எண்ணூர் கடற்கரையில் கடலரிப்பினைத் தடுப்பதற்காக ரூபாய் 10 கோடி செலவில் கருங்கல் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறையின் பாசன அமைப்புகளின் பராமரிப்புப் பணிகளுக்காக 2003–2004 ஆம் ஆண்டில் ரூபாய் 64.31 கோடி. ஒதுக்கீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டன. 2004–2005 ஆம் நிதியாண்டில் பாசன பராமரிப்புப் பணிகளுக்கென ரூபாய் 82 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

1995–ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒப்புதலளித்து உலக வங்கி நிதி உதவியுடன் சுமார் ரூபாய் 1,100 கோடியில் நடைபெறும் தமிழக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்–I–இன்கீழ் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும், நிதி ஒதுக்காததனால், செயலாக்கப்படாமல் இருந்த ஒன்பது திட்டங்களும் முடிக்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு முழுவதும் வானம் பார்த்த ஏரிகளில் 620 ஏரிகள் தூர் வாரப்பட்டுப் புனரமைக்கப்பட்டன.

நீர்வளத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை அவர்களே பராமரிக்கும் பொறுப்புகளை ஏற்கும் வகையில் ஆங்காங்கே 1566 "நீரினைப்

பயன்படுத்துவோர் சங்கங்கள் (Water Users Associations) ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்கு முறைப்படி வாக்கெடுப்புமூலம் 2004 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் தேர்தல் நடத்தப்பட்டுத் தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகளைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டில் ஒவ்வொரு நதிநீர்ப் படுகையினையும் ஆதாரமாகக் கொண்டு அவற்றில் புதிய நீர்த்தேக்கம் கட்டுவதற்கும், ஏற்கெனவே உள்ள பாசன அமைப்புகளைப் புனரமைத்து, அவற்றினைத் தொடர்ந்து விவசாயிகளின் பொறுப்பிலேயே பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வழிவகைகளைச் செய்ய நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்–2 என்ற திட்டத்தினை ரூபாய் 2890 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து, மைய அரசு வழியாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கியும் அதனை ஏற்று, இந்தத் தொடர்த் திட்டத்தினை வடிவமைப்பதற்காக உலக வங்கி ஆலோசனைப்படி மாதிரித் திட்டமாக தாமிரபரணி வடிநிலத்தில் உள்ள அனுமா நதி உப வடிநிலத்தில் ஒருங்கிணைந்த பாசன மேலாண்மை நியதிகளின்படி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள, ரூபாய் 61.53 கோடியில் பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கால்நடை மற்றும் மீன் வளத் துறை, சமூக நலத் துறை, எரிசக்தித் துறை ஆகிய துறைகளின் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயலாக்கும் வகையில் ஒரு குழு அமைத்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனைத்துத் துறைகளின் பணிகளும் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி நமக்குத் தர வேண்டிய நீரினை கர்நாடக அரசு தரவில்லை. காவிரிப் பாசனப் பகுதிகளில் நமக்குள்ள உரிமைகளைப் பெறுவதற்கும், காவிரி நதிநீர் ஆணையம், பற்றாக்குறை காலங்களில் நீரினைப் பகிர்ந்தளிக்க ஏதுவாக ஒரு விதிமுறையை (Distress Formula) உருவாக்கவும், மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள் என்பதனை இந்த அவையில் கூற விரும்புகிறேன்.

இதற்காகவே காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தை உடனே கூட்டக் கோரியும், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 4–2–2004 மற்றும் 4–6–2004 ஆகிய நாட்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் கடிதங்கள் அனுப்பியுள்ளார்கள்.



மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில் நானும், மாண்புமிகு நிதியமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் அடங்கிய குழு 16–6–2004 அன்று பெங்களூர் சென்று, மாண்புமிகு அம்மா அவர்கள், கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் உடனடியாக அளிக்க வேண்டும் என கர்நாடக முதலமைச்சரிடம் வலியுறுத்தினோம். ஆனால், கர்நாடக அரசு உபரி நீரை மட்டுமே திறந்து விட்டது. தொடர்ந்து தமிழகத்தின் நலம் காக்க மாண்புமிகு அம்மா அவர்கள் நடுவர் மன்ற உத்தரவுப்படி, காவிரி நதி நீரைப் பெறுவதற்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் ஆற்றுப்படுகைகளில் வரைமுறையின்றி தனியாரால் மணல் எடுக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்தது. இதனால் குடிநீர் ஆதாரங்கள், பாலங்கள் ஆகியவை மிகுந்த சேதமடைந்து மக்களுக்குப் பெரிதும் பாதிப்புகள் நிகழ்ந்தன. இந்தச் சமூகச் சீர்கேட்டினைச் சரி செய்யும் நோக்கத்தோடு, தனியார் மணல் எடுப்பதைத் தடை செய்து உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், அரசின் புறம்போக்கு நிலங்கள் மற்றும் தனியார் பட்டா நிலங்களிலிருந்து தனியாரால் மணல் எடுப்பது உடனடியாக நிறுத்தப்பட்டு, பொதுப் பணித் துறை மூலம் மணல் எடுத்து விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி 2–10–2003 முதல் மணல் எடுத்து விற்பனை செய்யும் பணியினைப் பொதுப் பணித் துறை மேற்கொண்டு செவ்வனே செய்து வருகிறது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

பொதுப் பணித் துறை மூலம் லாரி லோடு (2 யூனிட்) ஒன்றுக்கு ரூபாய் 1000 வீதம் கடந்த ஒன்பது மாதங்களாக மணல் விற்பனை செய்யப்பட்டு வந்தது. பொதுமக்களும் மற்றும் கட்டடப் பணியாளர்களும் கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்தின் காரணமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ஆய்வு செய்து, மேற்கண்ட விலை விகிதமான ரூபாய் 1000—க்கு பதிலாக 19–6–2004 முதல் ரூபாய் 600 என்ற விலையில்

விற்பனை செய்ய ஆணையிட்டார்கள். இதன் மூலம் அரசுக்கு 24–7–2004 வரை கிடைத்துள்ள வருவாய் ரூபாய் 168 கோடியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

உலக வங்கி உதவியுடன் ரூபாய் 57.37 கோடி செலவில் கடந்த 1995—ல் ஆரம்பிக்கப்பட்ட "நீரியியல் திட்டம்" தொகுப்பு I–ஐத் (Hydrology Project–I) தொடர்ந்து, நீரியியல் திட்டம் தொகுப்பு இரண்டினை ரூபாய் 25.27 கோடியில் வரும் ஆறு ஆண்டுகளில் செய்து முடிக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியால், உலக வங்கி நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தின் நிலத்தடி நீர்வளத்தினைப் பாதுகாக்கவும், வரம்பு மீறி நிலத்தடி நீர் எடுப்பதைத் தடுத்து நெறிமுறைப்படுத்தி உரிய முறையில் நிலத்தடி நீரை மேலாண்மை செய்ய நில நீர்ச் சட்டம் 2003, மாண்புமிகு அம்மாவின் ஆணையின்படி உருவாக்கப்பட்டு, இந்தச் சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாட்டில், பொதுப் பணித் துறையின் பராமரிப்பின்கீழ் வரும் 10,540 ஏரிகளில், பாசன அமைப்பின்கீழ் வரும் 5,290 ஏரிகளையும், 5,250 வானம் பார்த்த ஏரிகளையும் தூர்வாரிப் புனரமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இதனைத் தொடர்ந்து தற்போது தமிழகத்தில் 17 மாவட்டங்களில் 157 ஏரிகளைத் தூர் வாரிப் புனரமைத்து மேம்படுத்த ரூபாய் 48.43 கோடி நபார்டு நிதி உதவி பெறப்பட்டுள்ளது. மேலும் 300 ஏரிகளை நபார்டு நிதி உதவியுடன் தூர் வாரிப் புனரமைத்து மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"மழைநீர் உயிர்நீர்" என்ற கருத்தின்படி அகில உலகத்திலேயே முன்னோடித் திட்டமாக மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள். பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 32313 அரசுக் கட்டடங்களில் ரூபாய் 25 கோடி ஹட்கோ நிதி உதவியுடன் மழை நீர் சேகரிப்புத் திட்டங்கள் முடிக்கப்பட்டன. தமிழகத்தின் பாசன அமைப்புகளிலுள்ள கட்டுமானங்களிலும் மழை நீர் சேகரிப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.





2003–2004 நிதியாண்டில் ரூபாய் 207 கோடி செலவில் புதிய கட்டடப் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டன. தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டடங்களைப் பராமரிப்பதற்காக 2003–2004 நிதியாண்டில் ரூபாய் 89 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசினால் கட்டப்படும் அரசு கட்டடங்களை நவீனத் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் அடிப்படையில் தரமாகவும், உறுதியாகவும், அழகாகவும் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தக்க ஆலோசனை வழங்கியுள்ளார்கள். இதன் பலனாக, ஸ்டேன்லி மருத்துவமனையின் விரிவாக்கம், 200 சுகாதார மையங்கள், சென்னையில் உயர் நீதிமன்ற நூலகக் கட்டடம், மதுரையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளைக் கட்டடம், மாநில சட்ட உதவி மையம், நீதிபதிகளுக்கான அகாடமி, 34 கூடுதல் தியணைப்பு மையங்கள் மற்றும் சுற்றுலா மாளிகைகள், புது தில்லியில் தமிழ்நாடு விருந்தினர் மாளிகை, தமிழகத்தின் பல பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்கு 114 தங்கும் விடுதிகள், தமிழகத்தின் 29 மாவட்டங்களில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், கும்பகோணத்தில் கலை அரங்கம் ஆகிய பணிகளுக்கு நிதி ஒதுக்கி பணிகள் தரமாகவும், உறுதியாகவும் செய்து முடிக்கப்பட்டன.

2004–2005 ஆம் நிதியாண்டில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 180 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த நிதியாண்டில், தமிழக அரசுக் கட்டடங்களைப் பராமரிக்க வேண்டி ரூபாய் 101 கோடி நிதி ஒதுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

*பிற்பகல் 1–25*

2004–2005 ஆம் ஆண்டில் சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் கன்னியாகுமரி, வேலூர், தேனி மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டுதல், தமிழகத்திலுள்ள 5 மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் வசதிகள் ஏற்படுத்துதல், 11–வது நிதிக் குழு பரிந்துரைப்படி வருவாய் மற்றும் பிற துறை அலுவலர்களுக்குக் கட்டடம் கட்டுதல், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கட்டடம், மதுரை மாட்டுத்தாவணி விற்பனை வளாகம், சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலைய கட்டடம், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும்

பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்குவதற்கு 100 கூடுதல் விடுதிகள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவற்றிற்கு முன்னுதாரணமாக, மதுரையில் சென்னை உயர் நீதிமன்றக் கிளைக் கட்டடம் இந்தியாவிலேயே ஒரு தரமான, உறுதியான கட்டடமாகக் கட்டி முடிக்கப்பட்டு 24–07–2004 அன்று திறந்து வைக்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் இந்தக் கட்டடத்திற்குத் தேவைப்பட்ட நிதியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனுக்குடன் ஒதுக்கீடு செய்து சீரிய நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, இந்த மதுரை உயர் நீதிமன்றக் கிளைக் கட்டடம் ஒரு உலகத்தரம் வாய்ந்த வரலாற்றுச் சின்னமாக உருவாகியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடத்தை மனமுவந்து தமிழக மக்களுக்கு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து நெடுஞ்சாலைத் துறை. ஒரு மாநிலத்தின் வேகமான வளர்ச்சிக்குத் தேவையான மற்றும் தரமுள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருப்பது அவசியமாகும்.

நகர்ப்புறங்களை இணைக்கும் விதமாகவும், வேளாண்மை மையங்கள் மற்றும் கிராமப்புறக் குடியிருப்புக்களை இணைக்கும் விதமாகவும், தமிழ்நாட்டில் விரிவான சாலைக் கட்டமைப்பு அமைந்துள்ளது. நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்து அமைப்பில், குறிப்பாக நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய மேம்படுத்தப்பட்ட சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. ஆண்டுதோறும் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையால் சாலை ஓடுதளத்தின் நீடித்த தன்மை குறைந்து, சாலைகள் விரைவிலேயே பழுதடையும் நிலை உருவாகியுள்ளது. இதனை எதிர்கொண்டு சமாளிக்கும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் அளவை அதிகமாக உயர்த்தி, சாலைப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.



2003–04 ஆம் ஆண்டு, திட்டப் பணிகளுக்கு ரூபாய் 977 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூபாய் 259 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 1236 கோடியை அரசு ஒதுக்கீடு செய்தது.

1) தலைமைப் பொறியாளர், (பொது). தலைமைப் பொறியாளர், பொது அலகில் திட்டப் பணிகளின்கீழ், 2003–04 ஆம் ஆண்டில் 15 பாலப் பணிகளும், 2074 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், ரூபாய் 2060 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் பணி முன்னேற்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திட்டம் சாராப் பணிகளின்கீழ் 5550 கிலோ மீட்டர் சாலைகளில் ரூபாய் 313 கோடி செலவில் ஓடுதளம் புதுப்பிக்கப்பட்டது.

தலைமைப் பொறியாளர் (நபார்ட் வங்கி மற்றும் கிராமச் சாலைகள்) அலகில், திட்டப் பணிகளின்கீழ் 2003–04 ஆம் ஆண்டில், 137 பாலப் பணிகளும், 1130 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், ரூபாய் 19.5 கோடி செலவில் முடிக்கப்பட்டது. மீதமுள்ள பணிகள் பணி முன்னேற்றத்தில் உள்ளன.

தலைமைப் பொறியாளர் (திட்டம்–I) அலகில், திட்டப் பணிகளின்கீழ், 2003–04 ஆம் ஆண்டில், 12 பாலப் பணிகளும், 222 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், ரூபாய் 15.9 கோடி செலவில் முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில், 2003–04 ஆம் ஆண்டில், ரூபாய் 19 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2003–04 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின்கீழ் நெடுஞ்சாலைத் துறையில் உள்ள அனைத்து அலகுகளிலும் மொத்தம் 164 பாலங்கள் மற்றும் சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும், 3426 கிலோ மீட்டர் சாலைகள் மூலப் பணிகள் மூலம் மேம்படுத்தப்பட்டன. மீதமுள்ள பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

2004–05 ஆம் நிதி ஆண்டில், திட்டப் பணிகளுக்கு ரூபாய் 1197 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூபாய் 422 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 1619 கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 383 கோடி அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைமைப் பொறியாளர் (பொது) அலகில் 2004–05 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின்கீழ் 265 பாலப் பணிகளுக்கும், 2542 கிலோ மீட்டர் சாலைப் பணிகளுக்கும் ரூபாய் 334 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டம் சாராப் பணிகளின்கீழ் 5241 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்த 407 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தலைமைப் பொறியாளர். (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) அலகில் 2004–2005 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின்கீழ் 114 பாலப் பணிகளுக்கும் 1370 கிலோ மீட்டர் சாலைப் பணிகளுக்கும் ரூபாய் 186 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தலைமைப் பொறியாளர் (திட்டம்) முன் அலகில் நடப்பாண்டு திட்டப் பணிகளின்கீழ் 48 பாலப் பணிகளுக்கும் 323 கிலோ மீட்டர் சாலைப் பணிகளுக்கும் ரூபாய் 173 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு ரூபாய் 504 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து அலகுகளிலும் திட்டப் பணிகளின் கீழ் மொத்தமாக 425 பாலங்கள் கட்டி முடித்திடவும் 4,466 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்திடவும் திட்டம்சாராப் பணிகளின்கீழ் 5,000 கிலோ மீட்டர் சாலைகளின் ஓடுதளம் புதுப்பிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 1042 கிலோ மீட்டர் நீளமுள்ள 140 சாலைப் பணிகள் மற்றும் 50 பாலப் பணிகள் அடங்கிய ரூபாய் 152 கோடி திட்டத்தைச் செயலாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இப்பணிகளில் இதுவரை 85 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். மேலும், நடப்பு நிதியாண்டில் ரூபாய் 60.55 கோடி மதிப்பீட்டில் 425 கிலோ மீட்டர் சாலை மேம்பாடு மற்றும் 17 பாலங்கள் கட்டும் பணிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உலக



வங்கியின் ரூபாய் 2,160 கோடி நிதியுதவியுடன் தமிழகத்தில் முக்கியமான மாநிலச் சாலைகளாகவும் இணைப்புச் சாலைகளாகவும் அதிக அளவில் வாகனங்கள் பயன்படுத்தக்கூடிய சாலைகளாகவும் உள்ள சாலைகளை உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் வடமேற்கே உள்ள ஆற்காடு முதல் தென்கிழக்கே உள்ள திருவாரூர் வரையும் கிழக்குக் கடற்கரையில் உள்ள நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரை உள்ள 727 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்தவும் 12 நகரங்களுக்குப் புற வழிச் சாலைகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் தொடங்கப்படும் நிலையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள 2000 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளைக் காலமுறை பராமரிப்புப் பணிகளின்கீழ் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 215 கோடி ரூபாய் மதிப்பில் 700 கிலோ மீட்டர் சாலைப் பணி ஒப்பந்தங்கள் இறுதியாக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹட்கோ வங்கியின் நிதியுதவியுடன் 36 சாலை மேம்பாலங்கள், கீழ்ப் பாலங்கள் கட்ட நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 30 பணிகளுக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 26 பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் தொடக்க நிலையில் உள்ளன. மேலும் நடப்பு ஆண்டின் இரயில்வே பணிகள் திட்டத்தில் 20 சாலை மேம்பாலம் மற்றம் கீழ்ப் பாலம் பணிகளைச் சேர்க்க இரயில்வே துறைக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள். தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3850 கிலோ மீட்டர் ஆகும். 2003–2004 ஆம் ஆண்டில் 48 கிலோ மீட்டர் சாலைகளின் ஓடுதளம் மேம்படுத்தும் பணிகள் 7 சிறு பாலங்கள் கட்டும் பணிகள் மற்றும் 121 கிலோ மீட்டர் சாலைகளை உறுதிப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளின்கீழ் ரூபாய் 130 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை அலகின்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

கட்டுப்பாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை உரிய தரத்திற்கு மேம்பாடு செய்ய ரூபாய் 1300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட பிரேரணைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமச் சாலைகள். ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்திலுள்ள மண் சாலைகளைத் தரம் உயர்த்தி தார்ச் சாலைகளாக மாற்றுகின்ற பணியினை கிராமச் சாலைகள் பிரிவு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 59 கோடி மதிப்பீட்டில் 263 கிராமங்களுக்குப் புதியதாக 409 கிலோ மீட்டர் சாலைகள் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் 128 கிலோ மீட்டர் பேருந்து தட சாலைகளை ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சாலைகளைப் பராமரிக்கும் அவசியத்தைக் கருத்தில் கொண்டு 2002–2003 ஆம் ஆண்டில் ரூபாய் 90 கோடி மதிப்பில் 1685 கிலோ மீட்டர் சாலைகளையும் 2003–2004 ஆம் ஆண்டில் ரூபாய் 180 கோடி மதிப்பில் 3864 கிலோ மீட்டர் சாலைகளையும் 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 307 கோடி மதிப்பில் 5241 கிலோ மீட்டர் சாலைகளையும் பழுது பார்க்கும் சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வந்த நடவடிக்கைகளின் மூலமாக நெடுஞ்சாலைத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளை மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை, முந்தைய ஆட்சிக் காலத்தில் அனைத்துத் திட்டங்களின்கீழ், ஒட்டுமொத்தமாக, 23,125 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டன. ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றபின், இதுநாள்வரை, மொத்தம் 26,120 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் முந்தைய அரசு செய்த சாதனையை 3 ஆண்டுகளிலே மாண்புமிகு அம்மாவின் அரசு செய்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் நடப்பு ஆண்டிற்குக் கூடுதலாக ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில்



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

5,000 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறை; பதிவுத் துறையினுடைய செயல்பாடுகள்; 140 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் பதிவுத் துறை, தொன்மையான துறைகளில் ஒன்றாகும். மற்ற துறைகளைப் போல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதிவுத் துறையிலும் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு சிறந்த துறையாக உருவாவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அதன் பயனாக இத்துறை தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் முன்னிலை வகிக்கிறது. வருவாயை ஈட்டித் தருவதில் மூன்றாவது பெரிய துறையாக விளங்குகிறது. 2003–04 ஆம் நிதி ஆண்டில் கிரய ஆவணங்கள் போன்ற ஆவணங்களுக்கு விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பினும், 15.93 இலட்சம் ஆவணங்கள் பதிவு செய்து, 1732.91 கோடி வருவாயை ஈட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பதிவுத் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் செயல்படும் இத்துறையில் 9 மண்டலங்களும் 50 பதிவு மாவட்டங்களும், 558 சார் பதிவாளர் அலுவலகங்களும் உள்ளன. மாநிலத்தில் உள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களையும் 100 சதவீதம் துறைத் தணிக்கை செய்யும்பொருட்டு, 45 தணிக்கைக் குழுக்கள், ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன.

ஆவணங்களைப் பதிவு செய்வது மட்டுமின்றி திருமணப் பதிவுகள், சங்க மற்றும் சீட்டுப் பதிவு செய்தல் ஆகிய பணிகளையும் இத்துறை பொதுமக்களுக்கு ஆற்றி வருகிறது. பல்வேறு நல்நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்படும் சங்கங்கள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. 30–6–2004 வரை 1,20,314 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டத்தின்கீழ் 4,38,131 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பச் செயல்பாடுகள். இத்துறையில் 350 பதிவு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்ளைத் தகவல் தொழில்நுட்ப வசதியுடன் விரைவாகப் பரிசீலித்திட ஸ்டார் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தகவல் தொடர் வழியான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக இத்துறை தனது சேவைத் தரத்தை

பல மடங்கு மேம்படுத்தியுள்ளது. இதனால் சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப் பதிவை ஒரு மணி நேரத்திற்குள் முடித்திடவும், வில்லங்கச் சான்றுகளை 5 மணித் துளிகளில் பெறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

REGINET என்பது பதிவு அலுவலகங்களை இணைக்கும் தனிப்பட்ட ஒரு வலைப்பின்னல் ஆகும். இந்த இணைப்பின் பலனால் எந்த ஒரு அலுவலகத்தின் தகவல்களையும் பிற அலுவலகங்களிலும் பார்க்கலாம். குறிப்பாக ஒரு சொத்தின் வில்லங்கச்சான்று பற்றிய தகவல்கள் வேறு அலுவலகங்களிலும் பார்க்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியால் இதர சான்றுகள், வடிப்புகளையும் எந்த ஒரு அலுவலகத்திலும் பொது மக்கள் பெறலாம். ஆவணதாரர்கள் அருகிலுள்ள சார் பதிவகத்திற்குச் சென்று பதிவுப் பணி தவிர இதர சேவைகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இணைய தளம். இணைய தளம் வழியாக வில்லங்கச் சான்று பெற மனுச் செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் அளிக்கப்படும் தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, வில்லங்கச் சான்று தயார் நிலையில் வைக்கப்படுகிறது. மனுதாரர்கள் தேவையான கட்டணத்தை அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி, சான்றினை உடன் பெறலாம் அல்லது வில்லங்கச் சான்று மனுதாரரின் வீட்டிலேயே கோரிக்கைப்படி கூரியர் சேவை வழி, உரிய கட்டணம் மற்றும் அனுப்புகைச் செலவுகள் வசூலிக்கப்பட்டு வழங்கப்படும். இதுபோன்றே, சான்றிட்ட நகல்கள், திருமணச் சான்றிதழின் வடிப்பு மற்றும் சங்கம், சீட்டு சம்பந்தப்பட்ட விவரங்களை வீட்டிலேயே இண்டர் நெட் மூலம் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–40

துறையின் தனிப்பட்ட இணைய தளத்தில் பதிவுச் செயல்பாடுகளை வெளிப்படையாக்கும் நோக்கத்துடன், குறிப்பாக அனைத்துப் பகுதிகளிலும் வழிகாட்டு மதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. பொதுவாக தகவல் மட்டுமின்றி பதிவு நடைமுறை விவரங்கள் பொதுப் பயன்பாடு படிவங்கள் மற்றும் ஆதி ஆவணப் படிவங்கள் ஆகியவை இத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெற அளிக்கப்பட்டுள்ளன. மாவட்டப் பதிவாளரால் நாளது வரையில் வழங்கப்பட்ட சீட்டுகளின் முன் அனுமதி ஆணை விவரங்கள் இந்த இணைய தளத்தில் அளிக்கப்பட்டுள்ளன. இதனைச் சரி பார்த்து, தாங்கள் சேர உத்தேசித்திருக்கும் சீட்டு



உண்மையானதுதானா என்பதைப் பொதுமக்கள் உறுதி செய்து கொள்ளலாம். கணினிமயமாக்கப்பட்ட அனைத்து சேவைகளும் உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்பதையும், பொதுமக்கள் இணையதளத்தில் அளிக்கும் மனுக்கள் உடன் பரிசீலிக்கப்பட்டு சான்றிதழ் உடனுக்குடன் வழங்கப்படுகின்றனவா என்பதையும் துறை தலைமை அலுவலர்களுக்கும் REGINET வழி கண்காணித்து வருகின்றது. மீதம் இருக்கும் 258 அலுவலகங்களையும் கணினிமயமாக்கல் மற்றும் சொத்துரிமை, பெயர் மாற்றங்கள், வருவாய்ப் பதிவேடுகளை உடனுக்குடன் பதிவு செய்ய ஏதுவாக மாநிலம் முழுவதும் இணைப்பு வசதி ஏற்படுத்தல் ஆகியவை நடைபெற்று வருகின்றன.

முத்திரைத் தீர்வைக் குறைப்பு – மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிரய ஆவணங்களுக்கான தீர்வையைப் பொதுமக்கள் நலன் கருதி 13 சதவிகிதத்திலேயிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்க ஆணையிட்டார்கள். இருப்பினும், 2003–2004 ஆம் நிதியாண்டில் அரசின் வருமானம் கடந்த ஆண்டைவிட அதிகமாகவே உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, அடமானம், ஒத்தி மற்றும் அசல் ஆவணங்கள் ஒப்படைப்பு ஆகிய ஆவணங்களுக்குச் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வையைக் குறைத்தும், அதிகபட்ச முத்திரைத் தீர்வையை நிர்ணயித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின்படி குடும்ப உறுப்பினர்களுக்கு சொத்து மாற்றங்கள் குறித்த ஏற்பாடு, விடுதலை, பாகப் பிரிவினை மற்றும் கூட்டு நிறுவனக் கலைப்பு ஆகிய ஆவணங்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையைச் சீரமைத்து, ஒரு சதவிகிதமாகக் குறைத்திடவும் அதிகபட்ச வரையறையை நிர்ணயம் செய்திடவும், உரிய சட்டத் திட்டங்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றப்பட உள்ளன. இதனால் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே சொத்துரிமை குறித்து ஒரு தெளிவு ஏற்படும். மேலும் ஆவணங்களின் பதிவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் குத்தகை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையைச் சீரமைக்க சட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

வழிகாட்டு மதிப்பு சீரமைத்தல்; தற்போது வழிகாட்டு மதிப்பு சில இடங்களில் சந்தை மதிப்புக்கு மாறுபட்டுள்ளது. அதைச் சீரமைக்கும் நோக்குடன், மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவிலான அலுவலர்கள் குழு அமைத்து விரைவில் வழிகாட்டு மதிப்பு சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

போலி முத்திரைத்தாள்கள் புழக்கத்தைத் தடுத்தல்; பதிவுத் துறையில் போலி முத்திரைத்தாள்கள் புழக்கத்தைத் தடுத்திட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முத்திரைத்தாள்களின் உண்மைத் தன்மையை அறிந்திட 2002 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் புற ஊதா விளக்குகள் ultra-violet lamps வழங்கப்பட்டுள்ளன. ஆவணங்களை வெள்ளைத் தாள்களில் எழுதிச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையைப் பணமாகக் கருவூலச் செலுத்துச் சீட்டு, வரைவோலை வழி செலுத்திட வழி வகுக்கப் பட்டுள்ளது. இது குறித்துப் பொதுமக்கள் அறிந்திட அரசு விளம்பரமும் செய்துள்ளது. முத்திரைத் தீர்வையைச் செலுத்த ஒரு மாற்று வழியாக franking என்னும் முறையை ஏற்படுத்த பரிசீலிக்கப்படுகிறது. பொதுமக்களுக்கு ஆவணப் பதிவிற்குத் தேவைப்படும் முத்திரைத்தாளின் முகமதிப்பு ரூபாய் 100–க்குள் இருக்குமாறு வரையறுக்கப்பட அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதித் தொகையை வங்கிகளில் செலுத்திடவும் வழிவகை செய்யப்படவுள்ளது.

முத்திரைத்தாள் விற்பனையாளர் விற்பனைக் கணக்கு கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படுகின்றன. இதில் முறைகேடுகள் காணப்படின் சம்பந்தப்பட்ட முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமத்தை ரத்து செய்வதுடன் அல்லாமல், அவர்கள் மீது குற்ற வழக்குகள் தொடரப்படுகின்றன. துறையின் மூலம் மேற்கொண்டு ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் குறித்து 17 குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இது தவிர மாநில குற்றப் புலனாய்வுத் துறையின் மூலம் தொடரப்பட்ட இரண்டு வழக்குகள் C.B.I.—க்கு மாற்றப்பட்டு புலன் விசாரணையில் உள்ளன. விசாரணை முடிவில் சம்பந்தப்பட்டவர்கள் மீது பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலி முத்திரைத்தாள்கள் புழக்கத்தைத் தடுக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. எனவே பொதுமக்கள் இது குறித்து அச்சப்படத் தேவையில்லையெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை – மாநில அரசின் பல்வேறு பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்தும் துறைகள் அனைத்திற்கும் முன்னோடியான துறை வருவாய்த் துறை. நில வரி வசூல் செய்வது, அரசுக்குச் சேரவேண்டிய பல்வகையான நிலுவைகளை வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூல் செய்வது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, மாவட்ட நிர்வாகத்தை நடத்திச் செல்வது ஆகிய முக்கிய பங்கினை



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இத்துறை வகித்து வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறை மூலம் மக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்கள் செயல்பாடு இருக்க வேண்டும் என்று பல்வேறு வகையில் சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார்கள்.

பிற்பகல் 1–45

பொது நிர்வாகம், நில மேலாண்மை, பொதுவிநியோகம் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் வழங்குதல் உள்ளிட்ட பணிகளுடன், பொதுத் தேர்தல்கள் நடத்துதல், ஊராட்சித் தேர்தல்களை நடத்துதல். மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, வறட்சி, புயல் மற்றும் வெள்ளம், நிலச் சரிவு, நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்பை மதிப்பிடுதல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்தல் போன்ற முக்கிய பணிகளையும் வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது.

வருவாய் நிர்வாகத் துறை; வருவாய் நிர்வாகத் துறையின்கீழ் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல், சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

நில நிர்வாகத் துறை; நில நிர்வாகத் துறையின்கீழ் நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டுமனை ஒப்படை, நிலம் கையகப்படுத்துதல், நிலக் குத்தகை, நிலப் பட்டாக்கள் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து நிலம் சம்பந்தப்பட்ட பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

நில அளவைப் பதிவேடுகள் துறை; நில அளவைப் பணிகள், புலப்படங்கள் தயாரித்தல், நிலப் பதிவுருக்களைச் சரிவர பராமரித்தல் ஆகியவை இத்துறையின் பணிகளாகும். 'தமிழ் நிலம்' என்னும் பெயரில் நிலப் பதிவேடுகளைக் கணினிமயமாக்கும் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது. 'அ' பதிவேடு மற்றும் சிட்டா–10 ஆகிய நிலப் பதிவுருக்களின் நகல் கணினி மூலம் தற்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் இதுவரை சுமார் 3.25 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. இத்துறையைக் கணினிமயம் மூலம் நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலச் சீர்திருத்தத் துறை; நிலச் சீர்திருத்தத் துறையின்கீழ் நிலச் சீர்திருத்தம், குடிவாரச் சட்டம், வேளாண்மைப் பயன்பாட்டுக்காக உபரி நிலங்களை ஒப்படை செய்தல், நகர்ப்புற நில வரி வசூலித்தல் ஆகிய பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகின்றன. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்புற நில வரி குறித்த பணிகள் இயக்குநரால் கவனிக்கப்பட்டு வருகின்றன. நிலச் சீர்திருத்தத் துறை ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் நிலச் சீர்திருத்த இயக்குநர் மற்றும் நகர்ப்புற நில வரி இயக்குநர் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

மாவட்ட நிர்வாகம். நமது மாநிலத்தில் தற்போது 30 மாவட்டங்கள் உள்ளன. அவை 73 கோட்டங்களையும், 206 வட்டங்களையும் உட்கொண்டதாக உள்ளன. மாநில அளவில் 30 மாவட்ட வருவாய் அலுவலர்கள், 385 துணை ஆட்சியர்கள், 1,244 வட்டாட்சியர்கள், உள்ளிட்ட மொத்தம் 55,513 அலுவலர்கள், பணியாளர்கள் வருவாய்த் துறையில் பணியாற்றி வருகிறார்கள்.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நில நிர்வாகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளுடன் பொது நிர்வாகம், வளர்ச்சிப் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர்களும், கோட்டாட்சியர்களும், வட்டாட்சியர்களும், கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் மாவட்ட நிர்வாகத்தின் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணம்; தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்ததாலும், கர்நாடக அரசு நமக்குத் தரவேண்டிய தண்ணீரைத் தர மறுத்ததாலும் கடும் வறட்சி ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்திட வேண்டும் என்று தாயுள்ளத்தோடு பலவித நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். மாநிலத்தில் வறட்சியின் காரணமாக நிலவி வரும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறையினைச் சமாளிக்கும் பொருட்டு 2003 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 31-3-2004 வரை 181.37 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில் வழங்கப்பட்டுள்ளது.



இந்த நிதிநிலைக்குப்பின் சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக 80 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி நிதியொதுக்கீட்டின் மூலம் சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 18,076 குடிநீர் வழங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 17,381 பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மீதம் உள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நடப்பு ஆண்டிலும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க இதுவரை 124.74 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இதில் சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட 112 கோடி ரூபாயும் அடங்கும். சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 2002–2003 ஆம் ஆண்டின் குறுவை மற்றும் சம்பா காலங்களில் நிலவிய வறட்சி காரணமாக பயிர் செய்யப்பட்ட பரப்பில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் பயிர் உற்பத்தி இழப்பை அடைந்த விவசாயிகளுக்கும், தங்கள் நிலங்களைப் பயிரிட முடியாமல் விட்ட விவசாயிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி ரூபாய் 240 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது. இதனால் 28,93,268 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக 75.92 இலட்சம் ரூபாயும், வன விலங்குகளின் குடிநீர்த் தேவைக்காக வனத் துறைக்கு 76 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களில் கால்நடைத் தீவனத்தை உற்பத்தி செய்யும்பொருட்டு 2 கோடி ரூபாயும், 6 மாவட்டங்களில் உள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க 1.62 கோடி ரூபாயும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மீதமுள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த 16.60 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது.

பிற்பகல் 1–50

**சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் வேலைக்கு உணவுத் திட்டம்:** வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை 3.75 இலட்சம் டன் அரிசி பயன்படுத்தப்பட்டு, 93285 பணிகள் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 90 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்கள் பயனடைந்துள்ளனர். இதன்மூலம் சுமார் 8 கோடி மனித வேலை

நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழகத்தில் நிலவிவரும் கடுமையான வறட்சியைச் சமாளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள், மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து 1584 கோடி ரூபாய் நிவாரண நிதியும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்காகக் கூடுதலாக 10.8 இலட்சம் டன் அரிசியும் வழங்கக் கோரும் விரிவான அறிக்கை ஒன்றினை 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அனுப்பி வைத்தார்கள். அதன்படி மத்திய அரசு, தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து 292.95 கோடி ரூபாயும், 3.04 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் ஒதுக்கீடு செய்தது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு ஒதுக்கிய இந்த அரிசி, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வேலைக்கு உணவுத் திட்டப் பணிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்கீழ் வேலைக்கு வருபவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்காக 57.25 கோடி ரூபாய் நிதி வழங்கி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதுவரை 36510 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 1.66 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 2.45 கோடி மனித உழைப்பு நாட்களுக்கான பணிகள் நடைபெற்றுள்ளன.

***நிலவரி இரத்து செய்தல்:*** கடந்த 3 ஆண்டுகளாகப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, மாநிலத்தில் கடும் வறட்சி நிலவுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதன் காரணமாக 1412 பசலியில் பட்டாதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்படவேண்டிய நிலுவை மற்றும் அது தொடர்பான மொத்த தொகை 37.47 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. அதேபோன்று, கடந்த பசலி ஆண்டான 1413–க்கும், 60 கோடி ரூபாய் நில வரி மற்றும் அதன் தொடர்பான பிற வரிகள் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

***ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்:*** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15–08–2003–ல் நடைபெற்ற 57–வது சுதந்திர தின விழாவின்போது, ஏழையெளிய மக்கள் பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் இலவச வேட்டி சேலைகளை வழங்கும் திட்ட அறிவிப்பினைச் செய்தார்கள். கடந்த காலத்தில் இலவச வேட்டி சேலைத் திட்டத்தில் 74 இலட்சம் வேட்டிகளும், 81 இலட்சம் சேலைகளும் ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்பட்டன. ஆயினும், தகுதியுள்ள ஏழையெளிய மக்கள் சிலர்



இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தனர் என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே, இம்முறை அனைத்துத் தரப்பட்ட ஏழையெளிய மக்களும் பயன்பெற வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி கூப்பன் வைத்திருந்த அனைவருக்கும் இத்திட்டத்தின்கீழ் இலவச வேட்டி சேலை வழங்கவேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அரிசி கூப்பன் வைத்திராத ஏழையெளிய மக்களும் இருக்கக்கூடும் என்பதைக் கருத்திற்கொண்டு, அவர்கள் பயன்பெறுவதற்காக சுமார் 4 இலட்சம் வேட்டிகள் மற்றும் 4 இலட்சம் சேலைகளைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்தும் ஆணையிட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதன்படி, சுமார் 1 கோடியே 11 இலட்சம் சேலைகளும், 1 கோடியே 11 இலட்சம் வேட்டிகளும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்படி, 2004 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி, 1,05,27,097 வேட்டிகளும், 1,06,34,977 சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

01–04–1993–க்குப் பிறகு புதியதாக உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க, பதினோராவது நிதிக் குழு மானியமாக 44 கோடி ரூபாய் அளித்துள்ளது. அதற்கு இணையான தொகையை மாநில அரசும் தனது பங்காக அளித்துள்ளது. இந்த நிதியைக் கொண்டு மொத்தம் 251 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டதில் 209 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 42 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–55*

***பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை:*** பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையானது மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் ஏற்படுத்தப்பட்டு 6–11–1976 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்துறை அடிப்படையில் அறிவுரை வழங்கல், சட்டப்பூர்வமானவை மற்றும் நிருவாகம் போன்ற முக்கிய பணிகளை ஆற்றி வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்

தேர்வாணையம், தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஆகியவை இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. அரசுப் பணியாளர்கள் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்புச் சங்கங்களின் கூட்டத்தை நடத்துவது குறித்தும் இத்துறை கவனித்து வருகிறது. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைப்பது என இவ்வரசு முடிவு எடுத்துள்ளது. இதற்கான சட்டமுன்வடிவு மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அரசின் ஆய்வில் உள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோப்புகள் முடிக்கும் வாரம் நடத்தித் தேங்கியுள்ள கோப்புகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோப்புகளின் தேக்க நிலையையும் தாமதத்தையும் தவிர்க்கும்பொருட்டு 'நிலை தாண்டுதல்' முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒற்றைக் கோப்பு முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு துறையும் மக்கள் சாசனம் தயாரிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. அனைத்துப் பணி விதிகளையும் கணினிமயமாக்கி தகவல் வங்கி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததன் விளைவாக அரசு ஊழியர்கள்மீது வழங்கப்பட்டிருந்த அனைத்துத் தண்டனைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் பெருந்தன்மையுடன் ரத்து செய்தார்கள். அவர்கள்மீது நிலுவையில் இருந்த அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் திரும்பப் பெற ஆணையிட்டுள்ளார்கள். இதன் விளைவாகப் பதவி உயர்வு மறுக்கப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வும் அவற்றின் பயன்களும் வழங்கப்படுகின்றன.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம்:** ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தை மின் ஆளுகையின் வரம்பிற்குள் கொண்டுவரும் பொருட்டு, முதற்கட்டமாக 2004–2005. ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் இணையதளம் மற்றும் மென்பொருள் உருவாக்குதல், எல்சிடி. படப் பெருக்கி, உயர்நிலை. வருடி. மற்றும் மடிக் கணினி வாங்குவதற்காக ரூபாய் 29.97 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**பயிற்சி:** பல்வேறு நிலைகளிலுள்ள அரசு அலுவலர்களுக்கு நிருவாகத் தொடர்பான பயிற்சிகளை அண்ணா மேலாண்மை நிலையம் அளித்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு அகில இந்திய குடிமைப் பணி தேர்வு. எழுதுவதற்கு அண்ணா நகரில்



உள்ள அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி நிலையத்தில் சீரிய முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய பணியாளர்கள் தேர்வு மையத்தால் 2003–ல் நடத்தப்பட்ட குடிமைப் பணி தேர்வில் தமிழ்நாட்டிலிருந்து 54 நபர்கள் குடிமைப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 45 நபர்கள், அண்ணா நகரில் உள்ள அரசுப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்களாவார்கள். இவர்களில் 15 நபர்கள் இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2003 ஆம் ஆண்டில் இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களில் அகில இந்திய அளவில், தமிழ்நாடு இரண்டாம் இடத்தை வகிக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பயிற்சி மையத்தில் இதுவரை பெற்ற தேர்வு முடிவுகளில் 2003 ஆம் ஆண்டின் தேர்வு முடிவே சிறப்பான முடிவாகும்.

ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில், சென்னை பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் உள்ள கட்டட வளாகத்தில் அண்ணா மேலாண்மை நிலையம் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான பயிற்சி நிறுவனங்களை ஒரே வளாகத்தில் கொண்டு வருவதற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுத் துறை; மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அச்சுத் துறையை மேம்படுத்துவதையும், நவீனமயமாக்குவதன் மூலம் அதன் பலன் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென அச்சகங்களை நவீனப்படுத்துவதையும், தொழிலாளர்கள் நலன் பேண வேண்டும் என்பதையும் தனது எண்ணமாகக் கொண்டு பாடுபட்டு வருகிறார்கள். அச்சுத் துறையினை நவீனமயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி 1992 முதல் அரசு அச்சகங்களில் முதன்முதலாக Web–offset அச்சுமுறை நடைமுறைக்கு வந்துள்ளது. 2003–2004–இல் அரசு மைய அச்சகத்தில் ரூ.43 இலட்சம் செலவில் இருவண்ண Sheet–fed Offset அச்சு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்துறையில் அரசால் வெளியிடப்படும் வெளியீடுகள் மூலமும், விளம்பர வெளியீடுகள் மூலமும் 2003–2004 ஆம் நிதியாண்டில் ரூ.92 இலட்சம் அரசுக்கு வருவாயாகக் கிடைத்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை – சிறைத் துறை: குற்றவியல் நீதிமுறையின் ஓர் அங்கமான சிறைத் துறை, சிறைவாசிகளைச் சீர்படுத்தி நல்வழிப்படுத்தி, அவர்களைத் தேசிய நீரோட்டத்தில் சேர்க்க அரும்பாடுபடும் ஒரு துறையாகும். இத்துறை, இந்திய காவல் பணியைச் சார்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் தரத்தில் உள்ள முதுநிலை அலுவலரால் சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது. இவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் சிறைத் துறை துணைத் தலைவர் ஒருவரும் மற்றும் சென்னை, கோவை, திருச்சி, மதுரை முதலான நான்கு சரகங்களில் சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் உள்ளனர். மத்திய சிறைகளின் நிர்வாகம் மற்றும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட கிளைச் சிறைகள் முதலியன சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. சிறைத் துறையில் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையில் நன்னடத்தைப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவில் 12 வட்டார நன்னடத்தை அலுவலர்களும், 96 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர்.

சிறைவாசிகளின் நலன் மற்றும் அவர்களது புனர் வாழ்வில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் சிறைவாசிகளுக்கும், சிறைப் பணியாளர்களுக்கும் பல வசதிகளைச் செய்து கொடுத்து வருகின்றார்கள். மிகப் பழைமை வாய்ந்த சென்னை மத்திய சிறையின் கட்டடங்கள் சிதைந்து மோசமான நிலையிலும், ஆரோக்கியமற்ற சூழ்நிலையிலும் உள்ளது. எனவே, தற்போதுள்ள சென்னை மத்திய சிறையினை புழலுக்கு மாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே வளாகத்தில் பெண்களுக்கான சிறை ஒன்றை அமைக்கவும், சிறைவாசிகளுக்கான அனைத்து வசதிகளும் அடங்கிய மருத்துவமனையுடன் கூடிய நவீன சிறை வளாகம் ஒன்றை உருவாக்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்களால் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. இப்பணிகளுக்காக ரூ.77.00 கோடி அங்கீகரிக்கப்பட்டு அதற்கான பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மூலம் நடைபெற்று வருகின்றன. இந்திய சிறை வரலாற்றிலேயே முதல் முயற்சியாக பெண் சிறைவாசிகளுக்கென மகளிர் பணியாளர்களைக் கொண்டு நிர்வகிக்கும் 9 கிளைச் சிறைகள் மற்றும் மூன்று தனிக் கிளைச் சிறைகள் மகளிர் சிறைகளாக மாற்றப்பட்டுள்ளன. முழுநேரப் பணி மருத்துவ அலுவலரைக் கொண்ட சிறை மருத்துவமனைக்கு X-ray, E.C.G., இரத்தப் பரிசோதனை போன்ற மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.



சிறைவாசிகள் வெளி
சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு, தக்க மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறைக்குள் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் சுய வேலையில் ஈடுபட்டு சம்பாதிக்கும் பொருட்டு சிறையில் முறையான பயிற்சியாளர்களால் அவர்களுக்கு கோப்பான்கள் செய்தல், காலணி தயாரித்தல், சோப்பு தயாரித்தல், புத்தகக் கட்டுமானம், கோப்பு அட்டைகள் தயாரித்தல், அலுமினிய பாத்திரங்கள் தயாரித்தல், பினாயில் தயாரித்தல், முறுக்கப்பட்ட நூல் நெய்தல், நாடா மற்றும் செங்கல் தயாரித்தல், மின் பயிற்சி, தையல் கலை, நெசவு ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

எழுத்தறிவு இல்லாத சிறைவாசிகளுக்கு தேசிய எழுத்தறிவு இயக்கத்தின்கீழ் ஆசிரியர்களைக் கொண்டு தொடக்கக் கல்வி வழங்கப்படுகிறது. தொலைதூரக் கல்வித் திட்டத்தின் மூலம் உயர் கல்வியும், குறுகிய காலப் பயிற்சி பெற விரும்பும் சிறைவாசிகளுக்கு அரசு செலவில் அனுமதியும் வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் நற்பணிப் பதக்கம், வீரப் பதக்கம் மற்றும் இந்திய குடியரசுத் தலைவரின் நற்பணிப் பதக்கங்களும் வழங்கப்படுகின்றன. பணியில் இருக்கையில் வீரதீரச் செயல் புரிந்து மரணமடையும் மற்றும் காயமடையும் சிறைப் பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்படுகின்றது.

வீரதீரச் செயல் புரிந்து மரணமடையும் களப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியம் அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் வரை ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இரவுப் பணிபுரியும் காவலர்களுக்கு இரவு உணவும், காலைத் தேநீரும் வழங்கப்படுகிறது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறை களப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. பெண் சிறைக் களப் பணியாளர்களுக்கு, ஆண் களப் பணியாளர்களுக்கு இணையாக சீருடை அணிய வகை செய்யப்பட்டுள்ளது. சிறைப் பணியாளர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி கூடுதல் சிறைத் துறை இயக்குநர், சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்கள் மற்றும் சிறைக் கண்காணிப்பாளர்களால் காவலர்களின் குறைகள் கேட்கப்பட்டு உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

பிற்பகல் 2–05

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இந்த அரசு இது போன்ற எண்ணற்ற முன்னேற்றங்களைச் சிறைவாசிகளுக்கும் சிறைப் பணியாளர்களுக்கும் வழங்கி வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, – மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை – தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டுமென்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கமாகும். ஆயத்தீர்வை வருவாயை அதிகரிக்கவும் அதே நேரத்தில் ஏழையெளிய மக்களின் சமுதாய பொருளாதார வாழ்விற்கு எவ்வித இடையூறையும் ஏற்படுத்திவிடக்கூடாது என்பதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக உள்ளது. எனவேதான், மற்ற மாநிலங்களில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகளுடன் கள் மற்றும் சாராயம் ஆகியவை விற்கப்பட அனுமதிக்கப்பட்டாலும் இம்மாநிலத்தில் ஏழையெளிய மக்களின் உடல் நலத்திற்கு பெரும் தீங்கு விளைவிக்கும் சாராயம் மற்றும் கள் போன்றவற்றை விற்க அனுமதிப்பதில்லை என்ற கொள்கையினை அரசு தொடர்ந்து உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், கள்ளச் சாராயம் பொதுவாக ஏழையெளிய மக்களின் உடல் நலத்தையும், பொருளாதாரத்தையும் நிலைகுலையச் செய்துவிடும் என்பதால் கள்ளச் சாராயத்தை முற்றிலும் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகின்றது.

கள்ளச் சாராயத்தின் தீமைகளைப் பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அனைத்து நடவடிக்கைகளிலும் அரசுசாரா நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் தொண்டு நிறுவனங்கள் போன்ற பொது நல அமைப்புகளின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது என மாண்புமிகு அம்மாவின் அரசு கருதுகிறது. ஆகவே, கள்ளச் சாராயத்திற்கு எதிராக ஒரு இயக்கமே நடத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரத்தில் நலிந்த ஏழையெளிய குடும்பங்களின் துயரத்தை நீக்கிட கள்ளச்சாராயத்தை ஒழிப்பதுதான் ஒரே வழி என்று எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதியுடன் நம்புகிறார்கள். இதற்கென மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கூடுதல் காவல் இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. மாநிலம் முழுவதும்



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தலா ஒரு ஆய்வாளரைத் தலைமையாகக் கொண்டு 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள், அமலாக்கக் கூடுதல் காவல் கண்காணிப் பாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் நகர ஆணையர்களின்கீழ் இயங்குகின்றன. இந்த 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் சட்டம் ஒழுங்கு காவல் பிரிவினரின் மூலமாக, கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்றல் ஆகியவற்றிற்கு எதிராக தொடர்ந்து மதுவிலக்கு வேட்டைகள் நடத்தி, கள்ளச் சாராயத்தை முழுவதும் கட்டுப்படுத்த, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்டை மாநிலங்களிலிருந்து கள்ளச் சாராயம், தீர்வை செலுத்தப்படாத போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் தெளிந்த சாராவி ஆகியவை தமிழ்நாட்டில் கடத்தப்படுவதைத் தடுக்க 21 சோதனைச் சாவடிகள் பல்வேறு எல்லை மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

2003–2004 ஆம் ஆண்டில் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் 898 தீவிர மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 78.78 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயமும், 4.66 இலட்சம் கர்நாடக மற்றும் பிற மாநில சாராய பாக்கெட்டுகளும், 3.71 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவியும், 346 நான்கு சக்கர வாகனங்களை உள்ளடக்கிய 5553 மோட்டார் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. 96.05 இலட்சம் லிட்டர் சாராய ஊறலும் கைப்பற்றப்பட்டன. மேலும், 2.36 இலட்சம் கள்ளச் சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2.17 இலட்சம் மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச் சாராயத்தை அறவே ஒழித்துவிட வேண்டுமென்ற சீரிய நோக்கில் பல கடுமையான தீவிர நடவடிக்கைகளைக் காவல் துறை எடுத்து வருகிறது. உதாரணமாக, கடந்த 10–7–2004 முதல் 25–7–2004 வரையிலான 15 நாள் கால இடைவெளியில் தமிழக வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 7 மாவட்டங்களில் மட்டும் மாவட்ட காவலர்கள் மற்றும் மதுவிலக்குக் காவலர்களால் 5176 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 4902 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 103 இருசக்கர வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 10 நான்கு சக்கர வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1,45,206 லிட்டர் சாராயமும், 2,94,500 லிட்டர் ஊறலும் கைப்பற்றப்பட்டன. இதேபோன்று மாநிலம் முழுமைக்கும் கள்ளச் சாராயத்தை ஒழித்திட கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

தனியார் சில்லறை விற்பனை முறையின்கீழ் சில உரிமம் வழங்கப்பட்ட கடைகளில் மது அருந்தும் மக்களின் உடல்நலத்திற்கு ஊறுவிளைவிக்கும் போலி கள்ள மது மற்றும் தீர்வை செலுத்தப்படாத மது விற்பனை மற்றும் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் நடைபெறும் மீறல்கள் ஆகிய இரண்டுமே அரசுக்கு வருவாய் பாதிப்பை ஏற்படுத்தியது. மேலும், சுய இலாபத்திற்காக வணிகக் கூட்டணி அமைத்து பெருமளவு எண்ணிக்கையிலான கடைகள் நிரப்பப்படாது இருக்க, விண்ணப்பங்கள் வராமல் தடுக்கப்பட்டு சில்லறை விற்பனை வணிகம் முடக்கப்பட்டது. ஆகவே, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனையை முழுவதுமாக மேற்கொள்ளும் சிறப்பு உரிமையை அரசு பொது நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்குவது அவசியமென அரசு கருதியது. அவ்வாறே இந்த நோக்கத்திற்காக 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திற்கு (1937ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் – 10) திருத்தங்கள் வெளியிட்டது. 2003 ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் நாள் மாநிலத்தில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனை நடவடிக்கைகளை மொத்தமாகத் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்றுக்கொண்டது. மதுபான விற்பனை 29–11–2003 முதல் 30–6–2004 வரை 100.02 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு 2002–2003இல் இதே காலத்தில் விற்பனை அளவு 87.11 இலட்சம் பெட்டிகளாக இருந்தது. இதனை ஒப்பிடுகையில் வளர்ச்சி விகிதம் 11.82 சதவிகிதமாகும். இத்துறையின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாயைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு இதே காலகட்டத்தில் அதாவது 29.11.2002 முதல் 30.6.2003 வரை ரூபாய் 2203.24 கோடி வருவாய் கிடைத்தது. இதில் ஆயத்தீர்வை விற்பனை வரி மற்றும் இந்தக் காலத்திற்கான விகிதாச்சார உரிமைத் தொகை ரூபாய் 370.81 கோடி அடங்கியுள்ளது. ஆனால் 2003–2004 ஆம் ஆண்டு இதே காலத்தில் அதாவது 29.11.2003 முதல் 30.6.2004 வரை அரசுக்கு விற்பனை வரி மற்றும் ஆயத்தீர்வை மூலம் கிடைத்துள்ள வருவாய் ரூபாய் 2415.49 கோடியாகும். சில்லறை விற்பனையை அரசு நிறுவனம் எடுத்துக்கொண்ட இந்தக் குறுகிய காலத்தில் அரசுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய் ரூபாய் 212.25 கோடியாகும். இது 10 விழுக்காடு வளர்ச்சியாகும். இது தனி சில்லறை விற்பனை முறையில் காணப்பட்ட, பெருமளவிலான அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில், மீறல்கள் மற்றும் போலி மதுபான விற்பனை ஒழிக்கப்பட்டதால் ஏற்பட்டதாகும். இதைத் தவிர, கடைகளில் மற்றும் மதுக்கூடங்களில் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் மற்றும்



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அட்டைப் பெட்டிகளை விற்பனை செய்ததன் மூலமாகவும் தின்பண்ட விற்பனை உரிமம் மூலமாகவும் உபரி வருமானமாக ரூபாய் 14.35 கோடி கிடைக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் அதிகரிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 2–10

32,635 படித்து வேலையில்லாமல் இருந்த இளைஞர்களுக்கு TASMAC நிறுவனம் வேலைவாய்ப்பினை அளித்து உள்ளது. பணியமர்த்தப்பட்டவர்களில் ஆதிதிராவிடர் வகுப்பில் 10,030 பேர், அதாவது 31 சதவிகிதம்; மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் 8,634 பேர், அதாவது 26 சதவிகிதம்; பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் 11,454 பேர்; 35 சதவிகிதம் அடங்குவர். நிர்வாகச் சீரமைப்புகளில் பல முக்கியப் பணிகளுக்கு முறையாக நியமனமும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு கடையின் வரவு செலவுகளைத் தீவிரமாக ஆய்வு செய்வதற்குத் தணிக்கையாளர்கள் Chartered Accountants ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பொது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் பொது மக்களுக்கு இடையூறாக இருந்துவரும் கடைகள் மூடப்படுகின்றன அல்லது இட மாற்றம் செய்யப்படுகின்றன. அரசு நிர்ணயித்த விலைக்கு, தரமான கலப்படமற்ற, பாதுகாப்பான மதுபானத்தை வழங்கி தரமான சேவையின்மூலம் நுகர்வோரின் முழு திருப்தியையும் பாராட்டுதலையும் TASMAC பெற்றுள்ளது. தீர்வை செலுத்தப்படாத, போலி மதுபானங்களின் விற்பனையைக் கட்டுப்படுத்த முழுமையான பாதுகாப்பு அம்சங்கள் அடங்கிய Polyesterised Hologram-கள், ஆயத்தீர்வை வில்லைகள் தயாரிக்கப்பட்டு மதுபாட்டில்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பாமர மக்கள் கள்ளச் சாராயத்திற்கு ஆளாகாமல் தடுக்கவும், சமுதாயத்தில் சீரிய மாற்றங்களைக் கொண்டு வரவும், மாவட்டங்கள்தோறும் செயல்பட்டு வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய வேலைவாய்ப்புக் குழுக்களின் முழு ஒத்துழைப்புடன் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பது, திரை அரங்குகளில் நிழற்படங்கள் காண்பித்தல் ஆகியவற்றுடன் தெரு நாடகங்கள், கருத்தரங்குகள் மூலம் ஒரு விழிப்புணர்வு இயக்கம் தொடர்ந்து நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது.

கள்ளச் சாராயம் சம்பந்தப்பட்ட குற்றங்களில் ஈடுபடுவோரில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதும், அவர்கள் வறுமையின் காரணமாகவே இத்தொழிலில் ஈடுபடுகின்றனர் என்பதும் ஒரு கசப்பான உண்மையாகும். ஆகவே கருணை உள்ளம் கொண்ட நமது மாண்புமிகு அம்மா அவர்கள் சமுதாயத்திற்குப் பெரும் கேட்டினை விளைவிக்கும் இக்கொடிய தொழிலை வேரோடு ஒழிக்க ஒரு புதுமையான, அற்புதமான, புரட்சிகரமான மறுவாழ்வுத் திட்டத்தைத் தீட்டி உள்ளார்கள். இத்திட்டத்திற்காக 2003-2004 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூபாய் 2.28 கோடியினை ஒதுக்கியுள்ளார்கள். இதுவரை 18 மாவட்டங்களில் 416 நபர்களின் மறுவாழ்வுக்காகக் கறவை மாடுகள், ஆடுகள், சைக்கிள் கடைகள், பல சரக்குக் கடைகள் மற்றும் கோழிப் பண்ணை அமைத்தல் போன்றவற்றுக்கு ரூபாய் 58.97 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங்களில் பயனாளிகளைத் தேர்வு செய்து நிதியுதவி வழங்கப்பட உள்ளது. மேலும் மறுவாழ்வுக் குழுக்களால் 138 நபர்களின் மறுவாழ்விற்கென வங்கிகள் மூலம் நிதி திரட்டப்பட்டுள்ளது.

மாநிலத்தின் கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்க அரசுக்குத் துணை இருக்கும் வகையில் அதிக வருவாயை ஈட்டித் தருவதிலும், அதேசமயம் ஏழையெளிய மக்களின் பொருளாதார வாழ்வுக்குச் சவாலாக இருக்கிற கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதிலும், விவரம் அறியா பாமர மக்களின் உயிருக்குப் பங்கம் விளைவிக்கின்ற மெத்தனாலைக் கண்காணித்து அதுதொடர்பான உயிரிழப்புச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதிலும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை சாதனைகளைச் செய்து வருகிறது.

பிற்பகல் 2-15

அதேபோல, மதுவிலக்குக் குற்றவாளிகள் மனம் திருந்தும்போது, அவர்களுக்கு ஒரு நிலையான மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தையும் அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. குடிப் பழக்கத்தைத் தவிர்க்கும் விதமாக, மதுவிற்கு எதிரான ஒரு மாபெரும் விழிப்புணர்வு இயக்கத்தையும் நடத்தி வருகிறது. இந்த முயற்சிகள் இன்னும் அதிக உத்வேகத்துடன் எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நடப்பாண்டிற்கு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு, அறிவிப்புகளை, அறிவிப்புச் செய்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

## அறிவிப்புகள்

**பதிவுத் துறை:** பதிவுத் துறையில், மின்னணு ஆளுமை சிறப்பு முயற்சிகளுக்கு, ரூ.5 கோடியை ஒதுக்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பதிவு அலுவலகங்களில் உள்ள நிரந்தரப் பதிவேடுகளைப் பாதுகாத்திட, 300 இரும்பு அலமாரிகள் வாங்குவதற்கும், தனித் துணை ஆட்சியர் முத்திரை அலுவலகங்களுக்கு நேரடி தொலைபேசி வசதி செய்வதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.20 இலட்சம் ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள்.

**அச்சுத் துறை:** 2004-2005 ஆம் ஆண்டில், 125 KVA திறன் கொண்ட generator, fork-lift காகிதம் மற்றும் அட்டைகளைச் சோதனை செய்யும் இயந்திரங்கள், கணினிகள், fax முதலியன ரூ.30 இலட்சம் மதிப்பில் நிறுவிட மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறைத் துறை:** பெண்கள் தனிக் கிளைச் சிறை ஒன்று, திருச்சியில் இயங்கி வருகிறது. அங்குள்ள சிதிலமடைந்த கட்டடங்களைப் புதுப்பித்து, கூடுதல் கட்டடங்களைக் கட்டி, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, புதிய பெண்கள் தனிச் சிறை அமைப்பதற்கு ரூ. 9.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் கிளைச் சிறைகளை ரூ.4.72 கோடி செலவில் சுமார் 200 சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில், மாவட்டச் சிறைகளாக மாற்றியமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய சிறைகளைப் போன்று, கிளைச் சிறைகளிலும், சமையல் எரிவாயுவினைப் பயன்படுத்தவும், கிளைச் சிறைகள் மற்றும் தனிக் கிளைச் சிறைகளில் உள்ள சமையல் அறைகளை நவீனப்படுத்தவும், ரூ.1.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

பாளையங்கோட்டை, வேலூர் மற்றும் மதுரை மத்திய சிறைகளின் தற்போதைய இட வசதிகளை அதிகமாக்கும்பொருட்டு, 200 சிறைவாசிகள் அறைகள் கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும் ரூ.2.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோவை சரகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சிறைகளில் பணிபுரியும் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு மேற்கண்ட சரகங்கள் ஒவ்வொன்றுக்கும் 28 குடியிருப்புகள் வீதம் மொத்தம் 112 குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு சிறைக் கட்டடங்களில் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.2.38 கோடி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறைகளில் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.94 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பல ஆண்டுகளாக ஒரு பதவி உயர்வுகூடப் பெற முடியாமல் உள்ள 300 இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாகப் படிப்படியாகப் பணி உயர்த்தி நான்கு ஆண்டுகளில் 1200 இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல் நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு பெறும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் வேலூர் மத்திய சிறைகளுக்கு நான்கு புதிய நோயாளர் ஊர்திகள் வாங்கிட, ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மற்றும் திருச்சியிலுள்ள மகளிர் தனிச் சிறைகள் மற்றும் 8 மத்திய சிறைகளில், நோய்ப் பூச்சிக் கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்திட ரூ.3.36 இலட்சம் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வேலூர் மகளிர் தனிச் சிறையில் 50 KVA திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அறைகள், பாதுகாப்பு விளக்குகள் ஆகியவற்றுக்கு வகை செய்திட ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–20

மத்திய சிறைகளில் கையடக்க வாக்கி-டாக்கிகள் வழங்கிட ரூ.12.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

78 கிளைச் சிறைகளுக்கு தொலைபேசி இணைப்பு வழங்கிட ரூ.7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருச்சி, வேலூரிலுள்ள மகளிர் தனிச் சிறைகள் மற்றும் கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகிய இடங்களில் ஒளியச்சு நகலெடுக்கும் இயந்திரங்கள் வழங்கிடவும், திருச்சியிலுள்ள மகளிர் தனிச் சிறையில் தற்போது உள்ள மகளிர் துணைக் கண்காணிப்பாளர் பதவியிடத்தை மகளிர் கண்காணிப்பாளராகப் பதவி உயர்த்திடவும் ரூ.2.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வேலூர், திருச்சி மத்திய சிறைகள் மற்றும் மகளிருக்கான தனிச் சிறைகளில் உள்ள நூலகத்தை மேம்படுத்திட ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**வருவாய்த் துறை:** நில ஆவணத் துறையில் கணினி வழி நிர்வாகத்தில் சிறப்பு முயற்சிகள் (Special initiatives in E – Governance) மேற்கொள்ள 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கும், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கும் 7 சிருந்துகளும், 20 ஈப்புகளும் வாங்குவதற்கு 1.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முன்னோடித் திட்டமாக இரண்டு மாவட்டங்களில் உள்ள அனைத்து அலுவலகங்களையும் இணைத்து கள அளவை புத்தகங்களைக் கணினியில் கொண்டு வருவதற்காக ரூ.40

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம வரைபடங்களை நிழற்படம் எடுத்து கணினி வட்டத்தட்டில் இருத்திக்கொள்ள 11.70 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, சேப்பாக்கம் நில நிர்வாகத் துறையைக் கணினிமயமாக்குவதற்காக 6.23 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சார் ஆட்சியர் அலுவலகத்தில் தனியாக நீதிமன்றக் கூடம் கட்டுவதற்கு 3.85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடி, அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகங்களில் ஈப்பு நிறுத்தும் இடம் கட்ட 3.04 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னை, சேப்பாக்கம் நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலகத்திற்குக் கணினி வாங்குவதற்கு 2.25 இலட்சம் ரூபாயும், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுக் கழிப்பிடம் கட்ட 2 இலட்சம் ரூபாயும், சென்னை மாநகரத்திற்கான நிலப் பதிவேடுகளைக் கணினிமயமாக்குவதற்கு 1 இலட்சம் ரூபாயும், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாயும் (மொத்தம் 6.25 இலட்சம் ரூபாய்) ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில், அதாவது 2004–2005–ல் 60,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கும், 3,000 ஏக்கர் விவசாய நிலப்பட்டாக்கள் ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**நெடுஞ்சாலைத் துறை:** மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.58.85 கோடி மதிப்பீட்டில் 425 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் 17 பாலப் பணிகள், ஆக மொத்தம் ரூ.60.55 கோடி மதிப்பிற்கான பணிகளை மத்திய அரசின் ஒப்புதல் பெற்று மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் பராமரிப்புக்கூறின்கீழ் இரண்டாம் கட்டமாக ரூ.150 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள 500 கி.மீ. மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை, மேம்படுத்தப்பட்ட காலமுறைப் பராமரிப்புப் பணிகளின்கீழ் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பகுதி–2 திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் 77.30 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் ரூ.8 கோடி மதிப்பீட்டில் 121.70 கி.மீ. மாவட்ட முக்கிய சாலைகளை மேம்பாடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பகுதி–2 திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 45 வலுவிழந்த பாலங்களைத் திரும்பக் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பகுதி–2 திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் ரூ. 15 கோடி மதிப்பீட்டில் மாவட்ட இதர சாலைகளில் பாலமில்லா இடங்களில் 150 புதிய பாலங்கள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகள்– பொதுப் பணித் துறை-நீர்வள ஆதார அமைப்பு. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தீவிர முயற்சியால், தமிழ்நாடு நீர்வள ஆதாரத்தினை உயர்த்திடும் வகையில், உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் ரூபாய் 1100 கோடி செலவில், 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு, தற்போது வெற்றிகரமாக முடியும்

தறுவாயில் உள்ளது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் தீவிர முயற்சியால் ரூபாய் 2,890 கோடி அளவிற்கு உலக வங்கியிடம் நிதியுதவி பெற்று, தமிழ்நாட்டில் அதன் தொடர்ச்சியான திட்டமாக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-II ஐச், செயல்படுத்த, ஒரு புதிய கருத்துரு தயாரிக்கப்பட்டு, உலக வங்கியால் பல்வேறு கட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மீண்டும் அத்தொடர்த் திட்டத்தை வெற்றிகரமாக்க இவ்வரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதனை வடிவமைக்கும் வகையில் உலக வங்கி, தமிழகத்தின் எல்லா வடிநிலங்களுக்கும் ஏற்ற வகையில் நீர்வளத்தினைப் பெருக்கி நீர்ப் பங்கீடு மற்றும் நீர்ச் சிக்கனத்தில் முழுக் கவனம் செலுத்தி தண்ணீரின் உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில், தண்ணீரைப் பயன்படுத்தும் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து ஒரு மாதிரித் திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்த வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தமிழ்நாட்டிலேயே முன்னோடித் திட்டமாக, முதன்முறையாக, தண்ணீரைப் பயன்படுத்தும் 9 துறைகளையும் ஒன்று சேர்த்து, நெல்லை மாவட்டம், தாமிரபரணி வடிநிலத்திலுள்ள அனுமான் நதி உப வடிநிலத்தில் ரூபாய் 61.53 கோடியில் ஓர் ஒருங்கிணைந்த, நீர்வளத்தை முன்னேற்றும் திட்டத்தினைச் செயலாக்க ஆரம்பித்து, அப்பணி நடைபெற்று வருகிறது. அத்திட்டத்தின்கீழ், ஆற்றின் அணைக்கட்டு, கால்வாய்கள் மற்றும் கால்வாய்கள் மூலம் பயன்பெறும் அனைத்துக் குளங்களையும் மேம்படுத்தி வயலில் செலுத்தும் பாசன நீரின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காகச் சொட்டுநீர் மற்றும் தெளிப்பான் பாசன முறைகளையும் மற்றும் இதர நவீன உத்திகளையும் பயன்படுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாய உற்பத்திப் பொருட்களைத் தக்க வகையில் பாதுகாத்து விற்பனை செய்யும் வகையில் சந்தை வசதிகளும் செய்யப்படவுள்ளன. இதன்மூலம் அனுமான் நதி வடிநிலத்தில் உள்ள 10,000 ஏக்கர் நிலங்களும் கூடுதல் பாசன வசதி பெறும்; உற்பத்தியும் பல மடங்கு அதிகரிக்கும். இதனடிப்படையில் தமிழகமெங்கும் உள்ள ஏனைய வடிநிலங்களின் திட்டங்களும் வடிவமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டின் 17 மாவட்டங்களில் உள்ள 157 சிறு பாசனக் குளங்களைப் புனரமைத்து மேலும் மேம்படுத்த நபார்டு நிதி உதவியுடன்



ரூபாய் 48.43 கோடி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், தருமத்துப்பட்டி கிராமத்திற்கு அருகில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 34 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், புளிமான்கோம்பை கிராமத்தில் கோட்டோடைப்பட்டி அருகில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 74 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சீப்பாலக்கோட்டை கிராமத்தில் ஊஞ்சாலம்மன் கோயில் அருகே ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 60 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், அம்மாப்பட்டி கிராமத்திற்கு அருகில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி மாவட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் அகமலை வரட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் ரூபாய் 22 இலட்சம் செலவில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வெரியப்பூர் கிராமத்தில் புதிய குட்டை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 12 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், இடையஞ்சாவடி கிராமம், கொசஸ்தலையாற்றின் இடது புறம் உள்ள தரை அணையை மறு கட்டுமானம் செய்யும் திட்டத்தினை ரூபாய் 2.53 கோடி செலவில் நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

காஞ்சிபுரம் மாவட்டம், தாளவரம்பூண்டி கிராமத்தில் மடுவின் குறுக்கே உள்ள மண் அணையைக் கல் அணையாக மாற்றும் திட்டத்தினை ரூபாய் 56 இலட்சம் செலவில் நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், ஓங்கூர் ஆற்றின் கரையைச் சீரமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்த ரூபாய் 65.80 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தில் குப்பநத்தம் கிராமத்தில் செய்யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் விரைந்து முடிக்கும் வகையில் ரூபாய் 43.50 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில், நாகைநல்லூர் மற்றும் பிடாரமங்கலம் ஏரிகளுக்கு கரைபோட்டான் ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு ரூபாய் 21 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டத்தில் மகாதேவி ஏரி மற்றும் தொடர் குளங்களுக்கு தண்ணீர் வழங்க புளியன்சோலை அருகே அய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 1.84 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சி மாவட்டம், காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணை மற்றும் திருக்காட்டுப்பள்ளி பகுதியில் அமைந்துள்ள ரெகுலேட்டர்களை நவீனப்படுத்தும் திட்டத்தினை நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 17.39 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2–30*

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் சிக்கரசம்பாளையம் கிராமத்தில் புதிய குட்டை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



2004 ஜூலை 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் கனவாய்ப்புதூர் கிராமம், கே.மோரூருக்கு அருகில் பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 4.95 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களில் கப்பலவாடி அணைக்கட்டிலிருந்து வழங்கு கால்வாய் வெட்டி சென்றாயநாயக்கன் மற்றும் சோளன்குட்டை ஏரி மற்றும் இதர ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 85 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், பொதியம்பள்ளம் அணைக்கட்டைப் புனரமைத்து மேம்படுத்தி 18 ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 86 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், மல்லாபுரம் கிராமத்தில் அய்யனார் ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 3.54 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம் சருகுனியாற்றின் குறுக்கே அணை கட்டி வெற்றியாலங்குளம் மற்றும் இதர ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், சருகுனியாற்றின் குறுக்கே அணை கட்டி சேக்கடி மற்றும் சிறுவிலா ஏரிகளுக்கு நீர் வழங்க நபார்டு நிதி உதவியுடன் ரூபாய் 48.11 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், சருகுனியாற்றின் குறுக்கே அணை கட்டி வெள்ளரெந்தல், திருத்தேர்வளை, அய்யன்குடி சேந்தமங்கலம் ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தினை நபார்டு

நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 40 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம் மருதூர் மேலக்காலின் கொள்ளளவை அதிகப்படுத்தி மருதூர் அணைக்கட்டு கால்வாய் ஏரிக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 9.53 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், சின்னூர் கிராமத்தின் அருகே புதிய குளம் அமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 70 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், துறையூர் கிராமத்தின் அருகே புதிய குளம் அமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 29 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், பாளாக்குளம் அருகே மணிமுத்தாறு பிரதான கால்வாயை மேம்படுத்தி இணைப்புக் கால்வாய் அமைத்து அய்யனார் குளம்பட்டி ஏரிக்கு நீர் வழங்கும் திட்டத்தினை நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்த ரூபாய் 66.68 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில் ராஜபதி குக்கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 47 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் பொட்டல் கிராமத்தில் வண்டல் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தினை நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 6.14 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் திருக்குறுங்குடி கிராமத்தில் திருக்குறுங்குடி பெரிய குளத்தை மேம்படுத்தும் திட்டத்தினை



நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்த ரூபாய் 1.03 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**கட்டடத் திட்டங்கள்**

தேனியில் ஒரு பிரிவுடன் கூடிய துணைக் கோட்ட அலுவலகம் கட்டும் திட்டத்திற்கு ரூபாய் 8.25 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை சேப்பாக்கத்தில் பொதுப் பணித் துறை பிரதான கட்டடத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கூடத்தைப் புதுப்பிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அமைந்துள்ள 30 பொதுப் பணித் துறை குடியிருப்புகளில் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 40 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருவண்ணாமலையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் திட்டத்திற்கு ரூபாய் 70 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரத்தில் பொதுப் பணித் துறை கட்டடங்கள் பிரிவு கட்டுமானங்கள் மற்றும் பராமரிப்புக் கோட்ட அலுவலகம் கட்டும் திட்டத்திற்கு ரூபாய் 31 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் நான்கு பிரிவுகளுடன் கூடிய துணைக் கோட்ட அலுவலகம் கட்டும் திட்டத்திற்கு ரூபாய் 13.31 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசுகின்றபொழுது, கேரளாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் Check Dam ஒன்றை அவரே சென்று உடைத்ததாகக் குற்றமாகச்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 27

சொன்னார்கள். அந்தப் பகுதி பாலக்காடு கிராமத்தில் வனத் துறைப் பகுதியில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டு அது ஒரு தடுப்பணை என்றும், அதற்கும், நமக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சம்பந்தப்பட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. மற்றபடி முக்காலி பிரச்சினையில் அவர்கள் அங்கு ஒரு தடுப்பணை கட்டும்பொழுதே நாம் அதைத் தடுத்து காவிரி நடுவர் நீதிமன்றத்திற்கு அதை எடுத்துச் சென்றிருக்கின்றோம். காவிரி நடுவர் நீதிமன்றம் மூலம் அந்தத் தடுப்பணை அங்கு கட்டப்படுவதற்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கு இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய உறுப்பினர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், அவரவர்கள் பகுதிகளுக்கு வந்து சேரவேண்டிய பணிகள் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அவை அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அரசினுடைய நிதிநிலைக்கேற்ப பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூமியிலே வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு வரலாறு தானே உருவாகிறது என்று வாழ்வியல் வல்லுநர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அது எத்தகைய வரலாறு என்பதுதான் கேள்வி. வெற்றி என்றால் வீராப்பைப் பேசுகிறவர்களும் உண்டு; தோல்வி என்றாலோ துவள்பவர்களும் உண்டு. மக்களைப் பார்த்து மடையர்கள், மூடர்கள், நம்பிக்கைத் துரோகிகள் என்றெல்லாம் இகழ்ந்தவர்களும் உண்டு. ஆனால் வெற்றி, தோல்விகளைப் பற்றி எண்ணாமல், மக்கள் தொண்டே தன் இலட்சியம் என்று வாழ்ந்து வருபவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சக்தி என்னும் மகத்தான சக்தி கொண்டு, அவரை எதிர்கொண்டு வரும் தீய சக்திகள் அத்தனையையும் பொடிப்பொடியாக்கித் தகர்த்தெறிவார்கள். தனக்கென வாழாமல், தமிழ்நாட்டிற்காக, தமிழ் மக்களுக்காக வாழ்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்றென்றைக்கும் வீழ்ச்சி இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எப்போதும் தாழ்ச்சி இல்லை என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.



2004 ஜூலை 27]

## (அ) கோரிக்கை எண் 11 – வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 11– வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வணிக வரித்துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.110,26,12,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

## (ஆ) கோரிக்கை எண் 20–நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 20– நெடுஞ்சாலைகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.801,23,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,089,68,20,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (இ) கோரிக்கை எண் 23 – உள் துறை–சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 23 – உள் துறை – சிறைச்சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள்துறை – சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.69,95,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.47,09,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 2–40

## (ஈ) கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29– செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,81,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.30,01,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (உ) கோரிக்கை எண் 34 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34– பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,14,01,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

### (ஊ) கோரிக்கை எண் 36 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,72,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

### (எ) கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38– பொதுப் பணித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.750,10,74,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.507,49,38,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஏ) கோரிக்கை எண் 39 – வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39– வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.917,04,27,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.23,48,84,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஐ) கோரிக்கை எண் 49 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49– இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.325,74,01,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

### (ஒ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.27,68,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,40,93,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–7–2004) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் திருவாளர்கள் விப்ரா எண்டர்பிரைசஸ் மற்றும் திருவாளர்கள் இரத்னா ஐயர்ன் சேஃப் கம்பெனி அரசு துறைகளுக்கு அறைகலன்கள் விற்பனை மீது குறிப்பிட்ட காலத்திற்கு செலுத்தத்தக்க வரியின் வேறுபாடு, மேல்வரி, கூடுதல் வரி, தண்டத் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–4–2004 ஆம் நாளிட்ட 204 ஆம்



எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை மேல்வரி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971) பிரிவு 7(3) ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

56. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் திருவாளர்கள் பன்னாரி மகளிர் சுய உதவிக் குழு குறிப்பிட்ட காலத்திற்கு செலுத்தத்தக்க விற்பனை வரியினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 22–4–2004 ஆம் நாளிட்ட 87 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

57. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

58. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம் –II) பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

59. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம் –IV) ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

60. 2002–2003 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

61. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம் –II) இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

[2004 ஜூலை 27

62. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

63. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

64. 2002–2003 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

65. 2002–2003 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

66. 2002–2003ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

67. 2002–2003–ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

32. மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

33. மானியக் கோரிக்கை எண் 11 – வணிக வரித் துறை – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

34. மானியக் கோரிக்கை எண் 20 – நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)



2004 ஜூலை 27]

35. மானியக் கோரிக்கை எண் 23 – உள் துறை – சிறைச் சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

36. மானியக் கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை– எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

37. மானியக் கோரிக்கை எண் 34 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 36 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

39. மானியக் கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

40. மானியக் கோரிக்கை எண் 39 – வருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

41. மானியக் கோரிக்கை எண் 40 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

42. மானியக் கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

43. நெடுஞ்சாலைத் துறையின் நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2003–2004. (தமிழ், ஆங்கிலம்)

44. நெடுஞ்சாலைத் துறையின் 'மக்கள் சாசனம்', 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

45. பொதுப் பணித் துறையின் திட்டச் சாதனை, 2003–2004. (தமிழ், ஆங்கிலம்)

46. தகவல் தொழில் நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு - I

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 11 – வணிக வரித் துறை முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

தொழிலநுட்ப முன்னேற்றம், தொன்மையான மக்கள் சேவை அமைப்புகளை தற்காலத்திற்கு ஏற்ப முன்னோக்கு பார்வை கொண்டவைகளாக மாற்றியுள்ளது. கடந்த 140 ஆண்டுகளாக பொதுமக்களுக்குச் சேவை புரிந்துவரும் பதிவுத் துறை தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி தன் பணித் திறனை வளர்த்துள்ளது. பதிவுத் துறை, அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவதில் பெரும் முயற்சி மேற்கொண்டு வருகிறது. மேலும், இத்துறை வெளிப்படையான மற்றும் துரித சேவையை பொதுமக்களுக்கு செய்து வருகிறது. வணிக வரி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைகளுக்கு அடுத்தபடியாக வருவாயை ஈட்டித் தருவதில் இத்துறை மூன்றாவது பெரிய துறையாக உள்ளது.

**1. அ. பதிவுத் துறை நிர்வகிக்கும் சட்டங்கள்:**

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)

[2004 ஜூலை 27

5. 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)

**ஆ. கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் சில வரையறுக்கப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:-**

1. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
3. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் (சட்டம் 3/1936)
4. 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)
5. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
6. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)
7. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
8. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

## 2. நிர்வாக அமைப்பு

**அ. தலைமையிடம்**

இந்திய ஆட்சிப்பணியைச் சார்ந்த அலுவலர் ஒருவர் பதிவுத் துறைத் தலைவராக உள்ளார். அவர் கீழ்க்கண்ட வகைகளிலும் பணியாற்றுகின்றனர்.

அ. 1899 ஆம் வருடத்திய இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்



2004 ஜூலை 27]

ஆ. 1982 ஆம் வருடத்திய சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் சீட்டுப்பதிவாளர்

இ. 1975 ஆம் வருடத்திய தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கப் பதிவாளர்

ஈ. 1972 ஆம் வருடத்திய வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டத்தின்கீழ் பதிவாளர்

இவருக்கு உதவியாக தலைமையகத்தில் பின்வரும் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்:

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)
3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்
5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது)
6. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு)
7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)
8. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)
9. கணக்கு அலுவலர்

**ஆ. கள அலுவலகங்கள்**

**(1) மண்டல அலுவலகங்கள்**

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 9 பதிவு மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டலமும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரால்

நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், வருவாய் ஈட்டுதல், திடீர் ஆய்வு செய்தல், தம் மண்டலத்திற்குள் உள்ள வட்டாரப் பதிவுத் துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல், விசாரணை நடத்துதல் ஆகிய பணிகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் உள்ளார். முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் உதவி பதிவுத் துறைத் தலைவர் அல்லது மாவட்டப் பதிவாளர் பிறப்பிக்கும் ஆணையின்மீது மேல்முறையீட்டு அலுவலராகவும் உள்ளார்.

## 2. வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு ஐந்து உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். சார்பதிவகங்களை ஆய்வு செய்தல், புகார் மனுவின்மீது விசாரணை செய்தல், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் செய்யப்படும் தணிக்கைப் பணியின்மீது சோதனை ஆய்வு செய்வது ஆகியவை இவர்களது முக்கியப் பணிகளாகும. மேலும, இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர்.

## 3. மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும், மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பணிப்பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு பன்னிரெண்டு பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிர்வகிக்கப்படுகின்றது. இவர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதி சட்டத்தின்கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கின்றனர். மாவட்டப் பதிவாளர்கள் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர்.





## 4. தணிக்கைக் குழுக்கள்

இத்துறையில் கட்டுக்கோப்பான கால வரையறைக்குட்பட்ட துறைத் தணிக்கைப் பிரிவு இயங்கி வருகிறது. மாநிலத்திலுள்ள எல்லா சார்பதிவாளர் அலுவலகங்களையும் 100 சதவிகிதம் துறைத் தணிக்கை செய்ய 45 தணிக்கைக் குழுக்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) தலைமையில் இயங்குகின்றது.

## 5. (i) சார் பதிவகங்கள்

மாநிலம் முழுவதும், 558 சார்பதிவகங்கள் உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர இந்துத் திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணப் பதிவாளராகவும் சார் பதிவாளர் செயல்படுகிறார். மேலும், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதி சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளராகவும் செயல்படுகிறார்.

### (ii) சார் பதிவகங்கள் சீரமைப்பு

சார் பதிவகங்கள் மற்றும் மாவட்டப் பதிவகங்களின் எல்லை வருவாய் வட்ட / வருவாய் மாவட்ட எல்லைக்கு ஒப்ப சீரமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 6) பதிவுத் துறை பயிற்சி நிலையம், சென்னை

1996 முதல் செயல்பட்டு வரும் இப்பயிற்சி மையம் பதிவுத் துறையில் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்து இத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையம், துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலும் மற்றும் மாவட்டப் பதிவாளர் நிலையிலும் இரண்டு விரிவுரையாளர்கள் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

'ஸ்டார்' (எளிய மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகம்) எனும் தகவல் தொழில்நுட்ப பயிற்சி பணியாளர்கட்கு இந்நிலையம் வழங்குகின்றது. பவானிசாகர் பயிற்சி நிலையம் போன்று இளநிலை உதவியாளர்கட்கு இந்நிலையம் அடிப்படை பயிற்சியும் அளிக்கின்றது.

[2004 ஜூலை 27

### 3. துறையின் சிறப்புப் பணிகள்

#### (1) முதன்மை வருவாய் கட்டுப்பாடு அலுவலர்

இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் பதிவுத் துறைத் தலைவர் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராவார். வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத் துறைத் தலைவர், வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அலுவலராக செயல்பட்டு வருகிறார். இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் ஆட்சியரின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும்/சீராய்வு செய்யும் அதிகாரமும் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலருக்கு உள்ளது. மேலும், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(A)-ன்கீழ் தனித் துணை ஆட்சியரால் (முத்திரை) மதிப்பு நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்படும் ஆணையின்மீது மேல் முறையீட்டு அலுவலராகவும் உள்ளார். மாநில வருவாயைப் பாதிக்கும் அளவில் தனித் துணை ஆட்சியர் பிறப்பிக்கும் ஆணைகளைத் தன்னிச்சை சீராய்வு செய்யும் அதிகாரமும் இவரிடம் உள்ளது.

#### (2) வழிகாட்டிக் குழு:

ஆவணத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள பத்திரப்பதிவு அலுவலர்களுக்கு வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் தயாரித்தல், மதிப்புகள் திருத்தியமைத்தல் மற்றும் முரண்பாடுகள் களைதல் ஆகிய பணிகளுக்கு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் "வழிகாட்டி மதிப்புக் குழு" இயங்கி வருகிறது. வழிகாட்டி மதிப்பினை சரியாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் நிர்ணயித்திட மற்றும் வழிகாட்டி மதிப்பு குழுவிற்கு ஆலோசனை வழங்க அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். தலைமையிட மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி) செயலாளராகவும், சம்மந்தப்பட்ட மண்டலத் துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர் குழுவின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், பேரூராட்சிகள் மற்றும் 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)ன்கீழ் உள்ளாட்சி திட்டப் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள



2004 ஜூலை 27]

சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும், இதர கிராமப்புறங்களில் உள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் திருத்தியமைக்கப்படுகின்றன. தமிழகம் முழுவதும் வழிகாட்டி மதிப்புகள் ஏப்ரல் 2003-ல் திருத்தியமைக்கப்பட்டன.

வழிகாட்டி மதிப்பு சரியான சந்தை மதிப்பை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். எனவே, நடப்பாண்டில் வழிகாட்டி மதிப்பை விரிவாக திருத்தியமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. வருவாய் சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்க ஆணையம் பரிந்துரைத்தவாறு 2004-2005 ஆண்டுக்கு வழிகாட்டி மதிப்பு மாற்றியமைக்க குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வழிகாட்டி மதிப்பினை அனைவரும் அறிந்திடும் நோக்குடன் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டின் நகல் ஒன்று அந்தந்தப் பகுதிகளில் உள்ள வர்த்தகர் சங்கம், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டுக்கான வழிகாட்டி மதிப்புகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இணையதள முகவரி http://www.tnreginet.net

தற்போது கட்டட மதிப்பீடு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை) கட்டுப்பாடு சட்டம், 1960-ன்கீழ் வரையறுக்கப்பட்ட கட்டட பரப்பு விலை விகிதப்பட செய்யப்படுகிறது. கட்டட மதிப்பை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகள் சாமானியர் புரிந்துகொள்ள முடியாதவாறும், வெளிப்படைத் தன்மையின்றியும் உள்ளன. எனவே, கட்டட மதிப்பீடு முறை எளிதாகவும், வெளிப்படையாகவும் திகழ ஒரு முறைப்படுத்தப்பட்ட கட்டட மதிப்பீடு உருவாக்கப்படவுள்ளது.

#### (3) புலனாய்வுக் குழு

கட்டடங்களின் மதிப்பை நிர்ணயிக்கும்பொருட்டு அவற்றை ஆய்வு செய்திடவும், முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும் புலனாய்வுக் குழுப் பிரிவு ஒன்று கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில், 8 மாவட்டப் பதிவாளர்களையும், 4 சார் பதிவாளர்களையும் இரண்டு உதவி செயற் பொறியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவர்கள் கட்டடக் கள ஆய்வு செய்து வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர். அதிக அளவில் நிலுவை ஆவணங்கள் கள ஆய்வுக்காக தேங்கியுள்ள நிலையில் ஆவணங்களை விரைவில் திரும்ப வழங்கிட ஏதுவாக, பதிவு அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## 4. விழிப்புக் குழு

துறையில் ஊழல் முறைகேடுகள் மற்றும் இதர ஒழுங்கீனங்கள் நடைபெறாமல் தடுத்திட ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் நான்கு காவல் ஆய்வாளர்களைக் கொண்டு ஒரு விழிப்புக் குழு செயல்பட்டு வந்தது. இந்தக் குழு அரசாணை எண் 93, வணிக வரி (டபுள்யூ) துறை நாள் 26-7-2002-ன்படி ஒரு உதவிப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் ஒரு சார்பதிவாளரைக் கொண்ட உள் விழிப்புக் குழுவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## 4. வருவாய் ஈட்டல்

(i) பதிவுத் துறை அலுவலர்களின் சீரிய கண்காணிப்பினாலும், விழிப்புணர்வினாலும் 1968-69 ஆம் ஆண்டில் இத்துறையின் மூலம் ரூ.40 கோடியாக இருந்த அரசு வருவாய் 2002-2003-ல் ரூ.1648.86 கோடியாக உயர்ந்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் 15,92,934 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.1732.91 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் வருவாய் விவரம்

| ஆண்டு | ஆவணங்கள் பதிவு | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1994-1995 | 12,65,287 | 586.34 |
| 1995-1996 | 13,61,036 | 748.50 |
| 1996-1997 | 12,89,947 | 748.58 |
| 1997-1998 | 13,32,377 | 806.26 |
| 1998-1999 | 13,69,688 | 854.30 |
| 1999-2000 | 15,03,181 | 1019.71 |
| 2000-2001 | 13,83,593 | 1094.14 |
| 2001-2002 | 13,90,394 | 1264.20 |
| 2002-2003 | 15,81,764 | 1648.86 |
| 2003-2004 | 15,92,934 | 1732.91 |

2003 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், சொத்து மாற்ற ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் மாற்றுத் தீர்வைகள் 13 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டாலும் 2003-2004 ஆம் ஆண்டில் 5.10 சதவிகித வருவாய் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.





2004-2005 ஆம் ஆண்டிற்கான வருவாய் இலக்கு ரூ.2.100 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### (ii) தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மதிப்பு நிர்ணயம்

இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, சொத்து விற்பவர்கள் ஆவணத்தில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டி மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து, ஆவணம் பதிய வருபவர் கூடுதல் முத்திரைச் சட்டப் பிரிவு 47(ஏ)ன்கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பினை நிர்ணயிப்பதற்காக பதிவு அலுவலர், அந்த ஆவணத்தை தனித் துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பி வைப்பார். தனித் துணை ஆட்சியர் சம்பந்தப்பட்ட சொத்தினை ஆய்வு செய்தும், உள் விசாரணை நடத்தியும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து அதன்மீது செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்கிறார். தனித் துணை ஆட்சியர்கள் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 11 இடங்களில் உள்ளனர்.

பணியின் முக்கியத்துவம் கருதி, சென்னை மற்றும் கோவை அலகுகளில் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) பதவிகள் மாவட்ட வருவாய் அலுவலர் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. விரைவான சேவை அளித்திட ஏதுவாக இந்த இரு மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் சீருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மதிப்பு நிர்ணயத்திற்காக தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் (முத்திரை) அதிக ஆவணங்கள் நிலுவையில் இருந்தமையால் அவற்றை முடிவு செய்திட, ஒரு சிறப்பு முயற்சியாக, வருவாய் கோட்ட அலுவலர்/சார் ஆட்சியர்/உதவி ஆட்சியர் ஆகியோரை 24-9-2003 முதல் ஆறு மாதங்களுக்கு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47(ஏ)ன்கீழ் ஆட்சியராக சொத்துக்களின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்திட நியமனம் செய்யப்பட்டு அவர்களால் 12,272 ஆவணங்கள் தீர்வு செய்யப்பட்டன.

[2004 ஜூலை 27

## 5. நிர்வாகச் சீர்திருத்தங்கள்–சட்டத் திருத்தங்கள்

### அ) பதிவுச் சட்டம்

1. பதிவுக் கட்டண கணக்கீட்டு முறையை எளிதானதாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்கிட பதிவுச் சட்ட கட்டண பட்டியல் திருத்தியமைக்கப்பட உள்ளது.

2. பொது அதிகார ஆவணம் மற்றும் உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணங்கள் ஆகியவற்றை கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டுமென்று சட்டத் திருத்தம் செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### ஆ) தமிழ்நாடு முத்திரைச் சட்டம்

மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்கள் தங்களுக்கென மாநில முத்திரைச் சட்டத்தை இயற்றியுள்ளன. தமிழ்நாட்டில் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, சமீபத்திய திருத்தங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு முத்திரைச் சட்டம் இயற்றிட அரசு திட்டமிட்டுள்ளது.

## 6. முத்திரைத் தீர்வை/மாற்றுத் தீர்வை குறைப்பு

1. கடந்த இரண்டு ஆண்டுகளில், முக்கியமாகத் தகவல் தொழில்நுட்பப் பகுதியில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கிட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இம்மாநிலம், முதலீடு செய்வதற்கு உகந்த தலைசிறந்த இடமாக உருவாகி அதன் பலனாக மேம்பாட்டு நடவடிக்கைகள் ஏற்பட வழிவகுத்துள்ளன. அரசு, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் அட்டவணை 1–ல் விவரிக்கப்பட்ட உரிமை மாற்ற ஆவணங்கட்கு நகர்ப்புறங்களில் விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை 8% மற்றும் கிராமப் பகுதிகளில் விதிக்கப்பட்ட 7% ஆகியவற்றை அனைத்து பகுதிகட்கும் 6% எனவும், மாற்றுத் தீர்வையை 5%–லிருந்து 2% ஆகவும் குறைத்துள்ளது. மாற்றியமைக்கப்பட்ட இந்த விகிதங்கள் மாநிலம் முழுவதும் 21–11–2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.



2004 ஜூலை 27]

2. 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட ஆவணங்கட்கு உயர்ந்தபட்ச கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு முத்திரைத் தீர்வை/பதிவுக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளன.

**(i) அடமானம்:** முத்திரைத் தீர்வை, கடன் தொகைமீது 4% லிருந்து 1% ஆகக் குறைக்கப்பட்டு அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.20,000/–றனவும், பதிவுக் கட்டணம் கடன் தொகைமீது 1% என்பதற்கு அதிகபட்ச கட்டணம் ரூ.5000 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**(ii) ஒப்படைப்புடன்கூடிய அடமானம்:** முத்திரைக் கட்டணம் 4 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகவும், மாற்றுக் கட்டணம் கடன் தொகையில் 5 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகவும் குறைக்கப் பட்டுள்ளன. பதிவுக் கட்டணம் 1% எனவும், அதிகபட்ச கட்டணம் ரூ.2 லட்சம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**(iii) அசல் ஆவணங்கள் ஒப்படைப்பு:** முத்திரைத் தீர்வை கடன் தொகைமீது 0.5% என்பதற்கு அதிகபட்ச தீர்வை ரூ.5000 எனவும், பதிவுக் கட்டணம் கடன் தொகைமீது 1% எனபது அதிகபட்சம் ரூ.1000 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு இதற்கான திருத்தம் சட்டசபையில் சட்ட வரைவாக ஏற்கப்பட வேண்டுமென்பதால் கீழ்க்கண்ட ஆவணங்கட்கான முத்திரைத் தீர்வை சீர்திருத்தி அமைக்கப்பட உள்ளது.

(i) குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான ஏற்பாடு, விடுதலை, பாகப்பிரிவினை மற்றும் கூட்டுரிமை கலைப்பு ஆவணங்கட்கான முத்திரைத் தீர்வை குறைக்கப்பட்டு சொத்தின் சந்தை மதிப்பின்மீது 1% ஆகவும், அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.10,0000 எனவும், பதிவுக் கட்டணம் அதிகபட்சம் ரூ.2000 எனவும் நிர்ணயிக்கப்படும். பாகப்பிரிவினை ஆவணங்களைப் பொறுத்தவரை இந்த உச்சவரம்பு ஒவ்வொரு பங்கிற்கும் பொருந்தும்.

(ii) குத்தகை ஆவணங்கட்கான முத்திரைத் தீர்வை கீழ்க்கண்டவாறு சீர்திருத்தப்படும்:

| குத்தகை காலம் | முத்திரைத் தீர்வை விகிதம் |
|---|---|
| 30 ஆண்டுகள் | மொத்த தொகை மீது 1% (வாடகை, தவணைத் தொகை, தண்டத் தொகை மற்றும் முன்பணம்) |
| 31 முதல் 99 ஆண்டுகள் வரை | மொத்த தொகை மீது 4% (வாடகை, தவணைத் தொகை, தண்டத் தொகை மற்றும் முன்பணம்) |
| 100 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் | மொத்த தொகை மீது 8% (வாடகை, தவணைத் தொகை, தண்டத் தொகை மற்றும் முன்பணம்) |

பதிவுக் கட்டணம் 1% அதிகபட்ச கட்டணம் ரூ.5000 என நிர்ணயிக்கப்படும்.

## 7. உள்ளாட்சி அமைப்புகட்கு மாற்றுத் தீர்வை

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை மற்றும் நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் 2 சதவிகிதம் மிகுவரி வசூலிக்கப்படுகிறது. அனுபவ உரிமையுடன் கூடிய அடமானத்திற்கு 1 சதவிகித வரியும் வசூலிக்கப்படுகின்றது. மாற்றுத் தீர்வையாக வசூலிக்கப்படும் தொகையில் 5 சதவிகிதத் தொகையை வசூல் கட்டணமாகப் பதிவுத் துறை வைத்துக்கொண்டு எஞ்சியுள்ள 95 சதவிகிதத் தொகையை மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் வழங்குகின்றது.

அதேபோன்று பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படும் மிகுவரி வசூலில் 3 சதவிகிதம் இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக்கொள்கிறது. மீதமுள்ள 97 சதவிகிதம் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

## 8. முத்திரை வில்லைகள்/முத்திரைத் தாள்கள் விநியோகம்

தமிழ்நாடு முழுவதற்கும் நீதித் துறை மற்றும் நீதித் துறை சாரா முத்திரைத் தாள்களின் தேவையை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து காலாண்டுக்கு ஒரு முறை அதனை நாசிக் மற்றும்





ஹைதராபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்திற்கு அனுப்பி வைக்கிறார். கருவூல கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத் தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத் தாள் கண்காணிப்பாளராக செயல்படுகின்றனர். முத்திரைத் தாள் தேவை மற்றும் வழங்கலில் ஒரு முறையான ஒருங்கிணைப்பு கடைபிடிக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு முத்திரைத் தாள் விற்பனை செய்திட முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அதிகாரிகளும், மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

மாநிலத்தில் 31-1-2004 அன்றுள்ளவாறு 4287 முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

சார் பதிவாளர்கள் அலுவல் முறையில் முத்திரைத் தாள்கள் விற்கும் விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 41-ன்கீழ் முத்திரைத் தீர்வையினை சில முக்கிய ஆவணங்களைப் பொறுத்து எவ்வித பண உச்ச வரம்பின்றி ரொக்கமாகப் பெறவும், சார் பதிவாளர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் பெற்றுள்ளனர். இந்நிலை, பொதுமக்கள் முத்திரைத் தாள் பெறுவதில் ஏற்படும் சிரமத்தைக் குறைத்திடும்.

பத்திரப் பதிவிற்கான நீதிசாரா முத்திரைத் தாள் மற்றும் முத்திரை வில்லைகள் எளிதாகவும், தேவையான அளவு, இடர்பாடின்றி பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்குடன் சென்னைத் துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் முத்திரைத் தாள் விற்பனை மையம் திறக்க அரசு முடிவு செய்து, 24-2-2004 முதல் இம்மையம் செயல்படுகின்றது.

2002-2003 நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கை சட்டசபையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டபோது போலி முத்திரைத் தாள் உபயோகிப்பதைத் தடை செய்திட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி அனைத்து சார் பதிவகங்களுக்கும் போலி முத்திரைத் தாட்களைக்

கண்டறிய புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன. முத்திரைத் தீர்வையை ரொக்கமாகப் பெற ஏதுவாக அனைத்து பதிவு அலுவலர்களும், சில ஆவணங்களைப் பொறுத்து எவ்வித உச்சவரம்பின்றி பெற்று ஆவணத்தில் சான்று சேர்க்க வரையறுக்கப்பட்டுள்ளது. வங்கிகள் மூலமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இரண்டையும் ரொக்கமாகச் செலுத்தும் முறையை செயல்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், முத்திரைத் தாட்களின் அதிகபட்ச முகமதிப்பு ரூ.100 என நிர்ணயித்திடவும் கருதப்பட்டுள்ளது.

முத்திரைத் தாள் தட்டுப்பாட்டினைத் தவிர்த்திடவும், போலி முத்திரைத் தாள்களின் புழக்கத்தை தடை செய்யும் நோக்குடனும் முதற் கட்டமாக பிராங்கிங் கருவிகள் 15 சார்பதிவாளர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. அனைத்து சார் பதிவகங்களிலும் பிராங்கிங் கருவிகள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆயுள் காப்பீட்டு கழகம், வீட்டுவசதி நிதி கழகம் போன்ற பொது நிறுவனங்கள் பிராங்கிங் கருவிகள் பயன்படுத்திட உரிமம் வழங்க கருதப்பட்டுள்ளது.

## 9. ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள்

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளின்படி முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்து அரசு நடத்தும் அறிவுத் திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே ஆவண எழுத்தர் உரிமம் பெறத் தகுதியுடையவர் ஆவர். மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவக அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன. 31-1-2004 முடிய 9078 ஆவண எழுத்தர் உரிமதாரர்கள் உள்ளனர்.

இந்திய பதிவு (உண்மை நகர் கோர்வை) விதிகள் 1967—ன்படி பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அதன் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். ஆவணங்களுக்கு நகல் எழுதவும், தட்டச்சு நகல் எடுக்கவும் வரையறுக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆவண/நகல் எழுத்தர் உரிமங்களும் மற்றும் வரையறுக்கப்பட்ட தட்டச்சு தேர்வு தகுதி பெற்றவர்களுக்கு தட்டச்சர்களுக்கான உரிமங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. 31-1-2004 முடிய 6656 எழுத்தர் உரிமதாரர்கள் உள்ளனர்.



## 10. பட்டா பாஸ் புத்தகம்

விவசாய நிலம் சம்பந்தப்பட்ட விற்பனை, தானம், அடமானம், பரிவர்த்தனை, செட்டில்மெண்டு அல்லது இதர வகையிலான ஆவணப் பதிவுக்கு பதிவு அலுவலரிடம் பட்டா பாஸ் புத்தகத்தினை தாக்கல் செய்ய, தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக சட்டம் (பிரிவு 5-ன்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.)

பட்டா பாஸ் புத்தக சட்டம் தற்போது வேலூர், மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் தேனி ஆகிய 9 வருவாய் மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. அனைத்துப் பட்டாதாரர்களுக்கும, பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்படாத நிலையில், விவசாயிகள், சொத்து மாற்றங்களின்போது இடையூறுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்டத்தில் தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டப் பிரிவு 5-ன்படி ஆவணங்கள் பதிவு செய்யும்பொழுது பட்டா பாஸ் புத்தகங்களைங் சமர்ப்பிக்க வேண்டுமென்ற நிபந்தனை தளர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 11. சங்கங்கள்

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் சங்கங்களின் பதிவாளர்கள் ஆவர். பதிவுத் துறைத் தலைவருக்கு, பதிவாளர்களைக் கண்காணிக்கும் அதிகாரமும், மேல்முறையீடுகளைக் கேட்டு இறுதியாணையிடும் அதிகாரமும் உள்ளன.

சங்கங்கள், காலதாமதமாக ஆவணங்களைக் கோர்வை செய்தாலும், அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சட்டத்தின் சில பிரிவுகளிலிருந்து விலக்களிக்கும் அதிகாரத்தை பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர்களுக்கு வழங்க பிரிவு 49 மற்றும் அதற்குரிய பிரிவுகளை திருத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 12. சீட்டுகள்

தமிழ்நாட்டில் சீட்டு நிதி அமைப்புகளின் செயல்பாடுகள் 1982 ஆம் ஆண்டு மைய சீட்டு நிதிச் சட்டம் மற்றும் அதன்கீழ் வரையறுக்கப்பட்ட

தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின்படி நிர்வகிக்கப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும் மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டு) சீட்டு நிதிப் பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர்.

துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் முறையே இணை சீட்டுப் பதிவாளர்கள் மற்றும் துணை சீட்டுப் பதிவாளர்களாக அவரவர் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் சீட்டுப் பணியைக் கவனிக்க 47 சார்பதிவாளர்கள் சீட்டு ஆய்வாளர்களாக செயல்படுகின்றனர். சீட்டு வழக்குகளை தீர்க்க சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு மற்றும் மையம்) மற்றும் கோவை ஆகிய இடங்களில் சீட்டு நடுவர்கள் மூவர் செயல்படுகின்றனர்.

மோசடி நோக்கங்கொண்ட சீட்டு நிறுவனங்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க சீட்டு நடைமுறையில் உள்ள காலத்தில் ஒருமுறையாவது ஆய்வு நடத்த அரசு அறிவுறுத்தியுள்ளது. பதிவு செய்யப்படாத சீட்டுக்கள் நடத்துவதைத் துறை தீவிரமாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அங்கீகாரமற்ற மற்றும் பதிவுறா சீட்டு நடைபெறுவதைக் கண்டுபிடித்திடவும் அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் ஒரு சீட்டு விழிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு, நேர்முக உதவியாளர் (சீட்டு) மற்றும் வடசென்னை, தென்சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்ட சீட்டு ஆய்வாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படுகிறது.

தமிழ்நாடு சீட்டுக் கழகத்தைக் கலைத்திட அரசு பிப்ரவரி 1993–ல் ஆணையிட்டதைத் தொடர்ந்து கழகம் தனது செயல்பாட்டை முடித்துக்கொண்டது.

## 13. கூட்டு நிறுவனங்கள்

இந்திய கூட்டு வணிகச் சட்டத்தில், மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ் படிவம் 1ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் நிறுவனப் பதிவேட்டில் தேவையான குறிப்புகள் செய்தபின் பதிவாளர் கோர்வை செய்வார். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்கு





தெரிவிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டுவருவது குறித்து, ஒவ்வொரு ஆண்டும் நிறுவனம் செயல்பட்ட விவரம் குறித்து உறுதிமொழியைக் கட்டாயம் கோர்வை செய்திட 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31-1-2004–ல் உள்ளபடி 4,28,560 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 14. திருமணப் பதிவு:

### i) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்

இந்துக்களிடையே நடைபெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் தொடர்பான வடிப்புகள் சார்பதிவாளர்களால் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ், அனைத்து சார்பதிவாளர்களும் திருமண பதிவாளர்கள் ஆவார்கள்.

### ii) 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்கீழ் எத்தகைய வடிவிலான திருமணங்களும் பதிவு செய்யப்படுகின்றன. அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்கள் இச்சட்டத்தின்கீழ் திருமண அலுவலர்களாக, அவர்கள் எல்லையைப் பொறுத்து நியமிக்கப்பட்டுள்ளனர். திருமண அலுவலரிடம் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணத்திற்கான அறிவிப்பு அளிக்கப்படல் வேண்டும். 30 நாட்கள் கழித்து திருமணத்திற்கு எவ்வித எதிர்ப்பும் வராத பட்சத்தில் திருமணம் முறைப்படுத்தப்படும்.

### iii) கிருஸ்துவ திருமணச் சட்டம்

கிருஸ்துவ பாதிரியார்களாலும், உரிமம் பெற்றவர்களாலும் இந்திய கிருஸ்துவ திருமணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் திருமண வடிப்புகள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

[2004 ஜூலை 27

## 15. பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள்:

i) தமிழகத்தில் 350 பதிவு அலுவலகங்கள், கணினி வழி செயல் பட்டு சொத்து பதிவு நடவடிக்கைகளை விரைவாக முடித்திடும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

ஆவணங்கள் நகல் எடுத்தல், அட்டவணை செய்தல் மற்றும் சரிவர பராமரிக்கப்படாத பதிவறைகளில் ஆவணக் கட்டுகளை பராமரித்தல் ஆகிய பழமையான நடைமுறைகள் மாற்றப்பட்டுள்ளன. துறையின் தனிப்பட்ட இணைய தளத்தில் (http://www.tnreginet.net) மனு செய்திடின் சான்றுகள்/நகல்கள்/வடிப்புகளை வீட்டிலிருந்தபடியே பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

கணினி செயல்பாடுகளின் சிறப்பம்சங்கள்:

- ஆவணங்கள் பாதுகாப்பு: ஸ்கேன் செய்யப்பட்டு குறுவட்டுக்களில் சேமித்தல்.
- வில்லங்கச் சான்றுகள் வழங்கல்.
- ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்கல்.
- சொத்து மதிப்பீடு அறிக்கை தயார் செய்தல்.
- திருமணப் பதிவு/சங்கப் பதிவு/நிறுவனங்கள் பதிவு/சீட்டுப் பதிவுகள்.

**2) 'ரெஜிநெட்'**

'ரெஜிநெட்' என்பது தகவல் தொடர்பு தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட ஒரு வலைப்பின்னல் (network) ஆகும். வலைப்பின்னல் இணைப்பின் பலனால் தகவல்கள் பரிமாற்றம் மற்றும் எந்த ஒரு அலுவலகத்தின் தகவல்களும் வேறு அலுவலகத்தில் பார்க்கலாம். இதன் விளைவாக எந்த ஒரு சொத்தைப் பொறுத்த வில்லங்கச் சான்றும் கணினிமயமாக்கப்பட்ட எந்த அலுவலகத்திலும் பெறலாம்.



2004 ஜூலை 27]

இணையதளம் வழி வில்லங்கச் சான்று/பதிவுற்ற ஆவணங்களின் நகல்/சங்கங்களால்/சீட்டு நிறுவனங்களால் கோர்வை செய்யப்பட்ட படிவங்களின் நகல்கள்/இந்து திருமண பதிவு வடிப்புகள் பெற மனுச் செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் அளிக்கப்படும் தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு சான்றுகள் தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. மனுதாரர்கள் தேவையான கட்டணத்தை மையத்தில் நேரடியாக செலுத்தி சான்று பெறலாம். அல்லது வில்லங்கச் சான்று மனுதாரரின் வீட்டிலேயே கோரிக்கைப்படி கூரியர் சேவை வழி, உரிய கட்டணம் மற்றும் அனுப்புகை செலவுகள் வசூலிக்கப்பட்டு வழங்கப்படும்.

துறையின் தனிப்பட்ட இணையதளம் (http://www.tnreginet.net) அமைக்கப்பட்டுள்ளது. பதிவுச் செயல்பாடுகளை வெளிப்படையாக்கும் நோக்குடன், மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளின் வழிகாட்டி மதிப்புகள் இத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பொதுவான தகவல்கள் மட்டுமின்றி பதிவு நடைமுறை விவரங்கள், பொது பயன்பாட்டு படிவங்கள் மற்றும் மாதிரி ஆவண படிவங்கள் ஆகியவை இத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெற அளிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பதிவுற்ற சங்கங்களின் சமீபத்திய நிலையை துறையின் இணையதளத்தில் அறிந்திடலாம். இந்த இணையதளம் பதிவுற்ற சீட்டு விவரங்களையும் அளிக்கிறது. இதன்வழி பொதுமக்கள் தாம் சேர உத்தேசித்துள்ள சீட்டின் உண்மைத்தன்மையை அறிந்திடலாம்.

தனிப்பட்ட 'ரெஜிநெட்' சேவை மையம் சென்னை, ஈரோடு மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இந்த மையத்தில் பதிவு நடைமுறையைத் தவிர இதர அனைத்து சேவைகளும் அளிக்கப்படுகின்றன.

[2004 ஜூலை 27

தகவல் தொழில்நுட்பம் இத்துறையில் அறிமுகப்படுத்தப் பட்டதன் விளைவாக இத்துறை மக்களுக்கு ஆற்றிவரும் பணியின் தன்மை பல மடங்கு மேம்பட்டுள்ளது.

| செயல் | கணினி மயமாக்கலுக்கு முன் | கணினி மயமாக்கலுக்கு பின்னர் |
|---|---|---|
| 1.வில்லங்க சான்று வழங்கல் | 8 நாட்கள் | 5 நிமிடம் |
| 2. சொத்து மதிப்பீடு | 30 நிமிடம் | 5 நிமிடம் |
| 3.சான்றிட்ட நகல் வழங்கல் | 4 நாட்கள் | 5 நிமிடம் |
| 4. ஆவணப் பதிவு | 4 நாட்கள் | 60 நிமிடம் |
| 5. திருமணச் சான்றுகள் வழங்கல் | 1 நாள் | 15 நிமிடம் |

மீதமிருக்கும் அலுவலகங்களையும் கணினிமயமாக்கல் மற்றும் சொத்துரிமை பெயர் மாற்றங்கள் வருவாய் பதிவேடுகளில் உடனுக்குடன் செய்ய ஏதுவாக மாநிலம் முழுவதும் இணைப்பு வசதி ஏற்படுத்துதல் ஆகியவை துறையின் எதிர்கால திட்டமாகும்.



2004 ஜூலை 27]

## இணைப்பு - II

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 20 – நெடுஞ்சாலைகள் துறை

## சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### I. முன்னுரை

ஒரு மாநிலத்தின் வேகமான வளர்ச்சிக்கு, போதுமான மற்றும் தரமுள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இருப்பது அவசியமாகும். இது மாநில மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும். கிராமங்களை இணைப்பது மற்றும் விரைவில் சென்றடையும் வழிகளை ஏற்படுத்தித் தருதல் போன்றவை கிராமப் புற வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவைகளாகும். தமிழ்நாட்டில் விரிவான சாலைக் கட்டமைப்பு உள்ளது. இக்கட்டமைப்பு, நகர்ப்புறங்களை இணைக்கும் விதமாகவும், வேளாண்மை மையங்கள் மற்றும் கிராமப்புற குடியிருப்புகளை இணைக்கும் விதமாகவும் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில், நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டின் கீழ், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகள் என்ற பல்வேறு வகைகளின்கீழ் மொத்தம் 61208 கி.மீ. நீள சாலைகள் உள்ளன.

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி, போக்குவரத்து அமைப்பில் குறிப்பாக சாலை கட்டமைப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. அபரிமிதமாகப் பெருகியுள்ள வாகனங்களின் எண்ணிக்கையால், ஓடுதளத்தின் நீடித்த தன்மை குறைந்து சாலைகள் விரைவிலேயே பழுதடையும் நிலை உருவாகியுள்ளது. இதனை எதிர்கொண்டு சமாளிக்கும் வண்ணம், சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான முதலீட்டின் அளவை வெகுவாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டினை, அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு முதன்மை மாநிலமாக ஏற்படுத்த வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள சாலை வசதிகளை

மேம்படுத்தும்பொருட்டு முழுமையானதொரு சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர்ப் பகுதியில், போக்குவரத்து மற்றும் போக்குவரவினை திறம்பட நிர்வகிக்கும் முழுமையானதொரு திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டு அமைப்பான உலக வங்கி, உள்நாட்டு நிதி நிறுவனங்களான நபார்டு, ஹட்கோ மற்றும் டுபிட்கோ போன்ற அமைப்புகளிடமிருந்து கடன் பெறுதல், பங்கு பத்திர வெளியீடுகளின் மூலம் நிதி திரட்டுதல் போன்றவற்றின் மூலம் சாலைப் பணிகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாநிலத்தில் உள்ள சாலை உபயோகிப்போருக்கு தரமான, சிக்கன மதிப்பீட்டில் சுற்றுச்சூழலை பாதிக்காத பாதுகாப்பான, நம்பகமான உறுதியான சாலை வசதிகளை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் நெடுஞ்சாலைத் துறை செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், புதிய உத்திகள், சிறந்த நடைமுறைகள். பொருத்தமான நவீன தொழில்நுட்பம், மூலப் பொருட்களை சரியானபடி பயன்படுத்திக் கொள்ளுதல் போன்றவை கடைப்பிடிக்கப் படுகின்றன. இந்நடைமுறைகள் மாநிலத்தின் சமுதாய பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு கடல்சார் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இம்மாநிலத்தை தொழில் மயமாக்கும் நோக்கத்துடன், கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் தனியார் துறைமுகங்கள், தோணித்துறைகள், மிதவைகள் ஆகியவற்றை அமைப்பதற்கு தமிழ்நாடு கடல்சார் வாரியம் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது.

## சாலைகளும் பாலங்களும்

### II. கொள்கை வரைமுறைகள்

நெடுஞ்சாலைத் துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள சாலைக் கட்டமைப்பில் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல், புதுப்பித்தல், பராமரித்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இந்தச் சாலைக் கட்டமைப்பில், பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள், மற்றும் சாலை கீழ்ப் பாலங்கள் ஆகியவையும் அடங்கும்.





சாலைக் கட்டமைப்பிலுள்ள சாலைகள் கீழ்க்காணும் வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன:-

i. தேசிய நெடுஞ்சாலைகள்

ii. மாநில நெடுஞ்சாலைகள்

iii. மாவட்ட முக்கிய சாலைகள்

iv. மாவட்ட இதர சாலைகள்

v. பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலை கீழ்ப்பாலங்கள்.

### அரசு சாலைகளை மறு வகைப்படுத்துவதற்குரிய நெறிமுறைகள்

போக்குவரத்துச் செறிவினைப் பொறுத்து சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துச் செறிவு 30,000 பயணிகள் சீருந்து அலகினை (PCU) விட கூடுதலாக உள்ள சாலைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துச் செறிவு 10,000 பயணிகள் சீருந்து அலகினை விட கூடுதலாகவும் ஆனால் 30,000 பயணிகள் சீருந்து அலகினை விட குறைவாகவும் உள்ள சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. அது போன்றே போக்குவரத்துச் செறிவு 10,000 பயணிகள் சீருந்து அலகினைவிட குறைவாகவும் ஆனால் 5,000 பயணிகள் சீருந்து அலகினைவிட கூடுதலாகவும் உள்ள சாலைகள் மாவட்ட பெரிய சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. 5,000 பயணிகள் சீருந்து அலகினைவிட குறைவாக போக்குவரத்துச் செறிவுள்ள ஏனைய அனைத்துச் சாலைகளும் மாவட்ட இதர சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

குறிப்பிட்ட வரையறைகளுக்கு மிகுதியாக போக்குவரத்துச் செறிவு ஏற்படும்போது ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டில் உள்ள சாலைகளை தேவையான அடுத்த உயர் வகைப்பாட்டிற்கு உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் ஒவ்வொரு வகைப்பாடும் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

**(i) தேசிய நெடுஞ்சாலைகள்**

இச்சாலைகள் பெரும் துறைமுகங்கள், மாநிலத் தலைநகரங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கும் வண்ணம் நாட்டின் நீளவாக்கிலும் அகலவாக்கிலும் சென்றிடும் மிக முக்கியமான சாலைகளாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டு வருவதால், தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெருகி வருவதை கருத்தில் கொண்டு மைய அரசு இப்போக்குவரத்தின் பெருக்கத்திற்கு ஏற்ப தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் தடைகளற்ற துரிதமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக நவீன தொழில் நுட்பங்களையும், தொழில் நுணுக்கங்களையும் கடைபிடித்து தேவைப்படும் இடங்களில் இடவசதிக்கேற்றபடி ஓடுதளங்களை அகலப்படுத்துதல், போக்குவரத்துத் தடங்களை பிரித்தனுப்புதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப்பாதைக் கடவுகளில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு இப்பணிகளின் செயலாக்கத்திற்கு உதவிடும் வகையில் தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் ஆங்காங்கே உள்ள தல அமைப்புக்கேற்ப நான்கு வழிப்பாதையாக அல்லது ஆறு வழிப்பாதையாக சாலைகளை அகலப்படுத்திடவும், சிமெண்ட் கான்கிரீட் ஓடுதளம் அமைக்கவும் முன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி தூண்டுகோலாக இருந்து வருகிறது. தற்போது தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3850 கி.மீ. அளவில் உள்ளது.

**(ii) மாநில நெடுஞ்சாலைகள்**

மாவட்ட தலைமையிடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலைகள் இதில் அடங்கும்.

மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமான 7223 கிலோ மீட்டரில், 1943 கி.மீ. சாலைகள் ஒருவழித்தட சாலைகளாகவும், 1002 கி.மீ. இடைவழித்தட சாலைகளாகவும், 4043 கி.மீ. சாலைகள் இருவழித்தட சாலைகளாகவும், 235 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன. இதில், ஒருவழி மற்றும் இடைவழித்தடமாக உள்ள மொத்தம் 2945 கிமீ.





நீள சாலைகளை இரு வழித்தட சாலைகளாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தவும், தற்போது இருவழி மற்றும் பலவழித்தடமாக உள்ள 4278 கிமீ. நீள சாலைகளை உறுதிப்படுத்தவும், தேவைப்படும் இடங்களில் நேர்ப்பாடுகளை மேம்படுத்தவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

**(iii) மாவட்ட முக்கிய சாலைகள்**

மாவட்டத்தின் உற்பத்தி மையங்கள் மற்றும் சந்தை மையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள், இந்த மையங்களை ஒன்றோடொன்று மற்றும் முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் சாலைகள் ஆகியவை இதில் அடங்கும். மாவட்ட முக்கிய சாலைகளின் மொத்த நீளமான 7376 கி.மீ. சாலைகளில் 4705 கி.மீ. ஒருவழித்தட சாலைகளாகவும், 834 கிமீ. இடைவழித்தட சாலைகளாகவும், 1767 கி.மீ. இருவழித்தட சாலைகளாகவும், 70 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன. இதில், ஒருவழி மற்றும் இடைவழித் தடமாக உள்ள மொத்தம் 5539 கிமீ. நீள சாலைகளை இருவழித்தட சாலைகளாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தவும், தற்போது இருவழி மற்றும் பலவழித் தடமாக உள்ள 1837 கிமீ. நீள சாலைகளை உறுதிப் படுத்தவும், தேவைப்படும் இடங்களில் நேர்ப்பாடுகளை மேம்படுத்தவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

**(iv) மாவட்ட இதர சாலைகள்**

கிராமப்புற உற்பத்தி மையங்களையும் விற்பனை மையங்களையும் இணைக்கும் சாலைகள், வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்கள் மற்றும் இதர பிரதான சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளமான 41156 கி.மீ. சாலைகளில் 39443 கி.மீ. ஒருவழித்தட சாலைகளாகவும், 986 கி.மீ. இடைவழித்தட சாலைகளாகவும், 683 கி.மீ. இருவழித்தட சாலைகளாகவும், 44 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன.

கரும்புச் சாலைகளின் மொத்த நீளமான 1603 கி.மீ. சாலைகளில் 1593 கி.மீ. ஒருவழித்தட சாலைகளாகவும், 10 கி.மீ. இருவழித்தட சாலைகளாகவும் உள்ளன.

ஊரக பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இச் சாலைகள் அடிப்படையாக விளங்குவதால், நிதி நிறுவனங்களின் கடனுதவியைப் பயன்படுத்தி, தற்சமயம் உள்ள 41036 கிமீ. நீள ஒருவழித்தட மாவட்ட

இதர சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகளை இடைவழித்தட சாலைகளாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தவும், 1723 கி.மீ. நீள இடைவழி, இருவழி மற்றும் பலவழித்தட சாலைகளை உறுதிப்படுத்தவும், தேவைப்படும் இடங்களில் நேர்ப்பாடுகளை மேம்படுத்தவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

**(v) பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலை கீழ்ப்பாலங்கள்**

சாலைகளின் நேர்ப்பாடுகளில் குறுக்கிடும் நீர் வழிகள் மற்றும் இருப்புப் பாதை கடவுகளை தவிர்ப்பதற்காக, நெடுஞ்சாலைத் துறை பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலை கீழ்ப் பாலங்கள் ஆகியவற்றை இடவசதிக்கேற்றபடி கட்டும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

அரசு சாலைகளில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள பல பாலங்கள் மிகவும் பழுதடைந்து திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இப்பாலங்களை நிதிநிலைமைக்கேற்றபடி படிப்படியாக திரும்பக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் காவிரி வடிநில மாவட்டங்களில் அரசு சாலைகளில் பழுதடைந்த 204 பாலங்களைத் திரும்பக் கட்ட அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில், மாவட்ட இதர சாலைகளில் உள்ள 94 பாலங்கள் நபார்டு வங்கி நிதியுதவியுடனும், மாநில சாலைகளில் உள்ள 36 பாலங்கள் மத்திய சாலை நிதித் திட்டத்திலும், மாவட்ட முக்கிய சாலைகளில் உள்ள 48 பாலங்களை நபார்டு வங்கி நிதியுதவியுடனும் திரும்பக் கட்டும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 பாலங்களை திரும்பக் கட்டுவதற்கு தேவையான நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு சாலைகளில், ஒரு இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் கொண்ட இருப்புப்பாதைக் கடவுக்குப் பதிலாக சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னுரிமை அடிப்படையில், இரயில்வே பணிகள் திட்டத்தில் இப்பணிகள் சேர்க்கப்படுகின்றன. அணுகு சாலைகள் உட்பட சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும், மைய அரசின் இரயில்வே அமைச்சகமும் ஏற்கின்றன.



வருங்கால இரயில்வே பணி திட்டத்தின்கீழ் மேற்கொள்ள 38 சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலப் பணிகளை தமிழக அரசு தென்னக இரயில்வே துறைக்கு பரிந்துரை செய்துள்ளது. இவற்றுள் 20 பணிகளை வருங்கால இரயில்வே பணிகள் திட்டம் 2004-2005ல் சேர்ப்பதற்காக தென்னக இரயில்வே, இரயில்வே வாரியத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. வாரியத்தின் ஒப்புதல் பெற்றவுடன் இப்பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த 38 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலப் பணிகள் தவிர, 22 இருப்புப் பாதை கடவுகளில் சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டுவதற்குரிய சாத்தியக் கூறுகளை கண்டறிந்து வருங்கால இரயில்வே பணிகள் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## III. நடைபெற்று வரும் திட்டங்கள்

கொள்கை வரைமுறைப் பகுதியில் விளக்கப்பட்ட நோக்கத்தினை அடையும் பொருட்டு பின்வரும் திட்டங்களை 2004-2005ல் செயல்படுத்திட கருதப்பட்டுள்ளது.

### 1. சாலைப் பணிகள்

### 1.1. தேசிய நெடுஞ்சாலை மூலப்பணிகள் மற்றும் பராமரிப்பு

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 38.50 கி.மீ. ஆகும். மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைக் கொண்டு மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில், முன்னேற்றப் பணிகள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ரூ.130 கோடி மதிப்பீட்டில் 2004 - 2005ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. 2004-2005ஆம் ஆண்டு திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு விவர மதிப்பீடுகள் மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறைக்கு அனுப்பப்படுகிறது.

முன்னரே அங்கீகரிக்கப்பட்டுவிட்ட ஆண்டுத் திட்டத்தைத் தவிர, ரூ.61.90 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பணிகள் அடங்கிய பட்டியல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தேசிய நெடுஞ்சாலைகளை உரிய தரத்திற்கு ரூ.1300 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு

செய்ய உத்தேசித்து அதற்கென முழுமையான பிரேரணை ஒன்று மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும் மேம்படுத்தும் பணி தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய, பயன்பாட்டு சாதனங்களை இடமாற்றும் பணிக்குத் தேவையான கூடுதல் செலவினத்தை ஏற்க தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது.

1.2. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம்

தங்க நாற்கரம், வடக்கு - தெற்கு சாலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், இதர பணிகள் மற்றும் துறைமுக இணைப்புத் திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு / ஆறு வழிப்பாதைகளாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தால் (NHAI) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

அ) தங்க நாற்கர திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தே.நெ. 4, 5, 46 மற்றும் 7-ல் மொத்தம் 341 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன. இதில், 97.60 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிவடைந்துவிட்டன. இதர பகுதிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளை டிசம்பர் 2004-ல் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) வடக்கு – தெற்கு சாலைப் பகுதி இணைப்புத் திட்டம்

தேசிய நெடுஞ்சாலை 7 மற்றும் தேசிய நெடுஞ்சாலை 47ல் 851 கி.மீ. நீள சாலைகள் வடக்கு தெற்கு பகுதி இணைப்புத் திட்டத்தில் அடங்கியுள்ளது. இதில் 50.40 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 19.20 கி.மீ. நீள சாலைப் பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள 781.40 கி.மீ. நீள சாலைப் பணிகள் தொடக்க நிலையில் உள்ளன.

இ) துறைமுக இணைப்பு திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தே.நெ. 7A-ல் (பாளையங்கோட்டை தூத்துக்குடி சாலை), 51 கி.மீ. நீள சாலை நான்கு வழிப்பாதையாக மேம்படுத்தப் படவுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.





மேலும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு உட்படாத 92.48 கி.மீ. நீள சாலைப் பகுதிகளும் நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தப்படவுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தே.நெ. 47 (கேரள எல்லை - கன்னியாகுமரி பகுதி) | 56.00 கி.மீ. |
| தே.நெ. 66 (பாண்டி-கிருஷ்ணகிரி சாலை திண்டிவனம் வரை) | 36.48 கி.மீ. |
| மொத்தம் | 92.48 கி.மீ. |

நான்கு மற்றும் ஆறு வழிப்பாதைகளாக அகலப்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக தனியார் ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து பிரேரணைகள் தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தால் கோரப்பட்டுள்ளன.

ஈ) இதர திட்டங்கள்

இத்திட்டத்தில் 450 கி.மீ. நீளத்திற்கான தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தே.நெ. 45-ல் தாம்பரம் முதல் திண்டிவனம் வரை 93 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி 2004-2005ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதிகளில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.3. மாநில நெடுஞ்சாலைகள்

2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் 77.30 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இப்பணிகளுக்கு ரூ.9.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4. மாவட்ட முக்கிய சாலைகள்

2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் 121.70 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 8.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

1.5. மாவட்ட இதர சாலைகள்

2003-2004 ஆம் ஆண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VIII ன் கீழ் 126.90 கி.மீ. நீள 31 சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.9.47 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 60 கி.மீ. நீளத்திற்கான சாலைப் பணிகள் இதுவரையில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி IX-ன்கீழ் 998.72 கி.மீ. நீள 225 சாலை மேம்பாட்டுப் பணிகளை ரூ.87.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

1.6. ஊரகச் சாலைகள்

தமிழ்நாட்டில் உள்ள பல கிராமங்களில் வேளாண்மையே முக்கியத் தொழிலாக உள்ளது. எனவே இக்கிராம மக்கள் தங்கள் விவசாய விளை பொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்கும் விற்பனைக் கூடங்களுக்கும் விரைவாக எடுத்துச் செல்ல வசதியாக கிராமச் சாலைகள் அனைத்தையும் அனைத்துப் பருவத்திற்கும் ஏற்றவாறு மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் ஆகும். கிராமச் சாலைகள் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களின்கீழ் தார்ச்சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

அ) கிராமச் சாலைகள் திட்டம்

ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம்

இ) பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம்



2004 ஜூலை 27]

அ) கிராமச் சாலைகள் திட்டம்

கீழ்க்காணும் குறியீடுகளின் அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் புதிய சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 1999ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி 500-க்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.
- அமைக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் 1.60 கி.மீ. நீளத்திற்கு மேல் இருக்க வேண்டும்.
- ஏற்கனவே, மேற்படி கிராமங்கள் தார்ச் சாலைகளினால் இணைப்பு பெற்று இருத்தல் கூடாது.

500 முதல் 1000 வரை மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டம் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. 500 முதல் 1000 வரை மக்கட் தொகை கொண்ட கிராமங்களுள், அனைத்துப் பருவத்திற்கும் ஏற்ற சாலை வசதிகள் இல்லாத கிராமங்கள் 4986 என கண்டறியப்பட்டது. 2003-2004 வரை ரூ.234.91 கோடி மதிப்பீட்டில் 824 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளன. 2004-2005-ல் 195 கிராமங்களுக்கு 313.35 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளை ரூ.43.81 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2004-2005 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.45 கோடியாகும்.

ஆ) ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி (சிறப்பு உறுப்பு திட்டம்)

கிராம மக்கட் தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதிதிராவிடர் மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு தார்ச் சாலை வசதி செய்திட இத்திட்டம் வழிவகுக்கிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ், 2003-2004 வரை ரூ.87.07 கோடி மதிப்பீட்டில் 268 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி தரப்பட்டுள்ளது. 2004–2005-ல் 68

கிராமங்களுக்கு 95.65 கிமீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளை ரூ.13.05 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2004–2005 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.15.05 கோடியாகும்.

இ) பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 3 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன. 2004-2005ல் 128.15 கிமீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளை ரூ.16.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2004–2005 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.25 கோடியாகும்.

2. பாலப் பணிகள்

2.1. அரசு சாலைகளில் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்

பகுதி 2 திட்டத்தின்கீழ் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 45 பாலங்களை திரும்பக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2. மாவட்ட இதர சாலைகள்

2.2.1. மாவட்ட இதர சாலைகளில் பாலமில்லா இடங்களில் பாலங்கள் கட்டுதல்

பொது மக்களின் நீண்ட கால தேவை மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, மாவட்ட இதர சாலைகளில் பாலமில்லா



இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 2004-2005-ல் பகுதி-2 திட்டத்தின்கீழ் 150 பாலப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2004–2005ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.2. நபார்டு கடனுதவியின்கீழ் எடுக்கப்படும் பாலங்கள்

2003-2004 ஆம் ஆண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VIII ன் கீழ் 111 பாலங்களை கட்டுதல் மற்றும் திரும்பக் கட்டும் பணி ரூ.40.54 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 35 பாலப் பணிகள் இதுவரையில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி IX-ன்கீழ் 8 பாலப் பணிகளை ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2.3. ஊரகச் சாலைகள்

அ) கிராமச் சாலைகள் திட்டம்

2003–2004ல் இத்திட்டத்தின்கீழ் 12 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2004-2005ல் 3 பாலப் பணிகளை ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

ஆ) ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி (சிறப்பு உறுப்பு திட்டம்)

2003–2004ல் இத்திட்டத்தின்கீழ் 1 பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2004–2005ல் 2 பாலப் பணிகள் ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

[2004 ஜூலை 27

இ) பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டுத்திட்டம்

2003-2004ல் இத்திட்டத்தின்கீழ் 7 பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 2004-2005ல் 3 பாலப் பணிகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள வகைசெய்யும் ஒரு புதிய திட்டத்திற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2.4. தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளுக்குப் பதிலாக சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

உத்தமர்கோயில் அருகே இருப்புப்பாதை கடவு எண் 246 மற்றும் திருவரங்கத்தில் கடவு எண் 241 ல் மேற்கொள்ளப்பட்ட சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. தென்னூர் சாலையில் கடவு எண். 84க்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஹீபர் சாலையில் கடவு எண். 85க்குப் பதிலாக சாலை மேம்பாலம் கட்டும் பணி 2004-2005ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலப் பணிகள் ஹட்கோ நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக ரூ. 62.04 கோடியை ஒப்பளிப்பு செய்துள்ள ஹட்கோ நிறுவனம் இதுவரை ரூ.45.08 கோடியை விடுவித்துள்ளது.

குரோம்பேட்டை இரயில் நிலையம், எம்.ஐ.டி. கேட் அருகில் நடைபெற்று வரும் சாலை மேம்பாலப் பணி 2004-2005ல் முடிவடையும்.

மேலும், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், இருப்புப்பாதை கடவுகளுக்கு பதிலாக 36 சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்களை ரூ. 513.92 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகளில் சென்னை கடற்கரை சந்திப்பிற்கும், தாம்பரம் இரயில் நிலையத்திற்கும் இடையே அகல இருப்புப் பாதையாக மாற்றும் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ள 6 சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்களும் அடங்கும். இத்திட்டங்களை மேற்கொள்ள ஹட்கோவிடமிருந்து ரூ.200 கோடி கடன் பெற அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட பணிகளில் 24 பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. இதர பணிகள் ஆரம்ப கட்ட நிலைகளில் உள்ளன.

மேலும், இரு பாலப் பணிகளை அதாவது 1) சென்னையில் தர்கா சாலையில் இருப்புப் பாதை கடவு எண்.25ல் ஒரு குறைந்த பயன்பாட்டு



2004 ஜூலை 27]

சுரங்கப் பாதையும் 2) ராதாநகர் இருப்புப் பாதை கடவு எண்.27ல் சுரங்க நடைபாதையும் ரூ.8.73 கோடி மதிப்பீட்டில் கட்ட அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகளும் ஹட்கோ கடனுதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரத்திற்கு இடையே உள்ள இருப்புப் பாதை கடவு எண்.26க்குப் பதிலாக நான்கு வழித் தட சாலை மேம்பாலம் அமைப்பதற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் நிலம் கையகப்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. மேலும், தாம்பரத்தில் உள்ள இருப்புப் பாதை கடவு எண்.30ல் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாலம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5. ஹட்கோ கடனுதவியுடன் பாலங்களை கட்டுதல் / திரும்பக் கட்டுதல்

ஹட்கோ கடனுதவியுடன், ரூ. 60 கோடி மதிப்பில் 61 பாலங்களை கட்டுதல் / திரும்பக்கட்டுதல் பணிகளை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 22 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 18 பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 21 பாலப் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6. காவிரி வடிநில மாவட்டங்களில் பாலங்களை கட்டுதல்/ திரும்பக் கட்டுதல்

நபார்டு கடனுதவியுடன், ரூ. 33.49 கோடி மதிப்பில் 48 பாலங்களை கட்டுதல் / திரும்பக் கட்டுதல் பணிகளை காவிரி வடிநில மாவட்டங்களில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 17 பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 31 பாலப் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

3. சிறப்புப் பகுதிகளில் சாலைகள்

3.1. இதர மாவட்ட சாலைகள் (பேருந்து வழித் தடங்கள்) மேம்பாடு

2003–2004ஆம் ஆண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 3000 கி.மீ. நீள பேருந்து போக்குவரத்திற்கு தகுதியற்ற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்காள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் 1661 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2. உள்வட்டச்சாலை (சென்னை)

உள்வட்டச் சாலையின் தெற்குப் பகுதியைத் தவிர அனைத்துப் பணிகளும் முடிவடைந்துள்ளன. உள்வட்டச் சாலையின் தெற்கு பகுதியில் சாலைக் கீழ்ப்பாலப் பணி மற்றும் 4.40 கி.மீ. சாலை அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 5 கி.மீ. நீள சாலைப் பணியில் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3.3. மதுரை ஆரச் சாலைகள்

மதுரை நகரை வந்தடையும் ஆரச்சாலைகளின் மேம்பாடு ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 125.36 கி.மீ. நீளமுள்ள 12 சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்டப் பாலப் பணியும், ஒரு சாலை மேம்பாலப் பணியும் அடங்கும். இப்பணிகளுள் 76.50 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டும், மீதமுள்ள சாலைப் பணிகள் நல்ல முன்னேற்றத்திலும் உள்ளன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டுவிடும். உயர்மட்டப் பாலப் பணி 2004 அக்டோபர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும். எல்லீஸ்நகர் சாலை மேம்பாலப் பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டப் பணிகளை மேற்கொள்ளும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.33.88 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 27]

3.4. புறவழிச் சாலைகள்

மாநகரங்கள் மற்றும் நகரங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச் சாலைகள் மற்றும் வட்டச் சாலைகள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. 2003-2004ஆம் ஆண்டில் கும்பகோணம் நகரைச் சுற்றி ரூ.24.09 கோடி மதிப்பீட்டில் 8.76 கி.மீ. நீள புறவழிச் சாலை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது. இராமநாதபுரம், தேனி, திருவள்ளூர் ஆகிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மேட்டுப்பாளையம் மற்றும் துறையூர் ஆகிய நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் கருத்துருக்கள் பரிசீலனையில் உள்ளன. சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் நகரங்களில் வட்டச் சாலை அமைக்கும் திட்டங்களுக்கான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப்படவுள்ளது.

3.5. சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 2003-2004-ல் சென்னை மாநகரின் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்த ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.30.35 கோடி மதிப்பீட்டில் 28 பணிகள் மற்றும் ரூ.19.53 கோடி மதிப்பீட்டில் 27 பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் ஒப்படைக்கப்பட்டு, நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.

சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேலும் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ், புதிய பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ.16 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அ) 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.10 கோடியில் போக்குவரத்து மேலாண்மைக்காக சாலை மேம்பாலங்கள் அமைத்தல்.

ஆ) 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1 கோடியில் சென்னைப் பெருநகர பகுதி பேருந்து போக்குவரத்து சாலைகளை மேம்படுத்துதல்.

[2004 ஜூலை 27

இ) 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.5 கோடியில் சென்னைப் பெருநகர் பகுதியில் விடுபட்ட சாலை இணைப்புகளை ஏற்படுத்துதல்.

மேலும், 2004–2005 இல் சென்னைப் பெருநகர் பகுதியில் ரூ.370 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும் ஒரு பெரும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தில் கீழ்க்காணும் இனங்கள் உள்ளன:

- 45.70 கிமீ. நீள ஒருவழித் தடச் சாலைகளை இருவழித் தடச் சாலைகளாக அகலப்படுத்துதல்.
- 123.70 கிமீ. நீள இருவழித் தடச் சாலைகளை நான்கு வழித் தடச் சாலைகளாக அகலப்படுத்துதல்.
- 11.73 கிமீ. நீள இருவழித் தடச் சாலைகளை ஆறு வழித் தடச் சாலைகளாக அகலப்படுத்துதல்.
- 18.25 கிமீ. நீள நான்கு வழித் தடச் சாலைகளை ஆறு வழித் தடச் சாலைகளாக அகலப்படுத்துதல்.
- சாலைகளை வலுப்படுத்துதல், சாலைப் பிரிப்பான்களை மாற்றியமைத்தல், பல அடுக்கு சாலைகள் அமைத்தல் (Grade Separators), நிலம் கையகப்படுத்துதல் முதலியன.

## 4. சிறப்பு திட்டங்கள்

### 4.1. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ.2160 கோடியில், ரூ.1670 கோடிக்கு உலக வங்கி கடன் உதவி அளித்துள்ளது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட மூன்று கூறுகள் உள்ளன:

அ) 727 கிமீ. நீள சாலைகளை தரம் உயர்த்துதல் மற்றும் 12புறவழிச் சாலைகள் அமைத்தல்.



2004 ஜூலை 27]

ஆ) 2000 கிமீ. சாலைகளை பராமரித்தல் மற்றும் சாலை பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

இ) நிர்வாக அமைப்பை வலுப்படுத்துதல்.

கட்டுமானப் பணிகள் கீழ்க்கண்டவாறு நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| தொகுப்பு எண். | நீளம் | சாலை இணைப்புகள் |
|---|---|---|
| 01 | 393 கிமீ. | 9 புறவழிச் சாலைகள் மற்றும் 6 சாலை மேம்பாலங்களை உள்ளடக்கிய ஆற்காடு முதல் திருவாரூர் வரை உள்ள சாலை |
| 02 | 116 கிமீ. | 3 புறவழிச் சாலைகள் மற்றும் 3 சாலை மேம்பாலங்களை உள்ளடக்கிய நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரை உள்ள சாலை |
| 03 | 100 கிமீ. | கட்டுமாவடி முதல் இராமநாதபுரம் வரை |
| 04 | 118 கிமீ. | இராமநாதபுரம் முதல் தூத்துக்குடி வரை |

தரம் உயர்த்தும் பணிகள், முதல் ஆண்டு பராமரிப்புப் பணிகள் மற்றும் ஆலோசகர் சேவைப் பணி ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளன. இத்திட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களை மறுகுடியமர்த்தல் மற்றும் மறு வாழ்விற்கென கொள்கை வரையறை ஒன்றை உருவாக்கி அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் இக்கொள்கை வரையறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த திட்டமும் அடங்கியுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

4.2. மத்திய சாலை நிதி திட்டம்

2000 ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சிறப்புத் தீர்வை விதிப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதியைக் கொண்டு மத்திய சாலை நிதி ஒன்றை, மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாக மத்திய அரசு தோற்றுவித்துள்ளது. இந்நிதியிலிருந்து 2000 முதல் 2003 ஆம் ஆண்டு வரை ரூ.114.36 கோடியும், 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.80 கோடியும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு மத்திய சாலை நிதி பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.3. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம் ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. 2003-2004 ஆம் ஆண்டில் தேனி, திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.45 இலட்சம் மதிப்பில் மூன்று சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

4.4. பன்மாநில சாலைகள் இணைப்புத் திட்டம்

ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் ஒரு சாலைப் பணி மற்றும் இரு பாலப் பணிகளை பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. இத்திட்டத்தின்கீழ், தேனி மாவட்டத்தில், கம்பம்-கம்பம்மெட்டு சாலை கி.மீ. 0/0-8/8 மேம்பாட்டுப் பணியினை ரூ.1.50 கோடி. மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளும் ஒரு புதிய திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

5. சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள்

மாநிலத்தின் சாலையோரங்களில் கனி மற்றும் நிழல் தரும் மரங்கள் தற்போது இலட்சக் கணக்கில் உள்ளன. இதன் பலனை பெறும் உரிமை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. சாலையோரங்களில் புதிய மரக்கன்றுகளை நட்டு, குறிப்பிட்ட காலத்திற்கு பராமரித்து பின்



2004 ஜூலை 27]

அவற்றை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கும் பொறுப்பை வனத்துறைக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. கருவிகளும், தளவாடங்களும்

இத்துறையின் பல்வேறு கருவி மற்றும் தளவாடங்களின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையில் இயந்திர அலகு மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நாடு சுதந்திரம் அடைந்தபின் சாலைப் பணிகளுக்கான இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு பணிகளுக்காக வாடகைக்கு இத்துறையால் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது இந்த இயந்திரங்கள் பயனற்ற நிலையிலும், பராமரிக்க அதிக செலவினம் கொண்டதாகவும் உள்ளது. மேலும், தற்போது உள்நாட்டிலேயே தயாராகும் நவீன இயந்திரங்கள் ஒப்பந்தக்காரர்களிடம் இருப்பதாலும், பணிகளுக்கான ஒப்பந்தங்களில் இயந்திரங்களை ஒப்பந்தக்காரர்களே வைத்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுவதாலும், துறையின் இயந்திரங்கள் அறவே தேவைப்படாத நிலை உள்ளது. எனவே, இத்துறையின் இயந்திர அலகை முடிக்கவும், பயனற்ற 2802 தளவாடங்களை கழித்து ஒதுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இதுவரை 1563 தளவாடங்களை கழித்து ஒதுக்கும் பிரேரணைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றை அப்புறப்படுத்த 2003-2004-ல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீதமுள்ள தளவாடங்கள் 2004-2005-ல் கழித்து ஒதுக்கப்படும்.

7. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

ஆராய்ச்சி நடவடிக்கைகள்

சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் அமைக்கப்படும் சாலைகள், கட்டப்படும் பாலங்கள் மற்றும் அவற்றின் பராமரிப்பு தொடர்பான செயல்முறை ஆராய்ச்சிகளை இந்த ஆராய்ச்சி நிலையம் செய்து வருகிறது. கீழ்க்காணும் பிரிவுகளில் ஆராய்ச்சிகளை முழுமையாக மேற்கொள்ளும் வண்ணம், ஆய்வகங்கள் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன:

அ. மண் மற்றும் அடித்தளப் பொறியியல்

ஆ. கற்கலவை மற்றும் கட்டுமானம்

இ. நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்

ஈ. போக்குவரத்து மற்றும் போக்குவரவு

இந்நிலையத்தில் தற்சமயம் நடந்து வரும் ஆராய்ச்சி பணிகளைத் தவிர மேலும் ஒரு முக்கிய ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ள 2004-05ல் திட்டமிடப்பட்டுள்ளது. மணல், சரள் கலவையின் இளகும் தன்மையில் பெரும் துகள் அளவுகளின் தாக்கம் எந்த அளவிற்கு ஒத்துக் கொள்ளலாம் என்பதை கண்டறிவதே இவ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

தரக்கட்டுப்பாடு

துறையில் மேற்கொள்ளப்படும் பணிகளின் செயலாக்கத்தின்போது தரக்கட்டுப்பாடு நடைமுறைகள் அமல்படுத்துவதை உறுதி செய்யவும், பணியிடங்களில் தேவைப்படும் சோதனைகளை மேற்கொள்ள வசதியாக, மாநில அளவில் கூடுதல் ஆய்வு மையங்கள் தேவைப்பட்டதால், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை ஆகிய இடங்களில் வட்டார ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. துறையினால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளிலும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் தரக்கட்டுப்பாடு அலுவலராகச் செயல்படுகிறார். தற்போதுள்ள தரக்கட்டுப்பாடு பிரிவினை, மேலும் முனைப்பாக செயல்படும் விதத்திலும், அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படாத வகையிலும், 2004-2005ம் ஆண்டில் பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளுக்கான மதிப்பீடுகளில் தரக்கட்டுப்பாடு சோதனைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில், 50 சதவீத தொகை தரக்கட்டுப்பாடு பிரிவை பலப்படுத்த பயன்படுத்திக் கொள்ளப்படும். இதற்கிடையில், தற்போதுள்ள தரக்கட்டுப்பாடு அலுவலர்களையும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய அலுவலர்களையும் கொண்டு தேவைப்படும் தரக்கட்டுப்பாடு சோதனைகளும், சோதனை சரிபார்ப்புகளும், அவ்வப்போது ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தகவல் தொகுப்பு வங்கி

துறையில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில் நுட்ப விவரங்களையும், புள்ளி விவரங்களையும் தேவைப்படும்போது அறிந்து கொள்ள உதவியாக தகவல் தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. 728 பெரிய பாலங்கள், 2718 சிறு பாலங்கள் பற்றிய விவரங்களும், 3925



இடங்களில் எடுக்கப்பட்ட போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு அலுவலர்கள் மூலமாக கணக்கீடு செய்யும் முறையை கைவிட்டு தானியங்கி முறையில் கணக்கீடு செய்யும் கருவி மூலமாக கணக்கெடுப்பு செய்யும் முறையை அமல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டம்

ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது வாரத்தில் மண்வளம், நிலக்கீல், கான்கிரிட், போக்குவரத்து மற்றும் கணினி பாடப் பிரிவுகளில் 5 நாட்களுக்கு துறையிலுள்ள உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு, குழுக் குழுவாக தரக்கட்டுப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இது ஒரு தொடர் பயிற்சித் திட்டமாகும்.

தரக்கட்டுப்பாடு அமலுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்தும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக செய்யும் நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் மேற்படி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

8. சாலைப் பாதுகாப்புத் திட்டம்

சாலைப் பாதுகாப்பு, புதிய சாலைக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சமாகும். சாலை பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளாலேயே அதிக விபத்துகளும், உயிர் சேதங்களும் ஏற்படுகின்றன என்பது சாலை விபத்துக்கள் பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

நெடுஞ்சாலைத் துறை, விபத்து நேரக்கூடிய இடங்களை சீரமைக்கும் திட்டத்தை ஆண்டுதோறும் செயல்படுத்தி வருகிறது. சாலை மைய பிரிப்புகள், சந்திப்புகளை மேம்படுத்துதல், சாலையின் பக்கவாட்டில் தேவைப்படும் இடங்களில் சுவர்கள் கட்டுதல், சாலை குறியீடுகளை வைத்தல், போக்குவரத்து சிக்னல்கள் அமைத்தல், பிரதிபலிப்பான்களை (Reflectors) வைத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும். தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், இப்பணிகளுக்காக 2004-2005ம் ஆண்டிற்கான திட்டப் பணிகளில் ரூ.11.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, மாநில சாலைகளில் (மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள்) விபத்து நடக்கக் கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளை ரூ.53 கோடி மதிப்பீட்டில் படிப்படியாக மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

9. பொது - தனியார் நிறுவனங்கள் பங்கேற்பு

அடுத்தடுத்த ஐந்தாண்டு திட்டங்களில் சாலைகள் அமைப்பு மற்றும் பராமரிப்பிற்கென குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்துள்ளது. இதனால் சாலைகளை உயர்தரத்திற்கு மேம்பாடு செய்தல், காலமுறை புதுப்பித்தல் மற்றும் வலுப்படுத்துதல் போன்ற பணிகளில் தொய்வு ஏற்பட்டது மட்டுமின்றி தற்போதுள்ள சாலை மற்றும் பாலங்களை சீரான முறையில் பராமரிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய புறவழிச் சாலைகளை அமைத்தல், பாலங்கள் கட்டுதல், உயர்தர சாலைகளை அமைத்தல் போன்ற பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்வதால் மட்டுமே சாலை கட்டமைப்பை உயர்ந்த மேம்படுத்தப்பட்ட நிலைக்கு கொண்டுவர முடியும். முக்கிய சாலை மேம்பாட்டு பணிகளை தனியார் பங்கேற்பு மூலமாகவும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

9.1. கிழக்குக் கடற்கரை சாலை

வணிக ரீதியில் சாலை மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் செயலாக்கத்தினை மேற்பார்வையிடல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் ஐ.எல் & எப்.எஸ் (IL&FS) ஆகிய நிறுவனங்களின் சம பங்கு தொகையுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாலை அமைப்பில் தனியார் பங்கேற்பிற்கு முன்னோடியாக, கிழக்குக் கடற்கரை சாலையினை கி.மீ. 22/3 முதல் 13.5/5 வரை மேம்படுத்தி பராமரித்தல் பணியினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9.2. தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை (IT Express way)

அடையாறிலுள்ள மத்திய கைலாஷிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலையிலுள்ள சிறுசேரி வரை உள்ள சாலையை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலையை ரூ.101 கோடி மதிப்பீட்டில் தனியார் பொது பங்கேற்பின் மூலம் கீழ்க்கண்ட வசதிகளைக் கொண்ட உலகத்தரம் வாய்ந்த ஆறு வழிச் சாலையாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:



2004 ஜூலை 27]

- இரண்டு மீட்டர் மத்திய தடுப்பான்
- வடிநீர் வசதி
- மழைநீர் சேகரிப்பு வசதி
- சேவை சாலைக்கான சிறப்பு வசதி
- உறுதியான புருவங்கள்

இப்பகுதியில் அமைந்துள்ள அனைத்து தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இந்த துரித நெடுஞ்சாலை இணைப்புச் சாலையாக செயல்படும். மேலும், இச்சாலை தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, வேலைவாய்ப்பினையும் அதிகரிக்கும். இத்திட்டத்தின் ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9.3. இதர திட்டங்கள்

9.3.1. எண்ணூர்-மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் (ENNORE – MANALI ROAD IMPROVEMENT PROJECT)

சென்னை—எண்ணூர் துறைமுக இணைப்புத் திட்டம் தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்தால் வணிக ரீதியில் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தை செயல்படுத்த சென்னை – எண்ணூர் துறைமுக சாலை நிறுவனம் என்ற பெயரில் நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.30 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் கீழ்காணும் கூறுகள் உள்ளன:

1. தற்போதுள்ள 6.80 கி.மீ. நீள எண்ணூர் விரைவுச் சாலையை நான்கு வழிப் பாதையாக அமைத்து கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2. மணலி எண்ணெய் சுத்திகரிப்பு சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை –5 வரையிலான உள்வட்டச் சாலையின் வடக்குப் பகுதி ஆகியவற்றில் சிறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு உயர்நிலைப்படுத்துதல்.

[2004 ஜூலை 27

3. திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையை தளமிட்ட புருவங்களை கொண்ட நான்கு வழிப் பாதையாக மாற்றுதல்.

### 9.3.2. சென்னை புறவழிச் சாலை

சென்னை புறவழிச் சாலை அமைப்புப் பணியின் இரண்டாம் கட்டமாக, தேசிய நெடுஞ்சாலை எண்.4 மற்றும் தேசிய நெடுஞ்சாலை எண்.5-ஐ இணைக்கும் (12.60 கி.மீ.) பணியில், நேர்ப்பாடு பணிகள் தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்தால் இறுதி செய்யப்பட்டுவிட்டன. ஒப்பந்தக்காரர்களின் முன்தகுதி பற்றிய விவரங்கள் அழைக்கப்பட்டுள்ளன.

### 9.3.3. தேசிய நெடுஞ்சாலை

சேலம் – உளுந்தூர்பேட்டை சாலை (தே.நெ.எண்.68) மற்றும் திண்டுக்கல்– கோயம்புத்தூர் சாலை (தே.நெ.எண்.209) ஆகிய இரு சாலைகளை மேம்படுத்தி பராமரிப்பது தொடர்பான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை, பொது – தனியார் நிறுவன பங்கேற்பு அடிப்படையில், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் 10/04/2002 அன்று கையொப்பம் இடப்பட்டுள்ளது.

மேற்காணும் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை 68 மற்றும் தேசிய நெடுஞ்சாலை 209-ல், கீழே குறிப்பிட்டுள்ளபடி இரு கட்டங்களில் நிறைவேற்ற தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் உத்தேசித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| தே.நெ.209 | கட்டம்-1 | பொள்ளாச்சியிலிருந்து கோவை வரை | 42.00 கி.மீ. |
| | கட்டம்-2 | திண்டுக்கல் முதல் பொள்ளாச்சி வரை | 118.00 கி.மீ. |
| தே.நெ. 68 | கட்டம்-1 | சேலம் முதல் இராயப்பனூர் வரை | 74.00 கி.மீ. |
| | கட்டம்-2 | இராயப்பனூர் முதல் உளுந்தூர்பேட்டை வரை | 60.20 கி.மீ. |

மேற்படி மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முன்தகுதி பற்றிய விவரங்கள் பெறப்பட்டு, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் இறுதி செய்யப்பட்டுள்ளது.



2004 ஜூலை 27]

### 10. நெடுஞ்சாலைச் சட்டம்

தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001-ல், சாலையோரத் தொடர் கட்டட வளர்ச்சியை தடுக்கவும், நெடுஞ்சாலை எல்லைக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், சாலையோரப் பணிகளைச் சீராக மேற்கொள்ளவும், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு போதுமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. சீரான சாலைப் போக்குவரத்தினை உறுதி செய்யவும், விபத்துக்களை குறைக்கவும், நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புக்களை அவ்வப்போது அகற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

### 11. சாலைக் கொள்கை

ஒரு புதிய சாலைக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இக்கொள்கையின் அடிப்படையில் பொறியியல் மற்றும் பொருளாதார அம்சங்கள் மட்டுமின்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமுதாய வளர்ச்சி ஆகிய அம்சங்களையும் கருத்தில் கொண்டு பணிகள் நிறைவேற்றப்படும். இக்கொள்கையின் இதர நோக்கங்கள் பின்வருமாறு :-

- ➢ சமூக - பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் வகையில் சாலை கட்டமைப்பில் பணிகளை நிறைவேற்றல்.
- ➢ பொதுத் துறை மற்றும் தனியார் பங்கேற்பை ஊக்குவிப்பதன் மூலம் நிதி ஆதாரங்களுக்கு வழிவகை செய்தல்.
- ➢ நவீன தொழில் நுட்பங்கள் மூலம் சாலைகளின் கட்டுமானம், வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் செயலாக்கத்தின் தரத்தினை உயர்த்துதல்.
- ➢ நெடுஞ்சாலைச் சொத்துகளையும் ஆதாரங்களையும் சிறந்த முறையில் நிர்வகித்தல்.

### 12. தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினிமயமாக்கல்

தகவல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இத்துறையில் மேற்கொள்ளப்படும் பணிகளின் அளவும் தரமும் உயர்ந்துள்ளன. வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப தகவல்

[2004 ஜூலை 27

தொழில்நுட்ப வசதிகளான இணையம் மற்றும் மின் அஞ்சல் ஆகியவை பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் நெடுஞ்சாலைத் துறையின் செயல்திறனை அதிகப்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் ஒரு பகுதியாக நவீனமயமாக்கல், திறன் வளர்ப்பு ஆகியவற்றிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறையை, தலைமை அலுவலகம் முதல் கோட்ட அலுவலகம் வரை, ரூ.15 கோடி மதிப்பீட்டில் கணினி மயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக கணினிகள் வாங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

*13.* இணையதளம்

நெடுஞ்சாலைத் துறைக்கென பிரத்தியேகமாக www.tnhighways.org என்கின்ற விலாசத்துடன் ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறையின் அனைத்து முக்கிய செயல்பாடுகள், ஆலோசகர் அழைப்புக் கடிதங்கள், துறைக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் போன்ற விவரங்கள் இணையதளத்தில் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வப்போது விவரங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

*14.* நிறுவன மேம்பாடு

நெடுஞ்சாலைத் துறையின் நிறுவன மற்றும் நிதித் திறனை மேம்படுத்த அமெரிக்காவை சார்ந்த பூஸ் ஆலன் ஹேமில்டன் மூலம் நிறுவன மேம்பாடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒருங்கிணைப்பு, மேலாண்மை, அடிப்படை செய்முறை, தகவல்முறை, நிதித் தொடர்பான நுட்பம் மற்றும் ஒழுங்குமுறை ஆகியவற்றின் சீர்திருத்தத்திற்கு பரிந்துரைகள் செய்யப்பட்டன. நெடுஞ்சாலைத் துறையின் திறமையையும் பணிபுரியும் முறையையும் மேம்படுத்த அரசு இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

*15.* வடிவமைப்பு மற்றும் தல ஆய்வு

துறையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் பணிகள் தொடர்பான புல ஆய்வு, தொழில்நுட்ப விவரங்கள் சேகரிப்பு, வடிவமைப்பு, மதிப்பீடு தயாரித்தல் போன்ற ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு செயல்பட்டு வருகிறது.



2004 ஜூலை 27]

தொடக்க கட்ட ஆய்வுப் பணிகளில் அடித்தள அமைப்பு, நீரோட்டம் போன்ற தல விவரங்கள் சேகரிப்பு, பணிகளின் தன்மைக்கேற்ப தேவைப்படும் அடிப்படை விவரங்கள் சேகரிப்பு ஆகியன அடங்கும். இவ்விவரங்கள் சேகரிக்கப்பட்டவுடன் விரிவான வடிவமைப்பும், மதிப்பீடும் இந்த அலகில் தயாரிக்கப்படுகின்றன. முன்னரே இறுதி செய்யப்பட்ட வடிவமைப்பில் அடித்தள மாற்றம் காரணமாக, தேவையான மாற்றங்களை செய்வது, இலாபகரமான ஒப்பந்தங்களைப் பெற மாற்று வடிவமைப்புகளைத் தயார் செய்வது, சாலை மற்றும் பாலப் பணிகளில் கடைப்பிடிக்க வேண்டிய நிலையான தொழில்நுட்பக் குறியீடுகளை நிர்ணயிப்பது போன்ற பணிகளும் இந்த அலகில் மேற்கொள்ளப்படுகின்றன.

*2004-2005* ஆம் ஆண்டில் ரூ.*208* கோடி மதிப்பிலான *32* பாலப்பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்க இந்த அலகு திட்டமிட்டுள்ளது

## IV. 2004 - 2005 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டங்கள்

### அ) 2004–2005 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

| | | |
|---|---|---|
| 1) | மாநில நெடுஞ்சாலைகள் — மேம்பாடு | ரூ.7.00 கோடி |
| 2) | மாவட்ட முக்கிய சாலைகள் — மேம்பாடு | ரூ.8.00 கோடி |
| 3) | வலுவிழந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல் | ரூ.10.00 கோடி |
| 4) | மாவட்ட இதர சாலைகளில் பாலமில்லா இடங்களில் 150 புதிய பாலங்கள் அமைத்தல் | ரூ.15.00 கோடி |
| | மொத்தம் | ரூ.40.00 கோடி |

ஆ) பணிகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

| வ எண் | பணிகளின் விவரம் | மொத்த தொகை | 2004—2005க்கான செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சங்களில்) | |
| | மாநில நெடுஞ்சாலைகள் | | |
| 1 | தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை - அறந்தாங்கி - காரைக்குடி - கல்லல் - காளையார்கோவில்- மறவமங்களம் - இளையான்குடி - பரமக்குடி - முதுகுளத்தூர் - சாயல்குடி சாலையில் கி.மீ. 147/6-153/0 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 2 | ஆற்காடு - விழுப்புரம் சாலையில் கி.மீ. 92/0-96/2 பகுதியை அகலப்படுத்துதல் | 44.00 | 33.00 |
| 3 | உடுமலைபேட்டை - தாராபுரம் சாலையில் கி.மீ. 1/2-9/0 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 4 | ஊட்டி - கோத்தகிரி - மேட்டுப்பாளையம் - சத்தி - கோபி - ஈரோடு (வளைவிலிருந்து வளைவு வரை) சாலையில் கி.மீ. 125/2-128/6 பகுதியை உறுதிப்படுத்துதல் | 59.00 | 44.25 |
| 5 | தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை - அறந்தாங்கி - காரைக்குடி - கல்லல் - காளையார்கோவில் - மறவமங்களம் - இளையாங்குடி - பரமக்குடி - முதுகுளத்தூர் - சாயல்குடி சாலையில் கி.மீ. 212/550-217/550 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 6 | கிருஷ்ணன்கோவில் - கூமாபட்டி சாலையில் கி.மீ. 12/0-14/8 பகுதியை அகலப்படுத்துதல் | 40.00 | 30.00 |
| 7 | கோவில்பட்டி - ஒட்டப்பிடாரம் - புதுக்கோட்டை - ஏரல் - முக்கனி சாலையில் கி.மீ. 57/8-63/500 பகுதியை அகலப்படுத்துதல் | 48.00 | 36.00 |
| 8 | திண்டுக்கல்—நத்தம்—சிங்கம்புனரி—திருப்பத்தூர்—காரைக்குடி சாலையில் கி.மீ. 45/6-51/6 பகுதியை அகலப்படுத்துதல் | 30.00 | 22.50 |
| 9 | சட்ராஸ் — செங்கல்பட்டு — காஞ்சிபுரம் — அரக்கோணம் — திருத்தணி சாலையில் கி.மீ. 69/8—74/8 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 10 | முசிறி — துறையூர் — ஆத்தூர் சாலையில் கி.மீ. 55/2—59/2 பகுதியை அகலப்படுத்துதல் | 43.00 | 32.25 |
| 11 | தஞ்சாவூர் — பட்டுக்கோட்டை — அறந்தாங்கி — காரைக்குடி — கல்லல் — காளையார்கோயில் — மரவமங்கலம் — இளையான்குடி — பரமக்குடி — முதுகுளத்தூர் — சாயல்குடி சாலையில் கி.மீ. 94/6—99/0 பகுதியை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் | 43.00 | 32.25 |
| 14 | திருச்செந்தூர்-பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம்-தென்காசி-குற்றாலம்-செங்கோட்டை சாலையில் கி.மீ. 92/1 - 100/8 பகுதியை தேவைப்படும் இடங்களில் அகலப்படுத்துதல் | 48.00 | 36.00 |
| | மொத்தம் | 700.00 | 525.00 |

| | | | |
|---|---|---|---|
| மாவட்ட முக்கிய சாலைகள் | | | |
| 1 | வீராணம் ஏரிக்கரை சாலையில் கி.மீ. 6/0-12/0 பகுதியை பலப்படுத்துதல் | 47.00 | 35.25 |
| 2 | மாத்தூர் - திட்டக்குடி சாலையில் கி.மீ. 19/6-26/0 பகுதியை அகலப்படுத்துதல் | 47.00 | 35.25 |
| 3 | அரச்சலூர் - கொடுமுடி சாலையில் கி.மீ. 8/6-20/0 (தேவைப்படும் இடங்களில்) பகுதியை அகலப்படுத்துதல் | 44.00 | 33.00 |
| 4 | கோயம்புத்தூர் - தடாகம் சாலையில் கி.மீ. 2/6-4/8 பகுதியை வலுப்படுத்துதல் | 40.00 | 30.00 |
| 5 | மார்த்தாண்டம் - பனிச்சமூடு சாலையில் கி.மீ. 0/0-7/4 பகுதியை அகலப்படுத்துதல் | 44.00 | 33.00 |
| 6 | சின்னமனூர் - சீபலக்கோட்டை சாலையில் கி.மீ. 0/0-8/8 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 7 | வத்தலகுண்டு - சித்தரேவு சாலையில் கி.மீ. 0/2-10/4 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 8 | அப்துல்லாபுரம் - பாக்கம் சாலையில் கி.மீ. 1/0-10/0 பகுதியை அகலப்படுத்துதல் | 58.00 | 43.50 |
| 9 | திருவண்ணாமலை - காஞ்சி சாலையில் கி.மீ. 2/8-11/8 பகுதியை அகலப்படுத்துதல் | 58.00 | 43.50 |
| 10 | ஆத்தூர் - வீரகனூர் சாலையில் கி.மீ. 7/2-17/0 பகுதியை அகலப்படுத்துதல் | 48.00 | 36.00 |
| 11 | ஜேடர்பாளையம் - வேலூர் சாலையில் கி.மீ. 0/6-13/0 பகுதியை அகலப்படுத்துதல் | 48.00 | 36.00 |
| 12 | மொரப்பூர் - மாரண்டஹள்ளி சாலையில் கி.மீ. 23/8-29/6 பகுதியை அகலப்படுத்துதல் | 49.00 | 36.75 |
| 13 | குத்தாலம் - கோமல் சாலையில் கி.மீ. 0/0-5/4 பகுதியை அகலப்படுத்துதல் | 54.00 | 40.50 |



| | | | |
|---|---|---|---|
| 14 | தோகூர்-அய்யம்பேட்டை சாலையில் கி.மீ. 18/0-19/0, 20/0-21/0, 22/0-25/0 பகுதியை அகலப்படுத்துதல் | 48.00 | 36.00 |
| 15 | திருமழிசை-சத்தியவேடு சாலையில் கி.மீ. 50/7 - 55/0 பகுதியை அகலப்படுத்தி பலப்படுத்துதல் | 48.00 | 36.00 |
| 16 | தண்டிகுடி மலைப்பாதை சாலையில் கி.மீ. 6/0-18/0 மற்றும் 19/0-22/0 பகுதியை பலப்படுத்துதல் | 69.00 | 51.75 |
| | மொத்தம் | 800.00 | 600.00 |
| வலுவிழந்த பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | | | |
| 1 | காங்கேயம் கொடுமுடி சாலையில் கி.மீ. 27/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 90.00 | 36.00 |
| 2 | கடலூர் - விருத்தாசலம் - சேலம் சாலையில் கி.மீ. 59/4ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 8.00 | 3.20 |
| 3 | கடலூர் - விருத்தாசலம் - சேலம் சாலையில் கி.மீ. 90/4ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 11.00 | 4.40 |
| 4 | ஆற்காடு-விழுப்புரம் சாலையில் கி.மீ.99/4ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 17.00 | 6.80 |
| 5 | ஆற்காடு-விழுப்புரம் சாலையில் கி.மீ.112/6ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 6.00 | 2.40 |
| 6 | கே.வி.கோட்டா-விரிஞ்சிபுரம் சாலையில் கி.மீ. 4/0 - 4ல் தரைப்பாலம் திரும்பக் கட்டுதல் | 60.00 | 24.00 |
| 7 | அவினாசி - திருப்பூர் - பல்லடம் - பொள்ளாச்சி- கொச்சின் (via) மீன்கரை சாலையில் கி.மீ. 59/8ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 33.00 | 13.20 |
| 8 | அவினாசி-திருப்பூர்-பல்லடம்-பொள்ளாச்சி- கொச்சின் (via) மீன்கரை சாலையில் கி.மீ. 95/4ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 | 6.00 |

[2004 ஜூலை 27

| | | | |
|---|---|---|---|
| 9 | சத்தி-அதானி-பவானி சாலையில் கி.மீ.13/8ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 75.00 | 30.00 |
| 10 | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ.18/10ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 | 6.00 |
| 11 | ஜெயங்கொண்டம்-மதனத்தூர் சாலையில் கி.மீ.0/4ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 4.00 | 1.60 |
| 12 | உத்திரமேரூர்-கம்மாலம்பூண்டி-அச்சரப்பாக்கம் சாலையில் கி.மீ.14/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| 13 | திருமழிசை-சத்தியவேடு சாலையில் கி.மீ. 72/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 4.00 | 1.60 |
| 14 | கொரதலையார்-புத்தூர் சாலையில் கி.மீ. 32/2ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 3.00 | 1.20 |
| 15 | சென்னை-புலிகாட் சாலையில் கி.மீ. 38/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 5.00 | 2.00 |
| 16 | சென்னை-புலிகாட் சாலையில் கி.மீ. 46/2ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 2.00 | 0.80 |
| 17 | சென்னை-புலிகாட் சாலையில் கி.மீ. 51/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 2.00 | 0.80 |
| 18 | சென்னை-புலிகாட் சாலையில் கி.மீ. 52/4ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 2.00 | 0.80 |
| 19 | நாங்குநேரி-எருவாடி-வளையூர்-விஜயாபதி சாலையில் கி.மீ. 36/8ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 5.00 | 2.00 |
| 20 | சிவராமபட்டி - பாம்பொலி - செங்கோட்டை சாலையில் கி.மீ. 8/10ல் தாம்போகி திரும்பக் கட்டுதல் | 9.00 | 3.60 |
| 21 | திருநெல்வேலி-பொட்டல்புதூர் சாலையில் கி.மீ. 9/10ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 5.00 | 2.00 |
| 22 | பருவக்குடி-கோவில்பட்டி-எட்டையபுரம்- விளாத்திகுளம்-வேம்பார் சாலையில் கி.மீ. 41/8ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 11.00 | 4.40 |



2004 ஜூலை 27]

| | | | |
|---|---|---|---|
| 23 | பருவக்குடி-கோவில்பட்டி-எட்டையபுரம்- விளாத்திகுளம்-வேம்பார் சாலையில் கி.மீ. 43/8ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 11.00 | 4.40 |
| 24 | ஸ்ரீவில்லிபுத்தூர்- சிவகாசி - விருதுநகர்-அருப்புக்கோட்டை-திருச்சுழி-நரிக்குடி-பார்த்திபனூர் சாலையில் கி.மீ. 33/6ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 25 | சாத்தூர்-சிவகாசி-ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் கி.மீ. 8/10ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| 26 | ஆரல்வாய்மொழி-நெடுமங்காடு சாலையில் கி.மீ. 16/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 48.00 | 19.20 |
| 27 | தாயனூர்-வெள்ளியன்காடு சாலையில் கி.மீ. 3/6ல் தரைபாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 | 20.00 |
| 28 | மதுரை-நத்தம் சாலையில் கி.மீ. 14/4ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 29 | திண்டுக்கல்- குமுளி சாலையில் கி.மீ. 57/4ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 30 | ஆண்டிப்பட்டியிலிருந்து, கி.மீ.4/2 ஜெயமங்கலம்-ஆண்டிப்பட்டி செல்லும் சாலையில் கி.மீ. 5/4ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 31 | தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை-அறந்தாங்கி- காரைக்குடி- கல்லல்-காளையார்கோவில்- மறவமங்களம்-இளயான்குடி-பரமக்குடி-முதுகுளத்தூர்- சாயல்குடி சாலையில் கி.மீ. 132/4ல் தாம்போகி திரும்பக் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 32 | கடலூர்-விருத்தாச்சலம்-சேலம் சாலையில் கி.மீ. 93/10 மற்றும் 97/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 | 20.00 |
| 33 | கடம்பூர் சாலையில் கி.மீ. 2/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 | 6.00 |

| | | | |
|---|---|---|---|
| 34 | கள்ளக்குறிச்சி- திருவண்ணாமலை சாலையில் கி.மீ. 20/8 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| 35 | அயந்தூர்- எ.கூடலூர் சாலையில் கி.மீ. 1/8 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 | 7.20 |
| 36 | திண்டுக்கல்-நத்தம்-சிங்கம்புனரி-திருப்பத்தூர்- காரைக்குடி சாலையில் கி.மீ. 38/4 ல் தாம்போகி திரும்பக் கட்டுதல் | 25.00 | 10.00 |
| 37 | நாகப்பட்டினம்- கூடலூர்-மைசூர் சாலையில் கி.மீ. 465/10 ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| 38 | கள்ளிக்கோட்டை-வைத்திரி-கூடலூர் சாலையில் கி.மீ. 118/8 ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 | 6.00 |
| 39 | மேல்குந்தா பிக்கட்டி எமரால்டு சாலையில் கி.மீ. 5/6 ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 40 | முசிறி-துறையூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ.82/6ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 41 | தொப்பூர்-மேட்டூர்-பவானி-ஈரோடு சாலையில் கி.மீ.28/6ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 42 | ஓமலூர்-சங்ககிரி-திருச்செங்கோடு-பரமத்தி- சாலையில் கி.மீ.70/4ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 38.00 | 15.20 |
| 43 | நாகப்பட்டினம்-கூடலூர்-மைசூர் பழைய சாலை முதல் மேட்டுத்திருமங்கலம் செல்லும் சாலையில் கி.மீ.192/6இல் பாலம் திரும்பக் கட்டுதல் | 45.00 | 18.00 |
| 44 | நங்கவரம்-நாச்சலூர் சாலையில் கி.மீ.3/4ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 | 6.00 |





| | | | |
|---|---|---|---|
| 45 | மாலூர்-ஓசூர்-அதியமான்கோட்டை சாலை கி.மீ.75/8ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 38.00 | 15.20 |
| | மொத்தம் | 1000.00 | 400.00 |
| | **மாவட்ட இதர சாலைகளில் பாலமில்லா இடங்களில் 150 புதிய பாலங்கள் அமைத்தல்** | | |
| 1 | கடலையூர்-முத்தலாபுரம் சாலையில் கி.மீ. 6/10-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 2 | அரியநாயகிபுரம் - முத்தலாபுரம் சாலையில் கி.மீ. 2/4-ல் பாலம் அமைத்தல் | 15.00 | 6.00 |
| 3 | நாகலாபுரம் - மேலகரந்தை - ஆசர்பட்டி - இராஜபட்டி சாலையில் கி.மீ. 6/6-ல் பாலம் அமைத்தல் | 13.00 | 5.20 |
| 4 | சிண்டலகரை - மீனாட்சிபுரம் சாலையில் (வழி) குமரரேடியாபுரம் கி.மீ. 3/6-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 5 | தாராபுரம் - பூளவாடி சாலையில் கி.மீ. 17/10ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 6 | கி.மீ. 30/4ல் பிரிந்து ஒட்டன்சத்திரம் - தாராபுரம் சாலையிலிருந்து கோனேரிப்பட்டி ஹரிஜன் காலனி செல்லும் சாலை கி.மீ. 1/2ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 7 | வெள்ளக்கோயிலிலிருந்து மயில்ரங்கம் வழியாக மாவட்ட எல்லை வரை செல்லும் சாலையில் கி.மீ. 41/2ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 8 | சிவகிரி - நத்தக்கடையூர் - முத்தூர் சாலையில் கி.மீ. 25/2-ல் பாலம் அமைத்தல் | 14.00 | 5.60 |
| 9 | காடம்புலியூர்-சிலம்பிநாதன்பேட்டை சாலையில் கி.மீ. 4/4-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 10 | விருத்தாசலம்-பாலக்கொல்லை சாலையில் கி.மீ. 11/4-ல் பாலம் அமைத்தல் | 15.00 | 6.00 |

| | | | |
|---|---|---|---|
| 11 | புவனகிரி - மேலமணக்குடி சாலையில் கி.மீ. 0/4-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 12 | சிதம்பரம் - வீராணம் ஏரிக்கரை சாலையில் (வழி) கீழ்நத்தம் கி.மீ. 2/10-ல் பாலம் அமைத்தல் | 8.00 | 3.20 |
| 13 | தொழுதூர் - வடகராம்பூண்டி சாலையில் கி.மீ. 0/4 -ல் பாலம் அமைத்தல் | 8.00 | 3.20 |
| 14 | ஆலங்குப்பம் - முன்னூர் சாலையில் கிமீ. 2/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 15 | காட்ராம்பாக்கம் - கீழ்புதுப்பட்டி சாலையில் கிமீ. 11/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 16 | ஆலம்பூண்டி - முழவந்தாங்கல் சாலையில் கிமீ. 18/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 17 | ஆலம்பூண்டி - முழவந்தாங்கல் சாலையில் கிமீ. 21/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 18 | பனமலை - பழைய கருவாட்சி சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 19 | முதுகுளத்தூர் - சிக்கல் சாலையில் கிமீ. 7/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 20 | உத்திரகோசமங்கை - திருப்புல்லானி சாலையில் கிமீ. 3/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 21 | திருச்சுளி - கமுதி சாலையில் கிமீ. 68/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 22 | பி.கொடிகுளம் சாலையிலிருந்து அரசடிவண்டல் செல்லும் சாலையில் கிமீ. 2/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 23 | செங்குடிவண்டல் சாலையிலிருந்து சேத்திடல் செல்லும் சாலையில் கிமீ. 3/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 24 | உத்திரகோசமங்கை - திருப்புல்லானி சாலையில் கிமீ. 9/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |





| | | | |
|---|---|---|---|
| 25 | உத்திரகோசமங்கை - நல்லிறுக்கை சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 26 | செய்யார் - அணைக்கட்டு சாலையில் கிமீ. 4/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 27 | போளூர் - ஜமுனாமருதூர் சாலையில் கிமீ. 16/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 28 | வடவதிமங்கலம்-கொம்மநந்தல் சாலையில் கிமீ. 5/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 29 | திருவண்ணாமலை - மணலூர்பேட்டை சாலையில் கிமீ. 12/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 30 | திருவண்ணாமலை - மணலூர்பேட்டை சாலையில் கிமீ. 2/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 31 | அரங்கல்துர்கம் சாலையில் கிமீ. 2/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 32 | செங்கி - அயன்குளம் - வெங்கடாபுரம் சாலையில் கிமீ. 3/6ல் பாலம் அமைத்தல் | 6.00 | 2.40 |
| 33 | குருவராஜபாளையம் - ஒலுகத்தூர் - மேலரசன்பேட்டை சாலையில் கிமீ. 10/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 34 | பணம்தாங்கி - பூசாரி வலசை - பரதராமி சாலையில் கிமீ. 7/2ல் பாலம் அமைத்தல் | 6.00 | 2.40 |
| 35 | பெரும்பாடி - செம்பள்ளி - ஜிட்டாபள்ளி சாலையில் கிமீ. 7/2ல் பாலம் அமைத்தல் | 6.00 | 2.40 |
| 36 | பெரும்பாடி - செம்பள்ளி - ஜிட்டாபள்ளி சாலையில் கிமீ. 7/10ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |
| 37 | பெரும்பாடி - செம்பள்ளி - ஜிட்டாபள்ளி சாலையில் கிமீ. 8/10ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 38 | உடுமலைப்பேட்டை- இளையாமுத்தூர் சாலை கிமீ.3/4லிருந்து ஆலம்பாளையம் வழியாக உடுமலைப்பேட்டை- சின்னார் சாலை கிமீ. 8/0 வரை செல்லும் சாலையில் கிமீ. 4/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 39 | ராமநாய்க்கன்பாளையம் - நெகமம் - செட்டிப்பாளையம் சாலையில் கிமீ. 8/8ல் பாலம் அமைத்தல் | 18.00 | 7.20 |
| 40 | அந்தியூர் - கொங்கல்நகரம் சாலையில் கிமீ. 5/4ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |
| 41 | கோட்டூர் சாலை கிமீ. 2/0ல் பிரிந்து தங்கைப்பாறை செல்லும் சாலையில் கிமீ. 4/6ல் பாலம் அமைத்தல் | 6.00 | 2.40 |
| 42 | அய்யாமடை - பாதமிகநூர் - கங்கம்பாளையம் சாலையில் கிமீ. 2/6ல் பாலம் அமைத்தல் | 3.00 | 1.20 |
| 43 | ஸ்ரீவில்லிப்புத்தூர் - பார்த்திபனூர் சாலையிலிருந்து டி.மானகசேரி செல்லும் சாலையில் கிமீ. 1/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 44 | ஆலடிப்பட்டி சாலையில் கிமீ. 0/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 45 | ஆலங்குளம் மாவட்டம் எல்லை (வழி) வலையப்பட்டி சாலையில் கிமீ. 1/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 46 | சொக்கலிங்காபரம் - சின்னையாபுரம் (வழி) கோயில்வீரார்பட்டி - வலையப்பட்டி சாலையில் கிமீ. 0/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 47 | அண்ணாநகர் அரிஜன் காலனி - கரிசல்பட்டி சாலையில் கிமீ. 6/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 48 | நெற்குனம் - ராஜபாளையம் சாலையில் கிமீ. 0/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 49 | உடையார்பாளையம் - சிட்டல் சாலையில் கிமீ. 8/4ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |





| | | | |
|---|---|---|---|
| 50 | ஆலம்பச்சேரி - திருவேங்கடம் சாலையில் கிமீ. 7/10ல் பாலம் அமைத்தல் | 15.00 | 6.00 |
| 51 | மாதவநகர் - சீரானம் சாலையில் கிமீ. 6/4ல் பாலம் அமைத்தல் | 15.00 | 6.00 |
| 52 | கயவோடை - வலனை சாலையில் கிமீ. 4/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 53 | கயவோடை - வலனை சாலையில் கிமீ. 6/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 54 | சிறுமலை மலைச்சாலையில் கிமீ. 9/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 55 | நத்தம் - பிள்ளையார்நத்தம் சாலையில் கிமீ. 32/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 56 | பழைய ஆயக்குடி - பொருளூர் சாலையில் கிமீ. 12/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 57 | காளஞ்சிப்பட்டி - மூனூர் சாலையில் கிமீ. 7/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 58 | பாலப்பட்டி - குழந்தை கவுண்டன்பட்டி சாலையில் கிமீ. 3/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 59 | கூடக்கோயில் சாலையில் கிமீ. 10/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 60 | பாப்பநாயக்கன்பட்டி - டி.இராமநாதபுரம் சாலையில் கிமீ. 4/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 61 | காடுப்பட்டி கிராமச் சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 62 | கொக்குளம் - ஊத்தப்பநாய்க்கனூர் சாலையில் கிமீ. 28/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 63 | கொட்டாம்பட்டி- தொண்டிலிங்கபுரம் சாலையில் கிமீ. 1/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 64 | கொடுவிலார்பட்டி - சிலையாம்பட்டி சாலையில் கிமீ. 4/6ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |

[2004 ஜூலை 27

| | | | |
|---|---|---|---|
| 65 | திண்டுக்கல் - குமுளி சாலையிலிருந்து பொம்மிநாய்க்கன்பட்டி செல்லும் சாலையில் கிமீ. 2/10ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 66 | சிலமரத்துப்பட்டி - மேலசொக்கநாதபுரம் சாலையில் கிமீ. 2/10ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 67 | பாளையம் - உப்புகோட்டை சாலையில் கிமீ. 5/6ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 68 | சிதார்பட்டி சாலையில் கிமீ. 3/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 69 | புளியம்பட்டி - நம்பியூர் சாலையில் கிமீ. 7/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 70 | கவுந்தப்பாடி - கெட்டிசெய்யூர் சாலையில் கிமீ. 7/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 71 | கடம்பூர் - கரலயம் சாலையில் கிமீ. 8/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 72 | தவிட்டுப்பாளையம் - ஆப்பக்கூடல் சாலையிலிருந்து புதுக்கரடியனூர் செல்லும் சாலையில் கிமீ. 0/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 73 | பெருந்துறை - குன்னத்தூர் சாலையில் கிமீ. 18/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 74 | கோயம்புத்தூர் - மாடம்பட்டி சாலையில் கிமீ. 11/2ல் பாலம் கட்டுதல் | 12.00 | 4.80 |
| 75 | பெத்திக்குட்டை - புளியம்பட்டி சாலையில் கிமீ. 0/10ல் பாலம் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 76 | பேரூர் - வாடப்பட்டி சாலையில் கிமீ. 2/2ல் பாலம் கட்டுதல் | 8.00 | 3.20 |
| 77 | ஆண்டிப்பாளையம் - ஆட்டையாம்பாளையம் சாலையில் கிமீ. 5/4ல் பாலம் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 78 | காமநாய்க்கன்பாளையம் - அன்னூர் சாலையில் கிமீ. 37/4ல் பாலம் கட்டுதல் | 10.00 | 4.00 |



2004 ஜூலை 27]

| | | | |
|---|---|---|---|
| 79 | குரும்பப்பாளையம் - கரிச்சிப்பாளையம் சாலையில் கிமீ. 3/2-ல் பாலம் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 80 | நீலிபாளையம் - சிறுமுகை சாலையில் கிமீ. 8/8-ல் பாலம் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 81 | காரமடை - கரியம்பாளையம் சாலையில் கிமீ. 2/2-லிருந்து ஒன்னிபாளையம் வழியாக காளிபாளையம் செல்லும் சாலையில் கிமீ. 3/6-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 82 | போத்தனூர் - அம்மகளத்தூர் சாலையில் கிமீ. 8/2-ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 83 | பாக்கம்பாடி - பெரியேரி சாலையில் கிமீ. 0/8-ல் பாலம் அமைத்தல் | 12.00 | 4.80 |
| 84 | எஸ்.யூ. சாலையிலிருந்து காளிநத்தம் வழியாக தகரி சாலையில் கிமி. 4/2-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 85 | எஸ்.யூ. சாலையிலிருந்து காளிநத்தம் வழியாக தகரி சாலையில் கிமி. 5/2-ல் பாலம் அமைத்தல் | 16.00 | 6.40 |
| 86 | கேத்தி - பாலடா - சேலாஸ் சாலையில் கிமீ. 5/4-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 87 | சோலூர்மட்டம் சாலையில் கிமீ. 6/2-ல் பாலம் அமைத்தல் | 16.00 | 6.40 |
| 88 | சோலூர்மட்டம் சாலையில் கிமீ.10/4-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 89 | பெரியகல்ராயன் மலைச் சாலையில் கிமீ. 3/4-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 90 | மஞ்சினி - புங்கவாடி - கடம்பூர் சாலையில் கிமீ. 7/8-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 91 | ஆத்தூர் - வீரகனூர் சாலையிலிருந்து வளையமாதேவி செல்லும் சாலையில் கிமீ. 2/2-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 92 | கஜல்நாய்க்கன்பட்டி-பனமரத்துப்பட்டி - சேஷன்சாவடி சாலையில் கிமீ. 4/8-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |

| | | | |
|---|---|---|---|
| 93 | அம்மாப்பேட்டை - குமகிரி சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 94 | சித்தாளந்தூர் - ஜேடர்பாளையம் சாலையில் கிமீ. 12/2 மற்றும் 12/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 95 | மோகனூர் - ஒருவந்தூர் சாலையில் கிமீ. 6/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 96 | மொளசி சாலையில் கிமீ. 10/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 97 | சேந்தமங்கலம் - அலங்காநத்தம் சாலையில் கிமீ. 14/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 98 | சித்தாளந்தூர் - ஜேடர்பாளையம் சாலையில் கிமீ. 15/6 மற்றும் 16/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 99 | பாலவிடுதி - கடவூர் - ஆயலூர் சாலையில் கிமீ. 6/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 100 | வடசேரி சாலையில் கிமீ. 2/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 101 | பேரூர் - சிங்கப்பூர் சாலையில் கிமீ. 1/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 102 | பேரூர் - சிங்கப்பூர் சாலையில் கிமீ. 1/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 103 | தேசிய நெடுஞ்சாலை எண்.45 கிமீ. 342/4லிருந்து புழுதேரி செல்லும் சாலையில் கிமீ. 0/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 104 | வெங்கடாபுரம் - தாசரிப்பள்ளி சாலையில் கிமீ. 3/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 105 | பாலக்கோடு - கேசர்குளி அணை சாலையில் கிமீ. 13/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 106 | மூக்கனூர் - அரூர் சாலையில் கிமீ. 12/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 107 | அரூர் - தீர்த்தமலை சாலையில் கிமீ. 12/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |



| | | | |
|---|---|---|---|
| 108 | ஈட்டியம்பட்டி - பாளையம் (வழி) கூடலூர் சாலையில் கிமீ. 6/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 109 | நொச்சிளி சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 110 | நொச்சிளி சாலையில் கிமீ. 3/8ல் பாலம் அமைத்தல் | 15.00 | 6.00 |
| 111 | நொச்சிளி சாலையில் கிமீ. 1/4ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |
| 112 | நொச்சிளி சாலையில் கிமீ. 9/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 113 | திருவலங்காடு - கனகம்மாசத்திரம் சாலையில் கிமீ. 2/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 114 | வேங்கச்சேரி - திருமுக்கூடல் சாலையில் கிமீ. 1/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 115 | கூடுவாஞ்சேரி - கொட்டமேடு சாலையில் கிமி. 1/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 116 | வையாவூர் - ராஜகுளம் சாலையிலிருந்து நல்லூர் வழியாக ஏனத்தூர் செல்லும் சாலையில் கிமீ. 2/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 117 | பூந்தமல்லி - பட்டாபிராம் சாலையில் கிமீ. 1/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 118 | தழுத்தனிகுப்பம் சாலையில் கிமீ. 0/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 119 | திருவல்லாரை - ஓமந்தூர் சாலையில் கிமீ. 3/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 120 | வலையூர் - பாலையூர் சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 121 | அலகாபுரி - ஆர்.கோம்பை (வழி) சாலக்காடு சாலையில் கிமீ. 2/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 122 | காந்தி சாலையில் கிமீ. 17/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |

[2004 ஜூலை 27

| | | | |
|---|---|---|---|
| 123 | காரைப்பட்டி - கஞ்சநாய்க்கன்பட்டி சாலையில் கிமீ. 6/6-ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 124 | ஆதனக்கோட்டை-ஆலங்குடி சாலையில் கிமீ. 9/6-ல் பாலம் அமைத்தல் | 9.00 | 3.60 |
| 125 | ஆலங்குடி - அரிமளம் சாலையில் கிமீ. 15/4-ல் பாலம் அமைத்தல் | 9.00 | 3.60 |
| 126 | கீரனூர் - ஆதனக்கோட்டை சாலையில் கிமீ. 7/2-ல் பாலம் அமைத்தல் | 9.00 | 3.60 |
| 127 | பெரம்பலூர் - மானாமதுரை சாலை கிமீ. 153/2ல் பிரிந்து ராங்கியம் செல்லும் சாலையில் கிமீ. 2/10-ல் பாலம் அமைத்தல் | 8.00 | 3.20 |
| 128 | பெரம்பலூர் - மானாமதுரை சாலை கிமீ. 153/2ல் பிரிந்து ராங்கியம் செல்லும் சாலையில் கிமீ. 4/10-ல் பாலம் அமைத்தல் | 8.00 | 3.20 |
| 129 | கானூர் - திருப்புனவாசல் சாலையில் கிமீ. 13/8ல் பாலம் அமைத்தல் | 8.00 | 3.20 |
| 130 | பராக்கலாகோட்டை- பெரியகோட்டை (வழி) கிரமேல்குடி) சாலையில் கிமீ. 10/10-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 131 | பட்டுக்கோட்டை - அறந்தாங்கி (வழி) பேராவூரணி சாலையில் கிமீ. 13/2-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 132 | சேருவாவிடுதி- நாடன்காடு - களத்தூர் சாலையில் கிமீ. 3/4-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 133 | வெட்டிக்காடு-தளிகைவிடுதி சாலையில் கிமீ. 9/10-ல் பாலம் அமைத்தல் | 18.00 | 7.20 |
| 134 | மாணிக்கமங்கலம்-வேடம்பூர் சாலையில் கிமீ. 0/2-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 135 | திருவாரூர் நகர புறவழிச் சாலையில் கிமீ. 3/8-ல் பாலம் அமைத்தல் | 11.00 | 4.40 |
| 136 | திருத்துறைப்பூண்டி — களப்பால் சாலையில் கிமீ. 2/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |



2004 ஜூலை 27]

| | | | |
|---|---|---|---|
| 137 | கோவில்வெண்ணி - சிக்கப்பட்டு சாலையில் கிமீ. 3/10ல் பாலம் அமைத்தல் | 9.00 | 3.60 |
| 138 | பாண்டி - கற்பகநாதர்குளம் சாலையில் கிமீ. 6/2ல் பாலம் அமைத்தல் | 7.00 | 2.80 |
| 139 | வேளாங்கன்னி - வேதாரண்யம் சாலையில் கிமீ. 45/6ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 140 | வேளாங்கன்னி சாலையில் கிமீ. 24/10ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 141 | எடமணல் - நல்லூர் சாலையில் கிமீ. 7/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 142 | வேளாங்கன்னி - வேதாரண்யம் சாலையில் கிமீ. 24/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 143 | பாப்பாக்கோயில் - கருங்கண்ணி சாலையில் கிமீ. 12/4ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 144 | கழுகுமலை - தேவிகுளம் சாலையில் கிமீ. 15/4ல் பாலம் அமைத்தல் | 9.00 | 3.60 |
| 145 | நகரம் - துரைசாமிபுரம் சாலையில் கிமீ. 0/8ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| 146 | ராதாபுரம் - இருக்கண்துறை சாலையில் கிமீ. 4/8ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |
| 147 | கரிசூலத்தமங்களம் - கருங்குமுடம் சாலையில் கிமீ. 6/0ல் பாலம் அமைத்தல் | 6.00 | 2.40 |
| 148 | மருதகுளம் மூளைக் காரைப்பட்டி (வழி) தெய்வநாயகபேரி சாலையில் கிமீ. 3/0ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |
| 149 | மருதகுளம் மூளைக் காரைப்பட்டி (வழி) தெய்வநாயகபேரி சாலையில் கிமீ. 4/0ல் பாலம் அமைத்தல் | 5.00 | 2.00 |
| 150 | நாலுவாசன்கோட்டை - மகேந்திரவாடி சாலையில் கிமீ. 0/2ல் பாலம் அமைத்தல் | 10.00 | 4.00 |
| | மொத்தம் | **1500.00** | **600.00** |

[2004 ஜூலை 27

**V. தமிழ்நாடு கடல்சார் வாரியம்**

தமிழ்நாட்டின் 992 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் 3 பெரிய துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், கடலூர், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேசுவரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கூடங்குளம், கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 15 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/96)-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு கடல்சார் வாரியம் 18/03/1997 முதல் செயலுக்கு வந்துள்ளது. இவ்வாரியம் தமிழக அரசின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி, முறைப்படுத்தி மேலாண்மை செய்து வருகின்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முன்னுரிமை அளித்து துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட எண்ணெய் தொழிற்சாலைகள் / மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றுக்காக தனியார் துறைமுகங்கள் / தோணித்துறைகள் / மிதவைகள் ஆகியவை நிறுவப்படுவதற்கு ஊக்கமளித்து வருகிறது. கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் பல்வகை சரக்குகளை கையாளும் துறைமுகங்களை கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பதினைந்து சிறு துறைமுகங்களுள் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மணப்பாடு மற்றும் கூடங்குளம் ஆகிய எட்டு துறைமுகங்கள் தனியார் பங்கேற்பின் கீழ் பிரத்யேக துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து கடல்சார் வசதிகளும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தினராலேயே அமைக்கப்படும். இந்த எட்டு தனியார் துறைமுகங்களில் எண்ணூர் சிறு துறைமுகம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர் மற்றும் கூடங்குளம் ஆகியவை தற்சமயம் இயங்கி வருகின்றன. ஏனைய 4 தனியார் துறைமுகங்களை (காட்டுப்பள்ளி, புன்னக்காயல், மணப்பாடு மற்றும் திருச்சோபுரம்) அபிவிருத்தி செய்யும் பணி இனி தொடங்கப்பட வேண்டும். இராமேசுவரம் மற்றும் வாலிநோக்கம் துறைமுகங்களில்



2004 ஜூலை 27]

தற்போது துறைமுக நடவடிக்கையில் ஏதும் நடைபெறவில்லை. பாம்பன் கால்வாயில் அவ்வப்போது சிறிய கப்பல்கள் கடந்து வருகின்றன. கன்னியாகுமரி துறைமுகம் படகுப் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு துறைமுகங்களில் கீழ்க்காணும் சரக்குகள் கையாளப்படுகின்றன.

| **ஏற்றுமதி** | **இறக்குமதி** |
|---|---|
| கச்சா எண்ணெய் | சமையல் எண்ணெய் |
| பொது சரக்குகள் | திரவ அமோனியா |
| சிமெண்ட் | நாப்தா |
| | புரப்பலீன் திரவ வாயு |
| | கச்சா எண்ணெய் |
| | இயந்திரப்பகுதிகள் |
| | பொது சரக்குகள் |

**அணுகுமுறை**

துறைமுகங்கள் / தோணித்துறைகள் கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல் குறித்து ஒளிவு மறைவற்ற வழிமுறைகள் வகுக்கப்பட்டு தனியார் பங்கேற்பை ஊக்குவிக்க / மேம்படுத்த ஒவ்வொரு கருத்துருவும் அதன் தன்மையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**துறைமுக விரிவாக்கத்திற்கான திட்டம்.**

- தற்போதுள்ள சிறு துறைமுகங்களின் மேலும் விரிவாக்கும் பணிகள் தனியார் பங்கேற்பு மூலம் மேற்கொள்ளப்படும்.
- உலக அளவிலான அறிவிப்புகள் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதன் மூலம் ஒளிவு மறைவற்ற தன்மை தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.
- இத்திட்டங்கள் கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் இருக்கும்.
- மேற்கூறிய திட்டங்கள் முதலில் 30 ஆண்டுகளுக்கும், பின்னர் 50 ஆண்டுகள் வரைக்கும் நீட்டிக்கப்படும்.

கையாளப்படும் சரக்குகளுக்கு ஒரு டன்னுக்கு நியாயமான தொகையினை அரசு வசூலிக்கும். கையாளப்படும் சரக்குகளுக்கான குறைந்தபட்ச அளவு படிப்படியாக நிர்ணயம் செய்யப்படும்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் இலட்சியமானது துறை முகங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே உள்ள நல்லுறவினை மேலும் மேம்படுத்துவதும் மற்றும் துறைமுகத்தின் மேம்பாட்டினை தொழில் வளர்ச்சியுடன் இணைந்து செயல்படுத்துவதும் ஆகும். தனியார் பங்கேற்கும் வகையில் அதிக அளவிலான பிரத்யேகத் துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதை இவ்வாரியம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கப்பல் உடைப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய தொழில்களின் வளர்ச்சி, தற்போதுள்ள பெரிய துறைமுகங்களின் இட நெருக்கடியினை குறைத்தல், ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளை செய்து கொடுத்தல் ஆகியன தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கொள்கைகளாகும்.

**கடலூர் துறைமுகம்**

கடலூர் துறைமுகத்தை தனியார் பங்கேற்பின் மூலம் மேம்படுத்த தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இதனால் தமிழ்நாடு கடல்சார் வாரியம், துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தின் பொருட்டு உரிய தொழில் நுட்ப ஆலோசனை வழங்க திருவாளர்கள் யு.டி.ஐ. வங்கி லிமிடெட்/ ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தை நியமனம் செய்துள்ளது. இந்நிறுவனம், இந்த மேம்பாட்டுத் திட்டத்திற்கான தொடக்கநிலை அறிக்கை, வரைவு ஒப்பந்தப்புள்ளி ஆவணம், வரைவு சலுகை ஒப்பந்தம் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அட்டவணை ஆகியவற்றை தயாரித்து அளித்துள்ளது. கூடிய விரைவில் உலகளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

**நாகப்பட்டினம் துறைமுகம்**

நாகப்பட்டினம் துறைமுகத்தில் தனியார் நிறுவனத்தால் சமையல் எண்ணெய் கையாள்வதற்கான சேமிப்பு கலம் நிறுவியுள்ளனர். எண்ணெய் கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

துறைமுக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காக சமையல் எண்ணெய் கையாளுவதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்கு மேலும், இரு தனியார் நிறுவனங்களுக்கு துறைமுக நிலம் ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ளது. 13 ஆண்டுகள் இடைவெளிக்கு பின்னர் பிப்ரவரி-2004ல் இத்துறைமுகத்தில் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2004-2005ம் ஆண்டில் சிமெண்ட் ஏற்றுமதிக்காக அதிக எண்ணிக்கையில் கப்பல்கள் துறைமுகத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாகப்பட்டினம் துறைமுகத்தை மேலும் மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள கடல்நீர் தடுப்பியை வலுப்படுத்தி நீட்டித்தல், கால்வாயை ஆழப்படுத்துதல் மற்றும் தூர் வாருதல் ஆகியன அவசியம் என அறியப்பட்டது. இப்பணிகளுக்குத் தோராயமாக ரூ.500 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் நிதி நிறுவனங்களிடமிருந்து இந்நிதி பெறப்படவுள்ளது.

**திருச்சோபுரம் துறைமுகம்**

திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தாரால் நிறுவ உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக திருச்சோபுரம் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகம் சுங்கத் துறைமுகமாக மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இங்கு கடல்சார் கட்டுமான வசதிகளை நிறுவுவதற்கான சுற்றுப்புறச்சூழல் தடையின்மை சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் 01.03.2000 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதிநிலை முடிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது.

**திருக்கடையூர் துறைமுகம்**

திருக்கடையூர் துறைமுகம் திருவாளர்கள் பி.பி.என். பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தார் பிள்ளைபெருமாள் நல்லூரில் உள்ள தங்களது 330 மெகாவாட் கேஸ் கம்பைண்ட் சைக்கிள் பவர் திட்டத்திற்குத் தேவைப்படும் எரிபொருள் நாப்தா மற்றும் இயற்கை வாயுவை பிரத்யேகமாக கையாளுவதற்காக அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகத்திற்கு தொடர்ந்து நாப்தா எரிபொருளுடன் கப்பல்கள் வருகை தருகின்றன.

**மணப்பாடு துறைமுகம்**

திருவாளர்கள் இந்தியன் பவர் பிராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தார் வேம்பாரில் நிறுவவுள்ள 2000 மெகா வாட் கேஸ் டர்பைன் பவர் பிராஜக்ட்டிற்கு ஆண்டொன்றுக்கு தேவைப்படும் 2.5 மில்லியன் டன்கள்

[2004 ஜூலை 27

திரவ இயற்கை வாயுவை திருவாளர்கள் இந்தியன் கேஸ் லிமிடெட் நிறுவனம் கையாளுவதற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதிநிலை முடிப்பதற்கான ஒப்புதல் இந்நிறுவனத்தால் பெறப்பட வேண்டியுள்ளது. மணப்பாடு துறைமுகத்தை பல்வேறு சரக்குகளை கையாளும் துறைமுகமாக மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### கூடங்குளம் துறைமுகம்

இந்திய அணுமின்சக்தி கழகத்தினரின் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கான மிகப்பெரிய மற்றும் அதிக கனமாக இயந்திரங்களின் இறக்குமதியை கையாள்வதற்காக கூடங்குளம் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டது. கடல்சார் கட்டுமானங்கள் துறைமுகத்தில் இந்நிறுவனத்தினரால் கட்டப்பட்டுள்ளன. இத்துறைமுகத்திற்கு 15.01.2004ல் முதல் கப்பல் வந்து இயந்திரப்பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டன.

### குளச்சல் துறைமுகம்

குளச்சல் துறைமுகம் திருவாளர்கள் ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "போர்ட்ஸ் விஷன் 2020" அறிக்கையில், பெட்டகங்கள் கையாளுவதற்கு ஏற்றவகையில் மேம்படுத்துவதற்கு தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தினை பெட்டகங்கள் கையாளும் துறைமுகமாக மேம்படுத்த ஆர்வம் காட்டிய மலேசிய அரசு அதற்குரிய நிதி ஆதாரத்தினை திரட்ட இயலாததால், இத்திட்டம் எதிர்பார்த்தபடி செயல்படுத்தப்படவில்லை. எனினும், இத்துறைமுக அமைப்பின் திறன், தன்மை மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தமிழக அரசு, மத்திய அரசினை, இத்துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான கருத்துருவை மத்திய அரசின் "சாகர் மாலா" திட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளது.

### சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம்

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் இராமேசுவரம் அருகில் பாக்ஜலசந்தியையும் மன்னார் வளைகுடாவையும் கப்பல் செல்லும் வகையில் இணைக்கப்படவுள்ள கால்வாய் திட்டமாகும். இந்தியாவின் கிழக்கு கடற்கரையினையும் மேற்கு கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் தூரத்தினைக் குறைக்கும் வகையில்



2004 ஜூலை 27]

இத்திட்டம் அமையும். மேலும், இதனால் 36 மணி நேர கப்பல் பயண நேரமும் குறையும்.

முதலில் சேதுசமுத்திரம் கால்வாய் திட்டத்தின் வழிப்பாதை, இராமேசுவரம் தீவின் கிழக்குப் பக்கமாக செல்லும் வகையில் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. எனினும், இத்திட்டம் தொடர்பாக ஏற்படும் சுற்றுப்புறச்சூழல் தாக்கம் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளவும் மற்றும் இதிலிருந்து குறைந்தபட்ச சுற்றுப்புறச்சூழல் தாக்குதலை ஏற்படுத்தும் சிறப்பான கால்வாய் வழிப்பாதையினை பரிந்துரைக்கவும், மைய அரசு, நாக்பூரிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சிக் கழகத்தினை நியமித்துள்ளது. இந்த புதிய கால்வாய் வழிப்பாதை ஆடம்ஸ் பாலத்தின் வழியாக 200 மீட்டர் அகலம் மற்றும் 9 மீட்டர் ஆழம் கொண்டதாக அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட ஆராய்ச்சி கழகத்தினரால் மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அது தற்சமயம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## VI. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11.04.1974-ல் கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது. இக்கழகமானது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து ஏற்றி எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு கொண்டு வந்து இறக்குகிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது 40,000 டன் கொள்ளளவுள்ள குறைந்த ஆழத்தில் செல்லவல்ல சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை ஆகஸ்ட் 1985 முதல் ஜனவரி 1987 வரையிலான காலகட்டத்தில் சொந்தமாக பெற்று இவற்றை முழுமையாக மின் வாரியத்திற்கு நிலக்கரி கொண்டு வர உபயோகப்படுத்துகிறது. இவை தவிர பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது இந்தியக் கப்பல் கம்பெனிகள் மற்றும் அயல் நாட்டு கப்பல் கம்பெனிகளிடமிருந்து கப்பல்களை வாடகைக்குப் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி தேவையைப் பூர்த்தி செய்கிறது.

கழகமானது கடந்த ஐந்து வருடங்களில் கையாண்ட நிலக்கரியின் அளவு, செய்து முடித்த வியாபாரத்தின் அளவு மற்றும் நிதி நிலை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 27

| வருடம் | எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன் இலட்சத்தில்) | செய்து முடித்த வியாபாரத்தின் அளவு (ரூபாய் இலட்சத்தில்) | நிகர லாபம் / இழப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1999-2000 | 117.56 | 27,582.10 | (-) 798.63 |
| 2000-2001 | 151.44 | 42,728.50 | (-) 445.35 |
| 2001-2002 | 146.21 | 34,029.76 | (-) 192.71 * |
| 2002-2003 | 146.12 | 30,473.49 | (-) 1466.05** |
| 2003-2004 | 142.92 | 35,359.12 | (-) 897.15 *** |

(*) 2001-2002ம் ஆண்டிற்கான நிகர நஷ்டம் ரூ.192.71 இலட்சம். இத்துடன் வருமான வரி ஒதுக்கீடாக ரூ.1,099.43 இலட்சமும் சேர்ந்து நிகர நட்டம் ரூ.1,292.14 இலட்சம் ஆகும்.

(**) 2002-2003ம் ஆண்டிற்காக கழகத்திற்கு ரூ.1,466.05 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட சரக்குக் கட்டண ஒப்பந்தப்படி சொந்த கப்பல்களின் செயல்பாடு இல்லாத காரணத்தால் அதற்கான தண்டத்தொகையாக ரூ.1,346 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதேயாகும்.

(***) 2003-2004ம் ஆண்டில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.897.15 இலட்சம் நிகர நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நிலக்கரி கொண்டு வருதல் 2004-2005**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது கிரேனுடன் கூடிய தானியங்கி கப்பல் ஒன்றும் (CHSU), இரண்டு கிரேன் இல்லாத பெரிய வகைக் கப்பல்கள் மற்றும் 7 கிரேனுடன் கூடிய சிறிய வகைக் கப்பல்களுமாக மொத்தம் 10 வாடகை கப்பல்கள் மற்றும் கழகத்திற்கு சொந்தமான மூன்று தமிழ் கப்பல்கள் மூலமாக 2004-2005ல் 149.50 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை எடுத்து வர திட்டமிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 27]

**நிதி நிலை விவரங்கள் 2004-2005**

2004-2005ல் கழகமானது தோராயமாக ரூ. 37.78 இலட்சம் நிகர இலாபம் ஈட்டும் என்றும் ரொக்க இலாபமாக ரூ.535.20 இலட்சம் உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**எண்ணூர் துறைமுகம்**

எண்ணூர் துறைமுகம் 2001-ம் ஆண்டு பிப்ரவரி முதல் நாள் அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தத் திட்டம் முக்கியமாக பாரதீப் துறைமுகத்திலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு நிலக்கரியினை கொண்டு வருவதற்காக செயல்படுத்தப்பட்டது. ரைட்ஸ் (Rites) மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிந்துரையின்படி பாரதீப் - எண்ணூர் பாதையில் அதிநவீன கிரேனுடன் கூடிய தானியங்கி கப்பல் (CHSU) மற்றும் கிரேன் இல்லாத கப்பல்கள் இயக்கச் செலவுகளைக் குறைக்கும் பொருட்டு, பாரதீப் துறைமுகத்தில் தானியங்கி இயந்திரம் மூலம் நிலக்கரி ஏற்றப்பட்டு எண்ணூர் துறைமுகத்தில் மிக விரைவாக கன்வேயர் பெல்ட் மூலம் நல்ல முறையில் இறக்கப்படுகிறது.

**கன்னியாகுமரி படகுத் துறை**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கடல் மார்க்கமாக எடுத்து வரும் சீரிய செயலோடு, குமரி முனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்தினை நடத்தி வருகிறது. தற்பொழுது கழகமானது எம்.எல். தாமிரபரணி, எம்.எல். பாகீரதி மற்றும் எம்.எல்.விவேகானந்தா ஆகிய மூன்று படகுகளை பயணிகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வருகிறது. படகுத் துறையின் மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் சுமார் 15 இலட்சம் பயணிகள் பயணம் செய்கிறார்கள்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது பயன்படுத்தி வரும் எம்.எல். தாமிரபரணி மற்றும் எம்.எல். பாகீரதி ஆகிய இரண்டு பழைய படகுகளுக்குப் பதிலாக மத்திய அரசு, சுற்றுலாத் துறையின் நிதியுதவியுடன் இரண்டு புதிய படகுகள் வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்**

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் 16.09.1998 அன்று தொடங்கப்பட்டது. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுவரை 9 தொகுதி பயிற்சி வகுப்புகள் முடிவுற்றுள்ளன. இந்திய கப்பல் துறை இயக்குநரகம், மும்பை அனைத்து இந்திய கடல்சார் பயிற்சி நிறுவனங்களுக்கும் மாலுமி பயிற்சி மற்றும் கடல்சார் பயிற்சி வகுப்புகளை நீக்கிவிட்டு, மாற்றியமைக்கப்பட்ட பொது முறை மாலுமிகளின் பயிற்சி வகுப்புகள் சர்வதேச அளவில் மிக எளிதில் இயந்திரம் அல்லது கப்பல் மேல்தளங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்காக மாற்றியமைக்க அறிவுறுத்தியுள்ளது. தற்பொழுது இக்கல்வி நிறுவனத்தில் 20 நபர்களுக்கான மாலுமி பயிற்சி மற்றும் 20 நபர்களுக்கான கடல்சார் பயிற்சிக்குப் பதிலாக 40 நபர்கள் கொண்ட பொது முறை மாலுமி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இப்பயிற்சி நிறுவனத்தில் இந்திய அரசு கப்பல் துறை 1995 விதிகளின்படி அளிக்கப்படும் ஐந்து பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் முறையே "தன்னிலை பாதுகாப்பு உக்தி, கடலில் முதலுதவி செய்தல் பற்றிய பயிற்சி, தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு பற்றிய பயிற்சி, எண்ணெய் கப்பல் பாதுகாப்பு சம்பந்தமான பயிற்சி மற்றும் அடிப்படை தீ அணைப்பு சம்பந்தமான பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.





# இணைப்பு – III

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 23 – உள் துறை

## சிறைச்சாலைகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**முன்னுரை**

சிறைச்சாலைகள் குற்றவியல் நீதி முறையின் ஓர் அங்கமாக மாநில அரசின்கீழ் இயங்கி வருகின்றன. குற்றவியல் நீதிமுறையின் அங்கமாக உள்ள சிறைகள் ஒரு முறையான நிறுவனம் மற்றும் அதனைச் செயல்படுத்த குறிப்பான நடைமுறைகளையும் கொண்டுள்ளது. சிறைத்துறையின் முதன்மைக் குறிக்கோள் குற்றவாளிகளை சிறையில் அடைத்து வைத்து அவர்கள் இனிமேலும் குற்றம் இழைக்காத வண்ணம் அச்சுறுத்தி தடுப்பதுடன் நின்றுவிடுவது இல்லை. அதற்கும் மேல் அவர்கள் விடுதலை ஆகி வந்த பிறகு பயனுள்ள குடிமக்களாக வாழும் வகையில் அவர்களை சீர்திருத்தி அவர்களுக்கு புது வாழ்வு அளித்து அவர்களை மீண்டும் சமுதாயத்தில் இரண்டற கலக்குமாறு செய்வதும் இத்துறையின் முதன்மைக் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை கருத்திற்கொண்டு தனிமனிதன் தேவை, சமூகக் கட்டுப்பாடுகள், குடும்பப் பொறுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்ற சிறைவாசிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு, வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பல்வேறு வாழ்க்கைத் தொழில் வகுப்புகள், யோகாசனம் மற்றும் தியான வகுப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், அடிப்படை வசதிகள் பாதுகாப்புத் தேவைகள், சிறைவாசிகளின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் அரசு கணிசமான அளவுக்கு முதலீடு செய்துள்ளது.

**II. நிறுவன அமைப்பு முறை**

**நிருவாகம்**

2. சிறை நிருவாகத்தின் கீழ், மொத்தம் 134 சிறைகள் உள்ளன. இவற்றில் 9 மத்திய சிறைகள், 2 மகளிர் தனிச் சிறைகள், 104 ஆண்கள்

[2004 ஜூலை 27

கிளைச் சிறைகள், 9 பெண்கள் கிளைச் சிறைகள், 4 ஆண்கள் தனிக் கிளைச் சிறைகள், 3 மகளிர் தனிக் கிளைச் சிறை, திறந்த வெளிச் சிறை ஒன்று, பண்ணைச் சிறை ஒன்று மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்தப் பள்ளி ஒன்று ஆகியவை அடங்கும். இத்துறை இந்திய காவல் பணியைச் சேர்ந்த ஒரு முதுநிலை அலுவலரான கூடுதல் சிறைத் துறை இயக்குநரால் நிருவகிக்கப்படுகிறது. இவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும் மற்றும் சென்னை, கோவை, திருச்சி, மதுரை முதலான நான்கு சரகங்களில் சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் உள்ளனர். மத்திய சிறைகளின் நிருவாகம் மற்றும் அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகள் முதலியன சிறை கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. சிறைத் துறையில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 4349 ஆகும். அனைத்து சிறைகளிலும் மொத்தமாக 18302 சிறைவாசிகளை அடைக்கத்தக்க இடவசதி உள்ளது.

**பெண்கள் சிறை**

3. வேலூர் மற்றும் திருச்சியில் பெண்களால் பராமரிக்கப்படும் இரண்டு பெண்கள் தனிச் சிறைகள் உள்ளன. இவற்றைத் தவிர கீழே குறிப்பிடப்பட்டுள்ள 9 கிளைச் சிறை மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகளில் பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு, பெண் பணியாளர்களால் மட்டுமே பராமரிக்கப்படும் சிறைகளாக அரசு அறிவித்துள்ளது.

1. கிளைச் சிறை, விழுப்புரம்
2. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி
3. கிளைச் சிறை, திருவாரூர்
4. கிளைச் சிறை, நிலக்கோட்டை
5. கிளைச் சிறை, பரமக்குடி
6. கிளைச் சிறை, தக்கலை
7. கிளைச் சிறை, சாத்தூர்
8. கிளைச் சிறை, குன்னூர்
9. கிளைச் சிறை, சைதாப்பேட்டை
10. தனிக் கிளைச் சிறை, சேலம்
11. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்
12. தனிக் கிளைச் சிறை, திருச்சி



2004 ஜூலை 27]

**திறந்த வெளிச் சிறை**

4. 100 சிறைவாசிகளை அடைத்து வைக்கும் இடவசதியுள்ள திறந்தவெளிச் சிறை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் செயல்பட்டு வருகிறது. இச்சிறையில் நவீன வேளாண்மை முறைகளில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 சிறைவாசிகளை அனுமதிக்கக் கூடிய பண்ணைச் சிறை ஒன்று சேலத்தில் செயல்பட்டு வருகிறது.

**பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை**

5. இப்பள்ளியில் 16–21 வயதுத் தொகுதியைச் சார்ந்த வளரிளம் பருவ இளங்குற்றவாளிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சீர்திருத்த முறையில் நடத்தப்படுவதுடன் இவர்களின் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் விடுதலைக்குப் பின்னர் அவர்களின் மறுவாழ்விற்கு உதவியாக இருக்கும் வகையில் தொழிற்கல்வி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**நன்னடத்தை பிரிவு**

6. நன்னடத்தை பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்குகிறது. இவருக்குகீழ் 12 வட்டார நன்னடத்தை அலுவலர்களும், 96 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர். நன்னடத்தை அலுவலர்கள் நீதிமன்றங்களுக்காக குற்றவாளிகளின் நடத்தை மற்றும் இவர்களின் வாழ்க்கை நிலைமைகள் பற்றி விசாரிக்கின்றனர். மேலும், நன்னடத்தையின் காரணமாக விடுவிக்கப்படும் குற்றவாளிகளை கண்காணித்து அவர்களின் மறுவாழ்விற்காகவும் பணிபுரிகிறார்கள்.

2003 ஆம் ஆண்டில் நன்னடத்தை அலுவலர்களால் நீதி மன்றங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தொடக்க விசாரணைகள் 5015 மற்றும் பல்வகை விசாரணைகள் 10670 ஆகும். இவர்களால் பார்வையிடப் பட்டவர்களில் நன்னடத்தை கண்காணிப்பில் இருப்பவர்கள் 28545 பேரும் ஏனையர் 8354 பேரும் ஆவர். விடுதலைக்கு பிந்தைய பராமரிப்பு குறித்து அளிக்கப்பட்ட தொடக்க விசாரணைகள் 28201 மற்றும் பல்வகை 1823 ஆகும். இவர்கள் நீதிமன்றங்களில் 6784 முறை ஆஜராகி உள்ளனர். சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ரூ.54,500/– வரையில் 31 சிறைவாசிகளுக்கு இவர்களால் உதவி செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

காவல் நிலையங்களில் மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்திட நன்னடத்தை அலுவலர்களை காவல் நிலையத்திற்குச் சென்று பார்வையிடுமாறு அரசு உத்திரவிட்டுள்ளது.

## III. சிறை நிருவாகத்தை நிலை உயர்த்துதல்

### சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல்

7. சிறைச்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் இணை மானியம் ஆகியவற்றைக் கொண்டு சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ரூ.8000 இலட்சம் செலவில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பு சாதனங்கள், சிறைவாசிகளைக் கண்காணிக்கத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Television) செல்போன் செயலிழக்கும் கருவிகள், மின் கம்பிவேலி அமைத்தல், மின் விளக்கு வசதிகள், வெடிகுண்டு கண்டுபிடிப்பு சாதனங்கள், நவீன ஆயுதங்கள், பதிவு செய்யும் வசதி செய்து கொடுத்தல், உலோக வெடிகுண்டு கண்டுபிடிக்கும் கருவிகள், இரவு நேரத்திலும் பார்க்கக் கூடிய தொலைதூரக் கருவிகள், பாதுகாப்பு கோபுரங்கள், மிகவும் தீவிரமாக பரிசோதனை செய்யும் வெடிகுண்டு கண்டு பிடிக்கும் கருவிகள், சிறுபடைக்கலன்கள் பயிற்சி வழங்கும் கருவிகள் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறை பணியாளர்கள் மற்றும் சிறைகளின் காப்பு மற்றும் பாதுகாப்பினை கவனிக்கும் பொருட்டு, சிறை பணியாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று மத்திய சிறைகளில் உயர் பாதுகாப்பு வசதிகள் கொண்ட அறைகள் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய உயர்பாதுகாப்பு வசதிகள் சென்னை மற்றும் வேலூர் மத்திய சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### நிதிக்குழு

8. பதினோராவது நிதி ஆணையத்தின்கீழ் ரூ.480.00 லட்சங்களும் ரூ.160.34 லட்சங்களும் முறையே 2001-2002 மற்றும் 2002-2003ம் ஆண்டுகளில் இந்திய அரசால் இத்துறைக்கு 100 விழுக்காடு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு சிறைக் கட்டிடங்களை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல், சுகாதாரம் மற்றும் தண்ணீர் வசதிகள் ஏற்பாடு செய்தல், மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல், சிறைவாசிகளின் பயிற்சிக்காக கணினி மையம் ஏற்படுத்துதல் மற்றும் சிறைகளில் பாதுகாப்பினை மேம்படுத்துதல் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பதினோராவது நிதி ஆணையம்



2004 ஜூலை 27]

2003-2004 ஆம் ஆண்டுக்கு 14 பணிகளுக்கு ரூ.159.66 இலட்சங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக வழங்கீடு செய்துள்ளது. இப்பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## IV. மனித வள மேம்பாடு

### காவலர்கள் பயிற்சி

9. வேலூரிலுள்ள காவலர்கள் பயிற்சி மையத்தில் சிறைக் காவலர்களுக்கு ஆறு மாத கால அளவிற்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, நிருவாகம் மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்த பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன. சிறைவாசிகளின் மனித உரிமைகள் குறித்த பயிற்சிக்கு கணிசமான அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நவீன ஆயுதங்களை கையாளும் முறை குறித்தும் கற்றுத் தரப்படுகிறது. இதனைத் தவிர முதன்மை தலைமைக் காவலர்கள் மற்றும் சிறைக் காவலர்களுக்கு அவ்வப்போது நினைவுகூர் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி பள்ளி 100 காவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், சிறைக் காவலர்கள் சென்னை காவல் துறை கமாண்டோ பயிற்சி பள்ளியில் பல்வேறு பயிற்சிகள் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

### குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்

10. இந்த நிறுவனம் 1979 ஆம் ஆண்டிலிருந்து ஆந்திரபிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு சீர்திருத்தம், சிறை நிருவாகம் குறித்து பயிற்சி அளிக்கிறது. இந்த நிறுவனத்தின் செலவினத்தை நான்கு தென்மாநிலங்களும் சமமாக பகிர்ந்துகொள்கின்றன.

### தேசிய அளவில் பயிற்சி

11. புதுதில்லி, தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம் / காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையம் நடத்தும் சிறை நிருவாகத்தில் மனித உரிமைகள், இடைநிலை கருத்தாய்வு பயிற்சி, சிறை உளவியல் மற்றும் பல்வேறு சமூக நலன் குறித்த பயிற்சி வகுப்புகளுக்கு சிறை அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர்.

**பணியாளர் தேர்வு**

*12.* இத்துறைக்கான சிறைக் காவலர்களை தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம், வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி தேர்வு செய்து அனுப்புகிறது. எட்டு மணி நேர வேலை முறையை முழுவதுமாக செயல்படுத்திட 352 இரண்டாம் நிலைக் காவலர்களை தேர்வு செய்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்தேர்வு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெறும்.

## V. சிறை ஒழுங்குமுறை

**உயர் பாதுகாப்பு சிறைவாசிகளை பராமரித்தல்**

*13.* பயங்கரவாத சிறைவாசிகளை அடைப்பதற்காக தனியாக தொகுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை என்பதால் தொடக்கத்தில் கோவை, சேலம் மற்றும் திருச்சியில் உயர் பாதுகாப்பு தொகுதிகள் அமைக்கப்பட்டன. பின்னர் இத்தகைய பயங்கரவாத சிறைவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டபடியாலும், பல்வேறு வகையான சிறைவாசிகளைப் பிரித்து வைக்க வேண்டியுள்ளதாலும், இத்தகைய உயர்பாதுகாப்பு தொகுதி முறை மற்ற மத்திய சிறைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அடிப்படைவாத மற்றும் பயங்கரவாத சிறைவாசிகள் அடைக்கப்படும் பல்வேறு சிறைகளில் உள்ள உயர்பாதுகாப்பு தொகுதிகள், உள்புறம் சிறைகாவலர்களாலும், வெளிப்புறம் காவல் துறையினராலும் பாதுகாக்கப்படுகின்றன. அனைத்து சிறைவாசிகளும் உரிய பரிசோதனைக்கு தினம் உட்படுத்தப்படுவ தோடல்லாமல், உயர் அதிகாரிகளால் அவ்வப்போது சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். சிறை விதிகளுக்குட்பட்டு இச்சிறைவாசிகள், பிற சிறைவாசிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்.

இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்கள் நேர்காணலுக்கு முன்னரும், பின்னரும் சிறை மற்றும் காவல் துறையினரால் தீவிரமாக சோதிக்கப்படுகின்றனர். சிறைகளில் விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், சிறைவாசிகள் தப்பித்து விடாமல் பாதுகாக்கவும், அழிவுச் செயல் தடுத்தல் குறித்த சோதனையும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முறையான மின்சார விளக்குகள் அமைத்தல், வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்த தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Television) வெடிகுண்டு கண்டுபிடிப்பு சாதனங்கள், செல்போன் செயலிழக்கும் கருவிகள் அமைத்தல், மின்கம்பி வேலிகள் அமைத்தல் முதலிய பாதுகாப்பு நடவடிக்கைகள், அனைத்து மத்திய சிறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த உயர்பாதுகாப்பு பிரிவில் அனுமதிக்கப்படும் அனைத்து சிறைவாசிகளும் உரிய மதிப்புடனும் அனைத்து மனித உரிமைகளுடனும் நடத்தப்படுகின்றனர்.





கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள, தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட, அனைத்து சிறைவாசிகள் குறித்த விசாரணை கோவை சிறப்பு நீதிமன்றத்தில் தினமும் நடைபெற்று வருகிறது. இதனைத் தவிர ஏனைய தமிழ்நாடு விடுதலைப் படை இயக்க சிறைவாசிகள் மற்றும் இதர வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள், பூவிருந்தவல்லி தனிக் கிளைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இச்சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தால் இச்சிறைவாசிகள் குறித்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைத் தவிர வேறு சில சிறைவாசிகள் குறித்த விசாரணைகள் உள்ளூர் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## VI. சிறைவாசிகள் நலன்

**உணவு மற்றும் உடை**

*14.* சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் சமச்சீரான உணவு சிறைவாசிகளுக்கு வரையறுக்கப்பட்ட அளவின்படி வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவாக பால், ரொட்டி, முட்டை முதலியன, மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகின்றன. உடைகள் மற்றும் படுக்கை சிறைவாசிகளுக்கு வரையறுக்கப்பட்ட அளவின்படி வழங்கப்படுகிறது. சிறைவாசிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் குவளைகள் வழங்கப்பட்டுள்ளதோடு மட்டுமின்றி எவர்சில்வர் சமையல் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல தள்ளு வண்டிகளும் சிறைவாசிகளின் உடல் நலம் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கிளைச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கும் மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு இணையான உணவினை வழங்க அரசால் ஆணையிடப்பட்டு 2003-2004 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறைவாசிகளின் நலன் கருதி அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பருத்தியிலான சட்டை மற்றும் அரைக்கால் சட்டைக்கு பதிலாக டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை வழங்கவும் மற்றும் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தரைவிரிப்பின் அளவினை அதிகரித்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. போதுமான உடை இல்லாத விசாரணை சிறைவாசிகளுக்கு உடைகள் வழங்கவும், அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து நலப் பணிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**சுகாதாரம் பேணுதல்**

15. சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. சுகாதார முகாம்கள் முறையாக நடத்தப்படுகின்றன. மனநலங்குன்றிய சிறைவாசிகள் சென்னை அரசு மனநல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் போதிய அளவிற்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளிடையே காச நோயினை ஒழிப்பதற்காக குறுகிய கால நேரடி கவனிப்பு சிகிச்சை முறை (Directly Observed Treatment Shortcourse) முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளது. சிறைவாசிகளின் நலன்கருதி சிறைகளில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. அனைத்து மத்திய சிறைகளுக்கும் நோயாளர் அவசர ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. சிறிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக, சிறிய பரிசோதனைக் கூடங்கள், இதயத் துடிப்பை அறிய உதவும் சாதனங்கள், இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கி கருவிகள், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ் - கதிர் படமெடுக்கும் கருவிகள், அனைத்து மத்திய சிறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் உடல் நலன் கருதி பற்பொடி மற்றும் குளியல் சோப்பு ஆகியவை சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**நேர்காணல் மற்றம் பொழுதுபோக்கு**

16. சிறைவாசிகளுக்கு இலவசமாக நேர்காணல் வசதிகள் உள்ளன. நேர்காணல் குறித்த விண்ணப்ப படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இப்படிவத்தினை சிறைத் துறைக்கான தகவல் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். செய்தித்தாட்கள் மற்றும் வாராந்திர மற்றும் மாதாந்திர செய்தித்தாள்களும் சிறைவாசிகளுக்கு அரசு செலவில் வழங்கப்படுகின்றன. இதனைத் தவிர சிறைவாசிகள் தங்களது சொந்தச் செலவிலும் செய்தித்தாட்கள் வாங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கல்வித் தரம் மற்றும் இலக்கிய தரம் வாய்ந்த





புத்தகங்கள் சிறை நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட நூலகங்களில் இருந்தும் பெறப்பட்டு சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறது. உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டுகள் விளையாட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**கல்வி**

17. சிறைவாசிகளுக்கு அரசு செலவில் தொலைதூரக் கல்வி வழி மூலமாக கல்வி கற்க வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. முதியோர் கல்விக்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளிகள் சிறைகளில் இயங்கி வருகின்றன. இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாட வகுப்புகளை தொடங்கி உள்ளது.

1. உணவு மற்றும் ஊட்டச்சத்து சான்றிதழ் படிப்பு
2. இளங்கலை ஆயத்த பயிற்சி
3. கணினி பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு

நடப்பாண்டில். மொத்தம் 43 சிறைவாசிகள் மேற்காணும் படிப்புகளை பயில அனுமதிக்கப்பபட்டுள்ளனர். இதற்கான செலவுத் தொகை ரூ.63,535/-ஐ அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கென்றே பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பிற்கான கல்வியை அளித்து வருகிறது. நாட்டில் முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் பாட வகுப்புகள் திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களின்படி இருக்கும். இத்திட்டத்தின்கீழ் பல்வேறு சிறைகளிலிருந்தும் 28 சிறைவாசிகள் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் பட்டபடிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் சேர்ந்துள்ள சிறைவாசிகளின் கல்விக்காக அரசு ரூ.31,860/-ஐ செலவு செய்துள்ளது.

**சிறை நீதிமன்றங்கள் மற்றும் சட்ட உதவி**

18. சிறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள் தங்களின் குற்றத்திற்காக மன்னிப்பு கோரும் நிலையில் அந்த வழக்குகளை துரிதப்படுத்தவும், விசாரணை சிறைவாசிகளை தேவையில்லாமல் நீண்டகாலம் சிறையில் வைத்திருப்பதை தவிர்க்கும்பொருட்டும்,

சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடுவர்களை எளிதில் அணுகி தங்கள் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டும், இந்தியாவிலேயே முதன்முறையாக சிறை நீதிமன்றங்கள் இரண்டு சிறைகள் நீங்கலாக அனைத்து மத்திய சிறைகளிலும் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளிலும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு சிறைகளிலும் விரைவில் சிறை நீதிமன்றங்கள் தொடங்கப்பட உள்ளன.

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன. சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றம் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளிலும் இலவச சட்ட உதவி தனிப் பிரிவை தொடங்கியுள்ளது.

**குறை தீர்த்தல்**

19. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும்பொருட்டு, சிறைகளில் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இந்த புகார் பெட்டிகளை திறந்து புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி ஆகியோர் மாதமொருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை பார்ப்பதுடன் சிறைவாசிகளின் குறைகள் குறித்தும் விசாரணை மேற்கொள்கின்றனர்.

**அலுவல் மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்கள்**

20. சிறை நிருவாகம் நல்ல முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொருமுறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். மேலும் சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும், அவர்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றனரா என்பதையும் உறுதி செய்து கொள்வதற்காக தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் சிறைகளை பார்வையிடுகின்றனர்.

பொதுமக்களில், முக்கியமாக சிறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள், சிறந்த சமூக சேவை பின்னணி உள்ளவர்கள் ஆகியோர் அலுவல் சாரா



பார்வையாளராக நியமிக்கப்படுகின்றனர். இந்த அலுவல் சாரா பார்வையாளர்கள், சிறைவாசிகளை சந்திக்கவும், சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கவும், சிறைச்சாலைகளில் சிறை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் சரிவர உள்ளனவா என்பதில் திருப்தி அடையும் பொருட்டு சிறைச்சாலைகளின் அனைத்து பகுதிகளுக்கும் சென்றுவரவும் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அலுவல்சாரா சிறை பார்வையாளர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் சிறை பார்வையாளர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தினை அரசாணை எண்.797 உள் துறை, நாள் 3.9.2002–ன்படி கூடுதல் சிறைத் துறை இயக்குநருக்கு அரசு வழங்கியுள்ளது.

**மனித உரிமைகள்**

21. சிறைவாசிகளுக்கு நல்ல வாழும் வசதிகள், சிறந்த உணவு, போதுமான உடைகள், நல்லமுறையில் நடத்துதல், தகுந்த மருத்துவ சிகிச்சை அளித்தல், நேர்காணல், கல்வி போன்றவற்றை அளிப்பதன் மூலம் தங்களது அடிப்படை வசதிகள் மற்றும் தங்களது மனித உரிமைகள் பாதுகாத்தல் போன்றவற்றை சிறைவாசிகள் பெறுவதை அரசு உறுதி செய்துள்ளது. சிறைவாசிகளின் அடிப்படை தேவை மற்றும் உண்மையான குறைகளை உணர்ந்து அதனை வரவேற்க ஏதுவாக, தகுந்த பண்புகளை வளர்த்துக்கொள்ள சிறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதிபதிகளும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிருவாகத்தை பாராட்டி உள்ளனர். தேசிய மனித உரிமை ஆணையம் சிறைகளில் அதிக இடநெருக்கடி குறித்த தனது கவலையை தொடர்ந்து தெரிவித்துள்ளது. இதனை களையும்பொருட்டு மாவட்ட தலைநகரில் உள்ள கிளைச் சிறைகளை மாவட்ட சிறைகளாக உயர்த்துவதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் மத்திய சிறைகளில் இடநெருக்கடியினை தீர்க்க இயலும். மேலும் மாவட்ட அளவில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதுடன், சிறைவாசிகளை தேவையில்லாமல் இதர சிறைகளுக்குக் கொண்டு செல்வதையும் தவிர்க்க முடியும். இதன் முதற்படியாக, திருவைகுண்டம் கிளைச்சிறை ரூ.85.30 இலட்சம் செலவில் மாவட்ட சிறையாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனைத் தவிர நாங்குநேரியில்

[2004 ஜூலை 27

உள்ள கிளைச் சிறையில் அதிக அளவில் சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் ரூ.15.00 இலட்சம் செலவில் கட்டமைப்பு மாறுதல் மேற்கொள்ளப்பட்டு தனிக் கிளைச் சிறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பொது அறிவிப்பு முறை**

22. சிறைத் துறை அதிகாரிகள் மற்றும் சிறைவாசிகளுக்கிடையே தகவல் பரிமாற்ற வசதியினை மேம்படுத்த அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுகை, பெண்கள் தனிச் சிறை, திருச்சி, வேலூர் ஆகியவற்றுக்குப் பொது அறிவிப்பு தகவல் சாதனம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**ஏனையவை**

23. பெண்கள் தனிச் சிறை, வேலூர், கண்காணிப்பாளரின் இல்லத்துக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனுடன் பெண்கள் தனிச் சிறை, கண்காணிப்பாளர்களுக்கும் கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கும் நுண்ணலை தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் தொடர்பினை மேம்பாடு செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குறிப்பாக மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளுக்கிடையே நிருவாகத்தினை மேம்படுத்திடும்பொருட்டு 37 கிளைச்சிறைகளுக்கு தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. 7 கிளைச்சிறைகளுக்கு மேடைத் தராசும் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, வேலூர், திருச்சி மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுகை மற்றும் கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றுக்கு மின்னணு அஞ்சல் முத்திரையிடும் இயந்திரம் (Electronic Postal Franking Machine) வழங்கப்பட்டுள்ளது.

**VII. சிறைவாசிகளின் மறுவாழ்வுப் பணிகள்**

**யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள்**

24. சிறைவாசிகள் உடல்நலம் மற்றும் மன நலத்தினை மேம்படுத்துவதற்காக யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தனிநபர் மற்றும் நிறுவனங்கள், சிறைகளில் யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு



2004 ஜூலை 27]

அனுமதிக்கப்படுகின்றனர். சிறை பணியாளர்கள் மற்றும் சிறைவாசிகள் இந்த தியான பயிற்சி வகுப்புகளில் பங்கேற்கின்றனர். இந்தப் பயிற்சி வகுப்புகளை சிறைவாசிகள் மற்றும் சிறைப் பணியாளர்கள் சிறப்புற வரவேற்கின்றனர். இவற்றின் பலன்கள் ஊக்கமளிப்பவையாக உள்ளன. கடந்த 2003 ஆம் ஆண்டில் 10434 சிறைவாசிகள் மற்றும் 1831 சிறை பணியாளர்கள் இந்த வகுப்புகளில் கலந்து கொண்டுள்ளனர்.

**அரசு சாரா நிறுவனங்களின் பங்கு**

25. சிறைவாசிகளின் நலம் மற்றும் மறுவாழ்விற்காக சிறைகளில் யோகாசனம், தியானப் பயிற்சி, அறிவுரை வழங்குதல் ஒழுக்கம் சார்ந்த படிப்பினை குறித்த விளக்கம், இலவச மருத்துவ சிகிச்சை, தொழில் கல்வி பயிற்சி அளித்தல் போன்ற மறுவாழ்வு பணிகளை மேற்கொள்ள, அரசு சாரா நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. 2003 ஆம் ஆண்டில் இதுவரை 23 அரசு சாரா நிறுவனங்களுக்கு இத்தகைய மறுவாழ்வு நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**சிறை தொழிற்சாலைகள் மற்றும் தொழிற் பயிற்சி தொழில்கள்**

26. சிறைகளில் வேலை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் தொழிற் பயிற்சி தொழில்களும் சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சுய வேலை வாய்ப்பிற்காக செங்கல் தயாரிப்பு தொழில், குழாய் பொருத்தும் பணி, விளம்பர பலகை வரைதல், மின்கம்பி இணைப்பு பணி, நெசவுத் தொழில், புத்தகம் கட்டமைத்தல், தையல் வேலை, கூர்நாடா தயாரித்தல், மெழுகு, பாதணிகள், பினாயில், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சி முடிவடைந்தவுடன் மாநில வாழ்க்கை தொழில் கல்வி மற்றும் பயிற்சி குழுவினரால் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. சிறைவாசிகளின் மறுவாழ்விற்கு பயன்படாத மற்றும் பழமையான தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன.

சிறைத் துறை 'சேவைத் துறையாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறை பொருட்களைச் சிறையில் தயாரித்து அரசுத் துறைகளுக்கு இலவசமாக வழங்குகிறது. சிறைத் தொழிற் பிரிவுகளின் கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் நான்கு கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகள் புதுக்கோட்டையிலுள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலைகள் ஆகியவற்றில் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சிறைவாசிகளுக்கு தினசரி ஊதியம் அனைத்து பிடித்தங்களும் செய்த பிறகு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.18/- ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.15/- மற்றும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.13.50 என்று வழங்கப்படுகிறது.

## VIII. பணியாளர்கள் நலன்

### பதக்கங்கள்

27. சிறை அலுவலர்களின் சிறப்பான பணிக்காக, கீழ்க்காணும் பதக்கங்கள் அரசால் வழங்கப்படுகின்றன.

**1) முதலமைச்சரின் பதக்கம்**

அ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயல்களுக்கான பதக்கம்

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ.100/- மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.

ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் பாராட்டத்தகுந்த சேவைக்கான பதக்கம்

இப்பதக்கத்திற்கு கீழ்க்கண்டவாறு ஒட்டுமொத்த மானியம் அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை | ரூ.5000/- |
| உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் | ரூ.3000/- |
| காவலர்கள் முதல் முதல் தலைமைக் காவலர் வரை | ரூ.2000/- |



2004 ஜூலை 27]

**தமிழ்நாடு முதலமைச்சரின் நற்பணி பதக்கம்**

இப்பதக்கம் முதல் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோருக்கு கீழ்க்கண்டவாறு மாதாந்திரப்படி வழங்கப்படுகிறது.

முதல் நிலைக் காவலர் – ரூ.50/-
இரண்டாம் நிலைக் காவலர் – ரூ.40/-

**2) குடியரசு தலைவரின் சீர்திருத்தப் பணி பதக்கம்**

அ) வீரதீர செயல்களுக்கான பதக்கம்

இப்பதக்கம் பெறுவோறுக்கு ரூ.60/- மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.

ஆ) பாராட்டத்தகுந்த சேவைக்கான பதக்கம்

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

இ) மெச்சத்தகுந்த சேவைக்கான பதக்கம்

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

### கருணைத் தொகை வழங்குதல்

28. பணியில் செயலாற்றும்போது இறந்து விடும் பணியாளர்களின் குடும்பங்களும், நிரந்தமாக இயலாமை உற்றவர்கள் மற்றும் செயல் திறனற்ற சிறைத் துறை பணியாளர்கள் ஆகியோருக்கும் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியம் அவர் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பணியிலிருக்கும்போது இறந்த திரு.டி.ஜெயக்குமார், துணை சிறை அலுவலர், மத்திய சிறை, சென்னை என்பவரது மனைவி திருமதி. விமலா ஜெயக்குமார் என்பவருக்கு மதுரை அவனியாபுரம் சிறப்பு வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ரூ.9.20 லட்சம் செலவில் உயர் வருவாய் பிரிவு குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

**முதலமைச்சர் குறை தீர்க்கும் நாள்**

29. 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் குறை தீர்க்கும் நாள் மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. இந்த குறை தீர்க்கும் நாட்களில், சிறை பணியாளர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவர்களின் மனக் குறைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்ட வரைமுறைகளின்படி, முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் சிறைத் துறையில், மூத்த அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட்டு வருகிறது.

1. கூடுதல் சிறைத் துறை தலைமை இயக்குநர் – 3 மாதங்களுக்கு ஒருமுறை

2. சரக சிறைத் துறைத் துணைத் தலைவர் – மாதமொருமுறை

3. மத்திய சிறை கண்காணிப்பாளர் – வாரமொருமுறை

சிறைப் பணியாளர்களின் மனக் குறைகள் கேட்டறியப்பட்டு தீர்வுகள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

**கூடுதல் நேர பணி ஊதியம்**

30. காவல் துறை பணியாளர்களுக்கு இணையாக சிறைப் பணியாளர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ.100/– வீதம் கூடுதல் நேர பணி ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**உணவுக் கட்டணம் மற்றும் இரவு உணவு**

31. அவசர காலங்கள் மற்றும் மொத்தமாக சிறைவாசிகள் அனுமதிக்கப்படும் காலங்களிலும் மத்திய சிறையில் பாதுகாப்புப் பணிகளில் பணிக்கமர்த்தப்படும் செயலாட்சி பணியாளர்களுக்கு உணவுக் கட்டணங்கள், மாவட்டங்களில் முறையே இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு ரூ.35/– வீதமும், முதல் நிலைக் காவலர்கள் மற்றும் முதல் தலைமைக் காவலர்களுக்கு ரூ.40/– வீதமும், துணைச் சிறை அலுவலர் பதவி வரையில் உள்ள அனைவருக்கும் ரூ.50/– வீதமும், சென்னை மாநகரில் அனைத்து பணியாளர்களுக்கும் ரூ.80/– வீதமும்



2004 ஜூலை 27]

வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத் தவிர இரவு நேரத்தில் மத்திய சிறைகளில் பணிபுரியும் காவலர்களுக்கு இரவு உணவு மற்றும் காலை தேநீர் ஆகியவை அரசு செலவில் வழங்கப்படுகின்றன.

**சீருடை தையல் கட்டணம்**

32. சிறைக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்காக ரூ.200/– தையற் கட்டணமாக வழங்கப்படுகிறது.

**பதவி உயர்வு வாய்ப்புகள்**

33. பல ஆண்டுகளாகவே இத்துறையில் பணியாற்றும் கீழ் நிலை பணியாளர்கள் தங்கள் பணிக் காலம் முழுவதும் ஒரு பதவி உயர்வு கூட வாய்ப்பு இல்லாமல் மிகவும் துன்பப்பட்டு வந்தனர். இக்குறைகளை தீர்க்கும் வகையில் அரசு கிளைச் சிறைகளில் 112 முதல் தலைமைக் காவலர் பணியிடங்களை தோற்றுவித்தது. இதன் மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியாளர்கள் பல்வேறு கிளைச் சிறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்துறையில் புத்துணர்ச்சி ஊட்டும் பொருட்டு 6 சிறை அலுவலர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரிடையாக தேர்வு செய்து பணியமர்த்தப்பட்டு அவர்கள் தற்போது பல்வேறு சிறைகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சில கிளைச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், பெண்கள் கிளைச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகளாக மாற்றம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து ஐந்து மூதாய் பதவிகளை துணைச் சிறை அலுவலர் பதவிகளாக மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

**IX. ஏனைய முயற்சிகள்**

**கொள்முதல்**

**உணவுப் பொருட்கள்**

34. கூட்டுறவு சிறப்பு அங்காடியில் மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளுக்கான உணவுப் பொருட்களை வாங்கும் பழைய முறைக்குப் பதிலாக குறைந்த விலையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைச் சட்டத்தின்படி பகிரங்க

ஒப்பந்தப்புள்ளி முறையின் மூலம், உணவுப் பொருட்களை போட்டி விலையில் வாங்குவதற்கு புதிய முறையை அரசு பின்பற்றி உள்ளது.

**மூலப் பொருட்கள்**

35. மத்திய சிறைகள் மற்றும் புதுக்கோட்டை சீர்த்திருத்தப்பள்ளி முதலியவற்றில் இயங்கி வரும் பல்வேறு தொழிற் பிரிவுகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைச் சட்டத்தின்படி பகிரங்க ஒப்பந்தப்புள்ளி முறையின் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாறு வாங்கப்படும் மூலப் பொருட்கள் அனைத்தும் இந்திய தரச்சான்றிதழ் தரத்துடன் இருக்கும்.

**தகவல் தொழில் நுட்பவியல்**

36. சிறைத் துறையினை கணினிமயமாக்குவதற்காக அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன், சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை குறித்து மென்பொருள் நம் நாட்டிலேயே முதன்முறையாக நம் மாநில சிறைத் துறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய தகவல் மையம், சிறைகளின் பதிவேடுகளை கணினிமயமாக்கும் முறை குறித்த பிற மென்பொருளையும் தயாரித்து வருகிறது. ஏற்கனவே, இத்துறையைச் சார்ந்த 168 பணியாளர்களுக்கு கணினியினை இயக்கும் முறை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. சிறைத் துறையை கணினிமயமாக்கும் நடவடிக்கையை விரிவுப்படுத்துவது மட்டுமின்றி, சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக சிறைவாசிகளுக்கு கணினியில் பயிற்சி அளிக்க ரூ.155 லட்சம் செலவில் ஒவ்வொரு மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறைகளிலும் கணினி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

ஒளிவுமறைவற்ற நிர்வாகத்தினை அமைத்திடவும், பொது மக்கள் சிறைத் துறையின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளவும், தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் தகவல் தளம் சிறைத் துறையால் தொடங்கி வைக்கப்பட்டது.

www.tn.nic.in/prisons

www.tn.gov.in/prisons



**புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு**

37. சிறைகளின் நடவடிக்கை குறித்த புலனாய்வு விவரங்களை சேகரிப்பதற்காக ஒரு காவல் துறை ஆய்வாளர், இரண்டு காவல் துறை உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய புலனாய்வு மற்றும் விழிப்புப் பணி பிரிவு ஒன்று இத்துறையில் இயங்கி வருகிறது.

**X. புதிய முயற்சிகள்**

**சீர்திருத்தத்திற்கான தொலைநோக்குத் திட்டம்**

38. அனைத்து சிறைகளின் தரத்தினையும் குறிப்பிட்ட அளவிற்கு நிலை உயர்த்துவதற்காக இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், சிறை சீர்திருத்தத்திற்கான தொலைநோக்குத் திட்டம் மற்றும் ஆண்டு திட்டத்தினை தயாரித்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (2002-2007) 25 விழுக்காடு மாநில அரசின் பங்கினையும் சேர்த்து உத்தேசமாக ரூ. 95.34 கோடியை கீழ்க்கண்ட நான்கு முக்கிய பணிகளில், திட்டப் பணிகளை செயற்படுத்துவதற்காக ஒதுக்கி உள்ளது.

அ) புது சிறைச்சாலைகள் கட்டுவது

ஆ) தற்போதுள்ள சிறை கட்டடங்களை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

இ) குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

ஈ) சிறைப் பணியாளர்களுக்கு தங்கும் குடியிருப்பு வழங்குவது

இந்த புது சிறைச்சாலைகள் கட்டுவதற்கான தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் சில கிளைச் சிறைகளை மாவட்ட சிறைகளாக நிலை உயர்த்தவும், பெண்களுக்காக தனிச் சிறை ஒன்றினை மேம்படுத்தவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொலைநோக்குத் திட்டத்தின் முதன்மை குறிக்கோள் சிறைச்சாலைகளை விரிவுபடுத்துவது மற்றும் மேம்பட்ட வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமாக தற்போது சிறைச்சாலைகளில் நிலவும் இட நெரிசல்களைக் களைவது ஆகும். மேலும் குடிநீர் விநியோகம், சுகாதாரம், பணியாளர்களுக்கான குடியிருப்பு போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகும்.

## நீதிமன்றங்களையும் சிறைகளையும் இணைக்கும் திட்டம்

39. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறைகளையும், நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் திட்டத்தினை (Video Conferencing System) அறிவித்தார்கள். அரசு ஆணை எண். 1274, உள் துறை, நாள் 20.12.2001 மற்றும் அரசாணை எண் 441. உள் (சிறை.4) துறை, நாள் 27-5-2002 ஆகியவற்றில் மத்திய சிறைகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் வகையில் 78 இடங்களில் வீடியோ மூலம் இணைக்கும் முறையினை அறிமுகப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1.7.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 167 (2) (ஆ) விற்கு திருத்தம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து 78 இடங்களில் வீடியோ மூலம் இணைக்கப்பட்டு தொலை நீதி முறை அமல்படுத்தப்படும். அதற்குத் தேவையான உபகரணங்கள் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. வீடியோ கான்பிரன்சிங் முறை மூலம் சிறைவாசிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று வரும் செலவு மிச்சமாகும். சிறைவாசிகள் பயணத்தின்போது தப்பிச் செல்லும் அபாயமும் நீங்கும்.

### பணியாளர் நலன்

40. சிறைப் பணியாளர்கள் தாங்கள் பணிபுரியும் இடத்திற்கு மிக அருகில் வசிப்பது இத்துறைக்கு மிக முக்கியமானதாகும். எதிர்பாராத அவசர மற்றும் அத்தியாவசிய நேரங்களில் களப் பணியாளர்கள் உடனடியாக பணிக்கு வரவேண்டியது மிக முக்கியமாகிறது. எனவே, பணியாளர்களுக்கு போதுமான குடியிருப்பு வசதி ஏற்படுத்தித் தர வேண்டியது மிக முக்கியமாகிறது. சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.860.78 இலட்சங்கள் செலவில் 216 குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன. அவை தற்போது கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.





| வ. எண் | சிறையின் பெயர் | துணை சிறை அலுவலர் | உதவி சிறை அலுவலர் | காவலர்கள் | மொத்த திட்ட மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | கோவை | 1 | 6 | 50 | 224.90 |
| 2 | பாளையங் கோட்டை | 1 | 3 | 50 | 212.30 |
| 3 | வேலூர் | | 3 | 30 | 126.60 |
| 4 | திருச்சி | 1 | 3 | 30 | 136.30 |
| 5 | மதுரை | 1 | 3 | 26 | 121.58 |
| 6 | கடலூர் | | 2 | | 8.40 |
| 7 | சேலம் | 1 | 3 | | 22.30 |
| 8 | காவலர் பயிற்சி பள்ளி, வேலூர் | | 2 | | 8.40 |
| | மொத்தம் | 5 | 25 | 186 | 860.78 |

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.500 இலட்சங்கள் செலவில் 112 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக தரம் உயர்த்துதல்

41. அரசாணை எண் 454, உள் துறை, நாள் 29-5-03 ன்படி திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக தரம் உயர்த்த ரூ.472 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

### புழல் சிறை வளாகம்

42. சென்னை மத்திய சிறையில் நிலவும் அளவிற்கதிகமான இடநெரிசல் மற்றும் அதிகரித்து வரும் தேவையினை கருத்திற்கொண்டு மிக நவீன வசதிகளுடன் கூடிய புதிய சிறை வளாகத்தினை புழலில் அமைக்க அரசு முடிவு செய்தது. இப்புதிய சிறை வளாகம் 1250 விசாரணை சிறைவாசிகள், 1250 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் அமையும். இப்புதிய சிறை

வளாகம் 212 ஏக்கர் பரப்பளவுடன் மாசற்றதாகவும், ஆரோக்கியமான சுற்றுப்புறச்சூழலைக் கொண்டதாகவும் அமையும். இதற்காக அரசு ரூ.77.09 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## பகுதி 2 திட்டங்கள்

43. சிறைவாசிகளுக்கான நலப் பணியாக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, வேலூர் மற்றும் திருச்சியில் நோய் பூச்சி கட்டுப்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. சென்னை, கோவை, கடலூர் மற்றும் வேலூர் ஆகிய மத்திய சிறைகளில் உள்ள பழைய நோயாளர் ஊர்திகளை மாற்றம் செய்து புதியவற்றினை வழங்கவும் அரசு உத்தேசித்துள்ளது. சிறை நிருவாகத்திற்காக மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளுக்கிடையே தகவல் தொடர்பு வசதியினை மேம்படுத்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பினை கருத்திற்கொண்டு மின் உற்பத்தி இயந்திரம், பாதுகாப்பு விளக்கு , கையடக்க வாக்கி-டாக்கி ஆகியவற்றினை மத்திய சிறைகளுக்கும், வேலூர் பெண்கள் தனிச் சிறைக்கும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான செலவு விவரம் பின்வருமாறு.

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | மதிப்பு |
|---|---|---|
| 1 | சென்னை, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைகளில் உள்ள நான்கு நோயாளர் ஊர்திகளை மாற்றி விட்டு புதிய ஊர்திகள் வழங்குதல் | ரூ. 15.00 இலட்சம் |
| 2 | வேலூர் மற்றும் திருச்சியில் உள்ள மகளிருக்கான சிறப்பு சிறை மற்றும் 8 மத்திய சிறைகளில் நோய் பூச்சி கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்துதல் | ரூ. 3.36 இலட்சம் |
| 3 | வேலூர் மகளிருக்கான தனிச் சிறையில் 50கே.வி.ஏ. திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அறைகள், பாதுகாப்பு விளக்குகள் ஆகியவற்றுக்கு வகை செய்தல் | ரூ. 15.00 இலட்சம் |



| | | |
|---|---|---|
| 4 | மத்திய சிறைகளில் கையடக்க வாக்கி—டாக்கிகள் வழங்குதல் | ரூ. 12.89 இலட்சம் |
| 5 | 78 கிளைச் சிறைகளில் தொலைபேசி இணைப்புகளுக்கு வகை செய்தல் | ரூ. 7.02 இலட்சம் |
| 6 | திருச்சி, வேலூரிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைகள், கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகிய இடங்களில் ஒளியச்சு நகலெடுக்கும் இயந்திரத்திற்கு வகை செய்தல் | ரூ. 2.55 இலட்சம் |
| 7 | திருச்சி மகளிருக்கான தனிச் சிறையில் உள்ள தற்போது உள்ள பதவியிடமான மகளிர் துணைக் கண்காணிப்பாளர் பதவியிடத்தை மகளிர் கண்காணிப்பாளராக பதவி உயர்த்துதல் | ரூ. 0.17 இலட்சம் |
| 8 | வேலூர், திருச்சி மத்திய சிறை, மற்றும் மகளிருக்கான தனிச் சிறைகளில் உள்ள நூலகத்தை மேம்படுத்துதலும், அறை— கலன்களுக்கு வகைசெய்தலும் | ரூ. 5.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.60.99 இலட்சம் |

## XI. முடிவுரை

44.சிறைகளின் நிருவாகத்திற்கு தமிழக அரசு உயர் முன்னுரிமையளிக்கிறது. சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைவாசிகளின் அனைத்து வகை நல நடவடிக்கைகளையும் மேம்படுத்த ஒருமித்த முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதுடன் சிறைவாசிகள் மற்றும் சிறைப் பணியாளர்களின் நலனை முன்னேற்றும் வகையில் அடிப்படை கட்டமைப்பு, சிறைகளில் காவல் மற்றும் பாதுகாப்பு, மற்றும் மனித உரிமைகள் காத்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறைகள் செயல்படும் முறையினை முன்னேற்றும் வகையில் பல்வகை நிர்வாக மாற்றங்களும் செய்யப்படுகின்றன. சிறைகளின் சீர்திருத்தம் குறித்து பல்வேறு குழுக்களின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட சிறைகள் எனும் கோட்பாடு இம்மாநிலத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மத்திய சிறையில் அதிக

அளவிலான சிறைவாசிகள், இடநெருக்கடி மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளால் இம்மத்திய சிறை பொருத்தமற்றதாக உள்ளதால், இம்மத்திய சிறை, பெண்களுக்கான தனிச் சிறை மற்றும் நிலை உயர்த்தப்பட்ட மருத்துவமனை உள்ளிட்ட நவீன வசதிகளுடன் புழலில் அமைக்கப்பட உள்ள மிகப் பிரமாண்டமான சிறை வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளது. பெண்களுக்கென மட்டுமே 9 கிளைச் சிறைகள் மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகள் உருவாக்கப்பட்டது இந்தியாவிலேயே முன்னோடியான முயற்சியாகும். சிறை நிருவாகத்தின் நவீன தேவைகளை கருத்திற்கொண்டு அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவால் சிறை நடைமுறை நூல் திருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் சிறை நிருவாகம் நவீன கருத்துகளையும் மாற்றங்களையும் எவ்வித சிரமமுமின்றி ஏற்று மேலும் முன்னேற்றம் அடையும். தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில், சிறைவாசிகளின் மனித உரிமை விதிகளை உரிய முறையில் அமல்படுத்துவதன் மூலம் சிறைச்சாலைகள் சீர்திருத்த மையங்களாக மாறி வருகின்றன என்பதை எண்ணத்திலும், செயலிலும் உறுதி செய்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.



# இணைப்பு - IV

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### I. முன்னுரை

அரசின் அச்சுப் பணிகளை நிறைவேற்றும்பொருட்டு பத்து பணியாளர்களுடன் அரசு அச்சகம் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1831 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுத் துறைகள், தலைமைச் செயலகத் துறைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், வரவு—செலவு ஆவணங்கள், அரசுத் தேர்வுத் துறைப் பணிகள், அரசு தேர்வாணைய துறைப் பணிகள், குடும்ப அட்டைகள், மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் ஆண்டறிக்கைகள், சட்டமன்ற பேரவைச் செயலக பணிகள், பொதுக் கணக்குக் குழு அறிக்கைகள், கமுக்கத்தன்மை வாய்ந்த சிறப்பு அறிக்கைகள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் போன்ற பல்வகை அச்சுப் பணிகள் அரசு அச்சகங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. இத்துறையில் 2784 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் பெண்கள் 516, கண்பார்வையற்றவர்கள் 37 (ஆண்கள் 27 மற்றும் பெண்கள் 10), உடல் ஊனமுற்றவர்கள் 84 (ஆண்கள் 68 மற்றும் பெண்கள் 16), காதுகேளாதோர்/வாய்பேசாதவர் 9 (ஆண்கள் 7 மற்றும் பெண்கள் 2) பேர்கள் ஆவார்கள்.

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை:

1953 ஆம் ஆண்டு முதல், தனித்தனியே இயங்கி வந்த எழுதுபொருள் கிடங்கு மற்றும் அச்சகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையாக இயங்கி வருகிறது. இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரின்கீழ் இவ்வியக்ககம் 1953 முதல் கடந்த 51 ஆண்டுகளாக சென்னையில் இயங்கி வருகிறது. இணை இயக்குநர், பொது மேலாளர், 2 பணி மேலாளர்கள், 9 துணைப் பணி மேலாளர்கள், 27 உதவிப் பணி மேலாளர்கள், 9 உதவி இயக்குநர்கள், ஒரு முதன்மைக் கணக்கு அலுவலர், ஒரு துணை இயக்குநர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு தொழிலாளர்

நல அலுவலர் ஆகியோர் இயக்குநரின்கீழ் பணியாற்றி வருகிறார்கள். சென்னையில் அமைந்துள்ள இவ்வியக்ககத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், விற்பனை நிலையங்களும் மற்றும் எழுதுபொருள் கிடங்கு அலுவலகமும் இயங்கி வருகின்றன.

அச்சுத் துறை பணியாளர்களின் பணி நியமனம், பதவி உயர்வு மற்றும் பணிமாற்றம் போன்ற பணிகள் இயக்ககத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துறை சம்பந்தமாக நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகள் மற்றும் தொழில் தகராறு சட்டத்தின்கீழ் வரும் வழக்குகள் தொடர்பான நடவடிக்கைகளும் இயக்ககத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிர்வாகப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, எழுதுபொருள் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளில் 210 பணியாளர்களைக் கொண்டு இயக்ககம் செயல்படுகிறது. இப்பிரிவுகள் முறையே இணை இயக்குநர், பொது மேலாளர், துணை இயக்குநர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ஆகியோரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. இவர்கள் அனைவரும் துறைத் தலைவரான இயக்குநரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குகிறார்கள்.

சென்னையில் அரசு மைய அச்சகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள உயர்நீதிமன்ற கிளை அச்சகம் தவிர மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, சேலம் மற்றும் விருத்தாசலம் ஆகிய ஐந்து ஊர்களிலும் அரசு கிளை அச்சகங்கள் இயங்குகின்றன. மேலும் எழுதுபொருள் கிடங்கு, அரசு வெளியீடுகள் பிரிவு ஆகியவையும் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

**அரசு மைய அச்சகம், சென்னை:**

புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வந்த அச்சகம், 1888 ஆம் ஆண்டு தங்கசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது இரண்டு பணி மேலாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் 1652 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இங்குள்ள பணியாளர்கள் மூன்று முறை மாற்றங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வச்சகத்தில் டெஸ்க் டாப் பப்ளிசர் என்ற கணினி இயந்திரங்கள், வெப் ஆப்செட் இயந்திரங்கள், புத்தகம் கட்டும் இயந்திரங்கள் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

மாநில வரவு—செலவுத் திட்டப் பணிகள், தமிழ்நாடு அரசிதழ், தமிழ்நாடு சட்டப் பேரவையின் அன்றாட நடவடிக்கை குறிப்புகள்,



பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உறுதி மொழிக் குழு போன்ற அறிக்கைகள், குடும்ப அட்டைகள், பொது தேர்தல், அதிரகசியப் பணிகள் மற்றும் அரசுத் தேர்வாணைய வெளியீடுகள் ஆகிய அச்சிடும் பணிகளுடன் அரசு நாட்காட்டிகளும், நாட்குறிப்பேடுகளும் அச்சிடப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை:**

உயர் நீதிமன்ற கிளை அச்சகம் 1923 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் நிறுவப்பட்டு, ஒரு துணைப் பணி மேலாளரின்கீழ் 173 பணியாளர்களுடன் மூன்று முறைமாற்றங்களில் இயங்கி வருகிறது. தினசரி வழக்குப் பட்டியலுக்கு முன்னுரிமை அளித்து இரவு முறைமாற்றத்தில் அச்சிடப்பட்டு, அடுத்த நாள் நீதிமன்றம் செயல்பட வழிவகுப்பது இக்கிளை அச்சகத்தின் சிறப்பாகும். உயர்நீதிமன்றத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை மின்னல் வேகத்தில் அச்சிட்டு உயர் நீதிமன்றத்திற்கு வழங்குவது இவ்வச்சகத்தின் பணியாகும்.

**அரசு கிளை அச்சகம், மதுரை:**

1976 ஆம் ஆண்டு இக்கிளை அச்சகம் தொடங்கப்பட்டது. தற்போது 180 பணியாளர்களுடன் ஒரு துணைப் பணி மேலாளர் மற்றும் ஒரு உதவிப் பணி மேலாளர் ஆகியோரின்கீழ் இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது.

வருவாய்த் துறை, கருவூலத் துறை, காவல் துறை, பதிவுத் துறை, மருத்துவத் துறை மற்றும் வணிகவரித் துறை ஆகிய துறைகளின் படிவங்களும், பதிவேடுகளும், வேளாண்மைத் துறையின் விதைச்சான்று அட்டைகளும், அட்டவணைகளும், பொதுப் பணித்துறைக்கான விலைப்பட்டியல்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

இக்கிளை அச்சகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் 1-1-2002 முதல் கணினி முறையில் செயலாக்கப்பட்டு அச்சிட்டு வழங்கப்படுகின்றன:

1. மதுரை
2. தேனி
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. திண்டுக்கல்

[2004 ஜூலை 27

**அரசு கிளை அச்சகம், சேலம்:**

1966 ஆம் ஆண்டு இக்கிளை அச்சகம் தொடங்கப்பட்டது. தற்போது ஒரு கிளை மேலாளர் மற்றும் ஒரு உதவிப் பணி மேலாளரின்கீழ் 99 பணியாளர்களுடன் இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகின்றது. தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுப் பணிகளுக்கான படிவங்கள், 'அ' படிவங்கள் ஆகியவை இங்கு அச்சிடப்படுகின்றன.

சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மற்றும் தருமபுரி ஆகிய ஆறு மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இந்த அச்சகத்தில் கணினி முறையில் செயலாக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை:**

புதுக்கோட்டை ஸ்ரீபிரகதாம்பாள் மாநில அச்சகம் இத்துறையுடன் 1949 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. தற்போது 100 பணியாளர்களுடன் ஒரு கிளை மேலாளரின்கீழ் இரு முறை மாற்றங்களில் இவ்வச்சகம் இயங்கி வருகிறது. ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, ஓய்வூதியத் துறை மற்றும் வனத் துறை சார்பான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன.

மேலும் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் கணினி முறையில் செயலாக்கப்பட்டு, இங்கு அச்சிடப்படுகின்றன:-

1. இராமநாதபுரம்
2. கன்னியாகுமரி
3. சென்னை
4. காஞ்சிபுரம்
5. திருவள்ளூர்
6. திருவண்ணாமலை
7. தஞ்சாவூர்
8. புதுக்கோட்டை
9. தூத்துக்குடி
10. திருவாரூர்
11. நாகப்பட்டினம்
12. சிவகங்கை



2004 ஜூலை 27]

**அரசு கிளை அச்சகம், திருச்சி:**

இவ்வச்சகம் 1965 ஆம் ஆண்டில் திருச்சி அரியமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டது. தற்போது சொந்த கட்டடத்தில் துவாக்குடியில் ஒரு கிளை மேலாளரின் கீழ் 105 பணியாளர்களுடன் இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது. இதில் அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட பொதுப் படிவங்களும், பதிவேடுகளும், தன்பதிவேடுகளும், ரொக்கப் பதிவேடுகளும் மற்றும் அளவைப் பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்:**

1966 ஆம் ஆண்டு வாடகை கட்டடத்தில் தொடங்கப்பட்ட இக்கிளை அச்சகம், 1969 ஆம் ஆண்டு முதல் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது 89 பணியாளர்களுடன் ஒரு கிளை மேலாளரின் கீழ் இரு முறை மாற்றங்களில் இயங்கி வரும் இவ்வச்சகத்தில் வேளாண்மை, பொதுப் பணி, காவல், தீயணைப்பு, தேசிய மாணவர் படை, வனம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, கால்நடை பராமரிப்பு, மருத்துவம், கூட்டுறவு, புள்ளியியல், தொழில் மற்றும் வணிகம், ஆகிய துறைகளுக்கான படிவங்களும் பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன.

கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

1. விழுப்புரம்
2. வேலூர்
3. கடலூர்

**எழுதுபொருள் கிடங்கு, சென்னை:**

எழுதுபொருள் கிடங்கு தற்போது ஒரு உதவி இயக்குநரின்கீழ் 176 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகப் பொருட்கள் ஆகியவை

[2004 ஜூலை 27

ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்களுக்கு பெரும்பாலும் தமிழ் தட்டச்சுப் பொறிகளே வழங்கப்படுகின்றன. ஆங்கில தட்டச்சுப் பொறிகள் அரசின் ஆணை பெற்ற பின்னரே வழங்கப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காகித நிறுவனத்திடமிருந்து (T.N.P.L.) ரூ.19.35 கோடியில் காகித ரீல்களும்/ தாள்களும், ரூ.1.52 கோடியில் சிறப்பு இன காகிதம் மற்றும் அட்டைகளும், ரூ.0.57 கோடியில் ஸ்டென்சில் பேப்பர், கார்பன் பேப்பர் மற்றும் மைக்குழல்களும் ஆகமொத்தம் ரூ.21.44 கோடி மதிப்புள்ள எழுதுபொருட்கள் கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்டன.

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை:**

சென்னை அண்ணாசாலையில் இயக்கக வளாகத்தில்அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதன் கிளை விற்பனை நிலையம் ஒன்று உயர்நீதிமன்றக் கிளை அச்சகத்தில் இயங்கி வருகிறது. இவ்விற்பனை நிலையங்கள் மூலம் அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனுமதி பெற்ற 32 முகவர்கள் மூலமாகவும் அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. 2003-04 ஆம் நிதியாண்டில் ரூ.83,56,830 பிரசுரக் கட்டணமாகவும், ரூ.9,11,181 அரசிதழ்கள் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை மூலமாகவும் மொத்தம் ரூ.92,68,011/- வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இவ்வருவாயானது இந்தத் துறையின் மூலம் அரசுக்கு வரும் நிதி ஆதாரங்களில் ஒரு வகையாகும்.

**தொழிலாளர் நலன்:**

1962 ஆம் ஆண்டு சென்னை, தண்டையார்பேட்டையில் 300 குடியிருப்புகள் அரசு அச்சகப் பணியாளர்களுக்கு கட்டித் தரப்பட்டுள்ளன. சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கவனிப்பதற்காக தொழிலாளர் நல அலுவலர், உதவி தொழிலாளர் நல



2004 ஜூலை 27]

அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் இத்துறையில் பணிபுரிகின்றனர். அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இதில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள இயக்ககம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அனைத்து தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார். இத்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் தேநீர் மற்றும் ரொட்டிப் படி பிரதிமாதம் ரூ.100 வீதம் வழங்கப்படுகிறது. இது தவிர ஈயப் புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் பல சத்துள்ள வைட்டமின் மாத்திரைகளும் மற்றும் பால் படியாக நாளொன்றுக்கு ரூ. 2 வீதம் வழங்கப்படுகின்றன. இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆண் தொழிலாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒருமுறை மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு, அதற்கு தையற்கூலியாக ஜோடிக்கு ரூ.100 வீதம் மூன்று ஜோடிக்கு ரூ.300 வழங்கப்படுகிறது. பெண் தொழிலாளர்களுக்கு மூன்று பாலியஸ்டர் புடவைகளும், ரவிக்கைத் துணிகளும் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. ரவிக்கை தைப்பதற்கு தையற்கூலியாக ஒரு ரவிக்கைக்கு ரூ.20 வீதம் மூன்று ரவிக்கைகளுக்கு ரூ. 60 வழங்கப்படுகிறது. சென்னை அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்கெனச் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம், சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 1,50,000 வரையில் கடன் தொகை வழங்கி வருகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டியும், ஒரு நாட்குறிப்பேடும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தொழிற் பழகுநர் பணியிடங்கள் நிரப்பப்படுகிறது. இத்துறையில் உள்ள அச்சகங்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொழிற் பழகுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

44 பயிற்சியாளர்கள் புத்தகம் கட்டுநர்களாகவும், 4 பட்டயம் பெற்ற பயிற்சியாளர்கள் கம்மியர்களாகவும், ஒருவர் தச்சராகவும் பயிற்சியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தொழிற்நுட்ப பணியாளர் நலன் கருதி தினசரி மாலை 4 மணி முதல் 5 மணி வரை யோகாசனம் செய்ய மைய அச்சகத்தில் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திரநாள் மற்றும் ஆயுத பூஜை கொண்டாட்டங்களுக்கும், விளையாட்டு சாதனங்கள் வாங்கவும், அரசின் தொழிலாளர் நலநிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்:**

173 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பெற்ற அரசு அச்சகம் தனது பணியினை மிகச்சிறப்பாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தற்போதுள்ள பழைய லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்களை மேலும் பயன்படுத்த இயலாத நிலையில், மாறிவரும் புதிய உத்திகளைக் கருத்திற் கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன் அரசு அச்சகங்களைப் படிப்படியாக நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு அச்சகங்கள் நவீனமயமாக்கப்படுவதனால் சில பிரிவுகளில் தேவைக்கு மிகையாகப் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களை அச்சகங்களில் அவசியப்படும் பிற பிரிவுகளில் பரவலமர்த்தம் முறையில் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் நிலைபடுத்தப்படாத மற்றும் நிலைபடுத்தப்பட்ட படிவங்களின் அளவு சுமார் 80 கோடி அச்சு அழுத்தங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய நிலையில் இப்பணிகளைச் செயலாக்கப் போதிய இயந்திரங்கள் இன்மையாலும், 1936–ல் கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரம் மற்றும் பழைய லெட்டர் பிரஸ் இயந்திரங்களே திருச்சி மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகங்களில் பயன்பாட்டில் உள்ளதாலும், பிற அச்சகங்களில் பழுது நீக்க இயலா நிலையில் ஒரு சில லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்கள் மிகக் குறைந்த செய்மானமே அளிப்பதனாலும், 52 கோடி அச்சு அழுத்தங்களே அரசு அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு, பணியாளர்கள் விவரம், 2003–04 ஆம் ஆண்டிற்கான அரசு





அச்சகங்களின் செயலாக்க இலக்குகள் மற்றும் சாதனைகள், ஆகியவை அட்டவணைப் படுத்தப்பட்டு பிற்சேர்க்கைகளில் தரப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளில் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய கிளை அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டதன் பயனாக, பணியாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 50 விழுக்காட்டிற்கு குறைந்த போதிலும், இத்துறையின் உற்பத்தி தற்போது இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சின் தரமும் மேம்பாடு அடைந்துள்ளது. விவரங்கள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன.

2003–04–ல் அரசு மைய அச்சகத்திற்கு ரூ. 43 இலட்சம் செலவில் இரு வண்ண ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரங்கள் (2 Colour Sheet-fed Offset) கொள்முதல் செய்யப்பட்டு அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

தமிழகத்தின் அரசுப் பணிகளுக்கு உந்து சக்தியாக விளங்குகின்ற அச்சுத் துறை, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினை கூர்ந்தாய்வு செய்து புதிய தொழில்நுட்ப இயந்திரங்களைப் பெற்று மேலும் சிறப்பாகச் செயல்படுவதுடன், தொழிலாளர் நலனையும் பாதுகாத்து சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அச்சழுத்த வேலைத்திறனை அதிகப்படுத்தியும், அரசின் முக்கியமான ஆவணங்கள் மற்றும் கமுக்க ஆவணங்களுக்கு ஆவண ரகசியங்கள் காப்பாற்றப்பட்டு சிறப்பாக தொடர்ந்து அச்சிட்டு வெளியிடுவதில் முன்னணியில் உள்ளது.

## அட்டவணை — அ
### திருவாக அமைப்பு






## அட்டவணை — ஆ
### 1—4—2004—ல் பணியாளர்களின் எண்ணிக்கை

| வ. எண். | அலகு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள் (1—4—1984) | 1—4—2004—ல் மொத்த பணியாளர்கள் | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | இதர பிரிவு பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஆணையரகம்(அரசு வெளியீடுகள், விற்பனை நிலையம் உட்பட) | 291 | 210 | 12 | 116 | 82 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம். சென்னை—1 | 326 | 176 | - | 45 | 131 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை—79 (ஆணைக்காரத் தோட்டம் அச்சகம் உட்பட) | 4254 | 1652 | 14 | 113 | 1525 |
| 4. | அரசு கிளை அச்சகம் (உயர் நீதிமன்ற வளாகம்). சென்னை—104 | 237 | 173 | 04 | 12 | 157 |
| 5. | அரசு கிளை அச்சகம். மதுரை | 336 | 180 | 02 | 11 | 167 |
| 6. | அரசு கிளை அச்சகம். சேலம் | 141 | 99 | 02 | 11 | 86 |
| 7. | அரசு கிளை அச்சகம். திருச்சி | 166 | 105 | 01 | 09 | 95 |
| 8. | அரசு கிளை அச்சகம். புதுக்கோட்டை | 256 | 100 | 01 | 09 | 90 |
| 9. | அரசு கிளை அச்சகம். விருத்தாசலம் | 158 | 89 | 01 | 06 | 82 |
| | மொத்தம் | 6165 | 2784 | 37 | 332 | 2415 |

## அட்டவணை — இ

2003-04 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களில் செயலாக்க விவரம்

(ஏப்ரல் 2003 முதல் மார்ச் 2004 வரை)

| வ. எண் | அச்சகத்தின் பெயர் | அச்சு அழுத்தங்கள் ஆர் ஏ2 இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79. | 23,09,50,000 | 20,41,51,275 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-104. | 6,70,50,000 | 5,13,63,757 |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை | 7,59,90,000 | 9,67,58,428 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம் | 4,57,60,000 | 5,08,15,031 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 2,53,30,000 | 2,59,42,710 |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 4,09,05,000 | 6,82,31,230 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 1,93,70,000 | 2,25,26,700 |
| | மொத்தம் .. | 50,53,55,000 | 51,97,89,131 |





## இணைப்பு – V

(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 34

## பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

தமிழ்நாடு அரசு, மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தினை, மத்திய நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின்பேரில், 1973 ஆம் ஆண்டில் நிறுவியது. கணிசமாகக் கூடியுள்ள அரசு அலுவல்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணி சம்பந்தமான அலுவல்களைக் கவனிக்கும்பொருட்டு, தனியாக ஒரு துறை தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று, மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையம், பரிந்துரை செய்தது. அதனடிப்படையில், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, 1976 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 6 ஆம் நாள் முதல் தோற்றுவிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது. இத்துறையில், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயலர் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஓர் அலகும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை செயலர் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், மற்றொரு அலகுமாக இரண்டு அலகுகள் உள்ளன.

**2. இத்துறையின் பணிகள் கீழ்க்கண்டவாறு அமையும்:**

(i) அறிவுரை வழங்குபவை;

(ii) சட்டபூர்வமானவை; மற்றும்

(iii) நிருவாகம் தொடர்பானவை.

**3. அறிவுரை வழங்கும் பணிகள்:**

"தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்" ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, கீழ்க்கண்ட இனங்களுக்கான அறிவுரை வழங்கும் துறையாகப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயல்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 27

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பல்வேறு பதவிகளுக்குக் காலியிட மதிப்பீடு நிர்ணயம் செய்தல், உயர் பதவிகளுக்குப் பதவி உயர்வு மற்றும் பணி நியமனத்திற்குத் தேர்ந்த பட்டியல் தயாரித்தல்;

(ii) அரசு அலுவலர்களின் பணி, வரன்முறைப்படுத்தல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாகச் சிறப்பு / பொது விதிகளைத் தளர்வு செய்யும் கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்;

(iii) அடிப்படை விதிகளின்படி, கீழ்க்கண்ட கருத்துருக்கள்மீது அறிவுரை வழங்கப்படுகிறது:-

(அ) ஊதிய நிர்ணயம் (அடிப்படைவிதி 22)

(ஆ) ஆண்டு ஊதிய உயர்வு வழங்குதல் (அடிப்படை விதி 27)

(இ) சரியான முதுநிலைக்குக் கொண்டுவரப்படும் நேர்வுகளில், விதித்துளி 17 அடிப்படை விதி 27-ன்கீழ் ஊதியம் நிர்ணயம் செய்தல்

(ஈ) மேற்படிப்புக்கு விடுப்பு வழங்குதல்(அடிப்படை விதி 84)

(உ) அயல்நாடுகளில் வேலைக்கான விடுப்பு வழங்குதல் (தமிழ்நாடு விடுப்பு விதிகள் பிரிவு 2ஏ)

(ஊ) தன்விருப்ப ஓய்வு (அடிப்படை விதி 56 (3) )

(எ) கட்டாய ஓய்வு ( அடிப்படை விதி 56(2) )

(ஏ) அயற்பணி விதிகள் மற்றும் வரையறைகளின்படி, அயற்பணிக்கு அனுப்புதல் (அடிப்படை விதி 110-114)

(ஐ) உயர்க் கல்வி தேர்ச்சி பெற்றதற்குமுன், ஊதிய உயர்வு வழங்குதல் (அடிப்படை விதி 31)

(ஒ) தற்காலிகப் பணி நீக்கக் காலத்தை முறைப்படுத்தல் (அடிப்படை விதி 54)

(ஓ) அரசு பணியாளர்களின் கட்டாயக் காத்திருப்பை வரன்முறை செய்தல் (அடிப்படை விதி 9)



2004 ஜூலை 27]

(iv) தனியர் முதன்முதலில் பணியமர்த்தப்படும் பதவியில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணை வெளியிட்டவுடன், பொது விதி 31ன் கீழ் உறுதிப்படுத்தி ஆணையிடுதல்;

(v) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொதுவிதி 41ஏ-யின்கீழ், அரசுப் பணியாளர்களின் பணித் துறப்பை ஏற்றல்;

(vi) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதி 47-இன்கீழ், அரசுப் பணியாளர்களின் பணி உரிமை துறப்பு ஏற்றல்;

(vii) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதி 35-இன் கீழ், முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருவினை ஆய்வு செய்தல்;

(viii) நடைமுறையிலுள்ள அறிவுரைகளின்படி, பணியாளர்களின் மந்தணக் கோப்புகளைப் பராமரித்தல்;

(ix) அரசுப் பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல் / அங்கீகரித்தல் குறித்த கருத்துருவை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அமைக்கப்படும் 'அங்கீகரிப்புக் குழு' முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடல்.

**4. சட்டபூர்வமான பணிகள்:**

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பாக கீழ்க்கண்ட சட்டமுறை மற்றும் ஒழுங்குமுறை விதிகளை, இத்துறை நிருவகித்து வருகிறது:-

(அ) மாநில அரசின் அனைத்துத் துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணி விதிகள் (இந்திய ஆட்சிப்பணி நீங்கலாக):-

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகள் (பகுதிகள் I மற்றும் II) ;

[2004 ஜூலை 27

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

(iv) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்;

(v) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றம்) விதிகள், 1955.

(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான, சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணிவிதிகள்:-

(i) தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகள் ;

(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்;

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள்– இனம் 22.

(இ) தலைமைச் செயலகப் பணி:-

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்;

(ii) தமிழ்நாடு பொதுப் பணி சிறப்பு விதிகள்–இனம் 12 மற்றும் 12ஏ.

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்:-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

**5. நிருவாகப் பணிகள்:**

தலைமைச் செயலகத்தில் ஓர் அலகுமுறையின்கீழ் (Under One Unit System), அரசு சார்புச் செயலாளர்களின் நிலைவரை, அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு குறித்து, இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஆகியவை, இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.



2004 ஜூலை 27]

**6. அரசு அலுவல்கள்:**

தமிழ்நாடு அரசின் அலுவல்கள், தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்ட விதிகளின்படி நடைபெற்று வருகின்றன:-

(i) இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 166 உட்பிரிவு (2) மற்றும் (3)-இல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ள 1978 ஆம் ஆண்டு அரசு அலுவல் விதிகளில் உள்ள விதிகள்;

(ii) தமிழ்நாடு அரசு அலுவல் விதி 63-இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக நெறிமுறை அறிவுரைகள்;

(iii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;

(iv) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

**7. பணியாளர் சங்கங்கள்:**

பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.

**8. நிருவாகச் சீர்திருத்தங்கள்:**

சீர்திருத்தங்கள் என்பது ஒரு தொடர் செயலாக்கம். மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதாலும், கால மாறுபாட்டிற்கேற்றபடி எழும் அறைகூவல்களை எதிர்கொள்ளவேண்டி இருப்பதாலும், நவீன விதிமுறைகளை வகுத்து, நிர்வாகம் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. உரிய நேரத்தில் திறம்பட பணிப் பயன்களை அடையும்வண்ணம், மிகப் பழமையான விதிமுறைகளையும், கால விரயமாகும் நடைமுறைகளையும் களைதல் வேண்டும். ஆகவே, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதிச் செயலர் தலைமையில், "செயலாளர்கள் குழு"வை அரசு அமைத்தது. இக்குழு, மாநில அரசின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யவும்,

[2004 ஜூலை 27

திறமை, நேர்மை, நம்பகத்தன்மை, மக்கள் நேய அரசுப் பணி ஆகியவற்றில் சாதனை புரியவும், நிர்வாக நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் நெறிமுறைகளைக் கண்டறியும் பணியையும் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், இக்குழு, மனித வள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், அலுவலகத்தை நவீன மயமாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டது. இக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு அலுவலகங்களில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:-

(அ) கோப்புகளை ஆய்வுசெய்து, இறுதி முடிவு எடுப்பதில் செலவிடும் நேரத்தைக் குறைக்கும்பொருட்டு, "நிலை தாண்டுதல்" (Level Jump) முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, பிரிவுகளில் பரிசீலிக்கப்படும் கோப்புகள் அனைத்துநிலை அலுவலர்களுக்கும் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. மாறாக, இடைநிலை அலுவலர்களைத் தவிர்த்து, உயர் அலுவலர்களுக்குச் சமர்ப்பிக்க ஏதுவாக உள்ளது.

(ஆ) அரசின் நிருவாகச் செயல்பாடுகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும், தேவையற்ற கடிதப் போக்குவரத்தைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் சென்னை நகரில் அமைந்துள்ள துறைத் தலைவர்களுக்கும் இடையே ஒற்றைக் கோப்புமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை, கீழ்க்கண்ட நேர்வுகளில் பின்பற்றப்படுகிறது:-

(i) திட்டங்கள்,

(ii) பணியமர்வு மற்றும் பணியாளர் மாற்றங்கள்,

(iii) பதவி உயர்வு பட்டியல் தயாரித்தல்,

(iv) அரசு ஊழியர்கள் நடத்தை விதிகளின்கீழ் அனுமதி வழங்குதல்,

(v) சம்பள நிர்ணயம் மற்றும் சம்பளம் திருத்தியமைத்தல்,

(vi) தற்காலிகப் பணியிடங்களை மேலும் தொடர ஒப்பளித்தல் மற்றும் அவற்றை நிலையான பணி இடங்களாக மாற்றுதல்,



2004 ஜூலை 27]

(vii) துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டின்கீழுள்ள அலுவலர்களின் கட்டாய ஓய்வு நேர்வுகளை அடிப்படை விதி 56(2)-இன்கீழ் ஆய்வு செய்தல்.

மேற்குறிப்பிட்ட நேர்வுகளில் சம்பந்தப்பட்ட நிருவாக துறைச் செயலர், முறையான சுற்றோட்டக் குறிப்பு இல்லாமலேயே நேரடியாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி ஆணை பெறலாம்.

(இ) கோப்புகள் முடிக்கும் வாரம்: வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிருவாகம் அளிக்கும்பொருட்டு, குறையீடு மனுக்களைப் பெற்று, 5 நாட்களில் ஒப்புகைச் சீட்டு அனுப்ப வேண்டும் என்றும், 90 நாட்களில் மனுக்களை முடித்து, மனுவின்மீதான இறுதி முடிவு, மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், அரசு அறிவுறுத்தியுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், "மக்கள் குறைகேட்கும் நாள்" நடத்துவதைப்போல் "கோப்புகள் முடிக்கும் வாரம்" நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**9. தகவல் நிலையங்கள்:**

(i) தகவல் மற்றும் சேவை மையம்: அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்து கொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்துகொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையம் திறக்க வேண்டுமென்று அனைத்து தலைமைச் செயலகத் துறைகளுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அரசின் அறிவுரைக்கிணங்க, தகவல் மையங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் இயங்கி வருகின்றன.

(ii) அனைத்து அரசுத் துறைகளும் தங்கள் துறை சம்பந்தப்பட்ட அரசு நலத் திட்டங்கள் மற்றும் அரசு நடைமுறை பற்றிய விவரங்கள், கணிப்பொறியில், தேசிய தகவல் மையம்மூலம் மக்களைச் சென்றடைகின்றனவா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அரசின் ஆணைப்படி, சென்னை மாநகரில் அரசு அலுவலகங்களில் தகவல் நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

(iii) **மக்கள் சாசனம்:** ஒவ்வோர் அரசுத் துறையும் கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கி, மக்கள் சாசனத்தை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது:–

(அ) மக்களுக்கு அளிக்கப்படும் பணிகள் குறித்து பதில் சொல்லும் பொறுப்பையும், ஒளிவு மறைவற்ற தன்மையையும் உறுதி செய்ய வேண்டும்;

(ஆ) பொதுமக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கான விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்துகொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும்;

(இ) திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப் பணிக் கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு அமைக்க வேண்டும்.

மேற்கூறிய கோட்பாடுகளை உள்ளடக்கி, "கையேடு" ஒன்று தயாரித்து, அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டது. மேலும், மக்கள் சாசனம் அவ்வப்போது நாளது தேதி வரை புதுப்பிக்கப்படுகிறது. துறைகளின் மக்கள் சாசனங்களை இவ்வரசின் www.tn.gov.in என்ற இணைய தளத்தில் காணலாம். மக்களுடன் நேரடித் தொடர்பில்லாத துறைகளான பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, பொது மற்றும் சட்டம் ஆகிய துறைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**10. கணினி பயன்பாடு:**

(i) அரசு அலுவலகங்களில் கணினி பயன்பாடு மிகுந்துள்ளது. இத்துறையில் உயர்ந்தபட்ச கணினி பயன்பாடு மேற்கொள்ளப்படுகிறது. இதுதொடர்பாக, அனைத்துப் பணி விதிகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது செய்யப்படும் விதிகளுக்கான திருத்தங்கள், உடனடியாக கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு தகவல் வங்கி (Reference Bank) உருவாக்கப்பட்டுள்ளது;

(ii) இத்துறை சார்ந்த ஆண்டு வரவு செலவு அறிக்கை, மறு மதிப்பீடு, இறுதியான திருத்திய ஒதுக்கீடு மற்றும் பகுதி—2 திட்டங்கள் நிதித் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன;





(iii) இந்திய ஆட்சிப் பணியாளர் அல்லாத கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள் மற்றும் பிரிவு அலுவலர்கள், தனிச் செயலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன;

(iv) பணிவிதிகள், திருத்தங்கள், அரசு ஆணைகள், சம்பளப் பட்டிகள், ஏ, பி, சி, டி பணியாளர்கள் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன;

(v) பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், பணி விதிகள் போன்றவை "தலைமைச் செயலக வலை" மற்றும் "தமிழ்நாடு அரசின் இணைய தளத்தில்" பதிவு செய்யப்படுகின்றன;

(vi) தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கென புதிய வலைத் தளம் ( Web Site ) துவக்கப்பட இருக்கிறது;

(vii) தலைமைச் செயலக தகவல் முறை (Secretariat Knowledge System) இத்துறையில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**11. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்:**

(அ) நிருவாகத் தீர்ப்பாயச் சட்டத்தின் பிரிவு 4(2)-ன்படி தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஒரு நடுவர் ஆயமன்றத்துடன் 12-12-1988 அன்று நிறுவப்பட்டது. 20-07-1990 அன்று இரண்டாவது நடுவர் ஆயமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

(ஆ) 1997 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, தீர்ப்பாயத்தின் ஆணைகள், உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டதாகும். ஆகவே, அரசுப் பணி சம்பந்தப்பட்ட வழக்குகளில், மூன்றடுக்கு நீதிமன்ற அமைப்பு ஏற்படும் (தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம்) நிலை உள்ளது. அரசுப் பணி சம்பந்தப்பட்ட

வழக்குகளுக்கு, ஈரடுக்கு நீதிமன்ற அமைப்பே (உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம்) போதும் என்று இந்த அரசு தற்போது முடிவெடுத்தது. எனவே, 1985 ஆம் ஆண்டின் நிருவாகத் தீர்ப்பாயச் சட்டத்திற்கு உரிய திருத்தம் செய்து, தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்துவிடலாம் என 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், இந்த அரசு கொள்கை முடிவெடுத்தது. அதன்படி, தீர்ப்பாயத்தைக் கலைக்க மேற்படி சட்டத்திற்கு உரிய திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று 12-6-2001 ஆம் நாளிட்ட அரசுக் கடிதத்தில் மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இந்த அரசின் கருத்துருமீது, மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டு, பாராளுமன்றத்தில் இது குறித்த சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும், 25-7-2002 மற்றும் 21-1-2003 ஆம் நாளிட்ட கடிதங்களில், மத்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. சட்டமுன்வடிவு ஒன்றினை அனுப்பி மத்திய அரசு, மாநில அரசின் ஆலோசனையைக் கேட்டுள்ளது. சட்டமுன்வடிவு, தற்போது அரசின் ஆய்வில் உள்ளது.

## 12. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசியலமைப்புப் பிரிவு 315(1)-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தலைவர் மற்றும் 11 உறுப்பினர்களைக் கொண்டதாகும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் தேர்வாணையத்தின் நிருவாகம் சம்பந்தப்பட்ட பொருள் பற்றியும், இத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பின்வரும் நிகழ்வுகளுக்காக, தேர்வாணையத்தின் ஆலோசனை கோரப்படுகிறது:-

(i) அனைத்துப் பணி நியமன விதிகள் இயற்றுதல் குறித்து;

(ii) பணி நியமனம் செய்வதில், கடைபிடிக்கப்படவேண்டிய கோட்பாடுகள்;

(iii) பதவி உயர்வு அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றம் செய்தல்;

(iv) அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள்;



(v) நேரடித் தேர்வு முறையில், மாநில மற்றும் சார்நிலைப் பணியிடங்களை நிரப்புதல்.

தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை, சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்படுகிறது. தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்ட இனங்கள் ஏதுமிருப்பின், அதற்கான விளக்கக் குறிப்பும் ஆண்டறிக்கையில் சேர்க்கப்படுகிறது.

## 13. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுடன் நல்லுறவு:

கடந்த 2003 ஜூலை மாதத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சில சலுகைகளை முன்வைத்து காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதன் விளைவாக, நீதியரசர்களின் குழுவின் பரிந்துரைகளின்படி, அவர்களுக்குச் சில தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தன. அரசிற்கும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள நல்லுறவை மேம்படுத்தவும், அவர்கள் புதிய உற்சாகத்தோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் மக்களுக்குச் சேவை செய்வார்கள் என்ற நம்பிக்கையோடும், அவர்கள்மீது வழங்கப்பட்டிருந்த அனைத்துத் தண்டனைகளையும், பெருந்தன்மையுடன் இரத்து செய்ததோடு, அவர்கள் மேல், நிலுவையில் இருந்த அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் திரும்பப் பெற நான்ஆணையிட்டுள்ளேன். இதன் விளைவாக, பதவி உயர்வு மறுக்கப்பட்ட நிகழ்வுகள், மறுபரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்குப் பதவி உயர்வும், அதன் பயன்களும் வழங்கப்படுகின்றன. இதுகுறித்து, உரிய அறிவுறுத்தங்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன.

14. மாநில விழிப்புப் பணி ஆணையம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம், ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றங்கள், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சி, ஆய்வுப் பிரிவு, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு ஆகிய அமைப்புகளின் நிருவாகப் பணிகள் ஆகியன, செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது. இதுதவிர, தமிழ் நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம்) விதிகள், 1955 ஆகிய விதிகள், செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது.

[2004 ஜூலை 27

**15. மாநில விழிப்புப்பணி ஆணையம்:**

மாநில விழிப்புப்பணி ஆணையம், 1965 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டது. பொதுப் பணிகளில், ஊழல் தடுப்புத் தொடர்பான நடவடிக்கைகளில் உள்ள முக்கிய நிருவாகப் பிரச்சனைகளிலும், கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட, தனிப்பட்ட ஊழல் நேர்வுகளிலும் எவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து அரசிற்கு அறிவுரைகள் வழங்குவது, இந்த ஆணையத்தின் முக்கியப் பொறுப்பாகும். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம், விழிப்புப்பணி ஆணையம் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உரிய பணிகளை ஆற்றிவரும் ஒரு அமைப்பாக விளங்கி வருகிறது.

2. மாநில அரசின் செயலாக்க அதிகாரத்திற்கு உட்பட்ட கீழ்க்கண்ட இனங்கள்மீது, மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் அதிகார வரம்பு உள்ளது:

(i) பொது ஊழியர் ஒருவரின் நேர்மையற்ற செயல்பாடு அல்லது ஊழல் செயல்பாடு பற்றிய அவர்களின் நடவடிக்கைகள் அல்லது அவர்கள்மீது இந்தச் செயல்பாடுகள் குறித்த ஐயங்கள்மீது விசாரணை நடத்துதல்;

(ii) ஒரு பொது ஊழியர் தன்னுடைய நேர்மையற்ற செயல்பாட்டிற்கு அல்லது ஊழல் செயல்பாட்டிற்குத் தன் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தியதாகவோ அல்லது உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தாமை பற்றி கூறப்பட்ட புகார்மீது, விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளல்;

(iii) இத்தகைய தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களைத் தேவைப்படின் சேகரித்தல்;

(iv) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்தோ கேட்டுப் பெறுதல்.



2004 ஜூலை 27]

**16. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம்:**

பொது நிருவாகத்தில், ஊழலைக் கட்டுப்படுத்த அமைப்புரீதியான முதல் நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு 1964 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்களில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தை, தனியொரு துறையாக உருவாக்கியது.

2. தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம், கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இயக்குநருக்குத் துணையாக, காவல் அதிகாரிகள் மற்றும் சட்ட அலுவலர்கள் முறையே, காவல் துறை மற்றும் குற்றவழக்குத் தொடர்பு இயக்குநரகம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்டுப் பணிபுரிகின்றனர்.

3. மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பொது ஊழியர்கள் மீதான கையூட்டு குறித்த நேர்வு அல்லது ஊழல் மற்றும் அது தொடர்புடைய ஒழுங்கீனச் செயல்கள் குறித்த புகார்கள் / தகவல்கள்மீதான விசாரணைகளை / புலனாய்வினை இவ்வியக்குநரகம் மேற்கொள்கிறது. 1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பொது ஊழியராக வகைப்படுத்தப்பட்ட, மாநில அரசின்கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஊழியர்களும் இவ்வியக்குநரகத்தின் வரம்பிற்குள் உள்ளனர். மாநில விழிப்புப்பணி ஆணையரால் குறிப்பிடப்படும் ஊழல் மற்றும் மற்ற ஒழுங்கீனச் செயல்கள் குறித்த புகார்களின்மீதும் விசாரணை நடத்தி, உரிய தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களையும் மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு இவ்வியக்குநரகம் அளிக்கிறது.

4. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம், தனது புலனாய்வு அறிக்கைகளை மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு அனுப்பிவைக்கிறது. மாநில விழிப்புப்பணி ஆணையம், அவ்வறிக்கைகளை ஆய்வு செய்து, அரசின் தொடர்புடைய தலைமைச் செயலகத் துறைகளுக்கு, தேவைக்கேற்ப, எவ்விதமான மேல்நடவடிக்கைகள் தொடரப்படவேண்டும் என்று அறிவுரை வழங்கும்.

5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தை மின் ஆளுகையின் வரம்பிற்குள் கொண்டுவரும்பொருட்டு, முதற்கட்டமாக, 2004—2005 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ், ரூ.29.97 இலட்சம்

செலவில், கீழ்க்கண்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தின் கருத்துருவிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது:-

| வ. எண் | இனம் | எண்ணிக்கை | தொடராச் செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| 1. | இணையதளம் மற்றும் மென் பொருள் உருவாக்குதல் | - | 5,00,000 |
| 2. | எல்.சி.டி. படப்பெருக்கி வாங்குதல் | 1 | 2,64,000 |
| 3. | உயர்நிலை வருடி வாங்குதல் | 1 | 12,70,000 |
| 4. | மடிக் கணினி வாங்குதல் | 5 | 9,62,500 |
| மொத்தம் | | | 29,96,500 அல்லது 29.97 இலட்சம் |

## 17. ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றங்கள்:

இம்மாநிலத்தில் 10 ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. இம்மன்றங்கள் சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றமும் , நீதிமுறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகிறது. இம்மன்றங்களில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பணிநிலைப் பிரிவில் உள்ள அதிகாரிகள் தலைமைப் பொறுப்பில் உள்ளனர். தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றம்) விதிகள், 1955—ன்கீழ், ஒழுங்கு நடவடிக்கை நடுவர்மன்றங்களுக்கு, அரசினால் அனுப்பப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.



## 18. பயிற்சி:

நிருவாகத்தைச் செம்மைப்படுத்தவும், அரசு திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தவும், அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். அரசுப் பணியாளர்கள், நடைமுறையில் இருக்கும் விதிகளை அறிந்து, அவர்களின் செயல்திறன் மற்றும் முடிவு எடுக்கும் திறனை வளர்ப்பதில், பயிற்சி பெரும் பங்கு வகிக்கிறது. பயிற்சி அலகு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை செயலரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பயிற்சி நிலையங்களின் வாயிலாகப் பயிற்சி வழங்கப்படுகிறது.

2. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில், உதவியாளர், நேர்முக எழுத்தர், தட்டச்சர் மற்றும் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு, அலுவலக நடைமுறைக்கான அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில் 50 அணிகள் பயிற்சி பெற்றுள்ளன. இதுதவிர, நீதிமன்ற / தீர்ப்பாய வழக்குகளைக் கையாளும் முறைபற்றியும் தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர் / உதவிப் பிரிவு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கு, அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில், 505 ‘அ’ பிரிவு அலுவலர்களும் மற்றும் 1167 ‘ஆ’ பிரிவு அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ‘இ’ மற்றும் ‘ஈ’ பிரிவு அலுவலர்களுக்கு, அடிப்படைப் பயிற்சியும் துணை வட்டாட்சியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

3. அண்ணா மேலாண்மை நிலையத்தில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஆதரவுடன், பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கு, நிருவாக மேலாண்மை மற்றும் அமைப்புரீதியிலான திட்டப் பயிற்சி ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம், பேரிடர் மேலாண்மையில் பயிற்சி அளிப்பதில் சிறந்து விளங்குகிறது. இதற்கான ஒரு தனிப் பிரிவு மத்திய அரசின் உள்துறையின் மானிய உதவியுடன் இங்கு நிருவகிக்கப்படுகிறது.

[2004 ஜூலை 27

4. கணினி துறையில் நிகழ்ந்துவரும் வியத்தகு மாற்றங்களுக்கேற்ப, அண்ணா மேலாண்மை நிலையத்தில் பலதரப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பயிற்சியும் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது. 2003—2004 ஆம் நிதியாண்டில், அகில இந்தியக் குடிமைப்பணி பயிற்சி மையத்திற்கு, ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில், 5 கணிப்பொறிகளும், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு 20 கணிப்பொறிகளும் வாங்கிட, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

5. அகில இந்தியக் குடிமைப்பணி தேர்வு எழுதுவதற்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு, அண்ணா நகரில் உள்ள அகில இந்தியக் குடிமைப்பணி பயிற்சி மையத்தில், சீரிய முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையம் தொடக்க நிலை மற்றும் முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு பயிற்சி அளிப்பதுடன், மாதிரி நேர்காணல் தேர்வுக்கும், இவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படுவதுடன், பயிற்சி பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/—க்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,920/—க்கும் உட்பட்டு உள்ளதாக இருப்பின், இலவச உணவு மற்றும் உறைவிட வசதி அளிக்கப்படுகிறது. இந்தியப் பணியாளர்கள் தேர்வு மையத்தால், 2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிமைப்பணிகள் தேர்வில், தமிழ்நாட்டிலிருந்து 54 நபர்கள் குடிமைப்பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 45 நபர்கள், சென்னை அகில இந்தியக் குடிமைப்பணிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெற்றவர்களாவர். இவர்களில் 15 நபர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்தியப் பணியாளர்கள் தேர்வு மையத்தால் 2003-ல் நடத்தப்பட்ட குடிமைப்பணி தேர்வில் வென்றவர்களில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அகில இந்தியக் குடிமைப்பணிகள் பயிற்சி மையத்தில், பயிற்சி பெற்று குடிமைப்பணித் தேர்வில் இதுவரை பெற்ற தேர்வு முடிவுகளில், இந்த ஆண்டின் (2003) தேர்வு முடிவே சிறப்பான முடிவாகும்.

6. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில், 1974 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும்



2004 ஜூலை 27]

ஆறு அணிகளில் 60 நாட்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியானது, அவர்கள் தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு, முன்தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்றைய நாளில், 33,205 இளநிலை உதவியாளர்களுக்கும், 2,758 துணை வட்டாட்சியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7. அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான பயிற்சி நிறுவனம் ஆகிய பயிற்சி நிறுவனங்களை ஒரே வளாகத்தில் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்கேற்ப, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன், ரூ.10 கோடி மதிப்பீட்டில், சென்னை பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படுகின்ற தருவாயில் உள்ளன.

## 19. ஆய்வுத் துறை:

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆய்வு) துறையில் உள்ள மூன்று பிரிவுகளும் அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. ஆய்வுப் பிரிவுகள் 1 மற்றும் 2, துணைச் செயலாளர்களாலும், ஆய்வு பிரிவு 3, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேரடி தலைமையிலும் இயங்குகின்றன. மாவட்டங்களில் 11 ஆய்வுக் குழுக்கள் தனித்தனியே ஒவ்வொரு துணை ஆட்சியர் தலைமையிலும் இயங்கி வருகின்றன.

2. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆய்வு) துறையின் பிரிவுகள், தலைமைச் செயலகத் துறைகள் / துறைத் தலைமையகங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வது மட்டுமல்லாது, மாவட்டங்களில் முன்னோடி மற்றும் குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளை, ஏ, பி, சி நிலையில் உள்ள அலுவலர்களுக்கு நடத்துகின்றன. இந்த ஆய்வுப் பிரிவுகளின் தலையாய நோக்கம், நிருவாகத் திறமையை அதிகப்படுத்துவதும், தூய்மையான நிர்வாகக் கட்டமைப்புகளை உருவாக்குவதும், மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிருவாக நடைமுறைகள் மற்றும் பணி விதிகள் பற்றி நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஆகும்.

3. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஆய்வுப் பிரிவுகள் மூலமாக, 30 துறைத் தலைமை அலுவலகங்கள், ஆண்டுதோறும்

ஆய்வு செய்யப்படுகின்றன. மற்றும் 30 முன்னோடி / குறுகிய பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள் 2003-2004 ஆம் ஆண்டில், 131 மாவட்ட தலைமை அலுவலகங்களில் விரிவான ஆய்வுகளையும், 2748 திடீர் ஆய்வுகளையும், மாவட்ட அளவில் மேற்கொண்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், மாவட்ட ஆய்வுக் குழுக்களின் நிருவாகச் செலவினங்களுக்காகவும் மற்றும் முன்னோடி மற்றும் குறுகியகாலப் பயிற்சி வகுப்புச் செலவினங்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு, ரூ.1,02,19,000/- (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரம் மட்டும்) ஆகும். இந்தச் செலவினம், மாவட்ட ஆய்வுக் குழுக்களின் அலுவலர்களின் ஊதியச் செலவுகளையும் உள்ளடக்கியதாகும்.

## 20. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு:

அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளைச் சீர்திருத்தம் செய்வது, பணி அளவீட்டின்படி, தேவையான பணியாளர்களை (மனித சக்தி) நிர்ணயம் செய்வது மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்துவது ஆகியவை, அமைப்பு மற்றும் செயல்முறைப் பகுதியின் நோக்கங்களாகும். கீழ்க்கண்டவை, அமைப்பு மற்றும் செயல்முறைப் பகுதி ஆராய்ச்சியின் முக்கிய இலக்குகளாகும்:-

(i) பணியாளர்களை (மனிதசக்தி) நிர்ணயம் செய்வது ;

(ii) வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை எளிதாக்குதல்;

(iii) அரசுத் துறைகளில் செயல்திறன் மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமலாக்குதல்;

(iv) அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும்

(v) பதிவுருக்களை நன்முறையில் பராமரித்தல்.

(2) அமைப்பு மற்றும் செயல்முறைப் பகுதி, தற்பொழுது இரண்டு நிருவாகக் குழுக்களைக் கொண்டது. ஒரு நிருவாகக் குழுவிற்கு, அரசின் சார்புச் செயலர் தலைமை ஏற்று வழி நடத்துகிறார். மற்றொரு நிருவாகக் குழுவிற்கு, அரசுத் துணைச் செயலர் தலைமை



ஏற்று வழி நடத்துவதோடு, அமைப்பு மற்றும் செயல்முறைப் பகுதியின் அனைத்துக் குழுக்களும் (மேற்பார்வை குழுவும் உட்பட), அவரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. மேற்பார்வைக் குழு ஒன்று, ஆராய்ச்சி அலுவலர் மற்றும் ஒரு உதவிப் பிரிவு அலுவலரையும் கொண்டுள்ளது. இது, இக்குழுவின் அறிக்கைகள்மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதைக் கண்காணிப்பதோடு, இப்பகுதிக்குத் தேவையான அலுவலக நடைமுறைகளையும் செய்து வருவதோடு, இப்பகுதிக்கான தனி நிதி ஒதுக்கீடு தயார் செய்யும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இப்பகுதியில், ஏற்கெனவே இயங்கிவந்த பொறியியல் குழு, 18-10-2002 அன்று முதல் கலைக்கப்பட்டது. அரசுச் செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ், இக்குழுக்கள் அனைத்தும் இயங்கி வருகின்றன.

(3) தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் மற்றும் துறைத் தலைவர்களுக்கும், அவர்களது துறைகளில் நிருவாகச் சிக்கல் இருப்பின், அதன் அடிப்படையில் அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சி தேவையா என்று ஒவ்வொரு ஆண்டும் கேட்கப்படுகிறது. கோரிக்கையின் அடிப்படையில், ஒரு செயல் திட்டம் தயாரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஆராய பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு குழுவும் தனக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருள் குறித்து தீர ஆராய்வு மேற்கொள்கிறது. அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களின் பணி அளவீடு, பணி அளவீட்டின் நிர்ணயம் மற்றும் பணியாளர்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்தல் குறித்தும் இக்குழு ஆய்வு அறிக்கைகள் தயாரித்து வருகின்றது. அமைப்பு மற்றும் செயல்முறை பகுதியில் உள்ள குழுக்கள், இதுவரையில் 225 ஆய்வு அறிக்கைகள் தயார் செய்து, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த அனுப்பியுள்ளன.

[2004 ஜூலை 27

## 21. 2004–2005 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்கள்:–

2004–2005 ஆம் ஆண்டுக்கான கீழ்க்கண்ட பகுதி 2 திட்டங்கள் நிதிநிலைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:–

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் ரூ. |
|---|---|---|
| 1 | 5 கணினிகளும், மென்பொருள்களும் வாங்குதல் | 3.20 |
| 2 | மூன்று ஹெச்பீ லேசர் ஜெட் பிரிண்டர் வாங்குதல் | 0.90 |
| 3 | இரண்டு டாட்மேட்ரிஸ் பிரிண்டர் வாங்குதல் | 0.30 |
| 4 | லைன் பிரிண்டர் (500 எல்.பி.எம்) வாங்குதல் | 1.35 |
| 5 | காபி பிரிண்டர் வாங்குதல் | 1.80 |
| 6 | டிவிடி ரைட்டர் வாங்குதல் | 0.15 |
| 7 | கணினி பிரிவிற்கு கூடுதலாக ஒரு சேர்வளி வசதி செய்தல் | 0.30 |
| 8 | கணினி பிரிவிற்கு 2 கே.வி., ஏ., யு.பி.எஸ். சாதனத்திற்கு பராமரிப்பு தேவையற்ற மின்கலன்கள் | 0.30 |
| 9 | கணினிகளுக்கான ஏழு மேசை நாற்காலிகள் வாங்குதல் | 0.39 |
| 10 | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்திற்கான இணைய தளம் மற்றும் மென்பொருள் ஆகியவற்றை மேம்படுத்தல் மற்றும் எல்.சி.டி. புரொஜக்டர் ஹை எண்ட் ஸ்கேனர், கையடக்கக் கணினிகளையும் வாங்குதல் | 29.97 |
| 11 | மொபைல் விசுவல் பிரசெண்டர்கள் (எம்.வி.பி) மற்றும் 2 எல்சிடி புரொஜக்டர்கள் | 4.00 |
| 12 | தலைமைப் பண்பை வளர்க்கும் பயிற்சிக்கான திட்டம் | 3.00 |
| 13 | தடையற்ற மின் வழங்கல் சாதனம் மற்றும் துணைப் பாகங்களுடன் கூடிய 5 கணினிகள் வாங்குதல் | 3.75 |
| 14 | கணினிப் பயிற்சிக்கான எம்.வி.பி. ஒன்று மற்றும் திரை துணைப் பாகங்களுடன் கூடிய எல்.சி.டி. புரோஜக்டர் ஆகியவை வாங்குதல் | 2.00 |
| 15 | நூலகப் புத்தகங்கள் | 0.50 |
| 16 | அட்டைகள் மற்றும் அடையாளக் காட்டிகள் | 0.50 |
| 17 | <u>அகில இந்திய அரசு குடிமைப் பணி பயிற்சி மையம், சென்னை— பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்</u><br>(i) பிரசென்டர்களுடன்கூடிய எல்.சி.டி. இரண்டு வாங்குதல்<br>(ii) நூலகப் புத்தகங்கள் வாங்குதல்<br>(iii) துணைப் பாகங்களுடன்கூடிய கணினிகள் வாங்குதல்<br>(iv) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் குளிர்பதனப் பெட்டி வாங்குதல் | 5.00 |
| | மொத்தம் திட்டத்தில் சேராதது | 52.41 |
| | மொத்தத் திட்டப் பணிகள் | 5.00 |
| | ஆக மொத்தம் | 57.41 |



2004 ஜூலை 27]

## 22. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்:

அந்தந்தத் தலைப்புகளுக்கான 2002–2003 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகள், 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை, 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கல் தொகை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:

[2004 ஜூலை 27

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | 2002—2003 கணக்குகள் | 2003—2004 திருத்த மதிப்பீடு | 2004—2005 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 1. | 2052 | பணியாளர்— நிருவாகச் சீர்திருத்தத் துறை | 40950 | 48549 | 51762 |
| 2. | 2070 | ஏனைய நிர்வாகப் பணிகள் புதுடில்லி இந்தியப் பொது நிருவாக நிறுவனத்திற்கு மானியங்கள் | 100 | 100 | 100 |
| 3. | 2075 | பல்வகை பொதுவான பணிகள் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு உதவி | 5 | 1 | 1 |
| 4. | 2075 | பணியாளர்களை அமர்த்திக் கொள்ளும் செலவிற்காகத் தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 1 | 1 |
| 5. | 2075 | மனமகிழ் பணிகளுக்காக தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 1 | 1 |



2004 ஜூலை 27]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் — அடிப்படைப் பணியாளர் சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 1 | 1 |
| 7. | 2075 | தமிழ்நாடு அரசுத் துறை ஓட்டுநர் சங்கத்திற்கு நிதியுதவி | 4 | 2 | 2 |
| 8. | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்கள் சங்கத்திற்கு நிதியுதவி | 12 | 1 | 1 |
| 9. | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கத்திற்கு நிதியுதவி— பணியாளர்களை பணி அமர்த்த மானியங்கள் | 0 | 1 | 1 |
| 10. | 2070 | பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனம் | 6113 | 8308 | 8218 |
| 11. | 2070 | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் | 113734 | 108440 | 118196 |
| 12. | 2051 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் —சாட்டியது | 96294 | 94322 | 98591 |

[2004 ஜூலை 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | 2070 | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 4215 | 3538 | 3785 |
| 14. | 2070 | தமிழ்நாடு மாநில நிருவாகத் தீர்ப்பாயம் | 10796 | 10147 | 12586 |
| 15. | 2014 | தமிழ்நாடு நிருவாக நடுவர் மன்றம் | 2684 | 3593 | 3684 |
| 16. | 2052 | அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம் | 5618 | 5662 | 5662 |
| 17. | 2070 | குடிமைப் பணி பயிற்சி நிருவாக பயிற்சி நிறுவனத்தில் அடிப்படை பயிற்சி அளித்தல் | 1221 | 1515 | 1975 |
| 18. | 2070 | அண்ணா மேலாண்மை நிறுவனத்தின்கீழ் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம் | 0 | 0 | 500 |
| 19. | 2052 | அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு | 3057 | 3175 | 3400 |
| 20. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், மதுரை | 1207 | 1632 | 1741 |
| 21. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருநெல்வேலி | 1440 | 1565 | 1658 |



2004 ஜூலை 27]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், நாகர்கோவில் | 1458 | 1571 | 1672 |
| 23. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சேலம் | 1239 | 1309 | 1326 |
| 24. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், வேலூர் | 1259 | 1453 | 1554 |
| 25. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருச்சிராப்பள்ளி | 853 | 1132 | 1184 |
| 26. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், தஞ்சாவூர் | 1123 | 1475 | 1525 |
| 27. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், இராமநாதபுரம் | 1248 | 1431 | 1535 |
| 28. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சென்னை | 2312 | 2648 | 2784 |
| 29. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், கோயம்புத்தூர் | 1526 | 1908 | 1991 |
| 30. | 2053 | மாவட்டங்களில் ஆய்வுக் குழுக்கள் | 8531 | 9487 | 10219 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31. | 2225 | அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்விற்காக ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு தேர்வுக்கு முந்தைய பயிற்சி அளிப்பதற்குரிய தேர்வு பயிற்சி மையம் | 1461 | 2468 | 2536 |
| | | மொத்தம் | 308465 | 315435 | 338191 |



# இணைப்பு - VI

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 36

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### 1. முன்னுரை

*1.1.* சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய, ஏழை எளிய மக்கள் கள்ளச் சாராயம் அருந்தி, அதனால் உடலுக்குத் தீங்கும், பொருளாதார இழப்பும் ஏற்படுவதிலிருந்து காப்பாற்றிட, கள்ளச் சாராயத்தினை முற்றிலும் ஒழிப்பதே, இந்த அரசின் மதுவிலக்குக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். ஆனால், மது அருந்துதல் என்பது சமுதாயத்தில் உள்ள நடப்பாகும். எனவே, நடைமுறையில் உள்ள உண்மையைக் கருத்தில் கொண்டு, மது அருந்தும் பழக்கமுள்ளவர்களுக்குத் தரமான, கலப்படமற்ற, விலை குறைந்த, உடலுக்கு ஊறு விளைவிக்காதவகையில், பாதுகாப்பான மதுபானங்கள் வழங்குவதும், இதை அரசின் பொதுத் துறை நிறுவனத்தின்மூலம் சில்லறை விற்பனைக் கடைகளை ஏற்படுத்தி வழங்குவதும், அரசின் கடமையாக அமைகிறது. அதேநேரத்தில், மதுபான சில்லறை விற்பனையை அரசு பொதுத் துறை நிறுவனத்தால் கட்டுப்படுத்துவதன்மூலம், சமுதாயத்தில் உள்ள, பொருளாதாரத்தில் மதுபானங்களுக்குச் செலவு செய்யும் அளவிற்கு வசதியுள்ள பிரிவினர் பயன்படுத்தும் மதுபானங்களின்மீது தேவையான தீர்வை வரிகள் விதிப்பதன்மூலம், வருவாயைப் பெருக்குவதுடன் முன்பு தனியார் சில்லறை விற்பனைக் கூடங்களில், சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்யப்பட்ட போலி மது விற்பனையைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

*1.2.* தனியார் சில்லறை விற்பனை முறையின்கீழ், சில உரிமம் வழங்கப்பட்ட கடைகளில் நடைபெற்ற மது அருந்தும் மக்களின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் போலி, கள்ள மது மற்றும் தீர்வை செலுத்தப்படாத மது விற்பனை மற்றும் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் நடைபெறும் மீறல்கள் ஆகிய இரண்டுமே, அரசுக்கு வருவாய் பாதிப்பை ஏற்படுத்தியது. மேலும், சுய

[2004 ஜூலை 27

இலாபத்திற்காக வணிகக் கூட்டணி அமைத்து, பெருமளவு எண்ணிக்கையிலான கடைகள் நிரப்பாதிருக்க விண்ணப்பங்கள் வராமல் தடுத்து சில்லறை விற்பனை வணிகத்தை முடக்கியதால், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனையை முழுவதுமாக மேற்கொள்ளும் சிறப்புரிமையை, அரசு பொது நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்குவது அவசியமென அரசு கருதியது. அவ்வாறே, இந்த நோக்கத்திற்காக 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திற்கு (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் – 10 ) திருத்தங்கள் வெளியிட்டது. 2003 ஆம் ஆண்டு, நவம்பர் 29 ஆம் நாள் முதல் மாநிலத்தின் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனை நடவடிக்கைகளை மொத்தமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்றுக் கொண்டது. இதனால், மாதத்திற்குச் சராசரியாக 12.44 இலட்சம் பெட்டிகள் விற்பனை என இருந்த நிலை மாறி, சராசரியாக மாதத்திற்கு 14.29 இலட்சம் பெட்டிகளாக விற்பனை உயர்ந்துள்ளது. இது 14.82 விழுக்காடு வளர்ச்சியாகும். இதே காலத்திற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் விற்பனை அளவு, சராசரியாக கடந்தகாலத்தில் மாதத்திற்கு ரூ.326 கோடியாக இருந்து, தற்போது சராசரியாக மாதம் ரூ.421 கோடி ஆக உயர்ந்துள்ளது. (இந்த வளர்ச்சி 29.14 விழுக்காடு ஆகும்). வருவாய் இதேகாலத்தில் 10 விழுக்காடு உயர்ந்துள்ளது. இது தனியார் சில்லறை விற்பனைமுறையில் காணப்பட்ட, பெருமளவிலான அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் மீறல்கள் மற்றும் போலி மதுபான விற்பனை ஒழிக்கப்பட்டதால் ஏற்பட்டதாகும்.

1.3. இந்த அரசு, போலி மதுவை ஒழிப்பதில் தளராது போராடும் பொறுப்பினை வலியுறுத்துவதுடன், மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்குமுகமாக மாற்று ஏ[illegible]பாடாக, அவர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்தி, கள்ளச் சாராயத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், கள்ளச் சாராயம் அருந்துவதால் ஏற்படும் மோசமான விளைவுகளைக் குறிப்பிட்டு, சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மிகக் கடுமையாக முயற்சிகள் எடுத்து வருகிறது. கள்ளச் சாராய தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும்வகையில் அவர்கட்குப் போதிய வருவாய் கிடைக்கும் வகையில் மாற்றுத் தொழில்களில் ஈடுபடுத்தவும், இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்களை முற்றிலும் ஒழிக்கவும், கள்ளச் சாராயத்தால் ஏற்படும் சாவுகளைத் தவிர்க்கவும் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 27]

## 2. வருவாய் வளர்ச்சி

2.1. போலி மதுபானங்கள் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களின் விற்பனையைத் தடுக்கும்பொருட்டு அரசு பல்வேறு திடமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முன்னதாக மதுபானக் கடைகளுக்கான உரிமங்கள் ஏலத்தின்மூலம் வழங்கப்பட்டு வந்தபொழுது, மதுபான வணிகர்கள் தங்களுக்குள் கூட்டு சேர்ந்து கொண்டு மதுபானக் கடைகளை ஏலத்தில் எடுக்காதிருந்தது போன்ற தீய நடவடிக்கைகளைத் தடுக்கும்பொருட்டு, மேற்சொன்ன ஏல முறைக்கு மாற்றாக 2001 ஆம் ஆண்டில் குலுக்கல் மூலம் உரிமங்கள் வழங்கும் நன்மை பயக்கும் முறையை அரசு அறிமுகப்படுத்தியது. மேற்சொன்ன புதிய முறையானது, முன்பு இருந்த முறையைக் காட்டிலும் மேம்பட்டதாக இருந்தபோதிலும், அரசால் இந்த.முறையை மேலும் நிலைப்படுத்தும்பொருட்டு, கடைகளின் எண்ணிக்கையை அதிகரித்தும், தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களின் விற்பனையைத் தடுத்து, மதுபானங்களின் விற்பனை அளவைக் கூடுதலாக்கும்பொருட்டும் மதுபானங்களின் எடுப்பு அளவிற்குக் குறியீடும் (minimum off-take target) நிர்ணயம் செய்யப்பட்டது. இவ்வாறு புதிய மேம்பட்ட நடைமுறையை அறிமுகப்படுத்தியதை விரும்பாத சில்லறை விற்பனையை, முன்பு தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த வணிகக் கூட்டணியினர், நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடுத்தல், பினாமி பெயர்களில் விண்ணப்பங்கள் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

2.2. அரசின் மேற்சொன்ன ஒவ்வொரு முயற்சியையும் முறியடிக்கும் தீயசக்திகளைக் கவனித்த அரசு, ஓய்வு பெற்ற நீதிபதிகள் அடங்கிய மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவினால், மதுபான சில்லறை விற்பனை உரிமதாரர்களைத் தேர்வு செய்கின்ற, முற்றிலும் புதியதான ஒரு முறையை, செப்டம்பர் 2003-இல் அரசு அறிமுகப்படுத்தியது. எனினும், முன்பிருந்த பல உரிமதாரர்கள், மேற்சொன்ன முற்போக்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எதிர்க்கும்வகையில் நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடுத்தும், மதுபானக் கடைகளுக்கு உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்களை அளிக்காமலிருந்த தங்களுடைய முந்தைய நடவடிக்கையினைத் தொடர்ந்து கடைபிடித்தும், அரசின் புதிய கொள்கையினைப் பலனற்றதாகச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

2.3. மதுபானங்களைச் சில்லறையில் விற்பனை செய்யும் உரிமதாரர்களைத் தெரிவு செய்வதற்கான முறையில் மேம்பாடுகள் ▪ê▮õ î▮▪êù Ü ó▪ ô▮ «õÁ ïì õ® ▮¬ èè¬ ÷ «ñ▮▪èE▮ ì «ôEF¾ ▮,

[2004 ஜூலை 27

பல்வேறு முறைகேடுகள் மற்றும் வணிகக் கூட்டணியில் ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன. மேலும், போலியான மற்றும் கடத்தி வரப்பட்ட (contraband) மதுபானங்களை உரிமதாரர்கள் விற்பனை செய்யும் நிகழ்வுகளும் தொடர்ந்தன. மது அருந்துவோரின் நலனுக்கு விரோதமாக, அரசு நிர்ணயம் செய்த அதிகபட்ச சில்லறை விற்பனை விலையைக் காட்டிலும், கூடுதலான விலைக்கு விற்பனை செய்து, இதன்மூலம் அரசின் வருவாய்க்கு இழப்பு ஏற்படும்வகையில் செயல்பட்ட வணிகக் கூட்டணியை முறியடிக்க, அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன்காரணமாக, மதுபானங்களைத் தனியார் விற்பனை செய்துவந்த முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அதற்குப் பதிலாக, சில்லறை விற்பனை செய்யும் உரிமையை அரசுக்கு முழுவதும் சொந்த நிறுவனமான டாஸ்மாக்கிற்கு வழங்குவதென்ற துணிச்சலான முடிவினை அரசு எடுத்துள்ளது. இதன்மூலம், தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் விற்பனை தடுக்கப்படுவதும், நுகர்வோருக்கும் பாதுகாப்பான மதுபானங்கள் வழங்கப்படுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2.4. அரசு, மிகத் துணிச்சலான நடவடிக்கை எடுத்ததன்மூலம், வரி செலுத்திய மதுபானங்கள் மட்டுமே, தமிழ்நாடு மாநில வாணியக் கழகம் நடத்தும் சில்லறை விற்பனைக் கடைகளில் விற்கப்படுகின்றன. அரசு நிர்ணயித்த விலைக்கே நுகர்வோர் நலன் காக்கும்பொருட்டு, பாதுகாப்பான, கலப்படமற்ற மதுபானம் சரியான விலைக்கே விற்கப்படுகின்றது. இதனால் விற்பனை அளவும், அரசின் வருவாயும் உடனடியாக உயர்ந்துள்ளன. படத்தில் இது விளக்கப்பட்டுள்ளது.

2.5. மதுபான விற்பனை 29-11-2003 முதல் 30-6-2004 வரை 100.02 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு (2002-2003), இதேகாலத்தில் விற்பனை அளவு 87.11 இலட்சம் பெட்டிகளாக இருந்தது. இதனை ஒப்பிடுகையில், வளர்ச்சி விகிதம் 14.82 சதவீதமாகும். இத்துறையின்மூலம், அரசுக்குக் கிடைத்த வருவாயைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு இதே காலகட்டத்தில் (அதாவது 29-11-2002 முதல் 30-6-2003 வரை) ரூபாய் 2203.24 கோடி வருவாய் கிடைத்தது. (இதில் ஆயத்தீர்வை, விற்பனை வரி மற்றும் இந்தக் காலத்திற்கான விகிதாச்சார உரிமைத் தொகை ரூபாய் 370.81 கோடி அடங்கியுள்ளது). 2003-2004 ஆம் ஆண்டு இதேகாலத்தில் (29-11-2003 முதல் 30-6-2004), அரசுக்கு விற்பனை வரி மற்றும் ஆயத்தீர்வைமூலம் கிடைத்துள்ள வருவாய், ரூபாய் 2415.49 கோடி ஆகும். சில்லறை விற்பனையை அரசு நிறுவனம் எடுத்துக் கொண்ட இந்த குறுகிய காலத்தில், அரசுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய், ரூபாய் 212.25 கோடி ஆகும். இது 10 விழுக்காடு வளர்ச்சி ஆகும்.



2004 ஜூலை 27]



[2004 ஜூலை 27






2004 ஜூலை 27]



## 3. ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குதல்

*3.1. 2002* ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இராணுவப் பண்டகசாலை (Canteen Stores Department) இறக்குமதி செய்யும் அல்லது உள்ளூரிலிருந்து வாங்கும் ரம் வகைகளுக்கு, ஆயத்தீர்வையினை உயர்த்துதல், உணவு விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், மதுபானங்கள் மற்றும் பீர் வகைகள் ஆகியவற்றிற்கு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஆதாய வீதத்தினை உயர்த்துதல், உணவு விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்கள் இறக்குமதி செய்யும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவற்றின்மீது சிறப்பு இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம் வசூலித்தல், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகளுக்கு, பதிவுக் கட்டணம்/பதிவு புதுப்பித்தல் கட்டணம் (Registration/Renewal Fee) விதித்தல், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் பாட்டில்களின்மீது ஒட்டப்படும் வில்லைகளுக்கு ஒப்புதல் வழங்குதல், உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த வியாபாரிகளின் விற்பனைக் கட்டணத்தை ஆயத்தீர்வையுடன் இணைத்தல், ஆகியவற்றின்மூலம் *2003-2004* ஆம் ஆண்டில் ரூபாய் *30.11* கோடி கூடுதலாகக் கிடைத்துள்ளது. *2004-2005* ஆம் ஆண்டில் ரூபாய் *32.77* கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆயத்தீர்வை வில்லைகள்

*3.2.* தற்போது ஆயத்தீர்வை வில்லைகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் சில இடர்பாடுகள் மற்றும், வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு இருந்ததாலும், ஹோலோகிராப் (Holograph)-இல் முன்னனியிலுள்ள விஞ்ஞானிகள் அடங்கிய வல்லுநர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வல்லுநர்க் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், சேப்பாக்கத்தில் உள்ள எழிலகத்தின் இணைப்புக் கட்டடத்தில், ஆயத்தீர்வை வில்லைகள் அச்சடிக்கும் பிரிவு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு, பாலியஸ்டரைஸ்டு ஹோலோகிராம் வில்லைகள் (Polyesterised Hologram Labels) தயாரிக்கப்பட்டு வருகின்றன. *2004* மார்ச் மாதம் முதல் புதிய ஹோலோகிராமுடன்கூடிய ஆயத்தீர்வை வில்லைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.





புதிய ஆயத்தீர்வை வில்லைகள் இயந்திரங்களின்மூலமே, மதுபான பாட்டில்களின்மீது ஒட்டப்படுவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் புதிய ஹோலோகிராம் வில்லைகளில் அதிகமான பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்துள்ளதால், போலி ஹோலோகிராம்கள் தயாரிக்க முடியாது. இதனால், கள்ளச் சாராயம் விற்பனை/கடத்தல் போன்றவை தடுக்கப்படும். இதன்வாயிலாக, அரசின் ஆயத்தீர்வை வருமானம் பாதுகாக்கப்படுகிறது.

## 4. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்

*4.1.* தலைமைச் செயலகத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, செயலாளரின் தலைமையில் இயங்குகிறது. செயலாளருக்கு உதவியாக, ஒரு துணைச் செயலாளரும் மற்ற சார்புப் பணியாளர்களும் செயல்படுகின்றனர். கொள்கை உருவாக்குதல் மற்றும் செயல்பாடு குறித்த ஆய்வுகள் ஆகியவை தலைமைச் செயலகத்தில் உள்ள நிர்வாகத் துறையின் முக்கியப் பணிகளாகும். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், கீழ்க்காணும் மூன்று முக்கியப் பிரிவுகள் உள்ளன:

1) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர்

2) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

3) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர்

*4.2.* மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், துறைத் தலைவர் ஆவார். ஆணையாளருக்கு உதவியாக தலைமையகத்தில் இரண்டு இணை ஆணையாளர்கள், (மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில்) ஒரு நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர், (அரசின் நிதித் துறை இணைச் செயலாளர் பதவி நிலையில்) மற்றும் நான்கு உதவி ஆணையாளர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்கள் தவிர, திடீர் ஆய்வு நடத்திட உதவி ஆணையாளர் தலைமையில் ஒரு பறக்கும் படை செயல்பட்டு வருகிறது.

*4.3.* மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், கொள்கை உருவாக்குவதில் அரசுக்கு உதவுவதோடு, திட்டங்களையும் செயல்படுத்துகிறார். *1937* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம்

(1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 10) மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பும் அவரிடம் உள்ளது.

4.4. அரசின் முன்னனுமதியுடன், வடிசாலை அமைப்பதற்கு மற்றும் சாராவி தயாரிப்பதற்குரிய உரிமைகள் மற்றும் உரிமங்கள் வழங்கும் அதிகாரம் ஆணையாளரிடம் உள்ளது. அதைப்போலவே, அரசின், முன்னனுமதியுடன், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான உரிமைகள் மற்றும் உரிமங்களையும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் வழங்கலாம். இவ்வாறு, இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் விதிமுறைகளின்படி புதுப்பிக்கும் அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அமைப்பு**

4.5. மாவட்ட அளவிலான ஆயத்தீர்வை நிருவாகத்தினை, மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்கிறார். மதுவிலக்குச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட முறையான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அவரிடம் உள்ளன. சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர, மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் துணை ஆட்சியர் நிலையில் ஓர் உதவி ஆணையாளர் (கலால்) மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில், துணை ஆணையாளர்கள் (கலால்) மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாக பணியாற்றி வருகின்றனர்.

4.6. வடிசாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தி தொழிற்சாலைகள் ஆகியவற்றில், துணை ஆட்சியர் நிலையில், முறையே வடிசாலை அலுவலர்கள் மற்றும் கலால் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1959 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்கீழ், உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறிக் கிடங்குகள் (Bonded manufactories) ஆகியவற்றில் சாராவி முறையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல், மற்றும் ஆயத்தீர்வை



விதிக்கப்பட வேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல், ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக கலால் மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் பிணை முறி அலுவலர்கள் (Bonded Manufactory Officers) ஆகிய பதவிகளில் முறையே வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள்.

4.7. துணை ஆட்சியர்கள் பதவி நிலையில், வடிசாலைகளில் 15 வடிசாலை அலுவலர்களும், டி.எல். உரிம வளாகங்களில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலைகள்) துணை வட்டாட்சியர்கள் பதவி நிலையில் 7 கலால் மேற்பார்வை அலுவலர்களும், தெளிந்த சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலைகளில் ஒரு கலால் மேற்பார்வை அலுவலரும், பிணைமுறி தயாரிப்பு கிடங்குகளில் 4 பிணைமுறி அலுவலர்களும் உள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

4.8. இம்மாநிலத்தில் உள்ள 38 சர்க்கரை ஆலைகள் (19 தனியார் ஆலைகள், 16 கூட்டுறவுத் துறை ஆலைகள் மற்றும் 3 பொதுத் துறை ஆலைகள்) சர்க்கரையைத் தயாரிக்கும்பொழுது, கருப்பஞ்சாற்றுக் கசண்டினை உற்பத்தி செய்கின்றன.

4.9. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, உரிமங்கள் வழங்கும் அதிகாரம், மாவட்ட ஆட்சித் தலைவர்/கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

4.10. கருப்பஞ்சாற்றுக் கசண்டின்மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதனால், சர்க்கரை ஆலைகள், கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பயன்படுத்த உரிமம் பெற்றுள்ளவர்களுக்கு உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டினை விற்பனை செய்யலாம்.

4.11. அரசின் வருவாயைப் பெருக்குவதற்காக, இம்மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு, மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.200/- வீதம் நிருவாகச் சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

4.12. எனினும், 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில், கரும்பு பயிரிடப்பட்ட பல்வேறு பகுதிகளில் வறட்சி நிலவியதன் காரணமாக, கரும்பு மொத்த உற்பத்தியில் குறைவு ஏற்பட்டு, அக்டோபர் 2003-இல் துவங்கிய நடப்பு கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில், கருப்பஞ்சாற்றுக் கசண்டின் இருப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

4.13. அக்டோபர் 2003 முதல் ஜூன் 2004 வரையிலான காலத்தில் 4.07 இலட்சம் மெட்ரிக் டன்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்யப்பட்டு, அதில் 20 ஆயிரம் மெட்ரிக் டன்கள் பிற மாநிலங்கள்/நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, நிருவாகச் சேவைக் கட்டணமாக ரூ.40 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் இருப்பு நிலை ஆய்வு செய்யப்பட்டது. உள்நாட்டுத் தேவைக்கான, குடிக்கத்தக்க சாராவி, இரசாயனத் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் சாராவி மற்றும் நீர்த்தன்மை நீக்கப்பட்ட சாராவி (anhydrous alcohol/ethanol) ஆகியவற்றை உற்பத்தி செய்ய தேவைப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை முறைப்படுத்த வேண்டியுள்ளதால், 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

**வடிசாலைகள் மற்றும் சாராவி**

4.14. இம்மாநிலத்தில், 15 வடிசாலைகள் சாராவியை உற்பத்தி செய்கின்றன. மொத்தமுள்ள 15 வடிசாலைகளில், 13 வடிசாலைகள் தனியார் வசமும், 2 வடிசாலைகள் கூட்டுறவுத் துறை வசமும் உள்ளன. (விவரங்கள் இணைப்பு-6-இல் உள்ளன).

4.15. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், வேதியியல் பொருட்கள் மற்றும் வார்னிஷ் ஆகியவை தயாரிப்பதற்கு சாராவி, மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. கல்விக்கூடங்கள், ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றில் சாராவி சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது.

4.16. மத்திய அரசு 10-6-1993 நாளிட்ட தனது ஆணையில் 1971 ஆம் ஆண்டில் ஈதைல் ஆல்கஹால் (விலைக் கட்டுப்பாடு) ஆணையை இரத்து செய்தது. இதன்விளைவாக, ஈதைல் ஆல்கஹால் (சாராவி) மீது தற்போது விலைக் கட்டுப்பாடு ஏதும் இடையாது. இதனைத் தொடர்ந்து, உரிமதாரர்கள் சாராவியினை இம்மாநிலத்தில் விற்பதற்கும், எடுத்துச்



செல்வதற்கும், வைத்திருப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் வழிகாட்டு நெறிமுறைகளை இம்மாநில அரசு வெளியிட்டுள்ளது. சாராவியை விற்றல், வைத்திருத்தல், பயன்படுத்துதல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதை, தற்போதுள்ள மாநில விதிகள் அதாவது, 2000 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள் [Tamil Nadu Denatured Spirit, Methyl-Alcohol and Varnish (French Polish) Rules, 1959] ஆகியவற்றினால் முறைப்படுத்தப்படும் எனவும் தெளிவாக்கப்பட்டுள்ளது. தெளிந்த சாராவியைத் தவறான வழிகளுக்குத் திருப்பி விடப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, முந்தைய 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளுக்குப் பதிலாக 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் (Tamil Nadu Rectified Spirit Rules 2000) இயற்றப்பெற்று, இதன்மூலம் புது உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

**எத்தனால்**

4.17. தமிழ்நாட்டில் எத்தனால் கலந்த பெட்ரோல் எரிபொருளாகப் பயன்படுத்தப்படலாம் என மத்திய அரசு எடுத்துள்ள முடிவின் அடிப்படையில், இம்மாநிலத்தில் உள்ள நீர்த்தன்மை நீக்கப்பட்ட சாராவி (Anhydrous Alcohol/ethanol) வடிசாலைகளில் தயாரிக்கலாம் எனக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, இதற்கான அரசாணை வெளியிட்டுள்ளது. அதற்கிணங்க, மதுபானங்கள் தயாரிப்பு, தொழிற்சாலைப் பயன்பாடு ஆகியவற்றிற்குத் தேவையான சாராவியையும், அத்துடன் எத்தனால் தயாரிப்பதற்குத் தேவையான சாராவியையும் தயாரிக்கக் கூடியவகையில், கருப்பஞ்சாற்றுக் கசண்டு பயன்பாட்டுத் திறனை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், 5 வடிசாலைகளுக்கு எத்தனால் தயாரிப்பதற்கான அனுமதி வழங்கி, அதற்காக வடிசாலை உரிமங்களில் உரிய பதிவுகள் செய்ய மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையருக்கு முன்னனுமதி வழங்கப்பட்டுள்ளது. எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்கள் 6 இடங்களில் எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் தயாரிப்பதற்கான அனுமதி வேண்டி விண்ணப்பித்தவண்ணம் அவற்றிற்கு டி.எல்.2 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் வழங்கத் தொடங்கியுள்ளன.

## 5. புதிய திட்டங்கள்

### எத்தனால் மற்றும் பயோடீசல்

தமிழ்நாடு ஒரு தண்ணீர் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், மாற்றுப் பயிர்களாக சர்க்கரைச் சோளம் (Sweet Sorghum), சர்க்கரைக் கிழங்கு (Sugar Beet), காட்டாமணக்கு (Jatropha) ஆகியவற்றைப் பயிரிடுகின்ற புதிய நடவடிக்கையின்மூலம் கிராமப் பொருளாதாரத்திற்கு வளர்ச்சி, விவசாயிகளுக்கு மேம்பட்ட மற்றும் நிலையான வருமானத்திற்கு வழிவகுக்கும்வகையில் ஒரு புதுப்புனைவுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு மற்றும் காட்டாமணக்கு போன்றவற்றைப் பயன்படுத்தி எத்தனால், பயோடீசல் மற்றும் துணைப் பொருட்களைத் தயாரிக்க ஆர்வமுள்ள தொழிற்கூடங்கள், தங்கள் விருப்பத்தினைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து எத்தனால் உற்பத்தி செய்யும் வடிசாலைகள் விரிவுபடுத்திட / மாற்றிட, சர்க்கரைச் சோளத்திலிருந்து எத்தனால் உற்பத்தி செய்ய, முன்வர வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 6. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

6.1 கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தலை அடியோடு ஒழிப்பதற்காகவும், போலியான மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைப் பிற மாநிலங்களிலிருந்து கடத்திவந்து, விற்பனை செய்வதைத் தடுக்கும் உறுதியான நோக்கத்துடனும், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீண்டும் துவக்கப்பட்டது. கடந்த 13-06-2001 முதல் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் இயக்குநர் அளவிலான அலுவலர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

6.2 அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் இயக்குநர் அவர்களுக்கு உதவியாக காவல் கண்காணிப்பாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, சென்னை, காவல் கண்காணிப்பாளர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு சென்னை, சேலம், மதுரை ஆகிய நான்கு காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். மதுவிலக்கு மத்திய புலனாய்வுப் பிரிவு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்பட்டுவரும் புலனாய்வுப் பிரிவில் 2 துணைக் காவல் கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும், 1 தலைமைக்



காவலரும் பணிபுரிந்து வருகின்றனர். இப்பிரிவு, முதன்மையாக ஒரு நுண்ணறிவுப் பிரிவாகவே செயல்படுகிறது.

6.3 தமிழ்நாட்டில் மொத்தம் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் ஆய்வாளர்களின்கீழ் இயங்கி வருகின்றன. மதுவிலக்கு அமலாக்க முழு பொறுப்பையும் ஏற்றுள்ள மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்கள் ஆகியோரது நேரடி மேற்பார்வையில் ஒவ்வொரு மாவட்டத்திலும்/நகரத்திலுமாக, மொத்தம் 38 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும் 38 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் பணியாற்றி வருகின்றனர். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதுவாக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

6.4. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அதிகாரிகளை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்கள் மூலமாகவும், நேரடியாகவும் அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் இயக்குநர் அவர்கள் கட்டுப்படுத்தி வருகிறார்.

### மதுவிலக்கை செவ்வனே அமல்படுத்தி மெத்தனாலினால் ஏற்படும் விஷச் சாராயச் சாவுகளைத் தடுக்கவும் மற்றும் அரசுக்கு வருமானத்தை அதிகரிக்கவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்:

6.5. விஷச் சாராயச் சாவுகளைத் தடுக்கும்வகையில், பரந்த தொலைநோக்குடன்கூடிய திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது. விஷச் சாராயச் சாவுக்கு மிக முக்கிய காரணம் மெத்தனால் என்று அறியப்பட்டுள்ளதால், மெத்தனால் சாதாரணமாகக் கிடைப்பதைத் தடுக்கும்வகையில் வழிகளும், முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குக் குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக முறையாகவும், தொடர்ச்சியாகவும் முயற்சிகள் மேற்கொள்வதற்காக மாநிலந்தழுவிய முறைசார்ந்த அமைப்பு, ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

6.6. தமிழக அரசு, அரசாணை பல்வகை எண் 50, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை 5 துறை, நாள் 18-02-2002 மூலம் மெத்தனாலை 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவந்துள்ளதோடு, மெத்தனாலுக்கு உரிமம் வழங்கும் நிபந்தனைகளைக் கடுமையாக்கும்வகையில், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு

இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள் [Tamil Nadu Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959]-க்கு உரிய திருத்தம் கொண்டுவந்து, அரசாணை பல்வகை எண் 51, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை-3 துறை, நாள் 18-02-2002-இல் ஆணை பிறப்பித்துள்ளது.

6.7. மறுவாழ்வு நிதி ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மறுவாழ்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. மறுவாழ்வுக் குழுக்கள் தகுதியான மதுவிலக்குக் குற்றவாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இதற்கென ரூபாய் 2,28,11,048 (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து எட்டு இலட்சத்து பதினோராயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகாறும், 16 மாவட்டங்களில், 416 நபர்களின் மறுவாழ்வுக்காக, ரூபாய் 58,97,900 (ரூபாய் ஐம்பத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்) செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பிற மாவட்டங்களிலும் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் உதவி வழங்கப்படவுள்ளது. மேலும், மறுவாழ்வுக் குழுக்களால் 138 நபர்களின் மறுவாழ்வுக்கென வங்கிகள்மூலம் நிதி திரட்டப்பட்டுள்ளது. இந்த அரசு, மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு, மேலும் தீவிரமாகத் தொடர் நடவடிக்கை எடுக்கும்.

6.8. மதுவிலக்குக் குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்படும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் செயல்பாட்டை அதிகரிக்க ஏதுவாக, பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினரே பயன்படுத்திக் கொள்ளும்வகையில் அரசாணை பல்வகை எண் 173, நாள் 31-08-2001-ல் அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மாநிலந்தழுவிய விழிப்புணர்வு இயக்கம்

6.9. கள்ளச் சாராயம் மற்றும் மெத்தனால் அருந்துவதால் ஏற்படும் அபாயங்களை மக்களுக்கு விளக்கும்வகையில், மாநிலந்தழுவிய விழிப்புணர்வு நடவடிக்கைகள், முந்தைய ஆண்டினைத் தொடர்ந்து 2003-2004 ஆம் வருடத்திலும் மேற்கொள்ளப்பட்டன. பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய வேலைவாய்ப்புக் குழுக்கள் இதில் கலந்து கொண்டன. சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும்



அச்சடிக்கப்பட்டு, பொது இடங்களில் விநியோகிக்கப்பட்டன. திரையரங்குகளில் நிழற்படச் சுருள்கள் காண்பிக்கப்பட்டன. கிராமப்புறங்களில் இதையொட்டிய தெரு நாடகங்களும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. மேற்படி விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு மறுவாழ்வுக் குழுக்கள் உறுதுணை புரிந்தன. மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்கள் விழிப்புடன் செயல்பட்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினருக்குத் தேவையான முக்கிய ஆதரவை அளித்து வருகின்றன.

6.10. கர்நாடகம், பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி ஆகியவை தமிழ்நாட்டுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கும்வகையில், தற்போது நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் இயங்கிவரும் 21 சோதனைச் சாவடிகளின் செயல்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்

6.11. அனைத்துவகை கள்ள, போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டக் கண்காணிப்பாளர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் மற்றும் மதுவிலக்கு மத்திய புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, கள்ளச் சாராய நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் விஷச் சாராய சாவுகள் ஏற்பட பெருமளவில் காரணமாயிருந்த மெத்தனாலைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக, ஒரு முனைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.12 கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி மற்றும் போலி/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் ஆகியவற்றைக் கடத்துபவர்கள்மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்வகையில், மதுவிலக்கு அமலாக்கமானது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வெளிமாநில மதுபானங்கள் இம்மாநிலத்திற்குள் கடத்தப்படுவது மற்றும் போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் தயாரிப்பது ஆகியவை வெகுவாகக் குறைக்கப்பட்டு, இது தொடர்பான முக்கியக் குற்றவாளிகள் தமிழ்நாடு

தடுப்புக் காவல் சட்டம் 14/1982-இன்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். முழுமையான புலனாய்வு மற்றும் முறையான வழக்கு தொடுத்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதன்மூலம், அரசின் அமலாக்கக் கொள்கையினை முனைப்பாகவும், தீவிரமாகவும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கர்நாடகம், பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி ஆகியன கடத்தப்படுவதைத் தடுக்கும்வகையில், தற்போது இயங்கிவரும் 21 சோதனைச் சாவடிகளின் செயல்பாடு தீவிரப்படுத்தப்பட்டதுடன், தேவைக்கேற்ப தற்காலிகச் சோதனைச் சாவடிகளும் நடமாடும் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

6.13. 2003-2004 ஆம் ஆண்டில்,

- 898 முக்கிய மதுவிலக்குக் குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டம் 14/1982-இன்கீழ். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
- 78.78 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டன.
- 4.66 இலட்சம் கர்நாடகா மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்பட்ட சாராயப் பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டன.
- 3.71 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவி கைப்பற்றப்பட்டன.
- 346 நான்கு சக்கர வாகனங்கள் உட்பட 5553 தானியங்கி வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.
- 96.05 இலட்சம் லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.
- 8505 கள்ளச் சாராயம் வடித்தல் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2.36 இலட்சம் கள்ளச் சாராய வழக்குகள் பதியப்பட்டு 2.17 இலட்சம் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.



- 40,398 லிட்டர் கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி வழியாக கடத்திவரப்பட்ட போலி/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் கைப்பற்றப்பட்டன.
- 175 லிட்டர் மெத்தனால் கைப்பற்றப்பட்டன.
- இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் கடத்தல் குற்றத்தில் 2052 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2.60 இலட்சம் லிட்டர் கள் கைப்பற்றப்பட்டன.
- 1,05,625 லிட்டர் மதுக்கஷாயம் கைப்பற்றப்பட்டன.
- கள்ளச் சாராய வழக்குகளில் இணக்கக் கட்டணம் வசூலித்தவகையிலும், நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதத் தொகைவகையிலும் அரசுக்கு ரூ.5.49 கோடி வருவாயாகக் கிடைக்கப்பெற்றது.

6.14. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 52-ஈ-இன்படி, மாவட்ட நடுவர்களுக்குக் கள்ளச் சாராயக் குற்றவாளிகளை, அவர்கள் வசிக்கும் கிராமத்தில் இருந்தோ அல்லது நீதிமன்றத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இருந்தோ வெளியேற்ற முடியும். இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 358 கள்ளச் சாராயக் குற்றவாளிகள் அவர்கள் வசிப்பிடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

6.15. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் திருத்தப்பட்ட பிரிவுகள் 4 (1-A), 4 (1) (aa), மற்றும் 4 (1) (aaa)-ல் வழங்கியுள்ள அதிகாரத்தின்படி, 56,512 வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

6.16. கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், விற்பதையும் ஒழிக்க வேண்டும் என்பதற்காக அனைத்துக் கரும்புள்ளி கிராமங்களிலும் மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மதுவிலக்கு விழிப்புணர்வுக் குழுக்களின் ஒத்துழைப்புடன், கடுமையான மதுவிலக்கு அமலாக்க நடவடிக்கைகள், மறுவாழ்வு நடவடிக்கைகள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள்மூலம், கள்ளச் சாராய நடவடிக்கைகளை முற்றிலும் ஒழித்து, கள்ளச் சாராயமே இல்லாத கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன், கள்ளச் சாராய வியாபாரிகளின்

[2004 ஜூலை 27

நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவற்றை முற்றிலும் ஒடுக்குவதற்கு அனைத்துச் சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களிலும் மற்றும் மதுவிலக்கு அமல் பிரிவுகளிலும் கரும்புள்ளி கிராமப் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

6.17. விஷச் சாராயச் சாவிற்கு மெத்தனால் முக்கியக் காரணமாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, மெத்தனாலின் நடமாட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க, தக்க நடவடிக்கைகள், மிகுந்த விழிப்புணர்வுடன் எடுக்கப்பட்டு வருகின்றன். இதுதொடர்பாக, காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், காவல் ஆணையாளர்களுக்கும், மாவட்டக் காவல் கூடுதல் மற்றும் துணைக் கண்காணிப்பாளர்களுக்கும், துணை ஆணையாளர்களுக்கும், அமலாக்கம் மற்றும் மாவட்ட காவல் துறையினருக்கும் உரிய கடுமையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மெத்தனால் எடுத்துவரும் வாகனங்களுக்கு, மாநில எல்லையிலிருந்து காவல் வழித்துணை வழங்கப்படுகிறது.

6.18 கள்ளச் சாராயம் காய்ச்சுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழிக்க மாநில அளவில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினராலும், சட்டம் ஒழுங்குப் பிரிவினராலும், தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கள்ளச் சாராயக் குற்றவாளிகள்மீது தொடுக்கப்படும் வழக்குகளில், நீதிமன்றங்களின் வாயிலாக அவர்கள் சில நாட்களிலேயே பிணையின்பேரில் வெளியே வரும் நடைமுறை உள்ளதைக் கருத்தில்கொண்டு, தடுப்புக் காவல் சட்டத்தின் வாயிலாக அவர்கள்மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து, நமது மாநிலத்திற்குள் தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், தெளிந்த சாராவி ஆகியவை கடத்தப்படுவதைத் தடுக்க, முழு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 7. போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

இம்மாநிலத்தில், மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும், மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத் துறை, வருவாய் உளவு தகவல் சேகரிப்பு இயக்கம் ஆகியவையும்



2004 ஜூலை 27]

போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. 2003 ஆம் ஆண்டில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, 956 வழக்குகளில் ரூ.1.53 கோடி மதிப்புள்ள, 3068.680 கிலோ எடையுள்ள உலர்ந்த கஞ்சாவைக் கைப்பற்றியது மற்றும் 120 வழக்குகளில், ரூ.46.18 கோடி மதிப்புள்ள 1,31,958 கிலோ எடை உள்ள கஞ்சாச் செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும், 23 வழக்குகளில், 11.010 கிலோ எடையுள்ள ரூ.11.01 கோடி மதிப்புள்ள ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

2004 ஆம் ஆண்டில், ஜனவரி முதல் ஏப்ரல் வரை போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, 377 வழக்குகளில், ரூ.37.58 இலட்சம் மதிப்புள்ள 751.700 கிலோ உலர்ந்த கஞ்சாவைக் கைப்பற்றியது. 8 வழக்குகளில் ரூ.93.16 இலட்சம் மதிப்புள்ள 4658 கிலோ எடை உள்ள கஞ்சாச் செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும், 20 வழக்குகளில் 24.122 கிலோ எடை உள்ள ரூ.24.12 கோடி மதிப்புள்ள ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

## 8. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

8.1. அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) சாராயம் மற்றும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களை இம்மாநிலம் முழுமைக்கும் மொத்த விற்பனை செய்வதற்காக 23-5-1983 அன்று 1956 ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும்.

8.2. 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 17-C (1-A) (a)-இன்படி, டாஸ்மாக் மட்டுமே, இம்மாநிலம் முழுவதும் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களை மொத்தமாக விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது; வேறு எவருக்கும் இந்த உரிமையைப் பெற உரிமை கிடையாது.

### சில்லறை விற்பனை பிரிவு

8.3. முன்னதாக தனி நபர்களால் மதுபான சில்லறை விற்பனை நடைபெற்றபொழுது, மது அருந்துவோரின் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கும்வகையில், உரிமம் பெற்றுள்ள வளாகங்களில் கள்ள/போலியான மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளின்

விற்பனையை முழுவதுமாக ஒழிக்கும்பொருட்டும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையைவிட அதிக விலையில் மதுபான வகைகளை விற்பனை செய்யும் மீறல்களைத் தடுக்கும் பொருட்டும், இவை இரண்டினால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினைத் தடுக்கும்பொருட்டும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான வகைகளை (IMFS) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின்மூலம் சில்லறை முறையில் விற்பனை செய்ய அரசு கொள்கை முடிவு எடுத்தது. இதற்காக 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 17-C (1-B)-இன்படி டாஸ்மாக்கிற்கு இம்மாநிலம் முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களை சில்லறை விற்பனை செய்யும் உரிமையும் வழங்கப்பட்டது. 29-11-2003 முதல் இம்மாநிலம் முழுவதும் நகர்ப்புறப் பகுதிகளில் டாஸ்மாக் நிறுவனமே நேரடியாகவும், கிராமப்புறப் பகுதிகளில் டாஸ்மாக்கின் முகவர்களான கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் மதுபான சில்லறை விற்பனை மேற்கொள்ளப்பட்டது. எனினும், 3-12-2003 முதல் டாஸ்மாக்கின் முகவர்களான கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்திய 3261 மதுபானக் கடைகளையும் டாஸ்மாக் நிறுவனமே ஏற்றுக்கொண்டது. தற்போது டாஸ்மாக் நிறுவனம் மட்டுமே 7371 சில்லறை விற்பனைக் கடைகளையும் 3073 பார்களையும் நடத்தி வருகிறது.

### டாஸ்மாக்கின் நிர்வாக அமைப்பு – தலைமையகம்

8.4. டாஸ்மாக்கின் பதிவுபெற்ற அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. அது இம்மாநிலம் முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவற்றை விலைக்கு வாங்குதல் மற்றும் மொத்த விற்பனை/சில்லறை விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகிறது.

8.5. தலைமையகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தரத்தில் மூன்று பொது மேலாளர்களும், பொது மேலாளர் (நிதி) - நிறுவனச் செயலர் ஒருவரும்; இரண்டு மேலாளர்களும் மற்றும் இதர சார்புப் பணியாளர்களும் மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக பணியாற்றி வருகின்றனர்.

### மண்டலங்கள் மற்றும் கிடங்குகள்

8.6. மாவட்ட வருவாய் அலுவலர்கள் தரத்தில் முதுநிலை மண்டல மேலாளர்களின் தலைமையின்கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை,



சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஐந்து மண்டல அலுவலகங்கள் உள்ளன. மாநிலம் முழுவதும் 40 மதுபானக் கிடங்குகள் உள்ளன. இக்கிடங்குகள் வட்டாட்சியர் தரத்திலுள்ள மேலாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

### மாவட்ட மேலாளர்களின் அலுவலகங்கள்

8.7. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் வீதமும், சென்னை மாவட்டத்தில் கூடுதலாக 2 மாவட்ட மேலாளர்களும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கூடுதலாக 1 மாவட்ட மேலாளரும் ஆக 32 மாவட்ட மேலாளர்கள் உள்ளனர்.

### சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மது அருந்தும் கூடங்கள் [BARS]

8.8. மாநிலம் முழுவதும் 7371 சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. இவற்றில் 3073 கடைகளில் மது அருந்தும் கூடங்கள் (பார்கள்) இணைக்கப்பட்டுள்ளன. 7371 கடை மேற்பார்வையாளர்களும், 1635 இணைக்கப்பட்டுள்ளன. 7371 கடை மேற்பார்வையாளர்களும், 20,000 விற்பனையாளர்களும், 4853 மது பார் மேற்பார்வையாளர்களும், 200 பகுதி மேற்பார்வையாளர்களும், ஒப்பந்த பரிமாறுபவர்களும், 200 பகுதி மேற்பார்வையாளர்களும், ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

### நிதியமைப்பு

8.9. ஒவ்வொன்றும் ரூபாய் 1000 மதிப்புள்ள 1,50,000 பங்குகளுக்கான ரூபாய் 15 கோடியை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு பங்கு மூலதனமாக மாநில அரசு செலுத்தியுள்ளது. இதில் ரூபாய் 6.40 கோடியை 2003-2004 ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது. இதுதவிர தேவைப்படும்போது வழிவகை முன்பணங்களை அரசு வழங்கி வருகிறது. அதிகபட்சமாக ரூபாய் 110 கோடி அளவுக்கு கடன் வசதியை இந்திய ஸ்டேட் வங்கியின் வணிகக் கிளை வழங்கியுள்ளது.

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகள்

8.10. இம்மாநிலத்தில் 40 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகள் உள்ளன. தொடக்கத்தில் இந்தக் கிடங்குகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. 1983 ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் வணிகம் 14 மடங்கு

அதிகரித்ததால் ஏராளமான லாரிகள் காத்திருப்பது, முக்கியமான மதுபான வகைகள் தீர்ந்துபோவது போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டதன் காரணமாக இக்கிடங்குகளில் இடவசதி போதுமானதாக இல்லை. எனவே, போதிய இடவசதியுடன்கூடிய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகள் இருப்பது அவசியமாகும் என்று கருதப்பட்டது. 1998-1999 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சாராயக் கழகம் நிறுவனத்தின்வசம் இருந்த கலவை ஆலைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தன்வசம் ஏற்றுக்கொண்டு, அவற்றில் பழுதுகளை சரிபார்த்து கீழ்க்கண்ட இடங்களில் தனது கிடங்குகளை அமைத்துள்ளது:-

| | |
|---|---|
| 1. திருமழிசை-I | 6. திருநெல்வேலி |
| 2. திருமழிசை-II | 7. ஈரோடு |
| 3. அம்பத்தூர்-I | 8. திண்டுக்கல் |
| 4. அம்பத்தூர்-II | 9. திருச்சி |
| 5. கும்பகோணம் | 10. கடலூர் |

8.11. திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, நாமக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் நிலங்களை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வாங்கி, இவ்விடங்களில் கிடங்குகளைக் கட்டுவதற்கான பணியை தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம்/தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம் ஆகியவற்றின்வசம் ஒப்படைத்தது. கீழ்க்கண்ட இடங்களில் கட்டுமானப் பணிகள் முடிவுபெற்று அவற்றில் கிடங்குகள் செயல்படத் தொடங்கியுள்ளன:-

| | |
|---|---|
| 1. அம்பத்தூர்-III | 7. இராமநாதபுரம் |
| 2. திருவள்ளூர் | 8. புதுக்கோட்டை |
| 3. நாமக்கல் | 9. காஞ்சிபுரம் |
| 4. சிவகங்கை | 10. திருவாரூர் |
| 5. தூத்துக்குடி | 11. தஞ்சாவூர் |
| 6. விருதுநகர் | |



**கணினிமயமாக்கல் திட்டம்**

8.12. விரைவாக விற்பனையாகும் மதுபானங்கள் இருப்பின்றிப்போகும் நிகழ்வுகளைத் தவிர்க்கும் நோக்கிலும், தலைமையகத்துக்கும் அரசுக்கும் சமர்ப்பிக்கக்கூடிய பல்வேறு அறிக்கைகள், தகவல்கள் போன்றவற்றைத் துல்லியமான முறையில் அளிப்பதற்கும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நடவடிக்கைகளை கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 40 கிடங்குகள் மற்றும் தலைமையகம் ஆகியவற்றின் நிகழ்வுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தகவல் பரிமாற்றம் மேம்படுத்தப்பட்டதால் வேகமாக விற்பனையாகக்கூடிய மதுபானங்கள் எல்லா கிடங்குகளிலும் மற்றும் சில்லறை விற்பனை கடைகளிலும், போதுமான அளவு இருப்பு இருக்கும் நிலை உருவாகியுள்ளது.

8.13. ரூ.13.80 இலட்சம் செலவில் தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைச் செயலாளர் அலுவலகம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் மின்னணு முறையில் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளது. தற்போது மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம், தலைமைச் செயலகம் மற்றும் டாஸ்மாக் ஆகியவை இணைக்கப்பட்டு வருகின்றன.

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளை நவீனமயமாக்குதல்**

8.14. தற்போதுள்ள 40 மதுபானக் கிடங்குகளில் விற்பனையாகும் வரிசையில் முதல் 10 கிடங்குகளில் மென்பொருட்களின் தரம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றில் நவீன வன்பொருட்கள் ரூபாய் 36.17 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன. அடுத்து 15 கிடங்குகளில் இப்பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கான இணையதளம்**

8.15. கிடங்குகளில் உள்ள பல்வேறு வகை சரக்கு இருப்பு, பல்வேறு வகைகளின் அதிகபட்ச விற்பனை விலை மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் புள்ளிவிவரங்கள் அடங்கிய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கான இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. நோக்கர்களுக்கு சரியான மற்றும் உடனுக்குடனான இருப்பு நிலை மற்றும் தொடர்புடைய தகவல்களை வழங்கும் வகையில் தினசரி தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

**ஈவுத்தொகை (Dividend)**

8.16. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 2002-2003 ஆம் ஆண்டிலும் கூடுதல் வருமானம் ஈட்டியதைத் தொடர்ந்து பங்கு மூலதனத்தின் 5 சதவீதமான, ரூ.35 இலட்சத்தை ஈவுத்தொகையாக அரசுக்கு செலுத்தியுள்ளது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் தமிழ்நாடு சாராவிக் கழகம் (TASCO) ஒருங்கிணைப்பு**

8.17. தமிழ்நாடு சாராவிக் கழகத்தை (ஒரு துணை நிறுவனம்) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் ஒருங்கிணைக்கும் திட்டத்திற்கான அறிவிக்கையினை, இந்திய அரசின் கம்பெனிகள் விவகாரத் துறை 9-1-2003 நாளிட்ட இந்திய அரசு சிறப்பிதழ் எண் 24-ல் வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, 9-1-2003 முதல் டாஸ்கோ நிறுவனம் கலைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின்படி டாஸ்மாக் மற்றும் டாஸ்கோ ஆகியவற்றின் 31-3-1999-இல் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் இருப்பு நிலைக் குறிப்புகளின்படி, டாஸ்கோ மற்றும் டாஸ்மாக்கின் வணிக வகை நடவடிக்கைகள் பொதுக் கணக்கில் கொண்டு வரப்பட்டது. அதன்விளைவாக, 1-4-1999 தேதியில் உள்ள இறுதி நிலைக்குறிப்பின்படி டாஸ்கோவின் அனைத்து சொத்துகள் மற்றும் கடன் பொறுப்புகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்றுக் கொண்டது. அதன் பின்னர், டாஸ்கோவின் அனைத்து வகை நடவடிக்கைகளின் முழு பொறுப்புக்களையும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்றுக் கொண்டது. இந்த ஒருங்கிணைப்பின் பயன்பாடு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 2002-2003 நிதியாண்டின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**9. நிறைவுரை**

சமுதாயத்தின் அனைத்து பிரிவினரின் நலன்களைப் பாதுகாக்கவும், குறிப்பாக கள்ளச் சாராயம் வடித்தல் மற்றும் அதன்விளைவாக ஏற்படும் சாராயச் சாவுகளின் கடுமையான பிடியிலிருந்து அனைத்து கீழ்த்தட்டு மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கும், மற்றும் மகளிர் முன்னேற்றத்திற்காகவும் இவ்வரசு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. குடியின் தீமைகள் குறித்து மக்கள் விழிப்புணர்வு கொள்வதற்கும், தடை செய்யப்பட்ட பொருட்களின் கடத்தலைத்



எடுக்கப்பட்டு தடுப்பதற்கும், கடுமையான விழிப்புடன் நடவடிக்கை அதேநேரத்தில் வருகிறது. வருவாயை அதிகரிக்கும் முறையில், மக்கள் நல்வாழ்வைக் பொதுமக்களுக்கு ஊறு நேராத வகையிலும், தொடர்ந்து இவ்வரசு கருத்தில்கொண்டும், மதுவிலக்குக் கொள்கையைத் வடிப்பதைக் களைவதற்கு ஆய்வு செய்யும். கள்ளத்தனமாக சாராயம் குற்றவாளிகள் தண்டனையை வழங்குகின்ற அதேசமயத்தில், திருந்திய எடுக்கப்பட்டு மறுவாழ்வு பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் நடவடிக்கைகள் அவர்கள் வாழ்வில் புதிய திருப்பத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படுகின்றன.

[2004 ஜூலை 27

# இணைப்பு–1

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு வரைபடம்




- ஆ.ம.ஆ – ஆணையர், மதுவிலக்கு-ஆயத்தீர்வை
- த.மா.வா.க – தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
- ம.அ.பி – மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு



2004 ஜூலை 27]

# இணைப்பு–2

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு வரைபடம்




- இ.ஆ – இணை ஆணையர்
- நி.க.அ. – நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்
- து.ஆ – துணை ஆணையர்
- உ.ஆ – உதவி ஆணையர்
- இ.த.அ.ம. – இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்
- ப.ப. – பறக்கும் படை
- உ.க.அ. – உதவி கணக்கு அலுவலர்
- ஆ.மே. – ஆயமேற்பார்வையாளர்

[2004 ஜூலை 27

## இணைப்பு—3

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு வரைபடம்




| | | |
|---|---|---|
| ■ கா.க. | – | காவல் கண்காணிப்பாளர் |
| ■ கா.க.அ. | – | காவல் கண்காணிப்பாளர் அமலாக்கம் |
| ■ ம.பு.பி. | – | மத்திய புலனாய்வுப் பிரிவு |
| ■ மா.கா.க. | – | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் |
| ■ கூ.கா.க. | – | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| ■ து.கா.க. | – | துணைக் காவல் கண்காணிப்பாளர் |
| ■ ம.அ.பி. | – | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு |
| ■ கூ.து.ஆ. | – | கூடுதல் துணை ஆணையர் |
| ■ உ.ஆ. | – | உதவி ஆணையர் |



2004 ஜூலை 27]

## இணைப்பு – 4

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்




■ பொ.மே. (மொ.வி.ம.நி.) — பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்)

■ பொ.மே. (நிதி) மற்றும் நி.செ. — பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலர்

# இணைப்பு–5

## இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்



| தொடர் எண். | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | கூட்டுறவுத் துறை | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு-1 | 15,000 |
| 12 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 15 | என்.பி.கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் | 2,26,000 |
| | **பொதுத் துறை** | |
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் | 32,000 |
| | **தனியார் துறை** | |
| 20 | எஸ்.வி. சுகர் மில்ஸ் நிறுவனம் | 9,200 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 22 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு-1 | 12,600 |
| 23 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 25 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 18,000 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், துகிலி | 22,500 |
| 27 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம் | 18,600 |
| 28 | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 30 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 14,500 |

[2004 ஜூலை 27

| | | |
|---|---|---|
| 31 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 32 | காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 33 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், புகலூர் (டெக்கான்) | 14,700 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 35 | தரணி சுகர்ஸ் அலகு-2 | 10,000 |
| 36 | அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், பெண்ணாடம் | 25,000 |
| 37 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், குறும்பூர் | 5,000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ் | 6,000 |
| | மொத்தம் | 2,49,300 |
| | ஒட்டு மொத்தம் | 5,07,300 |



2004 ஜூலை 27]

## இணைப்பு-6

### வடிசாலை - சாராவி உற்பத்தி

(சாராவி ஆண்டு: டிசம்பர்—நவம்பர்)

| தொடர் எண். | வடிசாலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக் கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 2002-2003 ஆம் சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்-களில்) | 2003-2004 ஆம் சாராவி ஆண்டில் (ஜூன் 2004 வரை) சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்-களில்) |
|---|---|---|---|---|---|
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்** திருவாளர்கள் | | | | |
| 1. | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 82,500 | 24,722 | 0.91 | 0.80 |
| 2. | பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 1.09 | 0.85 |
| 3. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு—1 | 60,000 | 15,046 | -- | -- |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், காடம்புலியூர், அலகு—2 | 1,10,000 | 26,800 | 1.89 | 1.09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,600 | 0.85 | 0.47 |
| 6. | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம் | 60,000 | 14,077 | 0.56 | 0.08 |
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 6,000 | 1.12 | 0.57 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,480 | 0.40 | 0.46 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 25,000 | 4,758 | 0.42 | 0.25 |
| 10 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 18,600 | 2.66 | 1.60 |
| 11 | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 33,300 | 1.03 | 0.74 |
| 12 | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,646 | 0.97 | 0.62 |
| 13 | கோவிக்ஸ் பீவரேஜஸ் நிறுவனம் | -- | -- | -- | -- |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூட்டுறவுத் துறைகளிலுள்ள வடிசாலைகள் | | | | |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 1.08 | 0.52 |
| 15 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.76 | 0.30 |
| | மொத்தம் | 8,68,110 | 2,26,829 | 13.74 | 8.35 |

[2004 ஜூலை 27

## இணைப்பு—7

### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்

| ஆண்டு | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி அளவு |
|---|---|
| | (கோடி பல்க் லிட்டர்களில்) |
| 1994-1995 | 8.10 |
| 1995-1996 | 8.13 |
| 1996-1997 | 12.78 |
| 1997-1998 | 10.90 |
| 1998-1999 | 9.81 |
| 1999-2000 | 11.74 |
| 2000-2001 | 12.43 |
| 2001-2002 | 13.32 |
| 2002-2003 | 11.62 |
| 2003-2004 | 14.04 |
| பீர் உற்பத்தி | |
| 1994-1995 | 4.18 |
| 1995-1996 | 5.79 |
| 1996-1997 | 5.33 |
| 1997-1998 | 5.25 |
| 1998-1999 | 5.29 |
| 1999-2000 | 4.23 |
| 2000-2001 | 5.76 |
| 2001-2002 | 5.06 |
| 2002-2003 | 4.32 |
| 2003-2004 | 5.95 |



2004 ஜூலை 27]

## இணைப்பு - VII

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 38

## பொதுப் பணித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005

### முன்னுரை

பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின் முன்வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப் பணித் துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும், மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டட அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நீர்த் தேவையைக் கோரும் எல்லாப் பகுதியினரும் பயன்பெறும்வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து, அதன்மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களைச் சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

## பாசனம்

### பாசன நிலை

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப் பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு, இந்திய மாநிலங்களில் 11 ஆம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார்

[2004 ஜூலை 27

60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பு, அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது.

(1) கால்வாய்கள் : 9.50 இலட்சம் எக்டேர்

(2) ஏரிகள் : 9.00 இலட்சம் எக்டேர்

(3) கிணறுகள், குழாய்க் கிணறுகள் : 11.50 இலட்சம் எக்டேர்

## தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் 23 பெரிய மற்றும் நடுத்தர திட்டங்களின்மூலம் 11 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்ட காலத்தில் 2001-2002 முடிய பாசனம் பெறும் பகுதி 29.72 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் ஆண்டான 2002-2003 ஆம் ஆண்டில் 4924 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் 5141 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் 3629 ஹெக்டேர் கூடுதல் பாசன வசதி கிடைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அண்டை மாநில நதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்

தமிழ்நாடு, அனேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையை தமிழ்நாடு அணுகியுள்ளது.



2004 ஜூலை 27]

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையானது, இந்தியத் தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும்வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் தொடர்புகொண்டு மேல்நடவடிக்கை எடுத்து வருகிறது.

மகாநதி – கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – பாலாறு – காவிரி – வைகை இணைப்புகளில் மிகுதியான நீரைத் திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக்கூறுகள் பற்றிய முன்னோடி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதனையன்றி பாண்டியாறு – புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் புனல் மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழுமூச்சாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

## நீர்வள ஆதார அமைப்பு

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தைச் செயலாக்குவதில் முதற்படியாகவும், அதனைத் திறம்படச் செயலாக்குவதன்பொருட்டும், தனித்தன்மையுடன் செயல் புரியவும், பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பு 1995 டிசம்பர் முதல் மாற்றியமைக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின்கீழ் வடிநிலவாரியாகப் பிரித்துப் பரவலாக்கப்பட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.

நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

(1) தன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை.

(2) தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை

(3) தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை

(4) தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை

(5) தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், சென்னை

(6) தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை

(7) தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி

(8) தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், கோயம்புத்தூர்

(9) தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை

(10) இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை

(11) இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி

**பாசன நீர்ப் பயன்பாட்டில் சிக்கனம்**

மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பெரியது மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன்மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரைச் சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாகச் சாகுபடி செய்யவும் இயலும்.



இந்நோக்கத்துடன் பெரியாறு – வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் பணி, உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப் பட்டது. இதேபோல் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளதாக்கு, அமராவதி பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதா நதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல் திறனை மேம்படுத்த பாசனக் கட்டுமானங்களைப் புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் வினியோக அளவை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வகையிலும், ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாகப் பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும், உற்பத்தியளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தைப்போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறு பல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டமானது 1995-96 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி, இத்திட்டப் பணிகளில் எஞ்சியுள்ளவற்றை முடிக்க 31-03-2004 வரை கால நீட்டிப்பு வழங்கியது. இப்போது மேலும் உலக வங்கி 30-09-2004 வரை எஞ்சியுள்ள பணிகளை முடிக்க கால நீட்டிப்பு வழங்கியுள்ளது.

**பெரிய நீர்பாசனத் திட்டங்கள்**

மாநிலத்தில் மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய நீர்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

**மாநில திட்டப் பணிகள்**

**நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள்**

2004-2005 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்து பின்வரும் நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன:-

(1) பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்)

(2) நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)

(3) இருக்தன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

(4) சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)

(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)

(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(9) பத்தலபள்ளி மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

(10) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(11) வரட்டாறு-வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

(12) கால்வாய்-சடையனேரித் திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

(13) நாராயண காவேரி வாய்க்கால் (இராமநாதபுரம் மாவட்டம்)

(14) உப்பார் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

(15) முதலை முத்துவாரியின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)

(16) கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

(17) நாயோடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

(18) இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)



(19) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (ஈரோடு மாவட்டம்)

(20) ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

(21) சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

(22) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

(23) சிறுமலையாற்றின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

(24) குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல் (கரூர் மாவட்டம்)

(25) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்

(26) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

(27) நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)

(28) பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

(29) மிருகண்டாநதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(30) கீழ்பவானி பாசன அமைப்பைப் புனரமைத்து நவீனப் படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்

(31) மாசுபட்ட நொய்யல் ஓரத்துப்பாளையம் நீரைத் திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல்.

(32) கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல்

[2004 ஜூலை 27

(33) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல்

## நடைபெற்றுவரும் நடுத்தரப் பாசனத் திட்டப் பணிகளின் செயலாக்க நிலை

### (1) பெரியாறு அணையில் நீரளவை பழைய நிலையில் வைத்தல்

1. 1886 ஆம் ஆண்டு திருவாங்கூர் மகாராஜாவுக்கும் மற்றும் அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் பெரியாறு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் 1895-ல் முடிக்கப்பட்டது. இதற்குப் பின்னர் 1970 ஆம் ஆண்டு இரண்டு துணை ஒப்பந்தங்கள் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையே ஏற்பட்டன.

2. 1979 ஆம் ஆண்டில் கேரள அரசு பெரியாறு அணையின் பாதுகாப்பு பற்றி சில அச்சங்களை எழுப்பியது. மத்திய நீர்வளக் குழுமம் அணையினை ஆய்வு செய்து (i) அவசரகால நடவடிக்கை, (ii) இடைக்கால நடவடிக்கை (iii) நீண்டகால நடவடிக்கை என்ற 3 விதமான பலப்படுத்தும் பணிகளை பரிந்துரைத்ததின்பேரில் தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவசரகால நடவடிக்கை பணிகள் மற்றும் இடைக்கால நடவடிக்கை பணிகளை செய்து முடிக்கும்பொருட்டு அணையின் நீர்மட்டம் அதன் முழு நீர்மட்ட அளவான 152 அடியிலிருந்து தாற்காலிகமாக 136 அடியாக குறைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள அவசரகால நடவடிக்கை பணிகள் மற்றும் இடைக்கால நடவடிக்கை பணிகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர் அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என மத்திய நீர்வளக் குழுமம் பரிந்துரைத்தது.

3. பின்னர் மத்திய நீர்வளக் குழுமம் சிற்றணையை (பேபி டேம்) பலப்படுத்துதல், கைப்பிடிச் சுவற்றை இரண்டு அடி உயர்த்துவது அதாவது 158 அடியிலிருந்து 160 அடிக்கு உயர்த்துவது போன்ற சில கூடுதலான பணிகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்தது. சிற்றணையை (பேபி டேம்) பலப்படுத்துதல், கைப்பிடிச் சுவற்றை இரண்டு அடி உயர்த்துதல் அதாவது 158 அடியிலிருந்து 160 அடிக்கு உயர்த்துதல் ஆகிய பணிகள் மட்டும் கேரள அரசு தெரிவித்த எதிர்ப்புகள் காரணமாக முடிக்கப்படாமல் உள்ளன.



2004 ஜூலை 27]

4. இருப்பினும் பலப்படுத்தும் பணிகள் அனைத்தும் முடிந்த நிலையிலும், பெரியாறு அணையின் நீர்மட்டம் தற்காலிகமாக குறைக்கப்பட்ட அளவான 136 அடியிலேயே வைக்கப்பட வேண்டும் என்று கேரள அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

5. இதற்கிடையே கேரளாவைச் சார்ந்த ஒரு சில தனி நபர்களால் கேரள உயர்நீதிமன்றத்தில் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை தற்போதுள்ள 136 அடிக்குமேல் தமிழ்நாடு உயர்த்தக்கூடாது எனக் கோரி நீதிப் பேராணை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதற்கு மாறாக சென்னை உயர் நீதிமன்றத்தில் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முன்பிருந்தபடியே 152 அடிக்கு உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு சில தனி நபர்கள் நீதிப் பேராணை விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தனர். கேரள மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ள வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இவ்வரசு மற்றும் பிறர் தாக்கல் செய்த மாற்றல் மனுக்களை (Transfer Petitions) விசாரித்து இவ்வழக்குகளை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவு பிறப்பித்தது.

6. இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 5-12-2002 அன்று விசாரணைக்கு வந்தபோது வழக்கினை இறுதியாக முடிப்பதற்காக மார்ச் 2003-இல் பட்டியலிடுமாறு உத்தரவிட்டது. பின்னர் ஏப்ரல் 2003-இல் பட்டியலிடப் பட்டபோதிலும் வழக்குகள் விசாரணைக்கு வரவில்லை. அதன்பிறகும் விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை.

7. இவ்வழக்குகள் உச்ச நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாததால் இவ்வரசு 11-11-2003 அன்று இவ்வழக்குகளை விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முடித்திட வேண்டி ஓர் இடைக்கால மனுவை தாக்கல் செய்தது.

8. இந்த இடைக்கால மனுவை 12-12-2003 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம் இவ்வழக்குகளின் விசாரணையை துரிதப்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தது. மேலும், கோடைகால விடுமுறைக்குப் பின்னர் விசாரணைக்குப் பட்டியலிடுமாறு உச்ச நீதிமன்றம் 5-5-2004 ஆம் நாளன்று உத்தரவிட்டுள்ளது.

[2004 ஜூலை 27

9. தமிழக அரசு இவ்வழக்குகளைத் தொடர்ந்து கவனித்து பெரியாறு அணையின் முன்பிருந்த முழு நீர்மட்ட அளவான 152 அடிக்கு உயர்த்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

10. 2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் 87.23 இலட்ச ரூபாய் (சிற்றணைக்காக) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(2) நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயபட்டி, சின்னக்காமாபட்டி கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும் 2530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தடையிலா நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை மற்றும் வழிந்தோடி அமைக்கும் பணியும் பிரதானக் கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.37.36 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 93 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.0.02 இலட்சம்.

**(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டத்தில், இராஜாபட்டி, மாசர்பட்டி, சக்கிகாப்பட்டி, தப்பாத்து, கீழநாட்டுகுறிச்சி, மேல்கரண்டை, செங்கோட்டை, கீழ்கரண்டை, வடமலபுரம், வெளவால் தொத்தி, வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

2004 ஜூலை 27]

அர்ஜுனா மற்றும் வைப்பாறு நதிகளின் குறுக்கே கல்லணை கட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. தலைமதகு பணிகள் 85 விழுக்காடும், கால்வாய் கட்டும் பணி 90 விழுக்காடும் கிளைக் கால்வாய்ப் பணிகளில் 95 விழுக்காடும் முடிவடைந்துள்ளது. கால்வாயில் குறுக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருத்திய மதிப்பீடு ரூ.62.20 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.237.78 இலட்சம்

**(4) சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வரட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமம் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்னஓவலாபுரம், இரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி மற்றும் சீபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கப்படும்.

அரசு இத்திட்டத்திற்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ.14.70 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கல்லணை, வழிந்தோடா பிரிவு, தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு மற்றும் தேவையான கட்டமைப்புகளுடன்கூடிய கால்வாய்கள் அடங்கும். இத்திட்டத்தில் பணிகள் யாவும் முடிவுபெற்றன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.48.91 இலட்சம்

**(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமம் அருகில், கமுதி நீர் கட்டுப்பாட்டு மதகிற்குக் கீழ்ப்புறமாகக் கிருதமால் மற்றும் பரளையாறுகள் மலட்டாற்றுடன் சங்கமிக்கும் இடத்திற்குக்கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின்மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள ஓ.கரிசல் குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல், அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்), மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகுசந்தை கிராமங்களில் உள்ள 1758

எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின்கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.15.40 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணை, இரண்டு தலைமதகுகள், கட்டமைப்புகளுடன்கூடிய வலது மற்றும் இடது பிரதான கால்வாய்கள் இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

இத்திட்டத்தில் எல்.எஸ்.0 மீ. முதல் 200 மீ. மற்றும் 200 மீ. முதல் 38.5 மீ. வரை அணைத் தடுப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது. வலதுபுற தலைமதகு கட்டும் பணி மற்றும் மணல்போக்கி மதகு கட்டும் பணி, மண் அணை அமைத்தல் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இடதுபுறத் தலைமதகு அமைத்தல் மற்றும் மணல் போக்கி கட்டும் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டுப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதே 54 ஏரிகள்மூலம் 171.70 ஹெக்டேர் நிலங்கள் கூடுதல் பாசன வசதி பெறும்வகையில் வடிவமைப்பு மாற்றப்பட்டு ரூ.4200 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீடு "நபார்டு" வங்கியின் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.679.56 இலட்சம்.

### (6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்பொருட்டு வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கோடியில் ஓர் உயர் மட்டக் கால்வாய் 27.26 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. கற்காரைப் பூசப்படாத இக்கால்வாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்குப் பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.33.81 கோடி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவுநீர்க் குட்டைகள், 29



கண்மாய்களின்கீழ் உள்ள 128 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய நன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

27.26 கி.மீ. நீளமுடைய முதன்மைக் கால்வாயில், 6.5 கி.மீ.க்கு மண் வேலை முடிவடைந்துள்ளது. மேலும் 10 கி.மீ. நீளத்திற்கு ஒரு பகுதி முடிக்கப்பட்டுள்ளது. 82 குறுக்குக் கட்டுமான பணிகளில் 22 பணிகள் முடிவடைந்துள்ளன. கிளைக் கால்வாய்க்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 130 குறுக்குக் கட்டுமானப் பணிகளில் 22 பணிகள் முடிவுற்றுள்ளன. மொத்தத்தில் 40% வேலைகள் முடிவடைந்துள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.517.35 இலட்சம்.

### (7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.18.28 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.27.38 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருனாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின்கீழ் வரும்.

இத்திட்டத்திற்கு 39.69 எக்டேர் வனத் துறை நிலம் பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மேலும் 15 எக்டேர் புறம்போக்கு நிலம் மற்றும் 100.245 எக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தவும் வேண்டியுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கியின் நிதி உதவிமூலம் நடைபெற்று வருகிறது. 25 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.1000.00 இலட்சம்

**(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் செண்பகத்தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினை ரூ.21.33 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ.34.00 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர், கங்காரமந்தல், சந்தவாசல், நாரமங்கலம், இலுப்பகுப்பம், பார்வதி சகரம், அலியாபாத், எந்துவம்பாடி கிராமங்களிலும், ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமாடுக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முன்னிப்பட்டு, பையூர், கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல், மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம், மேல்பலந்தை, அரூர், சுரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும், செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுக்கப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல்சேவுமங்கலம் கிராமங்களிலும், வந்தவாசி வட்டத்தில் அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் இந்தப் பிற்பட்ட பகுதியின் பாசன வசதிக்கான நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும்.

80 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. இப்பணி நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது.

2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.274.11 இலட்சம்.

**(9) பத்தலப்பள்ளி – மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)**

இத்திட்டமானது வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலபள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.29.55 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர் மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியாம்பட்டு, ரெட்டிமான்குப்பம், சாரங்கல், கைலாசகிரி, ஆயுதம்பட்டு, சாதம்பாக்கம், ராஜக்கால், ஆளியங்குப்பம், மால்முருங்கை,





மேல்பட்டி, குளித்திகை, சின்ன தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஓகடசி மற்றும் சிட்லாத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 61 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப்பெறும். இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

மண் அணை, உபரி நீர் வழிந்தோடி, ஆற்று மதகு, அபிவிருத்தி அணைக்கட்டு மற்றும் நீர்த்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 36.98 எக்டேர் பட்டா நிலமும், 17.81 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 11.32 எக்டேர் புறம்போக்கு நிலமும் பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. நபார்டு வங்கியின் கடனுதவி பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.1300.00 இலட்சம்.

**(10) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

இத்திட்டமானது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு அரசு ரூ.35.46 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின் கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடி கால்வாய்களின்மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, வளையம்பட்டு, தண்டப்பட்டு, கரையமங்கலம், வடங்குப்பம், மேல்வணக்கம்பாடி, மேல்புழுதியூர், பெரும்பட்டம், பக்கிரிபாளையம், துக்கப்பேட்டை, மேமலூர், கங்காரவரன், சென்ன சமுத்திரம், பொன்னேரி, சின்னசமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர் மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரியஏரி, உண்ணாமலைபுரம், புதுச்செங்கம், அன்வர்பாத், ஆலப்புதூர், தாமரைப்பாக்கம், மற்றும் அரிதாரை மங்கலம் கிராமங்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர் மங்கலம்,

கரியாந்தல், ஆனந்தாள், மேல்புஞ்சை, வாசுதேவன்பட்டு மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும், போளூர் வட்டத்தில் கடலாடி, குணத்தூர், கீழத்தூர் கிராமங்களிலும் மொத்தம் 2528 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப்பெறும்.

மண் அணை, கற்கட்டு நீர் வழிந்தோடி, ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 190.42 எக்டேர் புன்செய் பட்டா நிலமும், 103.75 எக்டேர் புறம்போக்கு நிலமும், 13.34 எக்டேர் வனத் துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டு வனத் துறை நிலம், பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் புறம்போக்கு நிலம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய நபார்டு வங்கி முன்வந்துள்ளது.

இப்பணிக்கான திருத்திய மதிப்பீடு ரூ.43.50 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ. 1700.00 இலட்சம்

**(11) வரட்டாறு – வள்ளி மதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)**

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே வரட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.19.20 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.35.95 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளி மதுரை, தத்தவளசி, சோமநாதன், கீரைப்பட்டி, குடிமியாம்பட்டி, அச்சல்வாடி மற்றும் சோமநாதம் புதூர் கிராமங்களில் கீரைப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடயாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின்கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்கு பாசன உறுதி மற்றும் 1047 எக்டேர் ஒரு போக புன்செய் பயிர் செய்வதற்கான பாசன வசதியும் கிடைக்கப்பெறும்.

இத்திட்டமானது மண் அணை, உபரி நீர்ப்போக்கி, தலை மதகுகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.



இத்திட்டத்திற்கு 94.31 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 24.87 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 23.82 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. மைய அரசு 22–12–2000ல் வனத் துறை நில மாற்றத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. பணிகளுக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நபார்டு வங்கி கடனுதவி வழங்கியுள்ளது. 40 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.1500.00 இலட்சம்.

**(12) கால்வாய் சடையனேரித் திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)**

இத்திட்டத்தின் பணிகளுக்காக அரசு ரூ.12.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஏற்கெனவேயுள்ள கால்வாய் சடையனேரி வாய்க்காலை கால்வாய் ஏரி வரை அகலப்படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதல், சடையனேரி நீட்டிப்பு வாய்க்கால் வெட்டுதல், கருமேனியாற்றிலிருந்து வைரவன்தருவை வரையில் ஏற்கெனவேயுள்ள முதலூர் ஓடையை மேம்படுத்துதல் மற்றும் வைரவன்தருவை முதல் புத்தன்தருவை வரையில் ஓர் இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தின்மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு சடையனேரி கால்வாயின்கீழுள்ள 12 ஏரிகள் மற்றும் தஞ்சைக் குளத்தின்கீழ் 314 எக்டேர் நிலங்களுக்கு நீர் வழங்கவும், இரு ஏரிகளை நிரப்புவதன்மூலம் 4 கிராமங்களில் உள்ள 634 கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிப்பதால் 875 எக்டேர் தென்னந்தோப்புகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் கால்வாய், வெள்ளூர், உடையார்குளம், வெள்ளமடம், பிடனேரி, எழுவாரிமுக்கி, மங்கைமொழி, சாத்தான்குளம், சாஸ்தாவிநல்லூர், குமடிக்கோட்டை, திருப்பணிபுத்தன்தருவை, பாட்டக்குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன்பெறும்.

இத்திட்டம் மாநில நிதித் தொகுப்பின்கீழ் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சில கூடுதல் வேலைகள் சேர்க்கப்பட்டதால் மதிப்பீடு ரூ.1435 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது. திருத்திய மதிப்பீடு

ரூ.143.5 இலட்சத்திற்கு 30-05-2003 அன்று ஒப்பளிக்கப்பட்டது. கூடுதல் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம்.

**(13) நாராயணக் காவேரி வாய்க்காலைப் புனரமைத்துச் சீர் செய்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள நாராயணக் காவேரி வாய்க்கால் மற்றும் அதன்கீழ் உள்ள சாயல்குடி மற்றும் 33 கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் மண்டல மாணிக்கம் அணைக்கட்டு புனரமைத்து சீர்செய்ய ரூ.5.75 கோடி மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கமுதி வட்டத்திலுள்ள மண்டலமாணிக்கம், கமுதி, மண்டல்நாடு, கே.நெடுங்குளம், சீமானேந்தல், குண்டுக்குளம், கே.வேப்பங்குளம், ஓகரிசல்குளம், கோவிலங்குளம், கூம்பூதி, எம்புதுக்குளம் மற்றும் வில்லாநேந்தல் கிராமங்களிலும், திருச்சுழி வட்டத்திலுள்ள கல்லகரி கிராமத்திலும், கடலாடி வட்டத்திலுள்ள சாயல்குடி, எம்.கரிசல்குளம், என்.கரிசல்குளம், எ.உசிலங்குளம், எஸ்.வாகைகுளம், பிள்ளையார்குளம், எஸ்.கீரண்டை மற்றும் கீழஅல்லிக்குளம் ஆகிய கிராமங்களிலும் 1942.97 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

90 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.39.12 இலட்சம்.

**(14) உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கானக்கிளியநல்லூர் உள்கிடைக் கிராமமான சிறுவயலூர் அருகே உப்பு ஓடை நந்தியாற்றுடன் கலக்கும் இடத்திற்கு மேலே, ஓடையின் குறுக்கே ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் லால்குடி வட்டம், கானக்கிளியநல்லூர் கிராமத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.



மண் அணை, உபரி நீர்ப் போக்கி, மூன்று பாசன மதகுகள் மற்றும் மூன்று கால்வாய்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதுவரை 75 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.53.94 இலட்சம்.

**(15) முதலைமுத்துவாரியின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சென்னம்பட்டி கிராமத்தில் முதலைமுத்துவாரியின் குறுக்கே ரூ.2.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சென்னம்பட்டி, வல்லம்புதூர் கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கரும்பூண்டி கிராமம் இவற்றில் 110 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 9 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 364 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

2300 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, தடையில்லா நீர்வழிந்தோடி மற்றும் 4 மதகுகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதுவரை 81 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.129.09 இலட்சம்.

**(16) கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏற்கெனவே உள்ள கடானா அணையின் வலதுபுறத்தில் ரூ.18.82 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவாக்க நீர்த்தேக்கத்தை அமைக்க அரசு அனுமதி அளித்தது.

இத்திட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலம், மேல் ஆம்பூர், கீழ் ஆம்பூர், மன்னார்கோவில் ஆகிய கிராமங்களில் 511 எக்டேர்

நிலங்களுக்குப் பாசன உறுதியும், 187 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 67 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

900 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, ஒரு பாசனத் தலை மதகு, 18.71 கி.மீ. நீளத்தில் 3 கிளைக் கால்வாய்களுடன் பிரதான கால்வாய், உபரி நீர்வழிந்தோடியிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு நீர்வழி ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டப் பணிகளில் 90 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடனுதவி செய்துள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.10.00 இலட்சம்.

**(17) நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கறியாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்க அரசு அனுமதி அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.7.20 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னிவாடி, ஆலாந்தூரான்பட்டி, வீரப்புடையான்பட்டி மற்றும் தெட்டுபட்டி கிராமங்களிலுள்ள 148 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி கிடைக்கும்.

620 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, 30 அடி நீள அதிவேக நீர்ப்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 4120 மீட்டர் நீளம் கண்ணி வாய்க்கால் இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

மண் அணைப் பணி 20 சதவீதம் முடிவடைந்துள்ளது. உபரிநீர்ப் போக்கி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப் படுத்துவதற்கான தொகை வழங்கப்பட வேண்டும்.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.293.33 இலட்சம்.



**(18) இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உபநதிகளான இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடை இவற்றின் குறுக்கே ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.5.65 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் 107.65 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

480 மீ. நீளத்திற்கு மண்கரை, இராமக்கால் ஓடையில் உள்ள உபரிநீர் போக்கியுடன் இணைக்க உபரிநீர்க் கால்வாயுடன் ஓர் உபரிநீர்ப் போக்கி, தலைமதகு, ஆற்று நீர்ப்போக்கி மதகு மற்றும் கண்ணி வாய்க்கால்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

நிலம் கையகப்படுத்தல் பணிக்கான கணக்குகளைச் சரி செய்யும்முன் பணி மேற்கொள்ள வேண்டாமென உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. 0.29.30 ஹெக்டேர் வன நிலங்களைக் கையகப்படுத்த கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.329.37 இலட்சம்.

**(19) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)**

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ.31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.42.70 கோடிக்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லான்பாளையம், ஆலம்பாளையம், பொறாமியம் தூரம்பாடி, மூலனூர் மற்றும் பொன்னிவாடி கிராமங்களில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

3450 மீ. நீளம் மண்கரை, தடையிலா நீர்வழிந்தோடி, தலைமதகு மற்றும் ஆற்று மதகு இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

குடியிருப்புக் கட்டடங்கள், உபகோட்ட அலுவலகக் கட்டடப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. மண் அணை அமைத்தல் மற்றும் மிகை நீர்வழிந்தோடி பணிகள் நடைபெற்று வருகின்றன.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.1787.73 இலட்சம்.

**(20) ஆண்டி ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே ரூ.1.21 கோடி மதிப்பீட்டில் ஓர் அணை கட்ட அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள கல்லகம் கிராமம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பூண்டி கிராமம் இவற்றில் 82 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதியும் 84 எக்டேர் புன்செய் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

36 மீட்டர் நீளம் கல்லணை, தலைமதகு, 3350 மீட்டர் நீளம் குறுக்கு கட்டுமானப் பணிகளுடன் பிரதான வாய்க்கால் (இடதுபுறம்) மற்றும் 700 மீட்டர் நீளம் வெள்ளத்தடுப்புக் கரை ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

**(21) சாஸ்தாகோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் சாஸ்தாகோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே ரூபாய் 7.97 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் இராஜபாளையம் வட்டத்திலுள்ள வடக்கு தேவதானம், தெற்கு தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், கோவிலூர், நல்லமங்கலம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்களில் 13 கண்மாய்களின்மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் 1016 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 184 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்கிறது.



1600 மீட்டர் நீள மண்கரை, தடையிலா நீர்வழிந்தோடி, ஆற்று மதகு மற்றும் உபரிநீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

90 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடனுதவி அளித்துள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.0.01 இலட்சம்.

**(22) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம் விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள கண்ணாடிகுப்பம், பெரியன்குப்பம், சானார்குப்பம், மேல்கிருஷ்ணாபுரம், ஆம்பூர், சாமளாபுரம், கருண்வரம், வடபுதுப்பட்டு, கீழ்முருகி, தொட்டாலம் மடமூர் மற்றும் காட்டாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 431 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

320 மீட்டர் நீளம் மண் அணை, 40 மீட்டர் நீள உபரிநீர்ப் போக்கி, ஆற்று மதகு ஆகியன இப்பணியின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 35.82 எக்டேர் வனத் துறை நிலம் தேவைப்படுகிறது.

வன நிலம் கையகப்படுத்தும் பணிக்கு மத்திய அரசின் முதல் நிலை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கி உதவி கிடைத்த பின்னர் பணி தொடங்கப்படும்.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.450.00 இலட்சம்.

**(23) சிறுமலையாற்றின் குறுக்கே ஒரு புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின் குறுக்கே ரூ.4.91 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.8.87 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒருதட்டு கிராமத்தில் 128 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

975 மீட்டர் மண்கரை, 40 மீட்டர் நீளம் உபரிநீர்ப் போக்கி, தலை மதகு மற்றும் 60 மீ. நீளம் உபரிநீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும். இதுவரை மண் அணை 500 மீ. மதகு மற்றும் உபரிநீர்க் கால்வாய்ப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் 50 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2004-2005 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.254.62 இலட்சமாகும்.

**(24) குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல் (கரூர் மாவட்டம்)**

கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் பாசன வசதி அளிக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன்புதூர் கிராமங்களில் 440 எக்டேர் நன்செய் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 116 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

53.50 கி.மீ. நீளமுள்ள வலது பிரதான கால்வாயைப் புனரமைத்து மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள குறுக்குக் கட்டுமானப் பணிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் ஐந்து உள்வரத்து மதகுகள் கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் பணிகள் 80 விழுக்காடு முடிவடைந்துள்ளன. எஞ்சியப் பணிகள் நடைபெறுகின்றன.

**(25) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்**

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில் ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.





இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டம், தெம்புச்சேரி, டி.சிந்தளச்சேரி, பண்ணைபுரம், கோம்பை, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, தேவாரம், லட்சுமிநாயக்கன்பட்டி, போத்தைபுரம், மீனாட்சிபுரம், கூடலூர் மற்றும் உத்தமபாளையம் கிராமங்களில் 511.16 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகு கட்டுதல், 38.90 கி.மீ. நீளமுள்ள கால்வாய் வெட்டுதல் மற்றும் 4 புதிய ஏரிகள் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இப்பணி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 3 பகுதிகளிலும் பணி நடைபெற்று வருகிறது.

14 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. நபார்டு வங்கியின் உதவியுடன் மீதமுள்ள பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2004-2005-க்கான நிதி ஒதுக்கீடு ரூ.1000.00 இலட்சமாகும்.

**(26) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத் துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குரி கிராமத்தின் அருகே மாம்பழத் துறையாற்றின் குறுக்கே ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம் வட்டம், கல்குளம் மற்றும் வில்லுகுரி கிராமங்களில் 3.57 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 25.82 எக்டேர் ஒருபோக பயிர் மற்றும் 18.14 எக்டேர் இருபோக பயிர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதி மற்றும் 308.98 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

295 மீ. நீளம் மண் அணை, 50 மீ. நீளம் உபரிநீர் வழிந்தோடி, மதகு கட்டுதல் மற்றும் வலது மற்றும் இடதுபுற கால்வாய்கள் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

2004-2005 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.300.00 இலட்சம்.

[2004 ஜூலை 27

**(27) நிலையூர்க் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)**

மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வலையன்குளம், கம்பிக்குடி கண்மாய் தொடர் குளங்களுக்கு நீர் வழங்க ரூ.8.94 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி மேல் ஓடையிலிருந்து நிலையூர்க் கால்வாய் நீட்டிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் மதுரை தெற்கு வட்டம், வலையபட்டி, தோதியப்பட்டி, சின்ன உலகானி, வளையன்குளம், நெடுமதுரை, குடகோவில், வெள்ளாரகுளம், பெரிய ஆலங்குளம், சம்பாகுளம், கொம்பாடி, அய்யம்பட்டி, எலியார்பட்டி, மொச்சிபட்டி, பாறைபட்டி, புளிச்சங்குளம், ஆனைக்குளம், சங்குமடை, சல்லாங்குரினி, நல்லூர், வடக்குபீரிக்குளம், பாப்பானோடை, இராமன்குளம், கலுவன்குளம், விரதனூர், முத்தான்குளம், பனைக்குளம், எம்.ஆலங்குளம், நெடுங்குளம், சாத்தான்குளம், சகடதட்டி, சின்னஉடப்பு, குதிரைகுட்டி, கோடல்செங்குளம், கொசரன்குண்டு, உடைக்குளம், கொசரபட்டி மற்றும் கொன்தாகுளம் கிராமங்களிலும், திருமங்கலம் வட்டம், சின்ன உலகானி, விருசன்குளம், விடாதகுளம் மற்றும் கீலஉப்பலிகுண்டு கிராமங்களிலும், கரியபட்டி வட்டம், கடம்பன்குளம், ஆவியூர், பூலப்பட்டி, மாங்குளம், குராதி, உடைக்குளம், அரசகுளம், இராயர்பட்டி, கம்பிகுடி, பாப்பன்குளம், எஸ்.ஆலங்குளம், ஆன்மால்பெருக்கி, சத்திரம்பூலம்குளம், பண்ணை வளத்தான்பட்டி, வெற்றிலைமுறிச்சான்பட்டி மற்றும் அல்லாலப்பேரி கிராமங்களிலும், மானாமதுரை வட்டம், கன்சரன்குளம், வலையன்குளம், சூரம்பட்டி, திரலியார், முக்குடி, இலந்தைகுளம், வதுரன்குளம் கரன்கலகுடி, இராக்கன்குளம், செங்குளம், வடக்கூர், பரையன்குளம் மற்றும் உசலன்குளம் கிராமங்களிலுள்ள 2686.53 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், மற்றும் 1126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகுடன்கூடிய ரெகுலேட்டர், 78.50 கி.மீ. நீளம் பிரதானக் கால்வாய் வெட்டுதல், குறுக்குக் கட்டுமானங்கள் உட்பட 3.00 கி.மீ. நீளம் கிளைக் கால்வாய் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

72 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ.19.49 கோடிக்குத் திருத்திய மதிப்பீட்டுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நபார்டு வங்கி கடனுதவி தர ஒப்புதல் அளித்துள்ளது.

2004-2005 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.248.28 இலட்சம்.

2004 ஜூலை 27]

**(28) பாலையாறு மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம் மற்றும் சிவகிரி கிராமத்தின் அருகே பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே ரூ.39.20 கோடி மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின்மூலம் சிவகிரி வட்டம், இராயகிரி, சிவகிரி, தென்மலை, திருமேலபுரம், நாரணபுரம், கோட்டையார், சிந்தாமணிப்பேரி, கூடலூர் மற்றும் இராமநாதபுரம் கிராமங்களிலும், சங்கரன்கோயில் வட்டம், பனையூர், வயலி, மரதோணி, திருவேங்கடம், சத்திரபட்டி மற்றும் கரிசாத்தான் கிராமங்களிலும் 971.95 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 595.18 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

மண்அணை, நீர்வழிந்தோடி, இரண்டு மதகுகள் கட்டுதல், இராசிங்க பெரியாறு மற்றும் குலசேகர பெரியாறு பகுதிகளாகப் பிரிக்கும் சுவர் கட்டுதல் மற்றும் கண்மாய்கள், அணைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு .57 ஹெக்டேர் வன நிலம் மாற்றப்பட வேண்டி உள்ளது. இதற்காக மத்திய அரசு அணுகப்படவுள்ளது. திட்ட வடிவமைப்புப் பணி முடிவடைந்துள்ளது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.700.00 இலட்சம்.

**(29) மிருகண்டாநதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம் கிராமம் அருகே மிருகண்டாநதியின் குறுக்கே ரூ.1679 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின்மூலம் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல் சோழங்குப்பம், கங்காவரம், சேனேந்தல், நல்லான் பிள்ளைபெற்றான், கங்கமலதேவி, கேட்டவரம்பாளையம், சிறுவல்லூர், ஏர்ணாமங்கலம் மற்றும் சோளவரம் கிராமங்களிலுள்ள 778.05 எக்டேர்

[2004 ஜூலை 27

நிலங்களுக்குப் பாசன உறுதியும், 81.10 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

670 மீ. நீளம் மண் அணை, கட்டுப்பாடில்லா உபரிநீர் வழிந்தோடி, தலைப்பு மதகு மற்றும் ஆற்று மதகு கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 80.82 எக்டேர் பட்டா நிலமும் மற்றும் 23.37 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்தப்பட உள்ளன.

தனியார் நிலம் கையகப்படுத்தும் பணிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. நபார்டு வங்கி கடனுதவிமூலம் இப்பணி நடைபெற்று வருகிறது.

2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.1078.00 இலட்சம்.

**(30) கீழ்பவானி பாசன அமைப்பைப் புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்–மதிப்பீடு ரூ.55.00 கோடி**

கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலத்தினைச் சேர்க்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

1999-2000-ல் ரூ.6.84 கோடி செலவில் கீழ்பவானி திட்டக் கால்வாய்களில் 313 கி.மீ. நீளத்திற்கு தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது. 2000-2001-ல் ரூ.6.27 கோடி செலவில் கீழ்பவானி திட்டக் கால்வாய்களில் தூர்வரும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 2001-2002 நிதியாண்டிற்கு ரூ.1.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தமுள்ள 800 கி.மீ. நிலத்தில் 280 கி.மீ. நீளம் தூர்வாரும் பணி முடிவடைந்துள்ளது.

**(31) மாசுபட்ட நொய்யல் ஒரத்துப்பாளையம் நீரைத் திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல் – மதிப்பீடு ரூ.35 இலட்சம்**

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் இதுசம்பந்தமாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளதால், பணி தொடங்கப்பட இயலவில்லை.



2004 ஜூலை 27]

**(32) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டுப் புனரமைத்தல் – மதிப்பீடு ரூ.33 இலட்சம்**

65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(33) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல் – மதிப்பீடு ரூ.50 இலட்சம்**

40 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சியப் பணிகள் நடைபெறுகின்றன.

**1999–2000 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்**

*(1)* **ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ளநீரைத் திருப்பிவிடும் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)**

அரசு சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரைத் திருப்பிவிடும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள எம்.கரிசல்குளம், சின்னக்கண்ணனூர், ராஜகம்பீரம், கிளங்காட்டூர், அன்னவாசல் மற்றும் அரிமண்டபம் ஆகிய கிராமங்கள் மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள வேலனேரி, கள்ளிகுடி மற்றும் பிடாரிசேரி கிராமங்களில் 1039.61 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 8.25 எக்டேர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

வைகையாற்றில் எல்.எஸ்.32.050 கி.மீட்டரில் தலைப்பு ரெகுலேட்டர் கட்டுதல், வலது பிரதான கால்வாய் எல்.எஸ்.32.050 மீ. முதல் 33,900 மீ. வரை அடித்தளம் மற்றும் பக்கங்களுக்கு அகவுறை செய்தல், எல்.எஸ்.33,885 மீட்டரில் ரெகுலேட்டர் கட்டுதல் மற்றும் வலது பிரதானக் கால்வாய் எல்.எஸ்.33,870 மீட்டரில் தலைப்பு மதகு கட்டுதல், வழங்கு வாய்க்கால்

2.20 கி.மீ. வெட்டுதல் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

6.5 சதவீத பணிகள் முடிவடைந்தன. சாலைப் பாலம் மற்றும் இரயில்வேப் பாலம் வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## 2001-2002 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரம்

### (பகுதி II திட்டங்கள்)

(1) சிறுபாசனத் திட்டங்கள் :

| வ. எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம், பென்னகரம் தாலுகா, ராமகொண்டஹள்ளி கிராமம் அருகே மத்தளபள்ளம் ஆற்றின் குறுக்கே ஒரு கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.141.5 இலட்சம்<br>பயனடையும் பாசனப் பரப்பு<br>முதல் பயிர்– 700 ஏக்கர்<br>இரண்டாவது பயிர் – 400 ஏக்கர் | பாசன நில விவரப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. நபார்டு வங்கி கடனுதவி பெற கருத்துரு அனுப்பப் பட்டுள்ளது. |
| 2. | கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுகா, பெரும்பட்டு கிராமம் அருகில் பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு ரூ.162 இலட்சம் புதிய பாசன பரப்பு 460 ஏக்கர் | 57 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டன ரூ.170.45 இலட்சத்திற்கு ஹட்கோ நிதி உதவி செய்துள்ளது. |
| 3. | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுகா, படத்தலார் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள காசிம்பூ கண்மாய் வரை 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய வழங்கு கால்வாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.700 இலட்சம்<br>ஆயக்கட்டு இடைவெளி – 840.74 ஏக்கர்<br>புதிய ஆயக்கட்டு – 500 ஏக்கர் | பாசன நில விவரப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. நபார்டு வங்கி கடனுதவி பெற கருத்துரு அனுப்பப் பட்டுள்ளது. |
| 4. | கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, கடஞ்சேரி (புதுக்கடை) இறவைப் பாசனத் திட்டம் | மதிப்பீடு ரூ.219 இலட்சம்.<br>புதிய ஆயக்கட்டு – 572.50 ஏக்கர் | இத்திட்டம் கைவிடப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது. |
| 5. | தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகா, தெப்பம்பட்டி கிராமம் வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.119 இலட்சம் புதிய ஆயக்கட்டு – 104.28 ஏக்கர் | பணி முடிவடைந்தது. |
| (2) சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள் | | | |
| (1) | வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாச்சூர் கிராமத்தைச் சார்ந்த பாயப்ப நாயக்கன் பேட்டையில் குட்டை அமைத்தல் | மதிப்பீடு – ரூ.12.00 இலட்சம்<br>பயனடையும் புதிய பாசன பரப்பு – 19.88 ஏக்கர்<br>கூடுதல் உற்பத்தி – 17.36 மெ.டன் | பணி முடிவடைந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (2) | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சேமபள்ளி கிராமத்தில் சர்வே எண் 19-ல் மலை ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல் | மதிப்பீடு – ரூ.13.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 33.39 ஏக்கர் இருபோகம் கூடுதல் உற்பத்தி - 30.88 மெ.டன் | பணி முடிவடைந்தது. |
| (3) | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், உனன்தங்கல் கிராமத்தில் சர்வே எண் 123-ல் குட்டை அமைத்தல். | மதிப்பீடு – ரூ.25.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37.35 ஏக்கர் பாசன உறுதி – 19.19 ஏக்கர் கூடுதல் உற்பத்தி – 21.07 மெடன் | திட்டம் கைவிடப்பட்டது |
| (4) | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், பெரிய பனமுட்லு கிராமத்தில் புது ஏரியினைப் புனரமைத்தல் | மதிப்பீடு – ரூ.15.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 65.10 ஏக்கர் கூடுதல் உற்பத்தி – 32.55 மெடன் | பணி முடிவடைந்தது. |
| (5) | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், பிள்ளைப்பாளையம் கிராமத்தில் சர்வே எண் 724-ல் புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீடு – ரூ.23.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 51.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி – 23.93 மெடன் | பணி முடிவடைந்தது. |



| | | | |
|---|---|---|---|
| (6) | திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில் முல்லைப்பாடி கால்வாய் மூலம் முல்லைப்பாடி ஏரிக்கு நீர் வழங்க ஆகாச குமுளியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு – ரூ.32.00 இலட்சம் பாசன உறுதி – 58.95 ஏக்கர், பழைய பாசனப்பரப்பு – 244.74, ஏக்கர் இடைவெளி கூடுதல் உற்பத்தி – 342.42 மெடன் | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| (7) | கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம், மேல் முனையனூர் கிராமத்தில் வாரியின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல். | மதிப்பீடு – ரூ.13.00 இலட்சம் பாசன உறுதி – 103.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி – 44.00 மெடன் | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| (8) | புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம், ராஜகிரி கிராமத்தில் நல்ல மங்கான் குளம் மற்றும் நான்கு ஏரிகளுக்கு நீர் வழங்க கோரையாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | மதிப்பீடு – ரூ.47.00 இலட்சம் பாசன உறுதி – 87.88 ஏக்கர் பயனடையும் புதிய பாசன பரப்பு – 33.11 ஏக்கர் பாசன இடைவெளி – 87.29+7.83 ஏக்கர் கூடுதல் உற்பத்தி – 109.06 மெடன் | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| (9) | திண்டுக்கல் மாவட்டம், வேடசெந்தூர் வட்டம், சுக்கம்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்தல் | மதிப்பீடு – ரூ.38.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி – 43.42 மெடன் | 2004-05-ல் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். |

[2004 ஜூலை 27

| | | | |
|---|---|---|---|
| (10) | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வாடிப்பாடி கிராமத்தில் சர்வே எண் 73, 74 மற்றும் 75-ல் புதிய குளம் அமைத்தல் | மதிப்பீடு – ரூ.14.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37.50 ஏக்கர் (இருபோகம்) கூடுதல் உற்பத்தி – 35.82 மெடன் | 2004-05-ல் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். |

**(3) கடலரிப்புத் தடுப்புத் திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வட சென்னையில் கடல் ஓரப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்டுதல் | மதிப்பீடு ரூ.283.00 இலட்சம் | பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. |
| 2. | திருவொற்றியூர் முதல் தாளங்குப்பம் வரை 2.83 கி.மீட்டரில் எஞ்சியுள்ள கரைப் பாதுகாப்பு | மதிப்பீடு ரூ.1057.39 இலட்சம் | 40 சதவீத பணிகள் முடிவுற்றன. |

**2003–2004 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள்**

**பகுதி II திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் உள்ள பாலாற்றிலிருந்து ஆத்தூர் வடபாதிக்கு நீர் வழங்கு கால்வாயின் மண் கரையை கற்சுவராக மாற்றி அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.120.00 இலட்சம்<br>பயன்கள்<br>பாசன உறுதி 398.13 ஏக்கர்<br>விடுபட்ட பரப்பு 293.65 ஏக்கர்<br>20 சதவீத பணிகள் முடிவுற்றன. |



2004 ஜூலை 27]

| | | |
|---|---|---|
| 2. | சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆனைமரத்துப் பட்டி கிராமத்தில் ச.எண் 18-ல் சாம்பார் பள்ளம் ஓடையின் குறுக்கே குட்டை அமைத்து பழுதான சொரக்காப்பட்டி ஏரியை குட்டையாக மாற்றியமைத்து சாம்பார் பள்ளம் குட்டையின் உபரி நீரை சொரக்காப்பட்டி குட்டைக்கு வழங்க ஒரு இணைப்பு ஏற்படுத்தி பாசன வசதி செய்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ.125.00 இலட்சம்<br>பயன்கள்<br>புதிய பாசன பரப்பு 450.32 ஏக்கர்<br>பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |
| 3. | தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் ஜி.கல்லுப்பட்டிக்கு அருகில் பச்சிலைநாச்சியம்மன் ஓடையின் குறுக்கே (மான்துறை ஓடை) புதிய ஏரி அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.127.00 இலட்சம்<br>பயன்கள்<br>புதிய பாசன பரப்பு 160.00 ஏக்கர்<br>வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு வருகிறது. |
| 4. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவலாபுரம் கிராமத்தில் பெரிய ஊத்து ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.202.00 இலட்சம்<br>பயன்கள்<br>புதிய பாசன பரப்பு 117.46 ஏக்கர் |

[2004 ஜூலை 27

**சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகாவில் பாப்பான்குளம் மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்க சூரையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.70.00 இலட்சம்<br>பயன்கள்<br>பாசன உறுதி 86.64 ஏக்கர்<br>விடுபட்ட பரப்பு 98.34 ஏக்கர்<br>ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டுள்ளது. |
| 2. | தருமபுரி மாவட்டம் பொன்னகரம் தாலுகா வட்டுவானஹள்ளி கிராமத்தில் உள்ள கோடுபட்டி அருகில் புங்கம் பள்ளத்தின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.74.00 இலட்சம்<br>பயன்கள்<br>புதிய பாசன பரப்பு 86.05 ஏக்கர்<br>ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டுள்ளது. |
| 3. | திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் பென்னாத்தூர் கிராமத்தில் புளியன்குளம் வழங்கு வாய்க்கால் மேம்படுத்துதல் மற்றும் புளியன்குளத்தில் இருந்து பென்னாத்தூர் ஏரிக்குப் புதிய வாய்க்கால் அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.36.00 இலட்சம்<br>பயன்கள்<br>பாசன உறுதி 102.47 ஏக்கர்<br>விடுபட்ட பரப்பு 83.58 ஏக்கர்<br>ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டுள்ளது. |
| 4. | தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டம் பாலகோம்பை கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.54.00 இலட்சம்<br>பயன்கள்<br>பாசன உறுதி 78.64 ஏக்கர்<br>விடுபட்ட பாசன பரப்பு 63.35 ஏக்கர்<br>ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டுள்ளது. |



2004 ஜூலை 27]

2004-2005 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் ரூ.930.00 இலட்சங்களுக்கு 1141 ஹெக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி அளிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

## 2004–2005 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் புதிய திட்டங்கள்

### பகுதி II திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | விவரம் |
|---|---|---|
| சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள் | | |
| 1. | திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் வெரியப்பூர் கிராமம் புல எண் 79 மற்றும் 80-இல் புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.12.00 இலட்சம்<br>பயன்கள்:<br>புதிய பாசன பரப்பு 37.50 ஏக்கர் (இருபோகம்) |
| 2. | ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலம் வட்டம், சிக்கரசம் பாளையம் கிராமத்தில் புல எண் 408-இல் புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.10.00 இலட்சம்<br>பயன்கள்:<br>பாசன உறுதி – 37.50 ஏக்கர் (இருபோகம்)<br>புதிய பாசன பரப்பு 18.65 ஏக்கர் (இருபோகம்) |
| 3. | தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி வட்டம், தர்மத்துப் பட்டி கிராமத்தின் அருகில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.34.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.13.00 இலட்சம்<br>பயன்கள்:<br>பாசன உறுதி – 53.62 ஏக்கர் (முதல் போகம்)<br>20.30 ஏக்கர் (இரண்டாம் போகம்)<br>புதிய பாசன பரப்பு 20.30 ஏக்கர் |

[2004 ஜூலை 27

| | | |
|---|---|---|
| 4. | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி புலிமான்கோம்பை கிராமத்தில் கோட்டோடைப்பட்டி அருகே ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.74.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.30.00 இலட்சம்<br>பயன்கள்:<br>பாசன உறுதி - 53.48 ஏக்கர்<br>புதிய பாசன பரப்பு 124.62 ஏக்கர் |
| 5. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் சீப்பாலக்கோட்டை கிராமம், ஊஞ்சாலம்மன் கோவில் அருகே ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.60.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.25.00 இலட்சம்<br>பயன்கள்:<br>புதிய பாசன பரப்பு 39.04 ஏக்கர் (இரு போகம்) |
| 6. | தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டம். அம்மாப்பட்டி கிராமம் அருகில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.10.00 இலட்சம்<br>பயன்கள்:<br>புதிய பாசன பரப்பு 38.00 ஏக்கர் (இரு போகம்) |
| 7. | திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில் உள்ள நாகையநல்லூர் மற்றும் பிடாரமங்கலம் குளங்களுக்கு கரைப் போட்டான் ஆற்றிலிருந்து தண்ணீர் அளித்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.21.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.10.00 இலட்சம்<br>பயன்கள்:<br>பாசன உறுதி - 300.90 ஏக்கர்<br>விடுப்பட்ட பரப்பு 488.98 ஏக்கர் |



2004 ஜூலை 27]

| | | |
|---|---|---|
| **சிறுபாசனத் திட்டங்கள்** | | |
| 8. | சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கனவாய் புதூர் கிராமம், கே. மோரூர் அருகே பெரும் பள்ளம் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.495.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.50.00 இலட்சம்<br>பயன்கள்:<br>புதிய பாசன பரப்பு 210 ஏக்கர் |
| 9 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் மகாதேவி மற்றும் தொடர் குளங்களுக்கு நீர் வழங்க புளியன் சோலை அருகே அய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீட்டுத் தொகை ரூ.184.00 இலட்சம்<br>2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.50.00 இலட்சம்<br>பயன்கள்:<br>பாசன உறுதி — 858.51 ஏக்கர்<br>விடுப்பட்ட பரப்பு 539.97 ஏக்கர் |

## நபார்டு திட்டங்கள்

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நபார்டு வங்கியின் உதவியோடு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | பயன்பெறும் ஆயக்கட்டு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| **செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்** | | | |
| 1. | திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமத்தில் செய்யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 4226.70 | 971.00 |

| | | | |
|---|---|---|---|
| 2. | தேனி மாவட்டம், உத்தம பாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் பணி | 2645.17 | 2305.00 |
| 3. | இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமத்தில் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | 4205.91 | 3598.00 |
| **புதிய சிறு பாசன திட்டங்கள்** | | | |
| 4 | மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், மல்லாபுரம் கிராமத்தில் அய்யனார் ஓடையின் குறுக்கே புதிய ஏரியமைத்தல் | 353.73 | 293.00 |
| 5 | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், இடையஞ்சாவடி கிராமம் கொசஸ் தலையாற்றின் இடதுபுறம் உள்ள தரை அணையை மறு கட்டுமானம் செய்தல் | 253.06 | 272.00 |
| 6. | தூத்துக்குடி மாவட்டம், மருதூர் மேலக்காலின் கொள்ளளவை அதிகப்படுத்தி மருதூர் அணைக்கட்டு கால்வாய் ஏரிக்கு நீர் வழங்குதல் | 952.73 | 3898.00 |
| 7. | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பொட்டல் கிராமத்தில் வண்டல் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 614.34 | 976.00 |



| | | | |
|---|---|---|---|
| 8. | திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருகுறுங்குடி கிராமத்தில் திருகுரங்குடி பெரிய குளத்தை மேம்படுத்துதல் | 102.78 | 335.00 |
| 9. | கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ள பாசி முத்தான் ஓடையின் எல்.எஸ். 27 கி.மீ. -இல் உள்ள கதவு எண் 2-ஐ மறு கட்டுமானம் செய்தல் மற்றும் அதன் கிளைக் கால்வாய் பழுதுபார்த்தல் | 264.92 | 1585.00 |
| **புதிய சிறப்பு சிறுப் பாசன திட்டங்கள்** | | | |
| 10. | திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், கங்கை கொண்டான் கிராமத்தில் ராஜபதி குக்கிராமத்தில் புதிய குளம் அமைத்தல் | 47.43 | 63.00 |
| 11. | தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மற்றும் ஊத்தங்கரை வட்டம், கப்பல்வாடி அணைக் கட்டிலிருந்து வழங்கு கால்வாய் வெட்டிச் சென்று நாயக்கன் ஏரி மற்றும் சோளைன்குட்டை ஏரி மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்குதல் | 85.31 | 82.00 |
| 12. | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், துறையூர் கிராமத்தின் அருகே புதிய குளம் அமைத்தல் | 29.41 | 33.00 |

| | | | |
|---|---|---|---|
| 13. | தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், பொதியம் பள்ளம் அணைக் கட்டை புனரமைத்து மேம்படுத்தி 18 ஏரிகளுக்கு நீர் வழங்குதல் | 86.38 | 242.00 |
| 14. | சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம் சருகுனியாற்றின் குறுக்கே அணைக்கட்டி வெற்றி ஆலங்குளம் மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்குதல் | 49.61 | 196.00 |
| 15. | இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், சருகுனியாற்றின் குறுக்கே அணை கட்டி, வெள்ளரெந்தல், திருத்தேர்வளை, அய்யன்குடி, சேந்தமங்கலம் ஏரிகளுக்கு நீர் வழங்குதல் | 39.61 | 360.00 |
| 16. | காஞ்சிபுரம் மாவட்டம், தாலவரம்பூண்டி கிராமத்தில் மடுவின் குறுக்கே உள்ள மண் அணையை கல் அணையாக மாற்றுதல் | 56.20 | 81.00 |
| 17. | தேனி மாவட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் ஆகமலை வரட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | 21.75 | 78.00 |
| 18. | காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், ஓங்கூரர் ஆற்றின் கரையை சீரமைத்தல் | 65.80 | 486.00 |
| 19. | தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், பானாக்குளம் அருகே மணிமுத்தார் பிரதான கால்வாயை மேம்படுத்தி இணைப்புக் கால்வாய் அமைத்து அய்யார் குளம் பட்டி ஏரிக்கு நீர் வழங்குதல் | 66.68 | 195.00 |
| 20. | தூத்துக்குடி, விளாத்திக்குளம் வட்டம், சின்னூர் கிராமத்தின் அருகே புதிய குளம் அமைத்தல் | 70.54 | 48.50 |
| 21. | சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், சருகுனியாற்றின் குறுக்கே அணைக்கட்டி சேகடி மற்றும் சிறுவிலா ஏரிகளுக்கு நீர் வழங்குதல் | 48.11 | 136.00 |
| 22. | விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், சேத்தநாடு கிராமத்தில் பாசன வசதி அளிக்கும் திட்டம் | 39.72 | 138.00 |

**சிறு பாசன குளங்களைப் புனரமைத்தல்**

இந்த ஆண்டில் 17 மாவட்டங்களில் உள்ள 157 சிறு பாசன குளங்களை ரூ.4842.73 இலட்சங்களுக்கு நபார்டு வங்கியின் நிதியுதவியோடு புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 17220 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

[2004 ஜூலை 27

## காவேரி படுகை புனரமைப்புத் திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | பயன்பெறும் ஆயக்கட்டு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் மாவட்டம், காவிரி ஆற்றில் மைல் 17/2இல் கல்லணையில் உள்ள காவிரி தலைப்பு மதகினைப் புனரமைத்தல் | 1738.83 | 31600.00 |
| 2. | தஞ்சாவூர் மாவட்டம், காவிரி ஆற்றில் மைல் 17/2இல் கல்லணையில் உள்ள வெண்ணாறு தலைப்பு மதகினை புனரமைத்தல் | | |
| 3. | தஞ்சாவூர் மாவட்டம் வெண்ணாற்றில் மைல் 17/2இல் கல்லணையில் உள்ள கல்லணைக் கால்வாய் தலைப்பு மதகினை புரனரமைத்தல் | | |
| 4. | தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6இல் உள்ள காவேரி மதகினை புனரமைத்தல் | | |
| 5. | தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6இல் உள்ள குடமுருட்டி மதகினை புனரமைத்தல் | | |



2004 ஜூலை 27]

## நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் (நீ.வ.ஆ.தொ.தி.)

(i) தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது ரூ.840.84 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 1995 செப்டம்பர் திங்களில் அடிப்படை விலையின்படி ரூ.807.49 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் 31-3-2002-ல் முடிவடையும் நிலையில் இருந்தது. ஆனால் மாநில அரசின் வேண்டுகோளின்படி உலக வங்கி 31-3-2004 வரை நீட்டிப்பு வழங்கியுள்ள நிலையில், இத்திட்டக் காலத்தை 30-09-2004 வரை மேலும் நீட்டித்து உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

(ii) இத்திட்டம் மாநிலம் தழுவிய பகுதி முதலீட்டுத் திட்டமாக நடைமுறைபடுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டுப் பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சிமூலம் உற்பத்தியைப் பெருக்க உதவும். பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சியானது வேளாண் மக்களைப் பாசன மேலாண்மையில் ஈடுபடுத்துதல், நீர்வள மேம்பாடு, நீர் மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் போன்றவற்றில் மாநில நிறுவன மற்றும் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவும்.

(iii) இத்திட்டம் 40 இலட்சம் வேளாண் மக்களுக்கு நேரடி பயனளிக்கும். இத்திட்டம் சுமார் 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். (இது இம்மாநிலத்தின் பாசனப் பரப்பில் 50 விழுக்காடாகும்.) பாசன ஆதாரங்களைப் புனரமைத்து நவீனப்படுத்துவதன்மூலமும் மேம்பட்ட பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை இவற்றில் வேளாண் மக்களை இணைப்பதன் மூலமும் பாசனம் ஒரு நீடித்த வளர்ச்சியிலான அடித்தளத்தில் அமையும்.

(iv) இத்திட்டம் காவிரி வடிநில பாசன வடிநிலப் பகுதியைத் தவிர்த்து 16 பாசனத் திட்டங்கள் மற்றும் 25 சிறிய பாசனத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தலுக்கும் வழிகோலும். மேலும் செயலாக்கத்திலுள்ள 9 பாசனத் திட்டங்களான பொய்கையாறு, நம்பியாறு, சோத்துப்பாறை, மோர்தானா, ராஜாதோப்புகானாறு, கொடுமுடியாறு, வடக்குப்பச்சையாறு, அடவிநயினார் கோயில், கிருதமால் ஆகிய நிறைவேறி வரும் பாசனத் திட்டங்களை முடிப்பதற்கும் வழிகோலும்.

(v) அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து ஒப்புதல் வழங்கியதில் ரூ.1062 கோடி மதிப்பீட்டில் 2347 பணிகளுக்கு (சிப்பங்கள்

உட்பட) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட சிப்பங்களின் (Packages) எண்ணிக்கை | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | (அ) பாசன ஏற்பாடுகளின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு, வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளித்தல், திட்டங்களை முடித்தல் உட்பட | 343 | 744.53 |
| | (ஆ) குறைந்த அளவு புனரமைப்புப் பணிகள் | 946 | |
| 2. | விவசாயச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் ஒப்படைத்தல் | 15 | 4.00 |
| 3. | இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான தளவாடங்கள் | 3 | 18.00 |
| 4. | பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் | 14 | 13.00 |
| 5. | நீர்திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி | 68 | 42.00 |
| 6. | சுற்றுப்புறச் சூழல் நிர்வாகம் | 12 | 10.00 |
| 7. | நில எடுப்பு மற்றும் பொருளாதாரப் புனர்வாழ்வு | 4 | 17.00 |
| 8. | நிறுவனங்கள் வலுப்படுத்துதல் மற்றும் கட்டடங்கள், கணிப்பொறிகள், வாகனங்கள், அலுவலக தளவாடங்கள், தொலைபேசிகள் முதலியன மற்றும் கலந்தாய்வு போன்ற பொதுவானவை | 311 | 77.87 |
| 9. | கூடுதல் திட்டப் பணிகள் | | |
| | (அ) முறையில்லா பாசனக் கண்மாய்கள் புனரமைத்தல் | 620 | 100.00 |
| | (ஆ) அணைப் பாதுகாப்புத் திட்டப் பணிகளில் மீதமுள்ள பணிகள் (கோமுகி, சாத்தனூர், வெலிங்டன், வீடூர், சேத்தியாதோப்பு) | 5 | 20.60 |
| | (இ) நிறுவனங்களை வலுப்படுத்துதல் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்புப் பணிகள் கணினி மயமாக்குதல் | 6 | 15.00 |
| | மொத்தம் | 2347 | 1062.00 |



அனைத்து பாசன அமைப்புகளின் மேம்பாட்டுப் பணிகளும் குறைந்தபட்ச புரனரமைப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நடப்பில் உள்ள திட்டங்களைச் செயல்படுத்தி முடிக்கும் தொகுப்பில் உள்ள 9 திட்டங்களும் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு முக்கிய பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள்

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை |
|---|---|---|---|---|---|
| | **சென்னை மண்டலம்** | | | | |
| 1 | செய்யாறு அணைக்கட்டு திட்ட. புனரமைப்புப் பணிகள் | 610.63 | 7 | 7 | - |
| 2 | பாலாறு அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு பணிகள் | 1883.40 | 18 | 18 | - |
| 3 | பொய்னி அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 651.00 | 8 | 8 | - |
| 4 | திருக்கோவிலூர் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணி | 938.00 | 7 | 7 | - |
| 5 | தொழுதூர் மற்றும் பிலாந்துரை அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணி | 480.90 | 9 | 9 | - |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | சிறு பணிகள் | 3576.46 | 14 | 14 | - |
| 7 | சாத்தனூர் சிஸ்டம் புனரமைப்புப் பணிகள் | 1890.84 | 19 | 19 | - |
| 8 | சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 1016.74 | 9 | 9 | - |
| 9 | மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம் | 8229.60 | 11 | 11 | - |
| 10 | ராஜாதோப்பு கானாறு நீர்த்தேக்கத் திட்டம் | 356.20 | 3 | 3 | - |
| | **பொள்ளாச்சி மண்டலம்** | | | | |
| | பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் | 15122.63 | 61 | 61 | - |
| | **மதுரை மண்டலம்** | | | | |
| 1 | சித்தார் அணைக்கட்டு ஏற்பாடு மேம்பாட்டுப் பணிகள் | 774.30 | 10 | 10 | - |
| 2 | மஞ்சளாறு நீர்த் தேக்கத் திட்டம் புனரமைப்புப் பணிகள் | 102.81 | 5 | 5 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வைகை பழைய ஆயக்கட்டு புனரமைப்புப் பணிகள் | 5858.84 | 21 | 21 | - |
| 4 | சிறிய பணிகள் | 1178.42 | 15 | 15 | - |
| 5 | கம்பம் பள்ளத்தாக்கு ஏற்பாடு | 600.70 | 11 | 11 | - |
| 6 | கோதையாறு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 3726.71 | 36 | 36 | - |
| 7 | மருதாநதி நீர்த்தேக்கத் திட்ட புனரமைப்புப் பணிகள் | 137.77 | 3 | 3 | - |
| 8 | தாமிரபரணி ஏற்பாடு புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் | 3931.00 | 23 | 23 | - |
| 9 | பெரியாறு வைகை ஏற்பாடு புனரமைப்பு | 2907.95 | 8 | 8 | - |
| 10 | அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்ட மீதமுள்ள முடிக்க வேண்டிய பணிகள் | 6431.15 | 3 | 3 | - |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | கிருதமால் அணைக்கட்டு ஏற்பாடு கட்டுமானப் பணிகள் | 250.83 | 3 | 3 | - |
| 12 | கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் | 3050.00 | 9 | 9 | - |
| 13 | நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் (மீதமுள்ள பணிகள்) | 2050.00 | 9 | 9 | - |
| 14 | பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம் முடிக்கப்பட வேண்டிய மீதமுள்ள பணிகள் | 1005.06 | 9 | 9 | - |
| 15 | சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்ட மீதமுள்ள பணிகள் | 3272.00 | 4 | 4 | - |
| 16 | வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் (மீதமுள்ள பணிகள்) | 4519.50 | 9 | 9 | - |
| | | 74453.21 | 340 | 340 | - |

## 2003–2004 திட்ட நீட்டிப்பு காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள்

உலக வங்கியுடன் ஒத்துக்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின்படி, கீழ்க்கண்ட பணிகளை ரூ.126.00 கோடிக்கு திட்ட நீட்டிப்பு காலமான 1-3-2004 முதல் 30-9-2004 வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

| வ எண் | தலைப்பு | மதிப்பு ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | விவசாய சங்கங்கள் அமைத்தல் மற்றும் ஒப்படைத்தல் | 20.00 |
| 2. | வடிநில வாரியம் (நீர்த் திட்டம்) | 10.00 |
| 3. | தகவல் தொடர்பு பணிகள் கணினி மயமாக்குதல் | 10.00 |
| 4. | மின்வாரிய கட்டணம் (தொடர் திட்டங்கள்) | 5.00 |
| 5. | நீர்ப்பாசன விவசாய முணைப்புத் திட்டம் | 5.00 |
| 6. | தண்ணீர் தீர்வை திருத்தியமைத்தல் (நில வரைபடங்களை கணினிமயமாக்குதல்) | 1.00 |
| 7. | பணிநிலை பிரிவு பிரித்தல் (உள்ளமைப்பு உருவாக்குதல்) | 2.00 |
| 8. | நிலநீர் சட்டம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் துணை நடவடிக்கைகள் (கிணறுகளின் புள்ளி விவரக் கணக்கு) | 5.00 |
| 9. | சுற்றுப்புறச் சூழல் செயலாக்கத் திட்டம் | 10.00 |
| 10. | நீர்வள ஆதார ஆராய்ச்சி நிதி | 10.00 |
| 11. | மனிதவள மேம்பாடு (பயிற்சி) | 8.00 |
| 12. | (அ) தாமிரபரணி வடிநிலத்திலுள்ள அனுமன் நதி உப வடிநிலத்தில் மாதிரி புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் | 20.00 |
| | (ஆ) தொடர் திட்டத்திற்கு முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளுதல் | 20.00 |
| | மொத்தம் | 126.00 |



## 2003–04 திட்ட நீட்டிப்பு காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் தற்போதைய நிலையின் விவரங்கள்

### 1. விவசாயச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் விவரங்கள்

விவசாயச் சங்கங்கள் வாரியாக விவரங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கவும் மற்றும் அச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்தவும் ரூ.7.90 கோடிக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 19 மாவட்டங்களில் மூன்று கட்டமாக 24-01-2004, 31-01-2004 மற்றும் 07-02-2004 தேதிகளில் 1437 நீரைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர்களுக்கான தேர்தலும் நடைபெற்றது. எஞ்சியுள்ள 129 சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

### 2. வடிநில வாரியம் (நீர்த் திட்டம்)

ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 13 வடிநிலங்களுக்கு நுண்ணிய வடிவில் ஆராய்வு செய்தல். வடிநில வாரியத்திற்காக இயங்கி வரும் தொழில்நுட்பச் செயலகத்தை மேம்படுத்தவும் மற்றும் தேவையான கருவிகள் வாங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3. தகவல் தொடர்பு பணிகள் – கணினிமயமாக்குதல்

தகவல் தொடர்பு வலைதளம் அமைத்தல், காணொலி ஒளிக் காட்டிமூலம் கருத்தாய்வுக் கூட்டம் நடத்துவதற்கான அமைப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் ரூ.1.00 கோடிக்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் காணொலி ஒளிகாட்சி அமைப்பு பணி முடிக்கப்பட்டது.

### 4. நீர்ப்பாசன விவசாய முணைப்புத் திட்டம்

நீர்ப்பாசன விவசாய முணைப்புத் திட்டம் ரூ.1.50 கோடிக்கு அனுமன் நதி உப வடிநிலத்தில் வேளாண் துறை, வேளான் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக் கலைத் துறை, மீன் துறை போன்ற துறைகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் ஏரிகளின் மதகுகளிலிருந்து பாசன நிலத்திற்கு பி.வி.சி. குழாய்மூலம் நுண்ணிய அளவில் பாசன வசதியளித்தல், நீர்க் குட்டைகளை அமைத்து மழைநீர் சேமிப்பை ஊக்குவித்தல், மீன்களைப் பேணிக் காத்தல், ஏரிகளுக்கு வரும் நீர்வரத்துக் கால்வாய்களைப்

[2004 ஜூலை 27

புனரமைத்தல், விவசாயிகளுக்குப் பயிற்சி கொடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

**5. தண்ணீர்த் தீர்வை திருத்தியமைத்தல் (கிராம நில வரைபடங்களை கணினிமயமாக்குதல்)**

இப்பிரிவின்கீழ் ரூ.17.60 கோடிக்கு கிராம நில வரைபடங்களை கணினிமயமாக்குவதற்காகவும் மற்றும் தீர்வை ஆவணங்களைத் தயாரிக்கவும் நில அளவை மற்றும் நிலத் தீர்வை முறை செய்தல் துறையின் ஒத்துழைப்புடன் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியற்றவையாக இருந்தமையால்இத்திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்தி குறிக்கோளை அடைய தேவையான பகுத்தாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6. பணிநிலைப் பிரிவு பிரித்தல் (உள்ளமைப்பு உருவாக்குதல்)**

நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உள்ளமைப்பு உருவாக்கும் பொருட்டு ரூ.64.00 இலட்சத்திற்கு நூலகம் மற்றும் கருத்தாய்வுக் கூட்ட கட்டடப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**7. நிலநீர்ச் சட்டம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் துணை நடவடிக்கைகள் (கிணறுகளின் புள்ளிவிவரக் கணக்கு)**

இப்பிரிவின்கீழ் நிலநீர்ச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 1 கோடி கிணறுகளின் புள்ளிவிவரக் கணக்கு அறிக்கையினைத் தயாரிக்க 5 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு பகுதி பணி முடிக்கப்பட்டுள்ளது.

**8. சுற்றுச்சூழல் செயல் ஆக்கத் திட்டம்**

சுற்றுச்சூழல் செயல் ஆக்கத் திட்டத்தின்கீழ் பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்பு சம்பந்தமான ஒன்பது (9) ஆராய்வுகளையும், தமிழ்நாட்டிலுள்ள ஆற்றுப் படுகைகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல மதிப்பீடுகள் செய்ய ஒரு ஆராய்வும் மொத்தம் 3.40 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒருசில பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2004 ஜூலை 27]

**9. நீர்வள ஆதார ஆராய்ச்சி நிதி**

ரூபாய் 3.441 கோடி மதிப்பீட்டில் 8 புதிய ஆராய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் முன்னதாக முடிக்கப்பட்டுள்ள 30 ஆராய்ச்சி ஆராய்வுகளைப் பற்றி கருத்தரங்கு நடைபெற்று அதில் 800 பணியாளர்கள் பயிற்சி அடைந்தனர்.

**10. மனிதவள மேம்பாடு (பயிற்சி)**

இந்த வருடத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்மூலம், அட்டவணைப்படி பலவிதமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**11. தாமிரபரணி வடிநிலத்திலுள்ள அனுமன் நதி உப வடிநிலத்தில் மாதிரி புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தொடர் திட்டத்திற்கு முன்னேற்றப் பணிகள்**

நடைபெற்றுவரும் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் தொடர் திட்டத்திற்காக உலக வங்கி ஆலோசனையின்படி மாதிரி திட்டமான அனுமன் நதி உப வடிநிலத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.61.53 கோடியில் சார்ந்த துறைகளின் ஒத்துழைப்புடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் விரைவில் தொடங்க இருக்கின்றன.

31-03-2004-க்குள் மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டுவிடும் என்ற எதிர்பார்ப்பால் 2004-05 ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும் உலக வங்கி இத்திட்டத்திற்கு 30-09-2004 வரை நீட்டிப்பு வழங்கப்பட்டதால், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்ய சுமார் ரூ.70.00 கோடி தேவைப்படுகிறது.

**நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் – இரண்டாம் கட்டம்**

நம் மாநிலத்தின் குறைவான நீர் ஆதாரங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை அதிகரிக்கவும், கொள்ளளவை மேம்படுத்தவும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் தொடர் திட்டமாக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் – II-ஐ ரூ.2890.00 கோடி மதிப்பில் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் (கட்டம்-1)-ல் சேர்க்கப்படாத சில பணிகள், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா ஏரிகளின் புனரமைப்பு, புதிய மற்றும் நடைபெற்றுவரும் பாசனத் திட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் பணிகள், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் சிக்கன முறையில் நில நீர் மற்றும் மேற்பரப்பு நீரைப் பயன்படுத்துவதில் முன்னேற்றப் பணிகள் போன்ற பணிகள் அடங்கும்.

வடிநிலங்களின் பாசனதாரர்களின் தேவைகளை எல்லாம் ஒருங்கிணைத்து வடிநில வாரியாக பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வடிநிலங்களில் தண்ணீர் அளவை ஆய்வுகளின் அடிப்படையில் ஆதார ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டக் கருத்துருகள் மத்திய அரசுக்கு உலக வங்கியின் உதவியை பெறும்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசும் இத்திட்டத்தை உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது.

ஆனால், குறைவாக உள்ள நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் அளவினைக் கொண்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்க ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை மேற்கொள்வது ஒன்றே தீர்வாகும்.

ஆகையால் உலக வங்கியானது, தொடர் திட்டமானது, நீரைப் பயன்படுத்தும் சார்ந்த துறைகள் பங்கேற்புடன் ஒருங்கிணைந்த அணுகுமுறையாக இருக்க வேண்டுமென ஆலோசனை வழங்கியது. அதன்படி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபரணி வடிநிலத்தில் அனுமன் நதி உப வடிநிலத்தை ஒருங்கிணைந்த மாதிரி புனரமைப்புப் பணிக்கான மதிப்பீடுகள் தயார் செய்ய தேர்வு செய்தது. ரூபாய் 61.53 கோடியில் நீர்த் துறையைச் சார்ந்த துறைகளின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த மாதிரி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதியும் பெறப்பட்டது. உலக வங்கியின் தடையில்லாச் சான்று மற்றும் ஒப்புதல் பெறப்பட்டது. ஒவ்வொரு துறையின் பணிகளின் விவரமும் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையும் பின்வருமாறு



2004 ஜூலை 27]

| வ. எண். | துறை | பணியின் விவரம் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | நீர்வள ஆதார அமைப்பு | அணைக்கட்டுகளை சீரமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் கால்வாய் மற்றும் ஏரிகளை தூர் வாருதல் முதலியன. | 3697.80 |
| 2. | வேளாண் பொறியியல் துறை | பண்ணை முன்னேற்றப் பணிகள் , நுண்ணிய பாசன வசதிகள், ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், பண்ணை குட்டைகள் அமைத்தல் முதலியன | 2255.00 |
| 3. | தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் | பொருத்தமான ஆராய்ச்சிப் பணிகள் முதலியன | 20.00 |
| 4. | வேளாண் துறை | நவீன விவசாய இயந்திரங்கள் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் முதலியன | 40.00 |
| 5. | வேளாண் விற்பனை துறை | வேளாண்மை விளை பொருட்களை விற்பனை சந்தைக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதி செய்தல் முதலியன | 40.00 |
| 6. | தோட்டக் கலைத் துறை | மாற்று பயிர் விளைவித்தல், சேமிப்பு வசதிகள் செய்தல் முதலியன | 40.00 |

[2004 ஜூலை 27

| | | | |
|---|---|---|---|
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை | மேய்ச்சல் நிலம் அமைத்தல், தீவனங்கள் தயாரித்தல், மீன் குட்டைகள் அமைத்து இனவிருத்தி செய்தல் | 20.00 |
| 8. | வனத் துறை | சமூக நலக் காடுகள் அமைத்தல் | 15.00 |
| 9. | சமூக நலத் துறை | கிராமிய பெண்களை ஊக்குவித்தல், பயிற்சி அளித்தல், சமூக மாற்றங்களை பயிற்றுவித்தல் | 25.00 |
| | | | **6152.80** அல்லது **61.53** கோடி |

மேற்குறிப்பிட்டுள்ள துறைகள் உலக வங்கியின் அறிவுரைகள்படி அவரவர் துறைகளைச் சார்ந்த பணிகளை ஆரம்பித்து 30-09-2004-ற்குள் முடிக்க உள்ளன. 30-09-2004-ற்குள் இத்திட்டத்தினை முடிக்க செயலாக்கத் திட்டத்துடன்கூடிய ஓர் ஒருங்கிணைந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய மாதிரி திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு கிடைக்கப்பெறும் அனுபவங்களைக் கொண்டும், அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைந்த செயல்திறன்களைக் கொண்டும் அனைத்து 17 வடிநிலங்களுக்கும் தண்ணீர் தட்டுப்பாடு உள்ள முன்னுரிமை வடிநிலங்களின் வரிசைப்படி கருத்தில்கொண்டு ஒருங்கிணைந்த பெருந்திட்டம் தயாரிக்கப்பட உள்ளது.

**விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்படைத்தல்**

இம்மாநிலத்தில் அரசாங்கத்தின் பராமரிப்பில் உள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசன அமைப்புகள் மற்றும் ஏரிகள்மூலம் கிடைக்கும் நீரைக் கொண்டு சுமார் 21 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் உள்ள நிலங்கள் பயன்பெறுகின்றன. தற்சமயம் இந்த நீர்வள ஆதாரங்கள்



2004 ஜூலை 27]

பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின்மூலம் இயக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

தமிழ்நாடு அரசு, பாசன மேலாண்மையில் பங்கேற்பு என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு இம்மாநிலத்தில் அரசாங்கத்தின் பராமரிப்பில் உள்ள நீர்ப்பாசன அமைப்புகளின், பகிர்மான அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் விவசாயிகளின் பங்கேற்பை ஊக்குவிக்கிறது.

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் வரும் சுமார் 7 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பை உள்ளடக்கிய 19 மாவட்டங்களில், விவசாயிகள் அமைப்பு, பாசன மேலாண்மையில் பங்கேற்பு மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு, விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது.

முதற்கட்டமாக, இந்தப் பாசனப் பரப்பில் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நில உரிமையாளர்கள்/வாக்காளர்கள் பட்டியல், குறியீட்டு வரைபடம், நீர்ப்போக்க வரைபடம் போன்ற ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

மொத்தமுள்ள 21 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பில் சுமார் 7 இலட்சம் ஹெக்டேரில் 1566 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் கண்டறியப்பட்டு, வரையறுக்கப்பட்டு, 19 மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களால் அறிவிக்கப்பட்டன. தேர்தல் விதிகள் அரசாங்கத்தினால் ஏற்பளிக்கப்பட்டு, தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தின்படி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் மேலாண்மை குழுக்களை அமைக்க, 1566 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் மற்றும் 7,874 ஆட்சி மண்டலத் தொகுதிகளுக்கு ஜனவரி 2004 மற்றும் பிப்ரவரி 2004-ல் ரகசிய வாக்களிப்புமூலம் தேர்தல் நடத்தப்பட்டது.

மொத்தமுள்ள 1,566 தலைவர் மற்றும் 7869 ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் பதவிகளுக்கு முறையே 1,437 தலைவர்கள் மற்றும் 6,086 ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இதில் மீதமுள்ள 129 தலைவர் மற்றும் 1,833 ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் பதவிகளை நிரப்பும்பொருட்டு ஆகஸ்ட் 2004 3-வது வாரத்தில் மறு தேர்தல் நடத்தப்பட உள்ளது.

[2004 ஜூலை 27

தேர்தல் பணிகளை முழுமையாக முடிக்க அனைத்து, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் மேலாண்மைக் குழுக்களை அமைக்க ஏதுவாக, விடுபட்டுப்போன தலைவர் மற்றும் ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் பதவிகளுக்கான மறு தேர்தல் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் மறுதேர்தல் முடிந்தவுடன் பகிர்மானம் மற்றும் திட்டக் குழுக்களின் மேலாண்மைக் குழுக்களை அமைக்க தேர்தல் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பாசன மேலாண்மையில் பங்கேற்பு, மீதமுள்ள 14 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பிலும் விரிவுபடுத்தப்படுகிறது. இதற்கான ஆவணங்கள் தயாரிக்கும் பணி நீர்வள ஆதார தொகுப்புத் திட்ட நிதியைக் கொண்டு ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் தயாரிக்கும் பணி முடிவுற்றதும் மேற்கண்ட 14 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பிலும் 2004-05-ல் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தைச் சாராத பாசனப் பரப்புகளில் தேர்தலை வெற்றிகரமாக நடத்த, கிராம அளவில் நில உரிமையாளர்கள் பட்டியல் (படிவம் 5) மற்றும் வாக்காளர்கள் பட்டியல் (படிவம் 5ஏ)களை பார்வைக்கு வைத்து சரி செய்யவும், இறுதி ஆவணங்களை அறிவிப்பிற்காக தயார் செய்யும்பொருட்டும், ஏற்கெனவே நீர்வள ஆதார தொகுப்புத் திட்ட பாசனப் பரப்புகளில் ஏற்படுத்தியதுபோல் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் மற்றும் தேர்தல் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தைச் சாராத 14 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பில் ஆவணங்கள் தயாரிக்கும் பணி முடிவுற்றவுடன், வரையறுக்கப்படும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்பெற்று நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள், பகிர்மான குழுக்கள் மற்றும் திட்டக் குழுக்களின் மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பாசன மேலாண்மை பங்கேற்புப் பிரிவிற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும்.



2004 ஜூலை 27]

**செப்டம்பர் 2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ள காலத்தில் செயல்படுத்தவுள்ள சுற்றுச்சூழல் குறித்த முன்னோடி ஆய்வுகள்.**

| வ. எண் | முன்னோடி ஆய்வின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | ஆய்வின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | காகித ஆலை, சர்க்கரை ஆலை, தோல் பதனிடுதல் மற்றும் ஜவ்வரிசி ஆலைகளில் சிக்கன முறையில் O.C.A.T. தொழில்நுட்பம்மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்தல் | 26.00 | அனைத்து பணிகள் முடிவடைந்துள்ளன. முடிவுகள் ஆவணப்படுத்தப் பட்டு அறிக்கை தயார் செய்யும் பணி மேற்-கொள்ளப்படுகிறது |
| 2. | திருப்பூர் நெசவு மற்றும் சாய தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை நுண்ணுயிர் மற்றும் O.C.A.T. தொழில்நுட்பம் மூலம் சுத்திகரிப்பு செய்து ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத்தை சீரமைத்தல் | 16.00 | அனைத்து பணிகள் முடிவடைந்துள்ளன. முடிவுகள் ஆவணப்படுத்தப் பட்டு அறிக்கை தயார் செய்யும் பணி மேற் கொள்ளப்படுகிறது |
| 3. | தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வடிநிலங்களிலும் சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு குறித்து மதிப்பீடு செய்தல் | 37.00 | இடைநிலை அறிக்கை பெறப்பட்டுள்ளது. நீட்டிப்பு காலத்தில் பணி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| 4. | கோவை மாவட்டம் சூளூர் சின்ன ஏரியில் சிக்கன முறையில் கழிவு நீரை சுத்தம் செய்து நீர்ப்பாசனத்தை அதிகரிக்க ஆய்வு மேற்கொள்ளுதல் | 15.00 | அனைத்து பணிகள் முடிவடைந்துள்ளன. முடிவுகள் ஆவணப்படுத்தப் பட்டு அறிக்கை தயார் செய்யும் பணி மேற் கொள்ளப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| 5. | நொய்யல் வடிநிலத்தில் சமுதாய ஒத்துழைப்புடன் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல் | 35.00 | அனைத்து பணிகள் முடிவடைந்துள்ளன. முடிவுகள் ஆவணப்படுத்தப் பட்டு அறிக்கை தயார் செய்யும் பணி மேற் கொள்ளப்படுகிறது |
| 6. | பாலாறு, சென்னை, பெண்ணையாறு வராகநதி மற்றும் வெள்ளாறு வடிநிலங்களில் நுண்மட்ட சுற்றுச் சூழல் நிலை அறிக்கை தயார் செய்தல் | 47.20 | ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இடைநிலை அறிக்கை பெறப்பட்டுள்ளது. நீட்டிக்கப்பட்டுள்ள காலத்தில் பணி முடிவடையும் |
| 7. | பவானி, பரம்பிக்குளம் ஆழியாறு அமராவதி மற்றும் அக்னியாறு வடிநிலங்களில் நுண்மட்ட சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயார் செய்தல் | 80.00 | ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இடைநிலை அறிக்கை பெறப்பட்டுள்ளது. நீட்டிக்கப்பட்டுள்ள காலத்தில் பணி முடிவடையும் |
| 8. | நொய்யல் வடிநிலத்தில் நுண்மட்ட சுற்றுச் சூழல் நிலை அறிக்கை தயார் செய்தல் | 38.00 | ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இடைநிலை அறிக்கை பெறப்பட்டுள்ளது. நீட்டிக்கப்பட்டுள்ள காலத்தில் பணி முடிவடையும் |



## திட்ட உருவாக்கப் பிரிவின்கீழ் உள்ள சுற்றுப்புறச்சூழல் குழுமத்தின் பணிகள்

தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சென்னை அவர்களின்கீழ் மூன்று சுற்றுப்புறச்சூழல் குழுமக் கோட்டங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களைத் தலைமையிடமாகக்கொண்டு சுற்றுப்புறச்சூழல் நடவடிக்கை திட்டப் பணிகளை கவனித்து வருகின்றன.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 17 ஆற்று வடிநிலங்களிலும் நீர் ஆதாரங்களின் சுற்றுப்புறச்சூழல் குறித்த பணிகளை மேற்கண்ட கோட்டங்கள் தங்கள் கோட்ட சரகத்திற்குட்பட்ட வடிநிலங்களில் நீர் ஆதாரங்களின் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு குறித்த பணிகளை கவனித்து வருகின்றன.

## சுற்றுப்புறச்சூழல் குழுமக் கோட்டங்களின் பணிகள்

ஆற்று வடிநிலங்களின் சுற்றுப்புறச்சூழல் குறித்த தற்போதைய நிலையின் நுண்மட்ட தகுதி நிலை அறிக்கை தயார் செய்தல், வடிநிலங்களின் செயல்திட்ட நடவடிக்கைகளுக்கான அறிக்கைகளைத் தயார் செய்தல், புதிய திட்டங்களை செயல்படுத்தும்போது அதனால் ஏற்படும் நன் விளைவுகள் மற்றும் எதிர்மறை விளைவுகள் குறித்து அறிக்கை தயார் செய்தல், சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் முன்னோடி ஆய்வு மேற்கொள்ளுதல் மற்றும் நீர்வள ஆதாரங்களின் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு குறித்து அதனால் பயன் அடையும் விவசாயிகள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களிடத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வடிநிலங்களில் உள்ள ஆறுகளின் நீரின் தரத்தைக் கண்காணிப்பதற்கு, குறிப்பிட்ட நீர் மாசுபடும் இடங்களில் நீர் மாதிரிகள் எடுத்து சோதனை செய்தல் ஆகியன சில முக்கிய பணிகளாகும்.

## சுற்றுப்புறச்சூழல் தகுதி நிலை அறிக்கைகள் (Status Reports)

தமிழகத்தில் உள்ள அனைத்து 17 வடிநிலங்களுக்கும் சுற்றுப்புறச்சூழல் தகுதி நிலை அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, அவை நுண்மட்ட அளவில் (Micro Level) மேம்படுத்தும் பணிகள் நீர்வள ஆதார அமைப்புத் திட்ட நீட்டிப்பு காலத்தில் செய்யப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 27

நீர்வள ஆதாரங்களில் ஏற்படும் அனைத்து பாதிப்புகளும் குறித்து விவரங்கள் மேற்கண்ட அறிக்கையில் விரிவாக தெரிவிக்கப்பட்டு இருக்கும்.

மேலும் நீர்வளங்கள் போதுமானவகையில் மேலாண்மை செய்யப்படாமல் இருத்தல், தவறான பாசன முறைகள் நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஏற்படும் மண் அரிப்பு வண்டல் அடித்துச் செல்லுதல் மற்றும் காடுகளை அழித்தல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஆற்றுப் படுகை மணல் எடுத்தல், உப்பு நீர் உள் புகுதல், நிலநீர் மற்றும் ஆற்றுநீர் மாசுபடுதல், நிலநீர் அதிகமாக இறைத்தல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்பு குறித்து விரிவான தகவல்கள் மேற்கண்ட அறிக்கையில் இடம்பெற்று இருக்கும்.

பொதுவாக வடிநிலத்தில் உள்ள அனைத்து நீர் ஆதாரங்களில் சுற்றுப்புறச்சூழல் குறித்த விவரங்கள் மற்றும் இதனால் விளையும் சமுதாய பாதிப்பு மேற்கண்ட அறிக்கையில் இடம்பெற்று இருக்கும்.

**சுற்றுப்புறச்சூழல் செயல் • திட்ட அறிக்கைகள் (E.A.P.)**

வடிநிலங்களில் உள்ள நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அதனை பயன்படுத்தும் மற்றும் அதனால் பயன் அடையும் அனைத்துத் துறைகளும் எடுக்கவேண்டிய செயல் திட்டங்கள் குறித்து மேற்கண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கும். தற்போது பவானி, சென்னை மற்றும் வைகை வடிநிலங்களுக்கு மேற்படி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. சுற்றுப்புறச்சூழல் திட்ட அறிக்கையிலிருந்து பின்னடைவு ஏற்படுவதற்கான காரணங்கள் இவ்வறிக்கைகளிலிருந்து நில பாதிப்பு, நீர், சுற்றுப்புறச்சூழல் மற்றும் சமுதாயத் தன்மைகள் மற்றும் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், மறு குடியேற்ற விவரம் வேண்டி மற்றும் மறைமுக இதர பயன்களை அறியலாம். மற்றும் அதனை மட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நீண்ட மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் பற்றி எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

**சுற்றுப்புறச்சூழல் செயல் விளைவு மதிப்பீடு அறிக்கைகள் (E.I.A. REPORTS)**

புதிய திட்டங்களுக்குச் சுற்றுப்புறச்சூழல் செயல் விளைவு மதிப்பீடு அறிக்கை இன்றியமையாதது ஆகும். வடிநிலங்களில் புதிதாக



2004 ஜூலை 27]

செயல்படுத்தப்படும் திட்டங்களினால் ஏற்படும் நன் விளைவுகள் மற்றும் எதிர்மறை விளைவுகளை, மேற்கண்ட அறிக்கையின்மூலம் தெரிந்து கொள்ளலாம். பாலாறு வடிநிலம் மலட்டாற்றில் பதலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து டஹல் கன்சல்டென்சி (Tahal Consultancy) ஒரு மாதிரி அறிக்கை தயார் செய்தது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகளுக்கு அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

1. பெண்ணையாறு வடிநிலத்தில் செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் கட்டுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த அறிக்கை

2. அமராவதி வடிநிலம் நல்லதங்காள் ஓடையில் அணைக்கட்டு கட்டுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த அறிக்கை

3. குண்டாறு வடிநிலம் மலட்டாற்றில் அணைக்கட்டு கட்டுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த அறிக்கை.

4. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், தொட்டப்ப நாயக்கனூர் அருகில் அசுவமாநதியில் அணைக்கட்டு கட்டுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த அறிக்கை

தொடர்ந்து நடைபெற்று வரும் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் செயல் விளைவு மதிப்பீடு அறிக்கைகள் தயாரிப்பதினால் புதிய திட்டங்களுக்கு இவ்வறிக்கையை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதை அறிய உதவியாக இருக்கும். கோட்டங்களில் மேற்படி அறிக்கையைத் தயாரிக்கும் திறனில் முன்னேற்றம் காணப்படுகிறது.

**முன்னோடி ஆய்வுப் பணிகள் (Pilot Studies)**

வடிநிலங்களில் உள்ள நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும், மேலும் மக்களின் முன்னேற்றத்தாலும், மக்கள் தொகை அதிகரிப்பு காரணமாகவும், வளர்ந்து வரும் தொழிற்சாலை அபிவிருத்திகளாலும் ஏற்படும் பலவகையான சுற்றுப்புறச்சூழல் பாதிப்புகளில் இருந்து நீர்நிலைகளைப் பாதுகாக்கவும் மக்களிடத்தில் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும். பல வகையான முன்னோடி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல மாநகராட்சி, நகராட்சி, நகரப் பஞ்சாயத்துகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இல்லாததாலும், மக்களின் குறைந்த வரிப்

பணத்திலிருந்து நகராட்சி நிர்வாகம், சாலை, குடிநீர், கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பாதாளச் சாக்கடை போன்ற பணிகள் பெரும்பாலான நகராட்சிகளால் மேற்கொள்ளப்படாமல், கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமலேயே அருகில் உள்ள நீர்நிலைகளில் கழிவுநீரை விட்டுவிடுகின்றனர். இதன் காரணமாக நில மேற்பரப்பு நீர், நிலத்தடிநீர் ஆகியன மாசடைந்து, மக்களின் தேவைக்குப் பயனற்றதாகப் போய்விடும் அபாயம் எழுந்துள்ளது. மேலும் மேற்படி கழிவுநீரை உபயோகிப்பதால் சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகியவை பாதிப்படைகின்றன. இவ்வகை சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் சேர்க்கையினால், தமிழ்நாட்டில் பல நீர்நிலைகள், கண்மாய்கள், ஏரிகள் பாதிப்படைந்துள்ளன.

## 1. சூளூர் சின்ன ஏரியில் கலக்கும் நகராட்சிக் கழிவினை சிக்கன முறையில் சுத்திகரிப்பு செய்தல்

கோவை மாவட்டம், சூளூர் நகரத்தில் உள்ள சின்ன ஏரியும் இவ்வகையில் பாதிப்படைந்துள்ள ஒரு பொதுப் பணித் துறை ஏரியாகும். சூளூர் நகரத்தின் மக்கள் தொகை சுமார் 31000 ஆகும். இது 4.89 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட ஒரு நகரப் பஞ்சாயத்து ஆகும். இது கோவை அருகில் உள்ள முன்னேற்றமடைந்து வரும் ஒரு நகரப் பஞ்சாயத்தாகும். இதில் பழைய நகரத்திலும், புதியதாக மேம்பட்டு வரும் வளர்ச்சி பகுதிகளிலும் சமமாக 15000 மக்கள் தொகை உள்ளது.

இதில் பழைய நகரத்தில் தினசரி உற்பத்தியாகும் சுமார் 8 இலட்சம் லிட்டர் கழிவுநீரும் சுத்திகரிப்பு செய்யப்படாமல், சின்ன ஏரியில் கொண்டு சென்று விடப்படுகிறது. இதனால் இந்த ஏரியின்கீழுள்ள சுமார் 522 ஏக்கர் பாசன நிலங்களில் விவசாயம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. மேலும் ஏரியின் நீர் மாசு அடைந்துள்ளதுடன், சுற்றிலும் உள்ள நிலத்தடி நீர் பாதிப்படைந்துள்ளது.

சூளூர் நகரப் பஞ்சாயத்து பல்வேறு முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தும் முகமாக அரசினால் தேர்வு செய்யப்பட்டுள்ள பஞ்சாயத்தாகும். இதுபோன்று மாசடைந்துள்ள நீர்நிலைகளை சீர்செய்து மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கும், சுத்திகரிக்கப்பட்ட நீரை மீண்டும் குடிநீர் அல்லாத விவசாயம் மற்றும் பல தேவைகளுக்கும் பயன்படுத்தவும், சூளூர் சின்ன ஏரியில் குறைந்த செலவில் நுண்ணுயிர் கொண்டு கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய ஒரு முன்னோடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



இத்திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உலக வங்கியின்மூலம் ரூ.15.00 இலட்சங்கள் நிதி பெறப்பட்டது. மேலும், இந்த நகரப் பஞ்சாயத்து இதற்காக காற்றூட்டப்பட்ட ஏரேட்டர் சாதனங்கள் வாயிலாக செலவாகும் ரூ..5.00 இலட்சத்தை ஏற்றுக்கொள்ள ஒத்துக்கொண்டது.

இந்த ஆய்வின்கீழ் ஒரு சிறிய சுத்திகரிப்புத் தொட்டி கட்டப்பட்டு ஏரிக்கு வந்தடையும் கழிவுநீரை நீரேற்று விசை பம்புமூலம் இத்தொட்டிக்கு செலுத்தப்படுகிறது. தொட்டியில் "பயோகிளீன்" என்ற நுண்ணுயிர் சேர்க்கப்பட்டு ஏரேட்டர் எனப்படும் கருவியின்மூலம் கழிவுநீர் காற்றூட்டப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மூன்று தரம் மிகவும் மேம்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மூன்று நிலை வடிதல் தொட்டிகள் வழியாக செலுத்தப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்படுகின்றது.

மேலும் சுத்திகரிக்கப்பட்ட நீரிலுள்ள உப்புகளைக் குறைக்கவும் மேலும் கழிவுநீரில் காற்றூட்டவும் "டைபா" என்ற ஒரு வகை புற்கள் வளர்க்கப்பட்டு, அதன் வழியாக விடப்பட்டு மேலும் சுத்திகரிக்கப்பட்டு ஏரியில் விடப்படுகிறது. இந்த செயல்முறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு பத்திரிகைகளாலும் பாராட்டப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பணிபுரியும் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் பார்வையிட்டு, பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இந்த முறையில் எளிய வழியில் நுண்ணுயிர்கள் பயன்படுத்தப்படுவதால் நீரியியல் இரசாயனச் சேர்க்கையால் ஏற்படும் பாதிப்புகள் குறைக்கப்படுகின்றன. மேலும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய வழக்கமான மரபு முறையில் தேவைப்படுவது போன்று சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்த அதிக இடம் தேவைப்படுவதில்லை.

இந்த முறையின்மூலம் கிடைத்துள்ள பயன்களும், குறைந்த செலவும் அரசுக்கு தெரிவிக்கப்பட்டு, இதுபோல் தமிழ்நாடு முழுவதும் எல்லாவிடங்களிலும் எங்கெங்கெல்லாம் நகராட்சி கழிவுநீர்மூலம் பொதுப் பணித் துறையின் நீர் ஆதாரங்கள் பாதிப்படைந்துள்ளனவோ அங்கெங்கெல்லாம் நகராட்சி மற்றும் உள்ளாட்சி துறைமூலம் நிதியுதவி பெற்று செயல்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[2004 ஜூலை 27

**2. சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளால் ஏற்படும் பாதிப்புகள்**

இதுபோன்று, சேலம், நாமக்கல், ஆத்தூர் போன்ற இடங்களில் சுமார் 800 ஜவ்வரிசி தயார் செய்யப்படும் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. மரவள்ளிக் கிழங்கினை சுத்தம் செய்து அதன்மூலம் ஜவ்வரிசி, குளுகோஸ் மற்றும் ஸ்டார்ச் ஆகியவை தயார் செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலைகளுக்கு மரவள்ளிக் கிழங்கை சுத்தம் செய்யவும், மேலும் தொழிற்சாலையின் பல்வேறு நிலைகளிலும் மிகுந்த அளவு தண்ணீர் தேவைப்படுகிறது.

இத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரினால் சுற்றுப்புறச்சூழ்நிலைகள் பாதிப்படைந்துள்ளன. இதன் காரணமாக இத்தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையைக் குறைக்கவும், இதிலிருந்து வெளியேறும் மீதான் என்ற வாயுவை சேமித்து தொழிற்சாலைகளில் எரிபொருளாக பயன்படுத்தவும் மேலும் கழிவுநீரை மறுசுழற்சி மூலம் சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தவும் ஒரு முன்னோடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மின் உபயோகம், நீர் உபயோகம் ஆகியன மிகவும் குறைக்கப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு மிகுந்த லாபம் கிடைப்பதுடன் சுற்றுச்சூழல் பாதிப்பும் மிகவும் குறைந்துள்ளது.

இதன் காரணமாக இந்த ஆய்வின்மூலம் கிடைக்கப்பெற்ற பயனை அனைத்து ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலும், தமிழ்நாடு ஜவ்வரிசி தொழிற்சாலை நிர்வாக இயக்குநர்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**3. திருப்பூர் நெசவு மற்றும் சாயப்பட்டறை தொழில்கள் மூலம் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள்**

திருப்பூர் நகரில் சுமார் 5000 பனியன் மற்றும் நெசவுத் தொழிற்சாலைகளும் மேலும் 800 சாயப்பட்டறை தொழிற்சாலைகளும் உள்ளன. இத்தொழிற்சாலைகளில் துணிகளுக்கு சாயம் ஏற்றுவதற்கு பல்வேறு வகையான இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிலிருந்து வெளியேறும் நச்சுத் தன்மைக் கொண்ட கழிவுநீர் நொய்யல் ஆற்றில் அமைந்துள்ள ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத்தின் மேல்புறம் வந்தடைகிறது. இதன்காரணமாக நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் மிகவும்



2004 ஜூலை 27]

மாசு அடைந்து, இதனால் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் பயன்பெறும் சுமார் 20000 ஏக்கர் பாசன நிலங்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளன.

மேலும் நீரினால் சுற்றுப் பகுதிகளில் உள்ள நிலத்தடிநீர் பாதிக்கப்பட்டு மக்களின் குடிநீர் தேவை பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுகாதாரக் கேடும் அடைந்துள்ளது. மேலும் சாய நீரை சுத்திகரிப்பு செய்ய தற்போது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அவைகளில் சுண்ணாம்பு மற்றும் இரசாயனப் பொருட்கள் பயன்படுத்துவதால் வெளியேறும் கசடு, சுத்திகரிப்பு நிலையங்களில் சேகரிக்கப்பட்டு அதன்மூலமும் நிலமேற்பரப்பு நீர் மற்றும் நிலநீர் ஆகியன பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இரசாயனமுறைகளால் ஏற்படும் கசடுகளை கட்டுப்படுத்தவும் நீரை சுத்திகரிப்பு செய்யவும் தற்போது சோதனை முறையில் "பயோகிளீன்" என்ற நுண்ணுயிர் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையின்மூலம் நீரின் சாயம் நீக்கப்படுவதுடன் நீரின் உப்புத் தன்மை தவிர அனைத்து பரிமாணங்களும் நிர்ணயிக்கப்பட்ட நீர் தரக்கட்டுப்பாடு நிலைக்கு கொண்டு வரப்படுகிறது. கசடு சேர்வதும் முழுவதும் தவிர்க்கப்படுகிறது.

நீரில் உப்புகளை குறைப்பதற்கு "டைபா" எனப்படும் உப்பினை உறிஞ்சும் தாவரங்கள் வளர்க்கப்பட்டு மேலும் OCAT எனப்படும் ஆக்ஸிஜன் அதிகமுள்ள காற்றினை ஊட்டும் முறையும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 40 விழுக்காடு உப்பு, நீரில் குறைந்துள்ளது. இதன்மூலம் நொய்யல் ஒரத்துப்பாளையம் வந்தடையும் நீரினை சுத்தம் செய்து, ஒரத்துபாளையம் நீரை பயன்படுத்தி விவசாயத்தை புதுப்பிக்கவும் அரசால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**4. தாமிரபரணி வடிநில, கண்மாய்கள் ஆகியவற்றில் நீர்வாழ் தாவரங்களால் ஏற்படும் பாதிப்புகள்**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஏரிகளும் நீர்நிலைகளும், விவசாய நிலங்களிலிருந்து வெளியேறும் அதிகப்படியான உரங்களாலும் மற்றும் நகராட்சி கழிவுநீரில் வெளியேறும் ஊட்டச்சத்துக்களாலும் வளரும் நெய்வேலி காட்டாமணக்கு மற்றும் ஆகாயத் தாமரை போன்ற நீர்வாழ் தாவரங்களாலும் பாதிப்படைந்துள்ளன. 60 முதல் 80 விழுக்காடு நீர்நிலைகள் மற்றும் நீர் ஆதாரங்கள் இதன்மூலம் பாதிப்படைந்துள்ளன.

[2004 ஜூலை 27

இந்த நீர்வாழ் தாவரங்களால் நீர் ஆதாரங்களில் நீர்ப்பிடிப்பு குறைவதுடன், தாவரங்கள் மூலம் நீர் அதிகமாக ஆவியாகிறது.

தாவரங்களால் நீரின் தரமும் குறைந்து விவசாயம் மிகவும் பாதிப்படைகிறது. இதனைத் தடுக்க இச்செடிகள் முழுவதும் அழிக்கப்பட வேண்டும். மனிதர்களைக் கொண்டோ அல்லது இயந்திரங்களைக் கொண்டோ இவற்றை வேருடன் முழுவதுமாக அழிக்க முடிவதில்லை. இரசாயனங்கள் பயன்படுத்தினால் அதனால் நீர் மேலும் மாசு அடைந்து பல்வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது.

எனவே உயிரியல் முறைமூலம் "வீவில்ஸ்" மற்றும் "மைட்ஸ்" போன்ற நுண்ணுயிர்கள் சோதனைச்சாலையில் வளர்க்கப்பட்டு பின் அவை மேற்கண்ட தாவரங்களில் விடப்படுகின்றன. நீரினை சுத்தப்படுத்தவும் செய்கிறது. இந்த முறைமூலம் தாவரங்களை முழுவதுமாக கட்டுப்படுத்துவதுடன் மேலும் இத்தாவரங்கள் வளர்ந்து பாதிப்பு ஏற்படுத்தாமல் இருக்க நீர்நிலைகளில் நகராட்சி கழிவுநீர் தொடர்ந்து வந்தடைவதைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த ஆய்வின்மூலம் கிடைக்கும் பயன்களைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் இதுபோன்ற பாதிப்படைந்துள்ள நீர்நிலைகள் மற்றும் நீர் ஆதாரங்கள் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**5. நொய்யல் வடிநிலத்தில் நீர்ப்பிடிப்பு பகுதியினை மேம்படுத்துதல்**

நொய்யல் வடிநிலத்தின் மேற்பகுதியில் அமைந்துள்ள வனப் பகுதிகளுக்குக்கீழுள்ள பாதிப்படைந்துள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்துவதற்கும் நிலத்தடிநீர் அளவினை அதிகரிக்கச் செய்வதற்கும் மண் அரிப்பினைத் தடுப்பதற்கும் விவசாயப் பொறியியல் துறை மற்றும் வனத் துறை ஒத்துழைப்புடன் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தடுப்பணைகள், வண்டல் தடுப்புகள், நீர்ப்பிடிப்புக் குட்டைகள் ஆகியன கட்டப்பட்டு வடிநிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மக்களுக்கு நீர்ப்பிடிப்புப் பணிகள் பாதுகாப்பதற்கு மரங்களை வளர்த்தல், தகுந்த விவசாய முறைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்த முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிந்து அறிக்கை தயார் செய்யும் நிலையில் உள்ளது.



2004 ஜூலை 27]

**6. நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேறும் வடிகால் நீரில் கலந்துள்ள கரித்துகள்களால் அதன்கீழ் பாசனமடையும் வாலாஜா ஏரி மற்றும் பெருமாள் ஏரி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து ஆய்வு**

நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேறும் வடிகால் நீரில் கலந்துள்ள கரித்துகள்களால் அதன்கீழ் பாசனமடையும் வாலாஜா ஏரி மற்றும் பெருமாள் ஏரி ஆகியவற்றின் பாசன நிலங்கள் பாதிப்படைந்துள்ளதை சரி செய்வதற்கு ஒரு ஆய்வு அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம், மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வினில் பாசனப் பகுதிகளில் உள்ள நிலங்களில் மண் தன்மை, உற்பத்தியில் ஏற்பட்டுள்ள குறைவு போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுப் பணிகள் முடிந்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நெய்வேலி சுரங்க கரித்துகள்களைக் குறைப்பதற்கு நீர் வரும் வரத்துக் கால்வாயில் குறிப்பிட்ட இடங்களில் தடுப்பணைகள் கட்டி நீரின் வேகத்தினைக் குறைப்பதற்கும் மற்றும் ஏரியில் துகள்கள் படிவதற்கு ஏதுவாக ஆழப்படுத்தவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**7. விவசாய நிலங்களிலிருந்து வெளியேறும் ஊட்டச்சத்து நீர் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தை வந்து அடைவதால் நீர்த்தேக்கத்தில் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்வு**

விவசாய நிலங்களிலிருந்து வெளியேறும் ஊட்டச்சத்து நீர் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தை வந்து அடைவதால் நீர்த்தேக்கத்தில் வளர்ந்துள்ள பாசி மற்றும் நீர் வாழும் தாவரங்களால் ஏற்படும் பாதிப்பு மேலும் நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஏற்படும் மண் அரிப்பினால் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு குறைந்துள்ளதையும் சரி செய்வதற்கு ஒரு முன்னோடி ஆய்வு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்று உலக வங்கயின் நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர் ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (WRCP) மூலம் நீர் ஆதாரங்களில் சுற்றுச்சூழல்களைப் பாதுகாத்து நீரினை தக்கமுறையில் விவசாயம் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தும்வகையில் திட்ட உருவாக்கப் பிரிவின்கீழ் செயல்படும் சுற்றுச்சூழல் குழுமக்

[2004 ஜூலை 27

கோட்டங்களால் பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்சாலை கழிவு, நகராட்சி கழிவுகள் மற்றும் பல்வேறு வகைகளால் நீர் மற்றும் நிலங்கள் மாசு அடைவதைத் தடுக்க பல்வேறு இடங்களில் நீர் மற்றும் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டும் சோதனை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

தற்பொழுது நீர் ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் செப்டம்பர் 2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் மேற்கண்ட மார்ச் 2004 வரை மேற்கொள்ளப்பட்ட முன்னோடி ஆய்வுகளில் முடிக்கப்படாமல் உள்ள பணிகளை முடிப்பதற்கும் மேலும் ரூ.45.00 இலட்சத்திற்கு புதியதாக முன்னோடி ஆய்வு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தண்ணீர் தீர்வைக் குழு**

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நீருக்கான வரியினை நிலவரியிலிருந்து பிரித்துச் சீரமைப்புச் செய்து, பராமரிப்புப் பணிக்கான செலவினத்தை உபயோகிப்பாளரிடமிருந்து முழுவதும் பெறுவதற்கு ஏற்றவகையில் உலக வங்கியின் வேண்டுகோளின்படி ஒரு குழு 1996-ல் அமைக்கப்பட்டது. இந்தக் குழு நில நிர்வாகத் துறை ஆணையரைத் தலைவராகவும், அரசின் மற்ற துறைச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் விவசாயம் சார்ந்த பொருளாதாரத் துறை நிபுணரை கலந்தாலோசகராகவும் கொண்டு பரிசீலித்து வருகின்றது. இக்குழு இதுவரை பதினைந்து முறை கூடியுள்ளது. கடைசியாக 27-6-2002-ல் நடந்த கூட்டத்தில் நில வருவாயிலிருந்து நீர்க் கட்டணத்தைப் பிரிப்பதற்குப் பதிலாக, உள்ளூர் வரி, உள்ளூர் மேல் வரி ஆகியவற்றை உயர்த்தலாமென்று பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரைகள் 25-7-2002-ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டன. அமைச்சரவைக் கூட்டம், முதல் மற்றும் 2 ஆம் வகுப்பு நன்செய்ப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.70 வீதமும் (எக்டேருக்கு ரூ.175) புன்செய்ப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.60 வீதமும் (எக்டேருக்கு ரூ.150) கூடுதல் பாசன வரி விதிக்க ஒப்புதல் வழங்கியது. இதைச் செயல்படுத்தும்பொருட்டு, நவம்பர் 11, 2002-ல் அரசு சட்டத் திருத்தம் அறிவிப்புச் செய்துள்ளது. 01-07-2003 முதல் சட்டத் திருத்தத்தை அமல்படுத்தும்பொருட்டு, அரசு 18-03-2003 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.



2004 ஜூலை 27]

**வேலைக்கு உணவுத் திட்டம்**

100 ஏக்கருக்கு (40 எக்டேர்) பாசனப் பரப்புடைய பொதுப் பணித் துறை பாசன தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகளைத் தூர்வாரி மேம்படுத்துதல்.

2003-04 வரவு செலவுத் திட்டத்தில் ரூ.105 கோடி மதிப்பில் 100 ஏக்கருக்கு (40 எக்டேர்) பாசனப் பரப்புடைய பொதுப் பணித் துறை பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகளைத் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்தை அரசு அறிவித்தது.

அரசாணை என் 191, பொ.பது. (டபிள்யு ஆர் 2) துறை நாள் 22-05-2003-ல் ரூ.10.5 கோடி மதிப்பில் 100 ஏக்கர் (40 எக்டேர்) அதற்கு மேல் பாசனப் பரப்புடைய பொதுப் பணித் துறை பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகளைத் தூர்வாரி மேம்படுத்த அரசு உத்தரவிட்டது. இந்தத் திட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சம்பூர்ண ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்துவதாகும். ரூ.10.5 கோடியில் ரூ.2.5 கோடி சம்பளப் பணமாகவும் (அதாவது 2.5%) மற்றும் ரூ.7.5 கோடி (அதாவது 7.5%) மதிப்பிற்கு கூலி அரிசியாகவும் வழங்குவதாகும். மீதி ரூ.5 கோடி பொருட்கள் வாங்குவதாகும்.

மண்டல தலைமைப் பொறியாளர்கள், ஏரிகளின் நிலைமை மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளின் வேண்டுகோளின்படி 1750 ஏரிகளை (40 எக்டேர் பாசனத்திற்குள்ள ஏரிகளும்) ரூ.10.5 கோடி மதிப்பில் தேர்வு செய்து பட்டியலில் சேர்த்தனர்.

மேற்படி பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

**தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ('நபார்டு' வங்கி) நிதி உதவியின்மூலம் சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பாசன மேலாண்மைப் பணிகளுக்கான திட்டம் – ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி – IX**

**V – முதல் கட்டம்**

157 சிறுபாசன மானாவாரி ஏரிகளை ரூ.45.43 கோடி மதிப்பீட்டில் 17101 எக்டேர் நிலங்கள் பயன்பெறும் பொருட்டு நபார்டு வங்கி நிதி கடன் உதவியின்மூலம் செயல்படுத்துவதற்கான திட்ட கருத்துரு நபார்டு

வங்கிக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு நபார்டு வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது.

### இரண்டாம் கட்டம்

107 சிறுபாசன மானாவாரி ஏரிகளை ரூ.28.29 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியின்மூலம் செயல்படுத்துவதற்கான திட்டக் கருத்துரு நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### மூன்றாம் கட்டம்

227 சிறு பாசன மானாவாரி ஏரிகளை ரூ.45.50 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியின்மூலம் செயல்படுத்துவதற்கான திட்டக் கருத்துரு நபார்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் இந்த இரண்டு கட்ட திட்டங்கள் (கட்டம் II & III) நபார்டு சமீபத்தில் வழங்கிய வழிகாட்டுதலின்படி திருத்தப்படுகிறது. அதன்பின் நபார்டு வங்கிக்கு அனுப்பப்படும்.

### ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி உதவியுடன் கிராம வளர்ச்சிக்காக சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம்

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி (கடல் கடந்த பொருளாதாரக் கூட்டுறுதி தொகை என முன்னால் அழைக்கப்பட்டது.) விதிமுறைகளின்படி சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துரு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழுவின் உதவிபெற டில்லியில் உள்ள ஜப்பான் தூதரகத்திற்கு அனுப்பி வைக்க, மைய அரசு நிதி அமைச்சகத்தின் பொருளாதாரத் துறைக்கு ஜூன் 1995-ல் அனுப்பி வைக்கப்பட்டது.

தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக, ஜப்பான் அரசு பார்வையாளர் குழுவினை ஜூலை 1999-ல் இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது. அக்குழு இத்திட்டத்தின் நோக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது. இந்திய மைய அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டு அமைப்பு 1996-ல் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு, ஆய்வினை பிப்ரவரி 1997-ல் முடித்தது. ஆய்வுக் குழு இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை எண்1-ஐ பிப்ரவரி 1997-ல் அளித்தது. இரண்டாம் கட்ட



ஆய்வினை நடத்தி முன்னேற்ற அறிக்கை எண் 2-ஐ இக்குழு ஜூலை 1997-ல் அளித்தது.

ஜப்பானிய ஆய்வுக் குழு, தல ஆய்வுகளை முடித்து காஞ்சிபுரம், திருவள்ளூர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 2093 மானாவாரி ஊரிகளை சீரமைப்பு செய்ய ரூ.890 கோடிக்கு திட்டக் கருத்துருவினைத் தயாரித்து 1998 ஆம் ஆண்டு மே திங்களில் சமர்ப்பித்தது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி கேட்டுக்கொண்டதற்கிணங்க, நவம்பர் 2001 மற்றும் பிப்ரவரி 2002-ல், ஏற்கெனவே நீர்வள ஆதார திட்டம்மூலமும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (ஆர்.ஐ.டி.எப் V)மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏரிகள் நீக்கப்பட்டு, 171620 எக்டேர் பரப்பிற்கு பயனளிக்கும் 1798 ஏரிகளை ரூ.914 கோடியில் புனரமைக்க திட்டம் திருத்தப்பட்டது. செப்டம்பர் 2002-ல் மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.785 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கடலரிப்புப் பாதுகாப்புத் திட்டங்கள்

தமிழ்நாட்டின் கடற்கரையின் நீளம் 960 கி.மீ. ஆகும். இதில் 900 கி.மீ. வங்காள விரிகுடா கரையோரமாகவும், 60 கி.மீ. அரபிக் கடலோரமாகவும் அமைந்துள்ளது. கிழக்குக் கடற்கரை தொடர்ந்து கடலரிப்பிற்கு உள்ளாகிறது. சமீப ஆண்டுகளில் கடலரிப்பின் தாக்கம் அச்சம் தரும் விதமாக உள்ளது. இப்பிரச்சினையைத் தீர்க்க அரசு பல பாதுகாப்பு முறைகளை அமல்படுத்தி வருகிறது.

மீன்பிடி துறைமுகத்திலிருந்து எண்ணூர் வரை செல்லும் எண்ணூர் விரைவுப் பாதை சுமார் 9.20 கி.மீ. நீளத்திற்கு கடுமையாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விரைவுச் சாலையில் ஏற்படும் கடலரிப்பைத் தவிர்க்க பெருங்கற்களைக் கொண்டு கற்சுவர் அமைக்கும் பணி பல கட்டங்களில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மற்றும் வடசென்னையில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட கடலரிப்பு தடுப்புப் பணிகள் முடிவு பெற்றுவிட்டன. மேலும் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ.57.69 கோடி மதிப்பீட்டு செலவில் கடற்கரைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதலளித்துள்ளது. இதில் ஹட்கோ ரூ.57.68 கோடி உதவியுள்ளது.

[2004 ஜூலை 27

மேலும் மைய நீர்வள ஆணையத்தின் வழிகாட்டுதல்படி தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதுவரையில் எந்தத் திட்டத்திலும் இடம்பெறாத 7 மாவட்டங்களில் உள்ள 29 பாதிப்புப் பகுதிகளை 13.824 கி.மீ. நீள கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்திற்கான திருத்திய கருத்துரு ரூ.169 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு மைய நீர்வள ஆணையத்திடம் செப்டம்பர், 2002 அன்று அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் தேசிய கடலரிப்புத் திட்டம் கட்டம் I-ல் சேர்க்கப்பட்டு மைய நீர் ஆணையம், நீர்வள அமைச்சகத்திற்கு பிப்ரவரி 2003-ல் அனுப்பியுள்ளது. இந்த முக்கியமான பாதிக்கும் 29 பகுதியாவன:

| | | |
|---|---|---|
| அ. | வடசென்னை | 1. பெரியகுப்பம் |
| | | 2. சின்னக்குப்பம் |
| | | 3. எர்ணாவூர்குப்பம் |
| | | 4. அன்னை சிவகாமி நகர் குப்பம் |
| | | 5. இந்திரா காந்தி நகர் குப்ப. |
| ஆ. | காஞ்சிபுரம் மாவட்டம் | 6. கோவளம் குப்பம் |
| | | 7. ஓய்யாலி குப்பம் |
| | | 8. சின்னக்குப்பம் மற்றும் பெரியகுப்பம் மற்றும் அல்லி குப்பம் |
| இ. | கடலூர் மாவட்டம் | 9. தேவனாம்பட்டினம் |
| ஈ. | நாகப்பட்டினம் மாவட்டம் | 10. பூம்புகார் |
| | | 11. தரங்கம்பாடி |
| | | 12. ஆரியன்துத்தேரு |
| | | 13. செறுதூர் வேளாங்கண்ணி |
| உ. | தூத்துக்குடி மாவட்டம் | 14. பெரியதாளை |
| | | 15. ஆலந்தாளை |



2004 ஜூலை 27]

| | | |
|---|---|---|
| ஊ. | திருநெல்வேலி மாவட்டம் | 16. கூந்தக்குழி |
| | | 17. கோட்டப்புலி |
| | | 18. உவரி |
| | | 19. இடிந்தகரை |
| | | 20. கூத்தப்பனை |
| | | 21. தோமயாபுரம் |
| | | 22. பெருமணல் |
| | | 23. கூடுதாளை |
| எ. | கன்னியாகுமரி மாவட்டம் | 24. ரட்சகர் தெரு |
| | | 25. கோடிமுனை (ஆர்.எம்.எஸ்) |
| | | 26. கோடிமுனை (கிராயின்) |
| | | 27. கீழ்மிட்டலம் |
| | | 28. சின்னாத்துறை |
| | | 29. மார்த்தாண்டம் துறை |

தேசிய கடலரிப்புத் திட்டத்திலுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் முக்கியமாக பாதிக்கும் பகுதியில் ஒன்றான பெரியதாளை திட்டம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2003-04 ஆம் ஆண்டில் ரூ.6.00 கோடிக்கு மத்திய நிதி உதவித் திட்டத்தில் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துரு மத்திய நீர்வள ஆணையத்திற்கு அனுப்புவதற்காக பரிசீலனையில் உள்ளது.

**நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் 3392 மானாவாரி ஏரிகளை ரூ.542.60 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டம்**

17 வடிநிலங்கள் உள்ளடங்கிய பத்தொன்பது மாவட்டங்களில்

(1. திருவள்ளூர், 2. காஞ்சிபுரம், 3. திருவண்ணாமலை, 4. வேலூர் 5. தர்மபுரி, 6. சேலம், 7. விழுப்புரம், 8. கடலூர், 9. பெரம்பலூர், 10. தஞ்சாவூர், 11. புதுக்கோட்டை, 12. திண்டுக்கல், 13. தேனி, 14. மதுரை, 15. சிவகங்கை, 16. இராமநாதபுரம், 17. விருதுநகர், 18. தூத்துக்குடி, 19. திருநெல்வேலி) 3392 மானாவாரி ஏரிகளை ரூ.542.60 கோடி மதிப்பில்

[2004 ஜூலை 27

புனரமைக்கும் திட்டம் உலக வங்கி கட்டம் II நிதி உதவியை பெறும்பொருட்டு தலைமைப் பொறியாளர் திட்ட உருவாக்கம் அவர்கட்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 290161 எக்டேர் பாசன நிலம் பயனடையும்.

### வெளிநாட்டு உதவி திட்டங்களின்கீழ் ரூ.65.59 கோடி மதிப்பில் 247 ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம்

வைப்பார் வடிநிலம் உள்ள நான்கு மாவட்டங்களில் திருநெல்வேலி, விருதுநகர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 24622 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைய 247 மானாவாரி ஏரிகளை ரூ.65.59 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பொ.ப.து. கடிதம் 34008, டபிள்யு.ஆர்2/02-03 நாள் 2-12-2002-ல் இந்திய அரசின் நீர்வள அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் வெளிநாட்டு உதவிபெற (ஒபியிசி, குவைத், சௌதி, அபுதாபி ஆகிய நாடுகள்) அனுப்பப்பட்டுள்ளது.

### ஜெர்மன் உதவியுடன் 310 ஏரிகளை ரூ.267.92 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டம்

200 ஏக்கர் பரப்பிற்கு மேலேயுள்ள 310 ஏரிகளை ரூ.267.92 கோடி மதிப்பில் இருபது மாவட்டங்களில் (1. கோயம்புத்தூர், 2. கடலூர், 3. தர்மபுரி, 4. திண்டுக்கல், 5. கன்னியாகுமரி, 6. கரூர், 7. மதுரை, 8. நாமக்கல், 9. பெரம்பலூர், 10. புதுக்கோட்டை, 11. சேலம், 12. தஞ்சாவூர், 13. தேனி, 14. திருவண்ணாமலை, 15. திருவாரூர், 16. திருநெல்வேலி, 17. திருச்சி, 18. தூத்துக்குடி, 19. வேலூர், 20. விழுப்புரம்) புனரமைக்கும் திட்டம் நீர்வள அமைச்சகம், இந்திய அரசிற்கு ஜெர்மன் நிதி உதவி பெற அனுப்பப்பட்டுள்ளது. 2003 மே திங்களில் புது டெல்லியில் நடைபெற்ற இந்திய ஜெர்மன் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, வேண்டிய விவரங்கள் மே 2003-ல் இந்திய அரசின் நீர்வள அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழக அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்,



2004 ஜூலை 27]

சேலம், நாமக்கல், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாக" கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

### மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

1986-87 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 24 வட்டங்களைத் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், புதிய குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

### தமிழ்நாட்டில் கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுத்துப் புனரமைத்தல்

நமது மாநிலத்தில் கண்மாய்கள் முக்கியமாக நீர்வள ஆதாரத்தைப் பெருக்கவும், கிராமப்புற மக்களுக்குப் பயன்பெறும் வகையில் உள்ளது. முக்கியமாக நதிகள் இல்லாத பகுதியில் பல கண்மாய்கள் அமைந்துள்ளன. இந்த நீர் சேகரிப்புக் கண்மாய்கள் நமது முன்னோர்களால் அமைக்கப்பட்டு உள்ளூர் மக்களால் பல காலங்களாக மேலாண்மை செய்யப்பட்டு வந்துள்ளன.

கடந்த சில வருடங்களாக கண்மாய்களினால் பயன்பெறக்கூடிய விவசாயப் பரப்பு குறைந்து வருகிறது. இதன் முக்கிய காரணம் படுகையில் வண்டல் மண் படிதல், வரத்துக் கால்வாய் மண் படிதல், ஆக்கிரமிப்புகள் கண்மாய் கரைகளிலும், உள் வாயிலிலும் மற்றும் நீர் நிரம்பும் பகுதிகள் மற்றும் வழங்கு கால்வாயிலும் இருத்தல், மடைகள், கலுங்கு மற்றும் கரைகளில் பழுது காணப்படுதல் ஆகும்.

இந்த மாநிலத்தில் கண்மாய்கள் அழிந்து வரும் நிலையிலும் பருவமழை சரியாகப் பெய்யாததாலும் நடுத்தர மற்றும் சிறு விவசாயிகள் துன்பப்பட்டுக் கடனாளிகளாக மாறிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலையைப் போக்கவும், கண்மாய்களின் நீர்க் கொள்ளளவுத் திறனை அதிகரிக்கவும் இந்த அரசு இருக்கின்ற நீர்வளத்தை நன்கு பயன்படுத்த அக்கறை கொண்டுள்ளது. இந்த நீர்க் கொள்ளளவுத் திறன் அதிகரிப்பினால் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் கிராம மக்களுக்குப் பெரும்பாலும் பயனுள்ளதாக அமையும்.

இதனைக் கருத்தில் கொண்டு பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முறைப் பாசன, முறையில்லா பாசன ஏற்பாடு இல்லாத மழைநீர் சேகரிப்புக் கண்மாய்களின் நிலையைச் சரிசெய்து உள்ளூர் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.24.36 கோடி மதிப்பில் “ஹட்கோ” நிதியுதவி பெற்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல் மற்ற மாவட்டங்களில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கண்மாய்களின் நிலையினைக் கருத்தில் கொண்டு மற்ற நிதி நிறுவனங்களிடம் கடன்பெற்று புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**காவிரி நதிநீர் தாவா**

காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி ஒரு வருடத்தில் ஜூன் முதல் மே மாதம் வரை 205 டி.எம்.சி. நீரை மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு கர்நாடகா அளிக்க உறுதி செய்யப்பட வேண்டும். இந்த நீரை அவ்வாணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர அடிப்படையில் அளிக்க வேண்டும். மாதந்தோறும் அளிக்க வேண்டிய நீரை நான்காகப் பிரித்து வாராந்திர அடிப்படையில் அளிக்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு வாரத்தில் குறைவு ஏற்படுமானால், அக்குறைபாடு பின்வரும் வாரத்தில் ஈடு செய்ய வேண்டும். இவ்வாணை 1-7-1991 முதல் செயலாக்கத்திற்கு வரும். இந்த 205 டி.எம்.சி. நீரிலிருந்து தமிழ்நாடு, பாண்டிச்சேரிக்கு 6 டி.எம்.சி. நீரை விடுவிக்க வேண்டும். காவிரி நீரைக் கொண்டு கர்நாடகா நடுவர் மன்றத்தில் தெரிவித்தவாறு அதன் பாசனப் பரப்பை மே 1991-ல் இருந்த 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல் விரிவாக்கம் செய்யக் கூடாது.

2. இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இவ்வாணையை கர்நாடகா செயல்படுத்த முன்வரவில்லை.





3. மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம் 1956 (மத்திய சட்டம் 33/1956) பிரிவு 6-ன்கீழ் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயற்படுத்துவதற்கான ஒரு திட்டத்தினை மத்திய அரசு தீட்ட உத்தரவு வழங்குமாறும் கோரி தமிழ்நாடு மே 1992-ல் ஒரு வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததன் அடிப்படையில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம் 1956 (மத்திய சட்டம் 33/1956) பிரிவு 6-ன்கீழ் நடுவர் மன்ற இடைக்கால ஆணையை திறம்பட செயலாக்குவதற்காக காவிரி நதிநீர் ஆணையத்தையும், காவிரி கண்காணிப்புக் குழுவையும் மத்திய அரசு ஏற்படுத்தி அதை அதன் அரசிதழில் 11-8-1998 அன்று வெளியிட்டது. காவிரி நதிநீர் ஆணையம் பிரதமரை தலைவராகவும், காவிரி படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் செயல்பட்டு வருகிறது. காவிரி கண்காணிப்புக் குழு மத்திய ஆதார அமைச்சகச் செயலரை தலைவராகவும், காவிரி படுகை மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மத்திய நீர்க் குழுமத்தின் தலைமைப் பொறியாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிறது. காவிரி நதிநீர் ஆணையம், 28-10-1998, 14-7-2000, 10-10-2001, 27-8-2002, 8-9-2002 மற்றும் 10-2-2003 ஆகிய நாட்களில் ஆறு முறை கூடியது. காவிரி கண்காணிப்புக் குழு 20 முறை கூடியது. கடைசியாக 19-1-2004 அன்று கூடியது.

4. கர்நாடகா அரசு இடைக்கால ஆணைகளையோ அல்லது ஆணையத்தின் முடிவுகளையோ செயல்படுத்த முன்வரவில்லை. இந்த ஆணையத்திற்கு போதுமான அதிகாரங்கள் இல்லாத நிலையில் நடுவர் மன்ற இடைக்கால ஆணைகளையும் மற்றும் ஆணையத்தின் முடிவுகளையும் கர்நாடகாவைச் செயலாக்க கட்டாயப்படுத்த இவ்வாணையத்தால் முடியவில்லை.

5. காவிரி நதி தாவா குறித்த அனைத்து நிலைகளையும் ஆய்வு செய்து, 19-9-2001 மற்றும் 10-7-2002 ஆகிய நாட்களில் உச்ச நீதிமன்றத்தில் 2 சிவில் வழக்குகளை தமிழக அரசு தாக்கல் செய்தது. அதில் வைக்கப்பட்டுள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:

1) கர்நாடகா நடுவர் மன்ற இடைக்கால ஆணையைச் செயல்படுத்த உத்தரவிட வேண்டும்.

2) காவிரி நதி ஆணையம் வாராந்திர/மாதாந்திர அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு நீர் அளிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட வேண்டும்.

3) நடுவர் மன்ற ஆணையின்படி நீர் வரத்தை உறுதி செய்யும் பொருட்டு திட்டத்தினை உரிய முறையில் மாற்றியோ, திருத்தியோ, அதற்கு விளக்கமளித்தோ ஒரு திட்டத்தினைத் தீட்டி அது தன்னிச்சையாக இயங்கும் வகையில் இருக்க வேண்டி, ஓர் உறுத்துக் கட்டளையை (Decree) பிறப்பிக்குமாறு உத்தரவிட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட இரண்டு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளன.

6. இடர்பாடு காலங்களில் நீரைப் பகிர்ந்துகொள்வது பற்றிய வழிமுறைகளை வகுப்பது குறித்து 2001 அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற காவிரி நதி ஆணையத்தின் 3-வது கூட்டத்திலேயே துவக்கப் பட்டபோதிலும், அந்த வழிமுறைகள் இன்னும் இறுதி செய்யப் படவில்லை. ஒரு வழிமுறைக் கொள்கை மத்திய நீர்க் குழுமத்தினால் வகுக்கப்பட்டு, இந்த வழிமுறைக் கொள்கை சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்து கோரப்பட்டு காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் அதன்மீது விரிவான விவாதம் மேற்கொண்டபின், வழிமுறைகளை இறுதி செய்வதற்காக காவிரி நதி ஆணையத்தின் முடிவுக்கு விடலாம் என முடிவு செய்யப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக நடுவர் மன்றம் அதன் இடைக்கால ஆணையை பிறப்பித்ததிலிருந்து இது மிகவும் மோசமான ஆண்டு ஆகும். இந்த ஆண்டு நடுவர் மன்றத்தால் நிர்ணயம் செய்த 20.5 டி.எம்.சி. அடி நீருக்கு எதிராக மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு 65.14 டி.எம்.சி. அடி நீர்தான் கிடைக்கப்பெற்றது.

7. காவிரி நடுவர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட பிரச்சினைகளில் இரண்டு பிரிவுகளின்மீது வாதப்பிரதிவாதங்கள் முடிவுற்று கடைசி பிரிவான மாநிலங்களிடையே நீர் ஒதுக்கீடு செய்வது குறித்த பிரிவின்மீது சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வாதப்பிரதிவாதங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

8. காவரி நடுவர் மன்ற ஆணைப்படி நீரைப் பெறுவதிலும், தமிழக விவசாய பெருமக்களின் நலனைப் பாதுகாக்கவும் தமிழக அரசு தொடர்ந்து அதன் முயற்சியை மேற்கொள்ளும்.

## கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம்

1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் தமிழக அரசு ஆந்திரப் பிரதேச அரசிடம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி சென்னை பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதியிலிருந்து ஓராண்டில் 8 மாத காலங்களில் வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்.சி. போக 12 டி.எம்.சி.



நீர் ஆந்திர அரசால் தமிழ்நாடு– ஆந்திர எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள் "கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்" என்றும் ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கை திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக, அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ.46.14 கோடியாகும். இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை 1996-97 ஆண்டுக்குரிய விலைப் பட்டியலின்படி ரூ.196.04 கோடியாகும்.

தெலுங்கு கங்கை திட்டப் பணிகளின் மொத்த மதிப்பீடு 9/97 திட்ட அறிக்கையின்படி ரூ.2345.00 கோடியாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.639.40 கோடியாகும். இதுவரை ஆந்திரப் பிரதேச அரசு ரூ.1820 கோடி செலவு செய்துள்ளது. தமிழக அரசு தன் பங்காக ரூ.512 கோடி ஆந்திரப்பிரதேச அரசுக்குக் கொடுத்துள்ளது.

கண்டலேறு அணையிலிருந்து 29-9-1996 அன்று முதன்முதலாக ஆந்திர மாநிலம் தண்ணீர் திறந்து விட்டது.

கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவும் மற்றும் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | கண்டலேறு அணையிலிருந்து கே.பி. கால்வாயில் திறந்துவிடப்பட்ட நீரின் அளவு | தமிழ்நாட்டின் எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு | பெறப்பட்ட நீர் அளவின் விழுக்காடு |
|---|---|---|---|
| | டி.எம்.சி. | | |
| 1996-1997 | 0.610 | 0.076 | 12.50 % |
| 1997-1998 | 4.339 | 2.290 | 52.80 % |
| 1998-1999 | 4.077 | 2.810 | 69.00 % |
| 1999-2000 | 3.990 | 1.830 | 45.86 % |
| 2000-2001 | 17.790 | 6.688 | 37.59 % |
| 2001-2002 | 1.108 | 0.400 | 36.10 % |
| 2002-2003 | 9.461 | 3.262 | 34.48% |

[2004 ஜூலை 27

10-1-2003-ல் நடைபெற்ற 39-வது கூட்டுக் குழு கூட்டத்தில் ஆந்திர அரசிடம் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு நீரினைத் திறந்துவிடக் கேட்டுக்கொள்ளப்பட்டது. கண்டலேறு அணை முதல் பூண்டி வரை உள்ள கால்வாயில் ஆந்திர எல்லை வரை 12 டி.எம்.சி. நீர் பெறும்வகையில் மேம்படுத்தும் பணிகளைச் செய்ய ஸ்ரீ சத்தியசாய் அறக்கட்டளை முன்வந்துள்ளது. இப்பணி ஆரம்பிக்கப்பட்டு முழுமையாக முடிக்கப்பட்டது. 40-வது கூட்டுக் குழுக் கூட்டத்தைக் கூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழக எல்லையில் கண்டலேறு பூண்டி கால்வாய் 0 கி.மீ. முதல் 25.275 கி.மீ. வரை சீரமைக்க அரசு ரூ.146.50 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் தொடங்கப்பட்டு 50 விழுக்காடு பணிகள் முடிவுபெற்றுள்ளன. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

வடகிழக்கு பருவமழை தவறியதால் கண்டலேறு அணையில் 1.46 டி.எம்.சி.-யும், சோமசீலாவில் 1.61 டி.எம்.சி.-யும் மற்றும் ஸ்ரீசைலம் அணையில் 25.68 டி.எம்.சி. மட்டுமே நீர் இருப்பில் இருந்தது. இது சென்னை நகருக்கு நீர் வழங்குவதற்கு போதுமான அளவு இல்லை.

எனினும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1 டி.எம்.சி. தண்ணீர் சென்னை நகருக்காக கண்டலேறு அணையிலிருந்து 12-01-2004 அன்று திறந்துவிடப்பட்டது. 13-02-2004 அன்று '0' பாயிண்டில் நீர் பெறப்பட்டது. இதுவரை 0.210 டி.எம்.சி. நீர் பெறப்பட்டுள்ளது. 2004-2005 நிதி ஒதுக்கீடு – ரூ.1200.66 இலட்சம்.

**புதிய வீராணம் திட்டம்**

புதிய வீராணம் திட்டம் ஆகஸ்டு 93 ஆம் ஆண்டு உலக வங்கித் திட்டமாக "இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டம்- புதிய வீராணம்" என்ற பெயரில் ரூ.464.00 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் சென்னைக்கு ஒரு நாளைக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வொப்பளிப்பு ரூ.60 கோடி, கீழ்க்கண்ட நீர் ஆதார மேம்பாட்டு வேலைகளை உள்ளடக்கியது.

(1) கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் எடுத்துச் செல்லும் வடவாறு கால்வாயை மேம்படுத்துதல்



2004 ஜூலை 27]

(2) வீராணம் ஏரியில் உள்ள திட்டுக்களை அகற்றுதல்; ஏரியின் உயரத்தை 2 அடி உயர்த்தி தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1485 மி.கன அடியாக அதிகப்படுத்துதல்

(3) ஏரியின் மேற்கரையினைப் பலப்படுத்துதல்

திருத்திய நிர்வாக ஒப்பளிப்பில் வடவாறு (1996 ஏப்ரல்) கால்வாயிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுத்துச் செல்லும் மற்றக் கால்வாய்களை நவீனப்படுத்துவதும் உறுப்பும் இணைக்கப்பட்டு ரூ.110.95 கோடி நீர்வள ஆதார மேம்பாட்டு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 56,034 ஏக்கர் (வடவாற்றின் 11,178 ஏக்கரும், வீராணம் ஏரியின் 44,856 ஏக்கரும் உள்ளடக்கியது) நிலத்திற்குத் தடையின்றிப் பாசன வசதி செய்திட எதிர்நோக்கப்பட்டது.

அரசு, சென்னைக் குடிநீர் வழங்கு திட்டத்தை 18 மாதங்களுக்குள் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது. இதற்காக நீரை அனுப்பும் பணிகளை விரைவில் முடிக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. திட்டச் செயலாக்கத்துக்கு அத்தியாவசியப் பணிகளுக்கு ரூ.35 கோடி கடனுதவியை வழங்க தமிழ்நாடு நகர நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டு நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் 25 தொகுப்புகள் உள்ளன. அவற்றின் மதிப்பீடுகளும் தற்போதைய நிலையும் கீழே தரப்பட்டுள்ளன.

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | வடவாறு கால்வாயினை மேம்படுத்துதல் | 6 | 26.39 | 4 தொகுப்புகளிலுள்ள வேலைகள் முடிவுற்றன. மீதமுள்ள 2 தொகுப்புகளிலுள்ள பணிகளில் 90 விழுக்காடு முடிவுற்றன. |
| 2. | வீராணம் ஏரியின் முழு நீர்த்தேக்க மட்டத்தினை 2 அடி 0.6 (மீ) உயர்த்தி அதன் முக்கிய கரையினைப் பலப்படுத்துதல் | 4 | 10.68 | அனைத்து பணிகளும் முடிவுற்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | தற்போதைய மேல்புறக் கரையினைப் பலப்படுத்துதல் மற்றும் புதிய மேல்புறக் கரை அமைத்தல் | 4 | 10.31 | வேலை முடிவுற்றது. |
| 4. | பாசனநீர் எடுத்துச் செல்லும் வடவாற்றின் 24 கால்வாய்களையும் வீராணம் ஏரியின் 34 கால்வாய் களையும் நவீனப்படுத்துதல் | 2 | 25.00 | வடவாற்றில் 7 வாய்க்கால்களும், வீராணம் ஏரியில் 5 வாய்க்கால்களும் புனரமைக்கும் பணி ஒப்பந்தப்புள்ளி ஆய்வு செய்யும் பணி முடிந்தவுடன் தொடங்கப்பட உள்ளது. |
| 5. | வீராணத்தின் முக்கிய கரையின் மேல் தார் சாலை அமைத்தல் | 2 | 1.50 | முக்கிய வேலைகள் முடிவுற்றபின் நிதி நிலைக்கேற்ப செயல் படுத்தப்படும். |
| 6. | கீழ் அணைக்கட்டு மதகுகளைச் சீர் செய்தல் | 1 | 1.08 | 17 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7. | வீராணத்தின் கீழ்மட்ட கலுங்கு, கோதாவரி வடிகால் மற்றும் உபரி நீர்ப்போக்கி மதகு மற்றும் யு.என்.எஸ்.எஸ். மதகுகளை மேம்படுத்துதல், வடவாற்றின் குறுக்கே புதிய மதகினை அமைத்தல் | 4 | 5.37 | கோதாவரி வடிகால் நீங்கலாக இதர பணிகள் முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு மேற்கொள்ளப்பட உள்ளது. பணி தொடங்கப்பட உள்ளது |



| | | | | |
|---|---|---|---|---|
| | பணியாளர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதிய கிட்ட இல்லம் கட்டுதல் | 2 | 0.55 | வேலை முடிவுற்றது. |
| | இதர இனங்கள், விலையேற்றம் உட்பட | | 30.07 | |
| | மொத்தம் | 25 | 110.95 | |

கட்டுமானப் பொருட்கள் மற்றும் வேலையாட்களின் கூலி போன்றவற்றில் விலை ஏற்றத்தால் திருத்திய மதிப்பீடு ரூ.130 கோடிக்கு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.62.10 கோடி செலவிடப்பட்டது.

2004-2005 நிதி ஒதுக்கீடு ரூ.1400.00 இலட்சம்.

## பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் - ஒப்பந்தம் புதுப்பித்தல்

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கிடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தம் 29-5-1970-ல் கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி 9-11-1958 அன்று முதல் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் அதன் பிறகு ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால அனுபவத்தின் அடிப்படையில் இருசாரார் ஒப்புதலின்பேரில் ஒப்பந்தம் மறுபரிசீலனைக்குட்பட்டது. இந்த ஒப்பந்தம் 9-11-1988-ல் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

2. இரு அரசுகளும் 21-9-1989 அன்று ஆவணங்களைப் பரிமாறிக்கொண்ட பின்னர், பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால் சென்னையில் 10-6-2002 அன்று அமைச்சர்களிடையேயான பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, பரம்பிக்குளம்

[2004 ஜூலை 27

ஆழியாறு ஒப்பந்தத்தின் முதல் மறு ஆய்வினை விரைந்து முடிக்கும்பொருட்டு அமைச்சர்களிடையேயான பேச்சுவார்த்தை 13-2-2003, 10-11-2003 மற்றும் கடைசியாக 4-1-2004 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

4. தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலும் மற்றும் ஒப்பந்தத்தின் முதல் மறு ஆய்வினை விரைவில் முடிக்க வேண்டியும் இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**பாண்டியாறு - புன்னம்புழா திட்டம்**

மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியான பாண்டியாறு புன்னம்புழா தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு - புன்னம்புழா நீலகிரி மலையில் உள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 5 கி.மீ. மேற்கே இணைகின்றன. இந்த இணைப்புக்குகீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நீலாம்பூர் அருகே சாறியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு "பேபூர்" என்ற இடத்தில் அரபிக்கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி-மைசூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965 ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 ச.கி.மீ. (66.20 சமைல்) பரப்புடைய நீர்ப்பிடிப்புப் பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரை 500.60 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையைப் பயன்படுத்தி முதல் கட்டமாக 100 மெ.வா. (2X50 மெ.வா.) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா. மின்சாரம் தயாரிக்கவும் திட்டம் திட்டப்பட்டது. இதனால் 409 மி.யூ. ஆண்டு சராசரி மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1969-ல் ஒப்புதல் அளித்தது.

அதன் பிறகு, கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும்வண்ணம் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை



2004 ஜூலை 27]

ஆராயக் கேட்டுக்கொண்டதின்பேரில், பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட விரும்பியது.

தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு கேரள அரசின் இசைவினைப் பெறுவது இன்றியமையாததாகிறது. இந்தத் திட்டத்தை கேரள அரசின் இசைவு பெற்று நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையினை முழு முனைப்புடன் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது.

**தேசிய தொலைநோக்கு திட்டத்தில் தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டம்**

**மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-காவிரி-வைப்பாறு இணைப்புகள்**

மத்திய அரசு தயாரித்துள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப நதிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்புவது உள்ளடக்கிய மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவேரி, வைகை மற்றும் குண்டாறு நதிகளை இணைப்பது உத்தேசிக்கப்பட்டுள்ளது. தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளுதல் மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல் போன்ற பணிகள் தேசிய நீர் மேம்பாட்டு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. மகாநதி-கோதாவரி, கோதாவரி-கிருஷ்ணா, கிருஷ்ணா-பெண்ணாறு, பெண்ணாறு-காவேரி மற்றும் காவேரி-வைகை-குண்டாறு இணைப்புகளுக்கான முன் சாத்தியக்கூறு அறிக்கைகளை தேசிய நீர் மேம்பாட்டு முகமை ஏற்கெனவே தயாரித்துள்ளது. இம்முகமை உபரி மற்றும் பற்றாக்குறைப் படுகைகள் மற்றும் மகாநதி மற்றும் கோதாவரி நதிகளில் உள்ள உபரி நீரைக் கண்டறிந்து அவ்வுபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி, வைகைப் படுகைகளுக்கு எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றைக் கண்டறிந்துள்ளது.

3. தீபகற்ப நதிகள் மேம்பாட்டுத் திட்டத்தை விரைந்து முடிப்பதில் இவ்வரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது.

[2004 ஜூலை 27

4. நதிகளை இணைக்கும் பணியினைத் துரிதப்படுத்துவதற்காக டிசம்பர் 2002-ல் ஒரு சிறப்புப் பணிப் பிரிவை (Task Force) மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

5. இந்தச் சிறப்புப் பணிப் பிரிவின் அப்போதைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 16-4-2003 அன்று சந்தித்தபொழுது, தீபகற்ப நதிகள் இணைப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை உள்ளடக்கிய அனைத்து உதவி மற்றும் ஒத்துழைப்பை இவ்வரசு அளிக்கும் எனத் தெரிவித்துள்ளார்கள். மேலும், தீபகற்ப நதிகள் இணைப்பிற்கு உயரிய முன்னுரிமை அளித்து, முதல் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு 10-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்கள்.

6. நதிகள் இணைப்புத் திட்டம் குறித்து தாக்கல் செய்யப் பட்டுள்ள பொதுநல வழக்கு (நீதிப் பேராணை) ஒன்றும் உச்ச நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது.

**பம்பா அச்சன்கோயில் மற்றும் வைப்பாறு நதிகள் இணைப்பு**

மத்திய அரசினால் தயாரிக்கப்பட்ட தேசிய தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியான தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டு திட்டப்படி தீபகற்ப ஆறுகள் இணைப்பிற்கான ஆய்வு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி தேசிய நீர் மேம்பாடு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்புவது என்பது தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டின் ஒரு பகுதியாகும்.

தேசிய நீர் மேம்பாடு முகமை, பம்பா–அச்சன்கோயில்–வைப்பாறு இணைப்புத் திட்டத்தை கேரளாவின் பம்பா–அச்சன்கோயில் ஆறுகளின் மிகை நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாட்டின் சங்கரன்கோவில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,400 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறவும் அதற்காக 22 டி.எம்.சி. நீரைத் திருப்பவும் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு பாசன வசதி தருவது தவிர அதிகபட்சமாக 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. தேசிய நீர் மேம்பாடு முகமையின் ஆய்வுப்படி இந்த 22 டி.எம்.சி. நீரானது பம்பா–அச்சன்கோயில் ஆறுகளில் கிடைக்கும் மிகை நீரில் சுமார் 20 விழுக்காடு மட்டுமே ஆகும்.



2004 ஜூலை 27]

தமிழக அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதலை வழங்கியுள்ளது. இதனிடையில் கேரள அரசு தேசிய நீர் மேம்பாடு முகமையிடம் தனது மறுப்பைத் தெரிவித்திருப்பதுடன் தேசிய நீர் மேம்பாடு முகமையின் ஆய்வு அறிக்கை சுற்றுப்புறச்சூழல் மற்றும் உயிரினங்கள் வாழ் சூழல் போன்றவை கருத்தில்கொள்ளவில்லை என்றும் மேலும் 2051 ஆம் ஆண்டு வாக்கில் பம்பா–அச்சன்கோயில் ஆறுகளில் இருந்து திருப்புவதற்கு ஏதுவாக உபரிநீர் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளது.

26-03-2003 அன்று நடைபெற்ற நீர் மேம்பாடு முகமையின் 19-வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் கிடைக்கும் நீரை ஆய்ந்தறிய புதியதாக ஒரு ஆய்வினை தேசிய நீர் மேம்பாடு முகமையும், கேரளாவின் நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை மையமும் (CWRDM) இணைந்து மேற்கொண்டு அறிக்கையை தேசிய நீர் மேம்பாடு மையத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பிப்பது என முடிவு செய்யப்பட்டது.

நதிகள் இணைப்பை அமல்படுத்த கேட்டு, பணிக் குழுவின் (Task Force) தலைவருக்கு எழுதிய தமது 16-04-2003 நாளிட்ட கடிதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வறட்சிப் பகுதியான இராமநாதபுரம் பகுதிகள் பயனுறும் வகையில் மேற்கு நோக்கிப் பாயும் பம்பா அச்சன்கோயில் ஆறுகளை கிழக்கே திருப்பும் பணியினை விரைவுபடுத்திட கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

6-08-2003 அன்று கேரள அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தில், அரசியலமைப்பு சட்டப்படி நீர் மாநில வரம்பிற்குள் வருவதால் மத்திய அரசோ அல்லது வேறு எந்த முகமைகளோ இது விஷயத்தில் தலையிடுவதற்கோ அல்லது தூண்டுகோலாய் இருப்பதற்கோ அதிகாரமில்லை எனும் நிலையை எடுத்துள்ளார்கள். இந்நிலையில் மத்திய அரசு இவ்விஷயத்தை கேரள அரசிடம் கொண்டுசென்று திட்டத்தைத் தொடர ஆவன செய்யும். மத்திய அரசால் நிறுவப்பட்ட பணிக் குழுவும் மேற்குறித்த விஷயம் குறித்து விவாதித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க உள்ளது.

**மாநில நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

விவசாயத்தையே பெரிதும் நம்பியுள்ள மாநிலமாகிய தமிழ்நாடு மாநிலம் பாசன உபயோகத்திற்கும், குடிநீர் உபயோகத்திற்கும் மற்றும் தொழிற்சாலை உட்பட இதர உபயோகத்திற்கும் மேற்பரப்பு நீர் மற்றும்

[2004 ஜூலை 27

நிலத்தடி நீரின் இருப்பினையே நம்பி செயல்படுகிறது. நீர்த்தேக்கம் மற்றும் நீர்நிலை ஏரிகளின்படி (75 விழுக்காடு சார்ந்திருத்தலின்படி) மொத்த மேற்பரப்பு நீர்வளம் 825 டி.எம்.சி. (23,371 மி.க.மீ.) ஆகும். சுமார் 95 விழுக்காடு மேற்பரப்பு நீர் முழு அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய காரணங்களுக்காக நிலநீர் வளங்களில் முழுக் கவனத்தையும் ஒருமுகப்படுத்தி இவ்வளத்தினையே நம்ப வேண்டிய நிலையில் உள்ளது. மாநிலத்தின் நிலத்தடி நீர்வளம் 1992 ஆம் ஆண்டின்படி, பயன்படுத்தப்பட்ட 63 விழுக்காடு, 2003 ஆம் ஆண்டின்படி 80 விழுக்காட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. சமீபத்திய ஒன்றிய வாரியாக நிலத்தடி நீர் மதிப்பீட்டின்படி ஜனவரி 2003 வரை மொத்த நிலத்தடி நீர் இருப்பாகிய 815 டி.எம்.சி. (23070.42 மி.க.மீ) மீதமுள்ள நிலத்தடி நீர் இருப்பு 111 டி.எம்.சி.-யாக (3142.27 மி.க.மீ.) உள்ளது. இந்த மீதமுள்ள நிலத்தடி நீர் இருப்பு 97 பாதுகாக்கப்பட்ட ஒன்றியங்களிலும், 105 மித பாதுகாக்கப்பட்ட ஒன்றியங்களிலும் 37 அபாய ஒன்றியங்களிலும் மட்டுமே உள்ளது. அதிநுகர்வு ஒன்றியங்களாக திகழ்ப்பெற்ற 138 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் பயன்பாட்டினை அதிக அளவில் பயன்படுத்தி நிலத்தடி நீர் மீட்சித் திறன் அளவினையும்தான் பயன்படுத்தப்படும் நிலையில் உள்ளது.

எனவே, இந்தச் சூழ்நிலையில் வருகின்ற வருடங்களில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், அறிவுபூர்வமானவகையில் மேலாண்மை அடைவதற்கு வழிவகுக்க வகை செய்வதோடு தமிழ்நாடு மாநிலம் தன்னிறைவாக நிலத்தடி நீரை நிலைக்கும்படி வழிவகுக்க வகை செய்வதையே செயல்பாடாகக்கொள்ள வேண்டும்.

**கொள்கை:**

நிலத்தடி நீரானது மீளப்பெறக்கூடிய வளத்தினைக் கொடுக்கும் தன்மையைக் கொண்டவை. இவ்வளத்தினை அவ்வப்போது மதிப்பிடவும், பயன்படுத்தவும், தொடர்ந்து கண்காணித்தலின் பொருட்டும் பல்வேறு வகையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் வேண்டும். மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் நிலநீரை பெருக்குவதற்கும், பாதுகாக்கவும், திறமான வகையில் திட்டமிடவும் பல்வேறு கொள்கைகளை ஏற்படுத்த 2004-2005 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 27]

அவை:

- அறிவியல்பூர்வமான நிலநீர் ஆய்வு மற்றும் நீர்ப்பிரி முகடுகளின் வாயிலாக நிலத்தடி நீர் தொடர்பாக மதிப்பீடு செய்தல்.
- மேற்பரப்பு மற்றும் நிலநீரை நீரியியல், நீர் வானியல் மற்றும் நீரின் தன்மை வாயிலாக தொடர்ந்து கண்காணித்தல்.
- நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் விவரங்கள் சேகரித்தல், ஆராய்தல், பாதுகாத்தல் மற்றும் பரப்பிடுதல் இவற்றின்மூலம் நிலத்தடி நீர் பெருக்கத்திற்கான வழி வகுத்தல்.
- அறிவுபூர்வமான மற்றும் பயனுள்ள வகையில் நிலத்தடி நீரினை பயன்படுத்தி பயனுள்ள திட்டங்கள் திட்டமிடுதல்.
- அதிநுகர்விலிருந்து (over exploited) நிலத்தடி நீரை பாதுகாத்தல் மற்றும் நீரின் தன்மையினை மாசடையாமல் இருப்பதற்கு சட்டமிடல்.
- நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கான மற்றும் வளத்தினை முன்னேற்றுவதற்காக செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவுபடுத்துதல் மற்றும் மழைநீரை பயனுள்ள விதத்தில் சேகரிக்க வழிவகுத்தல்.
- அறிவியல்ரீதியாக நீர் சம்பந்தப்பட்ட மாநிலத் துறையினருடன் பயனுள்ள உரையாடல்கள்மூலம் நிலத்தடி நீர் வளத்தினை மிகவும் பயனுள்ளவகையில் பயன்படுத்த திட்டமிடல்.
- பூமிக்கடியில் உள்ள மண் பரிமாணங்களை அறிவதற்காக துளைக் கிணறுகள் துளையிடுதல்.
- வேளாண் மக்கள், அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு நிலநீர் எடுப்பதற்கான அமைப்புகளை கட்டுமானம் செய்யத் தகுந்த ஆலோசனைப் பணிகள் வழங்குதல்.
- சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்ற நிலத்தடி நீர் அனுமதிச் சான்று வழங்குதல்.

[2004 ஜூலை 27

- கடலோரப் பகுதிகளில் உள்ள நன்னீர் படிவங்களில் கடல்நீர் ஊடுருவலைச் சிறப்பாய்வுமூலம் கண்காணித்தல் (920 கி.மீ. அளவிற்கு).
- இந்திய மற்றும் மாநில நீர் சம்பந்தப்பட்ட கொள்கைகளை பயனுள்ளவகையில் அமல்படுத்துதல்.
- சமீபத்தில் சட்டமாக்கப்பட்ட தமிழ்நாடு நிலநீர் (வளர்ச்சி மற்றும் மேலாண்மை) சட்டம் 2003-னை திட்டமிட்ட வளர்ச்சிக்கும் உரிய வகையில் நிலத்தடி நீரினை பாதுகாக்கவும் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்த மாநில நிலநீர் ஆணையத்துடன் ஒத்துழைத்தல்.
- 31-12-2003 அன்று நிறைவுபெற்ற நீரியியல் திட்டம் தொகுப்பு I-ன்மூலம் அமையப்பெற்ற அனைத்து தொழில்நுட்ப விவரங்களை தொடர்ந்து செயலாற்ற திட்டமிடல் மற்றும் இதுசம்பந்தமான விவரங்களை தொடர்ந்து சேகரித்தல்.

2004-2005 ஆம் ஆண்டில் பொதுவான நிலத்தடி நீர் பணிகளுக்காக ரூ.74.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுதல்.

**சிறிய நீர்ப்பிரி முகடுகளின் வாயிலாக நிலத்தடி நீர் மதிப்பீடு மேற்கொள்ளுதல்**

இந்திய மற்றும் மாநில நீர் சம்பந்தப்பட்ட கொள்கைகளில் கூறியுள்ளபடி நிலத்தடி நீர் மதிப்பீடு ஒன்றியங்கள் வாயிலாக பெரிய அளவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு நீர் செறிவுபெறும் நிலத்தடி நீர் வளங்களைத் துல்லியமான முறையில் மதிப்பீடு செய்வதன்மூலம் நிலத்தடி நீர் ஆதாரங்களை பல்வேறு வகைகளில் மேம்படுத்த திட்டமிடுதலையே முக்கிய நோக்கமாக எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். நிலத்தடி நீர் மதிப்பீட்டினை பொறுத்த வரையில் சற்று கடினமாக இருந்தாலும், ஏராளமான தொழில்நுட்ப விவரங்களைச் சேகரிப்பதோடு பல்வேறு அறிவியல் பிரிவுகளின் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது.

ஜனவரி 2003-ல் ஒன்றியவாரியாக நிலத்தடிநீர் மதிப்பீடு மேற்கொண்டதன்பேரில் நம் மாநில ஒன்றியங்கள் நிலத்தடிநீர் வளர்ச்சியின்படி பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



2004 ஜூலை 27]

| வகைகள் | ஒன்றியங்கள் |
|---|---|
| பாதுகாக்கப்பட்ட பகுதிகள் | 97 |
| மித பாதுகாக்கப்பட்ட பகுதிகள | 105 |
| அபாயப் பகுதிகள் | 37 |
| அதி நுகர்வு பகுதிகள் | 138 |
| உப்புநீர் பகுதிகள் | 8 |
| மொத்தம் | 385 |

தமிழ்நாட்டிலுள்ள மொத்த ஒன்றியங்களின்படி அதி நுகர்வு (over exploited) மற்றும் அபாய (critical) ஒன்றியங்கள் சுமார் 46 விழுக்காடுகளாகும். இப்பகுதிகளில் நிலத்தடி நீர் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துதல் இன்றியமையாததாகும். பொதுவாக ஒன்றியங்கள் நிர்வாக எல்லைகள் கொண்டிருப்பதாலும் அதன் பரப்பு 500-லிருந்து 600 ச.கி.மீ. வரை உள்ளதாலும் துல்லியமாக மதிப்பீடு மேற்கொள்ள முடியாது. எனவே இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்ய நில அமைப்பு பண்பியலால் (Hydrological Divide) வரையறை செய்யப்பட்ட நீர்ப்பிரி முகடுகளை மதிப்பீட்டிற்குத் தேர்வு செய்வதோடு இதன் பரப்புகளும் சுமார் 50-லிருந்து 100 ச.கி.மீ. வரை உள்ளது. இந்த நீர்ப்பிரி முகடுகளின் வாயிலாக நிலத்தடி நீர் மதிப்பீடு செய்வதன்மூலம், துல்லியமாக சரியான முறையில் மதிப்பீட்டினை இந்த அரசின் நிலத்தடி நீர் மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின்படி அமையவும் வழி வகுக்கிறது.

மேற்கூறிய காரணங்களுக்காக நுண்ணிய அளவில் நிலத்தடி நீர் மதிப்பீடு சிறிய நீர்ப்பிரி முகடுகளின் வாயிலாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக 1552 சிறிய நீர்ப்பிரி முகடுகள் கடினப் பாறை பகுதிகளிலும், காவிரி ஆற்று வடிப் பகுதிகளில் மூன்று நீர்ப்பிரி முகடுகள் அதாவது காவிரி, வெண்ணாறு, காவிரி புது வடிநிலப் பகுதியும் உள்ளது. இந்த ஆய்வு ஆரம்பத்தில் அதி நுகர்வு மற்றும் அபாய ஒன்றியங்களில் உள்ள 175 ஒன்றியங்களில் எடுத்துக்கொள்வதற்காக 2004-2005 ஆம் ஆண்டுகளில் கொடுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பாதுகாக்கப்பட்ட மற்றும் மித பாதுகாக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ள திட்டமிடுதல், நீர்ப்பிரி முகடுகளின்மூலம் நிலத்தடி நீர் மதிப்பீடு ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 27

கீழ்க்கண்ட வகையில் இந்த ஆய்வினை மேற்கொள்ள திட்டமிடப்படுகின்றது.

- சிறிய நீர்ப்பிரி முகடுகள் வரைபடங்கள் நீர்ப்பிரி முகடுகள்/ ஆற்று வடிநிலப் பகுதிகள்மூலம் தயாரித்தல்
- திட்டமிட்ட நீர்மட்ட கட்டமைப்பு, நீர்ப்பிரி முகடுகளில் கூடுதலாக துளைக் கிணறு துளையிடப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ள வழி வகுத்தல்.
- நீர்ப்பிரி முகடுகளில் தொடர்ந்து நீர்மட்டம் மற்றும் நீரின் தன்மையினைக் கண்காணித்தல்.
- நிலத்தடி நீர்த் தாங்கியின் நீர் ஊற்றுத் திறன் மற்றும் பூமிக்குள் நீர் ஊடுருவுதல் அளவு முதலியனவற்றை மதிப்பிடுதல்.
- நிலத்தடி நீர் மற்றும் நீர்த் தன்மை விவரங்கள் நீர் வடிநிலப் பகுதிகளின் வாயிலாக தோற்றுவித்தல் மற்றும் நிலத்தடி நீர் மதிப்பீடு தொலையுணர்வு (Remote Sensing) மற்றும் புவி தகவல் அமைப்பின் (GIS) மூலம் தொழில்நுட்ப முறையில் மேற்கொள்ளுதல்.
- 2007 ஆம் ஆண்டில் நீர்ப்பிரி முகடுகளின்வாயிலாக நிலத்தடி நீர் மதிப்பீடு மேற்கொள்ளுதல்.
- இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் உகந்த நீர்வள இடங்களைத் தேர்ந்தெடுப்பதோடு மட்டுமில்லாமல் நீர்ப்பிரி முகடுகளில் நீரினை செறிவடையச் செய்ய சரியான வடிவமைப்பினை மழைநீர் சேகரித்தலின் மூலமாகவோ அல்லது நிலத்தடி நீர் சேமிப்பினை அதிகரிக்க உகந்த தொழில்நுட்ப முறையின் மூலமாகவோ மேற்கொள்ளுதல்.

மேற்கண்ட ஆய்வு மூன்று ஆண்டுகளுக்கு திட்டமிட்டு பகுதி பகுதியாக 2004 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு 2004 வரை திட்டமிடுதல்.



2004 ஜூலை 27]

இந்த ஆய்விற்காக கணக்கீட்டின்படி ரூ.900 இலட்சம் கணக்கிடப்பட்டு ரூ.300 இலட்சம் வீதம் இந்த நிதி ஆண்டு அதாவது 2004-2005-ல் அளிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தமிழ்நாடு நிலநீர் (வளர்ச்சி மற்றும் மேலாண்மை) சட்டம் – 2003

மாநிலத்தின் நிலத்தடி நீர் வளத்தினை பாதுகாக்கவும், வரம்புமீறி நிலத்தடி நீர் எடுப்பதை வழிவகை செய்வதற்கும், நெறிப்படுத்தும் பொருட்டு, திட்டமிட்ட வளர்ச்சியினை அளிப்பதற்கும், உரிய முறையில் நிலத்தடி நீரை மேலாண்மை அடையச் செய்வதும், சிறிய மற்றும் குறு விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும்பொருட்டும், தமிழ்நாடு அரசு "நிலநீர் (வளர்ச்சி மற்றும் மேலாண்மை) சட்டம் - 2003" என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன்மூலம் நிலத்தடி நீரின் அளவினை அறிவதோடு மட்டுமல்லாமல், வெகுவாக நிலத்தடி நீர் குறைந்துள்ள பகுதிகளை அறிவிக்கவும் வழி வகுக்கிறது.

இந்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த நிலத்தடி நீர் ஆணையத்தினை ஏற்படுத்தவும், சட்ட விதிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. நிலத்தடி நீரினை சரியான முறையில் நெறிப்படுத்தலின் பொருட்டும், பாதுகாக்கவும் சிறு குழுக்கள், மாவட்டங்கள் வாயிலாக தற்போது உள்ள நிலத்தடி நீர் அலுவலர்கள் மற்றும் கட்டடங்கள்மூலம் நிலத்தடி நீர் ஆணையத்தின்மூலம் ஏற்படுத்த வழிவகுத்தல். நிலத்தடி நீர் ஆணையம் முதலில் அபாய மற்றும் அதிநுகர்வு ஒன்றியப் பகுதிகளில் நீர்மட்டம் குறைவடைகின்ற பகுதிகள் மற்றும் நீரின் தன்மை பாதிப்படையும் பகுதிகளுக்கும் உரிய முறையில் பாதுகாப்பு நிவாரணங்கள் மேற்கொள்ளுதல்.

இதன் ஆரம்ப கட்டமாக தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் எல்லா கிணற்றின் விவரங்களும் அறியப்பெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின்கீழ் ரூ.500 இலட்சம் ஒதுக்கப்பட்டு இப்பணி வருகிற செப்டம்பர் 2004-ல் முடிவடையும் நிலையில் உள்ளது. இன்றைய நிலவரப்படி, சுமார் 79 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் சிறப்பு வழியாக, குடிநீருக்காக உபயோகப்படுத்தப்படும் நிலத்தடி நீரினைப் பாதுகாக்க வழிவகுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. ஏனெனில் தேசிய நீர்வளக் கொள்கையில் முதல் முன்னுரிமை குடிநீருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

## நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் செயற்கை முறையில் நிலத்தடி நீர் பெருக்கத்திற்கான மாதிரி வடிவ ஆய்வுகள்

நிலத்தடி நீர் மேலாண்மை என்பது மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்து முழுமையான அளவில் பயன்படுகிறவகையில் கூட்டு முறையில் பயன்படுத்துவதையே மாற்றுத் திட்டமாகக் கொள்ளுதல் வேண்டும். இவற்றை நிறைவேற்ற நிலத்தடி நீர் செறிவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதன்மூலம் நீரின் தன்மை மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களைச் சீரடையச் செய்யலாம். குறிப்பாக அபாய (critical) மற்றும் அதி நுகர்வு (over exploited) ஒன்றியங்களிலும், கடல்நீர் உட்புகும் கடலோரப் பகுதிகளிலும் இத்திட்டத்தினை மேற்கொள்ளுதல் அவசியமாகிறது.

செயற்கை முறையில் நிலத்தடி நீர் பெருக்கத்திற்கான மாதிரி வடிவ ஆய்வுகள் அதி நுகர்வு மற்றும் அபாய ஒன்றியங்களைச் சார்ந்த மூன்று பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அவை (1) மேல் நொய்யல் நீர்ப்பிரி முகடு, (2) செய்யாறு நீர்ப்பிரி முகடு மற்றும் (3) சித்தாறு நீர்ப்பிரி முகடு பகுதிகள். இந்த நீர்ப்பிரி முகடு பகுதிகளில் நீர்மட்டம் சீராக குறைந்து வருவதும் நிலத்தடி நீர் வேகமாக உறிஞ்சப்படுவதையும், நீரின் தன்மை மாசடைவதையும், தொழில்நுட்ப விவரங்களைக்கொண்டு அறிய முடிகிறது. செயற்கை முறையில் நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கான உகந்த இடங்களை புதிய தொழில்நுட்ப உக்தியினை தொலை உணர்வு (Remote Sensing) மற்றும் புவி தகவல் அமைப்பின் (GIS) உதவியுடன் சாத்தியக்கூறு உள்ள பகுதிகளைத் தெளிவான வகையில் தேர்ந்தெடுக்க வழிவகுக்கப்படும்.

தீவிர மழைநீர் சேகரிப்பின் மூலமாகவும் மற்றும் அதற்குத் தேவையானவற்றை அறிமுகப்படுத்தி நிலத்தடி நீர் பெருக்கத்தினை அதிகரிப்பதன் மூலம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வழி வகுக்கப்படும். இம்மாதிரி வடிவ ஆய்வுகளை ஆராய்வதன் மூலமாகவும் தொடர்ந்து கண்காணித்தலின் மூலமாகவும் மாநிலத்தின் அனைத்து இதர பகுதிகளிலும் இத்தொழில்நுட்ப ஆய்வினைப் பயன்படுத்தலாம்.

இம்மாதிரி வடிவ ஆய்வு இந்த வருடம் 2004-2005-ல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளுக்காக மொத்த திட்டமிடப்பட்ட தொகை ரூ.100 இலட்சமாகும்.



2004 ஜூலை 27]

## நிலத்தடி நீர் விழிப்புணர்வு திட்டம்

பொதுமக்களுக்கு, அதிக நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதினால் ஏற்படும் அபாயத்தினைப் பற்றியும், மழைநீர் சேகரித்தலின் அவசியத்தைப் பற்றியும், நிலத்தடி நீர் சேமிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றியும், நீரின் தன்மை மாசு அடையாமல் பாதுகாப்பதைப் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## நீரியியல் திட்டம் (தொகுப்பு – II)

உலக வங்கியின் நிதியுதவியுடன்கூடிய நீரியியல் திட்டம் (தொகுப்பு-I) பயனுள்ளவகையில் முடிவு பெற்றதன்மூலம் கிடைக்கப் பெற்ற தொழில்நுட்ப வளர்ச்சியினைப் பாதுகாக்கவும் மேலும் வளர்ச்சி பெறவும், வெள்ளம் பற்றிய முன்னறிவிப்பு ஆய்வு தாமிரபரணி ஆற்றுப் படுகையிலும், வறட்சி நிலவரத்தைக் கண்காணித்தல் மற்றும் நிவாரணப் பணிக்கான ஆய்வு வைப்பாறு ஆற்றுப் படுகையிலும் மேற்பரப்பு மற்றும் நிலநீர் இணைந்து பயன்படுத்தும் திட்டம் காவிரி ஆற்றுப் படுகையிலும், மழைநீர் சேகரிப்பு, வேளாண் குடிமக்களுக்கு நிலத்தடி நீர் விழிப்புணர்வு மற்றும் நீரியியல் தொகுப்பினை பயனுள்ளவகையில் கொண்டு செல்வதற்கும் அதற்கேற்ப தொழில்நுட்பத்தை அதிகரிப்பதன் அவசியத் தினையும், நன்கு உணர்ந்து செயல்படுத்த நீரியியல் திட்டம் தொகுப்பு II மிகவும் அவசியமாகிறது.

இந்த நீரியியல் திட்டம் முக்கிய உறுப்புகளாக அதாவது மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் மற்றும் நீரின் தன்மை எனவாக பிரிக்கப்பட்டு இதன் திட்ட மதிப்பு ரூ.25.27 கோடிக்கான ஒப்புதல் கடந்த 16-04-2004 அன்று நடைபெற்ற நீர்வள ஆதார அமைச்சக மற்றும் உலக வங்கி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நீரியியல் திட்டம் (தொகுப்பு II) ஜூலை 2004-ல் தொடங்கப்பட்டு ஆறு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறும்.

மேற்கூறிய நீரியியல் திட்டத்திற்காக ரூ.230 இலட்சம் இந்த வருடம் 2004-2005-ல் ஒதுக்கீடு செய்ய ஆதாய மூலதனத்தின்மூலம் (Retrotype Fund) இந்த நீரியியல் திட்டம் தொகுப்பு II-னை முறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கூடுதல் நிதியாக ரூ.400 இலட்சம் 2004-2005 ஆம் நிதியாண்டில் இந்த நீரியியல் திட்டம் தொகுப்பு II திட்டத்தினை அமல்படுத்த தேவைப்படுகின்றது.

[2004 ஜூலை 27

**அணைப் பாதுகாப்புத் திட்டம்**

அணைப் பாதுகாப்புப் பணிகளை உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்வதற்காக ரூ.60.00 கோடி மதிப்பீட்டிலான கருத்துருவானது மத்திய அரசின் நீர் ஆதார அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இக்கருத்துருவானது தற்போது மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பத்து அணைகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. சாத்தனூர், 2. பொன்னணியாறு, 3. சித்தமல்லி, 4. சோலையார்,
5. பெருஞ்சானி, 6. மணிமுக்தா நதி, 7. பெரியாறு, 8. பேச்சிப்பாறை,
9. மணிமுத்தாறு, 10. அமராவதி

**சென்னை பெருநகர நீர் வழிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்**

**1. சென்னை பெருநகர நீர் வழிகளை ஹட்கோ நிதியுதவியுடன் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்**

சென்னை நகரில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மேட் மெக்டொனால்டு என்ற பன்னாட்டு ஆலோசனை நிறுவனம் வழங்கிய திட்டத்தின் அடிப்படையில் ஹட்கோ நிறுவனத்திடம் கடனுதவி பெற்று "புத்தாயிரமாண்டுத் திட்டமாக" தமிழக அரசால் 1998 ஆம் ஆண்டு ரூ.300 கோடிக்கு ஆணை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே சென்னை நகரில் ஓடும் அடையாறு, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரிநல்லா, காப்டன் காட்டன் கால்வாய் மற்றும் சென்னை பெருநகர எல்லைக்குள் இருக்கும் ஏனைய பெரிய வடிகால்களில் படிந்துள்ள மணற்படிமங்கள் மற்றும் சேற்றினை அகற்றி வடிகால்களை புனர் வடிவமைத்து வெள்ளநீர் விரைந்து கடலில் கலக்க வழிவகை செய்வதே ஆகும். மேலும் ஆற்றுக் கரைகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடியிருப்போரை அகற்றி அவர்களை வேறு இடத்திற்கு மறுகுடியமர்வு செய்யவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் நான்கு சிப்பங்களாக ஆரம்பிக்கப்பட்டு கூவம் தவிர 3 சிப்பங்கள் செயலாக்கத்தில் உள்ளன.



2004 ஜூலை 27]

**சிப்பம்–1: எண்ணூர் முதல் முட்டுக்காடு வரை உள்ள பக்கிங்காம் கால்வாயினைத் தூர்வாரி புனரமைத்தல்**

இச்சிப்பத்தில் சுமார் 85% பணிகள் முடிவடைந்துவிட்டன. தெற்கு பக்கிங்காம் கால்வாயில் 4.6 கி.மீ. நீளத்திற்கு கால்வாயின் இருபுறமும் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, மீட்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிப்பம்–2: அடையாறு ஆற்றில் படிந்துள்ள மணற்படிமங்கள் மற்றும் திட்டுக்களை அகற்றி வெள்ளத்தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், கொசஸ்தலையார் ஆற்றில் வெள்ளக்கரை அமைத்தல், வேளச்சேரி ஏரி வடிகாலில் சிறிய பாலங்கள் அமைத்தல்.**

இச்சிப்பத்தில் சுமார் 40% பணிகள் முடிவுற்றுவிட்டன. வேளச்சேரி வடிகாலில் சிறிய பாலங்களும், கொசஸ்தலையார் ஆற்றில் வெள்ளக்கரை அமைக்கும் பணிகளும் முடிவுற்றுவிட்டன. அடையாறு ஆற்றில் நந்தம்பாக்கம் பாலம் மேல்புறம் முதல் ஆதனூர் ஏரி வரை பணிகள் முடிவுற்றுவிட்டன. தற்போது பணிகள் நந்தம்பாக்கம் பாலம் கீழ்ப்புறம் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிப்பம்–3: சென்னைப் பெருநகரின் எல்லைக்குள் உள்ள மற்ற பெரிய வடிகால்களில் வெள்ளத்தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.**

இச்சிப்பத்தின்கீழ் வடசென்னையில் உள்ள தணிகாசலம் நகர் மற்றும் அம்பத்தூர், மாதவரம், கொரட்டூர் ஆகிய ஏரிகளின் மிகை நீரினை வெளியேற்ற புதிய கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2. அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களில் ஏற்பட்டுள்ள மணல்மேடுகளை அகற்றி மீண்டும் மணல்மேடு ஏற்படாவண்ணம் செய்தல்**

சென்னையைச் சேர்ந்த இந்திய அரசு அமைப்பாகிய தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் கூவம் முகத்துவாரத்தில் மணல்மேடு ஏற்படாமல் தடுக்க கிராயின் கட்டும் திட்டத்தை அளித்தது. இதனடிப்படையில் ரூ.78 இலட்சம் செலவில் 170 மீ. நீளத்திற்கு கிராயின் கடலின் உள்ளே கட்டப்பட்டுள்ளது. இந்த கிராயின் உயரத்தை 1.5 மீ. உயர்த்தி கடல் தொழில்நுட்ப நிறுவனம் கருத்துரு அளித்துள்ளது.

[2004 ஜூலை 27

கூவம் முகத்துவாரத்தில் கட்டப்பட்டுள்ள கிராயனின் செயலாக்கத்தைச் சோதித்தறிந்த பின்னரே அடையாறு முகத்துவாரத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

## சென்னை மாநகர குடிநீர் வளம் பெருக்கும் இரண்டாவது திட்டம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கும் துறையின் 3-4-2002 நாளிட்ட அரசாணை எண் 43-ல் ரூ.493 கோடி மதிப்பீட்டில் ஒரு நாளைக்கு 268.36 மில்லியன் லிட்டர் அளவில் தண்ணீரைப் பெற்று வழங்குவதற்கு வசதியாக கீழ்க்கண்ட திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. செயல்படுத்த அரசாணையில் குறிப்பிட்டுள்ளது.

1) கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே திருக்கண்டலம் அருகே அணை கட்டுதல் – ரூ.187 கோடி.

2) கூவம் ஆற்றின் குறுக்கே ஜமீன் கொரட்டூர் அருகே அணை கட்டுதல் – ரூ.42 கோடி.

3) அடையாறு ஆற்றின் குறுக்கே திருநீர்மலைக்கு அருகில் அணை கட்டுதல் – ரூ.65 கோடி.

4) பள்ளிக்கரணையில் ஓர் அணை கட்டுதல் – ரூ.55 கோடி.

5) பாலாற்றின் குறுக்கே வயலூருக்கு அருகில் தடுப்பணை கட்டுதல் – ரூ.82 கோடி.

6) அடையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் – ரூ.10 கோடி.

7) கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் – ரூ.3 கோடி.

8) மாதவரம், ரெட்டை ஏரி, கொரட்டூர் ஏரி மற்றும் அம்பத்தூர் ஏரிகளை ஆழப்படுத்தி தூர்வாருதல் – ரூ.3 கோடி.

9) கொசஸ்தலையாரின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் – ரூ.13 கோடி.



2004 ஜூலை 27]

அரசு ஆணையில் கூறப்பட்டபடி 'திட்டத்தினைச் செயல்படுத்தும் குழு' அமைக்கப்பட்டு அதன் முதலாவது கூட்டம் 4-6-2002 அன்று நடைபெற்றது.

சமீபத்தில் நடைபெற்ற 'திட்டத்தினைச் செயல்படுத்தும் குழுவில்' நான்காவது கூட்டத்தில் ரூ.493 கோடிக்கான திருத்திய மதிப்பீடு குறைக்கப்பட்டு ரூ.183 கோடிக்கான கீழ்க்கண்ட பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1) | வயலூர் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | ரூ.82.00 கோடி |
| 2) | திருக்கண்டலம் அருகே கொசஸ்தலையாறு குறுக்கே தடுப்பணை கட்டுதல் | ரூ.67.50 கோடி |
| 3) | கொசஸ்தலையாறு குறுக்கே அமைந்துள்ள வள்ளூர் அணையினை மேம்படுத்துதல் | ரூ.20.00 கோடி |
| 4) | மாதவரம், கொரட்டூர் மற்றும் அம்பத்தூர் ஏரியை ஆழப்படுத்தி தூர்வாருதல் | ரூ.5.00 கோடி |
| 5) | போரூர் ஏரியை மேம்படுத்துதல் | ரூ.3.00 கோடி |
| 6) | திட்ட வளர்ச்சி மற்றும் மேலாண்மை பணிக்காக | ரூ.3.70 கோடி |
| 7) | எதிர்பாராத இனங்களுக்கான செலவுகள் | ரூ.0.80 கோடி |
| | மொத்தம் | ரூ.183.00 கோடி |

இப்பணிகளை நிறைவேற்றுவதன்மூலம் ஒரு நாளைக்கு 70 ML தண்ணீர் கிடைக்க ஏதுவாகும்.

தற்பொழுது ரூ.124 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட பணிகள் பொதுப் பணித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1) பாலாற்றின் குறுக்கே வயலூர் அருகே தடுப்பணை கட்டுதல் ரூ.80.00 கோடி

2) அடையாற்றின் குறுக்கே மணப்பாக்கம், நந்தம்பாக்கம், அனகாபுத்தூர் மற்றும் கவுல்பஜார் ஆகிய கிராமங்களில் அணை கட்டுதல் ரூ.12.37 கோடி

[2004 ஜூலை 27

3) கூவம் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தடுப்பணைகளை மேம்படுத்துதல் (கண்ணபாளையம் மற்றும் பருத்திப்பட்டு) ரூ.1.33 கோடி.

இதன்மூலம் மற்ற திட்டங்கள் தற்பொழுது கைவிடப்பட்டுள்ளன.

**பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்**

திருச்சி துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், இந்நாட்டில் 1984-ல் பன்னாட்டு நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட 11 பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். இந்நிலையத்தில் விவசாயிகள், நீர்வளத் துறை, விவசாயப் பொறியியல் துறை மற்றும் விவசாயத் துறையைச் சார்ந்த களப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்நிறுவனம் மாநில அரசின் மானியத் தொகையில் நடைபெற்று வருகிறது.

**(1) பயிற்சிகள்**

உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதார அமைப்பினால் செயல்படுத்தப்படும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்பு திட்டத்தின்கீழ் பயிற்சிகள் அளிப்பதற்கு இந்நிலையம் முனைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. உலக வங்கியின் ஆலோசனையின்படி, தற்சமயம் இந்நிலையம் நீர்வள ஆதார நிறுவன அலுவலர்கள், வேளாண்மைப் பொறியாளர்கள், வேளாண்மை அலுவலர்கள், களப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பாசன மேலாண்மை குறித்த சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

**கணினி பயிற்சி**

நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ், நீர்வள ஆதார அமைப்பில் உப கோட்ட வரையிலுள்ள அலுவலர்களுக்கு கணினி வழங்கப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினி பயிற்சிமூலம் அவர்களுடைய தரத்தை மேம்படுத்துவதற்கும் அன்றாட வேலைகளுக்கு கணினியைப் பயன்படுத்துவதற்கு மிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.



2004 ஜூலை 27]

தற்பொழுது பெரும்பாலான நடுநிலை மற்றும் இளநிலை அலுவலர்களுக்கு அடிப்படை கணினி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சில அலுவலர்களுக்கு Auto CAD, GIS, MS Project முதலிய முன்னிலை பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டிலும் இளநிலை மற்றும் நடுநிலை அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட முன்நிலை பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

1. ஆட்டோ காட் (வரைதல் மற்றும் வடிவமைத்தல்)
2. பாசனக் கட்டடங்கள் வடிவமைத்தல் (M.S. Excel)
3. புவியியல் அமைப்பு சார்ந்த தகவல்கள் தயாரித்தல்
4. திட்ட மேலாண்மை (M.S. Project Software)
5. மேலாண்மை தகவல் அமைப்பு
6. டோட்டல் ஸ்டேஷன் நிலஅளவை செய்தல்
7. எம்.எஸ். ஆக்சஸ் மற்றும் பவர் பாயிண்ட்

கடந்த இரண்டு வருடங்களாக அலுவலகப் பணியாளர்களுக்கு கணினி பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தும் இன்னும் அதிக பணியாளர்களுக்கு அடிப்படை கணினி பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது. உப கோட்ட அளவில் கணினி வழங்கப்பட்டுள்ளதால் அதனை மிக நல்லமுறையில் பயன்படுத்துவதற்கு அடிப்படை கணினி பயிற்சி வரும் ஆண்டிலும் தொடரப்பட வேண்டும். ஆகையினால் 15 பயிற்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் களப் பணியாளர்களுக்கு 12 பயிற்சிகளும், வெளி மாநில பயிற்சி நிலையங்களில் நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்த அலுவலர்களுக்கு நீர் மேலாண்மை மற்றும் பாசனம் சம்பந்தப்பட்ட பல்வேறு பயிற்சிகளும் அளிக்கப்படவுள்ளன.

வருகின்ற 2004-2005 ஆம் ஆண்டில் 140 பயிற்சிகள் ரூ.130 இலட்சம் செலவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 2000 நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்கள், 2000 விவசாய பெருமக்கள் பயன்பெற உள்ளனர்.

[2004 ஜூலை 27

## நீர் ஆய்வு நிறுவனம்

### 1. நீர் வளம் திட்டமிடுதல்

### நுண்ணிய அளவில் ஆய்வு மேற்கொள்ளுதல்

நுண்ணிய அளவில் நீர் ஆய்வு மேற்கொள்ள தமிழ்நாட்டில் ஆற்றுப் படுகைகள் 17 பெரும் ஆற்றுப் படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த 17 பெரும் ஆற்றுப் படுகைகளில் கீழ்க்கண்ட மூன்று ஆற்றுப் படுகைகளுக்கு நுண்ணிய அளவில் ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. அவை:

1. பாலாறு ஆற்றுப் படுகை.
2. வைப்பாறு ஆற்றுப் படுகை.
3. கோதையாறு ஆற்றுப் படுகை.

வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளுக்கு நுண்ணிய அளவு ஆய்வுப் பணியானது மேற்கொள்ளப்பட்டு தற்போது முடியும் தருவாயில் உள்ளன. மேலும் பொன்னையாறு ஆற்றுப்படுகைக்கான ஆய்வு இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### 2. ஆற்றுப்படுகைக்கான மேலாண்மை மற்றும் அபிவிருத்தி வாரியம்:

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் வாழும் பல இலட்சக்கணக்கான சிறிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், நீர் மற்றும் ஒருங்கிணைந்த திட்டம், கண்காணித்தல், வளர்ச்சிகளை மேம்படுத்தும் பொருட்டு சார்ந்த துறைகள் மற்றும் பயனீட்டாளர்களின் ஈடுபாட்டுடன் ஆற்றுப் படுகை மேம்பாட்டு வளர்ச்சி வாரியமும் மற்றும் ஒரு புது தொழில்நுட்பச் செயலகமும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மேற்கூறிய வாரியத்தின் தலைவர் ஆவார். மேலும் இவ்வாரியத்தில் கீழே குறிப்பிட்டவர்கள் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்:

1. வளர்ச்சி ஆணையர்
2. நிதித் துறை செயலர்
3. நீர்வளச் செயலர்



2004 ஜூலை 27]

4. வேளாண்மைச் செயலர்
5. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் செயலர்
6. ஊரக வளர்ச்சித் துறைச் செயலர்
7. தொழில் துறைச் செயலர்
8. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைச் செயலர்
9. சம்பந்தப்பட்ட ஆற்றுப் படுகை தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள்
10. சம்பந்தப்பட்ட ஆற்றுப் படுகை தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள்
11. சம்பந்தப்பட்ட ஆற்றுப் படுகை தொகுதிகளின் அனைத்து பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள்
12. சம்பந்தப்பட்ட ஆற்றுப் படுகை தொகுதிகளின் அனைத்து நகராட்சித் தலைவர்கள்
13. சம்பந்தப்பட்ட ஆற்றுப் படுகை தொகுதிகளின் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள்
14. சம்பந்தப்பட்ட ஆற்றுப் படுகை தொகுதிகளின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
15. பல்வேறு துறையைச் சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பில் பணிபுரியும் தலைமைப் பொறியாளர் மற்றும் இதர பொறியாளர்கள்.

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளுக்கான மேம்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டு மேம்பாட்டு வளர்ச்சி வாரியத்திற்கான திட்டங்களை ஆய்வு செய்து சரிபார்த்து வாரியத்திற்கு பரிந்துரைகளைச் செய்து வருகிறது.

இம்மேம்பாட்டுக் குழுவிற்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே தலைவராக உள்ளார்.

இம்மேம்பாட்டுக் குழுவின் வளர்ச்சி ஆணையர், பல்வேறு துறையின் செயலர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற பிரதிநிதிகள், நீர் பயனாளிகள், அரசு சாரா பொது நிறுவனங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

[2004 ஜூலை 27

மேற்கண்ட இரண்டு ஆற்றுப் படுகை மேம்பாட்டு வாரியத்திற்கும் மற்றும் மேம்பாட்டுக் குழுவிற்கும் தொழில்நுட்ப ரீதியாக, ஆலோசனை வழங்க ஒரு தொழில்நுட்பச் செயலகம், பல்வேறு துறையைச் சார்ந்த 3 வல்லுநர்களுடன் நீர் ஆய்வு நிறுவனத்தில் செயல்பட்டு வருகிறது. இத்தொழில்நுட்பச் செயலகம் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநரை தலைவராகக்கொண்டு ஆகஸ்டு 2002 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்தத் தொழில்நுட்பச் செயலகம் பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் உள்ள பிரச்சினைகள் மற்றும் பயனாளிகளின் பல்வேறு கருத்துகளையும் கூட்டம்/கருத்தரங்கு மற்றும் தீவிர ஆலோசனைக் கூட்டங்களின் வாயிலாக கருத்துகள் விவாதிக்கப்பட்டு, மேம்பாட்டுக் குழுவிற்கு அறிக்கை பரிந்துரை செய்யப்பட உள்ளது. பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் பயனீட்டாளர்களின் கூட்டங்கள்/ கருத்தரங்குகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டுள்ளன.

பாலாறு ஆற்றுப்படுகை:

1. நீர் ஆய்வு நிறுவனத்தில் கருத்தரங்கு — 06-08-2002
2. சுற்றுச்சூழல் பற்றிய கருத்தரங்கு, சென்னை — 18-10-2002
3. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம், சென்னை — 24-01-2003
4. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம், வேலூர் — 07-02-2003
5. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம் மற்றும் “தண்ணிமாதிரி” செயல்முறை விளக்கம், வேலூர் — 10-03-2004

தாமிரபரணி ஆற்றுப் படுகை:

1. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம், திருநெல்வேலி — 23-11-2002
2. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம், ஆலங்குளம் — 21-01-2003
3. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம், தென்காசி — 07-05-2003
4. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம், தென்காசி — 21-07-2003
5. நீர் பயனீட்டாளர்களின் கூட்டம் மற்றும் “தண்ணிமாதிரி” செயல்முறை விளக்கம், திருநெல்வெலி — 17-03-2004



2004 ஜூலை 27]

வைகை ஆற்றுப் படுகை:

“தண்ணிமாதிரி” செயல்பாடுகளைக் கொண்டு தற்பொழுது உள்ள நீர்வளங்களை அதிகபட்சமாக உபயோகிக்கும் முறைகளை விளக்கும்பொருட்டு பயனீட்டாளர்களின் கூட்டமானது ஜூன் திங்கள் 4 ஆம் நாள் 2003 அன்று மதுரையில் நடைபெற்றது.

பரம்பிக்குளம் ஆளியாறு படுகை:

பயனீட்டாளர்கள் மற்றும் சார்ந்த துறைகளின் கருத்தை பெறும்பொருட்டு பயனீட்டாளர்களின் கூட்டமானது பொள்ளாச்சியில் ஆகஸ்டு திங்கள் 8 ஆம் நாள் 2003 அன்று நடைபெற்றது.

**3. கணினி மாதிரி – “தண்ணி” மாதிரி (THANNI Model)**

தொழில்நுட்பச் செயலகம் பல்வேறு ஆற்றுப் படுகையிலுள்ள நீர்த்தேக்கங்களின் உள் மற்றும் வெளி நீர் வரத்து மற்றும் ஏரிகளின் விவரங்கள், பாசனப் பரப்பு, பயிர்களின் விவரம், மண் தன்மை வானிலை அறிக்கை, சுற்றுப்புறச்சூழல், சமூக பொருளாதார விவரங்கள் மற்றும் தொலையுணர்வு, நிலவியல் அமைப்பு விவரங்களைச் சேகரித்து, இவ்விவரங்கள் கணினி மாதிரிக்காக பாகுபடுத்தப்பட்டு, பாலாறு, தாமிரபரணி, வைப்பாறு மற்றும் கோதையாறு ஆகிய நான்கு ஆற்றுப் படுகைகளுக்கு “தண்ணி” கணினி மாதிரிக்கான வரைவு அறிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கணினி மாதிரி ஆற்றுப் படுகைகளின் நீர்வளத்தினை மேம்படுத்தவும், அபிவிருத்திக்கும் தீர்மானங்களைச் சார்ந்த முறைபாடுகளைக் கண்டறியவும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

இந்த நான்கு ஆற்றுப் படுகைகளுக்கான “தண்ணி” கணினி மாதிரி, நீரைப் பயன்படுத்துவோர் செயல்பாட்டு விளக்கக் கூட்டங்கள் வேலூர், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் போன்ற இடங்களில் நடத்தப்பட்டது.

2004-2005 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டுத் திட்டம்:

1. பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகையின் மேம்பாட்டுக் குழுக் கூட்டம் நடத்துதல்.
2. பொன்னையாறு ஆற்றுப் படுகைகளுக்கு “தண்ணி” கணினி மாதிரி உருவாக்குதல்.

[2004 ஜுலை 27

3. பாலாறு, தாமிரபரணி, வைகை மற்றும் கோதையாறு ஆகிய நான்கு ஆற்றுப் படுகைகளுக்கு இறுதி "தண்ணி" கணினி மாதிரி அறிக்கைகள் தயாரித்தல்.

4. பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் இரண்டு ஏரிகளின் கொள்ளளவை ஜி.பி.எஸ். மூலமாக கண்டறிதல்

5. பாலாறு மற்றும் தாமிரபரணி மேம்பாட்டு வாரியக் கூட்டங்களை நடத்துதல்.

6. கணினி மற்றும் அதைச் சார்ந்த கருவிகள், மென்பொருட்கள் கொள்முதல் செய்தல்.

**4. தமிழ்நாடு மாநில நீர்வளக் கொள்கை:**

தேசிய நீர்க் கொள்கை 1987 அமைப்பின்கீழ் தமிழ்நாடு தேசிய நீர்க் கொள்கையானது 1994 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய நீர்க் கொள்கையானது ஏப்ரல் 2002 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. அதை அடிப்படையாகக்கொண்டு தற்பொழுது உள்ள நிலைக்குத் தக்கவாறு தமிழ்நாடு நீர்க் கொள்கை 1994 திருத்தப்பட்டு வருகிறது.

அரசு ஆணை (1-டி) எண் 55 / பொதுப் பணிகள் (டபிள்யு.ஆர்.1) துறை 14-02-2003 நாளிட்ட ஆட்சி முறை ஒப்பளிப்பில் அரசாங்கமானது கருத்தரங்கம் ஒன்றை நடத்தி அதன்மூலம் நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழு மற்றும் இதனைச் சார்ந்த வல்லுநர்களின் கருத்துகளை நீர்வளத் துறையில் பெற்று மாநில நீர்வளக் கொள்கை, 1994 திருத்துவதற்காக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மாநில நீர்வளக் கொள்கை, 1994 இருத்துவதற்காக கருத்தரங்கம் ஒன்று மார்ச் திங்கள் 25 ஆம் நாள் 2003 அன்று நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கில் பெறப்பட்ட கருத்தினை ஒருங்கிணைத்து வரைவு மாநில நீர்க் கொள்கை 2003 ஆனது நீர் ஆய்வு நிறுவனத்தால் வரையப்பட்டுள்ளது.

அதன்பின் வரைவு மாநில நீர்க் கொள்கை 2003, தலைவர், காவேரி தொழில்நுட்பக் குழுமத்தால் சரிபார்க்கப்பட்டு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.



2004 ஜுலை 27]

**5. நீர்வள ஆராய்ச்சி நிதி மற்றும் ஆய்வு அறிக்கைகள்:**

**ஆராய்ச்சிப் பணிகள்:**

நீர்வள ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் நீர்வள ஆராய்ச்சி நிதி வழங்கப்பட்டு உள்ளது. இந்த நிதியினைக்கொண்டு நடத்தப்பட்ட 30 ஆராய்ச்சிப் பணிகள் மார்ச் திங்கள் 2003 உடன் நிறைவு பெற்றுள்ளன.

திருச்சியில் உள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தில் தற்பொழுது நீர்வள அமைப்பில் உள்ள உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களை 25 குழுக்களாகப் பிரித்து 30 ஆய்வு அறிக்கைகளின் முடிவுகளைத் தெரியப்படுத்தும்பொருட்டு 800 நபர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, மீதமுள்ள 700 நபர்களுக்கு செப்டம்பர் 2004-க்குள் இப்பயிற்சி அளிக்கப்படும். 2003-04-ல் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட 8 ஆய்வுகளின் அறிக்கைகளை செப்டம்பர் 2004-க்குள் தெரிவு செய்து இறுதியாக்கப்படும்.

**6. தொலையுணர்வு மற்றும் நிலவியல் தகவல் அமைப்பு செயல்பாடுகள்**

தமிழ்நாடு மாநில தொலையுணர்வு பயன்பாட்டு மையத்தின் முக்கியமான பணி செயற்கைக்கோள் வண்ணப்படங்கள் மற்றும் ஆகாய விமானம் மூலமாக எடுக்கப்பட்ட கருப்பு வெள்ளை புகைப்படங்களிலிருந்து கணினி மூலமும், நேரடி ஆய்வு மூலமும் வெவ்வேறு நோக்க வரைபடங்களை வெவ்வேறு அளவுகளில் தயாரித்து அவற்றை ஒன்றின் மேல் ஒன்றாக பொருத்தி மேற்பரப்பு நீர் மற்றும் நில நீர் இருப்பு அளவீட்டுப் பணி, நில உபயோக ஆய்வு, வெவ்வேறு பயிர் வகைகளைக் கண்டறியும் ஆய்வு, தரிசு நிலத்தைக் கண்டறியும் பணி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. நீர் ஆய்வு நிறுவனம் ஆற்றுப் படுகை வாரியாக நுண்ணிய ஆய்வு மேற்கொள்வதற்கு ஏற்றவாறு இந்தத் தொலையுணர்வு மையம் செயல்பட்டு வருகிறது. அதற்காக கீழ்க்கண்ட நோக்க வரைபடங்களைத் தயாரித்து, ஆய்வு செய்து ஆலோசனைகளையும் வழங்குகிறது.

**நோக்க வரைபடங்கள்**

இந்தத் தொலையுணர்வு மையம் மாநில திட்டக் குழுவின்கீழ்வரும் மாநில நில உபயோக வாரியத்தின் நிதி உதவி கொண்டு கீழ்க்கண்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

[2004 ஜூலை 27

1. நிலவியல்
2. நில உபயோகம்
3. நீர் மட்டம்
4. நீர் போக்கு
5. நிலமேற்பரப்பியல்
6. மண்வகை
7. முறம்பின்பரிமாணம்
8. உயர்வான இடங்களும், நிலைகளும்
9. பெரும்பிளவு பாறைகள்
10. நீர் தன்மை
11. நில நீரியல்
12. எண் எழுச்சி மாதிரி

1. அதிக அளவில் நில நீரை பயன்படுத்தும் செங்கம் ஒன்றியத்தில் மேலும் நில நீர் எடுக்க தகுதியான இடங்களை தொலையுணர்வு மூலம் கண்டறிதல்

2. துரிஞ்சலாற்றுப் படுகையில் நில நீர் இறைப்பிற்கு ஏற்ற இடங்களை தொலையுணர்வு மூலம் தேர்வு செய்யும் பணி

3. அனுமாநதி உட்படுகைக்காக (தாமிரபரணி ஆற்று வடிநிலம்) வெவ்வேறு நோக்க வரைபடங்களைத் தயாரித்து பல்நோக்குத் துறைகளுக்கான திட்டம் தயாரிக்கும் குழுவிற்கு உதவியாக அவை பயன்படுத்தப்படும்.

4. மிக அதிக அளவில் நில நீரை பயன்படுத்தும் சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியங்களில் மேலும் நில நீர் எடுக்க தகுதியான இடங்களை தொலையுணர்வுமூலம் கண்டறிதல்.

**7. கணினி மற்றும் மென்பொருள் கொள்முதல் குறித்து திட்டமிடல் பணி:**

1. மேலாண்மை தகவல் அமைப்பதற்கான சர்வர், நெட்வொர்க் பாகங்கள் மற்றும் கணினி மேம்பாட்டுப் பணி மற்றும் நெட்வொர்க் தகவல் அமைப்பிற்காக கொள்முதல் பணி நிறைவுற்றது.

2. நீர்வள அமைப்பின்கீழ் பணிபுரியும் உதவி செயற் பொறியாளர்களுக்கு 535 கணினி மற்றும் அதைச் சார்ந்த பாகங்கள் வாங்கப்பட்டு மார்ச் திங்கள் 2003 உடன் நிறைவு பெற்றுள்ளது.

3. வீடியோ கான்ஃபிரன்ஸிங் சாதனங்கள் கொள்முதல் முடிவுற்றது

4. லீஸ்ட் லைன் கனெக்டிவிட்டிக்கான பணிகள் மேம்பட்டு முடியும் நிலையில் உள்ளன. ஜூன் 2004 மாதத்தில் அனைத்துப் பணிகளும் முடிவுற்றன.



2004 ஜூலை 27]

**மணல் குவாரி**

தமிழகத்தில் ஆற்றுப் படுகைகளில் தராதரமின்றி மணல் எடுப்பதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த பொது நல வழக்கின் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் 26-07-2002 அன்று தனது தீர்ப்பில் ஆற்றுப் படுகைகளிலிருந்து மணல் எடுப்பதால் ஏற்படும் பாதிப்புகளை ஆராய புவியியல், சுற்றுச்சூழல் வல்லுநர்கள் மற்றும் விஞ்ஞானிகள் ஆகியோரைக் கொண்ட ஒரு வல்லுநர் குழுவினை அமைக்கும்படி ஆணையிட்டது. அதன்படி 6 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்தது. மேலும் இவ்வறிக்கையின்மீது பல்வேறு நிலைகளில் அரசினால் விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டன. அதனடிப்படையில் அரசின் புறம்போக்கு நிலங்கள் மற்றும் தனியார் பட்டா நிலங்களிலிருந்து தனியாரினால் மணல் எடுப்பதை உடனடியாக நிறுத்தவும், மணல் குவாரிகளை அரசின் ஒரே துறையின்மூலம் அதாவது பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசு முடிவு செய்து அரசாணை (நிலை) எண் 95, தொழில் துறை, நாள் 01-10-2003-ன் வாயிலாக தமிழ்நாடு சிறு கனிமங்களின் சலுகை விதிகள் 1959-க்கு திருத்தம் வெளியிடப்பட்டு விதி 38ஏ என்ற புதிய விதி அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்கண்ட புதிய விதி 02-10-2003 முதல் நடைமுறைக்கு வந்தது. பொதுப் பணித் துறை தெரிந்தெடுக்கப்பட்ட 239 குவாரிகளிலிருந்து நேரடியாக மணல் எடுத்து 171 கிடங்குகளில் சேகரித்து பயன்படுத்துபவர்களுக்கு லாரி லோடு (2 யூனிட்) ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் விற்க வேண்டுமென அரசு ஆணையிட்டிருந்தது. தற்போது ஒரு லாரி லோடு ரூ.1000/- என்ற விலையினை பொதுமக்கள் நலன் கருதி கட்டடத் தொழில் பாதிக்காதவகையில் ஒரு லாரி லோடு ரூ.600/- என விலை நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

**தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம்**

தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் மாநில அரசின் இணைப் பொறுப்பின்கீழ் வரும் இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923 சட்டத்தினை தமிழகத்தில் கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதற்கும், பொதுமக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துகளுக்கும் இழப்பு நேராவண்ணம் பாதுகாப்புக்காக நடைமுறைப்படுத்துகிறது.

உயர் அழுத்த கொதிகலன்கள் உள்ளிட்ட கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களுக்குத் தேவையான உயர் அழுத்த உதிரி பாகங்கள் தயாரிப்பில் முதல் நிலையில் இருந்து வருகின்ற தமிழ்நாட்டில், அவை

நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதற்கும் அதன் தொழில் மேம்பாட்டிற்கும் தனது சிறப்பான செயல் திறம்பாட்டினால் கொதிகலன்கள் ஆய்வகம் உறுதுணையாக இருந்து வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கிவரும் கொதிகலன்கள் அனைத்தும், தேர்ச்சிபெற்ற கொதிகலன்கள் பணியாளர்களாலும், தேர்ச்சிபெற்ற கொதிகலன் பொறியாளர்களாலும் இயக்கப்படுவது தொடர்பாக, தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகிய விதிகளை செயல்முறைப்படுத்துதல் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகத்தின் முக்கிய பொறுப்பாகும்.

தமிழ்நாடு கொதிகலன் பணியாளர் தேர்வுகள் நடத்தி முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சான்றிதழ் வழங்குதல் மற்றும் தமிழ்நாடு கொதிகலன் இயக்கப் பொறியாளர்கள் தேர்வு நடத்தி தேர்ச்சிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், பழுதுபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் அனல்மின் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உயர் அழுத்த பற்றவைப்பாளர்கள் உரிய தகுதியுடன் இருப்பதை உறுதி செய்யும் பற்றவைப்பாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி, அதற்கான சான்றிதழ்களை வழங்கும் பொறுப்பிலனயும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும்போது, அவற்றின் பல்வேறு பாகங்களும் தரமான பொருட்களைக் கொண்டும், தரமான வேலைத்திறன் கொண்ட பணியாளர்களைக் கொண்டும், நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ன் வரையறைகளின்படி கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் வடிவமைத்து தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் வடிவமைப்புகளுக்கு ஒப்புதல் வழங்குதல், தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றின் தரத்திற்கு உத்தரவாதம் அளித்தல் மற்றும் ஒவ்வொரு தயாரிப்பிலும் கச்சாப் பொருள் நிலையிலிருந்து, இறுதி வடிவம்பெறும் நிலை வரையிலும், பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் ஆகியவை இவ்வாய்வகத்தினால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் தரத்திற்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன.



மேலும் பதிவுபெறாத மற்றும் சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து அவற்றின் இயக்கத்தைத் தடை செய்யும் பணியையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் தனது சிறப்பான செயல்திறனினால், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மற்றும் உத்வேகம் பெற உதவி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாக திகழ்கின்றது.

## கட்டட அமைப்பு

பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு, 16 வட்டங்களுடனும் (சிவில் பணிகளுக்கு 13 வட்டங்களும், மின்சாரப் பணிகளுக்கு 3 வட்டங்களும்), 52 கோட்டங்களுடனும் (சிவில் பணிகளுக்கு 45 கோட்டங்கள், மின்சாரப் பணிகளுக்கு 7 கோட்டங்கள்) 01-04-1996 முதல் தனி அமைப்பாக செயல்பட்டு வருகின்றது.

2. மாநில அரசின் பல்வேறு அரசுத் துறைகளுக்கு, அவற்றின் தேவைக்கேற்ப கட்டடங்களை வடிவமைத்தல், திட்டமிடுதல், நிலம் கையகப்படுத்துதல் ஆகியவற்றுடன் கட்டுமானப் பணிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பினை பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு மேற்கொண்டுள்ளது. தவிர ஸ்தூபிகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை கட்டும் பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொள்கின்றது.

3. மேலும், மாநில மற்றும் மத்திய அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள், வாரியங்கள், தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம், பல்கலைக்கழகம், வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் போன்றவற்றுக்கான கட்டுமானப் பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

4. அனைத்து அரசுத் துறை கட்டடங்கள், ஸ்தூபிகள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பராமரிக்கும் பணிகளையும் இவ்வமைப்பு செயற்படுத்தி வருகின்றது.

5. ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், சென்னை மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள ஆளுநர் மாளிகைகள், தலைமைச் செயலகம், அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதிகள் மற்றும் குடியிருப்புகள், நீதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் மிக மிக முக்கிய பிரமுகர்களுக்கான மாளிகைகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியினையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

6. இவை தவிர, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊழல் தடுப்புத் துறை மற்றும் நீதித் துறை ஆகியவற்றால் அனுப்பப்படும் சொத்து மதிப்பீட்டுப் பணிகளும் இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திரையரங்குகளுக்கு தர உறுதிச் சான்றிதழ்களும், அரசு அலுவலகங்கள் இயங்கும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்களும் இவ்வமைப்பினால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வமைப்பு மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக மிக முக்கிய பிரமுகர்கள் வருகையின்போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரத் தடுப்பு மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலி அமைப்பு போன்ற பணிகளையும் செய்து வருகின்றது.

7. சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம், கண்காணிப்புப் பொறியாளர் பொறுப்பின்கீழ் செயற் பொறியாளர் தலைமையில், பின்வரும் பணிகளை பொதுமக்களுக்கு சேவையாக செய்து வருகிறது.

(அ) பொதுப் பணித் துறை கட்டட மையம் மூலம் பொறியாளர் மற்றும் கட்டடத் தொழில் வினைஞர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

(ஆ) பொதுப் பணித் துறை கட்டட மையம் கட்டட பணிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. கட்டட கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான விலை குறைந்த, தரம் வாய்ந்த கட்டுமானப் பொருட்கள், கருவிகள் தயார் செய்து சந்தைக்குக் கொண்டு வருவது மற்றும் கட்டுமானப் பணிகளில் உபயோகிப்பது ஆகிய பணிகளிலும் ஈடுபடுகிறது.

(இ) கட்டுமானப் பொருள்கள் தரப் பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப் பணி மற்றும் பயனீட்டு ஆய்வுப் பணிகளையும் நடத்துகிறது.

(ஈ) பழுதடைந்த கட்டடங்களைக் கூர்ந்து ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்புப் பணி சிபாரிசு செய்தல் மற்றும் அவற்றை பணி நிலைமைக்குக் கொண்டுவரத் தேவையான யுக்திகளைக் கையாளுதல் போன்ற சேவைகளையும் அளிக்கிறது.



(உ) *கட்டடக் கட்டுமானப் பணிகளில் நிலக்கரி/பழுப்பு நிலக்கரிச் சாம்பலைப் பயன்படுத்துதல்*

அனல் மின் நிலையங்களுக்கு அருகில் உள்ள நிலப் பரப்பு மற்றும் சுற்றுச்சூழல், அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் நிலக்கரி/பழுப்பு நிலக்கரிச் சாம்பலால் மாசுபடுவதைத் தவிர்க்கும் பொருட்டும், செங்கல் தயாரிப்பதற்காக இயற்கை வளமான களிமண் பெரிதும் வெட்டி எடுக்கப்பட்டு வருவதைத் தடுக்கும் பொருட்டும், அனல் மின் நிலையங்களிலிருந்து 100 கிலோ மீட்டர் சுற்றளவு வரை மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளில் களிமண் செங்கற்களுக்கு மாற்றாக நிலக்கரி/பழுப்பு நிலக்கரிச் சாம்பல் கலந்து தயாரிக்கப்பட்ட செங்கற்கள் மட்டுமே உபயோகப்படுத்தப்பட வேண்டுமென மத்திய அரசு, (2003 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட) நிலக்கரிச் சாம்பல் ஆணை 1999 என்ற ஆணையினைப் பிறப்பித்துள்ளது. இவ்வாணையின்படி 01-08-2007 முதல் அனல் மின் நிலையங்களிலிருந்து 100 கிலோ மீட்டர் சுற்றளவு வரை கட்டப்படும் கட்டுமானங்கள் அனைத்திலும் முற்றிலுமாக (100 விழுக்காடு) நிலக்கரிச் சாம்பல் கலந்து தயாரிக்கப்பட்ட செங்கற்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், கட்டடங்களைச் சுற்றியுள்ள தாழ்ந்த நிலப்பரப்பின் மட்டத்தினை உயர்த்துவதற்கும், சாலை அமைக்கும் பணிகளிலும், மண் அல்லது மணலுக்கு மாற்றாக நிலக்கரிச் சாம்பல்/பழுப்பு நிலக்கரிச் சாம்பல் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள ஆணைகளை நிறைவேற்றிடும் வகையில், ஒரு தொடக்க முயற்சியாக 01-05-2004 முதல் பொதுப் பணித் துறை, கட்டட அமைப்பில் தயாரிக்கப்படும் மதிப்பீடுகள் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் ஆகியவற்றில் சுட்ட களிமண் செங்கற் சுவர்களுக்கு மாற்றாக நிலக்கரிச் சாம்பல் கலந்து தயாரிக்கப்படும் செங்கற்களைப் பயன்படுத்தி சுவர்கள் கட்டப்படவும், நில மட்டம் உயர்த்தப்படுவதற்காக மண் அல்லது மணல் கொண்டு கட்டுமானத் தளங்கள் நிரப்பப்படுவதற்கு மாற்றாக நிலக்கரிச் சாம்பல்/ பழுப்பு நிலக்கரிச் சாம்பலைப் பயன்படுத்திடவும் தேவையான இனங்கள் சேர்க்கப்படுகின்றன.

(ஊ) கற்காரைப் பணிகளில் மணலுக்கு மாற்றாக கல் துகளைப் பயன்படுத்துதல்.

கட்டுமானத்தில் பெரிதும் பயன்படுத்தப்படும் இயற்கை வளமான "மணல்" தற்போது அரியதொரு பொருளாகவும் அதிகவிலை கொண்டதாகவும் ஆகியுள்ளது. அதே சமயத்தில் கருங்கல் ஜல்லிக்காக கற்பாறைகளை கல் உடைக்கும் இயந்திரங்கள் மூலமாக நொறுக்கும்போது தேவையற்ற பொருளாகக் கிடைக்கும் கல் துகள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதுடன், கல்குவாரியைச் சுற்றிக் குடியிருப்பவர்களின் ஆரோக்கியத்திற்கும் கேடாக அமைகிறது.

எனவே, கட்டுமானப் பணிகளுக்கான கற்காரைப் பணிகளில் இயற்கை வளமான மணலின் பயன்பாட்டை குறைத்து அதன்மூலம் கட்டடக் கட்டுமானத்திற்காக ஆகும் செலவினைக் கட்டுப்படுத்திடவும், அதேநேரத்தில் கல்குவாரி பகுதியில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் முகத்தானும், 30 விழுக்காடு அளவுக்கு கல் துகளை மணலுக்கு மாற்றாக பயன்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த சோதனைகள், பொதுப் பணித் துறை, கட்டடப் பிரிவின் கட்டட ஆராய்ச்சி மையத்தின்மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**8. கட்டடக் கலைப் பிரிவு**

தலைமைப் பொறியாளர் நிலையிலான தலைமைக் கட்டடக் கலைஞரின் தலைமையில், கட்டட வரைகலை பிரிவும் தனியாக இயங்கி வருகின்றது. இப்பிரிவு, பொதுப் பணித் துறையால் கட்டப்படும் அனைத்து அரசு கட்டடங்களுக்கும் தேவையான வரைபடங்களைத் தயாரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. மேலும், அனைத்துப் புதிய கட்டடங்களுக்கும் தேவையான முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களைக் கொண்ட மூல வரைபடங்களையும் மற்றும் விரிவான வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மிகப்பெரிய கட்டுமானப் பணிகளான புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு மாவட்ட பெருந்திட்ட வளாகங்கள் கட்டுவது, தலைமையிட கட்டடங்கள் அமைப்பது மற்றும் நினைவிடங்கள், மணி மண்டபங்கள், பூங்காக்கள் போன்றவற்றை அமைப்பதற்கான விரிவான இட வரைபடங்களையும்



தயாரிக்கின்றது. மேலும், தொகுப்பு அங்கீகாரம் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளான ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்களுக்கான வகுப்பறைகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வரைபடங்களையும் தயாரிக்கின்றது.

**9. துறைவாரியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகளின் விவரம் பின்வருமாறு :—**

மருத்துவத் துறை :—

அ. மருத்துவமனைகள் :—

1. ரூ.650 இலட்சம் மதிப்பீட்டில், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவுக்கான புதிய கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2. சென்னை அரசு பொது மருத்துவமனையில் பழமையான பழுதடைந்தக் கட்டடங்களை இடித்துவிட்டு அவ்விடத்தில் இரண்டு புதிய அடுக்குமாடிக் கட்டடங்கள் ரூ.10447 இலட்சம் மதிப்பில் கட்ட அங்கிகரிக்கப்பட்டது. இவ்விரண்டும் 7 அடுக்குமாடிகளுடன் 6.89 இலட்ச கன சதுர அடி கட்டடப் பரப்பைக் கொண்டதாகும். இவ்வடுக்குமாடிக் கட்டடங்கள் திட்டமிடப்பட்டு, உயர்நிலை தொழில்நுட்ப வசதியுடன் நவீனமயமாகக் கட்டப்பட்டுள்ளன. இக்கட்டடங்களில் 16 சொகுசு அறுவை சிகிச்சை அரங்கம், தீவிர மருத்துவ சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, நவீன வசதிகளுடன்கூடிய ஆய்வகம், கதிர்வீச்சுப் பிரிவு, இரத்த வங்கி, அவசர சிகிச்சைப் பிரிவு, கட்டணப் பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் 16 மின்தூக்கிகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்கள் விரைவில் முடிக்கப்பட்டுள்ளன.

3. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஆசாரிப்பள்ளத்தில் உள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.2173 இலட்சம் செலவில் 500 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு, முதற்கட்டமாக

ஹட்கோ நிதி உதவியுடன் ரூ.500 இலட்சம் மதிப்பில், 300 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனைக்கான கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

4. வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள புதிய மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.500 இலட்சம் செலவில், 300 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையும் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடமும் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஹட்கோ நிதி உதவியுடன் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

5. 2001-2002 ஆம் ஆண்டில் 6 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளிலும், 6 வட்ட தலைமையிட மருத்துவமனைகளிலும் ரூ.132 இலட்சம் செலவில் ஜெனரேட்டர்கள் வைக்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில்; 11 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டும் ஒரு இடத்தில் பணி முன்னேற்றத்திலும் உள்ளது.

**ஆ மருத்துவக் கல்லூரிகள் :-**

1. தமிழ்நாட்டிலுள்ள 5 மருத்துவ கல்லூரிகளில் மருத்துவ பட்டப்படிப்பு படிப்பதற்கு 315 மாணவர்கள் கூடுதலாக சேர்ந்து படிக்க வகை செய்யும்பொருட்டு, புதிய மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.1882 இலட்சத்திற்கு (25 பணிகள்) ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில், முதல் கட்டமாக ரூ.1257 இலட்சம் செலவில் (12 பணிகள்) ஹட்கோ நிதி உதவியுடன் கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2. தேனி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ரூ.1200 இலட்சம் செலவில் அரசு ஒப்புதல் பெறப்பட்டு ஹட்கோ நிதி உதவியுடன் கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(இ) ஆரம்ப சுகாதார மையங்கள்:-**

(1) 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.1600 இலட்சம் செலவில் 40 இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட வார்டுகளும் கதிர்வீச்சுப் பிரிவுக் கட்டடங்களும் கட்ட ஒப்பளிப்பு



வழங்கப்பட்டது. அவற்றில் 38 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 2 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(2) 2002-2003 ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன், ரூ.680 இலட்சம் செலவில் 17 இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட வார்டுகளும், கதிர்வீச்சுப் பிரிவு கட்டடங்களும் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் 14 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(3) 2003-2004 ஆம் ஆண்டில், மத்திய அரசு நிதி உதவியுடன் 33 இடங்களில் 30 படுக்கைகள் மற்றும் கதிர்வீச்சுப் பிரிவுடன்கூடிய கட்டடம் கட்ட, அரசு ரூ.1221 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியது. இந்த 33 இடங்களில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 23 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள இடங்களில் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**(ஈ) துணைச் சுகாதார மையங்கள்**

(1) 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன், ரூ.600 இலட்சம் செலவில் 100 துணைச் சுகாதார நிலையங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. அவற்றில் 97 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் மீதமுள்ள ஒரு இடத்தில் இடத் தகராறு காரணமாக பணி மேற்கொள்ள இயலவில்லை.

(2) 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.1920 இலட்சம் செலவில், 298 இடங்களில் துணைச் சுகாதார நிலையங்கள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவற்றில் 287 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, 11 இடங்களில் இடத் தகராறு காரணமாக பணி மேற்கொள்ள இயலவில்லை.

**உள்துறை :-**

**(அ) நீதித் துறை :-**

(1) 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.762 இலட்சம் செலவில் விழுப்புரம், பெருந்திட்ட வளாகத்தில் ஒருங்கிணைந்த

[2004 ஜூலை 27

நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(2) 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.192 இலட்சம் செலவில் விழுப்புரம், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு முக்கிய பிரமுகர்கள் விருந்தினர் மாளிகை மற்றும் துணைக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(3) அரசு, ரூ. 252 இலட்சம் செலவில், நூலகக் கட்டடம் சென்னையில் கட்ட ஒப்புதல் வழங்கியதில் இறுதிக்கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(4) தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக ரூபாய் 390 இலட்சம் செலவில் பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

(5) ஸ்ரீவில்லிப்புதூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக ரூபாய் 982 இலட்சம் செலவில் பணி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

**(ஆ) தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை:—**

1. **2003-2004 ஆம் ஆண்டு பொது ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவி திட்டத்தின்கீழ் ரூ.356.40 இலட்சம் மதிப்பில் 15 இடங்களில் தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில், 14 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள ஒரு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.**

**(இ) சிறைத் துறை:—**

2. **2002-03 மற்றும் 2003-04 ஆம் ஆண்டில் ரூ.320 இலட்சம் மதிப்பில் மத்திய சிறைகள் மற்றும் உப சிறைகள் ஆகியவற்றில் மருத்துவ வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 27 இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 25 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.**



2004 ஜூலை 27]

2. சிறைகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சிறை அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டும் பணிக்காக ரூ.190683 இலட்சம் மதிப்பில் சீரமைப்புப் பணிகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல்லில் மாவட்ட சிறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

வருவாய்த் துறை :-

(1) பதினோராவது நிதிக் குழுவின் நிதி உதவியுடன் பெரம்பலூர், கரூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் ரூ.7213.74 இலட்சம் மதிப்பில் 251 வருவாய் மற்றும் பிற துறைக் கட்டடங்கள் 2001-2004 ஆண்டுகளில் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அவற்றில் 178 பணிகள் முடிக்கப்பட்டு, 55 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதம் 2 இடங்களில் பணிகள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

(2) புதியதாக அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் மாளிகை கட்டுவதற்காக அரசு ரூ.1000 இலட்சம் வழங்கியுள்ளது. பணி விரைவில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

பெரம்பலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.716 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

(3) அரசு ரூ. 265.60 இலட்சம் மதிப்பில் பெரம்பலூர் பெருந்திட்ட வளாகத்திற்கான அணுகுசாலை அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணி இவ்வருடத்தில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கல்வித் துறை:-

1. நபார்டு வங்கி நிதி உதவியுடன் இரண்டாம் கட்டமாக 19 மாவட்டங்களில், அமைந்துள்ள 250 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில், வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கழிப்பறைகள் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் ஆகிய

பணிகளுக்காக, ரூ.8063.69 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கப்பட்டதில், 56 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 194 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2. அதேபோன்று கடலூர், வேலூர், திருவள்ளூர், தர்மபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 250 பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டும் பணி மொத்தம் ரூ.8380 இலட்சம் மதிப்பில் நபார்டு உதவியுடன் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**வேளாண்மைத் துறை :-**

(1) மதுரையில் ரூ.1260 இலட்சம் செலவில், நெல் வணிக வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளது.

(2) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் ரூ.245.20 இலட்சம் மதிப்பில் வேளாண் விளைபொருள் அங்காடி அமைக்கும் பணி, விரைவில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை:-**

சென்னை கிண்டியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் ரூ.278.30 இலட்சம் செலவில் கட்ட, நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு இறுதிக் கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம்:-**

சென்னையில் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்திற்காக, புதிய வளாகம் கட்டுவதற்கு ரூ.1000 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, இறுதிக்கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்கள்:-**

தொகுதி ஒன்றுக்கு ரூ.4.85 இலட்சம் செலவில், 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களது தொகுதிகளில் அலுவலகக் கட்டடங்கள்



அமைக்கும் பணிக்காக, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில், 221 தொகுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை:-**

(1) பகுதி 2 திட்டத்தின்கீழ் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு 358 விடுதிகளில் குடிநீர் வழங்கல், கழிப்பிட வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கிய சிறப்புப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.275.60 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியதில், 312 விடுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 46 விடுதிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(2) 2003-2004-ல் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு மத்திய அரசின் நிதி உதவி மற்றும் ஹட்கோ நிதி உதவியுடன் ரூ.3150 இலட்சம் மதிப்பில் 100 விடுதிகள் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அவற்றில் 90 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 10 இடங்களில் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**10. 2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி – 2 திட்டங்கள்**

1. கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் 4 பிரிவுகளுடன்கூடிய துணைக் கோட்ட அலுவலகக் கட்டடம் ரூ.13.31 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.

2. இராமநாதபுரத்தில், பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகக் கட்டடம் ரூ.31.00 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.

3. தேனியில் ஒரு பிரிவுடன்கூடிய துணைக் கோட்ட அலுவலகக் கட்டடம் (1) ரூ.8.25 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.

4. திருவண்ணாமலையில் புதிதாக விருந்தினர் இல்லம் ரூ.70.00 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.

[2004 ஜூலை 27

5. சென்னை, சேப்பாக்கத்தில் பொதுப் பணித் துறை முதன்மைக் கட்டடத்தின் முதற்தளம் தெற்குப் பக்கத்தில் தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான (கட்டடங்கள்) கூடங்களை ரூ.15.00 இலட்சம் மதிப்பில் புதுப்பித்தல்.

6. சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் டி-83 முதல் டி-114 வரையிலான (டி-111 மற்றும் டி-112 நீங்கலாக) பொதுப் பணித் துறை குடியிருப்புகளை ரூ.40.30 இலட்சங்கள் மதிப்பில் மேம்படுத்துதல்.

11. முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள் மற்றும் 2004—2005 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும் பணிகளின் விவரங்கள் முறையே இணைப்பு-1 மற்றும் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## இணைப்பு–1

### முன்னேற்றத்தில் உள்ள பெரும் கட்டடப் பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் புறநோயாளிகள் பிரிவு கட்டுதல் | 650.00 |
| 2 | சென்னை, அரசு பொது மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் கட்டுதல் | 10447.00 |
| 3 | கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவக் கல்லூரிக்காக புதிய கட்டடம் கட்டுதல் (முதற்கட்டம்) | 500.00 |
| 4 | வேலூர் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டுதல் | 500.00 |
| 5 | 33 இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டடங்களை மேம்படுத்துதல். | 1221.00 |
| 6 | தமிழ்நாட்டிலுள்ள 5 மருத்துவமனைகளில் 315 மாணவர்களைச் சேர்க்கும் வகையில் புதிய கட்டடங்கள் கட்டுதல் – (முதற்கட்டம்) | 1257.00 |



2004 ஜூலை 27]

| | | |
|---|---|---|
| 7 | தேனி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டுதல் | 1200.00 |
| 8 | விழுப்புரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல் | 762.00 |
| 9 | விழுப்புரத்தில் முக்கிய பிரமுகர்கள் விருந்தினர் மாளிகை மற்றும் துணைக் கட்டடங்கள் கட்டுதல் | 192.00 |
| 10 | சென்னையில் நூலகக் கட்டிடங்கள் கட்டுதல் | 252.00 |
| 11 | தமிழ்நாட்டில் உள்ள 15 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைத்தல் | 356.00 |
| 12 | 11 ஆவது நிதிக் குழுப் பரிந்துரையுடன் வருவாய் மற்றும் வருவாய் சாரா கட்டடங்கள் கட்டுதல். | 3200.00 |
| 13 | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டில் வட்டாச்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 110.00 |
| 14 | விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் விருந்தினர் இல்லம் கட்டுதல். | 161.00 |
| 15 | பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 716.00 |
| 16 | திருவாரூர் மாவட்டம், திருவாரூர் பெருந்திட்ட வளாகத்தில் பன்மாடி அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 500.00 |
| 17 | மதுரை, மாட்டுத்தாவணியில் நெல் வணிக வளாகம் கட்டுதல் | 1260.00 |
| 18 | சென்னை, கிண்டியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகம் கட்டுதல் | 278.00 |
| 19 | சென்னை, அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் புதிய கட்டடம் கட்டுதல் | 1000.00 |

[2004 ஜூலை 27

| | | |
|---|---|---|
| 20 | பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு விடுதிகள் கட்டுதல். | 3150.00 |
| | மொத்தம் | 27712.00 |

## இணைப்பு - 2

*2004—2005 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும் கட்டடப் பணிகள் குறித்த விவரம்*

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் கட்டுதல். | 390.00 |
| 2 | ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் கட்டுதல். | 982.00 |
| 3 | நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மாவட்ட சிறைக் கட்டடங்கள் கட்டுதல். | 472.00 |
| 4 | வருவாய் சார்ந்த மற்றும் வருவாய் சாரா கட்டடங்கள் கட்டுதல். | 1365.00 |
| 5 | பெரம்பலூர் பெருந்திட்ட வளாகத்திற்கு அணுகுசாலை அமைத்தல். | 266.00 |
| 6 | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டச்சத்திரத்தில் வேளாண் விளைபொருள் பேரங்காடி கட்டுதல். | 245.00 |
| 7 | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் மாளிகை கட்டுதல். | 1000.00 |
| 8 | நீடாமங்கலத்தில் ஐ.டி.ஐ. கட்டடம் கட்டுதல். | 142.00 |
| | மொத்தம் | 4862.00 |



2004 ஜூலை 27]

## இணைப்பு - VIII

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 39–வருவாய்த் துறை

## மானியக் கோரிக்கை எண் 49–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### அத்தியாயம்-1

**முன்னுரை**

மாநில அரசு மக்கள் நலம் காணும் அரசாக செயல்படும் நோக்கத்தினை நிறைவேற்றும்வண்ணம், வருவாய்த் துறையின் பணிகள் அமைந்துள்ளன. இம்மாநிலத்தில் வருவாய்த் துறை, நிர்வாகத் துறையின் அமைப்பில் பாரம்பரியமும் பெருமையும் மிக்க மூத்த துறையாகும்.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வருவாய் வாரியம் என்ற அமைப்பு கலைக்கப்பட்டு அதன் பணிகள் வருவாய் மற்றும் நில நிர்வாகம் மாநில அளவில் அதிகார வரம்பு கொண்ட வெவ்வேறு ஆணையர்களிடம் அதாவது, வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர், நில சீர்திருத்த ஆணையர், மேலும் அதன் பின்னர் ஆணையர் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் ஆகியோரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மக்களுடைய நில உடைமை உரிமையை பாதுகாத்தல், நில வருவாய், ஆவணங்களைப் பராமரித்தல், மேம்படுத்துதல் முதலிய பணிகள் வருவாய்த் துறையின் முக்கிய பணிகளாகும். நில எடுப்பு, நில ஒப்படை, நில குத்தகை, நில உரிமை மாற்றம், நிலப் பட்டாக்கள் வழங்குதல், நிலச் சீர்திருத்தம், நகர்ப்புற நில உச்சவரம்பு, நில வருவாய், நகர்ப்புற நிலவரி, நிலவரி வசூல் மேலும் நில அளவை, வருவாய் பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் நில ஆவணங்களை கணினிமயமாக்குதல் போன்ற பணிகளும் வருவாய்த் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

[2004 ஜூலை 27

இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இன்னல்களைத் துடைப்பதில் முன்னின்று செயல்படுவதும், இயற்கைச் சீற்றங்கள் குறித்து முன்னதாக அறிவிப்பதும் வருவாய்த் துறையேயாகும். இயல்பு வாழ்க்கை திரும்புவது வரை தேவையான உதவிகளை இத்துறை வழங்கி வருகிறது.

மேலே கூறப்பட்ட பணிகள் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ், பல்வேறு நிலைகளில், மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணி அலுவலர்களின் துணையுடன் நிறைவேற்றப்படுகின்றன.

## அத்தியாயம்-2

### வருவாய் நிர்வாகம்

அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் பல துறைகளில் மக்களின் அனைத்து நேரடி தொடர்புக்குட்பட்ட இன்றியமையாத் துறையாக வருவாய் நிர்வாகத் துறை இயங்கி வருகிறது. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் தலைமையில் இயங்கி வரும் வருவாய் நிர்வாகத் துறையில் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணித்தல், சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகள் கவனிக்கப்படுகின்றன. இத்துறையின் பெயர் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என அரசாணை (நிலை) எண் 219, வருவாய்த் துறை, நாள் 27-5-2003-ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர், முதன்மை அதிகாரியாக இருந்து சட்டம்-ஒழுங்கு மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகள் மட்டுமல்லாது அனைத்து வளர்ச்சிப் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்திற்கும் பொறுப்பாவார். வருவாய்த் துறையின் மற்ற அலுவலர்களைப் பொறுத்தமட்டில், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு தவிர பிற முக்கியப் பணிகளான சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற பொதுத்



2004 ஜூலை 27]

தேர்தல்கள் பணிகள் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல் பணிகள், நிலவரி வசூலித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள், பொது மக்களுக்குத் தேவைப்படும் பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர் உதவித் தொகை திட்டங்களைச் செயல்படுத்துதல், பொது விநியோகத் திட்டத்தைக் கண்காணித்தல், குழந்தைகளுக்கும் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மதிய உணவு வழங்கும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு அவர்கள் பொறுப்பாவார்கள். பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வருவாய்த் துறை அலுவலர்கள் மக்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள். பொது மக்களின் குறைகளுக்குத் தீர்வு காணுவது இவர்களது பிரதானப் பணிகளில் ஒன்றாகும். புயல், வெள்ளம், வறட்சி, தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளை விரைவாகவும் திறம்படவும் சமாளிப்பது வருவாய்த் துறையின் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

மாவட்ட நிர்வாகத்தில் எந்தவொரு பணியாவது நேரடியாக ஒரு குறிப்பிட்ட துறைக்கு ஒதுக்கப்படாவிட்டாலும் அப்பணி பொது மக்களுக்கு நேரடித் தொடர்பு உள்ளவையாக இருப்பின் அப்பணி இறுதியாக வருவாய்த் துறையின் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### 2.2. மனுநீதித் திட்டம்

மாவட்ட நிர்வாகம் மக்கள் குறைகளை நேரடியாகப் பெற்று விரைந்து தீர்ப்பதற்காக மனுநீதித் திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து முடிந்தவரை அந்த இடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே அத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். அதன்படி இத்திட்டம் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் துணை ஆட்சியர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் நடத்தப்படுகிறது. மாவட்ட அளவிலுள்ள அரசுத் துறை அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு மாதமும் எந்தெந்த கிராமங்களில் எந்தெந்த தேதியில் மனுநீதித் திட்டம் எந்த அலுவலரால் நடத்தப்பட வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே மாவட்ட ஆட்சியர்கள் தயாரித்து வெளியிடுகிறார்கள்.

மனுநீதித் திட்டம் மாதமொரு முறை, மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. இரண்டாவது புதன்கிழமை அரசு

விடுமுறை தினமாக இருப்பின், அடுத்து வரும் பணி நாளில் இத்திட்டம் நடத்தப்படுகிறது. மூன்றாண்டுக் காலத்திற்குள், அனைத்து கிராமங்களிலும், இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்ற வகையில் திட்டம் தீட்டப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் மனுநீதித் திட்டம் நடத்தப்படுவதை ஒத்திவைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மனுநீதித் திட்டம் நடத்தப்பட்டது தொடர்பாக ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள், சிறப்பு ஆணையர் (ம) வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு, மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்யும்போது, அரசுத் துறை அலுவலகங்களில் மனுநீதித் திட்டம் தொடர்பான பதிவேட்டினை ஆய்வு செய்கின்றனர்.

மனுநீதித் திட்டத்தின்மூலமாக நிலப் பட்டா, நில மாற்றம், ஊரக வளர்ச்சி, சமூக நலம் தொடர்பான தனி நபர்களிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு மக்களின் குறைகள் களையப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2004 ஆம் ஆண்டு மார்ச் இறுதி வரை 2,82,715 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 2,51,165 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

## 2.3 பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அனைத்து மாவட்டங்களிலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் பின்பற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்க் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடங்களிலேயே இருந்து பொதுமக்களிடமிருந்து, மனுக்களைப் பெற்று, பிற துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து அறிக்கைப் பெற்று, குறிப்பிட்ட நாளில் மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்கிறார்கள். அரசு அலுவலகங்களில் கடைபிடிக்கப்படும் பல்வகை நடைமுறைகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான கால அளவுகள் குறித்த தகவல்களை, மக்கள் எளிதில் அணுகும்வண்ணம் அறிவிப்புப் பலகை மற்றும் தகவல் மையங்கள் மூலம் அறிவித்து, பொதுமக்கள் விழிப்புணர்வு அடைய வழிவகை செய்யப்படுகிறது.



ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு தொடங்கப்பட்டு, அது ஒரு தனித் துணை ஆட்சியர் (மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) கட்டுப்பாட்டிலும், மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. தனித் துணை ஆட்சியருக்கு தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தும், 'நிக்நெட்' கணிப்பொறி மூலம் கிடைக்கும் விவரங்களைக்கொண்டும், மக்கள் குறை தீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின்மீது மாவட்டத்தின் அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்கிறார்.

மாநிலத்தில் ஒரு மாசுமறுவற்ற தூய்மையான, வெளிப்படையான திறமைமிக்க நிருவாகத்தைச் செயல்படுத்த உறுதிபூண்டு, அதன்படி பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்மீது துரித நடவடிக்கை எடுத்து அம்மனுக்களின்மீதான இறுதி முடிவினை மனுதாரர்களுக்கு தெரிவிக்க அரசு தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளது. அதாவது 5 நாட்களுக்குள் மனுக்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், அம்மனுக்களின்மீது தக்க நடவடிக்கை எடுத்து அம்மனுக்களின் மீதான முடிவினை 90 நாட்களுக்குள் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கவும், இதுகுறித்து அப்போதைக்கப்போது உள்ள நிலவரத்தை கணினியில் பதிவு செய்து இப்பணியினை ஆய்வு செய்யவும் அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 2003 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2004 ஆம் ஆண்டு மார்ச் இறுதி வரை 3,94,669 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 3,30,150 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

## 2.4. மாண்புமிகு அமைச்சர்கள்/நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்களால் பெறப்படும் மனுக்கள்

மாண்புமிகு அமைச்சர்கள்/நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்குச் செல்லும்போது பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அனுப்புகிறார்கள். அவ்வாறு பெறப்படும் மனுக்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்டமன்றத் தொகுதி/பாராளுமன்றத் தொகுதி வாரியாக பராமரிக்கப்படும் பதிவேட்டில் பதிந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2004 ஆம் ஆண்டு மார்ச் இறுதி வரை 20,791 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 17,310 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

## 2.5 சான்றுகள்

வருவாய்த் துறையின்மூலம் பொதுமக்களின் தேவையை முன்னிட்டு கீழ்க்கண்ட பன்னிரெண்டு வகையான சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. சாதிச் சான்று
2. பிறப்பிட/இருப்பிடச் சான்று
3. வருமானச் சான்று
4. நாட்டினச் சான்று
5. வாரிசுச் சான்று
6. சொத்து மதிப்புச் சான்று
7. பிறப்பு / இறப்புச் சான்று
8. ஆதரவற்ற குழந்தைச் சான்று
9. ஆதரவற்ற விதவைச் சான்று
10. கலப்புத் திருமணச் சான்று
11. பள்ளிச் சான்றுகள் தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று
12. கணவனால் கைவிடப்பட்டவர் சான்று

### சாதிச் சான்று

பொதுமக்களின் தேவையற்ற அலைச்சலைக் குறைக்கவும், வருவாய்த் துறையின் வேலைப் பளுவை குறைக்கவும், 1988 ஆம் ஆண்டு முதல்





அச்சடிக்கப்பட்ட நிரந்தர சாதிச் சான்று அட்டைகள் வழங்கும் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும்/ தொழிற் கல்வி நிறுவனங்களிலும் சேரவும், வேலைவாய்ப்பு பெறவும் இச்சான்றுகள் பெரிதும் உதவியாக உள்ளன.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் அரசு ஆணையின்படி சாதிச் சான்று அட்டைகள் சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்பட்டு அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களின்மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அரசு ஆணை எண் 2(டி) 374, வருவாய்த் துறை, நாள் 1-9-2003-ன்படி 8,44,000 சாதிச் சான்று அட்டைகள் 2003-2004 ஆம் ஆண்டிற்கு அச்சிடப்பட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. சாதிச் சான்று கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்மீது உரிய விசாரணைக்குப் பிறகு தகுதியானவர்களுக்கு சாதிச் சான்று அட்டைகள் வழங்கப்படுகின்றன.

பள்ளிப் படிப்பை முடித்தபின், மேற்படிப்புக்காகவும், வேலைவாய்ப்பு பெறவும், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும்பொருட்டு பள்ளிகள் மூலமாக சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறையை, அரசு ஆணை எண் 165, வருவாய்த் துறை, நாள் 1-4-1999-ன்மூலம், அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முறையின்படி 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே அதுவரையில் சாதிச் சான்றிதழ் கோரி பெறவில்லை எனில் சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படும். வருவாய்த் துறை அலுவலர்களின் உரிய விசாரணைக்குப்பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தமாக அனுப்பப்படுகின்றன. பள்ளிப் படிப்பு முடிந்தவுடன், அந்தச் சான்றிதழ்கள் பள்ளி மாறுதல் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கும்போது சேர்த்து மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

[2004 ஜூலை 27

2003-2004 ஆம் ஆண்டில் பள்ளிகளின்மூலம் (சாதி, இருப்பிடம், வருமானச் சான்றிதழ்) 10 ஆம் வகுப்பு முடிந்த மாணவர்களுக்கு 6,67,249 சான்றிதழ்களும், 12 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு 3,12,361 சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஆக மொத்தம் 9,79,613 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### பிறப்பிட/இருப்பிடச் சான்று

பிறப்பிடம் என்பது ஒருவர் பிறந்த இடத்தினையும், இருப்பிடம் என்பது ஒருவர் நிரந்தரமாக வசிக்கும் இடத்தினையும் குறிப்பிடுவதாகும். இச்சான்றுகள் கோருபவர் இரண்டு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்று, பள்ளிகளில் சேரவும், வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும் உதவுகின்றன. இருப்பிடச் சான்று பெற வேண்டுமாயின் ஒருவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடத்தில் வசித்திருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் ரூ.10/- கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

### வருமானச் சான்று

கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், பள்ளி/கல்லூரிகளிலும் மாணவர் விடுதிகளிலும் சேரவும், இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் ரூ.10/- கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

### நாட்டினச் சான்று

கடவுச்சீட்டு, நுழைவிசைவு ஆகியவை பெறுதவற்காக, வருவாய் ஆய்வாளரின் முறையான விசாரணைக்குப் பிறகு, ஒருவர் இந்த நாட்டைச் சார்ந்தவர் என்று வட்டாட்சியரால் வழங்கப்படும் சான்றாகும் நாட்டினச் சான்று.

### வாரிசுச் சான்று

பொதுவாக, ஒரு குடும்பத்தின் தலைவரோ அல்லது அந்தக் குடும்பத்தில் உள்ள நபர் எவரேனும் காலமாகிவிட்டால், அவரது பெயரில் உள்ள அசையும்/அசையா சொத்துக்களை பெயர் மாற்றம் செய்யவும், குடும்ப ஓய்வூதியம் பெறவும், இறந்தவரின் நேரடி வாரிசுதாரர்களான, மனைவி அல்லது கணவர், மகன், மகள், தாய்/



2004 ஜூலை 27]

தந்தை ஆகியோர் வாரிசுச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். இறப்புச் சான்றின் அசல் பிரதியுடன், இரண்டு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தின்மீது அனைத்து வாரிசுதாரர்களையும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும், கிராம நிர்வாக அலுவலரையும் விசாரித்து வருவாய் ஆய்வாளர் தரும் விசாரணை அறிக்கையின் அடிப்படையில், வாரிசுதாரர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

### சொத்து மதிப்புச் சான்று

ஒப்பந்தக்காரராக பதிவு செய்யவும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலங்களில் பங்குபெறவும் இச்சான்று தேவைப்படுகிறது. இச்சான்று கோருபவர் ரூ.10/-க்கான கட்டண வில்லையுடன் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். சொத்து மதிப்பு ரூ.50,000/- வரை ரூ.100/-ம் அதற்குமேல் ஒவ்வொரு ரூ.50,000/-க்கும் ரூ.200/- வீதமும் கட்டணமாக கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

### பிறப்பு/இறப்புச் சான்று

இச்சான்று கோருபவர் ரூபாய் இரண்டுக்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் அல்லது கிராம நிர்வாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் இச்சான்று தலைமையிடத்துத் துணை வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. நகராட்சிகளில், நகராட்சி ஆணையரின் மூலமும், பேரூராட்சிப் பகுதிகளில் பேரூராட்சி செயல் அலுவலர் மூலமும் இச்சான்று வழங்கப்படுகிறது. மாநகராட்சிகளில், மாநகராட்சி ஆணையரால் சான்று வழங்கப்படுகிறது.

### ஆதரவற்ற குழந்தைச் சான்று

குழந்தைகள் அனாதை இல்லங்களில் சேருவதற்கு இச்சான்று தேவைப்படுகிறது. விண்ணப்பத்தின்பேரில், குழந்தையின் தாய்/தந்தையரைப் பற்றிய விவரமும், உண்மையில் அந்தக் குழந்தை அனாதைதானா என்ற விவரமும் குழந்தை உண்மையில் பாதுகாவலரின் பாதுகாப்பில் உள்ளதா போன்ற விவரங்கள் குறித்து தீர விசாரித்த பின்னர் இச்சான்று, வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

[2004 ஜூலை 27

**ஆதரவற்ற விதவைச் சான்று**

வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்காக விதவைகளுக்கு இச்சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரரின் கணவரின் இறப்பு விவரம் மற்றும் விண்ணப்பதாரர் மறுமணம் புரிந்துள்ளாரா, விண்ணப்பதாரருக்கு உறவினர் ஆதரவு உள்ளதா என்று விசாரித்த பின்னர் இச்சான்று வழங்கப்படுகிறது. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் வருவாய் கோட்ட அலுவலரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**கலப்புத் திருமணச் சான்று**

இரண்டு மாறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் (ஒருவர் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் இனமாகவும், மற்றொருவர் வேறு இனத்தைச் சேர்ந்தவராகவும் இருந்து) புரிந்துகொள்ளும் திருமணம் கலப்புத் திருமணம் ஆகும். வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும், அவர்தம் குழந்தைகளை பள்ளியில் சேர்க்கவும், அரசின் சலுகைகளைப் பெறவும் இச்சான்று விசாரணைக்குப்பின் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**பள்ளிச் சான்று தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று**

பள்ளி/கல்லூரிகளில் வழங்கப்படும் அசல் சான்று தொலைந்துவிட்டால், அச்சான்றின் நகலினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைக்கு விண்ணப்பிக்க, தனியாருக்கு வட்டாட்சியரால், மேற்படி சான்று தொலைந்தது உண்மை என்று சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் இச்சான்று தொலைந்தது தொடர்பாக, காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பிரதி மற்றும் இச்சான்று கிடைக்கப் பெறவில்லையென்ற காவல் நிலையத்தின் அறிக்கையுடனும் சான்றிதழ் கோரி வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் மற்றும் அருகில் உள்ளவர்களை விசாரித்து, வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**கணவனால் கைவிடப்பட்டவர் சான்று**

கணவனால் புறக்கணிக்கப்பட்ட திருமணமான பெண் அவரது கணவரை விட்டுப் பிரிந்து அவரிடமிருந்து எவ்வித தொடர்பும் இன்றி



2004 ஜூலை 27]

தொடர்ந்து ஐந்து ஆண்டிற்கும் மேலாக தனித்து வாழ்ந்து வந்தால், அவர் கணவனால் கைவிடப்பட்டவராக கருதப்படுவார். இச்சான்று வழங்குவதற்குமுன், விண்ணப்பதாரர் நிலையாக தனித்து வாழ்கிறாரா அல்லது தற்காலிகமாக பிரிந்து வாழ்கிறாரா என விசாரித்து வட்டாட்சியரால் சான்று வழங்கப்படுகிறது. அரசின் சலுகைகளைப் பெற இச்சான்று உதவுகிறது.

## 2.6 ஆட்சி எல்லைகளைச் சீரமைத்தல்

***தர்மபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் ஏற்படுத்தியது***

அரசு ஆணை நிலை எண் 569, வருவாய்த் துறை, நாள் 20-11-03-ன்படி தர்மபுரி மாவட்டத்தைப் பிரித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தினை உருவாக்கிட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஒரு தனி அலுவலர் பணியிடமும் மற்றும் தேவையான சிறப்புப் பணியிடங்களையும் தோற்றுவித்து அரசு ஆணையிட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் உள்ள வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் விவரங்கள் கீழ்வருமாறு:—

தர்மபுரி மாவட்டம்

| வருவாய்க் கோட்டம் | வட்டம் | ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| தர்மபுரி கோட்டம் | 1. தர்மபுரி | 1. தர்மபுரி<br>2. நல்லம்பள்ளி |
| | 2. பென்னாகரம் | பென்னாகரம் |
| | 3. பாப்பிரெட்டிபட்டி | பாப்பிரெட்டிபட்டி |
| | 4. பாலக்கோடு | 1. பாலக்கோடு<br>2. காரிமங்கலம் |
| | 5. அரூர் | 1. அரூர்<br>2. மொரப்பூர் |

[2004 ஜூலை 27

கிருஷ்ணகிரி மாவட்டம்

| வருவாய்க் கோட்டம் | வட்டம் | ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| 1. கிருஷ்ணகிரி | 1. கிருஷ்ணகிரி | 1. கிருஷ்ணகிரி<br>2. வேப்பனப்பள்ளி<br>3. பர்கூர் (பகுதி)<br>4. காவேரிப்பட்டினம் (பகுதி) |
| | 2. போச்சம்பள்ளி | 1. காவேரிப்பட்டினம் (பகுதி)<br>2. மத்தூர் (பகுதி) |
| | 3. ஊத்தங்கரை | 1. ஊத்தங்கரை<br>2. மத்தூர் (பகுதி)<br>3. பர்கூர் (பகுதி) |
| 2. ஓசூர் | 1. ஓசூர்<br>2. தேன்கனிக் கோட்டை | 1. ஓசூர்<br>2. சூலகிரி<br>3. தளி<br>4. கெளமங்களம் |

அரசு தனது அரசாணை நிலை எண் 569, வருவாய் [வ.நி.1(1)] துறை நாள் 20-11-2003-ல் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.7.50 இலட்சம் நிதி ஒப்புதல் அளித்து, தனி அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகைக்கென இரண்டு சிருந்துகள் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

அரசு ஆணை நிலை எண் 19, வருவாய் (ஆர்.ஏ.1(1) துறை, நாள் 19-1-2004-ல், அரசு 45 பல்வேறு வகையான பணியிடங்களை, தருமபுரி மாவட்டத்திலிருந்து புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மாற்றம் செய்து ஆணையிட்டதுடன், 89 புதிய பணியிடங்களை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேலும், இந்த அரசு ஆணையில் மேற்சொன்ன 89 புதிய பணியிடங்களில் 85 பணியிடங்களை அரசு வருவாய்த் துறை கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு தலைமைத் துறைகளில் இருந்து அதாவது நிலச் சீர்திருத்தம், வேளாண்மை வருமான வரி, வருவாய் நிருவாகம், நில அளவை மற்றும் நில நிர்வாகம் போன்ற துறைகளில் இருந்து, மறு ஒதுக்கீடு செய்யவும் மீதமுள்ள 4 பணியிடங்களில், கருவூல அலுவலர் பணியிடத்தை மாவட்டக் கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர்



2004 ஜூலை 27]

அலுவலகத்திலிருந்தும் கணினி இயக்குபவர் பணியிடத்தினை அரசு தகவல் மையத்தில் இருந்தும், ஒரு காவலர் பணியிடத்தை வெளி ஆதாரத்தின்மூலமும் மறு ஒதுக்கீடு செய்யவும் ஆணையிடப்பட்டது. நான்காவது பணியிடமான மாவட்ட ஆட்சியர் பணியிடம் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஆணை நிலை எண் 19-ல் புதிய மாவட்டத்திற்குத் தேவையான மரத் தளவாடங்கள் வாங்க ரூ.16,52,269/- (ரூபாய் பதினாறு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு, நிலையான முன்பணம் ரூ.3000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்)ஐ ஒதுக்கீடு செய்தும் ஆணையிடப்பட்டது.

இப்புதிய மாவட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9-2-2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மாவட்ட வாரியாக கோட்டங்கள், வட்டங்கள், உள் வட்டங்கள் மற்றும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

**தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள்/ உள்வட்டங்கள் மற்றும் கிராமங்களின் விவரங்கள்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட்டத்தின் பெயர் | மொத்த உள் வட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | | 1. கோட்டை—தண்டையார்பேட்டை | 4 | |
| | | | 2. புரசைவாக்கம்—பெரம்பூர் | 4 | |
| | | | 3. எழும்பூர்—நுங்கம்பாக்கம் | 4 | 55 |
| | | | 4. மயிலாப்பூர்—திருவல்லிக்கேணி | 4 | |
| | | | 5. மாம்பலம்—கிண்டி | 4 | |
| | | | | 20 | |

[2004 ஜுலை 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் | 9 | |
| | | | 2. உத்திரமேரூர் | 6 | |
| | | | 3. ஸ்ரீபெரும்புதூர் | 9 | |
| | | 2. செங்கல்பட்டு | 4. செங்கல்பட்டு | 8 | |
| | | | 5. திருக்கழுக்குன்றம் | 4 | 1210 |
| | | | 6. தாம்பரம் | 3 | |
| | | 3. மதுராந்தகம் | 7. மதுராந்தகம் | 9 | |
| | | | 8. செய்யூர் | 7 | |
| | | | | 55 | |
| 3 | திருவள்ளூர் | 1. பொன்னேரி | 1. அம்பத்தூர் | 5 | |
| | | | 2. பொன்னேரி | 8 | |
| | | | 3. கும்மிடிப்பூண்டி | 4 | |
| | | 2. திருத்தணி | 4. திருத்தணி | 6 | |
| | | | 5. பள்ளிப்பட்டு | 5 | 840 |
| | | 3. திருவள்ளூர் | 6. திருவள்ளூர் | 9 | |
| | | | 7. ஊத்துக்கோட்டை | 5 | |
| | | | 8. பூந்தமல்லி | 4 | |
| | | | | 46 | |
| 4 | வேலூர் | 1. இராணிப்பேட்டை | 1. ஆற்காடு | 5 | |
| | | | 2. வாலாஜா | 5 | |
| | | | 3. அரக்கோணம் | 8 | |
| | | 2. வேலூர் | 4. வேலூர் | 9 | |
| | | | 5. குடியாத்தம் | 5 | 843 |
| | | 3. திருப்பத்தூர் | 6. காட்பாடி | 5 | |
| | | | 7. திருப்பத்தூர் | 7 | |
| | | | 8. வாணியம்பாடி | 8 | |
| | | | | 52 | |
| 5 | திருவண்ணாமலை | 1. செய்யார் | 1. செய்யார் | 9 | |
| | | | 2. வந்தவாசி | 10 | |
| | | | 3. ஆரணி | 6 | |
| | | 2. திருவண்ணா மலை | 4. திருவண்ணாமலை | 10 | 1067 |
| | | | 5. போளூர் | 9 | |
| | | | 6. செங்கம் | 8 | |
| | | | | 52 | |



2004 ஜுலை 27]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | கடலூர் | 1. சிதம்பரம் | 1. சிதம்பரம் | 6 | |
| | | | 2. காட்டுமன்னார்கோயில் | 5 | |
| | | 2. கடலூர் | 3. கடலூர் | 5 | |
| | | | 4. பண்ருட்டி | 4 | 901 |
| | | 3. விருத்தாச்சலம் | 5. விருத்தாச்சலம் | 7 | |
| | | | 6. திட்டக்குடி | 5 | |
| | | | | 32 | |
| 7 | விழுப்புரம் | 1. கள்ளக்குறிச்சி | 1. கள்ளக்குறிச்சி | 7 | |
| | | | 2. சங்கராபுரம் | 5 | |
| | | 2. திருக்கோயிலூர் | 3. திருக்கோயிலூர் | 7 | |
| | | | 4. உளுந்தூர்பேட்டை | 7 | |
| | | 3. திண்டிவனம் | 5. திண்டிவனம் | 9 | 1490 |
| | | | 6. செஞ்சி | 7 | |
| | | 4. விழுப்புரம் | 7. விழுப்புரம் | 8 | |
| | | | 8. வானூர் | 4 | |
| | | | | 54 | |
| 8 | தஞ்சாவூர் | 1. தஞ்சாவூர் | 1. தஞ்சாவூர் | 7 | |
| | | | 2. திருவையாறு | 5 | |
| | | | 3. ஒரத்தநாடு | 8 | |
| | | 2. கும்பகோணம் | 4. கும்பகோணம் | 5 | |
| | | | 5. திருவிடைமருதூர் | 5 | 906 |
| | | | 6. பாபநாசம் | 6 | |
| | | 3. பட்டுக்கோட்டை | 7. பட்டுக்கோட்டை | 10 | |
| | | | 8. பேராவூரணி | 4 | |
| | | | | 50 | |
| 9 | நாகப்பட்டினம் | 1. நாகப்பட்டினம் | 1. நாகப்பட்டினம் | 5 | |
| | | | 2. வேதாரண்யம் | 3 | |
| | | | 3. கீழ்வேலூர் | 4 | |
| | | | 4. திருக்குவளை | 3 | |
| | | 2. மயிலாடுதுறை | 5. மயிலாடுதுறை | 6 | 519 |
| | | | 6. தரங்கம்பாடி | 4 | |
| | | | 7. சீர்காழி | 5 | |
| | | | | 30 | |
| 10 | திருவாரூர் | 1. மன்னார்குடி | 1. மன்னார்குடி | 6 | |
| | | | 2. நீடாமங்கலம் | 3 | |
| | | | 3. திருத்துறைப்பூண்டி | 4 | |
| | | 2. திருவாரூர் | 4. திருவாரூர் | 2 | |
| | | | 5. நன்னிலம் | 4 | 574 |
| | | | 6. கொடவாசல் | 5 | |
| | | | 7. வலங்கைமான் | 3 | |
| | | | | 27 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 5 | |
| | | | 2. ஸ்ரீரங்கம் | 5 | |
| | | | 3. மணப்பாறை | 7 | |
| | | 2. லால்குடி | 4. லால்குடி | 6 | |
| | | | 5. மணச்சநல்லூர் | 3 | 507 |
| | | 3. முசிறி | 6. முசிறி | 6 | |
| | | | 7. தொட்டியம் | 3 | |
| | | | 8. துறையூர் | 6 | |
| | | | | 41 | |
| 12 | கரூர் | 1. கரூர் | 1. கரூர் | 6 | |
| | | | 2. அரவக்குறிச்சி | 5 | |
| | | 2. குளித்தலை | 3. குளித்தலை | 3 | 203 |
| | | | 4. கிருஷ்ணராயபுரம் | 5 | |
| | | | | 19 | |
| 13 | பெரம்பலூர் | 1. பெரம்பலூர் | 1. பெரம்பலூர் | 2 | |
| | | | 2. வேப்பந்தட்டை | 5 | |
| | | | 3. குன்னம் | 3 | |
| | | 2. அரியலூர் | 4. அரியலூர் | 5 | 347 |
| | | 3. உடையார் பாளையம் | 5. உடையார்பாளையம் | 7 | |
| | | | 6. செந்துறை | 3 | |
| | | | | 25 | |
| 14 | புதுக்கோட்டை | 1. புதுக்கோட்டை | 1. கொளத்தூர் | 5 | |
| | | | 2. இலுப்பூர் | 6 | |
| | | | 3. ஆலங்குடி | 6 | |
| | | | 4. புதுக்கோட்டை | 2 | |
| | | | 5. கந்தர்வக்கோட்டை | 3 | 757 |
| | | | 6. திருமயம் | 8 | |
| | | 2. அறந்தாங்கி | 7. அறந்தாங்கி | 6 | |
| | | | 8. ஆவுடையார்கோயில் | 4 | |
| | | | 9. மணமேல்குடி | 4 | |
| | | | | 44 | |
| 15 | மதுரை | 1. மதுரை | 1. மதுரை (வடக்கு) | 7 | |
| | | | 2. மதுரை (தெற்கு) | 12 | |
| | | | 3. மேலூர் | 8 | |
| | | | 4. வாடிப்பட்டி | 7 | 864 |
| | | 2. உசிலம்பட்டி | 5. உசிலம்பட்டி | 5 | |
| | | | 6. திருமங்கலம் | 6 | |
| | | | 7. பேரையூர் | 6 | |
| | | | | 51 | |





| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | தேனி | 1. பெரியகுளம் | 1. பெரியகுளம் | 2 | |
| | | | 2. தேனி | 2 | |
| | | | 3. ஆண்டிப்பட்டி | 4 | 113 |
| | | 2. உத்தமபாளையம் | 1. உத்தமபாளையம் | 6 | |
| | | | 2. போடிநாயக்கனூர் | 3 | |
| | | | | 17 | |
| 17 | திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 10 | |
| | | | 2. நத்தம் | 3 | |
| | | | 3. நிலக்கோட்டை | 5 | |
| | | 2. பழனி | 4. பழனி | 6 | 358 |
| | | | 5. ஒட்டன்சத்திரம் | 5 | |
| | | | 6. வேடசந்தூர் | 7 | |
| | | 3. கொடைக்கானல் | 7. கொடைக்கானல் | 3 | |
| | | | | 39 | |
| 18 | இராமநாதபுரம் | 1. இராமநாதபுரம் | 1. இராமநாதபுரம் | 7 | |
| | | | 2. இராமேஸ்வரம் | 1 | |
| | | | 3. திருவாடனை | 8 | |
| | | 2. பரமக்குடி | 4. முதுகுளத்தூர் | 6 | 400 |
| | | | 5. கமுதி | 5 | |
| | | | 6. பரமக்குடி | 6 | |
| | | | 7. கடலாடி | 6 | |
| | | | | 39 | |
| 19 | சிவகங்கை | 1. தேவகோட்டை | 1. திருப்பத்தூர் | 8 | |
| | | | 2. காரைக்குடி | 5 | |
| | | | 3. தேவகோட்டை | 4 | |
| | | 2. சிவகங்கை | 4. சிவகங்கை | 9 | 521 |
| | | | 5. மானாமதுரை | 6 | |
| | | | 6. இளையான்குடி | 5 | |
| | | | | 37 | |
| 20 | விருதுநகர் | 1. சிவகாசி | 1. ஸ்ரீவில்லிபுத்தூர் | 6 | |
| | | | 2. ராஜபாளையம் | 5 | |
| | | | 3. சாத்தூர் | 4 | |
| | | | 4. சிவகாசி | 4 | |
| | | 2. அருப்புக்கோட்டை | 5. அருப்புக்கோட்டை | 5 | 600 |
| | | | 6. காரியாப்பட்டி | 4 | |
| | | | 7. விருதுநகர் | 4 | |
| | | | 8. திருச்சுழி | 4 | |
| | | | | 36 | |

[2004 ஜூலை 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | திருநெல்வேலி | 1. திருநெல்வேலி | 1. பாளையங்கோட்டை | 4 | 628 |
| | | | 2. சங்கரன்கோயில் | 10 | |
| | | | 3. திருநெல்வேலி | 6 | |
| | | 2. சேரன்மாதேவி | 4. அம்பாசமுத்திரம் | 8 | |
| | | | 5. நாங்குநேரி | 6 | |
| | | | 6. ராதாபுரம் | 7 | |
| | | 3. தென்காசி | 7. தென்காசி | 4 | |
| | | | 8. செங்கோட்டை | 3 | |
| | | | 9. வீரகேரளம்புதூர் | 4 | |
| | | | 10. ஆலங்குலம் | 5 | |
| | | | 11. சிவகிரி | 4 | |
| | | | | 61 | |
| 22 | தூத்துக்குடி | 1. தூத்துக்குடி | 1. தூத்துக்குடி | 4 | 468 |
| | | | 2. ஸ்ரீவைகுண்டம் | 6 | |
| | | 2. திருச்செந்தூர் | 3. திருச்செந்தூர் | 4 | |
| | | | 4. சாத்தான்குளம் | 3 | |
| | | 3. கோவில்பட்டி | 5. கோவில்பட்டி | 6 | |
| | | | 6. ஒட்டப்பிடாரம் | 6 | |
| | | | 7. விளாத்திகுளம் | 6 | |
| | | | 8. எட்டையபுரம் | 5 | |
| | | | | 40 | |
| 23 | சேலம் | 1. சேலம் | 1. சேலம் | 7 | 621 |
| | | | 2. ஏற்காடு | 3 | |
| | | | 3. வாழப்பாடி | 4 | |
| | | 2. ஆத்தூர் | 4. ஆத்தூர் | 5 | |
| | | | 5. கங்கவல்லி | 5 | |
| | | 3. மேட்டூர் | 6. மேட்டூர் | 6 | |
| | | | 7. ஓமலூர் | 5 | |
| | | 4. சங்கரி | 8. சங்கரி | 4 | |
| | | | 9. எடப்பாடி | 3 | |
| | | | | 42 | |
| 24 | நாமக்கல் | 1. நாமக்கல் | 1. நாமக்கல் | 11 | 391 |
| | | | 2. ராசிபுரம் | 6 | |
| | | 2. திருச்செங்கோடு | 3. திருச்செங்கோடு | 8 | |
| | | | 4. பரமத்திவேலூர் | 5 | |
| | | | | 30 | |
| 25 | தருமபுரி | தருமபுரி | 1. தருமபுரி | 5 | 470 |
| | | | 2. அரூர் | 4 | |
| | | | 3. பாப்பிரெட்டிப்பட்டி | 4 | |
| | | | 4. பென்னாகரம் | 4 | |
| | | | 5. பாலக்கோடு | 5 | |
| | | | | 22 | |
| 26 | கிருஷ்ணகிரி | 1. கிருஷ்ணகிரி | 1. கிருஷ்ணகிரி | 8 | 636 |
| | | | 2. ஊத்தங்கரை | 4 | |
| | | | 3. போச்சம்பள்ளி | 4 | |
| | | 2. ஒசூர் | 4. ஒசூர் | 6 | |
| | | | 5. தேன்கனிக்கோட்டை | 7 | |
| | | | | 29 | |
| 27 | கோயம்புத்தூர் | 1. கோயம்புத்தூர் | 1. கோயம்புத்தூர் (தெற்கு) | 6 | 461 |
| | | | 2. கோயம்புத்தூர் (வடக்கு) | 7 | |
| | | | 3. மேட்டுப்பாளையம் | 2 | |
| | | 2. திருப்பூர் | 4. பல்லடம் | 7 | |
| | | | 5. திருப்பூர் | 5 | |
| | | | 6. அவினாசி | 5 | |
| | | 3. பொள்ளாச்சி | 7. பொள்ளாச்சி | 11 | |
| | | | 8. வால்பாறை | 1 | |
| | | | 9. உடுமலைபேட்டை | 6 | |
| | | | | 50 | |
| 28 | ஈரோடு | 1. ஈரோடு | 1. ஈரோடு | 9 | 539 |
| | | | 2. பெருந்துறை | 7 | |
| | | 2. தாராபுரம் | 3. தாராபுரம் | 7 | |
| | | | 4. காங்கேயம் | 4 | |
| | | 3. கோபிச்செட்டிபாளையம் | 5. பவானி | 7 | |
| | | | 6. கோபிச்செட்டிப்பாளையம் | 7 | |
| | | | 7. சத்தியமங்கலம் | 6 | |
| | | | | 47 | |
| 29 | நீலகிரி | 1. கூடலூர் | 1. கூடலூர் | 2 | 54 |
| | | | 2. பந்தலூர் | 2 | |
| | | 2. குன்னூர் | 3. உதகமண்டலம் | 3 | |
| | | | 4. குந்தா | 2 | |
| | | | 5. குன்னூர் | 3 | |
| | | | 6. கோத்தகிரி | 3 | |
| | | | | 15 | |
| 30 | கன்னியாகுமரி | 1. நாகர்கோயில் | 1. தோவாளை | 3 | 81 |
| | | | 2. அகஸ்தீஸ்வரம் | 4 | |
| | | 2. பத்மநாபபுரம் | 3. கல்குளம் | 6 | |
| | | | 4. விளவங்கோடு | 5 | |
| | | | | 18 | |
| | | | | 1120 | |

2004 ஜூலை 27]

கருக்கம்

| | |
|---|---|
| மாவட்டங்கள் | 30 |
| வருவாய்க் கோட்டங்கள் | 73 |
| வட்டங்கள் | 206 |
| உள் வட்டங்கள் | 1120 |
| வருவாய் கிராமங்கள் | 17244 |

[2004 ஜூலை 27

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 6,21,10,839. இதில் ஆண்கள் 3,12,68,654 (51%) பெண்கள் 3,08,42,185 (49%). மாவட்ட வாரியாக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

| 2001-ன் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகை | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | மொத்த நபர்கள் | ஆண்கள் | பெண்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | சென்னை | 42,16,268 | 21,61,605 | 20,54,663 |
| 2 | கோயம்புத்தூர் | 42,24,107 | 21,56,280 | 20,67,827 |
| 3 | கடலூர் | 22,80,530 | 11,48,729 | 11,31,801 |
| 4 | தருமபுரி | 12,86,552 | 6,66,428 | 6,20,134 |
| 5 | திண்டுக்கல் | 19,18,960 | 9,66,201 | 9,52,759 |
| 6 | ஈரோடு | 25,74,067 | 13,06,039 | 12,68,028 |
| 7 | காஞ்சிபுரம் | 28,69,920 | 14,55,302 | 14,14,618 |
| 8 | கன்னியாகுமரி | 16,39,763 | 8,29,542 | 8,10,221 |
| 9 | கரூர் | 9,33,791 | 4,64,489 | 4,69,302 |
| 10 | கிருஷ்ணகிரி | 15,46,700 | 7,95,713 | 7,50,982 |
| 11 | மதுரை | 25,62,279 | 12,95,124 | 12,67,155 |
| 12 | நாகப்பட்டினம் | 14,87,055 | 7,38,287 | 7,48,768 |
| 13 | நாமக்கல் | 14,95,661 | 7,60,409 | 7,35,252 |
| 14 | நீலகிரி | 7,64,826 | 3,79,610 | 3,85,216 |
| 15 | பெரம்பலூர் | 11,81,029 | 5,88,441 | 5,92,588 |
| 16 | புதுக்கோட்டை | 14,55,269 | 7,20,847 | 7,34,422 |
| 17 | இராமநாதபுரம் | 10,83,320 | 5,82,068 | 5,01,252 |
| 18 | சேலம் | 29,92,754 | 15,51,357 | 14,41,397 |
| 19 | சிவகங்கை | 11,50,753 | 5,65,594 | 5,85,159 |
| 20 | தஞ்சாவூர் | 22,05,375 | 10,91,557 | 11,13,818 |



2004 ஜூலை 27]

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | தேனி | 10,94,724 | 5,53,118 | 5,41,606 |
| 22 | திருவாரூர் | 11,59,213 | 5,78,870 | 5,80,343 |
| 23 | தூத்துக்குடி | 15,65,743 | 7,64,087 | 8,01,656 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 23,88,831 | 11,94,133 | 11,94,698 |
| 25 | திருநெல்வேலி | 28,01,194 | 13,72,082 | 14,29,112 |
| 26 | திருவாரூர் | 27,38,866 | 13,90,292 | 13,48,574 |
| 27 | திருவண்ணாமலை | 21,81,853 | 10,93,191 | 10,88,662 |
| 28 | வேலூர் | 34,82,970 | 17,43,871 | 17,39,099 |
| 29 | விழுப்புரம் | 29,43,917 | 14,84,573 | 14,59,344 |
| 30 | விருதுநகர் | 17,61,548 | 8,70,820 | 8,90,728 |
| | மொத்தம் | **6,21,10,839** | **3,12,68,654** | **3,08,42,185** |
| மத்திய அரசு கணக்கெடுப்பு வழிவகைகள் | | | | |

## 2.7 வருவாய்க் கட்டடங்கள்

### உள்கட்டமைப்பு வசதிகள்

வருவாய்த் துறை பொது நிர்வாகத்தின் முதுகெலும்பு என்பதால், வருவாய்த் துறை திறம்பட செயல்பட முறையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் வரை அனைத்து மட்ட அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், அலுவலகங்களுடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இத்துறையில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் பராமரிக்கவும் மற்றும் புதிய சீருந்துகள், ஈப்புகள், கணினிகள் மற்றும் அதற்கான உதிரிப் பொருட்கள், நகல் எடுக்கும் கருவிகள், நிகரி கருவிகள், தளவாடங்கள் மற்றும் மின் ஆக்கிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிப் பணிகள்

1-04-1993-க்குப் பிறகு, புதியதாக உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய

மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க பதினோராவது நிதிக் குழு மானியமாக ரூ.44 கோடி அளித்துள்ளது. இதற்கு இணையான தொகை மாநில அரசின் பங்காக அளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் காலம் 2000-2005 முடிய ஐந்து ஆண்டுகள் ஆகும். அரசாணை நிலை எண் 78, வருவாய்த் துறை, நாள் 13-02-2002-ல் 2001-02 முதல் 2003-04 ஆண்டுகளில் செலவிட ரூ.73.96 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையில் வருவாய்த் துறைக்கு 70 விழுக்காடும், பிற துறைகளுக்கு 30 விழுக்காடும் வழங்கப்பட வேண்டும். வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கும், உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் வருவாய்த் துறை அல்லாத பிற துறைகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கும் முறையே ரூ.4757.60 இலட்சமும் ரூ.2639.28 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இத்தொகை தவிர, பெரம்பலூர் மாவட்ட பெருந்திட்ட வளாகம் மற்றும் அணுகு சாலைகளுக்கான நிலங்களைக் கையகப்படுத்தவும் மற்றும் அணுகு சாலைகள் அமைக்கவும் மொத்தம் ரூ.378.26 இலட்சமும், கிருஷ்ணகிரியில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் அமைக்கவும் மற்றும் மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகம் கட்டுவதற்கும் ரூ.1000.00 இலட்சமும் பதினோராம் நிதிக் குழு மானியத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் மொத்தம் 248 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டதில் 160 கட்டடங்களின் கட்டுமானப் பணி இதுவரை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 88 கட்டடங்களின் கட்டுமானப் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

**அலுவலகக் கட்டடங்கள்**

***மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்***

*அரசு ஆணை எண் 569, வருவாய்த் துறை, நாள் 20-11-2003-ன்படி ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 30 மாவட்டங்கள் உள்ளன.*



*மாநிலத்தில் மொத்தமுள்ள 30 மாவட்டங்களில், 28 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தற்போது அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள இரு மாவட்டங்களில் பெரம்பலூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி பதினோராம் நிதிக் குழு மானியத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

*கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்டப் பெருந்திட்ட வளாகம் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.*

**வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

*தமிழ்நாட்டிலுள்ள 73 வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களும் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.*

**வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

*மொத்தமுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில், 185 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் கிருஷ்ணராயபுரம், பூந்தமல்லி மற்றும் பள்ளிப்பட்டு ஆகிய மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களின் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு பூந்தமல்லி முடிக்கப்பட்டும் மற்ற இரண்டும் முடிவுறும் தறுவாயிலும் உள்ளன. மேலும் பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வானூர், திண்டிவனம் மற்றும் திருக்கோயிலூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் விரிவாக்கக் கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. மீதமுள்ள 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.*

**குடியிருப்புக் கட்டடங்கள்**

***மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்***

மொத்தமுள்ள 30 மாவட்ட ஆட்சியர்களில் (புதியதாக உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் உட்பட) 22 மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசுக் கட்டடங்களில் முகாம் அலுவலகத்துடன்கூடிய

குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 மாவட்டங்களில், பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ், பெரம்பலூர், கரூர், நாமக்கல், மற்றும் தேனி ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கான முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி 2003-04 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் துறைமுகத்திற்குச் சொந்தமான கட்டடம் தேவையான வசதிகளுடன் உள்ளதால் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அக்கட்டடத்திலேயே தொடர்ந்து குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரு மாவட்டங்களில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு பெருந்திட்ட வளாகம் கட்டும்போது சேர்த்துக் கட்டப்படும்.

சென்னை மாவட்ட ஆட்சியருக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

## மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்

மொத்தமுள்ள 30 மாவட்ட வருவாய் அலுவலர்களில், 23 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 மாவட்டங்களில், பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இரு மாவட்டங்களில், மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்களின் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் பணி வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

## வருவாய்க் கோட்ட அலுவலர்களின் குடியிருப்புக் கட்டடங்கள்

மொத்தமுள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில், 65 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசு குடியிருப்பு வசதிகள் செய்து





தரப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் பதினோராம் நிதிக் குழு மானியத்தின்கீழ் திருத்தணி (திருவள்ளூர்), வருவாய்க் கோட்ட அலுவலர் குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள ஏழு வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

## வட்டாட்சியர் குடியிருப்புகள்

மொத்தமுள்ள 206 வட்டாட்சியர்களில் 179 வட்டாட்சியர்களுக்கு அலுவலகக் குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள வட்டாட்சியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

## வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்

மொத்தமுள்ள 1120 வருவாய் ஆய்வாளர்களில் 1084 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

## கிராம நிர்வாக அலுவலர்கள்

இம்மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு வசதிகள் படிப்படியாக செய்துதர அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக மலைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் 1993-1996 ஆண்டுகளில், பகுதி 2 திட்டத்தின்கீழ் 60 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் 2000-2005 ஆகிய ஆண்டுகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்தம் 166 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகளில் 123 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ளவற்றின் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இம்மாநிலத்தில் ஏற்கெனவே 344 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு,

அலுவலகக் கட்டட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக மொத்தம் 570 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ளது போக எஞ்சியுள்ளவை 11936 கட்டடங்கள் ஆகும்.

2001-2002 ஆம் ஆண்டில் அரசின் திருத்திய கொள்கையின் அணுகுமுறையின்படி மூன்று நிதியாண்டுகளில் 2001-2004 வரை ஆண்டுதோறும் 4000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊராட்சி மன்றக் கட்டடத்துடன் இணைத்து அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாணைக்கிணங்க முதற்கட்டமாக 2001-2002 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 3876 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் கட்டமாக மொத்தம் 3585 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, 3554 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ளவற்றின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2003-2004 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டமாக 4738 கட்டடங்கள் கட்டும் பணியில் இதுவரை 2216 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை ஆகஸ்ட் 2004-க்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2001 ஆம் ஆண்டு அரசு சட்டசபையில் அறிவித்ததன்படி மொத்தம் 12199 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே உள்ள 570 கட்டடங்களைச் சேர்த்து ஆக மொத்தம் 12769 கட்டடங்கள் இம்மாநிலத்தில் உள்ள மொத்தம் 12506 கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் கட்டி முடிக்கப்பட உள்ளன. கிராம நிர்வாக அலுவலர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்படாத 263 கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலர்கள் பணியிடங்கள் இல்லாத கிராமங்களில் கிராம மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு எஞ்சியுள்ள 4277 கிராமங்களிலும் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

## 2.8 கிராம நிர்வாகம்

கிராம நிர்வாகம், முன்னர், பகுதி நேர கிராம அலுவலர்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1980 ஆம் ஆண்டில் கிராம





நிர்வாக அமைப்பை மாற்றம் செய்திட அரசின் கொள்கைப்படி முடிவெடுக்கப்பட்டது. அதன்படி பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு அவசரச் சட்டம் எண் 10/80, மேதகு ஆளுநர் அவர்களால், 13-11-1980 அன்று பிரகடனம் செய்யப்பட்டது. 14-11-1980 முதல் அமலுக்கு வந்த, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்புச் சட்டம் (எண் 3/81)-இன்படி இப்பதவிகள் ஒழிக்கப்பட்டன. பகுதி நேர கிராம அலுவலர்களுக்குப் பதிலாக, முழு நேர கிராம நிர்வாக அலுவலர்கள் வருவாய்க் கிராமங்களில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

கிராம நிர்வாக அலுவலர் பதவிகள் அரசாணை எண் 2747, வருவாய்த் துறை, நாள் 12-12-1980-இன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தின் வரையறைக்குள் கொண்டுவரப்பட்டு, இப்பதவிகளுக்கான நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு மூலம் நேரடியாக நியமனம் செய்யப்படல் வேண்டும் என விதி திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு மூலம், கிராம நிர்வாக அலுவலர்கள், நேரடி நியமனம் செய்யப்பட்டனர்.

இதற்கிடையில், கிராம நிர்வாக அலுவலர்களது பணி நியமனம் தொடர்பாக எழுந்த வழக்குகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் பிறப்பித்த வழிகாட்டலின்படி, அரசாணை எண் 1195, வருவாய்த் துறை, நாள் 6-7-1982 வெளியிடப்பட்டது. அதன்படி, 14-11-1980 அன்று பதவியில் இருந்து, குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றிருந்த முன்னாள் கிராம அலுவலர்கள் (வகைப்பாடு எண் 1) தகுதிகாண் குழு மூலம் (Screening Committee) கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். அரசாணை எண் 1287, வருவாய்த் துறை, நாள் 6-7-1988-இல் 14-11-1980 அன்று பதவியில் இருந்து, 20-2-1982-க்குப் பின்னர், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சிப் பெற்ற, முன்னாள் கிராம அலுவலர்களை, (வகைப்பாடு, எண் 2) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்களாக, பொது விதி 10(ஏ)(1)-இன்கீழ், சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டது. மேலும், அரசாணை எண் 954, வருவாய்த் துறை, நாள் 16-10-1997-இல், 14-11-1980 அன்று பதவியில் இல்லாமல், ஆனால், அதற்கு முன்னர் குறுகிய காலம் பணிபுரிந்து, குறைந்தபட்ச கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் பெற்ற முன்னாள் கிராம அலுவலர்களை (வகைப்பாடு எண் 3) அவர்களது பணிக் காலத்தின் அடிப்படையில், தனிப் பதிவேட்டில் பராமரிக்கப்படும் முதுநிலைப்

பட்டியலின்படி, அப்போது உள்ள காலியிடங்களிலோ அல்லது பின்னர் ஏழக்கூடிய காலியிடங்களிலோ கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யவும் அரசு ஆணையிட்டது.

தற்போதுள்ள கிராம நிர்வாக அமைப்பானது, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமையின்படி, தகுதிகாண் குழு மூலமும் மற்றும் இதர வகைகள் மூலமும், கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்கள் மட்டுமின்றி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்களையும் கொண்டதாகும்.

**கிராம நிர்வாக அலுவலர்கள், பொறுப்பு வகிக்கும் கிராமத்தில் அவர்களது அலுவலகத்தில் இருத்தல்**

கிராம நிர்வாக அலுவலர்களை, பொது மக்கள், எப்பொழுதும் எளிதாக அணுகும்பொருட்டு, மாநிலம் முழுவதும், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தர அரசால் முடிவெடுக்கப்பட்டது. (இது வரை 8,804 அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிராமங்களில், கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது) ஏனைய அரசு அலுவலர்களைப் போல, கிராம நிர்வாக அலுவலர்களும் ஒவ்வொரு நாளும், காலை 10.00 மணி முதல் மாலை 5.15 மணி வரையில் பணியில் இருக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. இருப்பினும், பல்வேறு பணிகளுக்காக அந்தந்தக் கிராமங்களின் உட்கிடை கிராமங்களுக்கு அவர்கள் செல்லவேண்டிய நிலையிருக்கும்பட்சத்தில் பிரதிநாளும், காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை இரண்டு மணி நேரம், கிராம நிர்வாக அலுவலர்கள் அவர்களது அலுவலகத்தில் அவசியம் இருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்துக் கிராம நிர்வாக அலுவலர்களும் இதனை வழுவாது கடைபிடிக்கிறார்களா என கண்காணித்து உறுதிபடுத்த வேண்டும் என அனைத்து மாவட்டாட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பதவி உயர்வு**

அரசாணை (நிலை) எண் 781, வருவாய்த் துறை, நாள் 25-5-1985-இன்படி.,

(i) ஐந்து வருடங்களுக்குக் குறையாமல், பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர்கள், பணி மாறுதல் மூலமாக, இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்படத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.



(ii) ஒவ்வொரு ஆண்டும், அந்தந்த மாவட்டத்தில் ஏற்படும் இளநிலை உதவியாளர் காலியிடங்களில், 20 விழுக்காட்டினை, கிராம நிர்வாக அலுவலர்களைப் பணி மாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்திட பரிசீலித்திடலாம்.

(iii) மாவட்ட அளவிலான முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில், கிராம நிர்வாக அலுவலர்களை இளநிலை உதவியாளர்களாக பணி மாறுதல் செய்யலாம்.

பின்னர், மேற்கூறிய அரசாணையை இரத்து செய்து, அரசாணை (நிலை) எண் 386, வருவாய்த் துறை, நாள் 1-10-2001-இல் 10 வருடம் பணி முடித்திருக்கும் தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களை, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உதவியாளர்களாக நேரடியாக பதவி உயர்வு செய்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்டங்களில், வருவாய்த் துறையில் ஏற்படும் உதவியாளர் காலிப் பணியிடங்களில் 10 விழுக்காடு பணியிடங்கள் மட்டுமே, தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாளர்களாக பணி உயர்வு அளித்திட வரையறுக்கப்பட்டது.

மேலும், அரசாணை (நிலை) எண் 781, வருவாய்த் துறை, நாள் 25-5-1985-இன்படி கிராம நிர்வாக அலுவலர்கள், பணியிலிருந்து பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளர்களாக பணிமாற்றம் பெற்று, பின்னர் உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்று, தற்போது உதவியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களுக்கு, அரசாணை (நிலை) எண் 386, வருவாய்த் துறை நாள் 1-10-2001-இன்படி, உதவியாளர்களாக பதவி உயர்வு பெறும் தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களால், எவ்வித பாதிப்பும் இருக்கலாகாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையினை செயல்படுத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் தோன்றியதையடுத்து சில திருத்தங்கள் மற்றும் தெளிவுரைகள் முறையே அரசாணை (நிலை) எண் 330, வருவாய், நாள் 12-7-2004 மற்றும் அரசு கடித எண் 23760/பணி 7(1)/02-8, வருவாய், நாள் 12-7-2004-ல் வெளியிடப்பட்டுள்ளன.

**முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் 14-11-1980 முதல் ஒழிக்கப்பட்டதினால் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் 5-12-1986 முதல் வழங்கிட அரசாணை (நிலை) எண்

828, வருவாய் (இ சிறப்பு) துறை நாள் 23-8-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி

(i) முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.175/- மற்றும் அதற்குரிய படிகளுடன் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை, அரசாணை (நிலை) எண் 629, வருவாய்த் துறை, நாள் 22-7-1998-ல் ரூ.250/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. (இன்றைய தேதியில் மாதமொன்றுக்கு சுமார் ரூ.838/- அளவில் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது).

(ii) 14-11-1980 அன்று பணியிலிருந்து பின்னர் உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதம் ரூ.100/- குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததை. அரசாணை (நிலை) எண் 629 வருவாய்த் துறை, நாள் 22-7-1998-ல் ரூ.150/- ஆக உயர்த்தி ஆணையிடப் பட்டுள்ளது.

(iii) 14-11-1980 அன்று தற்காலிக பணி நீக்கம்/விடுப்பில் இருந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கும் அரசாணை (நிலை) எண் 753, வருவாய்த் துறை, நாள் 9-9-1998-ன்மூலம் இச்சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை அரசு நீட்டித்துள்ளது.

(iv) 14-11-1980 அன்று பணி இழந்து, பின்னர் குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்று கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்களில் 10 ஆண்டு குறைந்தபட்ச தகுதிப் பணி முடித்திடாமல் ஓய்வு பெற்றவர்களுக்கும், முன்னாள் கிராம அலுவலர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை நீட்டித்து அரசாணை (பல்வகை) எண் 121, வருவாய்த் துறை, நாள் 13-3-2001-ல் ஆணையிடப் பட்டுள்ளது.

(v) அரசாணை (பல்வகை) எண் 2261, வருவாய்த் துறை, நாள் 9-10-1978-இன்படி 30-9-1980 அன்று 60 வயது பூர்த்தியாகி ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களுக்கும் முன்னாள் கிராம அலுவலர்களுக்குரிய சிறப்பு ஓய்வூதியத்தை வழங்கிட அரசாணை (பல்வகை) எண் 294, வருவாய்த் துறை, நாள் 30-8-2001-இல் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறு 14-11-1980-க்கு முன்னர் ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களும் இந்தச் சிறப்பு ஓய்வூதியத்தின் பலனைப் பெற அனுமதிக்கப்பட்டனர்.





### கிராம உதவியாளர்கள் பணியமைப்பு

1-6-1995-க்கு முன்பாக, பகுதி நேர கிராமப் பணியாளர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்தனர். அரசாணை எண் 625, வருவாய்த் துறை, நாள் 6-7-1995-ல் பகுதி நேர கிராமப் பணியாளர்கள் 1-6-1995 முதல் முழு நேர அரசுப் பணியாளராக அமர்த்தப்பட்டு, புதிய ஊதிய ஏற்ற முறையில் ரூ. 600–10–750 ஆக ஊதியம் வழங்கப்பட்டது. ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி, கிராம உதவியாளர்கள் ஊதியம் ரூ. 1800-20-2240 என திருத்தியமைக்கப்பட்டது. அரசாணை எண் 521, வருவாய்த் துறை, நாள் 17-6-1998-ல் முழு நேர கிராம உதவியாளர்கள் பதவிக்குரிய பணி விதிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டது. அரசாணை எண் 362, வருவாய்த் துறை, நாள் 7-7-1999-ன்படி, பணி வரன்முறை செய்யப்பட்ட கிராம உதவியாளர்கள், பணியிலிருக்கும்போது மரணமடையும்பட்சத்தில், அவர்களது வாரிசுதாரர்களுக்கு, நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கருணை அடிப்படையில் அரசுப் பணியில் நியமனம் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

### கிராமப் பணியாளர்கள்/கிராம உதவியாளர்கள் பணப் பயன்கள்

அரசாணை(நிலை) எண் 1495, வருவாய்த் துறை, நாள் 1-9-1984-ன்படி 60 வயது பூர்த்தி அடைந்து, ஓய்வுபெறும் பகுதி நேர கிராமப் பணியாளர்களுக்கு, அவர்கள் பணி செய்த மொத்த காலத்தினை கணக்கில் கொண்டு, ஒவ்வொரு வருடத்திற்கும் அரை மாத ஊதியம் கணக்கிட்டு அத்தொகை வழங்கப்படவேண்டுமென ஆணையிடப் பட்டுள்ளது.

அரசு கடிதம் (பல்வகை) எண் 112 , வருவாய் (பணி 7(2) துறை, நாள் 4-3-2002-ல் 1-6-1995 முதல் 31-5-2000 வரையிலான காலத்தில் ஓய்வுபெற்ற கிராம உதவியாளர்களுக்கு, அவர்கள் பணிபுரிந்த மொத்த பணிக் காலத்தை கருத்திற்கொண்டு, ஒவ்வொரு ஆண்டிற்கும் அரை மாத ஊதியத்தினை பணிக்கொடையாக வழங்கிடவும், 31-5-2000-க்குப்பின் ஓய்வுபெற்றவர்களுக்கு, இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடையினை தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி வழங்கிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

## 2.9 நில வரி

ஒரு நிலத்தின் மண்வளம், நீர்வளம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. தீர்வையை அடிப்படையாகக் கொண்டு கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, தலவரி, தலமேல்வரி போன்ற பிற வரிகளும் கணக்கிடப்பட்டு, அவற்றின் மொத்த கூட்டுத் தொகையினை நிலவரி என்ற பெயரில் பட்டாதாரரிடமிருந்து வசூல் செய்யப்படுகின்றது. புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரி 1-7-1967 முதலும் 5 ஏக்கர் மற்றும் அதற்கும் குறைவாக தனிநபருக்கு சொந்தமான நஞ்சை நிலங்களுக்கு புஞ்சை நிலத்தீர்வைக்குச் சமமான நிலவரி 1-7-1971 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

நில வரி நிலப்பட்டாதாரர்களிடமிருந்து சுமுகமான முறையில் வசூல் செய்யப்படுகிறது. தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணையின்படி நிலவரி பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படுவதில்லை.

1412 ஆம் பசலியில் பட்டாதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டிய நிலவரி, தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை, கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, சிறப்புத் தீர்வை, சிறப்பு தண்ணீர்த் தீர்வை மற்றும் வணிகப் பயிர்த் தீர்வை ஆகியவற்றை தள்ளுபடி செய்து அரசாணை எண் 163, வருவாய்த் துறை, நாள் 11-4-2003-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட அரசாணைக்கிணங்க, 1412 பசலிக்கு அனைத்து பட்டாதாரர்கள் செலுத்த வேண்டிய நிலவரி/தலவரி/தலமேல்வரி முதலான தீர்வைகளை உள்ளடக்கிய மொத்தத் தொகை ரூ.37.47 கோடி (ரூபாய் முப்பத்தேழு கோடி நாற்பத்தேழு இலட்சங்கள்) தள்ளுபடி செய்யப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1. | அடிப்படைத் தீர்வை | : | 476.06 |
| 2. | தண்ணீர்த் தீர்வை | : | 59.76 |
| 3. | தல வரி | : | 509.90 |
| 4. | தல மேல் வரி | : | 2603.30 |



2004 ஜூலை 27]

| | | | |
|---|---|---|---|
| 5. | கூடுதல் தீர்வை | : | 90.71 |
| 6. | கூடுதல் தண்ணீர்த் தீர்வை | : | 6.68 |
| 7. | கூடுதல் உள்ளூர் வரி | : | 1.16 |
| | மொத்தம் : | | 3747.57 |

மாநிலத்தில் தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் காரணமாக நடப்பு பசலியிலும் (பசலி 1413) - (1-7-2003 முதல் 30-6-2004 முடிய), கடந்த ஆண்டு நிலவரி மற்றும் அது தொடர்பான வரிகளைத் தள்ளுபடி செய்தது போல, இந்த ஆண்டும் ரூ.60 கோடிக்கு நில வரி/தலவரி/தலமேல்வரி ஆகியவற்றை தள்ளுபடி செய்து அரசாணை எண் 76, வருவாய்த் துறை நாள் 13-2-2004-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பசலி 1412-1413(1-1-2003 முதல் 31-03-2004 வரை)க்கான நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவைப் பட்டியல் பின்வருமாறு:--

பசலி ஆண்டு 1412-1413-க்கான நிலவரி கேட்பு வசூல் மற்றும் நிலுவை 1-1-2003 முதல் 31-03-2004 வரையிலான விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. 1-1-2003 அன்றைய கேட்பு | | 73.36 |
| 2. தடையாணையின்படி நிலுவை | 10.03 | |
| 3. தள்ளுபடி (அரசாணை எண் 163, வருவாய் நாள் 11-4-2003) | 37.47 | 47.50 |
| 4. வசூலிக்கக்கூடிய கேட்பு | | 25.86 |
| 5. மொத்த வசூல் (1-1-2003 முதல் 31-12-2003 வரை) | | 5.27 |
| 6. நிலுவை | | 20.59 |
| 7. வசூல் 1-1-2004 முதல் 31-3-2004 வரை | | 0.61 |
| 8. 31-03-2004 அன்று நிலுவை | | 19.98 |

[2004 ஜூலை 27

## 2.10 இயற்கை இடர்ப்பாடுகள்

**மழை/வெள்ளம்**

தமிழ்நாட்டில் 2000, 2001, 2002 ஆகிய வருடங்களில் இயல்பாகப் பெய்ய வேண்டிய மழை அளவான 979. 9 மி.மீ, 979.4 மி.மீ மற்றும் 979.0 மி.மீக்குப் பதிலாக முறையே 848.0 மி.மீ, 772.9 மி.மீ மற்றும் 745.7 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. இம்மழையளவு முறையே 13%, 21% மற்றும் 24% குறைவாகும்.

2003 ஆம் ஆண்டு மாநிலத்தில் 875.73 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. இது 9% குறைவானதாகும். இவ்வாண்டில் பருவ காலம் வாரியாக பெய்த மழை அளவு பின்கண்டவாறு இருந்தது:

01-01-2003 முதல் 28-02-2003 வரையிலான குளிர் காலத்தில் மழை அளவு 70% குறைவாக இருந்தது. கோடைக் காலத்தில் (01-03-2003 முதல் 31-05-2003 வரை) இயல்பான மழை அளவை விட 4% குறைவான மழை அளவே பதிவாகியுள்ளது. தென்மேற்கு பருவ காலத்தில் (01-06-2003 முதல் 30-09-2003 வரை) 1% இயல்பான மழை அளவைவிட கூடுதலாகவும் மற்றும் வடகிழக்கு பருவ காலத்தில் (01-10-2003 முதல் 31-12-2003 வரை) 13% குறைவாகவும் மழை பெய்துள்ளது.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்கள் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ காலங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றழுத்தத் தாழ்வு நிலை (Trough), காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் (Depression of Low Pressure) போன்றவற்றின் தாக்கத்தினால் ஒவ்வொரு ஆண்டும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் மழை, வெள்ளம், புயல் ஆகியவற்றால் ஏற்படும் எதிர்பாரா நிகழ்வுகளை சமாளிக்கும்பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் பேரழிவு தணிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைத் திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவ மழை காலம் தொடங்குவதற்கு முன்பாகவே அதனால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைச் செவ்வனே சமாளிக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட



2004 ஜூலை 27]

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் (District Coordination Committee Meeting) நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இயற்கை இடர்ப்பாடுகள் மேலாண்மையில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டும், ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகளின்படியும் மாவட்ட அளவில் அவசரகாலத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன்படி பேரழிவு தணிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைத் திட்டம் மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்படுகிறது. மேலும் அரசு தலைமைச் செயலர் தலைமையில் தொடர்புடைய துறை அலுவலர்கள் அடங்கிய மாநில அளவிலான உயர் மட்ட குழுக் கூட்டம் வடகிழக்குப் பருவ மழைக் காலத்திற்கு முன்பாகவே கூட்டப்பட்டு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழையினால் ஏற்படும் சேதங்கள் குறித்து நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள நிவாரணக் குழு ஒன்றினை சென்னை மாநகராட்சி ஆணையரின் தலைமையில் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

வெள்ளம்; புயல், தீ விபத்து போன்ற இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:

அ) உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நிவாரணமாக ரூ.15,000/- முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாவட்டாட்சியர்களால் உடனடியாக வழங்கப்படுகிறது.

ஆ) முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.2000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

இ) இறந்த கால்நடைகளுக்கு அதாவது, பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ.5000/- வீதமும், பசு/எருமைக் கன்று ஒன்றுக்கு ரூ.3000/- வீதமும், செம்மறி ஆடு/வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கால்நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கப்படுகிறது.

[2004 ஜூலை 27

ஈ) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையினை உடனடியாக வழங்கும்பொருட்டு கருவூல விதி 27-ன்கீழ் மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உ) வெள்ளம்/புயல்/வறட்சியால் பாதிக்கப்பட்ட பல்வகை பயிர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:

மத்திய அரசு நிவாரணத் தொகையை திருத்தி நிர்ணயம் செய்துள்ளதைத் தொடர்ந்து, வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களால் சேதமுற்ற பல்வேறு பயிர்களுக்கு பின்வருமாறு நிவாரணத் தொகையை நிர்ணயம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது:-

| | |
|---|---|
| சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவி வேளாண்மை இடுபொருள் மானியம் 50% மற்றும் அதற்கு மேல் பயிர் இழப்பிற்கு | மழையை நம்பி பயிர் செய்யப்படும் பகுதிகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1000/- |
| வேளாண் பயிர்கள், தோட்டக் கலைப் பயிர்கள் மற்றும் வருடாந்திர பண்ணைத் தோட்டப் பயிர்கள் | உறுதியளிக்கப்பட்ட பாசன வசதியுள்ள பகுதிகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.2500/- |
| ஆண்டு முழுவதும் உள்ள பயிர்கள் | ஒரு ஹெக்டேருக்கு ரூ.4000/- |
| மல்பெரி பயிர்கள் | ஒரு ஹெக்டேருக்கு ரூ.1500/- |

தரிசாக விடப்பட்ட நிலங்களுக்கான நிவாரணம் மேற்படி தொகையில் 50% ஆகும்.

## தென்மேற்குப் பருவ மழை 2003

தென்மேற்குப் பருவ மழை இயல்பாக ஜூன் 1 ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 15-ல் முடிவடையும். 2003 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவ மழை காலத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவான 331.48 மி.மீ.க்கு 334.89 மி.மீ மழை பெய்துள்ளது. திண்டுக்கல், பெரம்பலூர், வேலூர், திருச்சி, சிவகங்கை, விழுப்புரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் கூடுதலாக மழை பெற்றுள்ளன. கன்னியாகுமரி, கோயம்புத்தூர், நீலகிரி, தூத்துக்குடி, ஈரோடு, நாமக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் குறைந்த அளவு மழை பெற்றுள்ளன. இராமநாதபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், திருவாரூர், தருமபுரி, சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்கள் இயல்பான



2004 ஜூலை 27]

அளவு மழை பெற்றுள்ளன. கரூர் மற்றும் தேனி மாவட்டங்கள் பற்றாக்குறை (Scanty) அளவு மழை பெற்றுள்ளன.

## வடகிழக்குப் பருவ மழை 2003

வடகிழக்குப் பருவ மழைக் காலம் இயல்பாக தென்மேற்குப் பருவ மழைக் காலம் முடிவுற்றதும் அக்டோபர் 3-வது வாரத்தில் தொடங்கும். 2003 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை 19-10-2003 அன்று தொடங்கியது. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவான 464.63 மி.மீ க்கு 403.32 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. சென்னை, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், சிவகங்கை, திருவள்ளூர், தேனி, வேலூர், விருதுநகர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்கள் இப்பருவ மழைக் காலத்தில் குறைவான மழை அளவைப் பெற்றன. இப்பருவ மழைக் காலத்தில், நீலகிரி, திருச்சி, திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் சில தினங்களில் அதிக மழை பெய்துள்ளது. இப்பருவ மழைக் காலத்தில் தமிழ்நாட்டில் 75 மனித உயிரிழப்புகள் மற்றும் 134 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 139 குடிசைகள் முழுமையாகவும் 508 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மாவட்ட ஆட்சியர்களால் நிவாரணம் வழங்கப்பட்டது.

### கரூர் மாவட்டம்

தென்மேற்குப் பருவமழை முடியும் காலத்தில் 12-10-2003 அன்று ட்டி ஆனைப்பாளையம் மற்றும் கரூர் பகுதிகளில் 190 மி.மீ. மற்றும் 178 மி.மீ அளவு மழை பெய்ததால் அமராவதி ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள வாய்க்கால்கள் மிகவும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கரூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பாசன வாய்க்கால்களைச் சீர் செய்ய அரசு ரூ.6.38 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கி உத்தரவிட்டது.

### கடலோர மாவட்டங்களில் வி.எச்.எஃப்/எச்.எஃப். தொலைத் தொடர்பு சாதனங்கள் நிறுவுதல்

இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடிகளின்போதும், உடனுக்குடனும், எளிதிலும் தொடர்புகொள்வதற்கு வசதியாக கடலோர மாவட்டங்களான

[2004 ஜூலை 27

12 மாவட்டங்களில் மாவட்டாட்சியர் அலுவலகம் வருவாய்க் கோட்ட அலுவலகம், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் இல்லங்கள் மற்றும் மாவட்ட வருவாய்த் துறையைச் சேர்ந்த ஈப்புகளிலும் இருவழித் தகவல் தொடர்பு சாதனத்தை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இந்த இருவழி தகவல் தொடர்பு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் தலைமைச் செயலக அலுவலகத்துடன் இணைக்கப்பட உள்ளன. இதற்கென 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.99.22 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு சாதனத்தை (வி.எச்.எஃப்./எச்.எஃப்.) நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் முடிவுற்றது. இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வி.எச்.எஃப்./எச்.எஃப். சாதனங்களை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

**மழைமானி**

20 மழைமானி மையங்களில் உள்ள பழமையான சைமன் வடிவ மழைமானிகளை எஃப்.ஆர்.ப்பி. வடிவ மழைமானிகளாக உடனடியாக மாற்றி அமைக்கும் அவசியத்தை இந்திய வானிலை ஆராய்ச்சி துணைத் தலைமை இயக்குநர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக பேரிடர் நிவாரண நிதியிலிருந்து திருநெல்வேலி, நாமக்கல், ஈரோடு, தருமபுரி, கோவை, திருச்சி, இராமநாதபுரம், கடலூர், திருவாரூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தேனி, சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் எஃப்.ஆர்.ப்பி. வடிவ மழைமானிகளை நிறுவுவதற்கு ரூ.1,10,000/- வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**நிரந்தரக் கட்டுப்பாட்டு அறை**

பேரிடர் மேலாண்மை தொடர்பான செயலாக்கங்களை ஆண்டு முழுவதும் கண்காணிக்க வருவாய் நிருவாக ஆணையரகத்தில் நிரந்தரக் கட்டுப்பாட்டு அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிரந்தரக் கட்டுப்பாட்டு அறையை முழுமையான அளவில் அமைக்க உள்கட்டமைப்பான கணினி, அச்சுப்பொறி, ஒளிநகல் இயந்திரம், நிகரி இயந்திரம் மற்றும் இதர சம்பந்தப்பட்ட கருவிகளை அமைத்து நல்ல முறையில் செயல்படுத்துவதற்காக ரூ.4.90/- இலட்சம் வழங்கி அரசு



2004 ஜூலை 27]

உத்தரவிட்டுள்ளது. உள்கட்டமைப்புகளை அமைக்கும் வகையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.11 வறட்சி

**மழை விவரம்**

கடந்த 2003 ஆம் ஆண்டு தமிழகத்தில் 875.73 மி.மீ. அளவு மழை பெய்துள்ளது. இது 9 சதவீதம் குறைவானதாகும். கன்னியாகுமரி (-49%), சென்னை (-36%), கரூர் (-32%), நாமக்கல் (-28%), திருவள்ளூர் (-27%) மற்றும் நீலகிரி (-25%) ஆகிய ஆறு மாவட்டங்கள் குறைவான மழையைப் பெற்றுள்ளன. 22 மாவட்டங்களில் இயல்பான மழையும், திருநெல்வேலி மாவட்டத்தில் அதிக மழையும் பதிவாகியுள்ளது.

கடந்த 2001, 2002 மற்றும் 2003 ஆகிய மூன்று ஆண்டுகளைக் கணக்கில் கொள்ளும்போது, தமிழகத்தில் கன்னியாகுமரி, கரூர், நாமக்கல் மற்றும் நீலகிரி ஆகிய 4 மாவட்டங்கள் இம்மூன்றாண்டுகளிலும் இயல்பான அளவைவிட குறைவான மழையைப் பெற்றுள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் குறைவான மழை பெய்துள்ளது.

**நிலத்தடி நீர் மட்டம்**

கடந்த 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் பெய்த குறைவான மழையின் காரணமாக மாநிலத்தின் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது. 2003 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மழை அளவு இயல்பாக இருந்தபோதிலும், கடந்த ஆண்டுகளில் பெய்த குறைவான மழையின் காரணமாக நிலத்தடி நீர்மட்டத்தில் போதிய அளவு ஏற்றம் இல்லாமல் இருந்தது. இதனால் மாநிலத்தில் கடுமையான குடிநீர் பற்றாக்குறை நிலவியது.

**பேரிடர் நிவாரண நிதியிலிருந்து குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்**

மாநிலத்தில் வறட்சியின் காரணமாக நிலவி வரும் கடும் குடிநீர் பற்றாக்குறையினைச் சமாளிக்கும்பொருட்டு, 2003 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு

கோரி மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து முன்மொழிவுகள் வரப்பெற்றன. இத்தகைய முன்மொழிவுகள், பேரிடர் நிவாரண நிதித் திட்டத்திற்கான மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின்பேரில் மாவட்டங்களுக்கு அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழகத்தில் உள்ள ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி/மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு, 2003 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 31-03-2004 வரை ரூ. 18,136.97 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் சென்னை மாநகராட்சியில் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.80 கோடியும் அடங்கும்.

மேற்படி நிதி ஒதுக்கீட்டின் மூலம் 12,692 குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 9,329 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## கால்நடை பராமரிப்புத் துறைக்கு நிதி ஒதுக்கீடு

கால்நடை பராமரிப்புத் துறைக்கு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| கால்நடைகளை வாய் மற்றும் பாத நோய்களிலிருந்து பாதுகாக்க | 530.50 |
| வறட்சியால் பாதிக்கப்பட்ட 313 ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த (22 மாவட்டங்களில்) | 469.50 |
| கால்நடை தீவன உற்பத்திப் பண்ணைகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக (பெரிய பண்ணைகளுக்காக) | 400.00 |
| கால்நடை தீவன உற்பத்தி பண்ணைகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக (சிறிய பண்ணைகளுக்காக) | 400.00 |
| கிராமங்களில் கால்நடை தீவன மேம்பாட்டிற்காக | 200.00 |
| மொத்தம் | 2000.00 |



கால்நடைகளை வாய் மற்றும் பாத நோய்களிலிருந்து பாதுகாக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 530.50 இலட்சத்தில், வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளின் ஒத்துழைப்புடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/சுய உதவிக் குழுக்களைக் கொண்டு மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களில் கால்நடை தீவனத்தை உற்பத்தி செய்யும்பொருட்டு ரூ. 200 இலட்சம் மாற்று ஒதுக்கீடு செய்ய பேரிடர் நிவாரண நிதித் திட்டத்திற்கான மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின்பேரில் அதற்கான ஆணைகள் அரசாணை (நிலை) எண் 252, வருவாய்த் துறை நாள் 27-5-2004-ல் வெளியிடப்பட்டுள்ளன.

இதுதவிர, 6 மாவட்டங்களில் கால்நடை பராமரிப்பு மையங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க ரூ. 162 இலட்சமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ.16.60 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வனத் துறைக்கு நிதி ஒதுக்கீடு

கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.20 கோடியில், தருமபுரி, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் வனப் பகுதியில் உள்ள யானை மற்றும் வன விலங்குகளின் குடிநீர்த் தேவைக்காக 79 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்காக ரூ. 76.10 இலட்சம் மாற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரண ஒதுக்கீடு

தொடர்ந்து நிலவிவரும் கடும் வறட்சியினால், மாவட்டங்களில் மல்பரி மரங்கள் பாதிக்கப்பட்டு, மல்பரி விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதன்காரணமாக, பட்டு வளர்ச்சித் துறை இயக்குநரின் முன்மொழிவு மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ. 75.92 இலட்சத்தை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தது.

## டெல்டா மாவட்டங்களில் செயற்கை மழை திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு

காவிரி டெல்டா மாவட்டங்களில் செயற்கை மழை பொழிய வைக்க 20 செயற்கை மழை மையங்களை அமைக்கும்பொருட்டு ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 27

**வறட்சி காரணமாக ஏற்பட்ட பயிர் இழப்பிற்கும் பயிரிடாமல் விடப்பட்ட நிலத்திற்கும் நிவாரணம்**

சென்னை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 2002-2003 ஆம் ஆண்டின் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நிலவிய வறட்சி காரணமாக பயிர் செய்யப்பட்ட பரப்பில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் பயிர் உற்பத்தி இழப்பை அடைந்த விவசாயிகளுக்கும் மற்றும் தங்கள் நிலங்களைப் பயிரிடாமல் விட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக அரசு ரூ.323.56 கோடி அனுமதி அளித்தது. இந்தத் தொகையில் 240.07 கோடி ரூபாய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, 28,93,268 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**வறட்சி காரணமாக பகுதியாகவும் முழுமையாகவும் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குரிய விவசாயிகளுக்கு நிவாரணம்**

வறட்சி காரணமாக தென்னை மரங்கள் பாதிப்புக்குள்ளானதாக 20 மாவட்ட ஆட்சியாளர்கள் அறிக்கை அனுப்பியதன்பேரில், பாதிப்படைந்த தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டி அரசு ரூ. 30.50 கோடி ஒதுக்கீடு செய்தது. மேற்படி ஒதுக்கீட்டில் 21.65 கோடி ரூபாய், 20 மாவட்டங்களில் உள்ள பாதிப்படைந்த 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் வேலைக்கு உணவுத் திட்டம்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டி தமிழக அரசு கேட்டுக்கொண்டதன்பேரில், இந்திய அரசு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக்கூறு திட்டத்தின்படி வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் பயன்படுத்துவதற்காக 2002-2003 ஆண்டில் 1.25 இலட்சம் டன் அரிசியும், 2003-2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 3.75 இலட்சம் டன் அரிசியும், 2004 மார்ச் இறுதியில் 3.04 இலட்சம் டன் அரிசியும் வழங்கியுள்ளது. இந்நிவாரணப் பணிகள் சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டன, கிராமப்புறங்களில் வாழும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க இத்திட்டம் அரிசியுடன்கூடிய வேலைவாய்ப்பை உறுதி செய்தது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு மனித வேலை



2004 ஜூலை 27]

நாளுக்கு கூலியாக ரூ.54/- அளவில் ரூ.39.55 மதிப்புள்ள 7 கிலோ அரிசியும், ரொக்கமாக ரூ. 14.45/-ம் வழங்கப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டு பெறப்பட்ட 1.25 இலட்சம் டன் அரிசி முழுவதுமாக பயன்படுத்தப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை பெறப்பட்ட 3.75 இலட்சம் டன் அரிசியில் 2004 ஏப்ரல் 20 வரை 3.746 இலட்சம் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 93,285 பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுகாறும் 88,398 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 90,42,748 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதன்மூலம் 7,61,53,488 மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆகியோருக்கு இலவச அரிசி வழங்குதல்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆகியோரின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் 05-02-2003 அன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டு 31-08-2003 வரை தொடரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சென்னை தவிர்த்த அனைத்து மாவட்டங்களில் மொத்தமாக 9.65 இலட்சம் குடும்பங்கள் பயன்பெற்றன.

**மத்திய அரசுக்கு வறட்சி நிவாரணம் ஒதுக்கக் கோரும் கோரிக்கை மனு 2004**

தமிழ்நாட்டில் நிலவி வரும் கடுமையான வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு, மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோர முடிவு செய்தது. அதன்படி மத்திய அரசுக்கு விரிவான கோரிக்கை மனு மூலம் ரூ. 1584 கோடி நிவாரண நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டது:

[2004 ஜூலை 27

ரூபாய் கோடியில்

| | |
|---|---|
| ஏற்கெனவே சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு உற்பத்தி இழப்பீடு | 89.29 |
| சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கு இழப்பீடு | 178.63 |
| தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு | 32.04 |
| தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இழப்பீடு | 336.00 |
| கூட்டுறவுக் கடன்களுக்கான முதலீடு தள்ளுபடி | 132.71 |
| பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க | 210.00 |
| சென்னை தவிர மற்ற மாவட்டங்களில் குடிநீர் வழங்கும்பொருட்டு | 265.82 |
| கால்நடை பராமரிப்பிற்கு நிவாரணத் தொகை | 13.34 |
| மீன்வள உதவித் தொகை | 25.90 |
| மொத்தம் | 1583.73 அல்லது 1584 கோடி |

மேலும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்காக கூடுதலாக 10.8 இலட்சம் டன் உணவு தானியங்கள் வழங்க கோரப்பட்டுள்ளது.

**மத்திய குழு வருகை**

மத்திய அரசுக்கு அளிக்கப்பட்ட வறட்சி நிவாரணம் கோரும் கோரிக்கை மனுவின் அடிப்படையில், தமிழ்நாட்டில் நிலவி வரும் வறட்சி நிலையினை நேரில் ஆய்வு செய்ய டெல்லி, மத்திய அரசின் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் வேளாண்மை இயக்குநர், திரு. தினேஷ் ராய் தலைமையிலான பல்வேறு துறையினைச் சார்ந்த உயர் அலுவலர்கள் அடங்கிய குழு 20-02-2004 அன்று வருகை தந்தது. அன்றே மத்திய குழு உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாநில அரசின் துறை அலுவலர்களுடன் தமிழகத்தில் நிலவி வரும் வறட்சி நிலை குறித்து விவாதித்தனர். மத்திய குழு உறுப்பினர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து 21-02-2004 மற்றும் 22-2-2004 ஆகிய நாட்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஆய்வு செய்தனர். இக்குழுக்கள் தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், வேலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய 11 மாவட்டங்களைப் பார்வையிட்டனர். மீண்டும் இக்குழுவினர் 23-02-2004 அன்று



2004 ஜூலை 27]

சென்னையில் மாநில அரசின் பல்வேறு துறை அலுவலர்களுடன் விவாதித்து பல்வேறு விவரங்களைப் பெற்றனர்.

**தமிழகத்தின் 29 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்தல்**

மாநிலத்தில் தொடர்ந்து நிலவி வரும் கடுமையான வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்தது. மேலும் 16 பெரும் நீராதாரங்களில் 8 நீராதாரங்களில், பிப்ரவரி 2003 ஆம் மாதத்தில் கடந்த ஆண்டை விட மிகக் குறைந்த அளவே நீர் இருந்தது. இந்நீராதாரங்களில், மொத்த கொள்ளளவில் 10.85 சதவீதம் கொள்ளளவு நீரே இருந்தது. மேலும் 90 சதவீத ஏரி மற்றும் குளங்கள் வறண்டு இருந்தன. மேலும் கர்நாடகத்திலிருந்து காவிரியில் நீர் திறந்து விடாததால், விவசாயம் பெரும் பாதிப்புக்குள்ளானது. இது குடிநீர் விநியோகத்தையும் வெகுவாக பாதித்தது. இதனால் டெல்டா விவசாயிகளினால் குறுவை பயிர் சாகுபடி (ஜூன் முதல் ஆகஸ்ட்) செய்ய இயலாமல் போனது. வழக்கமாக டெல்டா மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பான 2.330 இலட்சம் ஹெக்டேரில் 1.169 இலட்சம் ஹெக்டேர் மட்டும் சாகுபடி செய்யப்பட்டது. சம்பா (அக்டோபர் முதல் மார்ச்) பருவத்தைப் பொறுத்தவரை, வழக்கமாக பயிரிடப்படும் 14 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் 11.023 இலட்சம் ஹெக்டேர் பரப்பு மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. தென்னை சாகுபடியைப் பொறுத்தமட்டில், 13.88 இலட்சம் தென்னை மரங்கள் முழுவதுமாகவும், 22.44 இலட்சம் தென்னை மரங்கள் பகுதியாகவும் பாதிப்புக்குள்ளானது. வறட்சியினால் சராசரி சாகுபடி பரப்பில் 13.76 இலட்சம் ஹெக்டேர் குறைவாகப் பயிரிடப்படும் எனவும், பயிரிடப்பட்ட பரப்பளவில் 4.5 இலட்சம் ஹெக்டேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இவ்வறட்சியினால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி இழப்பீடு ரூ.3102.10 கோடி மற்றும் விவசாயத்தில் மனித வேலை நாட்கள் இழப்பீடு 1969 இலட்சம் மனித வேலை நாட்கள் ஆகும்.

கால்நடைகளுக்குத் தேவைப்படும் நீர் மற்றும் தீவனம் போன்றவை மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. மீன் உற்பத்தி இழப்பீடு 71.25 இலட்சம் கிலோ என மதிப்பிடப்பட்டுள்ளது. நீராதாரங்களில் மிகக் குறைவான நீர்வரத்தின் காரணமாக 2003 ஆம் ஆண்டில் நீர் மின் உற்பத்தி 4032 மில்லியன் யூனிட்டிலிருந்து 1793 மில்லியன் யூனிட்டாகக் குறைந்துள்ளது.

மேற்கூறிய சூழ்நிலைகளின் காரணமாகவும், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையிலும் மற்றும் அனைத்து காரணிகளையும் கருத்திற்கொண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக்கூறின்கீழ் வேலைவாய்ப்பை உருவாக்கும்பொருட்டும் மற்றும் குடிநீர் வழங்கு பணிகளை மேற்கொள்ளும்பொருட்டும், சென்னை நீங்கலாக மாநிலத்தின் அனைத்து 29 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக பிப்ரவரி 2004-ல் அரசு அறிவித்தது.

### பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இதுவரையிலான ஒதுக்கீடு

மாநிலத்தில் நிலவி வரும் வறட்சியினை சமாளிக்கும்பொருட்டு, பேரிடர் நிவாரண நிதி/தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு 2003-2004 நிதியாண்டில் அரசு பல்வேறு ஆணைகள் வாயிலாக ரூ.489.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புத் திட்டத்தில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் 3.04 டன் அரிசியும் ரூ.57.52 கோடியும், 2004 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணம்பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

## 2.12 துயர் துடைப்புத் திட்டம்

### தமிழ்நாடு குடும்ப துயர் துடைப்புத் திட்டம்

அரசாணை (நிலை) எண் 470, (முஅபொநிநி) நிதித் துறை நாள் 23-5-1989-ன்படி இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, ஆண்டு வருமானம் ரூ.5000/-குட்பட்டு பொருளீட்டும் குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு ரூ.2000/- நிவாரணத் தொகை வருவாய்த் துறை மூலம் வழங்கப்பட்டு வந்தது. அரசாணை (நிலை) எண் 726, வருவாய்த் துறை நாள் 5-8-1996-ல் ஆண்டு வருமானம் ரூ.7200/- வரை பெறும் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம் என ஆணையிடப்பட்டது.

இந்த உதவித் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது அரசாணை (நிலை) எண். 11, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22-1-1999-ன்படி, 1-8-1998 முதல் ரூ.10,000/- நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆரம்பித்தபோது அனைத்து செலவுத் தொகையையும் மாநில அரசு ஏற்றுக்கொண்டது. பின்பு 2-10-1995-லிருந்து செலவுத் தொகையை, மாநில அரசும் மத்திய அரசும்





ஏற்றுக்கொண்டன. இறுதியாக 1-8-1998 முதல் மொத்த செலவுத் தொகையையும் மத்திய அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. 2002-2003 ஆம் நிதியாண்டிலிருந்து மாநில அரசுகளே இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தலாம் என்ற கொள்கை முடிவினை மத்திய அரசு எடுத்துள்ளது. அதற்கேற்ப கூடுதல் நிதியை மத்திய அரசு வழங்கும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவி சம்பந்தப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

### தமிழ்நாடு குடும்ப துயர்துடைப்புத் திட்டத்தின்கீழ் 1997–98 முதல் 2003–2004 வரை செலவு செய்யப்பட்ட செலவினத் தொகை

| ஆண்டு | செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1997-1998 | 2618.70 |
| 1998-1999 | 3591.91 |
| 1999-2000 | 1884.46 |
| 2000-2001 | 1791.38 |
| 2001-2002 | 1478.80 |
| 2002-2003 | -- |
| 2003-2004 | 2892.90 |

### விபத்து நிவாரணத் திட்டம்

அரசாணை (நிலை) எண் 471. நிதித் (முஅபொநிநி) துறை, நாள் 23-5-1989-ன்படி தமிழ்நாட்டில் கிராமக் கைவினைஞர்கள் உட்பட 44 வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பணி நேரத்தில் இருக்கும்போது ஏற்படும் விபத்தினால் இறக்க நேரிட்டாலோ அல்லது காயம் ஏற்பட்டாலோ அல்லது அங்கங்களை இழக்க நேரிட்டாலோ அவர்களது குடும்பங்களுக்கும், காயமடைந்த அல்லது அங்கங்களை இழக்க நேரிட்ட தொழிலாளர்களுக்கும் வருவாய்த் துறை மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### விபத்தினால் மரணம் ஏற்படும் இனங்கள்

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது பணியில் இருக்கும்போது விபத்தினால் இறந்த அல்லது முழுமையாகச் செயல் இழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000/- நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஏற்படும் நிதிச் சுமையை ஆரம்பத்தில் மாநில அரசே முழுமையாக ஏற்றுக்கொண்டது. 2-10-1995 முதல் இந்த

நிவாரணத் தொகையை மாநில அரசும் மத்திய அரசும் ஏற்றுக்கொண்டன. பின்பு, இறந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 28-8-1996 முதல் ரூ.15000/-ஆக உயர்த்தப்பட்டது. இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு பல்வேறு காலக்கட்டங்களில் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை, அதில் மாநில மற்றும் மத்திய அரசின் பங்குத் தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

**விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 1997–98 ஆம் ஆண்டு முதல் 2001–2002 வரை செலவு செய்யப்பட்ட செலவினம்**

| ஆண்டு | மாநில அரசின் பங்கு | மத்திய அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1997-1998 | 47.04 | 73.25 | 120.29 |
| 1998-1999 | 69.60 | 167.13 | 236.73 |
| 1999-2000 | 80.38 | 14.67 | 95.05 |
| 2000-2001 | 29.90 | 31.62 | 61.52 |
| 2001-2002 | 39.77 | 73.20 | 112.97 |

**விபத்தினால் காயம் ஏற்படும் இனங்கள்**

அரசாணை (நிலை) எண் 471, நிதித் (மு-அபொநிநி) துறை, நாள் 23-5-1989-ன்படி 44 வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, பணியின்போது விபத்தினால் ஏற்படும் காயங்களுக்கு, காயத்தின் தன்மைகளுக்கேற்ப ரூ.5000/- முதல் ரூ.10,000/- வரை நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

தற்போது அரசாணை (நிலை) எண் 570, வருவாய்த் துறை நாள் 27-10-1999-ன்படி விபத்தினால் காயம் அடையும் அல்லது அங்கங்களை இழக்க நேரிடும் 44 வகையான தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு காயத்தின் தன்மைக்கும், இழக்க நேரிட்ட அங்கங்களின் தன்மையைப்பொறுத்தும் ரூ.7,500/- முதல் ரூ.15,000/- வரை நிவாரணத் தொகை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

விபத்தினால் காயம் அடையும் அல்லது அங்கங்களை இழக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை முழுவதையும் இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து மாநில அரசே வழங்கி



வருகிறது. 2002-2003 நிதியாண்டிலிருந்து இந்தத் திட்டம் மாநில திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**2002–2003 மற்றும் 2003–2004 நிதியாண்டில் விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்பட்ட விவரம்**

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2002-2003 | 160.00 | 160.00 |
| 2003-2004 | 288.00 | 162.20 |

## 2.13 பேரழிவு மேலாண்மை

**ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பின் ஆதரவுடனான பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்**

பல்முனை இன்னல்களுக்கு உட்படுபவை எனக் கண்டறியப்பட்ட பகுதிகளில் மக்கள் சமுதாயம் இயற்கை இடர்ப்பாடுகளுக்கு உட்படுவதைக் குறைக்கும் நோக்குடன் பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம் என்ற திட்டத்தை நிறைவேற்றவேண்டி இந்திய அரசு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்புடன் 2002 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இத்திட்டத்தின் நோக்கம், இந்தியாவில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் அதிகமான இன்னல்களுக்கு உட்படும் சில மாவட்டங்களில், இயற்கை இடர்ப்பாடுகளை நிரந்தரமாகக் குறைப்பதாகும். விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் கற்பித்தல், பயிற்சி, பேரிடர் துயர் மேலாண்மை மற்றும் ஆயத்த நிலையில் இருத்தல் ஆகியவற்றில் திறனை வளர்த்தல், மாநில, மாவட்ட மற்றும் சமுதாய அளவில் இன்னல்களிலிருந்து மீட்டல் மற்றும் சரியான நேரத்தில் துல்லியமாக எச்சரிக்கைகளை அளிப்பதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவிலான தகவல் மையங்களை வலுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தை நிறைவேற்றும் முகமை, இந்திய அரசின் உள் துறை அமைச்சகமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுதலில் தகுந்த வழிகாட்டுதலுக்காக மத்திய அரசின் உள் துறைச் செயலாளர்

தலைமையின்கீழ், திட்ட மேலாண்மைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களும், நிலநடுக்கத்தின் பாதிப்பிற்கு இலக்காகும் வாய்ப்புள்ளதெனக் கண்டறியப்பட்ட கோயமுத்தூர் மற்றும் சென்னை மாநகரங்களும், இத்திட்டத்தை நிறைவேற்ற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்ட முழுமைக்கும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு நிதி வழங்குகிறது. மொத்த நிதியளிப்பு ரூ6.71 கோடியாகும். (14,75,022 அமெரிக்க டாலர்கள்) திட்டக் காலம் 2003-2007 ஆகும்.

30-10-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு அரசிற்கும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தலைமைச் செயலர் தலைமையில் ஒரு வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும்பொருட்டு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும், இணை ஆணையர் (நிவாரணம்) மாநில திட்ட அலுவலராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திட்ட மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு திட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநில ஒருங்கிணைப்பாளருடனும், மாநில திட்ட அலுவலருடனும் ஒருங்கிணைந்து செயல்பட ஒவ்வொரு தொடர்பு துறையிலும் அத்துறையின் முதுநிலை அலுவலர் ஒருவர் அத்துறையின் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்கெனவே நடவடிக்கை தொடங்கப்பட்டு, மாவட்ட அலுவலர்களுக்கும், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலர்கட்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற இந்த மாவட்ட அலுவலர்கள்,



இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள மாவட்ட பிற அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். இத்திட்டம் சமூக சார்புடைய ஒன்று. இத்திட்டம் நிறைவேற்றும் பணி கிராம நிலையிலிருந்து தொடங்கி பின்பு ஊராட்சி, வட்டாரம், மாவட்டம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆகிய நிலைகளில் அதேபோன்று திட்டமிடுதல்மூலம் ஒருங்கிணைக்கப்படும். மாவட்ட அளவிலான திட்டக் கூறுபாடுகள், தொடக்க நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன:

**திட்டக் கூறுபாடுகள்:**

- மாநில மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை விரிவாக்குதல்
- கிராம/வார்டு, கிராம பஞ்சாயத்து, வட்டார/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான பேரிடர் இன்னல் மேலாண்மை மற்றும் ஏற்புத் திட்டங்களை விரிவாக்குதல்.
- எல்லா நிலைகளிலும் (கிராமம்/பிரிவு, கிராம ஊராட்சி, வட்டாரம்/உள்ளாட்சி அமைப்புகள், மாவட்டம் மற்றும் மாநிலம்) போதுமான மகளிர் பிரதிநிதித்துவம் கொண்ட பேரிடர் மேலாண்மைக் குழு மற்றும் அணிகளை ஏற்படுத்துதல்.
- எல்லா நிலைகளிலும் பேரிடர் மேலாண்மைக் குழுக்களின் திறனை அதிகரித்தல், முதலுதவி, இருப்பிட மேலாண்மை, குடிநீர் மற்றும் பொது சுகாதாரம், மீட்பு மற்றும் மறுவாழ்வளித்தல் ஆகியவற்றில் மகளிருக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளித்தல்.
- பேரிடருக்கு உட்படும் எனக் கண்டறியப்பட்ட மாவட்டங்களில் புயல் மற்றும் நிலநடுக்கம் ஆகியவற்றை எதிர்கொண்டு நிற்கும் அம்சங்களைக்கொண்ட வலுவான வீடுகளைக் கட்டுதல், வீடுகளின் வடிவமைப்புகளை மாற்றியமைத்தல் மற்றும் தொழில் நுட்பத்துடன்கூடிய மாதிரி அலகுகளை அமைத்தல்
- உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களோடு பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

## திட்ட நோக்கங்கள்

- பேரிடர் இன்னல் மேலாண்மை முறை மற்றும் கட்டமைப்பை உருவாக்குவதில் உள் துறை அமைச்சகத்திற்கு தகுந்த மற்றும் சிறப்பான ஒத்துழைப்பை நல்குதல்.
- பேரிடர் இன்னலுக்கு உட்படும் தன்மை பேரிடர் இன்னல் மேலாண்மை மற்றும் நிரந்தர மீட்பு தொடர்பான மாநில/தேசிய புள்ளிவிவர அடிப்படையை விரிவுபடுத்துதல்.
- கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றின்மூலம் பேரிடர் இன்னல் மேலாண்மையில் மாநில மற்றும் தேசியஅரசுகளுக்கு வலு சேர்த்தல் மற்றும் நிறுவனங்களில் திறனை மேம்படுத்துதல்.
- ஒவ்வொரு திட்ட மாநிலத்திலும் பேரிடர் துயர் தணிப்பு மற்றும் தயார் நிலையில் இருத்தல் ஆகியவற்றைப்பற்றி விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.
- பள்ளிகளில் பேரிடர் மேலாண்மை தொடங்குவதற்கும், பேரிடர் தடுப்பு மற்றும் ஏற்பு தொடர்பான நடைமுறைப் பயிற்சி குறித்து திட்டமிடுவதற்கும் துணை புரிதல்.
- கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் பேரிடர் இன்னல் மேலாண்மை திட்டங்களுக்கான பங்களிப்பை ஊக்குவித்தல்.
- மாவட்ட, வட்டார, ஊராட்சி, கிராம/பிரிவு ஆகியவற்றிற்கு உள்ளூர் மொழியில் பயிற்சி கையேடுகளை விரிவாக்குதல்.
- பேரிடர் நிகழ்வுகளின்போது மீட்பு, நிவாரணம், புனரமைப்பு ஆகிய பணிகளிலும் அவற்றில் பயன்படும் உபகரணங்களைக் கையாள்வதிலும் சமூக அமைப்புகள் உள்ளிட்ட பயனீட்டுதாரர்களின் செயல் திறனை வளர்த்தல்.
- இன்னலுக்குள்ளாகும் பகுதிகளைக் குறிப்பிடும் வரைபடத்திற்குட்பட்ட வட்டாரம்/நகர்ப்புற உள்ளாட்சி, ஊராட்சி, கிராமம்/வார்டு பகுதிகளை ஒருங்கிணைத்து இடர்ப்பாடுகளை மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு செய்தல், சேதங்களை வரையறுத்தல், நிவாரண வழிவகைகளைக் கண்டுபிடித்தல் மற்றும் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்து திட்டமிடல்



இவை மூலம் மாவட்டங்களில் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சமாளிக்க ஆயத்தமாயிருப்பது மற்றும் இன்னல்களைத் தணிப்பது.

- தயார் நிலையில் இருக்க வேண்டியும், விரைவான துயர்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியும், முன் எச்சரிக்கை வழங்கவும், துல்லியமான தகவல்களை அளிக்கவும், திட்டத்திற்குட்பட்ட மாவட்டங்கள் மற்றும் பெரு நகரங்களில் உள்ள பேரிடர் மேலாண்மை தகவல் மையங்களை வலுப்படுத்துதல்.
- நீண்டகால துயர் தணிப்பு நடவடிக்கையாக இடர்ப்பாட்டிற்கு உள்ளாகும் வீடுகளை மாற்றியமைத்தல்/கூரையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக கட்டுப்படியாகும் மதிப்பீட்டில், மாற்று தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்குதல்.
- பேரிடர் இன்னல் மேலாண்மை குறித்த அளவை நிர்ணயிப்பதற்காக பேரிடருக்குள்ளாகும் நிலை, இடர்ப்பாடு குறித்த அளவு மற்றும் ஆண்டுதோறும் இன்னலுக்குள்ளாகும் வாய்ப்பு மற்றும் துயர்துடைப்புப் பணிகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்.

## மாவட்ட அளவிலான நடவடிக்கைகள்

- மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்புப் பணிகளைக் கவனிக்க, மாவட்ட திட்ட அமைப்புப் பணிகளைக் கவனிக்க மாவட்ட திட்ட அலுவலர்கள் நியமனம்.
- கடந்த 50 ஆண்டுகளில் நிகழ்ந்த பேரிடர் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்தல்.
- கீழ்க்கண்டவாறு மாவட்ட பேரிடர் மேலாண்மைக் குழுக்கள் ஏற்படுத்துதல்:

(1) மாவட்ட ஆட்சியர் - தலைவர்

(2) திட்ட அலுவலர் - அமைப்பாளர்

(3) தொடர்புத் துறைகள்

(4) என்.சி.சி./என்.எஸ்.எஸ்./என்.ஒய்.கே/உள்ளாட்சி அமைப்புகள்/ அரசுசாரா நிறுவனங்கள்

- மாவட்ட, வட்டார, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊராட்சி மற்றும் கிராம நிலைகளில் பேரிடர் மேலாண்மைக் குழுக்களை அமைத்தல்.
- மகளிர், உள்ளாட்சி நிறுவனங்கள்/தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் போன்ற பயனீட்டுப் பங்காளர்களை உணரவைத்தல்.
- விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.
- திறனாளர்களைக் கண்டறிந்து பயிற்சி அளித்தல்.
- பேரிடர் சாத்தியக்கூறு குறித்து பகுப்பாய்தல் மற்றும் இடர்ப்பாடுகளை அறுதியிடல்.
- கிராமம், வட்டார மற்றும் மாவட்ட நிலைகளில் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தினை விரிவுபடுத்துதல்.
- கட்டுப்பாட்டு அறைகளை நிறுவுதலும் வலுப்படுத்துதலும்,
- பேரிடர் பருவத்திற்கு முன்பாக குறைந்தபட்சம் ஆண்டுக்கு இருமுறை மாதிரி செயல்முறைப் பயிற்சிகளை நடத்துதல்.

**பேரிடர் மேலாண்மை ஆணைக் குழுமம்**

செயல் முகமையானது, பேரிடர் மேலாண்மைப் பணிக்கு தொடர்புத் துறை, கள நிர்வாகம், அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் தன்னார்வர்கள், பொது மக்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேலும், விரைவான செயலாக்கத்திற்கும், நிவாரணப் பணிகளைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளவும், இவர்களின் தொடர்கூட்டுமுயற்சிகள் தேவைப்படுகின்றன. இயற்கை இடர்ப்பாடுகளையும், அவசர நிலைமைகளையும் சமாளிக்க அர்ப்பணிக்கப்பட்ட தன்னாட்சியுடைய அமைப்பு தேவை என்ற உணர்வு வளர்ந்து வருகிறது. எனவேதான் துயர்தணிப்பு நடவடிக்கைகளையும், ஆயத்த நிலையிலிருத்தலையும், ஒருங்கிணைந்த ஏற்புடைத்தலையும் ஒருங்கிணைக்கவேண்டி பேரிடர் மேலாண்மைக் குழுமம் ஒன்று அரசின் தலைமைச் செயலர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாநில துயர் துடைப்பு ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் மாநில அளவிலான



பேரிடர் மேலாண்மை முகமை ஒன்றை உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.14) 2004 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் இலவச வேட்டி/ சேலை வழங்கும் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15-8-2003-ல் நடைபெற்ற 57-வது சுதந்திர தின விழாவின்போது, ஏழை எளிய மக்கள் பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்ட அறிவிப்பினைச் செய்தார்.

இதன்படி, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு 81 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் வழங்கப்படவேண்டும் என அரசாணை (நிலை) எண் 54, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள் 17-9-2003 மூலம் ஆணை வெளியிடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 15-1-2004 பொங்கல் திருநாளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் தலைமையில் விழா நடத்தி இலவச வேட்டி சேலை விநியோகம் செய்ய ஆணையிடப்பட்டது.

இலவச வேட்டி சேலை திட்டத்தின்மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து தரப்பு ஏழை எளிய மக்களும் பயன்பெற வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன், ஏழை எளிய மக்கள் எவரும் இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்து விடக்கூடாது என்பதற்காகவும், இத்திட்டத்தினை மேலும் விரிவாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் முடிவு செய்தார்கள். அதன்படி அரசு ஆணை (நிலை) எண் 23, வருவாய்த் துறை, நாள் 20-1-2004-ன்படி தமிழ்நாட்டில் பொது விநியோக முறையில் அரிசிக் கூப்பன் மூலம் அரிசி பெறும் அனைத்துப் பிரிவு ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட அடையாளச் சீட்டுகளை வழங்கி தகுதியுள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் பயன்பெறத்தக்க வகையில் அரசு ஆணையிட்டது.

அரிசிக் கூப்பன் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 1,07,02,530 (ஒரு கோடியே ஏழு இலட்சத்து இரண்டாயிரத்து ஐநூற்றி முப்பது மட்டும்) ஆகும். அவர்கள் அனைவருக்கும் வேட்டி சேலை வழங்கவும், மேலும், குடும்ப அட்டைகள்/அரிசிக் கூப்பன்கள் பெற

இயலாத ஏழை எளிய மக்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக சுமார் 4 இலட்சம் வேட்டிகள் மற்றும் 4 இலட்சம் சேலைகளை இருப்பாக வைத்திருக்க வேண்டியதும் அவசியம் எனக் கருதப்பட்டு, முறையே சுமார் ஒரு கோடியே பதினோரு இலட்சம் சேலைகள் மற்றும் வேட்டிகள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ.173 கோடி ஆகும். இதனால் 2 கோடியே 22 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிறார்கள். இதன்மூலம் அரிசிக் கூப்பன் வழங்கப்பட்டுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் தகுதியின் அடிப்படையில் தலா ஒரு வேட்டி ஒரு சேலை வழங்கப்படும்.

*31-3-2004* வரையில் *1,05,47,101* இலவச சேலைகளும், *1,04,40,204* இலவச வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டவாரியாக இத்திட்டத்தினால் பயன்பெறும் பயனாளிகள் எண்ணிக்கை பின்வருமாறு:-

## இலவச வேட்டி/சேலைத் திட்டம்

### பொங்கல் 2004 இலவச வேட்டி/சேலை திட்டத்தின் கீழ் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை

| வ. எண் | மாவட்டம் | இலவச வேட்டி/சேலை திட்டத்தின் கீழ் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 4,98,931 |
| 2. | கோயம்புத்தூர் | 6,50,433 |
| 3. | கடலூர் | 4,18,881 |
| 4. | தருமபுரி | 2,58,842 |
| 5. | திண்டுக்கல் | 3,17,439 |
| 6. | ஈரோடு | 3,48,938 |
| 7. | காஞ்சிபுரம் | 4,92,129 |
| 8. | கன்னியாகுமரி | 3,69,914 |
| 9. | கரூர் | 1,58,195 |
| 10. | மதுரை | 4,57,738 |
| 11. | நாகப்பட்டினம் | 2,87,337 |
| 12. | நாமக்கல் | 1,73,224 |
| 13. | பெரம்பலூர் | 2,58,927 |
| 14. | புதுக்கோட்டை | 2,58,618 |
| 15. | இராமநாதபுரம் | 2,43,204 |
| 16. | சேலம் | 4,16,900 |
| 17. | சிவகங்கை | 2,40,162 |
| 18. | தஞ்சாவூர் | 4,07,258 |
| 19. | நீலகிரி | 1,75,157 |
| 20. | தேனி | 2,24,692 |
| 21. | தூத்துக்குடி | 2,38,672 |
| 22. | திருச்சிராப்பள்ளி | 4,04,596 |
| 23. | திருநெல்வேலி | 4,97,990 |
| 24. | திருவள்ளூர் | 4,30,332 |
| 25. | திருவண்ணாமலை | 4,29,170 |
| 26. | திருவாரூர் | 2,23,556 |
| 27. | வேலூர் | 6,26,948 |
| 28. | விழுப்புரம் | 6,17,607 |
| 29. | விருதுநகர் | 2,88,075 |
| 30. | கிருஷ்ணகிரி | 2,88,665 |
| | மொத்தம் | 1,07,02,530 |





இலவச சேலை/வேட்டி, கிராமங்களில் உள்ள பொது விநியோகக் கடைகளில் கிராம நிர்வாக அலுவலர் தலைமை கொண்ட மூன்று நபர் குழுவின் மேற்பார்வையில் விநியோகிக்கப்படுகிறது. இக்குழு கிராம நிர்வாக அலவலர், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அலுவலர், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அலுவலர் மற்றும் மாவட்டத்திலுள்ள இதர துறையைச் சார்ந்த அலுவலர்களில் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படுகிற ஒரு அலுவலர் ஆகியோரைக் கொண்டதாக அமைக்கப்படுகிறது.

[2004 ஜூலை 27

# அத்தியாயம் –3

## நில நிர்வாகம்

### (Land Administration)

அரசின் வெவ்வேறு துறைகள்வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும், வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. புறம்போக்கு நிலங்கள் என்று அழைக்கப்படும் அரசு நிலங்கள், அதன் பயன்பாட்டிற்கேற்ப வகைப்பாடு செய்யப்படுகின்றன. நத்தம், தீர்வை ஏற்பட்ட புஞ்சை, தீர்வை ஏற்பட்ட நஞ்சை, தீர்வை ஏற்படாத புஞ்சை, நீர்வழி புறம்போக்குகளான குட்டை, குளம், ஓடை, ஆறு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு, தோப்பு, பாதை, வண்டிப் பாதை, கல்லாங்குத்து, கோயில் புறம்போக்கு மற்றும் மயான புறம்போக்குகள் ஆகியவை முக்கியமான வகைப்பாடுகளாகும்.

அரசு நிலங்கள் ஒப்படை, நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை முறைகளில் தனியாருக்கும், அரசின் பல்வேறு துறைகளுக்கும், அரசுசார்ந்த நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தற்போது அரசு வசம் உள்ள நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதால், அவற்றை ஒதுக்கீடு செய்வது குறித்த ஒவ்வொரு செயற்குறிப்பையும் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

### 3.2 நில ஒப்படை

அரசு நிலங்கள் வீட்டுமனைக்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் ஒப்படை செய்யப்படுகின்றன.

#### வீட்டுமனை நில ஒப்படை

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே இவ்வரசின் நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது. வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை 21-ன்கீழ் உள்ள வரையரைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.16,000/-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும்,



2004 ஜூலை 27]

நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்கப்பட்டு வருகிறது. மகளிர்க்குப் பொறுப்பளிப்பதைக் கருத்தில் கொண்டு குடும்பத் தலைவி, அதாவது மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டுமனைக்காக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது.

நடைமுறையில் இருந்த நிபந்தனைகளின்படி ஒப்படை பெற்றவர் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர இதர நிதி நிறுவனங்களில் வீட்டுமனைப் பட்டாவை அடமானம் செய்ய அனுமதி இல்லை. இந்த அரசு வீட்டுமனைப் பட்டாவில் உள்ள இந்த நிபந்தனையை மாற்றி ஆணையிட்டதுடன் இந்திரா ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதமரின் கிராமோதய யோஜனா ஆகிய கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அரசால் ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக கடன் உதவி மானியத் திட்டத்தின்கீழ், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறும்பொருட்டு ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை அடமானம் செய்வதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டுமனை ஒப்படை செய்வதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:

(அ) எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் பிரதேச இராணுவப் படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்

(ஊ) நிலமற்ற ஏழைகள்

ஒப்படை செய்வதைத் துரிதப்படுத்துவதற்கும் அதனுடைய பயன் ஏழை மக்களுக்கு விரைவில் சென்றடையும் வகையிலும் வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பின்வரும் நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது:

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ.10,000 |
| 2. கோட்டாட்சியர் | ரூ.20,000 |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000 |
| 4. மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. அரசு | ரூ.2,50,000-க்குமேல் |

2003-2004-ல் மாநிலம் முழுவதும் 50,000 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. 31-3-2004 வரை 88,348 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

**2003–2004 ஆம் ஆண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய விவரங்கள்:**

| | | |
|---|---|---|
| குறியீடு | .. | 50,000 |
| சாதனை | .. | 88,348 |

| இனம் | | பயனாளிகள் |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. | 26,474 |
| பழங்குடியினர் | .. | 2,276 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | .. | 22,782 |
| பிற்படுத்தப்பட்டோர் | .. | 34,380 |
| ஏனையோர் | .. | 2,436 |
| மொத்தம் | .. | 88,348 |



**விவசாய நிலம் ஒப்படை**

கிராமங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும் அதைச் சார்ந்த வேலைகளையும் நம்பி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் சொந்த நிலம் வைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே, நிலமற்ற ஏழைகளுக்கு அரசு நிலங்களை வழங்கி, விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளையும் தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது, ஆகிய இரு குறிக்கோள்களை அடைவதற்கு அரசு உதவி வருகின்றது. விவசாய நில ஒப்படை, வருவாய் நிலை ஆணை 15-ன்கீழ் செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்தின் அளவு எப்படி இருந்தபோதிலும் குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.16,000/-க்கும் நகர்ப்புறத்தில் ரூ.24,000/-க்கும் குறைவாக இருப்பவர்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு பின்பற்றப்படும் அதே முன்னுரிமை வரிசை விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப் பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும் அம்மாவட்டத்தில் இந்த பரப்பளவு, ஒரு ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்படை நிபந்தனைகளின்படி, ஒப்படை பெற்ற நிலத்தை ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஒப்படை பெற்றவர் விவசாயம் செய்ய வேண்டும். ஒப்படை பெற்ற நிலத்தை பிறருக்கு விற்பனை செய்யக்கூடாது. ஒப்படை பெற்ற நிலத்தில் குறைந்தது 10 மரங்களை நட வேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்படுமேயானால் இழப்பீடு எதுவும் வழங்கப்படாமல் நிலம் அரசால் மீள பெறப்படும்.

சமுதாயத்தின் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நீர்வழிப் புறம்போக்குகளான ஏரி, குளம், குட்டை, வாய்க்கால் போன்றவற்றையும் மந்தைவெளி, மேய்க்கால் மற்றும்

மயானம் ஆகிய புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. இயற்கைச் சூழல் சமன்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் மண் அரிமானத்தைத் தடுப்பதற்காகவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. பெரிய நகரங்களைச் சுற்றிலும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலங்கள் தேவைப்படுவதால், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள்ளும் நில ஒப்படை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது போலவே விவசாய நில ஒப்படை செய்வதற்கும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு பின்வரும் நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ. 10,000 |
| 2. கோட்டாட்சியர் | ரூ. 20,000 |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000 |
| 4. மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. அரசு | ரூ.2,50,000-க்கு மேல் |

2003-2004 ஆம் ஆண்டுக்கு மாநிலம் முழுமைக்கும் 3,000 ஏக்கர் நிலம் ஒப்படை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-3-2004 வரையில் மாநிலத்தில் 5826.15 ஏக்கர் நிலம் 10,483 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:-

**2003–2004 ஆம் ஆண்டில் நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட விவரங்கள்**

| | | (ஏக்கரில்) |
|---|---|---|
| குறியீடு | - | 3000.00 |
| சாதனை | - | 5826.15 |



| வகுப்பினர் | | பயனாளிகள் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. | 2389 | 1333.93 |
| பழங்குடியினர் | .. | 62 | 69.27 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | .. | 3335 | 1694.44 |
| பிற்படுத்தப்பட்டோர் | .. | 4402 | 2605.38 |
| ஏனையோர் | .. | 295 | 123.13 |
| மொத்தம் | .. | 10483 | 5826.15 |

ஒப்படை செய்யப்பட்ட மொத்த பரப்பு (ஏக்கரில்) 5826.15

### 3.3 நிலக் குத்தகை

பொதுவாக அரசு நிலங்கள் குறிப்பிட்ட காலவரையரைக்கு உட்பட்டு, தனி நபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் நிலையாணை எண் 24-ஏ-ன்கீழ் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆண்டுக் குத்தகைத் தொகை நிலமதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள குத்தகை வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| நோக்கம் | குத்தகை விகிதம் | தலவரி | தலமேல் வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |
| வணிகமல்லாத நோக்கம் | 1% | 1% | 5% | 7% |

பொதுவாக குத்தகைக் காலம் ஒரு தடவையில் மூன்றாண்டுகள் ஆகும். இருப்பினும், எந்தவொரு அரசு நிலமும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படுகிறது. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை அன்றைய நிலமதிப்பின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும்.

[2004 ஜூலை 27

அரசு நிலங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பின்வருமாறு நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:-

| அலுவலர்கள் | | நிதிவரம்பு |
|---|---|---|
| வட்டாட்சியர் | - | இல்லை |
| கோட்டாட்சியர் | .. | ரூ.20,000/-வரை |
| மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | .. | ரூ.50,000/-வரை |
| நில நிர்வாக ஆணையர் | .. | ரூ.2,00,000/-வரை |
| அரசு | .. | ரூ.2,00,000/-க்கு மேல் |

குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் குத்தகை புதுப்பிக்கப்பட வேண்டும். குத்தகை புதுப்பித்து குத்தகைத் தொகை திருத்தியமைக்கப்படும் வரை, குத்தகைதாரர் குத்தகைத் தொகையை செலுத்த ஆண்டொன்றிற்கு ஊக உயர்வு சேர்த்த மதிப்புத் தொகையுடன் உத்தேச குத்தகை தொகை கணக்கிட்டு வசூலிக்கப்படும் என்ற ஒரு புதிய நிபந்தனையை குத்தகைப் பத்திரத்தில் சேர்க்க வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது. அரசுக்குச் சேரவேண்டிய குத்தகை முடங்காமல் வசூல் செய்வதற்கு தகுதி வாய்ந்த வருவாய்த் துறை அலுவலர்களுக்கு இப்புதிய நிபந்தனை வழிவகை செய்கிறது.

### 3.4 நில மாற்றம்

அரசு புறம்போக்கு நிலங்கள் மைய அரசுத் துறைகளுக்கு வருவாய் நிலையாணை எண் 23-இன்கீழ் வழக்கமாக சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், சென்னையில், துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்காக நிலங்கள் இரயில்வேத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யப்படுகிறது. மாநில அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 23-அ வின் கீழ் அரசு பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வணிக நோக்கமல்லாத பயன்பாட்டிற்காக நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்படுகிறது. வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் கேட்கப்படும்பொழுது, நிலமதிப்பு வசூலிக்க ஆணையிடப்படுகிறது.



2004 ஜூலை 27]

போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, மற்றும் காவல் துறை போன்ற அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்காக ஆட்சேபணையற்ற, குறைந்த ச அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிலமாற்றம் எந்நோக்கத்திற்காக செய்யப்பட்டதோ, அதற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படாத பட்சத்தில், அத்தகைய நிலங்கள் மீளப் பெறப்பட்டு, தேவைப்படும் பிற துறைகளுக்கு நில மாற்றம் செய்யப்படுகிறது.

### 3.5 நில உரிமை மாற்றம்

பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்று வதற்காகவும் வருவாய் நிலையாணை 24-இன்கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றியும் இதர காரியங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக்கிரயமாக ரூ.5,000/- வசூலித்துக் கொண்டும், அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதே போன்று தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கும், இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதர கேட்பு நிறுவனங்களுக்கு சந்தை மதிப்பு அல்லது அதற்கு மேல் நிலக்கிரயம் வசூலிக்கப்பட்டு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்க தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50 சதவீதம் நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படின், எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் வழங்காமல், நிலங்கள் அரசால் மீளப் பெறப்படுகின்றன.

### 3.6. ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்கள் குறைவாக உள்ளன. அரசு நிலங்களைத் தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு ஒப்படை செய்தல் மூலமும் மற்றும் இதர வளர்ச்சி திட்டங்களுக்காகவும், பொது நோக்கங்களுக்காக அளிப்பதன் மூலமும் அவை நன்கு பயன்பட வேண்டும். எனவே, அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

பொது நோக்கங்களுக்கு என குறிப்பாக குறிக்கப்படாத அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள், ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்புகளின் தன்மைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் வரன்முறைப்படுத்தப்படுவதற்கு தகுதியுடையவை ஆகின்றன. நீர்ப்பிடிப்பு, நீர்வழிப்புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோயில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை எனக் கருதப் படுவதால் அவை அகற்றப்பட வேண்டும். வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், முறையற்ற ஆக்கிரமிப்புகளை, ஆக்கிரமணச் சட்டம் 1905 இன்படி முன் அறிவிப்பு அளித்த பின், அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும் பின்வரும் அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு மாவட்ட அளவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஆட்சித் தலைவர் .. தலைவர்
2. மாவட்ட அளவிலான காவல் துறை அதிகாரி .. உறுப்பினர்
3. பொதுப் பணித் துறையின் மாவட்ட அளவிலான நீர்வள ஆதார செயற்பொறியாளர் .. உறுப்பினர்
4. நெடுஞ்சாலைத் துறையின் கோட்டப் பொறியாளர் .. உறுப்பினர்
5. வனத் துறையின் மாவட்ட வன அலுவலர் .. உறுப்பினர்
6. மாவட்ட வருவாய் அலுவலர் .. உறுப்பினர் செயலாளர்
7. ஊரக வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் .. உறுப்பினர்
8. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் .. உறுப்பினர்
9. நகராட்சி நிர்வாகத் துறையின் மண்டல இயக்குநர் .. உறுப்பினர்
10. மாநகராட்சியின் ஆணையர் .. உறுப்பினர்





11. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் (அ) அவரது சார்பாளர்.. உறுப்பினர்

மாவட்ட அளவிலான இக்குழு, மாதம் ஒரு முறை கூடி, ஆக்கிரமணங்களை அகற்றுவது குறித்த செயல் திட்டத்தை வகுக்கும். இக்குழுவின் செயல்பாடுகளை மாநில அளவில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மாதந்தோறும் ஆய்வு செய்கிறார்.

## 3.7 மரப்பட்டா திட்டம்

2-சி பட்டா என வழங்கப்படும் மரப்பட்டா வழங்கும் திட்டம் மாநிலத்தில் பல்லாண்டுகளாக செயலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் மரங்களின் இதர பயன்படும் பொருள்கள் ஆகியவற்றின் பலன்களைப் பயன்படுத்தும் உரிமை அருகில் உள்ள நில உடைமையாளருக்கோ அல்லது அம்மரங்களைப் பராமரிக்கக்கூடிய பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும் அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் நிற்கும் மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப்பட்டா வழங்குவதில், ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

## 3.8 நில எடுப்பு

மைய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்காக 1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் (மையச் சட்டம் 1/1894) நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நில எடுப்புச் சட்டத்தின் சாதாரண பிரிவின்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயல்முறைகளை முழுமையாக முடிப்பதற்கு மூன்று ஆண்டு காலம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவசரப் பிரிவின்கீழ் நிலத்திட்ட விவர அட்டவணை பெறப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் நிலத்தைக் கையகப்படுத்த இயலும், நில எடுப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்க கால வரைமுறைகளை நிர்ணயித்து திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்திமுறைப் படிவம் (பெர்ட் சார்ட்) அறிமுகப்படுத்தப்பட்டது.

### நில மதிப்பீட்டுத் தொகை வரையறை உயர்வு

நில மதிப்பீட்டுத் தொகை வழங்கும் வரையறை பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| வ. எண் | அலுவலர்கள் | தற்போதுள்ள நிதிவரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர்/சிறப்பு வட்டாட்சியர் | ரூ.2,50,000/— வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| 2 | கோட்டாட்சியர்/துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் | ரூ.2,50,000/— (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்)—க்கு மேல் ரூ.7,50,000/— (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வரை |
| 3 | மாவட்ட ஆட்சியர்/கூடுதல் மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.7,50,000/— (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்)—க்கு மேல் 20,00,000/— (ரூபாய் இருபது இலட்சம்) வரை |
| 4 | சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் | ரூ.20,00,000/— (ரூபாய் இருபது இலட்சம்) —க்கு மேல் |

**மாவட்ட மற்றும் மாநில அளவிலான குழுக்கள்**

21-9-95 நாளிட்ட வருவாய்த் துறை அரசு ஆணை(நிலை) எண் 885-ல் தனியார் பேச்சுவார்த்தை மூலம் நிலங்களைக் கையகப்படுத்துவற்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான குழுவும் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் தலைமையின்கீழ் மாநில அளவிலான குழுவும் அமைக்கப்பட்டது. நில எடுப்புச் சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்தாமல் தனியார் பேச்சுவார்த்தை மூலம் இருபது இலட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள நிலங்களை நில உடமைதாரர்களிடமிருந்து வாங்குவதற்கு மாவட்ட அளவிலான குழுவிற்கு அதிகாரம் உண்டு. இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. மாவட்ட மற்றும் மாநிலக் குழுக்களுக்கு நிலத்தின் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது குறைவோ அதில் 150 சதவீதம் விலையை ஒப்புக்கொள்ளப்பட்ட விலையாக ஏற்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**தொழில் துறை நோக்கங்களுக்கான நிலங்கள் கையகப்படுத்தல் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)**

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாக கையகப்படுத்தும் பொருட்டு, தொழில் துறை நோக்கங்களுக்காக



நிலங்களை கையகப்படுத்தும் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999) அரசால் தனியாக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும் மற்றும் இச்சட்டத்திற்கான விதிகளும் 21-9-2001 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

## அத்தியாயம் – 4

## நில அளவை, நிலப் பதிவுருக்கள் மற்றும் பராமரித்தல்

### வேளாண்மை சீர்திருத்தம் அறிமுகப்படுத்துதலும், இடைத் தரகர்களை ஒழித்து ரயத்துவாரியாக மாற்றலும்

சுதந்திரத்திற்கு முன்பு ஜமீன் கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து ஜமீன்தாரர் வரி வசூல் செய்து கணிசமான தொகையை நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவுக்கு வைத்துக் கொண்டு பாக்கித் தொகையை அரசுக்கு செலுத்தி வந்தனர்.

சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து பல சட்டங்கள் இயற்றப்பட்டன. வேளாண்மை சீர்திருத்தத்தினைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட அனைத்துச் சட்டங்களின் தொடர்பான பணிகள் கூடலூர் ஜென்மம் நிலங்கள் தவிர அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்கள் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய கூடலூர் ஜென்மம் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/69) பொருந்தாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் [illegible] செய்யப்பட்டன. அவர்களில் சிலர் உச்ச நீதிமன்றத்தில் [illegible] செய்தனர். உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் நிலங்கள் [illegible] யாணை விதித்து உத்தரவு பிறப்பித்தது. மனுதாரர் [illegible] சிவில் மற்றும் ரிட் மேல்முறையீடுகளில் அரசு தக்க [illegible] பிக்க வேண்டி தங்களது மேல்முறையீடுகளைத் [illegible] பெறுவதாகக் கேட்டதின்படி, கோரிக்கைகளை ஏற்று அவர்களது மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்து மனுக்களில் பிரிவு 9 அல்லது ரன்கீழ் தக்க ஆணை பிறப்பிக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் 24/69 அரசியல் [illegible] 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது செல்லத்தக்கதா என்ற கேள்வி எழுப்பியதையடுத்து இவ்வழக்கை விசாரிக்க ஒன்பது

நீதிபதிகள் உள்ளடக்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தடையாணை நீக்கம் செய்யப்பட்ட இனங்களில் தகுந்த ஆணை பிறப்பிக்க அரசாணை எண் 3763, பொதுத் துறை, நாள் 5-9-2001 இல் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு நிலவரித் திட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அளவைப் பணி நடைபெறுகிறது. சட்டபூர்வ விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளன.

## நில உரிமைப் பதிவேடு திட்டம்

1983ஆம் ஆண்டு தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு சட்டத்தின்படி நில உடைமைதாரர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் முதற்கட்டமாக வேலூர், தஞ்சாவூர், கரூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தேனி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டு பட்டாதாரர்கள் அனைவருக்கும் நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்பட்டது. பின் மற்ற 20 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் கணினி மூலம் பதிவுகள் மேற்கொண்டு வழங்க முடிவு செய்து ரூ.18.93 கோடி ஒதுக்கீடு செய்து, ரூ.10.00 இலட்சம் பதிவேடு அச்சடிக்க நிதி விடுவிக்கப்பட்டது. நிலப் பதிவுருக்களைக் கணினிமயமாக்கும் (தமிழ் நிலம்) திட்டத்தின்கீழ் 'அ' பதிவேடு மற்றும் 10(i) சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், 1-10-2003 முதல் கையினால் எழுதப்பட்ட நிலப் பதிவுருக்கள் வழங்குவது அரசினால் தடை செய்யப்பட்டு, கணினி மூலம் வழங்கப்படும் நிலப் பதிவுருக்களே பயன்படுத்தவேண்டுமென ஆணையிடப்பட்டது. கணினி மயமாக்கப்பட்ட கணினி மூலம் வழங்கப்படும் நிலப் பதிவுருக்கள் உடன் இயற்காற்றல் (Dynamic) வாய்ந்ததாகவும், ஆக்க உரிமைச் சான்றளிக்கத்தக்கதாகவும் (Authenticated) உள்ளதால், இது நில உரிமைப் பதிவேடு திட்டத்தின்கீழ் காணப்படும் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக உள்ளது. மேலும், நில உரிமைப் பதிவேடானது, அசைவற்ற நிலையானதாக (Static) உள்ளது. ஆனால், கணினிமய நிலப் பதிவுருக்கள் வழங்கல் இயற்காற்றல் வாய்ந்ததாக உள்ளது. உடனுக்குடன் நில மாறுதல்களை பதிவு செய்ய இயல்கிறது. எனவே, நில உரிமைப் பதிவேடு திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

## நில அளவைப் பதிவேடுகள் [illegible]

நில அளவைப் பதிவேடுகள் [illegible], நில அளவைப் பணி மற்றும் புலப்படங்கள் தயாரித்தல் [illegible] இத்துறையின் முதன்மைக்



குறிக்கோளாகும். மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்களில் அளவைப் பணி மேற்கொள்ளுதல் பொதுமக்கள் தங்கள் நில உடைமை குறித்த புல எல்லைகளைத் தெரிந்துகொள்ளச் செய்தல் மற்றும் பொதுமக்கள் உடைமைகளை சரிசெய்தல் ஆகியவை இத்துறையினரால் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கிராம வரைபடங்கள், புல வரைபடங்கள், வார்டு மற்றும் பிளாக் வரைபடங்கள், நிலப் பதிவேடுகள் ஆகியவை இத்துறையில் தயாரிக்கப்படுகின்றன. நிலப் பதிவுருக்களை சரிவர பேணிக்காத்தலும் இத்துறையின் கடமையாகும்.

## நத்தம் நில அளவை

பொதுமக்கள் அனுபவத்தில் உள்ள நத்தம் பகுதிக்கு சட்டப்பூர்வமான உரிமைகள் உள்ளன. நத்தம் புறம்போக்கில் அனுபவபூர்வமான உட்பிரிவுகள் ஏதும் செய்யப்படாமல் இருந்தது. எனவே, கிராம நத்தம் பகுதிகளுக்கும் விவசாய நிலங்கள் விவசாயத்திற்குட்படாமல் பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட நிலங்கள் அனைத்தும் விரிவாக நில அளவை மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள 206 வட்டங்களில் 198 வட்டங்கள் நத்தம் நில அளவைப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 4,467 ச.கி.மீ.-க்கு நத்தம் அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள 8 வட்டங்களில் தேவைக்கேற்ப நத்தம் நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

| வ. எண் | நத்தம் நில அளவைப் பணி விவரம் | வட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மொத்த வட்டங்கள் | 206 |
| 2 | பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை | 198 |
| 3 | பணி முடிக்கப்பட்டவை | 192 |
| 4 | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 6 |
| 5 | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை | 8 |

[2004 ஜூலை 27

## நகர அளவை

தமிழ்நாட்டில் மொத்தம் 6 மாநகராட்சிகளும், 102 நகராட்சிகளும் உள்ளன. முதலில் 76 நகரங்களில் நகர அளவைப் பணி முடிவு பெற்றது. மீதமுள்ள நகரங்கள் விரிவான நகர அளவைப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே நகர அளவைப் பணி மேற்கொள்ளப்பட்ட நகரங்களில் அப்போதைக்கு இருந்த பகுதிக்கு மட்டும் அளவைப் பணி செய்யப்பட்டன. தற்சமயம் விரிவாக்கம் செய்யப்பட்ட நகரளவையும் சேர்த்து ஏற்கெனவே நகரளவைப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நகரங்களிலும் நகரளவைப் பணி தொடங்கப்பட்டது. 29 மாவட்டங்களில் உள்ள 85 நகரங்களும், 6 மாநகராட்சிகளும் நகரளவைப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் சுமார் 1,765 ச.கி.மீ பரப்பளவிற்கான பணி முடிவு பெற்றுள்ளது.

| வ.எண் | நகர நில அளவைப் பணி விவரம் | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1 | மொத்த வட்டங்கள் | 102 | 6 |
| 2 | பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை | 85 | 6 |
| 3 | பணி முடிக்கப்பட்டவை | 81 | 4 |
| 4 | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 4 | 2 |
| 5 | பணிக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டியவை | 17 | — |

## மலைக் கிராம அளவை

1899-1910 வரை பல்வேறு நடைமுறைகளின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மலைக் கிராம அளவை, தற்போது பயனற்றும் பதிவேடுகள் உபயோகப்படுத்த இயலாத நிலையிலும் இருந்ததால், பதிவேடுகளை இன்றைய தேதிக்கு சரியாக பராமரிக்கும் பொருட்டும், மலைவாழ் பகுதிகளில் நில உடைமைதாரர்களின் நன்மையைக் கருதியும், மலைக் கிராம அளவை 66 மலைக் கிராமங்களில் உள்ளடக்கிய 6 மலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலைக் கிராம அளவை, 66 மலைக் கிராமங்களை உள்ளடக்கிய 6 மலைகளில் மேற்கொள்ளப்பட்டு அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



2004 ஜூலை 27]

| | |
|---|---|
| 1. வேலூர் | 1. ஏலகிரி மலை<br>2.ஜவ்வாது மலை |
| 2. திருவண்ணாமலை | 2. ஜவ்வாது மலை |
| 3. திருச்சிராப்பள்ளி | 3. பச்சமலை |
| 4. சேலம் | 4 அருநூத்து மலை |
| 5. நாமக்கல் | 5. கொல்லிமலை |
| 6. கோயம்புத்தூர் | 6. ஆனைமலை |

சுமார் 858 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு அளவை செய்யப்பட்டுள்ளது.

## வருவாய் பதிவுகள், பதிவேடுகள் பராமரித்தல்

பொதுமக்கள் தங்கள் உடைமை குறித்த புல எல்லைகளை தெரிந்து கொள்ள செய்வது, பொதுமக்கள் உடைமைகளை வருவாய் கணக்குகளில் பதிவு செய்து கொடுப்பது, பாகப்பிரிவினை ஏற்படும்போது அதற்கேற்ப கணக்குகளில் மாறுதல்களை பதிந்து கொள்வது மற்றும் உரிய கட்டணத் தொகை வசூலித்து புலப்பட நகல் வழங்குவது ஆகிய பணிகளை வட்ட அலுவலகங்களில் உள்ள நில அளவைப் பணியாளர்கள் மூலம் இத்துறை செய்து வருகிறது.

மாநில அளவில் இத்துறையின்கீழ் 29 மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் சென்னையில் ஒரு மத்திய நில அளவை அலுவலகம் இயங்கி வருகிறது. பொதுமக்களுக்குத் தேவையான தகவல்கள் மாவட்ட நில அளவை அலுவலகத்தின் மூலம் தேவைப்படும்போது வழங்கப்படுகின்றன. இதுதவிர கிராம வரைபடங்கள், வட்ட வரைபடங்கள், மாவட்ட வரைபடங்கள், சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப்பாதை காட்டும் வரைபடங்கள் ஆகியவை குறைந்த கட்டணத்தில், சென்னையில் உள்ள மத்திய நில அளவை அலுவலகத்தில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## அச்சக வசதிகள்

சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில், உள்ள அச்சகத்தில் கருப்பு, வெள்ளை மற்றும் ஆறு வண்ணங்களில் வரைபடங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 27

கணினி வரைபட மையத்தில் கிராம வரைபடத்தின் பிரதி (ஸ்கேன்) எடுத்து சேமித்தல் போன்ற இதரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நில அளவை ஆவணங்களை கணினிமயமாக்குதல்**

நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம் (தமிழ் நிலம்) மத்திய அரசின் 100 சதவீத நிதி உதவியுடன் வருவாய்த் துறையில் 1991 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 'அ' பதிவேடு, சிட்டா பதிவுகள் மற்றும் அடங்கல் பதிவுகள் கணினி மயமாக்கப்படுவது முக்கிய குறிக்கோளாகும்.

நில அளவை ஆவணங்களை பொது மக்களுக்கு வழங்கவும், வேறு பிற கீழ்க்கண்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தவும் நில அளவை ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன:

- பதிவுகளை விரைவாக மாற்றியமைத்து சரிசெய்தல்
- நிலத் தகராறுகளை குறைப்பதற்காக திருத்த இயலாத பதிவுகளை மேற்கொள்ளுதல்
- எளிதான முறையில் நிலப் பதிவுகளை பார்வையிட ஏதுவாக அமைத்தல்
- பொதுமக்களுக்கு உடனடியாக நில அளவை ஆவண நகல்களை வழங்க வகை செய்தல்
- நில விவரங்களை விரிவாக்கம் செய்தல்
- விவசாய கணக்கெடுப்பிற்கு உதவியாக புள்ளி விவரங்கள் கொடுத்தல்.
- எளிதான முறையில் தகவல் பெறவும், தேவையான தகவல்களை திரும்ப எடுக்கவும் மற்றும் திட்ட செயல்பாட்டை மேம்படுத்தவும் பூகோள ரீதியான தகவல்களுடன் இணைத்தல்
- ஊழலை குறைத்தல்
- பொது மக்கள் நேரடியாக தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக அளித்தல்



2004 ஜூலை 27]

இத்திட்டத்திற்கு முழுமையாக மத்திய அரசு நிதி உதவி செய்கிறது.

இம்மாநிலத்தில் உள்ள 206 வட்டங்களில் 201 வட்டங்கள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு (On-line) நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. கைப்பிரதி வழங்குதலை அரசு தடை செய்து, கணினி மூலம் வழங்கப்படும் நில அளவை ஆவண நகல்கள் மட்டுமே செல்லுபடி ஆகும் என அரசு அறிவிப்பு செய்துள்ளது. தொடுதிரைக் கணினி மூலமாக நில அளவை ஆவணங்கள் வழங்கப்பட்ட வகையில் 30-04-2004 முடிய ரூ.2.65 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அடங்கல் பதிவுகள்**

'அ' பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவற்றை கணினிமயமாக்கும் திட்டத்துடன் அடங்கல் பதிவேட்டினையும் கணினிமயமாக்க மத்திய அரசு ரூ.244.15 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

**தொடுதிரை தகவல் மேடை**

நிலப் பதிவேடுகளை கணினிமயமாக்குவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதன் திறனை மேம்படுத்தி மக்களுக்கு எளிதான முறையில் பயன்படும் வகையில் செயல்படுத்த தொடுதிரை கணினி தகவல் மேடை நிறுவ அரசு உத்தேசித்தது. முதல் கட்டமாக இத்தொடுதிரை கணினி 29 மாதிரி வட்டங்களில் நிறுவப்பட்டது. 15-04-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் தொடுதிரை தகவல்மேடை தொடங்கி வைக்கப்பட்டது. இதேபோன்று ஏனைய 28 மாதிரி வட்டங்களிலும் 15-04-2002 முதல் தொடுதிரை கணினி தகவல் மேடைகள் செயல்பட்டு வருகின்றன.

இதன் மூலம் பொது மக்கள் பெறும் பயன்கள்:

- நில சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள்
- முதியோர் உதவித் தொகை மற்றும் வரியோர் ஓய்வூதியம் போன்ற தகவல்கள்
- நில மதிப்பீடு தகவல்கள்
- அரசு திட்டங்கள் பற்றிய விவரங்கள்

[2004 ஜூலை 27

இத்திட்டத்தினால் பொதுமக்கள் எளிதாக விவரங்கள் அறிந்து கொள்வதன் மூலம் ஊழல் மற்றும் சிகப்பு நாடா முறை ஆகியவற்றை நீக்க வழிவகை செய்துள்ளது. ரூ.2/-செலுத்தி நில உடைமைதாரர்கள் அவர்களுக்குரிய நிலத்தை பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம். ரூ.20/– செலுத்தி பட்டா நகல்களை பெறலாம். இத்திட்டத்தின் வெற்றி மற்றும் பொதுமக்களின் அமோக ஆதரவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பிற மாவட்டங்களிலும் தொடுதிரை கணினி நிறுவ அரசு ரூ.175.00 இலட்சம் ரூ.100.00 இலட்சம் 2003-2004 நிதி ஆண்டில் பகுதி – II திட்டத்தின் கீழும் ரூ.75.00 இலட்சம் வருவாய் நிர்வாக தலைப்பின் கீழும் ஒதுக்கீடு செய்துள்ளது. ஏனைய வட்டங்களில் தொடுதிரை கணினி நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நிலப் படங்களை கணினிமயமாக்குதல்**

**இத்திட்டத்தின் நோக்கம்**

புலப்படங்களை கணினிமயமாக்குதல் மற்றும் பூகோள ரீதியான விவரங்கள் ஏற்படுத்துதல்.

ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேசன் போன்ற நவீன நில அளவைக் கருவிகளை பயன்படுத்தி நில அளவையினை நவீனப்படுத்துல்.

செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஆகிய 4 வட்டங்களில் புலப்படங்களை கணினிமயமாக்கும் திட்டத்திற்கு மத்திய அரசால் ரூ.124.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 1.22 இலட்சம் நிலப் படங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

இந்த இரு முன்னோடித் திட்டங்களிலும் பயன்படுத்தப்பட்ட மென்பொருள்களை ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு பிற மாவட்டங்களிலும் பொதுவான மென்பொருளை பயன்படுத்த பரிந்துரைத்துள்ளது. இந்தத் திட்டத்தினை இதர வட்டங்களிலும் விரிவுபடுத்த ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையாக செயல்பட்டால் துல்லியமான அளவை மற்றும் எளிதான முறையில் பயன்படுத்துதல் சாத்தியமாகும். இதன் மூலம் நிலம் சம்பந்தப்பட்ட வழக்குகளை நீக்க ஏதுவாக அமையும்.



2004 ஜூலை 27]

**பெரம்பலூர் முன்னோடித் திட்டம்**

கிராம அளவிலிருந்து மாவட்ட அளவில் கணினி மூலம் இணைப்புகளை ஏற்படுத்துவதற்கு ரூ.170.00 இலட்சம் மதிப்பீட்டில் 25 கிராமங்கள், 25 குறுவட்டங்கள், 6 வட்டங்கள், 3 வருவாய்க் கோட்டம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் கணினி மூலமாக இணைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. இதன்மூலம் பதிவுத் துறை, போன்ற பிற துறைகளை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பெரம்பலூர் முன்னோடித் திட்டத்தை அமல்படுத்த முதற்கட்டமாக ரூ.42.11 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 3 சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் ஒரு வட்டம் ஆகியவற்றிற்கு கணினிகள் வழங்கப்பட்டு, சார் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வட்ட அலுவலகங்களை இணைத்து தகவல் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வருவாய் நிர்வாக வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்கள் மேம்படுத்தும் திட்டம்**

மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டத்தின்கீழ் வருவாய் நிர்வாகம் வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்கள் மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் 50:50 விகித அடிப்படையில் நிதி உதவி பெறப்பட்டு வருகிறது. 1989 முதல் இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.1,132.06 இலட்சம் நிதி உதவியாக மாநில அரசு பெற்றுள்ளது. சமீபத்தில் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.103.40 இலட்சம் தொகையும் இதில் அடங்கும். இந்நிதி உபகரணங்கள் வாங்கவும் பயிற்சி உள் அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.901.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**கிராமப் படங்களை ஸ்கேன் செய்தல்**

கிராமப் படங்களை ஸ்கேன் செய்து, அவற்றை கணினி மூலம் வரைவு செய்து பராமரிப்பதற்கான உபகரணங்களை வாங்குவதற்காக மத்திய அரசு ரூ.40.00 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இதற்காக, மாநில அரசு பகுதி II திட்டத்தின்கீழ் 2003–2004 நிதியாண்டில் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 12 மாவட்டங்களின் கிராமப் படங்கள் ஸ்கேன் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 27

**பூகோள ரீதியான அளவை முறை (G.P.S)**

பூகோள ரீதியான விவரங்கள் கணினி முறையில் துல்லியமாக நில அளவை மேற்கொள்ளப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பூகோள ரீதியான விண்கோள் முறை அளவைப் பணிக்காக அரசு ரூ.120.00 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் கணினி மூலமாக வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் துல்லியமான நில அளவை விவரங்கள் கிடைக்க ஏதுவாகும். இந்த முறையில் 5 அணிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. இதற்கான முன்னோடித் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டம் கோனாதி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு நிலஅளவைப் பணி முடிக்கப்பட்டுவிட்டது. சென்னை மாநகரத்தில் உள்ள 7 கிராமங்களில் இத்திட்டத்தின்கீழ் நகரளவைப் பணி நடைபெற்று வருகிறது.

**பயிற்சி**

நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம் சிறப்பாக செயல்பட பணியாளர்களுக்கு கணினி மற்றும் மென்பொருள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பது அத்தியாவசியமாகிறது. வட்டத்திற்கு 40 பணியாளர்கள் வீதம் 8,500 பணியாளர்களுக்கு கணினி பயிற்சி வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக மத்திய அரசு ரூ.68.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி 8,464 பணியாளர்கள் கணினி அடிப்படை பயிற்சியும், 782 பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கணினி பயிற்சியும் தனியார் பயிற்சி நிலையம் மூலமாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தொலை தொடர்பு தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில்கொண்டு பணியாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சி வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக வட்ட அலுவலகங்களில் உள்ள மீதமுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் தொடர் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக்காக மத்திய அரசு ரூ.103.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சி மற்றும் கட்டமைப்பு**

இத்துறையின் கட்டுப்பாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு நிலஅளவைப் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில்



2004 ஜூலை 27]

வருவாய்த் துறை அலுவலர்கள், பயிற்சி துணை ஆட்சியர், பயிற்சி உதவி ஆட்சியர்கள் மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நிலஅளவைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

**நவீன நில அளவை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்**

நவீன தொழிற்நுட்ப கருவிகளைக் கொண்டு நிலஅளவை செய்வதற்கு நிலஅளவைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தால் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சிப் பள்ளி அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தின் குறிக்கோள் பின்வருமாறு:–

- நிலஅளவைப் பயிற்சி வழங்குதல், நிலஅளவை சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- நிலஅளவைத் துறை பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
- நிலஅளவைத் துறையை நவீனமயமாக்க வழிகாட்டுதல்

இந்தப் பயிற்சி நிலையம் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் தலைவராகவும், குழு அலுவலர்கள் 7 நபர்களில் 4 நபர்கள் அரசு அலுவலர்களாகவும், 3 நபர்கள் அண்ணா பல்கலைக் கழகத்திலிருந்தும் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர். அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு பேராசிரியரை சி–ஸ்டார் இயக்குநராக நியமிக்க நிர்வாகக் குழு தேர்வு செய்துள்ளது. மத்திய மாநில அரசு நிதித் திட்டத்தின்கீழ் 50:50 விகிதத்தில் ரூ.250.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிலச் சீர்திருத்தம்**

**மாநிலப் பொது எல்லை**

1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் புனரமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே, புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டதை கூராய்வு செய்ய ஒரு கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டாய்வு நடந்து முடிந்ததும் அதனை சம்பந்தப்பட்ட அண்டை மாநிலங்கள் அங்கீகாரம்

செய்கின்றன. மாநில பொது எல்லையை பராமரிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இக்கூட்டுத் தணிக்கை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பணி முன்னேற்ற விவரமும் கீழ்க்கண்டவாறு கொடுக்கப் பட்டுள்ளது:

தமிழ்நாடு கேரள எல்லை 830.1 கி.மீ.தூரம் கொண்டு 24 பகுதிகளாக அமைந்துள்ளது. 229.4 கி.மீ. தொலைவிற்கு எல்லை அளவைப் பணி முடிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்ட தூய ஆவணங்கள் இரு அரசாலும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 294.7 கி.மீ. நீளமுள்ள ஆவணங்களுக்கு கூராய்வுப் பணி நடைபெற்று வருகிறது. 56.4 கி.மீ. தொலைவுள்ள எல்லைக்கான கூட்டாய்வுப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள 249.6 கி.மீ. தொலைவுள்ள எல்லை கூட்டாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

தமிழ்நாடு – ஆந்திரா – 578.8 கி.மீ.

தமிழ்நாடு – கர்நாடகா – 481.0 கி.மீ.

மேற்கண்ட இரு மாநிலங்களின் எல்லை தொடர்பான கூட்டாய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அரசுகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

பாண்டிச்சேரி மாநில எல்லை 358.8 கி.மீ. நீளமுள்ளது. இதில் 268.4 கி.மீ. நீளத்திற்கு முடிவ்வடைந்து. மீதமுள்ள எல்லையில் பணி ஆரம்பிக்கப்படும் நிலையில் உள்ளது.

## அத்தியாயம் –5

### 5.1 நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிட நில உடைமைக்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும் நோக்கத்திற்காக 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில



உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

ஆரம்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 30 தர ஏக்கரும் (Standard acre) ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கரும், ஆனால் ஒரு குடும்பத்திற்கு மொத்தம் 60 தர ஏக்கர் என உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டது. மேலும் குடும்பத்தின் பெண் உறுப்பினர்களுக்கு 10 தர ஏக்கர் சீதன நிலம் உச்சவரம்பு அளிக்கப்பட்டது. இந்தச் சட்டம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டும், முன்னர் அளிக்கப்பட்ட உச்சவரம்பு பகுதிகள் மற்றும் விதிவிலக்குகள் இரத்து செய்யப்பட்டும், இன்றைய தேதியில் பின்வருமாறு உச்சவரம்பு அமலில் உள்ளது:

| | | |
|---|---|---|
| 1 | ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு | 15 தர ஏக்கர் |
| i | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| ii | மொத்த உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |
| 2 | 1.3.72ல் இருந்த நம்பகங்களுக்கு (Trusts) | 5 தர ஏக்கர் |
| 3 | 1.3.72க்கு பிறகு எந்த நம்பகமும் விவசாய நிலங்கள் பெறுவதற்கு தடை செய்யப் பட்டுள்ளது | |

உச்சவரம்பிற்கு மிகையான நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டு, 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்படி முன்னுரிமை நிர்ணயிக்கப்பட்டு தகுதியுடைய நிலமற்ற ஏழைகளுக்கு அதிகபட்சம் 3 ஏக்கர் புன்செய் அல்லது 1.5 ஏக்கர் நன்செய் என்ற அளவில் ஒப்படை செய்யப்படுகிறது.

மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விவரம், அதில் ஒப்படை செய்யப்பட்டது. பயனாளிகளின் எண்ணிக்கை, ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினைச் சார்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 31-3-2004 வரையில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு மற்றும் ஒப்படை வழங்கப்படவுள்ள மீதமுள்ள நிலப்பரப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

[2004 ஜூலை 27

**மிகை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்**

| ஆண்டு | உபரியாக அறிவிக்கப்பட்ட நிலம் | ஒப்படை செய்யப்பட்ட நிலம் | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ஏக்கரில்) | | |
| 1961-1970 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971-1980 | 1,08,132 | 70,730 | 51,244 |
| 1981-1990 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991-1996 | 15,093 | 34,953 | 21,297 |
| 1997-2000 | 6,552 | 8,824 | 7,098 |
| 2000-2001 | 604 | 1,635 | 1,236 |
| 2001-2002 | 677 | 1,612 | 1,336 |
| 2002-2003 | 1,432 | 1,887 | 1,548 |
| 1-4-03-31-3-04 | 2,144 | 1,768 | 1,442 |
| மொத்தம் | 2,04,496 | 1,95,130 | (*) 1,46,673 |

(*) 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13 இன்கீழ் பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலமும் அடங்கியது.

**உபரி நிலம் ஒப்படைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையை குறிக்கும் விவரப்பட்டியல்**

| பயனடைந்தோர் (இன வாரியாக) | நபர்கள் | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 65,198 | 69,743 |
| பழங்குடியினர் | 205 | 275 |
| மற்றவர்கள் | 81,270 | 1,14,927 |
| மொத்தம் | 1,46,678 | 1,84,945 |



2004 ஜூலை 27]

**ஒப்படை வழங்கப்படவேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட நிலப்பரப்புகளைக் காண்பிக்கும் விவரப்பட்டியல்:**

| | | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு | 2,04,495 |
| 2. | நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு | 1,84,945 |
| 3. | நிலுவை | 19,550 |
| 4. | உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம், தனி மேல்முறையீட்டாயம், நில ஆணையர், நிலத்தீர்ப்பாயம் மற்றும் சார் நீதிமன்றங்க்ள் ஆகியவை பிறப்பித்துள்ள தடையாணைக்குட்பட்ட பரப்பு | (*) 8,663 |
| 5. | மீதி | 10,887 |
| 6. | 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளில் விதி 13இன் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 10,185 |
| 7. | ஒப்படை செய்யப்பட வேண்டிய பரப்பு | 702 |

(*) நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம்:

| வரிசை எண் | நீதிமன்றங்களின் பெயர் | நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஏக்கர்) |
|---|---|---|---|
| 1. | உச்ச நீதிமன்றம் | 7 | 695 |
| 2. | உயர் நீதிமன்றம் | 112 | 6,295 |
| 3. | நில ஆணையர் | 8 | 138 |
| 4. | நிலத் தீர்ப்பாயம் | 21 | 282 |
| 5. | மற்ற சிவில் நீதிமன்றங்கள் | 25 | 1,253 |
| | மொத்தம் | 173 | 8,663 |

[2004 ஜூலை 27

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின்கீழ் அரசு கையகப்படுத்தும் மிகை நிலங்கள், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிலமற்ற ஏழை மக்களுக்கு ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன.

2003–2004 ஆம் நிதியாண்டில் 1,500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதில் 31-3-2004 வரை 1,442 நபர்களுக்கு 1,768 ஏக்கர் மிகை நிலங்கள் கீழ்க்கண்டவாறு ஒப்படை செய்யப்பட்டுள்ளன:

| | | பயனாளிகளின் எண்ணிக்கை | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் | 521 | 569 |
| 2 | பழங்குடியினர் | - | - |
| 3 | மற்றவர்கள் | 921 | 1,199 |
| | மொத்தம் | 1,442 | 1,768 |

## 5.2 குடிவாரச் சட்டங்கள்

### 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/55)

இச்சட்டம், குத்தகைதாரர்களின் குத்தகை பாக்கி நிலுவை தவிர வேறு காரணங்களுக்காக அவர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத், தடை செய்து பாதுகாப்பு அளிக்கிறது. 'வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படும்பொழுது, குத்தகை பாக்கித் தொகையை வசூலிப்பதை தள்ளி வைத்து தனிச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு அவ்வப்பொழுது நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் தற்போது ஆண்டொன்றிற்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலச்சொந்தக்காரருக்கோ அல்லது நம்பகங்களுக்கோ (Trusts) பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்படவேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையைப் பணமாகவோ விளை பொருளாகவோ



செலுத்தலாம். ஆனால் நில உரிமையாளர்கள்/நம்பகங்கள் செலுத்த வேண்டிய நிலவரி தவிர, பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61)

இச்சட்டத்தில் நம்பகங்கள் (Trusts) தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளவும், அதற்கு மேலுள்ள நிலத்தைக் கட்டாயமாக பிறருக்குக் குத்தகைக்கு விடவும் வகை செய்யப்பட்டுள்ளது. குடிவாரச் சட்டங்களின்கீழ் 31-3-2004 வரை நிலுவையில் உள்ள நேர்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

**குடிவாரச் சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரப் பட்டியல்**

| வரிசை எண் | சட்டத்தின் பெயர் | நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு பயிரிடும் குத்தகை தாரர்கள் பாதுகாப்பு சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம், 25/55) | 1,234 |
| 2. | தமிழ்நாடு பொது நம்பகங்கள் (Trusts) (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம், 57/61) | 9,912 |
| 3. | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம், 24/56) | 439 |

[2004 ஜூலை 27

## 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69)

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதிய விகிதங்கள் பின்வருமாறு:-

| விவசாயத் தொழிலாளர் வகை | குறைந்தபட்ச ஊதியம் |
|---|---|
| 1. தங்கள் சொந்த ஏர் மாட்டோடு உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ. 100/— |
| 2. தங்கள் சொந்த ஏர் மாடு இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ. 54/— |
| 3. நெல் அறுவடை, கதிர் அறுப்பு, களத்திற்கு எடுத்துச்சென்று கதிர் அடித்தல், அவற்றை அளந்து மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணியில் ஈடுபடும் தொழிலாளர் | நாள் ஒன்றிற்கு 6 மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ. 54/— நாள் ஒன்றிற்கு 5 மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ. 45/— அல்லது மொத்த விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி அவற்றில் எது அதிகமோ அது |
| 4. நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்கள்/இதர விவசாயப் பணிகளில் ஈடுபடுவோர் | நாள் ஒன்றிற்கு 6 மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ. 54/— நாள் ஒன்றிற்கு 5 மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ. 45/— |

## 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/69)

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க தங்களைக் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. வருவாய் வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாக செயல்படுவர். அவர்களுக்கு உதவி புரிய



2004 ஜூலை 27]

அலுவல் சார்பற்றவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் 31-3-2004 வரை குத்தகைதாரர்களாகப் பதிவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

## 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 10/69) குத்தகைதாரர்களாகப் பதிவு செய்துகொண்ட நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்:-

| வரிசை எண் | இனம் | குத்தகைதாரர்களாகப் பதியப்பட்டோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் | 1,90,339 |
| 2. | பழங்குடியினர் | 881 |
| 3. | ஏனையோர் | 3,74,542 |
| | மொத்தம் | 5,65,762 |

## 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71)

இச்சட்டத்தில் 19-6-1971 அன்று சொந்த வீட்டுமனை இல்லாத. ஆனால் பிறர் நிலங்களில் குடியிருப்பு அமைத்து அனுபவித்து வருபவர்களுக்குக் குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டத்தின்படி (குடியரசுத் தலைவரின் சட்டம் 38/76) 1-7-1975 இல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின்கீழும் முன்னர் அறிவிக்கப்பட்ட காலவரம்பு 1-4-1998 வரை நீட்டிக்க சட்டம் 39/90 இன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 31-3-2004 வரையில் உடைமை உரிமை வழங்கப்பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:-

[2004 ஜூலை 27

**31–3–2004 ஆம் நாள் வரையில் நில உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்:–**

| இனம் | | நபர்களின் எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | |
| 1. | ஆதிதிராவிடர் | 99,733 | 46 | 922 | 1,00,701 |
| 2. | பழங்குடியினர் | 2,209 | 15 | 342 | 2,566 |
| 3. | ஏனையோர் | 79,130 | 351 | 243 | 79,724 |
| | மொத்தம் | 1,81,072 | 412 | 1,507 | 1,82,991 |

மேலே உள்ள சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:–

சட்டம் 40/71 – 538

சட்டம் 38/76 – ..

சட்டம் 39/90 – ..

மொத்தம் 538 நேர்வுகள்

## 5.3 நிலத் தீர்ப்பாயங்கள்

சார்பு நீதிமன்றங்களின் நிலுவையிலுள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை முடிவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டில் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் நிலத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகிறது.

நிலச் சீர்திருத்த வழக்குகளை விசாரிப்பதற்காக 1–11–1990 முதல் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளாக போதுமான பணிகள் இல்லாததால் பணியாளர் மற்றும் செலவின சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் இத் தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் 12–10–2003 பிற்பகலுடன் கலைக்கப்பட்டது. இங்கு நிலுவையில் இருந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன. தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:–



2004 ஜூலை 27]

**தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் முடிக்கப்பட்ட வழக்குகள் விவரப் பட்டியல்**

| வரிசை எண் | விவரம் | வழக்குகள் | பல்வகை மனுக்கள் |
|---|---|---|---|
| 1. | உயர்நீதிமன்றத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்ட மொத்த வழக்குகள் | 856 | 884 |
| 2. | தமிழ்நாடு நிலச் சீர்திருத்தத் தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள் | 839 | 1,975 |
| | மொத்தம் | 1,695 | 2,859 |
| 3. | மாறுதல் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு செய்யப்பட்டவை | 854 | 883 |
| 4. | தமிழ்நாடு நிலச் சீர்திருத்தத் தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் முடிவு செய்யப்பட்டவை. | 774 | 1,930 |
| | மொத்தம் முடிவு செய்யப்பட்டவை | 1,628 | 2,813 |
| | 31–3–2004 இல் நிலுவை | 67 | 46 |

## 5.4. வருவாய் நீதிமன்றங்கள்

தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள் 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணம்) சட்டத்தின்கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராக தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் மேல்முறையீட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு குடிவாரச் சட்டங்களையும் அவர்கள் கவனித்து வருகின்றனர்.

[2004 ஜூலை 27

## 5.5 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

அரசாணை (நிலை) எண் 600, வருவாய்த் (நி.சீ.1(2)) துறை, நாள் 27-11-2000 இல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு அதில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும் மற்றும் 7 அலுவலர்களை அரசு சார்பு உறுப்பினர்களாகவும் நில உரிமையாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சார்பில் தலா 9 பேர் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர். தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் 2001 ஆம் ஆண்டைய தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண் 109, நாள் 9-2-2001 இல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 18 வயதிற்குக் குறையாத 60 வயதிற்கும் மேற்படாத நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் அல்லது 1 ஏக்கர் நன்செய் அல்லது 2 1/2 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு மிகாமல் வைத்திருந்து அதில் நேரடியாக சாகுபடி செய்து வரும் சிறு விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படலாம். இதற்காக அவர்கள் ஒருமுறை ரூ.100/- உறுப்பினர் சந்தா கட்டினால் போதுமானது. இவ்வாறு பதிவு செய்துகொண்ட விவசாயத் தொழிலாளர்கள் கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்தில் மரணம், இயற்கை மரணம் ஆகிய நிகழ்வுகளுக்கு உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் 31-3-2004 வரை 7,32,130 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அவர்களிடமிருந்து பங்களிப்புத் தொகையாக ரூ. 7,32,13,000/- வசூலிக்கப்பட்டுள்ளது.

## 5.6 நகர்ப்புற நில உச்சவரம்பு

1978 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 3-8-1976 முதல் தமிழ்நாட்டில் அமலாக்கம் செய்யப்பட்டு வந்தது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/1999)இன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. அந்நாளில் அரசின் வசம் சுவாதீனம் பெறப்படாமல் இருந்த 1,266.68 ஹெக்டேர் நிலப்பரப்பு மேற்கண்ட நடவடிக்கைகளினின்று விடுவிக்கப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் வைத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மற்றும் முதன்மைச் சட்டப் பிரிவு 21(1)இன்கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீக்கறவுச் சட்டம் பொருந்தாது என நீக்கறவுச் சட்டத்தில்



2004 ஜூலை 27]

காப்புரை வழங்கப்பட்டுள்ளது. விலக்களிப்பில் உள்ள நிபந்தனைகள் எப்பொழுது மீறப்படுகின்றன என்று தெரியவருகிறதோ அப்போது அந்நிலங்களை மீளப்பெறுவதற்கு விலக்களிப்பு பெற்றவர்களுக்கு அறிவிக்கைகள் அனுப்பப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதன்மைச் சட்டத்தின்கீழ் இதுவரை 2472 ஹெக்டேர் மிகை வெற்று நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 98 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. 339 ஹெக்டேர் நிலத்தினை அரசுத் துறை, அரசுக் கழகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. முதன்மைச் சட்டம் அமலில் இருந்த நாள் முதல் சட்டம் நீக்கறவு செய்யப்பட்ட நாள் வரை 1044 நேர்வுகளில் அடங்கிய 3310 ஹெக்டேர் பரப்பளவு நிலத்திற்கு தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காகவும், மருத்துவமனை, திரையரங்கம் போன்ற பொதுக் காரியங்களுக்கு 87 நேர்வுகளில் அடங்கிய 36 ஹெக்டேர் நிலமும், 525 நேர்வுகளில் அடங்கிய 111 ஹெக்டேர் நிலமும் சட்டப் பிரிவு 21(1) (ஏ) மற்றும் 21(1) (பி)இன்கீழ் அரசால் விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க, வேளச்சேரி கிராமத்தில் வெவ்வேறு புல எண்களில் 6 எக்டேர் பரப்பளவு மிகை வெற்று நிலத்தில் திருமயிலை-வேளச்சேரி வரையிலான இரயில்வே விரிவாக்கத் திட்டம் (பகுதி 2) செயல்படுத்த இரயில்வே துறைக்கு முன்னுழைவு அனுமதி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 527 ஹெக்டேர் நிலப் பரப்பு ஆக்கிரமிப்பிலும், 340 ஹெக்டேர் நிலப்பரப்பு மேல்முறையீட்டிலும் உள்ளன. மீதமுள்ள 1168 ஹெக்டேர் நிலப்பரப்பு, அரசாணை எண் 353, வருவாய்த் துறை, நாள் 30-6-2000 இல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி ஒதுக்கீடு செய்வதற்கு அரசின் கைவசமுள்ளது.

## 5.7 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966

அரசிற்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும் மக்கள் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 1-7-1963-இல் அறிமுகம் செய்யப்பட்டது. இது சென்னை நகருக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. பின்னர் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும், சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 1-7-1971 ஆம் தேதிய சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 1-7-1981 முதல் விரிவுபடுத்தப்பட்டது. பின்வரும் நகராட்சிகளும் நகரியங்களும் 1-7-1991 முதல் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன.

**நகராட்சிகள்**

| | | |
|---|---|---|
| மயிலாடுதுறை | வேலூர் | காஞ்சிபுரம் |
| கும்பகோணம் | கடலூர் | உடுமலைப்பேட்டை |
| விழுப்புரம் | பழனி | புதுக்கோட்டை |
| காரைக்குடி | ஈரோடு | இராஜபாளையம் |
| பொள்ளாச்சி | நாமக்கல் | தஞ்சாவூர் |
| உதகமண்டலம் | திருப்பூர் | திண்டுக்கல் |
| தூத்துக்குடி | கரூர் | நாகர்கோவில் |
| மேட்டூர் | | |
| கொடைக்கானல் | | |

இந்த எல்லா பகுதிகளுக்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்பட்டது.

**வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:**

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்திற்கும் | | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள அனைத்தும் நிலங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1. | முதல் இரண்டு மனைகள் | வரியில்லை | 1 | முதல் மூன்று மனைகள் | வரியில்லை |
| 2. | இரண்டு மனைக்குமேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2 | மூன்று மனைக்கு மேல் 7 மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3 | 7 மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4. | பத்துமனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4 | பத்துமனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5 | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |



நகர்ப்புற நில வரி செலுத்துபவர்களின் பெயர்கள், நிலுவையாக உள்ள தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தின் பிரிவு 29 இன்கீழ் வரி விதிப்பினின்றும் பின்வரும் வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன:

1. மத்திய மாநில அரசு அலுவலகங்கள்
2. பொது வழிபாட்டுக்கான நிலங்கள்
3. மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்
4. மயான பூமி நிலங்கள்
5. சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்
6. தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்
7. பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்
8. ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்

விவசாயத்திற்குப் பயன்படும் நிலங்கள், நகர்ப்புற நிலவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படுகின்றன. தர்ம மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அதிகமான சிரமம் இருப்பின் பிரிவு 27 (1)ன்கீழ் அரசு வரி விலக்கு அளிக்கிறது.

பின்வரும் அமைப்புகளுக்கும் அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது:

(அ) திரைக்காட்சி தயாரிக்கும் அரங்குகள், களியாட்ட சங்கங்கள், சமுதாய பொழுதுபோக்கும் மையங்கள் ஆகியவற்றினை கொண்டுள்ள நகர்ப்புற நிலங்களில் கட்டடம் கட்டப்பட்டுள்ள பகுதி மற்றும் காலி நிலத்திற்கு வரிவிதிப்பினின்று 50 சதவீதம் வரிச் சலுகை

(ஆ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீதம் சலுகை.

(இ) சங்கீதம், நாட்டியம் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் சபைகளுக்கு 50 சதவீதம் வரிச் சலுகை

(ஈ) திரையரங்குகளுக்கு 10 சதவீதம் வரிச் சலுகை

(உ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழு வரிச் சலுகை

(ஊ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால் நகர்ப்புற நில வரியில் 50 சதவீதம் வரிச் சலுகை தரப்படுகிறது.

நகர்ப்புற நில வரி மதிப்பீடு மற்றும் வரியை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாக தீர்வு செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளையே நகர்ப்புற நில வரி தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சென்னை–5 சேப்பாக்கத்தில் உள்ள நிலச்சீர்திருத்த துறையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (நிலத்தீர்ப்பாயம்) தீர்ப்பாய நீதிபதியாக செயல்படுகிறார்.

**நகர்ப்புற நில வரி**

நகர்ப்புற நில வரித் துறை முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் ஆகியோரின் நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புற நில வரி சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், அலுவல் முறையால் இணை ஆணையராகவும் செயல்படுகிறார். நகர்ப்புற நில வரிச் சட்ட விதிமுறைகளை செயல்படுத்த சென்னை நகரம், சென்னை புறநகர் மற்றும் கோயம்புத்தூர் நகர்ப் பகுதிகளில் 5 உதவி ஆணையர்கள் பணிபுரிகின்றனர். இதரப் பகுதிகளில் நகர்ப்புற நில வரிச் சட்ட விதிமுறை அமல்படுத்தும் பணி மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு நிலச்சீர்திருத்த உதவி ஆணையர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற நில வரி வசூல், அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மேற்பார்வையில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் நகர்ப்புற நில வரி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு அவர்கள் நகர்ப்புற நில வரியை வசூல் செய்து வருகிறார்கள். வரி வசூல் பணி முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரால், காலமுறையாக மாவட்ட வருவாய் அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்படுகிறது.



30–11–2003 நாள் நிலவரப்படி 1,66,952 வரி விதிப்பு நேர்வுகளில் ரூ.30.42 கோடி நகர்ப்புற நில வரி விதிக்கப்பட்டுள்ளது. 31–3–2004 வரையிலான நகர்ப்புற நில வரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

**நகர்ப்புற நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரப் பட்டியல்**

| வ. எண் | மாவட்டம் | கேட்பு | வழக்க சீராய்வு மனுக் களில் உள்ள தொகை | 1.4.2003 முதல் 31.3.2004 வரை | நிலுவை 1.4.2004 இன்படி |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | சென்னை | 3854.52 | 1291.00 | 451.93 | 2111.59 |
| 2 | கோயம்புத்தூர் | 902.52 | 140.89 | 206.16 | 555.57 |
| 3 | கடலூர் | 73.88 | 20.84 | 12.31 | 40.73 |
| 4 | திண்டுக்கல் | 207.36 | 165.84 | 19.50 | 22.02 |
| 5. | ஈரோடு | 117.27 | 80.81 | 10.56 | 25.90 |
| 6. | காஞ்சிபுரம் | 1133.00 | 125.38 | 114.03 | 893.59 |
| 7. | கன்னியாகுமரி | 80.39 | 73.26 | 12.60 | -5.47 |
| 8. | கரூர் | 15.09 | 6.25 | 4.99 | 3.85 |
| 9. | மதுரை | 594.88 | 426.02 | 29.31 | 139.55 |
| 10. | நாகப்பட்டினம் | 7.27 | 0.48 | 4.21 | 22.58 |
| 11. | நாமக்கல் | 35.72 | 5.36 | 3.72 | 26.64 |
| 12. | புதுக்கோட்டை | 9.26 | 0.91 | 3.58 | 4.77 |
| 13. | சேலம் | 240.98 | 28.37 | 29.86 | 182.75 |
| 14. | சிவகங்கை | 18.34 | 1.22 | 4.89 | 12.23 |
| 15 | தஞ்சாவூர் | 45.04 | 21.73 | 19.58 | 3.73 |
| 16. | திருவள்ளூர் | 2028.13 | 247.27 | 281.34 | 1499.52 |
| 17. | திருநெல்வேலி | 190.42 | 104.34 | 12.97 | 73.11 |
| 18. | திருச்சி | 95.36 | 50.59 | 20.08 | 24.69 |
| 19. | தூத்துக்குடி | 89.08 | 68.70 | 18.68 | 2.70 |
| 20. | நீலகிரி | 26.69 | -- | 14.83 | 11.86 |
| 21. | வேலூர் | 139.95 | 51.85 | 22.38 | 65.72 |
| 22. | விழுப்புரம் | 15.95 | 4.81 | 5.14 | 6.00 |
| 23. | விருதுநகர் | 11.35 | 5.09 | 5.77 | 0.49 |
| | மொத்தம் | 9932.45 | 2920.01 | 1308.42 | 5704.02 |

2004 ஜூலை 27 ]

# இணைப்பு - IX

*(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 45-தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

## இந்து சமய அறநிலையத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005

**முகவுரை:**

அ) ஆலயங்களின் பராமரிப்பு அவற்றின் நிர்வாகம் மற்றும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளைகளின் நிர்வாக நெறிமுறை ஆகியவற்றைக் கண்காணிப்பது அரசின் தலையாய கடமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1925 ஆம் ஆண்டிற்கு முன்பு இந்து சமய அறநிலையங்கள் மற்றும் அறக்கொடைகளின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தி கண்காணிக்கும் பொருட்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1925 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டம் -ன்படி ஒரு தலைவரும், அவருடன் இரண்டு முதல் நான்கு ஆணையர்களும் அடங்கிய இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் வாரியம் ஒன்று நிறுவப்பட்டு, இந்து சமய கோயில்கள், மடங்கள் முதலியன கண்காணிக்கப்பட்டன. 1925 ஆம் ஆண்டு மேற்கண்ட சட்டம் நீக்கப்பட்டு, 1927 ஆம் ஆண்டில் பிரிதொரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்பிறகு பல திருத்தச் சட்டங்கள் 1927 முதல் 1951 வரை உருவாயின. 1940-ல் தனி அதிகாரி ஒருவர் ( திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர்) வாரியத்தின் நிர்வாக முறைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி வாரியத்தைச் சீர்படுத்தி அமைக்க நியமிக்கப்பட்டார். அவர் வாரியத்திற்குப் பதிலாக அரசே இந்து சமயம் மற்றும் அறக்கொடைகளை நிருவகிக்கலாம் என கருத்து தெரிவித்தார். இந்நிர்வாகம் மேலும் சீரான முறையில் செயல்படுவதற்கும் அதன் நிதியைப் பெருக்குவதற்கும் எவ்விதம் திருத்தி அமைக்கலாம் என்று பரிந்துரை செய்ய 1942-ல் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ப. வெங்கட்ரமணராவ் நாயுடு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவும் பல பரிந்துரைகளில் ஒன்றாக, இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் வாரிய நிருவாகத்தினை மாற்றி மாநில அரசு நிருவாகத் துறையாக அமைத்தல் நல்லது என்று

பரிந்துரை செய்தது. இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டும் அன்று வரை செயலில் இருந்த பல்வேறு சட்டங்களைத் தொகுத்தும் ஒரு தொகுப்புச் சட்டத்தை 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இயற்றியது. மேலும், இச்சட்டம் விரிவாக திருத்தி அமைக்கப்பட்டு, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டமாக வெளியிடப்பட்டு 1960 ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் ஒன்றாம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆ) திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்கள் ஆகியவற்றைச் சீரியமுறையில் நிர்வகிக்க வேண்டும் என்ற நோக்கில் தனிக்கவனம் செலுத்தும் பொருட்டு, இந்து சமய கோயில்கள் மற்றும் சமண சமய கோயில்கள் அறக்கொடைகள் நிறுவனங்கள் ஆகியவற்றை முறையாகப் பேணுவது, பராமரிப்பது தொடர்பாக ஆன்மீக மற்றும் சமயத் தலைவர்களையும் ஈடுபடுத்தி அவர்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்கு 1991 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டு, 1959 ஆம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் பல்வேறு சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்டன.

இ) மேற்கண்ட நடைமுறையின் பலனாக, 1991 ஆம் ஆண்டு சட்டம் (திருத்தச் சட்டம் 46/91) செயலுக்கு வந்தது. இத்திருத்த சட்டத்தின்படி இரண்டு அடுக்கு முறை (அதாவது மாநில அளவில் திருக்கோயில் நிருவாக வாரியம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்டக் குழுக்கள்) கொண்டுவரப்பட்டது. மேற்படி திருத்தச் சட்டம் 13–12–1991 அன்று செயலுக்கு வந்தது.

ஈ) 1996 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசு மேற்கண்ட திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்டக்குழு என்ற அமைப்பினை முடிவுக்குக் கொண்டு வந்து, ஏற்கனவே திருத்தச் சட்டம் 1991–க்கு முன் இருந்த நிலையை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு அதிகார வரம்புகளை நிர்ணயித்து சட்டத் திருத்தம் செய்தது. 1996 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 39/1996) இயற்றப்பட்டு 9–12–1996 முதல் செயலுக்கு வந்தது.

## 1. அறநிலையங்களின் எண்ணிக்கை

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தமிழகம் முழுவதுமுள்ள கீழ்க்கண்டவாறான இந்து சமய மற்றும் சமண சமய அறநிலையங்கள் மற்றும் அறக்கொடைகள் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து வருகிறது.





| | |
|---|---|
| 1. திருக்கோயில்கள் | 36,363 |
| 2. மடங்கள் | 56 |
| 3. மடங்களுடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. குறிப்பிட்ட கட்டளைகள் | 1721 |
| 5. அறக்கட்டளைகள் | 189 |
| 6. சமண அறநிறுவனங்கள் | 17 |
| மொத்த நிறுவனங்கள் | 38,403 |

## 2. அறநிறுவனங்களின் வகைப்பாடு

சமய நிறுவனங்கள், அந்நிறுவனங்களின் ஆண்டு வருவாய் அடிப்படையில், பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலில் சேராத நிறுவனங்கள் என இரு வேறு வகைகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

| வ. எண் | வகைப்பாடு | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | **பட்டியலில் சேராத நிறுவனங்கள் :** ரூ.10,000/—க்குக் குறைவாக வருவாய் ஈட்டும் நிறுவனங்களின் எண்ணிக்கை | 34,415 |
| 2. | **பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள்:** அ) வருடாந்திர வருமானம் ரூ.10,000/—க்குக் குறையாமலும் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 3,397 |
| | ஆ) வருடாந்திர வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குக் குறையாமலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 438 |
| | இ) வருடாந்திர வருமானம் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 153 |
| | மொத்தம் | 38,403 |

## 3. நிர்வாகக் கட்டமைப்பு:

அ) ஆணையாளர் இத்துறையின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்குத் தலைவராவார். துறையின் பொது நிர்வாகம், மேற்பார்வை மற்றும் செயல்பாடுகள் அனைத்திற்கும் இவரே பொறுப்பானவர். துறையின் தலைமையிடத்தில் ஆணையருக்கு உதவியாக கீழ்க்கண்ட அலுவலர்கள் இருப்பர்.

1. ஒரு சிறப்புப்பணி அலுவலர் (இ.ஆ.ப.) நிலையில்.
2. ஒரு கூடுதல் ஆணையர்,
3. ஒரு இணை ஆணையர் (தலைமையிடம்)
4. ஒரு இணை ஆணையர்(திருப்பணி)
5. உதவி ஆணையர் நிலையிலான ஆணையரின் நேர்முக உதவியாளர் மற்றும் உதவி ஆணையர் நிலையிலான ஒரு ஆணையரின் கூடுதல் நேர்முக உதவியாளர்.
6. ஒரு உதவி ஆணையர், (சட்டச்சேர்மம்)
7. ஒரு உதவி ஆணையர், (நகைகள் சரிபார்ப்பு) தலைமையிடம். இவர் அன்னதான திட்ட பணிகளின் சிறப்பு அலுவலராகவும் இருந்துவருகிறார்.

மேலும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைப் பராமரிப்பது, நிர்வகிப்பது மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெருக்குவதற்கான முறைகளை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்க ஓர் உயர்நிலைக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை ஒருங்கிணைக்க சிறப்புப் பணி அலுவலர் ஒருவர் இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ளார். இவருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். இது தவிர மூன்று சிறப்பு வட்டாட்சியர்களும் சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டறியத் தேவையான பணியாளர்களுடன் ஒரு சிறப்பு வட்டாட்சியரும் உள்ளனர்.

இதைத்தவிர, 2002ம் ஆண்டில் திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் குடமுழுக்குப் பணிகள் விரைவில் நடைபெறவும்.



நெறிமுறைபடுத்தவும், கண்காணிக்கவும் ஆலோசனைகள் வழங்கவும் ஒரு ஆலோசனைக் குழு அரசால் ஏற்படுத்தப்பட்டு, இப்பணிகள் இதற்கென ஏற்படுத்தப்பட்ட இணை ஆணையர் (திருப்பணி) அவர்களால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

ஆ) மண்டலம் மற்றும் கோட்டம் வாரியாக முறையே 10 இணை ஆணையர்களும், 22 உதவி ஆணையர்களும், திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு ஒரு உதவி ஆணையரும், 9 உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) மற்றும் ஒரு துணை ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு), மேலும் இணை ஆணையர் நிலை முதல் செயல் அலுவலர் நிலை 4 வரை பல்வேறு நிலையில் 629 செயல் அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளைச் செயல்படுத்த உதவுகின்றனர். இதுதவிர பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ஒரு துணை ஆணையர் மற்றும் ஒரு உதவி ஆணையர் நிலையிலான நேர்முக உதவியாளர் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவி புரிகின்றனர்.

இ) சமய நிறுவனங்களின் நகைகள் மற்றும் பொன், வெள்ளி விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றை உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) அவர்தம் தொழில்நுட்பப் பணியாளர்களுடன் மதிப்பீடு செய்கின்றனர்.

ஈ) சமய நிறுவனங்களின் திருப்பணி வேலைகளுக்கான மதிப்பீடு தயார் செய்யவும், திருப்பணி வேலைகளை மேற்பார்வையிடவும் ஆணையருக்கு உதவியாக, ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு செயற் பொறியாளரும் தேவைக்குரிய தொழில்நுட்பப் பணியாளர்களும் உள்ளனர்.

உ) இத்துறையின் வரவு–செலவுத் திட்டம் மற்றும் கணக்கு ஆகியவற்றிற்குக் கருவூல கணக்குத் துறையைச் சேர்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும், அவருக்கு உதவியாக உதவி கணக்கு அலுவலர் ஒருவரும் பொறுப்பு வகிக்கின்றனர்.

ஊ) சமய நிறுவனங்களின் வரவு–செலவுக் கணக்குகளைச் சரிபார்த்து தணிக்கை செய்யும் பொருட்டு போதிய சார்நிலை அலுவலர்களுடன் அரசு நிதித் துறையிலிருந்து துணைச் செயலர் நிலையில் மாற்றுப் பணியில் தலைமைத் தணிக்கை அதிகாரி பணிபுரிந்து வருகிறார்.

எ) முதன் முறையாக மகளிர் உதவி ஆணையர்களாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலமாக 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டனர்.

சென்னை உயர் நீதிமன்றம் ரிட் மனு எண்.21823/2001—ல் 5.6.2002—ல் வழங்கிய உத்தரவு மற்றும் அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில் பெண்களும் திருக்கோயில் செயல் அலுவலராக நியமனம் செய்யப்படலாம் என பணிவிதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாணைக்குப்பின் உதவி ஆணையர் நிலையில் ஒருவரும், துணை ஆணையர் நிலையில் மூன்று மகளிரும் செயல் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 25 மகளிர் தேர்வு செய்யப்பெற்று, அவர்களுள் 23 மகளிர் செயல் அலுவலர்களாக தற்போது பணியாற்றி வருகின்றனர்.

ஏ) இந்து சமய அறநிலையத் துறை மாநில அளவில் 10 மண்டலங்களாகவும் மற்றும் 22 கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு முறையே இணை ஆணையர்களாலும் மற்றும் உதவி ஆணையர்களாலும் கீழ்க்காணும் வகையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | மண்டலங்கள் | வ.எண் | உள்ளடங்கிய கோட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை | 1. | உதவி ஆணையர், சென்னை |
| 2. | இணை ஆணையர், வேலூர் | 2. | உதவி ஆணையர், காஞ்சிபுரம் |
| | | 3. | உதவி ஆணையர், வேலூர் |
| | | 4. | உதவி ஆணையர், திருவண்ணாமலை |
| 3. | இணை ஆணையர், சேலம் | 5. | உதவி ஆணையர், சேலம் |
| | | 6. | உதவி ஆணையர், தருமபுரி |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர் | 7. | உதவி ஆணையர், கோயம்புத்தூர் |
| | | 8. | உதவி ஆணையர், ஈரோடு |
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர் | 9. | உதவி ஆணையர், தஞ்சாவூர் |
| | | 10. | உதவி ஆணையர், நாகப்பட்டினம் |



| | | | |
|---|---|---|---|
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை | 11. | உதவி ஆணையர், கும்பகோணம் |
| | | 12. | உதவி ஆணையர், கடலூர் |
| | | 13. | உதவி ஆணையர், விழுப்புரம் |
| 7. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | 14. | உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி |
| | | 15. | உதவி ஆணையர், அரியலூர் |
| | | 16. | உதவி ஆணையர், புதுக்கோட்டை |
| 8. | இணை ஆணையர், மதுரை | 17. | உதவி ஆணையர், மதுரை |
| 9. | இணை ஆணையர், சிவகங்கை | 18. | உதவி ஆணையர், விருதுநகர் |
| | | 19. | உதவி ஆணையர், பரமக்குடி |

ஐ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, ஆணையர் மற்றும் 52 வகைகளடங்கிய மொத்தம் 2356 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

### 4. சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிர்வாகம்

திருக்கோயில்கள் அவற்றின் முக்கியத்துவம், வருமானம், அவற்றிற்குச் சொந்தமாக உள்ள சொத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகள் மற்றும் செயல் அலுவலர்கள் நிலை—1 முதல் நிலை—4 ஆகிய பதவி நிலைகளில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பதவித்தரங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை விபரம் பின்வருமாறு:

[2004 ஜூலை 27

| வ.எண் | பதவித்தரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர்கள் / செயல் அலுவலர்கள் | 6 |
| 2. | துணை ஆணையர்கள் / செயல் அலுவலர்கள் | 14 |
| 3. | உதவி ஆணையர்கள் / செயல் அலுவலர்கள் | 27 |
| 4. | செயல் அலுவலர்கள் 1 | 66 |
| 5. | செயல் அலுவலர்கள் 2 | 112 |
| 6. | செயல் அலுவலர்கள் 3 | 250 |
| 7. | செயல் அலுவலர்கள் 4 | 154 |
| | மொத்த எண்ணிக்கை | 629 |

## 5. திருமடங்கள் நிர்வாகம்

திருமடங்கள் நிர்வாகம் 'ஆதினகர்த்தர்களால்' நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும் அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிர்வாகம் மேலும் சிறப்புற நடைபெறவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும், மடங்களின் வரவு-செலவுத் திட்டங்களைப் பரிசீலித்து ஒப்புதல் வழங்கவும் தலைமையிட இணை ஆணையரும் அவருக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அதிகாரி மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய பிரிவு செயல்படுகின்றது.

2003 ஆம் ஆண்டில் சட்டப்பிரிவு 6(18)ல் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, சமாதிகள் அல்லது பிருந்தாவனம் மற்றும் சமயம் சம்பந்தப்பட்டு நிறுவப்பட்ட அல்லது பராமரிக்கப்படும் நிறுவனங்கள் ஆகியவையும் அறநிறுவனங்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

## 6. அறங்காவலர் குழு நியமனம்

அ) திருக்கோயில்கள் மற்றும் ஏனைய சமய நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் விதிமுறைகளின்படி நியமிக்கப்பட்டு, நிர்வாகத்தைக் கவனிக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அவற்றில் சில அறநிலையங்கள் பரம்பரை அறங்காவலர்களைக் கொண்டும், மற்றும்



2004 ஜூலை 27 ]

சில "நிர்வாகத் திட்டங்கள்" அடிப்படையிலும் குறிப்பிட்ட சமுதாயத்தினர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

ஆ) பரம்பரை அறங்காவலர்கள் நிர்வகிக்கும் திருக்கோயில்கள், கட்டளைகள், மடாதிபதிகளால் நிர்வகிக்கப்படும் மடங்கள் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான வழக்குகள் உள்ள திருக்கோயில்களின் வகையில் 8633 இனங்களுக்குப் பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயலாது. இது தவிர அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற திருக்கோயில்கள் 29770 உள்ளன.

**இத்திருக்கோயில்களின் அறங்காவலர்கள் நியமன விபரம் கீழ்க்கண்டவாறு.**

| வ. எண் | சட்டப் பிரிவு | பரம்பரை முறை சாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற மொத்த திருக்கோயில்கள் எண்ணிக்கை | பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பதவிகளில் உள்ள திருக்கோயில்கள் எண்ணிக்கை | பரம்பரை முறை சாரா அறங்காவலர்கள் பதவிக்காலம் முடிந்து நியமனம் செய்யப்பட வேண்டிய திருக்கோயில்களின் எண்ணிக்கை | அறங்காவலர் நியமன அதிகாரி |
|---|---|---|---|---|---|
| 1. | 49(i) | 27221 | 57 | 27164 | உதவி ஆணையர் |
| 2. | 46(i) | 2188 | 10 | 2178 | இணை ஆணையர் |
| 3. | 46(ii) | 263 | 5 | 258 | ஆணையர் |
| 4. | 46(iii) | 98 | 1 | 97 | அரசு |
| மொத்தம் | | 29770 | 73 | 29697 | |

இ) ஒவ்வொரு வருவாய் மாவட்ட அளவிலும், பதவி முறை ஒருங்கிணைப்பாளர் (உதவி ஆணையர்) மற்றும் ஐந்து அலுவல்சாரா உறுப்பினர்கள் கொண்ட மாவட்டக்குழு மூலம் பட்டியலில் சேராத திருக்கோயில்களுக்கும், சட்டப் பிரிவு 46(i) மற்றும் 46(ii) ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கும், பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்ய தகுதியானோர் பட்டியல் தயார்

[2004 ஜூலை 27

செய்யும் அதிகாரம் கொண்டது. நியமன அதிகாரி மூன்று அறங்காவலர்களை நியமனம் செய்யவும், சட்டப் பிரிவு 46 (iii) ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய அரசுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு அனைத்து திருக்கோயில்களுக்கும் இரு அறங்காவலர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 7. சமய நிறுவனங்களின் நில நிர்வாகம்

### (அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் விபரம்

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக தமிழ்நாடு முழுமையும் 4,78,953.35 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றில் நஞ்சை, புஞ்சை மற்றும் மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி அடங்கியுள்ளன.

| நிலத்தின் தன்மை | திருக்கோயில் களுக்குச் சொந்த மானவை | | திருமடங் களுக்குச் சொந்த மானவை | | மொத்தப் பரப்பளவு | |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் |
| நன்செய் | 1,83,855 | 68 | 21,282 | 05 | 2,05,137 | 73 |
| புன்செய் | 2,18,517 | 57 | 34,543 | 15 | 2,53,060 | 72 |
| மானாவாரி | 20,754 | 90 | -- | -- | 20,754 | 90 |
| மொத்தம் | 4,23,128 | 15 | 55,825 | 20 | 4,78,953 | 35 |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,03,205 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 22,599 கட்டடங்களும் 33,627 கிரவுண்டு மனைப் பகுதிகளும் உள்ளன. இதில் முறையே 22,776 மற்றும் 55,225 குத்தகைதாரர்களும் உள்ளனர்.



2004 ஜூலை 27 ]

### ஆ) வருவாய் நீதிமன்றம்

நிலக் குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூர்
6. மதுரை

மேலும், கீழ்க்கண்ட இடங்களில் அமர்வு நீதிமன்றங்கள் (CAMP COURT) உள்ளன.

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்

வருவாய் நீதிமன்றங்களில் ரூ.124.13 கோடி உள்ளடக்கிய மொத்தம் 33,584 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 10,537 வழக்குகளில் மொத்தம் ரூ.98.96 கோடிக்கு வசூல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வசூல் உத்தரவின்படி குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை தொகையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 1147 வழக்குகளில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ரூ.25.17 கோடி குத்தகை பாக்கி குறித்த 21,900 வழக்குகள் வருவாய் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

### இ) நியாய வாடகை நிர்ணயம்

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள், மற்றும் கட்டடங்களுக்கான வாடகை குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒரு

றையேனும் ஆணையரால் அமைக்கப்பட்டுள்ள குழுவினால் திருத்தியமைக்கப்பட வேண்டும். அரசாணையின்படி, நிலத்தின் சந்தை மதிப்பு மற்றும் கட்டடத்தின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். 4-6-1999-ல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கான கணக்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. அவ்வுத்தரவு 27-4-2000-ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மேற்கண்ட 27-4-2000 ஆம் தேதிய அரசு உத்தரவு மறுபரிசீலனை செய்யப்பட்டு 1.11.2001 முதல் நியாய வாடகை நிர்ணய நடவடிக்கைகளைத் தொடர ஆணையிடப்பட்டது. இதன்படி நியாய வாடகை நிர்ணயிக்கும் பணி மீண்டும் தொடரப்பட்டு திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், மனைகள் ஆகியவற்றிற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை 13,236 கட்டடங்களுக்கும், 20,634 மனைப் பகுதிகளுக்கும் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.3.62 கோடி வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான அனைத்து கட்டடம் மற்றும் மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. யானைகள் புத்துணர்ச்சி முகாம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, யானைகள் புத்துணர்ச்சி முகாம் கடந்த நவம்பர் 16 ஆம் நாள் தொடங்கப்பட்டது. அடைபட்டுக் கிடந்த யானைகளுக்கு, உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் புத்துணர்ச்சி அளிப்பதே இந்தச் சிறப்பு முகாமின் நோக்கம் ஆகும். மேலும், யானைகளை ஒன்றுக்கொன்று இணக்கமாக இருக்கச் செய்தல், மனிதனுடன் நன்கு பழகச் செய்தல், நல்ல சூழ்நிலை ஏற்படுத்துதல் போன்ற வகைகளில், யானைகள் பயனடைந்துள்ளன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான 37 யானைகளும், மடங்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான 18 யானைகளும், வனத் துறைக்குச் சொந்தமான 45 யானைகளும் மொத்தம் 100 யானைகள் இம்முகாமில் கலந்து கொண்டன. இம்முகாம் 30 நாட்களுக்கு நடத்தப்பட்டது. இம்முகாமில் நல்ல மருத்துவ சிகிச்சைகளும், இயற்கையான சூழ்நிலையில் நல்ல சத்துணவும், சிறப்பான பயிற்சிகள், ஆற்றுக் குளியல் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, இப்புத்துணர்ச்சி முகாம் ஆண்டுதோறும் 45 நாட்களுக்கு நடத்தப்படும்.

## 9. மகாமகம்

கும்பகோணம் நகரில் அமைந்துள்ள பிரசித்திப்பெற்ற மகாமக திருக்குளத்தில் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் மகத் திருவிழாவும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகப் பெருவிழாவும் தொன்று தொட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த மகாமகப் பெருவிழாவன்று கும்பகோணம் மாநகரில் அமைந்துள்ள 12 சைவத் திருக்கோயில்களின் உற்சவ மூர்த்திகள் மகாமகத் திருக்குளத்திலும், 5 வைணவ திருக்கோயில்களின் உற்சவ மூர்த்திகள் காவிரிக் கரையிலும் எழுந்தருளி, பக்தர்களுக்குத் தீர்த்தவாரி காட்சி அளிப்பது வழக்கம்.

இந்த ஆண்டு மகாமகப் பெருவிழா கும்பகோணம் மாநகரில் அனைத்துத் தரப்பினரும் பாராட்டும் வகையில் 2004 மார்ச் மாதம் 6 ஆம் தேதி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மகாமக தீர்த்தவாரி நடைபெறும் மேற்படி 17 திருக்கோயில்கள் மற்றும் மகாமகத் திருக்குளத்தைச் சுற்றி அமைந்துள்ள 16 சன்னதிகள் மற்றும் காவிரி தீர்த்தவாரி மண்டபம் ஆகியவற்றிற்குச் சுமார் ரூ.111 இலட்சம் மதிப்பில் திருப்பணி செய்யப்பட்டது. சுமார் ரூ.60 இலட்சம் மதிப்பிலான பணிகள் உபயதாரர்கள் மூலமும், இதரப் பணிகள் திருக்கோயில் நிதி மற்றும் அரசு மானியம் மூலமும் மேற்கொள்ளப்பட்டது. அரசு மானியமாக ரூ.44.58 இலட்சம் வழங்கப்பட்டது.

திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டு அனைத்து 17 திருக்கோயில்களின் குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளது.

## 10. திருக்கோயில் திருப்பணி

தமிழ்நாட்டில் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடிப் போற்றப்பட்ட புகழ்மிகு புனிதத் திருத்தலங்கள் பல உள்ளன. எனவே, இவற்றையும் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களையும் நன்முறையில் பேணிப் பாதுகாத்துவர அவற்றிற்குத் திருப்பணி செய்வது இன்றியமையாததாகும். மேலும் வேறு சில முக்கியமான திருக்கோயில்களுக்கும் திருப்பணி மேற்கொள்ள வேண்டும். திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தல்

அவற்றிற்குப் பழுதுபார்த்தல் ஆகியவை பின்வரும் நிதியாதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. பொது மக்கள் அளிக்கும் நன்கொடைகள் அவர்களின் ஆர்வத்தின் ஈடுபாட்டின் வெளிப்பாடாக கருதப்படுகிறது பொது மக்கள்/உபயதாரர்கள் பங்கு, திருப்பணிகள் நாட்டம், பொது மக்கள்/உபயதாரர்கள் முன்வரும் பணிகள் சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து கோயில் பராமரிக்கப்படுகிறது. ஆகவே, பொது மக்கள் பங்கேற்பினை அரசு ஊக்குவிக்க பொது நிதிகளிலிருந்து தொகை வழங்கப்படுகிறது. பொது மக்கள் நிதி 75 சதவீதமும் கோவில் அல்லது பொது நிதிகளின் பங்கு 25 சதவீதமும் இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. பொது மக்களின் ஈடுபாட்டினை திருப்பணிகளில் ஊக்குவிக்கும் நோக்கில் அரசின் நிதிப்பங்கீடு இருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

**திருக்கோயில் திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரம்**

| ஆண்டு | திருக் கோயில்கள் எண்ணிக்கை | அனுமதி வழங்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பு | அரசு நிதி | திருக் கோயில் நிதி | பொது மக்கள் நிதி |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 2001-2002 | 285 | 424 | 1715.33 | 108.24 | 774.49 | 832.60 |
| 2002-2003 | 138 | 302 | 2436.90 | 255.70 | 1030.81 | 1150.39 |
| 2003-2004 | 142 | 364 | 2467.92 | 331.84 | 699.32 | 1436.76 |

**திருப்பணிக்கு வழங்கப்படும் நிதி ஆதார வழிமுறைகள்**

1. பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை
2. அந்தந்த திருக்கோயில்களின் நிதி
3. நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் உபரி நிதி
4. அரசு மானியம்
5. பொதுநல நிதி
6. ஆலய மேம்பாட்டு நிதி





7. திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
8. கிராமப்புற திருக்கோயில் திருப்பணி நிதி

**அ) பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை**

சமய பற்றுள்ளவர்களாலும், தொழில் அதிபர்களாலும், பொறுப்பாட்சி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களும் தாமாக மனமுவந்து அளிக்கப்படும் தொகை அல்லது பொருட்களைக் கொண்டு திருபபணி மேற்கொள்ளுதல்.

**ஆ) உபரிநிதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் நிதி**

நிதி வசதி குறைந்த, தேவையுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப் பிரிவு 36–ன்கீழ் ஆணையரின் அனுமதியுடன் வசதிமிகு திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் உபரி நிதி மூலம் திருப்பணி செய்யப்படுகின்றன.

**இ) அரசு மானியம்**

ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் பழுது பார்த்தலுக்காகவும் அரசு மானியமாக இத்துறை வரவு–செலவுத் திட்ட மானியக் கோரிக்கை மூலம் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2003–2004 ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, இத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/–வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, 50 திருக்கோயில்களின் திருப்பணிக்கு அரசு மானியம் மூலம் ரூ.12.50 இலட்சம் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2002–2003 ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கு ரூ.12.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 125 திருக்கோயில்களுக்கு ரூ.31.25 இலட்சம் பகுதி–II திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ளது.

**ஈ) பொது நல நிதி**

சமய நிறுவனங்களால் அல்லது தனி ஒருவரால் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு பொது நல நிதி ஒன்று ஏற்படுத்த

ஆணையருக்கு தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப் பிரிவு 97 வழிவகை செய்துள்ளது. இந்நிதி திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், பேணிக்காத்தலுக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2003–2004 ஆம் ஆண்டு 26 திருக்கோயில்களுக்கு ரூ.48.67 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**உ) ஆலய மேம்பாட்டு நிதி**

வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி பெறப்பட்டு இவ்வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையினைக் கொண்டு அரசின் முன் அனுமதி பெற்று பழமை வாய்ந்ததும், சரித்திர முக்கியத்துவம் பெற்றதும், பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப் பெற்றதுமான திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிதி ஆணையரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் ஆண்டில் 6 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.23.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுள்ளது.

ஒரு கால பூஜை வைப்பு நிதி திட்டத்திற்கு இந்நிதியிலிருந்து திருக்கோயில் 1–க்கு ரூ.1200/–வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**ஊ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி**

(i) நமது கலாச்சார மரபுரிமையைக் கட்டிக்காக்க வேண்டும் என்னும் நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1,08,000/–ஐ அளித்து "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை 5–8–1991–ல் உருவாக்கினார்கள். மேலும், இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நன்கொடைகள் பெறப்பட்டன. பின்பு இந்நிதி "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ii) ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற, நாயன்மார்களால் பாடல் பெற்ற வரலாற்றுப் பெருமை வாய்ந்த, தொன்மையான கலைச் சிறப்புகள் மிக்க திருக்கோயில்களின் திருப்பணிக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.



(iii) மேலும், ஒரு கால பூஜை வைப்பு நிதி ஏற்படுத்த திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1300/–வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்படுகி

(iv) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக இந்நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து ஆண்டுதோறும் ரூ.14 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

(v) மேலும், இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காகத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/–வீதம் நிதியுதவி இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/–வீதம் 50 திருக்கோயில்களின் திருப்பணிக்கு மொத்தம் ரூ.12.50 இலட்சம் வழங்கப்படுகிறது..

## 11. துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 100 திருக்கோயில்களுக்குத் திருக்கோயில் 1–க்கு ரூ.25,000/–வீதம் வழங்கப்படுகிறது. இந்தத்திட்டத்தின்கீழ் இதுவரை 500 திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் (பிற்படுத்தப்பட்டோர்) வாழும் பகுதியிலுள்ள மக்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களுக்குத் திருக்கோயில்கள் அமைத்துத் தர வேண்டும் என்ற அவர்களது நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றித் தரும்பொருட்டு, ஏற்கெனவே உள்ள திருக்கோயில்களைப் பழுது நீக்கி, புனரமைத்துத் தரவும், சிறிய அளவில் புதிய திருக்கோயில்களைக் கட்டித்தரவும் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/–வீதம் இவ்வாண்டு 6000 திருக்கோயில்களைப் புனரமைக்க ரூ.15 கோடி செலவில் ஒரு திட்டத்தினை விரைந்து செயல்படுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 27

## 12. கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள இத்துறையின் ஆளுகையின்கீழ் உள்ள கிராமப்புற பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்குத் திருக்கோயில் 1க்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. பழனி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் 2 கோடி முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்தொகை வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டுக்கு 100 திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டது.

## 13. திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் செய்தல்:

1. ஆகம விதிகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலிலும் 12 ஆண்டுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். பொதுவாக திருக்கோயில்கள் கீழ்க்கண்டவாறு மூன்று வகையாக பிரிக்கப்பட்டு திருப்பணிகள் நடத்தப்படுகின்றன.

அ) ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்கள்.

ஆ) சரித்திர புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.

இ) உடனடியாக திருப்பணி செய்ய வேண்டியதும் ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய திருக்கோயில்கள்.

இதுதவிர அஷ்டபந்தன மருந்தின்றி உள்ள மூலஸ்தான மூர்த்திகளுக்கு உடனடியாக மருந்து சாத்தப்பட்டு அபிஷேகம் செய்து சிறிய அளவில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்தல்.

2. தமிழகத்தில் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களும், பழமையான மற்றும் பெரிய திருக்கோயில்களும் பெருமளவில் உள்ளன. தவிர, தமிழ்நாட்டில் கலை மற்றும் கலாச்சாரப் பெட்டகமாக விளங்கும் மேற்கண்ட பழமையான திருக்கோயில்களில் திருப்பணி செய்ய வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் 705 திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.



2004 ஜூலை 27 ]

## 14. திருக்கோயில் திருக்குளங்கள் திருப்பணி

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் 1158 திருக்குளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளன. மேற்படி திருக்குளங்களில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கும் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளவும் இவற்றைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். இத்திருக்குளங்களைப் புதுப்பித்தல் மற்றும் பேணுதலைக் கீழ்க்கண்ட வழிகளில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. திருக்குளங்களில் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்
2. திருக்குளங்களைச் சுற்றி வேலி அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்
3. தூர் எடுத்தல்
4. திருக்குளங்களுக்கு மழைநீர் வருவதற்கு வழி ஏற்படுத்தி மழை நீர் சேகரித்தல்.
5. திருக்குளங்களில் உள்ள படிக்களைப் பழுதுபார்த்தல்.

2003-2004 ஆம் ஆண்டு 757 திருக்குளங்கள் பழுதுபார்க்கப்பட்டன. மேலும் இதர திருக்குளங்களைப் பழுதுபார்க்கவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 15. திருத்தேர்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 823 மரத்தேர்கள் உள்ளன. அவற்றில் 147 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. அவற்றைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்தேர்களைப் பாதுகாக்கும்பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் கூரை, இரும்பு அச்சு மற்றும் சக்கரம், பழுதுபார்த்து பராமரிப்பு ஏற்பாடுகள் செய்யவும், திருத்தேர்களின் மதிப்பிற்குரிய காப்பீடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருத்தேர் திருப்பணிகளில் பொது மக்கள் பங்கேற்கச் செய்யும் வகையில் பொது மக்கள் நன்கொடை மற்றும் உபயம் மூலம் திருத்தேர் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 33 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது நீக்கப்பட்டு திருத்தேர் திருவிழா

நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் 60 திருக்கோயில்களில் திருத்தேர்கள் பழுது நீக்கப்பட்டு தேர்த் திருவிழா நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மானிய கோரிக்கை அறிவிப்பில் 10 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது பார்க்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதில் 2 திருத்தேர் திருப்பணி முடிந்தும், மற்ற 7 திருக்கோயில்களில் பணிகள் நடைபெற்றும் வருகிறது. எஞ்சியுள்ள 1 திருக்கோயில் திருத்தேர் திருப்பணிக்கு உபயதாரர் மூலம் பணி தொடங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி தொடங்கப்படவுள்ளது.

## 16. பக்தர்களுக்கு வசதிகள்

### அ) திருக்கோயில்களில் குடிநீர் வசதி:

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் திருக்கோயில்களில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 2091 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

### ஆ) கழிப்பிட வசதி

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகள் பயன்படுத்தும் வண்ணம் நவீன கழிப்பிட வசதிகள் ஆண்கள், பெண்களுக்கெனத் தனித் தனியாக செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி 272 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

### இ) குடில்கள், அறைகள், பொருள் பாதுகாப்பு அறைகள் வசதிகள்

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் தேவைக்கேற்ப போதிய அளவில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள் மற்றும் பொருள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிட வசதிகள் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## 17. ஒருகால பூஜைத் திட்டம்

ஒருகால பூஜை முறையாக நடத்திட இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜையினை முறைப்படி நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பொது மக்களை ஈடுபடுத்தும் நோக்கில் பொது மக்கள் நன்கொடையாக ரூ.2,500/– ஒரு திருக்கோயிலுக்கு அளித்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/–ம், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/–ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/–ம் வழங்கி அத்திருக்கோயிலின் பெயரில் ரூ.25,000/– நிரந்தர முதலீடு செய்யப்படும். அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் ஒருகால பூஜை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 31–3–2004 வரை 9,792 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஒருகால பூஜை நடத்த இயலாமல் உள்ள திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அத்தகைய அனைத்து திருக்கோயில்களிலும் ஒருகால பூஜை நடத்தப்பட வேண்டும் என இவ்வரசு முடிவு செய்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 90 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

## 18. உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு

திருக்கோயில்களில் திருட்டு நடைபெறாமல் தடுக்கும் வண்ணம் இயன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள், கோள்சொல்லிக் கடிகாரம், தொட்டிப் பூட்டுகள், இரும்புக் கதவுகள் நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், முன்னாள் இராணுவ வீரர் மற்றும் இரண்டாம் நிலை காவலர்களைத் திருக்கோயில் பாதுகாப்புப் படை மூலம் நியமித்தல், உலோகத் திருமேனி மையங்கள் ஏற்படுத்துதல், கிராமப்புற விழிப்புக் குழு ஏற்படுத்துதல் போன்ற முன்னேற்பாடுகள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் காவல் துறை மற்றும் சிலைகள் பாதுகாப்புப் பிரிவு திருக்கோயில்களில் நிகழும் களவுகளைக் கண்டறியும் பொறுப்பில் உள்ளனர். இத்துறை கீழ்க்கண்ட இடங்களில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்திப் பேணி வருகிறது.

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்) திருவாரூர்.

2. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

உலோகத் திருமேனிகளின் பாதுகாப்பு மையங்களில் 3188 உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 2004–2005–ல் கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை மற்றும் சிவகங்கை ஆகிய நான்கு இடங்களில் திருமேனி பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கு ரூ.120 இலட்சம், பகுதி–II திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 19. திருக்கோயில் பாதுகாப்புப் படை

மாநிலம் முழுவதுமுள்ள திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள், உண்டியல்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காக திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இதில் 1,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3,000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. காவல் துறையினரால் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 2,778 முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் உள்ளூர் காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இதுவரையிலும் 2,751 திருக்கோயில்களில் பாதுகாப்புப் படையினர் பணியில் உள்ளனர்.

## 20. கருணை இல்லம்

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும், திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 37 திருக்கோயில்களில் 42 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் 893 சிறுவர்களும், 461 சிறுமியர்களும் ஆக மொத்தம் 1,354 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர்.



இக்கருணை இல்லங்களுக்கான செலவில் 50 விழுக்காடு அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. எஞ்சிய 50 விழுக்காடு நிதியுதவியை சமூக நலத் துறை வழங்குகின்றது. கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட அரசு மானியம் விவரம்.

| ஆண்டு | அரசு மானியம் |
|---|---|
| 1998-1999 | ரூ.43,39,255 |
| 1999-2000 | ரூ.46,97,027 |
| 2000-2001 | ரூ.50,74,487 |
| 2001-2002 | ரூ.46,96,000 |
| 2002-2003 | ரூ.46,53,000 |
| 2003-2004 | ரூ.76,15,000 |

## 21. திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள்

தெய்வ நெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு, திருக்கோயில்கள், சமயம் மற்றும் பொதுக் கல்வித் தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளைப் பேணி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ் வருமாறு:–

### அ) கல்வி நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| 1 | கல்லூரிகள் | 5 |
| 2. | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 2 |
| 3 | மேல் நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6. | ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | நாதசுரம் மற்றும் தவில் பள்ளிகள் | 4 |

| | | |
|---|---|---|
| 9. | வேத ஆகம பாடசாலைகள் | 4 |
| 10. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 11. | திவ்யபிரபந்த பாடசாலைகள் | 3 |
| 12. | காதுகேளாதோர்—பேச இயலாதோர் பள்ளி | 1 |
| **(ஆ)** | **சமூக நல நிறுவனங்கள்** | |
| 1. | சித்த வைத்தியசாலைகள் | 9 |
| 2. | ஆங்கில மருத்துவமனைகள் | 2 |
| 3. | கருணை இல்லங்கள் | 42 |
| 4. | முதியோர் இல்லங்கள் | 3 |
| | மொத்த நிறுவனங்கள் | 113 |

## 22. இலவசத் திருமணம்

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்திட திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருமணம் ஒன்றுக்கு ரூ.5,500/- செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்டுதோறும் இலவசத் திருமணங்கள் நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் நிதி வசதிமிக்க ஒவ்வொரு திருக்கோயில்களிலும் தனித் தனியே நடத்தப்பட்டு வந்த இலவசத் திருமணங்கள் 18.6.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக ஒரே இடத்தில் 1053 இணைகளுக்குச் சென்னை, திருவேற்காட்டில் இலவச திருமணங்கள் நடத்தப்பட்டன. இத்திருமணத்தில் 719 இணைகள் ஆதிதிராவிடர் வகுப்பினரும், 22 இணைகள் பழங்குடி இனத்தவரும், 165 இணைகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவரும், 144 இணைகள் பிற்படுத்தப்பட்டவரும், 3 இணைகள் இதர வகுப்பினரும் பயனடைந்தனர்.



## 23. அன்னதானத் திட்டம்

2002—2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்போது மேதகு ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்டதையடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.3.2002 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. முதற்கட்டமாக 63 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட்டு மொத்தம் 171 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள் அனைத்திலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை மாணவர்களுக்குக் கற்றறிந்தோரைக் கொண்டு ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக மாணவர்களுக்கு "நீதிபோதனை" என்ற நூலில் இருந்து ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அன்னதானத் திட்டம் திருக்கோயில்களில் தொடர்ந்து நடைபெறும்பொருட்டு நன்கொடையாளர்களிடம் இருந்து ரூ.15,000/— கட்டளை முதலீடுகள் பெற்று அதனை தனியாக வைப்பு நிதி ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு நன்கொடையாளர்கள் விரும்பும் வருடத்தில் ஏதாவது ஒரு நாள் அன்னதான செலவுக்கு ஈடுசெய்யும் வகையில் திட்டம் ஏற்படுத்தப்பட்டு கட்டளை முதலீடுகள் பெறப்பட்டு வருகின்றன. 31.3.2004 வரை ரூ.2,57,20,407/— மதிப்பிற்குக் கட்டளை முதலீடுகள் பெறப்பட்டுள்ளன.

ஆணையர் பதவி பெயரில் ரூ.20 கோடி அன்னதானத் திட்ட வைப்பு நிதி ஏற்படுத்தவும் இந்த வைப்பு நிதியிலிருந்து நிதிப் பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்கு நிதியுதவி செய்யத்தக்க வகையிலும் அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதுவரை (30-6-2004) அன்னதானத் திட்டத்தில் 1,36,94,293 நபர்களும், ஆன்மீக மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் மூலம் 4,21,294 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

## 24. தமிழில் வழிபாடு

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்குத் தக்க ஆலோசனை வழங்க சைவ, வைணவ ஆன்மீகப் பெரியோர்களையும், தமிழில் புலமை பெற்ற பெருமக்களையும்

[2004 ஜூலை 27

உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு தமிழில் கீழ்க்கண்ட அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**108 போற்றி நூல்கள்**

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகவேள் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி
4. அருள்மிகு திருமால் போற்றி
5. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு உமையம்மை போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கை அம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி

**1008 போற்றி நூல்கள்**

அருள்மிகு விநாயகர் போற்றி. (அருள்மிகு விநாயகர் 1008 போற்றி புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது)

## 25. சேக்கிழார் விழா

தெய்வப் புலவர் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடைபெற ஏதுவாக திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஐந்து இலட்சம்



2004 ஜூலை 27 ]

வழங்கப்பட்டு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. அம்முதலீட்டிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையைக் கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சேக்கிழார் பிறந்த நாளன்று சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது. 2003 மே திங்களில் நடைபெற்ற விழாவிற்கு ரூ.20,000/- வழங்கப்பட்டது.

## 26. திருஞானசம்பந்தர் இசை விழா

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தரின் நினைவைப் போற்றும் வகையில் "திருஞான சம்பந்தர் இசை விழா" இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை "ஆணையர் பொது நல நிதியிலிருந்து" வழங்கப்பட்டு வருகிறது. 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவிற்கு ரூ.15,000/- வழங்கப்பட்டுள்ளது.

## 27. அவ்வை விழா

அருள்மிகு அவ்வையார் மற்றும் விஸ்நாதசுவாமி திருக்கோயில்கள், நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம், துளசியாபட்டினம் கிராமத்தில் அமைந்துள்ளன. இத்திருக்கோயில்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ளன. மேற்படி கிராமத்தில் அவ்வை விழாவை அரசு விழாவாக நடத்த அறநிலையத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## 28. பழனியில் கம்பி வட ஊர்தி அமைத்தல் (கேபிள் கார்)

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின் நீண்ட நாள் கோரிக்கையான கம்பி வட ஊர்தி அமைத்தல் பணியினை நிறைவேற்ற இவ்வரசு நடவடிக்கை எடுத்து கம்பி வட ஊர்தி அமைத்தல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ரூ.388.41 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கம்பி வட ஊர்தித் திட்டத்தின் கட்டுமானப்பணி தொடங்கப்பட்டு, இதுவரை 90% பணி முடிவடைந்துள்ளது. பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. பணிமுடிக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 27

## 29. பழனியில் கிரிவலப் பாதை அமைத்தல்

திருவண்ணாமலை திருக்கோயிலில் உள்ளதைப் போலவே, பழனி திருக்கோயிலிலும் சேவார்த்திகளின் புனித கூட்டப்பாட்டினை நிறைவேற்ற, நீண்ட நாளைய விருப்பத்திற்கேற்ப கிரிவலப் பாதை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

## 30. தல வரலாறு மற்றும் தல புராணம்

திருக்கோயில்களின் சிறப்புகள், பெருமைகள், வரலாற்று முக்கியத்துவங்கள், கல்வெட்டுச் செய்திகள் மற்றும் புராண வரலாறுகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் திருக்கோயில்களின் தலவரலாறுகள் மற்றும் தலபுராணங்கள் வெளியிடப்படுகின்றன. இதுவரை 1960 தலவரலாறுகளும், 9 தலபுராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் தலவரலாறு மற்றும் தலபுராண நூல்களை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டு 739 தலவரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்டந்தோறும் முக்கிய திருக்கோயில் விவரம் அறிய பயணியர் கையேடு வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 31. ஆகமம் மற்றும் இதர நூல்களைத் தமிழில் வெளியிடுதல்

(i) வடமொழியில் உள்ள ஆகம சாஸ்திரங்களைத் தமிழில் அறியும் வண்ணம் முதற்கட்டமாக "உத்ரகாமிக ஆகம நூல்" தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப்பட்டது. பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்நூல் மறுபதிப்பு செய்யப்பட்டு வெளியிட நடவடிக்கையில் உள்ளது.

(ii) "ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்பநூல்" தமிழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) கிராமப் பூசாரிகள் வழிபாட்டு முறைகளை அறிந்துகொள்ளும் வண்ணமும், தமிழில் வழிபாடு செய்வதற்கு ஏதுவாகவும் "பூசாரிகள் வழிபாட்டு பயிற்சி நூல்" தமிழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iv) 'குமார தந்திரம்' என்னும் நூல் தமிழில் வெளியிட ஏதுவாக அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.



2004 ஜூலை 27 ]

(v) "இந்துமத இணைப்பு விளக்கம்"என்னும் நூல் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

(vi) "சைவமும் வைணவமும்" என்னும் நூல் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

## 32. "திருக்கோயில்" இதழ் வெளியிடுதல்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் "திருக்கோயில்" என்ற பெயருடைய தமிழ் திங்கள் இதழ் 1958 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டுவருகிறது. இவ்விதழில் இந்து சமயம், திருக்கோயில்கள் மற்றும் ஆன்மீகம் குறித்து கட்டுரைகள் சிறந்த அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்டு அனைவரும் பயன்பெறும் வகையில் வெளியிடப்படுகிறது. இவ்விதழுக்கான தனிப்பிரதி ரூ.10/-, ஆண்டு சந்தா ரூ.120/-, ஆயுள் சந்தா ரூ. 1500/- ஆகும். தற்போது மாதம் ஒன்றுக்கு 4000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

## 33. பட்டயப் பொறியாளர் அங்கீகாரம்

திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்திட மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தொய்வு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் பட்டயப் பொறியாளர்களாக அங்கீகாரம் பெற்றுள்ளனர். இத்துறை மூலம் அங்கீகாரம் அளிக்கப்படும் பட்டயப் பொறியாளர்கள் திருக்கோயிலுக்குத் தேவையான மதிப்பீடுகள் தயாரித்து அளிப்பதை அங்கீகாரம் செய்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 72 பட்டயப் பொறியாளர்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

## 34. ஸ்தபதிகள் அங்கீகாரம்

திருக்கோயில்களில் திருப்பணி செய்யப்படும் போது திருக்கோயில் அமைப்பு முறை, ஆகம சாஸ்திரங்களின்படியும், கலை நுணுக்கம் உள்ள வேலைப்பாடுகளுடனும் செய்திட ஸ்தபதிகள் உதவிபுரிகின்றனர். கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் இஸ்தபதி ஆலோசகர் நியமிக்கப்பட்டு, மேற்கூறியவை பரிசீலிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. மதிப்பீடு தயாரிப்பதில் உதவி புரிய ஏதுவாகச் சிற்பக் கலையில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பெற்றவர்களையும், வழிவழியாக இத்தொழிலில் ஈடுபட்டு அதன் வாயிலாக கற்றறிந்தோர்களையும், ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்து திருப்பணி வேலைகளை ஊக்கப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 27

## 35. ஸ்தபதிகள் நியமனம்

திருக்கோயில்களில் ஆகம சாஸ்திரங்களின்படி திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்கும்பொருட்டு கீழ்க்காணும் ஐந்து மண்டலங்களில் ஸ்தபதிகளை நியமனம் செய்ய அரசு முடிவெடுத்தது. ஸ்தபதிகளுக்குத் தொகுப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.4000/- வழங்கப்படும். இச்சம்பள செலவு நிதி வசதி மிக்க கீழ்க்காணும் திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும். தொடக்கத்தில் இப்பணியிடம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டு தற்போது செயல்படுத்தப்படுகிறது.

| வ. எ ண் | தலைமையிடம் | இணை ஆணையர் பிரிவு | சம்பளம் வழங்கும் திருக்கோயில் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 1. சென்னை | 1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| | | 2. வேலூர் | 2. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 2 | மதுரை | 1. மதுரை | 1. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| | | 2. சிவகங்கை | 2. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். |
| | | | 3. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி. |
| 3 | திருச்சிராப்-பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம். |
| | | 2. தஞ்சாவூர்<br>3. மயிலாடுதுறை | 2. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம். |



2004 ஜூலை 27 ]

| | | | |
|---|---|---|---|
| 4 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை |
| | | சேலம் | 2. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி |
| 5 | திருநெல்வேலி | திருநெல்வேலி | 1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| | | | 2. அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில். |

## 36. சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து

வசதியுடைய திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத்தாழ்வின்றி பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது. 2003–2004 ஆம் ஆண்டில் 324 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டது.

## 37. புத்தொளிப் பயிற்சித் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோர்கள் தங்கள் பணிகளைத் திறம்பட செய்ய ஏதுவாக 1991 ஆம் ஆண்டு “புத்தொளிப் பயிற்சித் திட்டம்” தொடங்கப்பட்டு செம்மையுடன் நடைபெற்று வந்தது. கடந்த ஆண்டுகளில் தொய்வு ஏற்பட்டதை நிவர்த்தி செய்து இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்க முடிவு செய்யப்பட்டது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் முக்கியத் திருக்கோயில்களைத் தெரிவு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 3 மாத புத்தொளிப் பயிற்சித் திட்டம், 54 திருக்கோயில்களில் அளிக்கப்பட்டது. 2-3-2003 முதல் 23 திருக்கோயில்களில் புத்தொளிப் பயிற்சி தொடங்கப்பட்டு நடைபெற்றது.

[2004 ஜூலை 27

இத்திட்டத்தில் இதுவரை பயனடைந்தோர் விவரம் வருமாறு:

| வ. எண் | பயனடைந்தோர் வகை | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஓதுவார் | 49 |
| 2. | அர்ச்சகர் (சைவம்) | 330 |
| 3. | பட்டாச்சாரியார்கள் (வைஷ்ணவம்) | 105 |
| 4. | பூசாரிகள் | 4 |
| | மொத்தப் பயனாளிகள் | 488 |

## 38. திருக்கோயில்களில் நாதஸ்வர இசைப் பணியாளர்கள் நியமனம்

நிதி வசதி இல்லாத காரணத்தால் நாதஸ்வர இசை பல பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த பழமையான திருக்கோயில்களில் கால பூஜை மற்றும் திருவிழாக்களின்போது இசைக்கப்படுவது குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, நாதஸ்வரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/-வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூபாய் ஒரு கோடி மூலதனம் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் மாத ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் நாதஸ்வரம் 6 பேர், தவில் 4 பேர், தாளம் 1 ஒருவர் ஆக 11 இசைக் கலைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## 39. தமிழ்ப் புலவர்கள் நியமனம்

நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் திருமுறை, திவ்யபிரபந்தங்கள் பாடுதல், முற்றோதல் செய்தல், சொற்பொழிவுகள் செய்தல், சமயக் கருத்துகளைப் பரப்புதல், தல வரலாறு, தல புராணம் வெளியிட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நூல் நிலையம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



2004 ஜூலை 27 ]

அப்புலவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/- ஊதியமாக சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

## 40. திருக்கோயில் பணியாளர்கள்

தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையங்களில் 37,819 முழு நேரப் பணியாளர்கள் பல்வேறு பதவித்தரங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு ரொக்கம் அல்லது தானியம் அல்லது இரண்டும் ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மொத்தப் பணியாளர்களில் 4,751 பணியாளர்கள் இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகளில் உள்ள செயல் அலுவலர்கள் மேலாண்மையில் உள்ள நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் நிரந்தரப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

திருக்கோயில் பணியாளர்களுக்குக் கீழ்க்கண்ட வகையிலான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(1) பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி
(2) குடும்ப நல நிதி
(3) சிறப்பு வருங்கால வைப்பு நிதி
(4) ஆலய ஊழியர் நல நிதி
(5) ஓய்வூதியம்
(6) கருணைத் தொகை வழங்குதல்
(7) திருமண முன்பணம்
(8) வாகன முன்பணம்
(9) மருத்துவப் படி
(10) சலவைப் படி
(11) பண்டிகை முன்பணம்
(12) விடுப்புச் சலுகை
(13) வீட்டு வாடகைப் படி
(14) தட்டச்சர்களுக்குச் சிறப்பூதியம்

(15) தொகுப்பூதிய பணியாளர்களுக்கு 30 சதவீத ஊதிய உயர்வு

(16) நகர ஈட்டுப் படி

(17) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை

(18) கருணை அடிப்படையில் பணி நியமனம்

### 1. பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி:

ஆண்டு வருமானம் ரூ.10,000/-க்கு மேல் உள்ள அறநிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் சந்தாதாரர்கள் அவர்கள் பெறும் மொத்தச் சம்பளத்தில் 12 விழுக்காட்டிற்குக் குறையாமல் சந்தாத்தொகை செலுத்த வேண்டும். திருக்கோயிலிலிருந்து 12 விழுக்காடு பங்குத் தொகை சந்தாதாரர் கணக்கில் செலுத்தப்படும்.

### 2. குடும்ப நல நிதி:

திருக்கோயில்களில் பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளரது குடும்பத்தாருக்கு உதவும்பொருட்டு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.75,000/- உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து ரூபாய் ஐந்து கோடி மூலதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் 104 குடும்பங்களுக்கு ரூ.68.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 3. சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் எட்டு இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் பணியாளர் ஓய்வு பெறும்போது, அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை திருக்கோயில்மூலம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன் துறைமூலம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது.





### (4) ஆலய ஊழியர் நல நிதி:

ஆண்டு வருமானம் ரூ.40,000/-க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில், மாத ஊதியம் ரூ.400/-க்கும் குறைவாகப் பெறும் பணியாளர்களுக்குச் சம்பள நிலுவை ஏற்படின், அப்பணியாளர்களுக்குத் துறை மூலம் சம்பள நிலுவைத் தொகை வழங்கிட ஆலய ஊழியர் நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கு மூலதன வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 488 திருக்கோயில்களில் பணிபுரியும் 718 பணியாளர்களுக்கு ரூ.18,21,647/- சம்பள பாக்கி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திருக்கோயில் பணியாளர்களின் 31-12-2003 வரையிலான சம்பள நிலுவைகள் ரூ.54,12,770/- அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டது.

மேலும், இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் மட்டுமே மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டிருந்ததால், வங்கி வட்டிவிகிதங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவதாலும், சம்பள பாக்கிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் உயர்ந்து கொண்டு வருகின்றது என்பதைக் கருத்தில் கொண்டும், மேலும் கூடுதலாக 4 கோடி ரூபாயை நிதி வசதி மிக்க திருக்கோவில்களிலிருந்து நிதிமாற்றமாகப் பெற்று வைப்பு நிதி (Corpus fund) ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### (5) ஓய்வூதியத் திட்டங்கள்:

#### (அ) ஓதுவார்கள், அர்ச்சகர்கள் மற்றும் பிறர்:—

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்கள் போன்றோருக்கு அரசு நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.500/— இத்துறைமூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள் (சைவம் மற்றும் வைணவம்) ஓதுவார்கள், வேதபாராயணம், நாலாயிரதிவ்யபிரபந்தம் பாடுவோர், அரையர் சேவை மற்றும் இசைக் கலைஞர்களுக்கு அரசால் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட விவரம்:

[2004 ஜூலை 27

| அனுமதிக்கப் பட்டது | ஓதுவார் | வேதம்/ பிரபந்தம்/ அரையர் | இசைக் கலைஞர்கள் | அர்ச்சகர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொத்தம் | 125 | 59 | 125 | 691 | 1000 |

**ஒய்வூதியம் பெறுவோர்:**

| அனுமதிக்கப் பட்டது | ஓதுவார் | வேதம்/ பிரபந்தம்/ அரையர் | இசைக் கலைஞர்கள் | அர்ச்சகர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2000-2001 வரை | 117 | 43 | [illegible] | 591 | 850 |
| 2001-2002ல் | 6 | 1 | 8 | 67 | 82 |
| 2002-2003ல் | 2 | 0 | 8 | 21 | 31 |
| 2003-2004ல் | 2 | 1 | -- | 27 | 30 |
| மொத்தம் | 127 | 45 | 115 | 706 | 993 |

**(ஆ) கிராம பூசாரிகள் ஒய்வூதியத் திட்டம்:**

தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுவோர் விவரம் பின்வருமாறு:

| அனுமதிக்கப்பட்ட ஆண்டு | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | ஓய்வூதியம் பெறுவோர் |
|---|---|---|
| 2000-2001 வரை | 1500 | 1418 |
| 2001-2002-ல் | 1000 | 366 |
| 2002-2003-ல் | -- | 348 |
| 2003-2004-ல் | 500 | 353 |
| மொத்தம் | 3000 | 2485 |



2004 ஜூலை 27 ]

**6. கருணைக் கொடை:**

திருக்கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் மற்றும் திருவிழாக் காலங்களில் சிறப்புப் பணியாற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கருணைக் கொடை தொகுப்புத் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 2001-2002 ஆம் ஆண்டில் இக்கருணைக் கொடை திருக்கோயில் பணியாளர்களின் ஒரு மாத அடிப்படை சம்பளமாக உயர்த்தப்பட்டது.

**7) திருமண முன்பணம்:**

திருக்கோயில் பணியாளர்களின் மகன் மற்றும் மகள் திருமணத்திற்கென முறையே ரூ.6,000/- மற்றும் ரூ.10,000/- திருமண முன்பணமாக வழங்கப்படுகிறது.

**8) வாகன முன்பணம்:**

தகுதி வாய்ந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வாங்க ரூ.20,000/- முன்பணமாக வழங்கப்படுகிறது.

**9) மருத்துவப் படி**

திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

**10) சலவைப் படி:**

திருக்கோயில் சீருடை பணியாளர்களுக்குச் சலவைப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் வழங்கப்படுகிறது.

**11) பண்டிகை முன்பணம்:**

பண்டிகை முன்பணமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

**12) விடுப்புச் சலுகை:**

**(அ) ஈட்டிய விடுப்பு:**

திருக்கோயில் பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும், அதில் 15 நாட்களை ஒப்படைப்பு செய்து அதற்குரிய சம்பளம் பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மருத்துவ விடுப்பு:**

திருக்கோயில் பணியாளர்கள் அவர்களது மொத்த பணிக் காலத்தில் 240 நாட்கள் மருத்துவ விடுப்பு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(இ) மகப்பேறு விடுப்பு:**

திருக்கோயில்களில் உள்ள பெண் பணியாளர்களுக்கு 60 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது.

**(ஈ) ஓய்வு பெறும்போது ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்தல்:**

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வு பெறும்போது அவர்களது ஈட்டிய விடுப்பிலிருந்து 60 நாட்களை ஒப்படைப்பு செய்து அதற்குரிய சம்பளம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(13) வீட்டு வாடகைப் படி:**

திருக்கோயில்கள் பணியாளர்கள் அவர்களது சம்பள விகிதம் மற்றும் பணிபுரியும் இடத்திற்கேற்ப கீழ்க்கண்டவாறு வீட்டு வாடகைப்படி அனுமதிக்கப்படுகிறது:

| பணிபுரியும் இடம் | சம்பள விகிதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூ.1000 வரை ரூ. | ரூ.1601 முதல் ரூ.2200 வரை ரூ. | ரூ.2201 முதல் ரூ.5300 வரை ரூ. | ரூ.5301 முதல் ரூ.7000 வரை ரூ. | ரூ.7001 முதல் ரூ.10000 வரை ரூ. |
| நிலை-1(ஏ) சென்னை நகரம் மற்றும் 32 கிலோ மீட்டர் சுற்று வட்டாரப் பகுதி | 250 | 280 | 340 | 400 | 500 |
| நிலை-1(பி) கோவை, மதுரை நகர் மற்றும் 16 கிலோ மீட்டர் சுற்று வட்டாரப் பகுதி | 144 | 200 | 250 | 300 | 360 |
| நிலை-2 பிற நகரங்கள் மற்றும் 8 கிலோ மீட்டர் சுற்று வட்டாரப் பகுதி | 120 | 150 | 180 | 220 | 270 |
| நிலை-3 நகரங்கள் | 80 | 100 | 120 | 150 | 190 |
| இதர இடங்கள் | 60 | 70 | 80 | 90 | 100 |



**14. தட்டச்சர்களுக்கான சிறப்பூதியம்:**

திருக்கோயில்களில் பணிபுரியும் தட்டச்சர்களுக்கு, ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் முதுநிலை தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் மாதம் ஒன்றுக்கு ரூ.80/– வீதமும் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றுள் ஒன்றில் முதுநிலை, பிரிதொன்றில் இளநிலை தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் மாதம் ஒன்றுக்கு ரூ.60/– வீதமும் சிறப்புச் சம்பளம் வழங்கப்படுகிறது.

**15. தொகுப்பு ஊதியம் பெறுவோருக்குச் சம்பள உயர்வு:**

திருக்கோயில்களில் தொகுப்பூதிய முறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 30 சதவிகித சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

**16. நகர ஈட்டுப் படி:**

கீழ்க்கண்ட வகையில் நகர ஈட்டுப் படி திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது:

**(அ) இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் நிலையில் செயல் அலுவலர்கள் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்கள்**

| அடிப்படைச் சம்பளம் | சென்னைப் பெருநகர் | மாநகராட்சிகள் | இதர இடங்கள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரூ.3200/— வரை | 80 | 40 | 20 |
| ரூ.3200/-க்கு மேல் | 110 | 60 | 20 |

**(ஆ) இதர திருக்கோயில் பணியாளர்கள்:**

| அடிப்படைச் சம்பளம் | நகரம் | கிராமம் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ரூ.1600/— வரை | 50 | 35 |
| ரூ.1600/—க்கு மேல் | 70 | 45 |

## 17. தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை:

15–10–1997 அன்றும் அதற்கு பின்னும் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் ஒரே பதவியில், பணிபுரிந்துள்ள திருக்கோயில்கள் பணியாளர்களுக்கு முறையே தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை சம்பள விகிதம் வழங்கப்பட்டு வருகிறது.

## 18. கருணை அடிப்படையில் நியமனம்:

திருக்கோயில்களில் பணியாற்றும்போது மரணமடைந்த திருக்கோயில் பணியாளர்களின் சட்டரீதியான வாரிசுதாரர்களுக்கு உதவிடும் முகத்தான் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் ஆண்டில் 16 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## பகுதி II திட்டங்கள்

நடப்பு நிதியாண்டில் 2004–2005–ல் பகுதி II திட்டத்தின்கீழ் பின்வரும் விவரப்படி திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டப் பணி விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நாகர்கோவில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, உதவி ஆணையாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் உதவி ஆணையாளர் குடியிருப்புக் கட்டடங்களைப் பழுது பார்த்தல் | 6.15 |
| 2 | கும்பகோணம் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல் | 18.40 |
| [illegible] | தலைமை அலுவலகத்திற்குத் [illegible]ப் பாகங்களுடன்கூடிய [illegible] கணினிகள் வாங்குதல் | 2.50 |



| | | |
|---|---|---|
| 4. | தலைமை அலுவலகப் பயன்பாட்டிற்காக அறைகலன்கள் வாங்குதல் | 2.00 |
| 5. | கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை மற்றும் சிவகங்கை ஆகிய நான்கு இடங்களில் திருவுருவச் சிலைகள் பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் | 120.00 |
| 6. | ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள 125 திருக்கோயில்களைப் புதுப்பித்தல் | 31.25 |

## நிறைவுரை:

பழமைச் சிறப்பும், கலைநயமும், சிற்ப வேலைப்பாடுகளும் ஒருங்கிணைந்த பண்புகள் கொண்ட திருக்கோயில்களின் நடைமுறையில் உள்ள வழிபாட்டு முறை மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின்பேரில் மிகுந்த கவனம் கொண்டு, திருக்கோயில்களில் பூஜைகளும், திருவிழாக்களும் சிறப்பான முறையில் நடைபெறுவதை மேலாண்மை செய்வது என்ற புனிதமான பொறுப்பு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வரசும் திருக்கோயில் நிர்வாகத்தினைச் செம்மைப்படுத்தவும், நிர்வாகம் செம்மைப்படுவதை உறுதி செய்யும் வகையில், திருக்கோயில்களின் வழிபாட்டு முறை மற்றும் சம்பிரதாயங்களை மேற்கொள்வதிலும், தேவையுள்ள திருக்கோயில்களைப் புனரமைப்பு செய்வதிலும், திருக்கோயில் நிர்வாகத்தினைச் சீராகவும், செம்மையாகவும், முறைகேடுகள் ஏதுமின்றி திறம்பட செயல்படுத்தவும், தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதுதவிர, இவ்வரசால் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்களில் ஒருகால பூசை கூட நடைபெறாமல் இல்லை என்ற நிலையினை உறுதி செய்யவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினர் (அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்) தங்கள் பணிகளை நிறைவேற்றுவதில், முழு ஈடுபாட்டுடன் நேர்மையாகவும், திறம்படவும் செயல்பட தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர்.

சென்னை-600 008